வெளியீடு—23—7—1975]
[Issued—23—7—1975]

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1975 மார்ச் 22

Saturday 22nd March 1975

தொகுதி LXVII—எண் 1

Volume LXVII—No 1

©
*தமிழ் நாடு அரசு*
*1975*

GOVERNMENT OF TAMIL NADU
1975

*சட்டமன்றப் பேரவைத் துறை*
*சென்னை-600009.*

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-600009.*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

D
V211,31 'N75
31N75. 67;2
61700

# Tamil Nadu Legislative Assembly Debates

Thirteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

22nd, 24th, 25th and 27th March 1975.

Volume LXVII (Nos. 1 to 4.)

TABLE OF CONTENTS.

*Saturday, 22nd March 1975.*


| | PAGES |
|---|---|
| 1 Questions and Answers ... ... ... | 1—25 |
| 2. Points of order— | |
| (a) Alleged obstruction of the Sergeant of the House from discharging his duties ... | 25 |
| (b) Amendment by Assembly Department of the Cut Motions given by members ... | 30, 35—36 |
| 3. Demand for Supplementary Grants (Final) 1974-75—Presentation ... ... ... | 26—29 |
| 4. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.* | |
| (a) Demand No. 13—Administration of Justice. | |
| (b) Demand No. 14—Jails ... ... ... | |
| (c) Demand No. 23—Co-operation ... ... | |
| (d) Demand No. 26—Handlooms and Textiles. | |
| (e) Demand No. 35—Civil Supplies ... ... | 29 |
| (f) Demand No. 56—Miscellaneous Capital Outlay ... ... ... ... ... ... | 31—35 36—96 |
| 5. Papers laid on the table ... ... ... ... | 96 |

*Monday, 24th March 1975.*


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 133—163 |
| 2. Adjournment Motion— | |
| Institution of Chief Minister's Drought Relief Fund and its consequences .. .. .. | 163<br>164—167<br>185—188 |
| 3. Points of order— | |
| (a) Incorrect answer made by Minister for Harijan Welfare ... ... ... ... ... | 189—193 |
| (b) Naming of Thiru P. Soundarapandian and his refusal to leave the House ... ... | 198—203 |
| 4. Calling Attention— | |
| Fire accident at Villuonnikonam Government Middle School, Kanyakumari district ... | 193—196 |
| 5. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.* | |
| (a) Demand No. 13—Administration of Justice. | |
| (b) Demand No. 14—Jails ... ... ... | |
| (c) Demand No. 23—Co-operation ... ... | |
| (d) Demand No. 26—Handlooms and Textiles. | |
| (e) Demand No. 35—Civil Supplies ... ... | |
| (f) Demand No. 56—Miscellaneous Capital Outlay ... ... ... ... ... .. | 196—198<br>203—278 |
| 6. Papers laid on the Table ... ... ... ... | 278 |


*Tuesday, 25th March 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 279—305 |
| 2. Announcements— | |
| (a) Postponement of consideration of an Adjournment Motion *re* attack on Law College Students .. .. .. .. .. | 305—306 |
| (b) Message from the Legislative Council *re* Bills passed .. .. .. .. | 308 |




*Tuesday, 25th March 1975—cont.*


| | PAGES |
|---|---|
| 3. Points of information— | |
| (a) Information on the notice of Adjournment Motions ... ... ... ... ... | 306—309 |
| (b) Threatening of Sergeant of the House by a security staff of a Minister ... ... | 310—311 |
| 4. Points of order— | |
| (a) Prevention of a Member by the Watch and Ward staff ... ... ... ... ... | 309—310 |
| (b) Allotment of a full day for the discussion on the Demands for Supplementary Grants ... ... ... ... ... | 365—367 |
| 5. Request for more opportunities to speak on the discussion on Demands for Supplementary Grants ... ... ... ... ... ... | 311—313 |
| 6. General Discussion on the Demands for Supplementary Grants (Final) 1974-75 ... | 314—344 |
| 7. Voting on Demands for Supplementary Grants for the year 1974-75 ... ... ... ... | 344—362 |
| 8. Government Bills— | |
| Tamil Nadu Appropriation Bill, 1975 ... ... | 363 |
| 9. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.* | |
| (a) Demand No. 20—Agriculture ... ... | |
| (b) Demand No. 49—Capital outlay on Agriculture ... ... ... ... ... ... | 367—392 |
| 10. Papers laid on the Table ... ... ... | 393 |


*Thursday, 27th March 1975.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 433—461 |

*Thursday, 27th March* 1976—cont.

PAGES

2. Adjournment Motions—
   (a) Attack by certain outsiders on Law College students residing in the Hostel ... ... 461—484
   (b) Swooning of students of Corporation Primary School, Kotturpuram, after consuming midday meals and their treatment in hospital ... ... ... ... ... 485—487
3. Announcements—
   (a) No Confidence Motion against Deputy Speaker given notice of by Thiru V. Krishnamurthy ... ... ... ... ... 483
   (b) Withdrawal of No Confidence Motion against the Deputy Speaker given notice of by Thiru V. Krishnamurthy ... ... ... 515
4. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*
   (a) Demand No. 20—Agriculture ... ... 487—538
   (b) Demand No. 49—Capital outlay on Agriculture ... ... ... ... ...
5. Papers laid on the Table ... ... ... 538

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading "Bill(s)".

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., "Committee(s)", "Council(s)", "Corporation(s)", etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:

| | | |
|---|---|---|
| A.M.\|Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a matter of Urgent Public Importance. |
| C.A. St. | .. | Calling Attention Statement. |

| | |
|---|---|
| Consid. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select\|Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select\|Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select\|Joint Select Committee.<br>(v) Amendment to re-commit to Select\|Joint Select Committee, etc. |
| Consid. Cl. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | Demands for Supplementary Grants. |
| G.A. | Governor's Address. |
| G.D | General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D | Half-hour Discussion. |
| Int. | Introduction stage of a Bill. |
| L.A. | Legislative Assembly. |
| L.C. | Legislative Council. |
| M. | Motion. |
| P.M. | Privilege Motion. |
| R\|Res | Resolution. |
| St. | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக்கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இளைஞர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு. எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால் நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

---

## GOVERNOR OF TAMIL NADU

HIS EXCELLENCY THIRU KODARDAS KALIDAS SHAH

---

### Members of the Council of Ministers

1. THE HON. DR. M. KARUNANIDHI: (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN: (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN: (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM: (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN: (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA: (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Wa[illegible]

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Oversees and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் | | தொகுதி |
| --- | --- | --- |
| | (1) | (2) |
| 1 | அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 | அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி |
| 3 | அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 | அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 | அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்–மேற்கு |
| 6 | அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 | அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி |
| 8 | அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 | அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 | அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 | அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 | ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 | ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ . |
| 14 | ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 | ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 | ஆல்டா எம்: பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 | ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 | ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 19 | ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 | இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம் |
| 21 | இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 | இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 23 | இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 | இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 | இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 | இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 | இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர். (செ.வ.) |
| 28 | இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு |
| 29 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். .. (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். .. (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 61 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 இட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 இருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 இருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 இருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 இருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டிணம் |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம் |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம் |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சமபத், திரு. டி. வி. | செம்பனூர்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி, |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை–மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. வ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. வ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 இராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. .. .. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

## சனிக்கிழமை, 1975 மார்ச் 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

தொப்பையாற்றின் குறுக்கே அணை.

*419 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், தொப்பையாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இந்தத் திட்டத்திற்கான தீர்வான மதிப்பீடு தலைப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எவ்வளவு ஏக்கரா பாசனத்திற்குக் கொண்டுவர பிரயோசனப் படும் என்ற முழு விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தொப்பையாறு என்ற ஆற்றின் குறுக்கே கட்ட இருக்கிற தேக்கம் 500 மிலியன் கன அடி கொள்ளளவு கொண்டதாக இருக்கக்கூடும். சுமார் 2,156 ஏக்கர் புஞ்சை நிலம் நஞ்சை நிலமாக மாற்றியமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். உணவு உற்பத்தி 2,168 டன் கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தத் திட்டத்திற்குத் தோராய மதிப்பீடு 129 இலட்ச ரூபாய் ஆகலாம். இத்திட்டம் இன்னும் தலைப் பொறியாளர்களால் ஆய்வு செய்யப் பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இத்திட்டம் எப்பொழுது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ? இதுவரையில் அதுபற்றிய பரிசீலனை முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? விரைவில் அதை முடிக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பாரா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டம் சமீபத்தில்தான் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது இன்னும் பரிசீலனையில் தான் இருக்கிறது. பரிசீலனை முடிந்து அரசுக்கு வந்த பிறகு, நிதி நிலையைப் பொறுத்து ஆராய்ந்து அரசு ஒப்புதல் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, தொப்பையாறுத் திட்டம் பற்றி வருஷம் பூராவும் இம்மாதிரி கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அரசாங்கம் சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவில்லை. போக்குவரத்துக்கு இணைப்புப்பாதை அமைக்க வேண்டியது மிக மிக அவசியம். ஆகவே, அதை விரைவாக எடுத்து முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அந்த அவசியத்தை உணர்ந்துதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளச் சொல்லி, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. மேற்கொண்டு டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் முடிந்த பிறகு அரசு அதைப்பற்றி பரிசீலித்து ஒரு முடிவு எடுக்கும்.

## லெட்சுமிபுரத்தில் புதிய கண்மாய்

*420 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் ஆண்டி பட்டி தொகுதியைச் சேர்ந்த லெட்சுமி புரத்திற்கு கண்மாய் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத் திட்டத்தின் மதிப்பு ரூ. 10 லட்சம். லெட்சுமிபுரம் அருகிலுள்ள 288 ஏக்கர் நிலங்களுக்கு புதிதாக பாசன வசதி அளிக்கும். 202 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வழி வகுக்கும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இலட்சுமிபுரம் கண்மாய் போன்ற கண்மாய்கள் அமைப்பதன் மூலமாக பக்கத்தில் தண்ணீர் ஊற்று வர வசதியாக இருக்கும். பல்லவ அரசர்கள் காலத்தில் இப்படிப் பட்ட கண்மாய்களை அதிகமாக அமைத்தார்கள். அவற்றில் தூர்ந்து போயிருக்கக்கூடிய கண்மாய்கள் மதுரை மாவட்டத்தில் பல இருக்கின்றன. அவற்றை எல்லாம் மராமத்து செய்து புதுப்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது உண்மை. அதுபோல் ஏராளமான கண்மாய்கள் தூர்ந்து போய் இருப்பனவற்றைச் சீர்படுத்தினால் பக்கத்திலிருக்கும் கிணறுகளுக்கு ஊற்று நீர் வர வாய்ப்பு இருக்கும். நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்பு இருக்கும். ஆனால், நிதி நிலைக்கு ஏற்ப ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## எம்.காம்., பி.காம்., பட்டப்படிப்புகள்

*416 வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மாலை நேரக் கல்லூரியில் எம்.காம்., பட்டப்படிப்பு துவக்குமாறு அப் பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எம்.காம்., போன்ற மேல் பட்டப் படிப்பு மிகவும் இன்றியமையாது இருக்கிற காரணத்தால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளிலும், மதுரைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளிலும் விஸ்தரிக்கச் செய்ய அரசு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.காம்., பட்டப் படிப்பு பல்வேறு கல்லூரிகளிலும் துவக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றன. பி.காம். பட்டப் படிப்புக்குத் தேவையான ஆசிரியர்கள் எண்ணிக்கை இப்போது இருக்கிற அளவுக்கு இருக்கிறது. மேற்கொண்டு விரிவுபடுத்தினால் அதற்கு எம்.காம். படித்தவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தின்கீழ் 9 கல்லூரிகளிலும், மதுரைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இரண்டு கல்லூரிகளிலும் எம்.காம். வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அவற்றிலிருந்து உருவாகிறவர்களைப் பயன்படுத்தும் அளவுக்கு விரிவு படுத்த வேண்டுமென்று கூறுகிறார்கள். என்றாலும், அரசு பல்கலைக் கழகத்தினிடத்தில் எம்.காம். வகுப்புக்கு அதிக முக்கியத்துவம் தரலாம் என்று கூறியிருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள் அந்தந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள்தானா ? அப்படியானால், அவர்களுக்கு என்று தனியாக வழங்கப்படுகிற சலுகைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள்தான் அதிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

*417 Q.—Thiru N· K. Palanisamy: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether it is a fact that there are no sufficient number of qualified teachers for B. com., courses in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): இப்பொழுது துவக்கப்பட்டுள்ள வகுப்புகளுக்குப் போதுமான அளவு பேராசிரியர்கள் இருக்கிறார்கள். புதிய நியமனங்களுக்குத் தேவைப்படும் வகையில் எம்.காம். பட்டதாரிகள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த எம்.காம். பட்டதாரிகளில் நல்ல வகுபபு எடுப்பவர்களுக்குத்தான் பேராசிரியர் பதவி கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே சி. பிளஸ், பி. பிளஸ் எடுத்து பாஸ் செய்தவர்கள் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, எம்.காம். பட்டதாரிகளில் சற்று தகுதி குறைவாக இருந்தாலும், அவர்களுக்கும் பேராசிரியர் பதவி கொடுக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: போதுமான அளவுக்கு தகுதி பெற்றவர்கள் கிடைக்காத நேரத்தில் அவர்களுக்குக் கல்வித் தகுதி ஓரளவிற்குத் தளர்த்தப்படுகிறது. தளர்த்துவதற்கு அவசியம் இல்லாத நேரத்தில், தளர்த்துவது இல்லை. ஆங்கிலப் பயிற்சிக்கும், பி.காம். பயிற்சிக்கும் அந்தக் கல்வித் தகுதி இல்லாதவர்கள் என்ற நிலை ஏற்படுகிறபோது சி. பிளஸ், பி. பிளஸ் வாங்கியவர்களையும் எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்குத் தளர்த்துகிறோம்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இப்போது பி.காம். படித்தவர்கள் குறைவாக இருப்பதால், பி.காம். வகுப்பு பாடங்கள் எடுக்க ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் மாலை நேர வகுப்புகளில் எம்.காம். பயிலக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதேபோல், இங்கே தொழில் துறையில் இருப்பவர்கள் படிக்க வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலும், ஆசிரியர்கள் பற்றாக் குறையைக் குறைக்கும் வகையிலும் எம்.காம். வகுப்பு மாலை நேரத்தில் படிக்க வசதி ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தக் கருத்தை வேண்டுமானால் மாநில அரசு பல்கலைக்கழகங்களுக்கு பரிந்துரை செய்யலாம். அது பற்றி முடிவு எடுக்க வேண்டியது பல்கலைக் கழகங்கள்தான். பல்கலைக் கழகங்கள் அது குறித்து முடிவு எடுக்குமானால், மாலை நேர வகுப்பு தொடங்குவது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.





திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாலை நேர வகுப்புகள் தற்போது சென்னையில் மட்டும் நடைபெறுவதாக அறிகிறேன். அந்த மாவட்ட தலைநகரங்களாகிய திருச்சி, கோவை போன்றவிடங்களில் விரிவுபடுத்த அரசு பரிசீலிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முக்கியமான நகரங்களில் இருக்கின்றன என்று நினைக்கிறேன். தனிக்கேள்வி போட்டால் முழுமையான விவரம் தர ஆயத்தமாக இருக்கிறேன். திருச்சி, மதுரை, கோவை போன்ற இடங்களில் இருப்பதாகக் கருதுகிறேன். இப்போது முழுமையான விவரங்கள் இல்லை. அங்கேயில்லாவிட்டால், அப்படி ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராயலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, பி. காம். பட்டப்படிப்புக்கு அதிகமான டிமாண்ட் இருக்கிறது. காரணம் வங்கிகள் அதிகமாக அதிகமாக பி. காம். பட்டதாரிகள் அதிக அளவில் தேவைப்படுகிறார்கள். ஆகவே, அதற்கான அளவில் கல்லூரிகளில் இடத்தைப் பெருக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றித்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். பி.காம். வகுப்புகளுக்கு வசதி செய்து தரப்படுகிறது. அதுகுறித்த, பல்கலைக்கழகங்களையும் நாம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஏனென்றால், பி. காம். படிக்க விரும்புகிறவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. வரலாற்றுத்துறை, பொருளாதாரத்துறை ஆகியவற்றிற்கு ஆகும் செலவுதான் இதற்கு ஆகிறது. இதை அதிக அளவில் ஆரம்பிக்காததற்குக் காரணம் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்று குறிப்பிட்டேன். அந்த வகையில்தான் எம். காம். வகுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இரண்டு மூன்று ஆண்டுகளில் பல கல்லூரிகளில் அவர்களை நியமிக்கலாம் என்ற அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள் எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்களோ, அங்கே தரவேண்டும் என்று அரசு பரிந்துரை செய்து இருக்கிறது.

### *Visual Education in Schools.*

* 418 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) the names of schools in Madras City where Visual Education is imparted as a part of study at present; and

(b) the results achieved thereby?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) அவை முன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த விஷ்வல் எடுகேஷன் எப்படி போதிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? இது, சென்னை மாநகரத்தில் மட்டுமல்லாமல், மாவட்ட தலை நகரங்களுக்கும் விரிவு படுத்த அரசு எண்ணியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது 16 எம். எம். புரொஜக்டர்ஸ் என்பது 650 உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கின்றன. 35 எம். எம். புரொஜக்டர்ஸ் என்பது 900 உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கின்றன. ரேடியோ வசதி 1420 பள்ளிகளில் இருக்கின்றன. சென்னையில் மட்டும் 93 உயர்நிலைப் பள்ளிகளில், உயர் துவக்கப் பள்ளிகளில் படம் காட்டும் கருவிகள்—புரொஜக்டர்கள்—இருக்கின்றன. கல்வி சம்பந்தமான, வரலாறு சம்பந்தமான படங்கள் போட்டுக் காட்டப்படுகின்றன. அதற்காக இந்திய அரசாங்க டாக்குமெண்டரிப் படங்கள், மாநில அரசாங்க டாகுமெண்டரிப் படங்கள் மட்டுமல்ல, வேறு நாடுகளின் எம்பசிகளிடத்திலிருந்தும் கல்வி சம்பந்தமான, அறிவியல் சம்பந்தமான, புவியியல் சம்பந்தமான, வரலாறு சம்பந்தமான படங்கள் பெற்று காட்டப்படுகின்றன. அம்மாதிரி எம்பசிகளிடமிருந்து வாங்கிப் போடுவதற்கு நாம் அனுமதி கொடுத்து இருக்கிறோம். விஷ்வல் எடுகேஷனுக்காக ரூபாய் ஒன்று கட்டணம் வசூலித்து, அதை ஒவ்வொரு பள்ளிகளும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தங்கராஜ் என்ற விஞ்ஞானி ஆரம்பக் கல்விக்காக ஒரு காட்சிக் கருவிப் பெட்டி தயாரித்து, அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறார். அப்படிப்பட்டவர்களை ஊக்குவித்து, அந்தக் காட்சிக் கருவிப் பெட்டியை பள்ளிக்கூடங்களில் பயன்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அதுபற்றி இயக்குநர் அவர்கள் ஆராய்ந்து, அதற்காகச் செலவழிக்கிற பணம், அதை வாங்கி வைப்பதால் பலன் ஏதும் உள்ளதா என்பதை ஆராயும்படி கூறியிருக்கிறோம். இயக்குநர் அவர்களிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. அதைச் செய்ததற்குப் பிறகு அது இயலுமா, இயலாதா என்பதைப் பற்றி நாம் முடிவு எடுக்கலாம்.

---

* 97—100-E ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. வி. ஆலடி அருணா: தலைவரவர்களே, அடுத்த ஆண்டு சென்னை மாநகரத்தில் டெலிவிஷன் வரப் போகிறது. காட்சிக் கல்வியை ஊக்குவிக்கிற வகையில் சென்னை மாநகரத்தில் இருக்கும் துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் டெலிவிஷன் வாங்கி வைக்க அரசு மானியம், கடன் உதவி கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது நாம் யோசிக்க வேண்டிய ஒன்றாகும். இப்போது பல பள்ளிகளில் டெலிவிஷன் வாங்கி வைத்து இருக்கிறார்கள். அண்மையில் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் பலர் நன்கொடை அளித்த வகையில் பல பள்ளிகளில் டெலிவிஷன் வாங்கி வைத்து இருக்கிறார்கள். அதை ஊக்குவிக்கும் நிலைமை ஏற்படுமானால் அதற்குத் தனி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்த ஆண்டு டெலிவிஷன் வாங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. அதற்கான அவசியம் ஏற்படும்போது, மற்றப் பொருள்கள் வாங்குவதற்கு எந்த அளவுக்கு நாம் ஊக்கம் தந்தோமோ அந்த அளவிற்கு இதற்கும் ஊக்கம் தர அரசு முன் வரும்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, பாட போதனைக்கென தனியாக திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றனவா? இப்போது இருக்கும் திரைப்படங்களே மாணவர்களுக்குக் காட்டப்படுகிறதா அல்லது நல்ல நடிகர்களைக் கொண்டு நல்ல நீதி போதனைகளையும், பகுத்தறிவுக் கருத்துக்களையும் பரப்புவதற்கு நல்ல திரைப் படங்களை எடுத்து, அதைப் போட்டுக் காட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாணவர்களுக்கு என்று தனியாக டாகுமெண்டரி படங்கள் தயாரிக்கப்படுகின்றன. மத்திய அரசு சார்பாகவும், மத்திய அரசின் கல்வித்துறையின் சார்பாகவும் சிலபல படங்கள் தயாரித்து வைத்து இருக்கிறார்கள். லைப்ரரி வைத்து இருக்கிறார்கள். அதேபோல் மாநில அரசும் சில பல டாகுமெண்டரிகளை எடுத்து இருக்கின்றன. வரலாறு சம்பந்தப்பட்ட, அறிவியல் சம்பந்தப்பட்ட, புவியியல் சம்பந்தப்பட்ட, மருத்துவ இயல் சம்பந்தப்பட்ட திரைப்படங்களை வாங்கிப் போட்டுக் காட்டுகிறார்கள். இதற்காக தனியாக அதிகப் பணம் ஒதுக்கியதன் காரணமாக, நாம் டாகுமென்டரி பிலிம்களை இந்த ஆண்டு எடுப்பதாக இருக்கிறோம். ஆக, மதிப்பீட்டுத் திட்டம் பற்றி சிறப்பான முறையில் உருவாக்க ஒரு படம் எடுக்கப்பட்டு வருகிறது—பள்ளிகளில் பயன்படுத்துவதற்காக.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இப்போது பள்ளி போதனை சம்பந்தமாக திரைப்படம் எடுத்துவருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் படம் எடுக்கிற நேரத்தில், பள்ளிப் பரீட்சைகளில் திறமை வாய்ந்தவர்களை, பர்ஸ்ட் மார்க் வாங்கியவர்களையும் அந்தப் படத்தில் எடுத்து, மற்ற பிள்ளைகளுக்கு அவர்களுடைய நடவடிக்கைகள், படிப்புத் திறமை ஆகியவற்றை அவர்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அடிப்படையில் அக மதிப்பீட்டுத் திட்டத்தில், பாடங்கள் சொல்வது, மாணவர்களின் அறிவுத் திறன், ஆற்றல் திறன் ஆகியவற்றை கண்காணித்து, அவர்களுடைய சாரணர் இயக்க வழி முறைகள் ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றை வெளிப்படுத்தும் சிறந்த மாணவர்களுக்கு எந்தெந்த வகையில் ஊக்குவிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு எப்படி பரிசு கொடுக்கப்படுகிறது என்பதையெல்லாம் காட்சிப் படம் எடுத்து, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் காட்டவேண்டுமென்று அரசு அனுமதி அளித்து அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து இருக்கிறது. அந்தப் படம் இப்போது எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, தொலைக் காட்சிக் கல்வியை ஏற்படுத்துவதற்கு டெலிவிஷன் அமைக்கிற போது சென்னையிலிருந்து எத்தனை மைல் தூரம் இயங்க முடியுமோ அந்த வகையில் செங்கல்பட்டு மாவட்டத்தின் உயர்நிலைப் பள்ளிகளில் டெலிவிஷன் நிறுவ உரிய நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னையில் கல்வி நிலையங்களில் டெலிவிஷன் வைக்கப்பட்டால் அது எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குப பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தப்படும்.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு பள்ளிகளில் படக் கருவிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இல்லாத பள்ளிகளுக்கு அரசு மான்யமாக என்ன தொகை தர முன் வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே; ஆங்காங்கு அதற்கென்று ஒரு சிறு அளவு தொகை ஒதுக்கப்படுகிறது. பள்ளி சீரமைப்பு மாநாட்டில் சில பள்ளிகளுக்கு நன்கொடை வழங்கி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த வகையில் கருவிகள் எவ்வளவு இருக்கின்றன என்ற விவரம் இல்லை.

**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, திரைப் படங்கள் வாயிலாக கல்வி போதிக்கப்படும்போது ஆசிரியர்கள் சொல்வதைவிட அவர்களுடைய கருத்துக்களை டேப் ரிக்கார்ட் செய்து நல்ல கவர்ச்சி உள்ள நடிகர்கள், நடிகைகள் வாயிலாக ப்ளே பேக் செய்து அந்தக் கல்வியைப் போதிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்படிக் காட்டுகிறபோது கருத்துக்களில் கவனம் செல்லாமல் நடிகை, நடிகர்கள் மீது கவனம் சென்று விட்டால் என்ன செய்வது என்பதை கவனிக்க வேண்டும். தருகின்ற கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் தருவது நல்லது.



**திரு. கே. எ. வகாப் :** இப்போது கல்வியில் ஒழுக்கத்தை அதிகமாக மாணவர்கள் தெரிந்து கொள்ள இயலாத நிலை இருக்கின்ற காரணத்தால் ஒழுக்கத்தை அடிப்படையாக வைத்து உடுத்துகிற உடை, வைக்கிற கிராப் போன்றவைகளைப் பற்றி ஆசிரியர்கள் மாணவர்கள் ஈடுபடுகின்ற முறையில், எடுத்துக் காட்டுகிற முறையில், போதனை கொடுக்கிற முறையில் பாடம் சொல்லிக் கொடுக்க ஆலோசனையை அரசு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்வி சம்பந்தப்பட்ட பாடங்கள் என்று வருகின்ற போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து அது சம்பந்தப்பட்ட முறையில் எடுத்துச் சொல்லப்படுகிறது. ஒழுக்கம் மேலும் வளர வேண்டும், ஆற்றல் திறம்பட வளர வேண்டும், இப்படிப்பட்டக் கருத்துக்களைத் திரைப்படங்களில் காட்ட வேண்டும் என்கிற சீரிய நோக்கம் அரசுக்கு இருக்கிறது.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழர் வீர விளையாட்டு எல்லாம் மாணவர்கள் புரிந்து கொள்கிற அளவில் பாடம் போதிக்கப் படுமா? அதுபோலவே தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் சீர்திருத்தக் கருத்துக்களை மாணவர்களுக்குப் போதிக்கிற அளவுக்குதமிழக அரசு சார்பில் ஒரு சிறந்தப் படம் எடுப்பதற்கான உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை. ஆனால் பழங்கால விளையாட்டுக்களை எடுத்துக் காட்டவும், சீர்திருத்தக் கருத்துக்களையும் மக்களுக்கு தேவைப்படுகின்ற பல்வேறு சீர்திருத்த வாழ்க்கைகளை பெரியார், பேரறிஞர்கள் தருகின்ற கருத்துக்களை மாணவர்களுக்கு இப்படித் திரைப் படங்கள் மூலமாகவும், டெலிவிஷன் வந்தால் அதன் மூலமாகவும் எளிதாகப்புகுத்த வழி வகை ஏற்படும்.

### *Agarbathi Units*

* 421 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the steps taken to set up Agarbathi Industrial Units in this State ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அகர்பத்தி தயாரிப்பதற்கான மாதிரித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. துறை அதிகாரிகள் இதற்குப் பரவலாக விளம்பரம் கொடுத்து வருகின்றனர். அப்போதுதான் அக்கறையுள்ள தொழில் முனைவர்கள் அத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்கலாம். சிறு தொழில் பிரிவுகளாகப் பதிவு செய்துள்ள அகர்பத்தி தொழிற்சாலைகள் நறுமணக் கலவைகளையும், பிசினையும் இறக்குமதி செய்வதற்கு "இன்றியமையாச் சான்றிதழ்கள்" அவற்றுக்கு வழங்கப்படுகின்றன. மாநிலத்தில் மொத்தம் 375 அகர்பத்தி தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த அகர்பத்தி தொழில் பல இடங்களில் குடிசைத் தொழிலாகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது. பெரும்பாலும் இதிலே விதவைகள் ஈடுபட்டால் அவர்களுக்கு அரசு சப்சிடி தர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சப்சிடி கொடுப்பதற்கு திட்டம் இப்போது இல்லை.

### கும்முடிப்பூண்டியில் தொழிற்பேட்டை

* 422 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்முடிப்பூண்டியில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : கும்முடிப் பூண்டியில் தொழில்பேட்டை ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறு பரிசீலிக்கப்பட்டு அதற்கான ஆயத்தப் பணிகளைத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கவனித்து வருகிறது. அந் நிறுவனம் அப்பகுதியில் அதில் விருப்பமுள்ளவர்களை அணுகி வருகிறது.

[முற்பகல் 9-30]

திரு. கா .வேழவேந்தன் : தலைவரவர்களே, மேற்கண்ட பகுதியில் இராணுவ அம்யூனிஷன் பிரிவு இருந்து பின்னால் காலி செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் ஏராளமான காலி இடம் இருக் கிறது. வேறு எந்தவிதமான தொழிலும் அங்கு இல்லை. ஆகவே, இந்த ஆண்டிலாவது அங்கு தொழிற்பேட்டை தொடங்க ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கும்முடிப்பூண்டியில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்காக பரிசீலனை செய்ய அதிகாரிகள் அனுப்பப்பட்டார்கள். அங்குள்ள பிளாக் டெவலப் மெண்ட் ஆபீசர் 20 பேர் தொழில் தொடங்க முன்வந்திருப்பதாக தகவல் கொடுத்திருக்கிறார்கள். அவர்களிடத்திலும் எந்தத் தொழில் தொடங்கப் போகிறார்கள் என்ற உருப்படியான திட்டம் ஒன்றும் இல்லை. எனவே குறிப்பிட்ட அந்த 20 பேர்களுடன் அதிகாரிகள் தொடர்பு கொண்டு, பரிசீலனை செய்த பிறகு தொழிற்பேட்டை அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்.



### *Cultivation of plantains in Dharmapuri district.*

* 423 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether there is any propo·al under the consideration of the Government to increase the cultivation of plantain in Hosur and Denkani-kotta Taluks of Dharmapuri district and also to sanction reasonable subsidy to such cultivators ; and

(*b*) if so, the details there of ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) ஹோசூர், தேங்கனிக்கோட்டை வட்டங்கள் உட்பட தருமபுரி மாவட்டத்தில் 250 ஏக்கர் நிலத்தில் வாழை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தக் கருதியுள்ளோம். வாழைப் பயிரிடுவதற்கு மானியம் எதும் கொடுப்பதில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Plantain cultivation is increasing in Dharmapuri district. It requires plenty of water. For that they have to dig wells and they require money for that. Will the Hon. Minister provide more subsidy and loan for these people ?

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தண்ணீர் ஏராளமாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள் வதற்கு இல்லை. வாழை விவசாயத்திற்கு 78" தண்ணீர் வேண்டும்.

78" of water will be required for banana cultivation. For producing that cash crop, what is being done is only to have demonstration plots, at a cost of Rs. 1,350 per acre ; but no subsidy is necessary for the purpose of banana cultivation because even cultivators from Tuticorin area bring their plantains to Bangalore (via) Denkanikotta. Therefore, it is not necessary to give any subsidy.

திரு மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, ஈரோடு பகுதியில் இந்த வாழைச் சாகுபடித் திட்டத்தை தீவிரமாக நடத்த அரசிடம் ஏதாவது சிறப் புத் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் ஈரோடு பகுதியிலும் இந்த வாழை மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. அதைப்போல வேறு சில பகுதிகளிலும் இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம் பகுதி, நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி பகுதி, வடாற்காடு மாவட்டத்தில் வேலூர் பகுதி, மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் பகுதி மற்றும் தருமபுரி, திருச்சி மாவட்டங்களிலும் வாழை மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

[1975 மார்ச் 22

திரு கே. என். குமாரசாமி : தலைவர்வர்களே, இந்தச் சிறப்புத் திட்டத்தின் மூலம் வாழைச் சாகுபடி செய்வதற்கு அரசாங்கம் எந்தெந்த முறைகளில் உதவிகள் செய்கிறது, மேலும் அதிக சாகுபடிக்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே வாழை பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் தேவையற்ற ஒன்று என்று சொன்னேன். ஆனால் அவர்களுக்கு சாகுபடியில் என்னென்ன வழிமுறைகளைக் கையாளவேண்டுமென்று அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. வாழை பாத்திகள் ஆங்காங்கே நிறுவப்பட்டு, வேளாண்மை அதிகாரிகள் நல்ல உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஏற்ற வழிகளைச் சொல்கிறார்கள். காவின்டிஷ், மோரிஷ் போன்ற வாழைகள் நல்ல பலன் தரக்கூடியவை. அவைகளுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது. அவைகளைப் பற்றி எல்லாம் வாழை பயிரிடும் விவசாயிகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மானியம் இல்லாமல் வழிமுறைகள் மட்டும்தான் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இப்போது வாழைக்கு எங்கே பார்த்தாலும் ஒரு நோய் பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. நோய் வந்தால் வாழைத் தோப்பு முழுவதும் அழிந்துவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதற்கு மருந்து தெளிப்பதற்கு வேளாண்மைத் துறை அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் சொல்லும் மருந்தை வாழைக்கு அடித்தால் நோய் போவதில்லை. இதற்காக இந்தச் சிறப்புத் திட்டத்தில் நோய் வராமல் தடுக்க ஏதாவது மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா? மற்றொன்று. குட்டை வாழை என்று சொல்லப்படுகிற பச்சை வாழைக்கு நல்ல மார்க்கெட் இல்லை. ஒரு தார் 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் தான் இருக்கிறது. அதற்கு நல்ல மார்க்கெட்டை ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வாழைக்கு உண்டாகிற நோய்களைப் பற்றி அல்லது பூச்சிகளைப் பற்றி முதலில் சொன்னார்கள். அதற்குத் தேவையான பூச்சி மருந்துகள் எல்லாம் கிடைக்கின்றன. இரண்டாவதாக பச்சை வாழைக்கு விலை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் விலை குறைவாக இருந்தாலும் பெங்களூர் அல்லது மைசூரில் அதற்கு அதிக விலை கிடைக்கிறது. சென்னையில் கூட நல்ல விலை கிடைக்கிறது. இன்னும் அதிக விலை கிடைக்க வேண்டுமென்றால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். பச்சை வாழையைப் பொறுத்த வரையில் அது முடியாது. ஏனென்றால் சீக்கிரத்தில் கெட்டுவிடுகிறது.

It takes 12 days to carry this banana to Japan. There is a very good market there. But at the same time we are not able to export large quantities to Japan.



1975 மார்ச் 22]

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பொதுவாக மொந்தன், ரஸ்தாளி, பேயன் போன்ற வாழை ரகங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே இரயில் வாழை என்ற அளவில் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. அமைச்சரவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி பதில் சொல்லும்போது தஞ்சை மாவட்டத்தைப்பற்றிச் சொல்லவில்லை. தஞ்சை மாவட்டத்திலும் இந்த மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது ஆலோசிக்கப்பட வேண்டிய காரியம். அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, வாழை உற்பத்தி செய்வதற்கு தண்ணீர் வசதி அதிகம் வேண்டும். ஆகவே, வாழைப் பயிர்களுக்கு ஏற்ற வகையில் அதிகத் தண்ணீர் வசதி செய்யும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அதனால் தான் எங்கெங்கே நல்ல தண்ணீர் வசதி இருக்கிறதோ அங்கங்கே வாழை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று ஏற்கெனவே சொன்னேன். வாழைக்கு 78 இஞ்ச் தண்ணீர் வேண்டும். அது மட்டுமல்ல; வாழை 12 மாதப் பயிர். அதனால் கிட்டத்தட்ட நெல் சாகுபடியைப் போல் இரண்டு மடங்கு தண்ணீர் தேவைப்படுகிறது. நெல் 3 அல்லது, 4 மாதப் பயிர்தான். கோவை மாவட்டத்தில் ஈரோடு பகுதியில் நல்ல தண்ணீர் வசதி இருப்பதால் வாழை மேம்பாட்டுத் திட்டம் அங்கே செயல்பட்டு வருகிறது.

திரு. பி. பொன் சொக்கலிங்கம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த வாழை மேம்பாட்டுத் திட்டம் பற்றிச் சொல்லும்போது பற்ற மாவட்டங்களை எல்லாம் குறிப்பிட்டார்கள். தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தில் கொள்ளிடக்கரையில் 8 அடி வாழை, பச்சை வாழை நிறைய உற்பத்தி செய்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சரவர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை. சிதம்பரம் முழுவதிலும் உற்பத்தி செய்யும் வாழைக்கு மானியம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே தென்னாற்காடு மாவட்டத்தில் நல்ல முறையில் வாழை விவசாயம் செய்யப்படுகிறது. அவர்கள் பேரிலும் அது பற்றி கற்றுக் கொண்டிருக்கவில்லை. வாழைக்கு மானியம் இல்லை என்று ஏற்கெனவே சொன்னேன்; டெமான்ஸ்டிரேஷன் பிளாட் என்று போடுகிறோம். அது அங்கு தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்று சொன்னால் அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் நாட்டு வாழை கட்டை வாழை எல்லாம் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த வாழை சாகுபடித் தீவிர திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்

[1975 மார்ச் 22

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நாட்டு வாழை அல்லது ஏற்றன் வாழை பயிர் செய்தால் அதிக உற்பத்தி கிடைக்கிறது என்பது உண்மை. ஆனால் நாட்டு வாழை இராமநாதபுரத்திலிருந்து சென்னைக்கு வருவதற்குள் கூட கெட்டுவிடுகிறது. மற்றபடி தண்ணீர் அதிகம் இருக்கக் கூடிய பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறது என்று சொன்னேன். மானாமதுரை பகுதியில் தண்ணீர் வசதி அதிகமாக இருந்தால் டெமான்ஸ்டிரேஷன் பிளாட் போட்டு, மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா என்பது பற்றி பரிசீலனைச் செய்யலாம்.

### *Cultivation of vegetables in Kolli Hills.*

* 424 *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to cultivate English vegetables on a large scale in Kolli hills; and

(*b*) if so, the details of the scheme now being implemented in the Kolli hills for the cultivation of plains and hill vegetables?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, (அ) ஆம். (இ) கொல்லி மலையில் 320 ஏக்கர் நிலத்தில் ஆங்கிலக் காய் கறி வகைகள் —காபேஜ், பீட்ரூட் போன்றவை—பயிரிடும் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் ஏராளமான நீரூற்று இருக்கிறது. அன்னாசி, பலா போன்ற பழ வகைகள் நிறைய அங்கே பயிராகின்றன. நல்ல நீரூற்று இருப்பதால் மேல்நாட்டு காய்கறி வகைகளை அங்கே உற்பத்தி செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, நல்ல தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மட்டுமல்ல, வாழைப் பயிருக்கு மானியம் அளிக்கப்படுவதில்லை என்று சொன்னேன்; கொல்லிமலையில் புதிய வகை ஆங்கிலக் காய்கறிவகைகள் நல்ல முறையில் உற்பத்தி செய்யப்படுவதற்காக விவசாயிகளுக்கு அந்த உற்பத்திச் செலவில் 50 சத விகிதம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது.

திரு. கு. அ. பொம்மன்: நமது மாநிலத்தில் எந்த மாவட்டத்தில் இங்கிலீஷ் காய்கறிகள் அதிகமாகப் பயிரிடப்படுகிறது? அவற்றை விற்பனை செய்வதற்கு அங்கங்கே மார்க்கெட் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதா? மேலும் விவசாயிகளை ஊக்குவிக்க அந்த மாவட்ட விவசாயிகளுக்குப் பூச்சிக் கொல்லி மருந்துகளை மானியமாகத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். நீலகிரி மாவட்டத்தில்தான் இண்டோ ஜெர்மன் ப்ராஜெக்ட் என்று எடுத்துக் கொண்டு ஏராளமான பணச் செலவில் இந்தக்



1975 மார்ச் 22]

காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றை விற்பனை செய்வதற்கும் மார்க்கெட்டிங் சொஸைடி இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது.

திரு. வ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கிலீஷ் வெஜிடபிள் என்று சொல்கிறார்களே, அது இங்கிலீஷ் பேசுமா என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திரு. பழனிசாமி அவர்கள் கேள்வி போடும்போது இங்கிலீஷ் வெஜிடபிள் என்று கேட்டிருந்தார்கள். அவர் காலிப்ளவர், காபேஜ், பீட்ரூட் போன்றவற்றை மனதில் வைத்து அந்தக் கேள்வியைக் கேட்டிருப்பார்கள் என்ற எண்ணத்தில் நான் பதில் சொன்னேன்

### தென்னை வளர்ப்பு.

*425 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணப்பாறை வட்டத்தில், தென்னை வளர்ப்புத் திட்டம் ஏதேனும் உருவாக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) இது அரசின் ஆய்வில் இருக்கிறது.

*426 வினா— திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை; திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில், தென்னை மகசூலை அதிகரிப்பதற்கென சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை மகசூலை அதிகரிப்பதற்கென சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசு பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். பரிசீலனை முடிந்து தென்னை வளர்ப்பு சம்பந்தமான சிறப்புத் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மணப்பாறையில் துவக்கப்பட்டிருக்கிற தென்னை வளர்ப்புத் திட்டத்திற்கு எந்தப் பகுதியை அரசாங்கம் தேர்ந்தெடுத்திருக்கிறது? அதில் யாழ்ப்பாணத்தில் இருந்து வரவழைத்து தென்னைக் கன்றை வைக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

[1975 மார்ச் 22

<u>மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்</u> : மணப்பாறை, வையம்பட்டி, மருங்காபுரி ஆகிய மூன்று ப்ளாக்குகளிலும் தென்னை வளர்க்கும் திட்டம் ஆய்வில் இருக்கிறது.

<u>திரு. என். டென்னிஸ்</u> : கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தெந்த வகையில் உதவிகள் செய்யப்படுகின்றன ? தென்னை வளர்ப்புக்கு மானிய வகையில் செய்யப்படுகிற உதவி, உரம் கொடுப்பதில்—இன்னும் லாங் டர்ம் லோன் கொடுப்பதில் எந்தெந்த வகையில் உதவி செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : தென்னை வளர்ப்புக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில மிகுந்த ஊக்கம் அளிக்கப்படுகிறது. சோழ நாடு சோறுடைத்து என்பதுபோல சேரநாடு சிறப்பான தென்னை உடைத்து என்று சொல்ல முடியும். ராஜாக்கமங்கலம், தோவாலை, அகஸ்தீஸ்வரம் என்ற மூன்று ப்ளாக்கிலும் 1,300 ஏக்கரா தென்னை வளர்ப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. குருந்தன்காடு, கிள்ளியூர், முஞ்சிறை ஆகிய மூன்று ப்ளாக்கில் 1,500 ஏக்கரா எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. மேல்புரம், தக்கலையில் 850 ஏக்கரா தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

முதல் ஐந்து வருடத்திற்குத் தொடர்ந்து பண உதவி செய்கிறோம். முதல் வருடம் ரூ.1,250, இரண்டாவது வருடம் ரூ. 425, மூன்றாவது வருடம் ரூ. 550, நான்காவது வருடம் ரூ. 600, ஐந்தாவது வருடம் ரூ. 675 ஆக இந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 3,500 உதவி செய்யப்படுகிறது. பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து 7-வது ஆண்டில் இருந்த அந்தப் பணத்தைத் திரும்ப வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதில் முக்கால் பங்கை ஏ.ஆர்.சி. கொடுக்கிறது. மீதி கால்பங்கை தமிழக அரசு கொடுக்கிறது.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : மிகவும் சிறப்பான ப்ளாக் முஞ்சிறை. இது கடலோரப் பகுதியாக—ஆற்றுப்படுகை உள்ள பகுதியாக இருக்கிறது. இங்கே கொடுக்கிற உதவி போதாது. இதை இன்னும் அதிகப்படுத்த முன்வருவார்களா ?

<u>மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார்</u> : குருந்தன்காடு, கிள்ளியூர், முஞ்சிறை ஆகிய ப்ளாக்குகளில் மட்டும் 1,500 ஏக்கரா தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. அங்கே தென்னை நன்றாக விளைச்சல் தருகிறது. வருடத்திற்கு 250 காய்கள் கொடுக்கிறது என்றாலும் ஆச்சரியம் இல்லை. அரசாங்கத்தில் வருடத்திற்கு சராசரி அங்கே மரத்திற்கு 100 காய் என்று கணக்கு எடுத்திருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் 75 காய், தஞ்சை மாவட்டத்தில் 50 காய் என்று கணக்கு எடுத்திருக்கிறோம். அங்கே நன்றாக விளைவதால் அவசியமானால் இரண்டாவது போக திட்டத்தையும் நிறைவேற்ற அரசு முன்வரும்.



1975 மார்ச் 22]

<u>திரு. வி. ராமசாமி</u> : வடாற்காடு மாவட்டத்தில் உள்ள தென்னைகளை சுருந்தலை வண்டு என்ற பூச்சி அடித்து குருத்து பாழ்பட்டுவிடுகிறது அம்பலூர், கல்லாசி, திருப்பத்தூர் போன்ற பலயிடங்களில் இது ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்க அரசு முயற்சிக்குமா?

<u>மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார்</u> : தென்னை மரத்தைத் தாக்குகிற பூச்சியை ஒழிக்கப் பல திட்டங்கள் இருக்கின்றன. மருந்துகள் இருக்கின்றன. வேறு பூச்சிக்களைக் வளர்த்து, இந்தப் பூச்சிக்களைக் கொல்லவும் பாரசைட் போனற திட்டம் இருக்கிறது. தனியாக அதைப்பற்றி கேள்வி போட்டால் அது பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை என்னால் சொல்ல முடியும்.

<u>திரு. சோ. அழகர்சாமி</u>: தென்னை வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் சிறப்புத் திட்டம் முன்னால் தயாரிக்கப்பட்டு, ராமநாதபுரம், செங்கல்பட்டு போன்ற இடங்களில் அமல் செய்யப்பட்டதே, அதற்காக தனி அதிகாரிகள் கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் கீழ் எத்தனை ஏக்கராக்களில் தென்னை மரம் வளர்க்கப்பட்டிருக்கிறது என்று அறியலாமா?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : கேள்வி கன்னியாகுமரி, மணப்பாறை பகுதியில் தென்னை மரத்தை வளர்க்கப் போடப்பட்டுள்ள சிறப்புத் திட்டங்களைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும். இது கிட்டத்தட்ட ஐந்து வருடத்திற்கு ரூ. 3,500 உதவி செய்கிற வகையில் அமைந்தது.

<u>திரு. நா. வீராசாமி</u> : மணப்பாறை வட்டத்தில் தென்னை வளர்க்கும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் ஆறு அடி ஏழடிக்கு மேல் உயரம், போகாமல் இருக்கக் கூடிய தென்னங்கன்றுகளை வளர்க்கும் திட்டம் இருக்கிறதா? இது பற்றி வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி செய்திருக்கிறதா? காரணம் நேற்றைய தினம் என் தொகுதியில் வெள்ளம்பி என்ற கிராமத்தில் கிருஷ்ணமூர்த்தி என்ற தோழர் இளநீர் வெட்ட மரத்தின்மீது ஏறி கீழே விழுந்து உயிரிழந்துவிட்டார். ஆகவே இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுக்க குட்டையான தென்னையை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, தென்னை மரங்கள் உயரமாக வளராமல் இருப்பது நல்லது. மேலே ஏறி விழுந்து இறந்தான் என்பதும் இல்லாமல் இருக்கும். மேலும் நம் வீட்டில் வளர்ந்து அடுத்தவர் வீட்டில் வளைந்து காயைப் போடுகிற நிலையும் இல்லாமல் இருக்க உயரமாக வளர்க்காமல் குட்டையாகவே வளர்க்க முயற்சிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அரசு கொடுக்கிற கடன்களை முதல் 5 ஆண்டுகளுக்குக் கொடுத்துவிட்டு, அடுத்த 7-வது ஆண்டிலிருந்து திரும்பப் பெறுகின்ற திட்டமிருக்கிறது. ஆனால், 7-வது ஆண்டு தென்னை காய்ப்பதில்லை. 5 ஆண்டுகளுக்குப் பிறகு இன்னும் 5 ஆண்டுகள், கழித்து 10-வது ஆண்டிலிருந்து கடன் வசூலிக்கிற திட்டம் இருந்தால், விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும். அதை அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி நான் நன்கு அறிந்தவன். இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றிச் சொல்லுங்கள். நான் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அங்கு 10-வது ஆண்டுக்குப் பிறகுதான் கடன் வசூலிக்கப்படுகிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் 7-வது ஆண்டு காய்க்காது தென்னை மரம் என்று யாராவது சொல்வார்களானல் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, தென்னை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய யத்தனித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், வறட்சியின் காரணமாக, அங்கங்கு மேட்டுப் பகுதிகளில் பல 100 தென்னைகள் காய்ந்து கொண்டிருக்கின்றன. வீணாகப் போய்க் கொண்டிருக்கின்றன. அதற்கு ஏதேனும் விசேஷ கவனம் செலுத்துவதன் மூலமாக காய்ந்து போகாமலிருக்கக்கூடிய வகையில் அரசாங்கம் ஏதாவது ஆலோசனை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, தென்னை மரத்திற்குத் தண்ணீர் அதிகம் தேவை. ஆகவே, மேட்டுப் பகுதியில், தண்ணிர் இல்லாத பகுதியில் போட்டால், அது காய்ந்து போகக்கூடிய நிலைமை வரும். அதற்கு வேறு தண்ணீர் ஊற்றுக்களை ஏற்பாடு செய்ய வேண்டும். கிணற்றுத் தண்ணீரோ, வாய்க்கால் தண்ணீரோ கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமே தவிர, தண்ணீர் குறைவாகத்தான் கிடைக்கும் என்ற பகுதியில் தென்னை வைக்க அரசு பரிந்துரை செய்வதில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அரசு இந்த மாதிரி தென்னை மரங்கள் எல்லாம் வைப்பதற்கு அட்வான்ஸாக லோன் மற்றவைகள் எல்லாம் கொடுக்கிறார்களே, அம்மாதிரி பெற்ற பிறகு, தென்னை மரங்கள் போடப்பட்டிருக்கின்றனவா? அவை எந்த ஸ்டேஜில் இருக்கின்றன என்பதைக் கண்காணிக்க ஏற்பாடு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இதைக் கண்காணிப்பதற்கு ஒன்று பாங்க் அதிகாரிகள், இரண்டாவது அரசு அதிகாரிகள்—ஆக இரண்டு பகுதிகளிலும் இருந்து நன்றாகக் கண்காணிக்கப்படுகின்றன. யாராவது கடன் வாங்கி அல்லது முன்பணத்தை வாங்கி அவர்கள்



தென்னை மரத்தை—இப்போழுது ரூ. 1,500 முதலிலே கொடுக்கிறோம்—பயிர் செய்யாமல் இருப்பார்களானல் அதைத் தெரிவித்த உடனே நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. என். டெனிஸ் : தலைவரவர்களே, கேரளத்தில் தென்னை உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரிசர்ச் செய்து, TxD என்ற வெரைட்டியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதுபோல், தென்னை புரடக்ஷனை அதிகரிப்பதற்கு, அவ்விதமான ரிசர்ச் செய்து, அதற்காக நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, TxD நன்றாகப் பலன் கொடுக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆகையினால் தான் TxD வெரைட்டியை நமது அரசுத் துறை பண்ணைகளில் வழங்குகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட பந்தலம் என்ற இடத்தில் ஒரு விதைப் பண்ணையிருக்கிறது. பல தென்னங் கன்றுகளை வளர்த்து, இந்த TxD வெரைட்டியை அதிகமாகக் கொடுத்து வருகிறோம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, தென்னை வளர்ப்பதற்கு லோன் கொடுப்பதிலே கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கூடுதலாகவும் இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் குறைவாகவும் சர்க்காரால் கொடுக்கப்படுகிறதே, அதற்கு என்ன காரணம், அடுத்து, வைகையாற்றின் கரையிலே வண்டல் மணல் மிகுந்திருக்கிறது. தேவைக்கு மிஞ்சிய தண்ணீரும் இருக்கிற காரணத்தாலே, அங்கு தென்னை பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 4,000-வது குறைந்த பட்சம் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : வைகை டாம் ஓரத்திலே தென்னை வளரும் என்பது அரசுக்குத் தெரியும். ஆனால், இங்கு கேட்டிருப்பது கன்னியாகுமரி— மணப்பறை பற்றி யென்பதால் முழு விவரம் என்னிடம் இல்லை. ஏன், கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாகப் பணம் கொடுக்கப்படுகிறது என்று கேட்கிறார்கள்—கன்னியாகுமரி மாவட்ட உறுப்பினர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும்--அதற்குக் காரணம் ரீ-பேயிங் கப்பாசிட்டி—இவையெல்லாம் இனமாகக் கொடுப்பதில்லை. கன்னியாகுமரியில் ஒரு காய்க்கு ரூ. ஒன்று திரும்பக் கிடைக்கின்ற சக்தி அதிகமாக இருக்கிற காரணத்தால், அம் மாவட்டத்தில் ரூ. 3,500 கொடுக்கப்படுகிறது.

திரு. வ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்தத் தென்னை வளர்ப்புத் திட்டத்தில் இப்பொழுதிருக்கிற தென்னை மரங்கள் ரொம்ப டால் வெரைட்டியைச் சேர்ந்தவை. அதைத்தான் கொடுக்கிறார்கள். நண்பர் வீராசாமி சொன்னதைப் போல், மேலே காய் பறிக்க ஏறும்போது, உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலைமை ஏற்படும். அதனால், ஆயிரங்காய்ச்சி என்ற குட்டை வெரைட்டி ஒன்றிருக்கிறது. ஒரு மரத்திலே ஆயிரம் காய்க்கு மேல் காய்க்கிறது. 10 அடி உயரத்திற்குள்ளாகத்தான் இருக்கிறது.

ஆகவே, அந்த வெரைட்டியை இதுபோன்ற தீவிரத் திட்டங்களில் மேற்கொண்டு பரப்புகின்ற திட்டத்தைச் செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பது ட்வார்ஃப் வெரைட்டி; சென்னை போன்ற நகரங்களிலே தோட்டத்திலே இதை வைத்திருக்கிருர்கள். அது பெரிய காயாக இருக்க முடியாது; நிறைய இருக்க முடியாது.

திரு. ஏ. எம். இராஜா: பெரிய காய், ஆயிரம் காய்..........

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: ஆயிரம் காய்—அது கோயம்பத்தூரிலே விளைகிறது என்று சொன்னுல் எந்த இடத்தில் என்று எனக்குத் தெரிவித்தால் நன்ருக இருக்கும். கோவையிலே ஆயிரம் காய் விளைகிற இடம் இருக்கிறது என்று சொன்னுல் அது எங்கிருக்கிறது? டெல்லியிலே கூட அது மாதிரி விளைகிறது என்று சொனனுல் நான் நம்பத் தயாராக இல்லை. அங்கே ஒன்றிருக்கிறது என்று சொல்லி, நான் போய்ப் பார்த்தேன். சுற்றிக் கண்ணுடி வைத்து, துளை போட்டு, சூடான காற்றை உள்ளே புகுத்தி, தென்னை மரம் ஒன்றை காட்சிக்காக வைத்திருக்கிருர்கள். ஆகவே, டெல்லி போன்ற வட இந்தியப் பகுதிகளிலே விளையாது. கோவையிலே ஈரோட்டில் விளைகிறது. அதற்கு அரசு உதவி கொடுக்கிறது. ஆனுல் ட்வார்ஃப் வெரைட்டியைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா: அது இராஜபாளையத்திலே.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, தென்னையானது தாளால் பெற்ற நீரைத் தலையால் தருவது என்ற அளவு நன்றியோடு சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட தென்னை நீரானது சில ஏரியாக்களிலே உப்பாகவும், சில ஏரியாக்களிலே இனிப்பாகவும் இருக்கிறது. ஆகவே, எல்லாமே இனிப்பு இளநீராக இருக்கச் செய்வதற்கு வேண்டிய ஆராய்ச்சியை அமைச்சரவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இளநீர் உப்பாக இருக்கிறது என்று சொல்கிருர்களா அல்லது உப்பு நீர் பாய்ச்சப்படுகிறது என்று சொல்கிருர்களா? உப்பு நீர் பாய்ச்சினுலும் தென்னை மரம் வளரும் என்று சொல்கிருர்கள். உப்புத் தண்ணீரில் வளர்கிற தென்னை மரத்தின் இளநீர் உப்பாக இருக்கிறது என்பது அல்ல. உப்புத் தண்ணீரில் வளர்ந்த மரத்தின் இளநீர் இனிப்பாக இருக்கிறது.

தேவிகோட்டை—பூவந்தி சாலையில் பாலம்.

*427 வினு—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:



திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், தேவிகோட்டை—பூவந்திக்கு இடையில் உள்ள ஓடையில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

திரு. த. சோனையா: நம்முடைய அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிருர்கள். எந்த ஊருக்கும் எந்த ஊருக்கும் இடையே இல்லையென்று சொல்கிருர். ஏனென்ருல், கேள்வியே மாறுபட்டு வந்திருப்பதால், கேள்வியைச் சொல்லி பதிலைத் திரும்பவும் சொல்வாரா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாடபுரம் தேனி—ஏர தி சாலை. அதனுடைய நீளம் 9.2 கிலோ மீட்டர். மண் வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன. அவர் கேட்டிருப்பது பாலம் கட்டுவது முடியுமா என்பது. அதற்கு ரூ. 2 இலட்சம் செலவாகும் என்பதனுலே, வறட்சி நிதியிலிருந்து செலவு பண்ண முடியாது. ஆகவே, பணம் வந்த பிற்பாடு செலவு செய்யப்படும்.

கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் தெரு விளக்குகள்.

*423 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவிந்தராச கண்டிகை ஆகிய கிராமங்களில் இது வரை தெரு விளக்குகள் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில் மேற்கண்ட ஊர்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது அறிக்கையில் பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவிந்தராச கண்டிகை ஆகிய மதுராக்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க குருவராச கண்டிகை ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகவும், மேற்படி தீர்மானத்திற்கு ஏற்ப தெரு மின் விளக்குகள் அமைக்க மின் வாரியத்தை அணுகி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

பொன்னம்பலசாமி மடம்.

*429 வினு—திரு. எஸ். முருகையன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலசாமி மடத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் சிலவற்றை விற்க அறநிலையத்துறை ஆணையரிடம் அனுமதி பெறப்பட்டதா?

(இ) எதற்காக மேற்படி சொத்துக்கள் விற்கப்பட்டன?

(உ) விற்ற பணம் எவ் வழியில் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இந்நிறுவனம் இந்து சமய அறநிலையச் சட்டத்தின் கீழ் வாராதபடியால் அறநிலையத்துறை ஆணையரின் அனுமதி தேவையில்லை.

(இ) நிலங்களைச் சாகுபடி செய்பவர்கள் அல்லது குத்தகைக்கு எடுத்தவர்களிடமிருந்து குத்தகை ரொக்கம் மற்றும் நெல் வசூல் செய்வதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக நிலங்கள் விற்பனை செய்யப்பட்டது.

(உ) விற்பனை தொகையில் ஒரு பகுதி மட்டும் வசூலிக்கப்பட்டு அத் தொகையை மடத்தின் நிர்வாகத்துக்காகவும், கட்டிட மராமத்துக்காகவும் செலவிடப்பட்டது போக மீதியை சேமிப்புக் கணக்குகளில் "கோயிலூர் மடாலயம் ஆண்டவர் மன்றம்" என்ற பெயரில் போடப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மடத்துக்குச் சொந்தமான ஏராளமான நிலங்களையெல்லாம் குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலையிருக்கிறபொழுது, அரசு அம்மாதிரி சிந்திக்கின்ற பொழுது, குத்தகை சரியாக வரவில்லை யென்று சொல்லி, இந்த நிலங்களை அங்கு விற்றிருக்கிறார்கள்—அதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த மடத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய துறையின் ஆளுகைக்குட்பட்ட மடம் அல்ல. தனியார் நடத்துகின்ற ஒரு மடமாகும். ஆனால் அந்த மடத்தினுடைய நிர்வாகத் திட்டத்தின்படி அதைத் தனியார் நடத்தி வந்தாலும் அந்த நிலத்தை விற்றது தவறு என்பதை நம்முடைய இலாக்கா பரிசீலனை செய்து கண்டு பிடித்ததற்குப் பிறகு இன்னும் பல்வேறு நிர்வாகக் கோளாறுகள் அங்கே இருக்கிற காரணத்தினால் அந்த மடத்தை அரசாங்கத்தினுடைய ஆளுகைக்குக் கொண்டுவரலாம் என்று கருதி தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இம்மாதிரி சாகுபடி செய்யக்கூடிய குத்தகைக்காரர்களே அந்த நிலத்தைக் கிரயத்திற்கு எடுத்துக்கொள்ள விரும்பினால் அந்த நிலத்தை அவர்களுக்குக் கொடுக்க அரசு அனுமதியளிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது: உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டம் குழுவினுடைய பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய சிபாரிசுகள் வந்ததற்குப் பிறகுதான் அரசு அதைப் பற்றி ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



சபாபதி சுவாமிகள் மடம்.

*430 வினா—திரு. எஸ். முருகையன் : மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டம், போளூர் வட்டம், தென்பள்ளிப்பட்டு, சபாபதி சுவாமிகள் மடத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏதேனும் விற்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான இந்து சமய அற நிலையத் துறை ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இந்நிறுவனம் இந்து சமய அற நிலைய சட்டத்தின் கீழ் வாராதபடியால், அற நிலையத் துறை ஆணையரின் அனுமதி தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) பேரவை சார்ஜெண்ட் தனது கடமையைச் செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து

Thiru K. T. K. TANGAMANI: Sir, on a point of order. My point of order relates to the maintenance of order in this House.

தாங்கள் ஏற்கெனவே இந்த மன்றத்திலே, மன்றத்தை ஒட்டி இருக்கக் கூடிய இடங்களிலே இம்மாதிரி நிலை இல்லாத முறை இருப்பதற்காக உத்திரவு போட்டிருக்கிறீர்கள். அந்த உத்திரவை அமல் நடத்துவதற்காக நேற்று வாட்ச் அண்ட் வார்ட் சார்ஜண்ட் முயற்சி செய்த போது கல்வியமைச்சர் அவர்களுடைய செக்யூரிட்டி ஆபீசர் என்று சொல்லக்கூடியவர் அதைத் தடுத்தது மட்டுமல்லாமல் ரொம்ப அவமானமும் செய்திருக்கிறார்கள். இதைப் பல உறுப்பினர்கள் பார்த்திருக்கிறார்கள். அதைப் பற்றி தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? தாங்கள் போட்ட உத்திரவை அமல் நடத்த சார்ஜண்டுக்கு ஏதாவது பாதுகாப்பு உண்டா? அமைச்சருடைய செக்யூரிட்டி ஆபீசர் சார்ஜண்டை விட இங்கே செல்வாக்கு உள்ளவரா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER: The matter has been brought to the notice of the Secretary and the same is under examination I will let the hon. Member know the result day-after-tomorrow.

## 3. 1974—75 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை—அளித்தல்.—

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1974-75 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத்துணைதலைவர் அவர்களே, 1974-75-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 108·28 கோடி ரூபாயாகும். இதில் 55·87 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை கடன்—மூலதனக் கணக்குகளின் கீழும் அடங்கும். மொத்த மானியக் கோரிக்கைகளில் 107·36 கோடி ரூயாய் அனுமதித்த இனங்களின் கீழும், 92 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியச் செலவினங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

வறட்சித் துயர் தணிப்புக்கு நாம் மேற்கொண்டுள்ள பணிகளுக்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் மொத்தம் 21·29 கோடி ரூபாய்ச் செலவுக்கு 40 ஆம் மானியத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்பார்வையின் கீழ் 8·56 கோடி ரூபாய் செலவுக்கும் குடி நீர் வடிகால் நிறுவனத்தின் மூலம் 2 கோடி ரூபாய்ச் செலவுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.. பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களை, இயன்ற அளவுக்கு வறட்சிப் பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிட நாம் முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இவ்வாறு செலவிடும்போது, வறட்சித் துயர் தணிப்புத் தலைப்பின்கீழ் அந்த நிதி ஒதுக்கங்கள் செலவாகக் காட்டப்படும். இதற்காகக் கணக்கு முறையில் அவையின் ஒப்புதலைப் பெறவும் இம் மானியத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஆறு இலட்சம் பேர்களுக்கு நாளொன்றுக்கு வேலையளிக்கும் வண்ணம் இப்பணிகள் தற்போது முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் எளிய நிலையிலும் நடுத்தர நிலையிலும் உள்ளவர்களுக்கு சீரான விலைகளில் உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்காக நாம் மேற் கொண்டுள்ள கொள்முதல் முயற்சிகளுக்கென தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கு நிறுவனத்திற்கு 15 கோடி ரூபாய் கடனும், நாற்பத்திரண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மொத்தமாக ஒரு கோடி ரூபாய்க் கடனும் தருவதற்கு இந்த மதிப்பீடுகளில் 56-ஆவது மானியக் கோரிக்கை வழி செய்கிறது. உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வது, தணிக்கைச் சாவடிகள் அமைப்பது போன்ற தொடர்புடைய செலவுகள், மொத்தம் 86 இலட்சம் ரூபாய் 34-ஆவது மானியக் கோரிக்கையில் அடங்கும்.



வறட்சியின் விளைவாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பயிரிடும் பரப்பு குறைந்ததனால், வரும் பருவத்துக்கு வேண்டிய விதைகளை வேளாண்மைத் துறையினர் விலைக்கு வாங்கி விற்பது மிகவும் அவசியமானதாகும். இதற்கென 1·43 கோடி ரூபாய் செலவுக்கு மன்றத்தின் ஒப்புதலை 20-ஆவது மானியத்தின் மூலம் பெற விழைகிறேன். மத்திய அரசு நமக்கு உரம் ஒதுக்கி வருகின்றது. இந்த ஆண்டு இதற்கான விலை உயர்ந்துள்ளதற்காக 9·49 கோடி ரூபாய்கூடுதல் செலவு ஏற்படும் எனமதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கும் இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு இதற்கான தகவல்களை அனுப்பியவுடன் மாநிலக் கணக்கு ஆய்வாளர் அரசின் கணக்கில் பற்று வைப்பதற்கு ஏற்ற நிதி ஒதுக்கமாக இது அமையும்.

வறட்சிப் பகுதிகளில் விரைந்து வேலை வாய்ப்புத் தருவதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் கண்மாய், இராஜசிங்கமங்கலம் கண்மாய், திருப்பத்தூர் கண்மாய், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கவிநாடு கண்மாய் ஆகிய நான்கு பெரிய கண்மாய்களைத் தூரெடுத்துச் சீரமைக்கும் பணிகளுக்காக ஒரு கோடி ரூபாயும், குளித்தலை வட்டத்தில் கண்ணூத்து ஓடைத் திட்டத்தை மேற்கொள்வதற்காக 20 இலட்சம் ரூபாய் செலவிட வகை செய்துள்ளோம்.

சென்னை மாநகரில் தற்போதுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு; மொத்தம் 85.25 இலட்சம் ரூபாய், கடனாகவும், மானியமாகவும் மாநகராட்சிக்கு வழங்க இத்துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வீராணம் திட்டத்திற்கு சென்னையை நோக்கிப் போடப்பட்டு வரும் குழாய்களைப் பயன்படுத்திக் கொண்டு, பாலாற்றுப் படுகையிலிருந்து கிடைக்கும் நீரை சென்னைக்குக் கொண்டு வருவதற்குகான இடைக்கால விரைவுத் திட்டம் ஒன்றுக்கு அரசு அண்மையில் அனுமதி வழங்கியது. இதற்கென மொத்தம் 1.12 கோடி ரூபாய் இத்துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ளது. இதுவன்றி குடிநீர்த் தட்டுப் பாட்டை நீக்க. பல்வேறு நகராட்சிகளுக்கு மொத்தம் 28.96 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பெருகிவரும் நமது வரவு-செலவுகளுக்கு ஏற்ப, எதிர்பாராச் செலவு நிதியின் அளவையும் 10 கோடி ரூபாயிலிருந்து 20 கோடி ரூபாயாக உயர்த்த, மன்றத்தின் ஒப்புதல் அண்மையில் பெறப்பட்டது. இதற்கும் இந்த மதிப்பீடுகள் வகை செய்கின்றன.

ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தின் பகுதியாக, முட்டுக்காட்டில் புதிதாக நிறுவப்பட்டு வரும் தொழிற்சாலைக்கு 14.38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் கண்ணிழந்தோர் பள்ளிகள் நான்கையும், செவிடர் பள்ளிகள் ஐந்தையும் 4.71 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்க அடையாள நிதி ஒதுக்கமும், 555 செவிக் கருவிகள் வழங்குவதற்காக 3.04 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும், பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்கான செலவுகளும் இம் மன்றத்தின் ஒப்புதலுக்காக இத்துணைமானியக் கோரிக்கைகளில் இடம் பெற்றுள்ளன.

1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வரும் என்று இப்போது அறிவிக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வுகளுக்கு இந்த ஆண்டு 4.03 கோடி ரூபாய் செலவிட இந்தத் துணை மதிப்பீடுகள் வகை செய்கின்றன. அரசு அலுவலர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 25 இலட்சம் ரூபாய் கூடுதல் கடன் தொகையும், விழா முன் பணங்களுக்காக இரண்டு கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கமும், 56ஆவது மானியத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர்களுக்குத் தடங்கல இன்றி ஊதியங்கள் தருவதற்கு உதவும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன்னதாக மானியங்களை வழங்குவதற்கு மொத்தம் 3.12 கோடி ரூபாய் 17 ஆவது மானியத்தில் ஒதுக்கியுள்ளோம். உள்ளூர் மேல்வரி ஈடு மானியமாக 3.46 கோடி ரூபாய் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதலாக அளிப்பதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மானியத்தில் ஏற்பட்டுள்ள மிச்சங்கள் போக மீதித் தொகையான சுமார் 70 இலடசத்திற்கு 28ஆவது மானியக் கோரிக்கையில் இதற்கென ஒப்புதல் வேண்டியுள்ளோம்.

1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும், 1972 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் செப்பனிட்டு மேம்படுத்துவதில் இந்த ஆண்டுச்செலவான 86 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடும் துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள சாலைகள் பற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கவை.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு கூடுதலாக ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கவும், வெள்ளிவிழாக் கொண்டாடும் சென்னை தொழில் நுட்பக் கழகத்திற்கு ஆறு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பலரை முதல் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிப்பதற்கு ஏற்றவண்ணம் 23 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவிற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

புதிதாக ஐந்து தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை அமைக்கவும், மொத்தம் 10 ஆய்வு-மதிப்பிடுதல்—சிகிச்சை (S. E. T.) பிரிவுகளை உருவாக்கவும் 8.48. இலட்சம் ரூபாய் 18ஆவது மானியத்தில் இடம் பெற்றுள்ளது. குடிசை மாற்றுப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைச் சென்னை மாநகராட்சி தொடர்ந்து அளித்து வருவதற்காக ஒரு இலட்ச ரூபாய் செலவுக்கு வகை செய்ய அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில்புதிதாக அமைக்க இருக்கும் புறநகர் மருத்துவ மனைகளுக்காக மொத்தம் 45 இலட்சம் ரூபாய் செலவிடவும் வகை செய்துள்ளோம். இதுவன்றி, பல்வேறு மருத்துவமனைகளில் கூடுதலாக அமைக்கப்பட்டு வரும் வசதிகளுக்கும் பணிகளுக்கும் அவையின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.



தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்துக்கு 35 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும், வனத தோட்ட நிறுவனத்துக்கு 15 இலட்சம ரூபாய் பங்கு மூலதனம் வழங்கவும், சர்க்கரை ஆலைகள் நிறுவனத்துக்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் தருவதற்கும், தமிழ் நாடு உபபள நிறுவனத்துக்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும் துணை மதிப்பீடுகளில் வகை செய்துள்ளோம். தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்துக்கு முன்னர் கடன் தொகையாக வழங்கப்பட்ட 30 இலட்சம் ரூபாய் அந்நிறுவனத்தின் பங்கு மூலதனமாக மாற்றப்பட்டுள்ளது. அதற்கான அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது சென்னையிலும் ஆளியாறு நகரிலும் உள்ள பொதுப்பணித் துறை தொழிற்கூடங்களை ஒரு புதிய நிறுவன அமைப்பாக மாற்றுவதற்கு அடையாள நிதி ஒதுக்கமும் கோரப்பட்டுள்ளது.

பேருந்துகள் வாங்கும்பொருட்டு பல்லவன் போக்குவரத்து நிறுவனத்துக்கு மத்திய அரசு கடனாக அளித்துள்ள மூன்று கோடி ரூபாயை வழங்குவதற்கும் நாம் நிதி ஒதுக்கம் செய்துள்ளோம். இதுவன்றி பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களுக்கு கடன்களும், வழிவகை முன்பணங்களுமாக மொத்தம் 3·93 கோடி ரூபாய் அளிக்கவும் மேலும் வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழிவகை முன்பணமாக வழங்கியதற்கும், வீட்டு வசதி வாரியத்துக்கு வழிவகை முன் பணமாக 34 இலட்சம் ரூபாய் வழங்கியதற்கும் 56 ஆவது மானியத்தின் மூலம் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான ஒரு சில செலவினங்களை இதுவரை நான் எடுத்துக் கூறியுள்ளேன். மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இவை பற்றிய விளக்கங்களையும் பிற செலவினங்கள்பற்றிய விவரங்களையும் காணலாம் என்று கூறி, 1974–75ஆம் ஆண்டிற்கான இந்த இறுதித் துணை மதிப்பீடுகளை ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

## 4 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,92,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து வெட்டுத் தீர்மானங்கள்.

2 நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களின் வாசகத்தை பேரவைத்துறை திருத்தியது குறித்து.

Dr. H. V. HANDE: Before we take up the other items, Sir, I would like to bring to your kind notice a very valid point of order. Whenever we give cut-motions, we give lot of details for the cut-motions. But we find that in quite a few of our cut-motions, the details we have given are changed or some words are omitted by the department concerned and they do not inform us about the reasons why they are changed or that it has been changed. A similar situation arose in Lok Sabha when the question given notice of by an hon. Member was completely changed by the department concerned and when the matter was raised in the Lok Sabha a ruling was given that no change could take place. This ruling was given on 13th December 1974, that whenever questions or cut-motions are given, no change need be made by the department concerned unless the member concerned had been informed of the same; unless that is done and he had agreed, it should not be made. I am bringing to your kind attention to my cut-motion No. 764. I am bringing it sufficiently early to your notice so that the Speaker or Deputy Speaker will have time to scrutinise the same and take action. My original cut-motion is ' to discuss about the need to take action against all culprits mentioned in the 24th report of the Estimates Committee *however high they may be*'.

The words 'however high they may be' had been deleted. I do not know why. Nor have I been informed of the same. I want to know whether that is in order for the department to change embarrassing questions or cut-motions put by hon. Members. A question put by Mr. Madhu Limaye had been changed. He has complained of the Industry Ministry acting in collusion. The words 'acting in collusion' had been changed by the Secretariat of Lok Sabha. That was objected to by the Hon. Member and the Speaker upheld his contention and said that no such changes will be made. It has all come up in papers. I do not want to read it all again. I am just bringing my point to your consideration for your scrutiny and ruling. I would also like to know whether I would be permitted to move my cut-motion in the original form?

Mr. DEPUTY SPEAKER: I will give my ruling afterwards.



(அ) நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்—தொடர்ச்சி.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பல்லடம் தாலுக்கா, தலைமையிடத்தில் முன்சீப் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,92,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru K. T. K. TANGAMANI: Sir, to discuss about the need to increase the accommodation of the Sub-Divisional Magistrate's court, Usilampatti, I move—

"That the allotment of Rs. 3,92,78,000 under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100."

Thiru J. JAMES: Sir, to discuss about the necessity to construct the Advocates Chamber rooms attached to the District Court in Nagercoil, I move—

"That the allotment of Rs. 3,92,78,000 under Demand No, 13—Administration of Justice be reduced by Rs. 100".

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நீதித் துறையில் பணியாற்றும் தட்டெழுத்தர்கள் தமிழ் சுருக்கெழுத்து கற்றுக்கொள்ள வலியுறுத்தப்படும்போது அதற்குரிய பயிற்சியாளர்களை அரசு நியமிக்க வேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,92,78,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 14 சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,38,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு வழங்கும் உணவுவகைகளை தூய்மையாகவும் சுவையாகவும் வழங்க வேண்டியதன் அவசியம்பற்றி எடுத்துக் கூற—

"நிதிக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,38,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. கே.எ. வகாப் :</u> தலைவரவர்களே, ஜெயில்களில் உள்ள சுகாதார சீர்கேடுகளைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,38,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. கே. என். குமாரசாமி :</u> தலைவரவர்களே, நீண்ட காலத் தண்டனை பெற்றுத் தொழில் செய்யும் கைதிகளுக்கு ஊதியம் வழங்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,38,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: To discuss about the necessity to provide reasonable conveniences in the sub-jail at Nagercoil, I move—

"That the allotment of Rs. 4,38,95,000 under Demand No. 14—Jails be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI: Sir, to discuss about the need to introduce shift system for the warders as in the case of Police, I move—

"That the allotment of Rs. 4,38,95,000 under Demand No. 14—Jails be reduced by Rs. 100."

<u>(இ) நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு.</u>

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,58,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

<u>திரு. எ. சுவாமிதாஸ் :</u> தலைவரவர்களே, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் ஆட்சிக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும் என்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,58,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலும் கூட்டுறவு அங்காடிகள் திறக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த—



"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,58,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. கே. என். குமாரசாமி:</u> தலைவரவர்களே, எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவு ஸ்டோர்கள் ஏற்படுத்தி உணவு மற்ற பொருள்கள் விநியோகிக்க ஏற்பாடு செய்வதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,58,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. கே. எ. வகாப் :</u> தலைவரவர்களே, உலக வங்கிக் கடன் விவசாயிகளுக்கு பயனற்ற நிலையில் உள்ள கட்டுப்பாடுகளைப் போக்கி, கடன் வழங்கும் முறையை எளிதாக்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,58,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI: Sir, to discuss about the demands of the employees of the Central Co-operative Bank, I move—

"That the allotment of Rs. 4,58,79,000 under Demand No. 23—Co-operation be reduced by Rs. 100."

<u>(ஈ) நிதிக் கோரிக்கை எண். 26—கைத்தறியும்-துணித் தொழிலும்.</u>

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 26—கைத்தறியும்—துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,94,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

<u>திரு. கே. என். குமாரசாமி :</u> தலைவர் அவர்களே, வேஷ்டி, சேலைகளை கைத்தறிக்கு ஒதுக்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 26—கைத்தறியும்-துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,94,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. கே.எ. வகாப் :</u> தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 26—கைத்தறியும்-துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,94,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The object of the epithet is there I think the hon. Member has every right to point out who are all involved. But in this particular matter the hon. Member, Dr. Hande will not insist, I think, on moving such a motion.

DR. H. V. HANDE : As a compromise, I would suggest the addition of the words 'irrespective of........' then the phraselogy will be, "to discuss about the need to take disciplinary action against all the culprits mentioned in the 24th report of the Estimates Committee, irrespective of the persons concerned".

MR. DEPUTY SPEAKER : No. It means that Government are desisting from taking action because of the persons involved. There should not be any motive.

DR. H. V. HANDE : There is no motive............Here it is concerned with a number of officials........

MR. DEPUTY SPEAKER : I would like to make the position clear. We hope and trust that the Government does not look to the status of the persons or the actual persons concerned. They take action without fear or favour. Therefore this sort of motive in our cut motion may not be proper. That is my view. Please move the cut motion in the amended form itself.

DR. H. V. HANDE : Please give a ruling that in future such things will not take place.

MR. DEPUTY SPEAKER : I have already given my ruling that nobody has the right to amend or alter cut motion or other motions of members here.

(4) 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(உ) நிதிக் கோரிக்கை எண். 35—உணவுப் பொருள் வழங்கல்—தொடர்ச்சி.

DR. H. V. HANDE : Sir, to discuss about the need to take disciplinary action against all the culprits mentioned in the 24th report of the Estimates Committee, I move—

"That the allotment of Rs. 2,49,03,000 under Demand No. 35—Civil Supplies—be reduced by Rs. 100,".



(ஊ) நிதிக்கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு என்ற, தலைப்பின்கீழ் ரூ. 7,61,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு, வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move—"That the allotment of Rs. 7, 61,73,000 under Demand No. 56. Miscellaneous Capital Outlay—be reduced by Rs. 100."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 7,61,73,000 under Demand No. 56—Miscellaneous Capital Outlay—be reduced by Rs. 100."

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,61,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to take over wholesale trade in foodgrains, I move—

That the allotment of Rs. 7, 61,73,000 under Demand No. 56—Miscellaneous Capital Outlay—be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைககப்படுகின்றன.

திரு. எ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கோரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் பேரிலே என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்தி சில கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

முதலாவதாக, கைத்தறித் துறையைப் பொறுத்து கைத்தறி நெசவாளர்கள் பேரிலே, அவர்களுடைய நல்வாழ்விலே அரசுக்கு மிகுந்த அக்கறை இருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கைத்தறி நெசவாளர்கள் இன்றையதினம், குறிப்பாக கடந்த பல மாதங்களாக மிகுந்த அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொழில் முடங்கிப் போய் வேலை இல்லாமல், வாழ வகை இல்லாமல் ஏறத்தாழ 30, 35 லட்சம் மக்கள் நெசவுத் தொழிலை நம்பியிருக்கும் மக்கள் இன்றையதினம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய துயரைத் துடைக்க அரசு உறுப்படியான, திட்டவட்டமான நடவடிக்கை என்ன எடுத்திருக்கிறது என்று தெரியவில்லை.

அண்மையிலே தென் மாநில அமைச்சர்கள் மத்திய அரசிடத்திலே ஒரு மகஜரைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே பல கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நானும் முழுமனதாக ஆதரிக்கிறேன். ஆனாலும் இந்த மாநில அரசு தானாகவே சில காரியங்களை, கைத்தறி நெசவாளர்களுடைய துயரைத் துடைக்க எடுக்க முடியும். அவற்றை ஏன் எடுக்கவில்லை என்பது என்னுடைய கேள்வியாகும். குறிப்பாக; தேங்கியிருக்கும் துணிகள் முழுமையாக அரசால் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. இதற்காக மூன்று கோடி ரூபாய் கொள்முதல் செய்வதற்காக ஒதுக்கியிருப்பதாக பட்ஜெட் உரையிலே நான் பார்த்தேன். எனக்கு வந்திருக்கிற தகவலின்படி அந்தப் பணம் மாநிலம் முழுமைக்கும் எல்லா மாவட்டங்களிலும் சீராகச் செய்யப்படாமல் ஒரு சில பகுதிகளில் மட்டும் அதிகமாகச் செய்யப்படுவதாக புகார் வந்திருக்கிறது. குறிப்பாக, கூட்டுறவுத் துறையின் வாயிலாகக் கொள்முதல் செய்யக் கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து சென்னிமலை போன்ற பகுதிகளில் தனியாரிடமிருந்து தேங்கியிருக்கும் கைத்தறித் துணிகள் கொள்முதல் செய்யப்பட்டதாக நான் அறிகிறேன்.

(முற்பகல் 10-30)

அம்மாதிரி இல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகளைக் கொள்முதல் செய்வதற்கு பயன்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யும்போது முன்பு 9 சதவீதம் லாப விகிதம் வைத்து துணிகளை வாங்குவார்கள். இப்போது அந்த லாப விகிதம் தரப்படாமல் உற்பத்திச் செலவில் 10 சதவீதம் தள்ளி அவைகள் விற்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் படுகின்றன. இது பற்றி ஏற்கெனவே ஒரு தடவை அமைச்சரவர்களிடத்தில் சொல்லும்போது மாநில சங்கத்திற்கு டிஸ்க்ரீஷன் கொடுத்திருக்கிறோம். எந்த கூட்டுறவு சங்கத்திற்கு வசதி குறைவாக இருக்கிறதோ அந்த கூட்டுறவு சங்கத்தை இப்படி கட்டாயப் படுத்தக்கூடாது என்று டிஸ்க்ரீஷன் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அது அமுல்படுத்தப்படுவதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்திச் செலவை விட குறைவாகக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்கள் ஏற்கெனவே வியாபாரம் இல்லாமல் நஷ்டம் அடைந்து வருகின்றன. இப்படி கட்டாயப்படுத்தினால் அவைகள் மேலும் நஷ்டத்திற்குள்ளாகும். ஆகவே, இதைப் தவிர்க்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, ஏற்கெனவே ரிபேட் கொடுக்கப்பட்டு வந்தது. ஸ்பெஷல் ரிபேட் 10 பைசா வேறு கொடுக்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, சாதா ரிபேட் நீக்கப்பட்டு, ஸ்பெஷல் ரிபேட் 10 பைசாவிலிருந்து 5 பைசாவாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. இந்த பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட்டைப் பார்க்கும்போது, 1974–75-க்கு ரிபேட் என்ற வகையில் 2 கோடி செலவிட திட்டமிட்டு இருக்கிறார்கள். 1975–76-ல இதைக் குறைத்து 130 லட்சம் வரை திட்டமிட்டிருப்பதைப் பார்க்கிறேன். இம்மாதிரி நெசவுத் தொழிலானது மிகுந்த ஆபத்திலே சிக்கியிருக்கின்ற நேரத்திலே ரிபேட்டை அதிகப்படுத்துவதற்குப்



பதிலாக இருக்கிற ரிபேட்டைக் குறைப்பது என்பது நெசவாளர்களுக்கு உதவி செய்வதாக ஆகாது. ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த ரிபேட்டையும், ஸ்பெஷல் ரிபேட் 10 பைசாவையும் கொடுக்க ஏற்பாடு செய்தாக வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்வேன்.

அடுத்ததாக, இங்கே சந்தானம் கமிட்டி பரிந்துரைகள் 1973-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் வைக்கப்பட்டன. அந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அவைகளை நிறைவேற்றுவோம் என்றும் அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு நிறைவேற்ற வேண்டிய பரிந்துரைகள் நீங்கலாக, மாநில அரசு நிறைவேற்றவேண்டிய பரிந்துரைகள் நிறைவேற்றப்படாமல் ஏட்டுச் சுரைக்காயாக இருக்கிற நிலையைப் பார்த்து வேதனையடைகிறேன். மாநில அரசு நிறைவேற்ற வேண்டிய சந்தானம் கமிட்டி பரிந்துரைகளை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றியாக வேண்டும். அப்போதுதான் நெசவாளர்கள் பேரில் இந்த அரசுக்கு அக்கறை இருக்கிறது, கருணை இருக்கிறது என்று காட்ட முடியுமே தவிர வெறும் பேச்சுப் பேசி பயனில்லை.

உதாரணமாக பணிக் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி அமைச்சரவர்கள் முன்னர் சொன்னார்கள். பணிக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கின்ற ஏற்பாடுகள் நடக்கிறதென்று சொன்னார்கள். இதற்கான சில முயற்சிகள் தொடங்கப்பட்டன. ஆனால் அந்த முயற்ச்சிகள் நின்று விட்டன. இப்போது பணிக் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய பேச்சே கிடையாது.

அடுத்ததாக, சில ரகத் துணிகளை கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு கொண்டிருக்கிறது. இங்கே அதற்கான சட்டம் இயற்றப்பட, மசோதா கொண்டு வரப்பட்டது. அதற்காக பொறுக்குக் கமிட்டி போடப்பட்டது. பல கூட்டங்கள் நடத்தப்பட்டு, சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு, பல மாதங்கள் ஆயின. இப்போது பொறுக்குக் கமிட்டி கூடுவதில்லை. அது ஊறுகாய்ப் பானையில் போடப்பட்ட நிலைமையில் இருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த முயற்சியை தொடங்கி விட்டு ஏன் பாதியோடு அரசு நிறுத்தி விட்டது என்று எனக்குப் புரியவில்லை, இந்த முயற்சி....

<u>மாண்புமிகு திரு செ. மாதவன் :</u> தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் புரியவில்லை என்று சொல்வது சரியல்ல. காரணம், இதைப் பற்றி நீண்ட நேரம் விவாதித்து, மத்திய அரசாங்கம் இதற்கு அனுமதி மறுக்கிறது என்பதை எடுத்துக் கூறியதற்குப் பின்னால் புரிந்து கொண்டு, இப்படிப் புரியவில்லை என்று பேசக் கூடாது.

<u>திரு. எ. சுப்பிரமணியம் :</u> தலைவரவர்களே, சட்டத்தை நிறைவேற்றி, மத்திய அரசு அனுமதிக்கு அனுப்புவதாக ஏற்கெனவே சொல்லப்பட்டது. சட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்து, சட்ட மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிய பிறகு, மத்திய அரசு அனுமதி கொடுக்கிறார்களா இல்லையா என்பது வேறு பிரச்னை. சட்டத்திற்கு நீங்களே இன்னும் இறுதி வடிவம் கொடுக்காமல் ஏன் தாமதித்து வருகிறீர்கள் என்பது என் கேள்வி.

அடுத்ததாக, கூட்டுறவு நெசவாளர்சங்கங்களை அமைப்பதற்கு முதல்உதவி செய்வதாகச் சொல்கிருர்கள். உதவி செய்யப்படுவதாக பல முறை சொல்லப்பட்டது. ஆனல் இதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இதற்கு ஒரேயொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்கு சாமுண்டீஸ்வரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அங்கீகாரத்திற்கு 100 பேர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிருர்கள். அங்கீகாரத்திற்காக கைத்தறி இயக்குநருக்கு 23—2—1973 அன்று மனு செய்தார்கள். ஏப்ரல் மாதத்தில் பக்கத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தில் இணைந்து கொள்ளும்படி அந்த மனுவை அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள். மீண்டும் 13—6—1973 அன்று திரு. சௌடி சுந்தரபாரதி அவர்களும் சேர்ந்து மீண்டும் மனு செய்தார்கள். அதற்குப் பிறகு ஆர். டி.டி.சி. பேங்கின் ஒப்புதலுக்காக 21—11—1973-ல் அனுப்பியிருக்கிருர்கள். பல முறை முயன்றும் அனுமதி கிடைக்கவில்லை.

ஆனல் அதற்குப் பிறகு பல சங்கங்கள் அமைக்கப்பட்டு அனுமதி கிடைத்திருக்கின்றது. அவைகளின் பெயர்களை படிக்கிறேன்.

மாதவன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

பேராசிரியர் அன்பழகனர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

பெரியார் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

திருவள்ளுவர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

பாண்டியன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

சர். வி. தியாகராயர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

எம். டி. இராமசாமி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

கலைஞர் கருணநிதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

இந்தச் சங்கங்களெல்லாம் இதற்குப் பின்னல் தொடங்கப்பட்டு அனுமதி கேட்டு, இந்த சங்கங்களுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. ஆனல் நான் சொன்ன அந்தச் சங்கத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை, நேரம் குறைவாக இருக்கிற காரணத்தினல் உதாரணத்திற்கு இந்த ஒரு சங்கத்தைப் பற்றி மட்டும் சொன்னேன்.

இப்படிப்பட்ட பாரபட்சம், ஓர வஞ்சனை நெசவாளர் சங்கங்களுக்கு உதவி செய்வதில் காட்டப்படுவது கண்டிக்கத் தக்கது என்பதை கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இம்மாதிரி ஓரவஞ்சனை காட்டுவதை நிறுத்தி, பாரபட்சமில்லாமல் எந்தெந்த சங்கங்கள் உரிய தகுதிகளைப் பெற்றிருக்கின்றனவோ அந்த சங்கங்களுக்கு நிச்சயமாக உதவி வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.



அடுத்ததாக, சேலத்திற்கு அடுத்த குகையில், நெசவாளர் காலனி இருக்கிறது. அந்தக் காலனியை கட்டும்போது, அவர்கள் 15 ரூபாய் வாடகை தரவேண்டுமென்று அவர்களிடத்தில் ஒப்பந்தம் பெறப்பட்டது. பிறகு திடீரென்று அறிவிப்பு இல்லாமல் மாதம் 22 ரூபாய் கட்டவேண்டுமென்று, அதைக் கட்டவில்லையென்று சொல்லி அதற்கு வட்டியும் சேர்த்து ஆகமொத்தம் 37½ ரூபாய் மாதாமாதம் கட்டவேண்டுமென்றும் அதையும் மொத்தத் தொகையாக கட்டியாக வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்படுவதாகவும், இந்தக் காரணத்தினல் அவர்கள் மிகுந்த அல்லல் படுவதாகவும் எனக்குப் புகார் வந்திருக்கிறது. அமைச்சரவர்களுக்கும் இப்படிப்பட்ட புகார் வந்திருக்கும். இது குறித்து அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரை அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். எங்கோ பழியைச் சாட்டிக் கொண்டிருக்காமல் மாநில அரசு அதன் சக்திக்கு உட்பட்டு என்னென்ன செய்ய முடியுமோ அவை அத்தனையும் செய்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

அடுத்ததாக, நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலே ஒரு சில கருத்துக்களை இங்கே நான் சொல்ல விழைகிறேன்.

ஏழை எளியவர்களுக்கு சட்ட உதவி சம்பந்தமாக இங்கே சட்டமன்றத்தில் ஒரு மசோதா தாக்கலாகி அதற்கும் ஒரு பொறுக்குக் கமிட்டி போடப்பட்டு சில கூட்டங்கள் நடத்திய பிறகு, ஒரு ஆண்டிற்கு மேலாயிற்று; அது அப்படியே கிடக்கிறது. என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இந்த மசோதா சம்பந்தப்பட்ட பொறுக்குக் கமிட்டி கூடவில்லை. இந்த மசோதாவிற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படவில்லை. இம்மாதிரி ஏழை எளியவர்களுக்கு, அவர்கள் நீதி மன்றத்தில் வழக்காட உதவி பெறுவதற்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்ற கொள்கையை நாடு முழுவதும் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கையாக இருக்கிறது. பல மாநிலங்களில் இதை யொட்டி சட்டங்களை இயற்றியிருக்கிருர்கள். அந்த அடிப்படையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, மசோதாவிற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படாமல் அது ஊறுகாய்ப் பானையில் போடப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. இந்த மசோதாவிற்கு உயிர் கொடுத்து சரியான சட்டத்தைக் கொண்டு வர அரசு முயலவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

நீதி நிர்வாகம் பொறுத்தவரையிலே, இன்றைய தினம் பொதுவாக மாநிலத்தில் ஒரு கருத்து நிலவி வருகிறது. நீதி லேசிலே கிடைக்காது; வழக்கு மன்றங்களிலே தருகின்ற தீர்ப்புகள் வழக்கிற்கான தஸ்தாவேஜுகள், சாட்சியங்கள் பொறுத்து மட்டும் இராதோ என்ற கருத்து பொதுவாக மாநிலத்தில் பரவுகிற சூழ்நிலை இருக்கிறது. இது மாநிலம் முழுமையிலும் இருக்கிறது. இது ஆபத்தானது. நாட்டின் குடி மக்கள் நீதி பெறுவதற்கு நீதி மன்றங்களுக்குச் சென்றல் நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையை கொஞ்சம் கூட சிதைக்காமல் காப்பாற்றுவது அவசியமாகும். இதில் அரசுக்கு கடமை உண்டு, நீதி மன்றங்களுக்கும் கடமை உண்டு.

இதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இம்மாதிரி கருத்து, அதாவது நீதி மன்றங்களிலே நீதி கிடைக்காதோ என்ற கருத்து வலுப்பெறுகிறது. இதற்கு வழி இல்லாமல் நீதி மன்றங்களிலே நிச்சயமாக நீதி கிடைக்கும், வழங்கப்படுகின்ற தஸ்தாவேஜுகள் சாட்சியங்கள் இவைகளைக் கொண்டு தீர்ப்புக்கள் நிச்சயமாக வழங்கப்படும் என்ற உத்திரவாதத்தை ஏற்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்வேன். நீதிபதிகள் அதிகமாக சோஷியல் பங்ஷனில்-குறிப்பாக தனியாருடைய, தனியார் ஏற்பாடு செய்கிற நிகழ்ச்சிகளில் அதிகமாக பங்கு ஏற்பதும், அவர்களுடைய விருந்தினர் மாளிகையில் சென்று தங்குவதும் மிகவும் ஆபத்தானது என்று சொல்லிக் கொள்கிறேன். இது வரவர மிக அதிகமாக ஆகிறது.

குறிப்பாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் தனியாருடைய விருந்தினர் மாளிகையில் தங்குகிற நிலைமை அதிகமாக நடக்கிறது. சில நீதிபதிகள் குறிப்பாக கோவை மாவட்டத்திற்கு அடிக்கடி வருகிறார்கள். அவர்கள் தனியாருடைய கெஸ்ட் ஹவுசில் தங்குகிறார்கள். அங்கே அவர்களைப் பார்ப்பதற்காக அங்கேயுள்ள மாவட்ட நீதிபதிகள் செல்கிறார்கள். அப்படி வருகிறபோது அங்கே தனியார் முதலாளியாக இருப்பவர், அல்லது பணக்காரராக இருப்பவர் அங்கேயிருக்கிறார். அவருக்கு எதிராக, அவருடைய நிறுவனத்திற்கு எதிராக வழக்கு வரும்போது, எப்படி அந்த நீதிபதி சரியான தீர்ப்பு வழங்கமுடியும்? இம்மாதிரியான செயல்களைத் தடுக்க வேண்டியது அவசியம். இம்மாதிரியாக அவர்கள் தனியார் மாளிகையில் தங்குவதைத் தவிர்த்து, அவர்கள் "டிடாட்சிடாக" இருந்தால் தான் தீர்ப்புகள் வழங்கும்போதும் "டிடாட்சிடாக" தீர்ப்பு வழங்கமுடியும் இந்த மாதிரி அவர்கள் hobnobbing with individuals, particularly with high placed persons என்பதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், இது பற்றி நிறைய பேச முடியும். நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால் ஓரிரு விஷயங்களை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவுத் துறை அரசாங்கத்தின் புரோகிராடிக் செக்டராக இருக்கிறது. இதிலே இருக்கும் அரசியல் தலையீடுகளுக்கு அளவே கிடையாது. நாளுக்கு நாள் அரசியல் தலையீடு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஒழுங்காக நடைபெறும் சொசைடியாக இருந்தால் நடக்கவிட மாட்டார்கள். அரசியல் கருத்துக்கு ஒத்த சொசைடியாக இருந்தால் அங்கே என்ன ஒழுங்கீனங்கள் நடைபெற்றாலும் கண்ணை மூடிக் கொண்டு விடுகிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் கூட்டுறவுச் சட்டமும் அப்படியிருக்கிறது. It is not a democratic Law.





அரசாங்கம் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம்-கூட்டுறவுச் சங்கம் அமைக்கும்போது நியமனம் செய்யலாம். இடையில் இஷ்டப்பட்டால் கலைக்கலாம். இப்படியிருக்கிற காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல் முறை அநேகமாக இல்லாமல் போய்விடுகிறது. மாநில கூட்டுறவு சொசைடியாக இருந்தாலும் சரி, மாவட்ட சங்கமாக இருந்தாலும் சரி, தேர்தல் முறையில்தான் டைரக்டர்கள் தேர்ந்து எடுக்க வேண்டுமென்ற முறையில் அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

இன்று இருக்கும் தலையீடுகள் எப்படியிருக்கிறது என்றால், கூட்டுறவுச் சங்கம் திறமையாக, நேர்மையாக நடப்பதற்கு துணை புரிவதற்குப் பதிலாக, தவறுக்கு துணைபோகிற அளவுக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு சட்டத்திலும் இடமிருக்கிறது. மாநில கூட்டுறவு நெசவாளர் சங்கம் கலைக்கப்பட்டு, பல ஆண்டுகாலம் ஆகிறது. அந்த போர்டு கலைக்கப்பட்டு, பல ஆண்டு காலம் ஆகியும் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. அதற்கு சட்டத்திலும் இடம் இருக்கிறது. இதைப் போக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலையைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சிறைச்சாலை என்பது குற்றம் செய்தவர்கள், ஏதோ தவறி குற்றம் செய்தவர்களை கொஞ்ச நாள் சிறையில் வைத்து, அவர்களைத் திருத்தி சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக திருப்பி அனுப்புவதற்கு என்ற அடிப்படையில் வைத்து இருக்கிறோம். முன்பெல்லாம் சிறைச்சாலைகளில் குற்றம் செய்து விட்டவன் வாழ லாயக்கு அற்றவன் என்று கொள்கை வைத்திருந்தனர். நாளாக ஆக கொள்கைகள் வளர்ந்து சிறைச்சாலை அவர்களை சீர்திருத்தும் பள்ளிகளாக இருக்க வேண்டுமென்று, ஓபன்-ஏர் ஜெயில் என்றெல்லாம் கூட கொண்டு வந்து இருக்கிறோம்.

இப்படி வளர்ந்து வந்திருக்கிற நேரத்தில், நம்முடைய சிறைச்சாலைகள் எப்படியிருக்கின்றன என்றால், அவை பழைய பாணியில்தான் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக சிறைச்சாலை நிர்வாகத்தில் மிக அதிகமாக ஊழல் மலிந்து இருப்பதாக எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. நான் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். தகுந்த ஆதாரங்களோடு சொல்கிறேன். அதுபற்றி விசாரிப்பதாக இருந்தால், நான் பொறுப்பேற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன்.

சிறைச்சாலையில் இப்போது பல சாமான்கள் தயாரிக்கப்படுகின்றன. பினாயில், மரச்சாமான்கள் போன்ற பல பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். அதிலே பல ஊழல்கள் நடைபெறுகின்றன.

சென்ற ஆண்டு சேலம் சிறையில் ரெக்ஸின் வாங்கியிருக்கிறார்கள். என்ன விலைக்கு வாங்கியிருக்கிறார்கள் என்றால்—14–8–1974-ல் வாங்கியிருக்கிறார்கள். தொடர்ந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மீட்டர் ரூ. 16·85 கொடுத்து வாங்கியதாக எழுதியிருக்கிறார்கள். ஆனால் வாங்கியது என்னவென்றால் ரூ. 2·80 கொடுத்து காலிகோ வாங்கியிருக்கிறார்கள். ஆனால், கணக்கில் ரெக்ஸின் வாங்கியதாக எழுதி இருக்கிறார்கள்.

ஹாஸ்பிடல் பாண்டேஜ் துணி தயாரிக்கிறார்கள். இத்தனை மீட்டர் துணிக்கு இவ்வளவு கிலோ எடை இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி தயாரித்துக் கொடுத்ததாக புத்தகத்தில் இருக்கும். ஆனால் சப்ளை எப்படியாகியிருக்கும் என்றால் 50 மீட்டர் 2 கிலோ எடை இருக்க வேண்டுமென்றால் 1 கிலோ அல்லது 1½ கிலோதான் இருக்கும். மீதம் இருப்பது என்ன ஆகும், வெளியே போகும். விற்கப்படும். அதிலே வரும் பணம் கண்காணிப்பாளருக்குப் போகும். வேறு எங்கோ போகும்.

மரச்சாமான்கள் செய்வதற்காக வாங்கப்படும் மரங்கள் மிகவும் சீப்பான மரங்கள், மோசமான மரங்கள். அவற்றை வாங்கி, அதிலே கமிஷன் பெற்றுக்கொள்கிறார்கள். அந்த மோசமான மரங்களைக் கொண்டுதான் சாமான்களை உற்பத்தி செய்கிறார்கள்.

சென்னையில் பினாயில் செய்கிறார்கள். அதைச் செய்வதற்கு கிரிசிலிக் ஆக்ஸைடு வேண்டும். அந்த மூலப்பொருளை பம்பாயிலிருந்து தருவித்து ஒரு காண்டிராக்டர் சப்ளை செய்கிறார். 200 கிலோ சேர்க்க வேண்டுமென்றால், 50 கிலோதான் சேர்க்கப்படுகிறது. மீதிக்கு தண்ணீர் விடப்படுகிறது. இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

திருச்சி சென்ட்ரல் ஜெயிலைப் பொறுத்தவரையில் ஒரு டெஸ்ட் ஆடிட் ரிப்போர்ட்டில், 1973-ல் நடந்து இருக்கிறது, என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்

"I have come across certain serious irregularities in the maintenance of accounts and certain local purchases made by the Central Jail, Tiruchirappalli, contrary to the procedures laid down in the Financial Codes, during the recent ADMK Bandh in September, 1973, and the Anti-price rise agitation by the Congress (O) in October, 1973, which require the immediate attention of the Head of the Department, and the Government and necessary follow-up action in the matter........"

ஒலி பெருக்கி வாடகை ரூ. 400 செலவு, தண்ணீர் கொண்டு வருவதற்கு வாட்டர் டாங்கர் வாடகைச் செலவு ரூ. 9,500, கொட்டகை போடுவதற்கு—கைதிகள் அதிகமாக வந்ததால்—செலவு ரூ. 30,194. பெட்ஷீட், ஜமக்காளம் வாங்குவதற்கு ரூ. 1,45,234.75. அதிகமான கைதிகளுக்கு சாப்பாடு சமைத்துப்போட அத்துக்கூலி, சமையல்காரர்கள் போட்டதற்கு ரூ. 2,900, பாத்திரம் வாடகை ரூ. 3,240. ஆக ரூ. 1,91,468·75. இதைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் இதிலே கிட்டத்தட்ட 30 சதவிகிதம், 40 சதவிகிதம் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது.

வாட்டர் டாங்கியைப் பொறுத்தவரையில் முனிசிபல் வாட்டர் டாங்கியை வாங்கியிருந்தால் ரூ. 2,480 தான் ஆகி இருக்கும். ஆனால் ரூ. 9,500 ஆகியிருக்கிறது. ரூ. 7,020 நஷ்டம் ஆகியிருக்கிறது.

(திரு. கு. காமாட்சி தலைமை)

மேலும் அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,



"........I have seen that the rules have been either thoroughly disregarded or given scant respect." மீண்டும்—

"All these things only show to my knowledge that the quotations were collected and furnished to the Superintendent by some interested person on behalf of all of them who have joined together to earn some profit by execution and supply of the articles to their advantage. Anybody would come to this conclusion by mere perusal of the files and also the following statements."

அதைப்போலவே சோப் பிளாண்டைப் பொறுத்தவரையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,

"..Entire consignment containing 950 bars which weighed 499·300 kgs. as against the normal weight of 699.200 kgs. resulting in the loss of 199.900 kgs. Irrespective of the weight, the number of bars has been accounted for, for the purpose of sales, receipts and issues to the prisoners, etc.."

என்று சொல்லியிருக்கிறது அந்த டெஸ்ட் ஆடிட் ரிப்போர்ட்டில். மேலும் சொல்கிறபோது,

"..It is high time that the various aspects involved in the above irregularities should be probed thoroughly and suitable action taken against the persons concerned.."

அதைப்போலவே கடலைப் புண்ணாக்கு வாங்குவதிலும் இப்படியே ஊழல் நடந்திருக்கிறது. அதைத்தவிர,

—Irregular sanction of General Provident Fund Advances.

—Short realisation of cost of jail-made goods.

—Local purchase of timber far beyond needs.

—Irregularities in the remission section.

—Unsatisfactory office procedure.

—Failure to collect the outstandings due to the jails.

இதுவெல்லாம் திருச்சி சிறையில் உள்ளது. ஒரே ஒரு டெஸ்ட் ஆடிட் ரிப்போர்ட்டில் இந்த ஊழல்கள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றன. இதேபோல மாநிலத்திலுள்ள பல சிறைகளில் ஆண்டு தோறும் இப்படிச் செய்தால் எத்தனை ஊழல்கள் கண்டு பிடிக்க முடியும் என்பதை தங்களுடைய கருத்துக்கு நான் விட விரும்புகிறேன்.

இது எல்லாம் என் நடக்கிறது?

*       *       *       *

*       *       *       *

*       *       *       *       *

தலைவர் அவர்களே, முதலிலேயே சொன்னேன், பொறுப்போடு சொல்கிறேன் என்று. நான் அரசை கேட்டுக் கொள்வேன். இந்த மாநிலத்திலே இருக்கின்ற சிறைச்சாலைகளைப் பற்றி குறைகள் பலவற்றைச் சொன்னேன். அமைச்சர் விசாரிக்கிறேன் என்று சொன்னார்கள். நிறைய நடந்து கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிறைச்சாலைகளில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பட்டதுபோல தவறு நடக்கவில்லை என்று சொல்லவில்லை. அப்படி தவறைச் சுட்டிக் காட்டுகிற நேரத்தில் அரசு மேல் அதிகாரிகள் கண்டு பிடிக்கிற நேரத்தில்தான் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒன்று இரண்டு கண்ணுக்குத் தெரியாமல் நடை பெற்று இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவையின் கவனத்திற்கும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கின்றது.

*       *       *       *       *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : இப்போது தனிப்பட்ட அதிகாரி மேலே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கு பொறுப்பு ஏற்கி றீர்களா என்று அமைச்சரவர்கள் கேட்கிறார்கள். தகுந்த ஆதாரம் இல்லை என்று சொன்னால் சொன்ன வார்த்தைகளை திருப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள். இல்லை என்றால் பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

Thiru K.M. SUBRAMANIAM : Sir I am rising on a point of Order. The hon. Member, Thiru A. Subramaniam, has referred to a particular office and not a particular officer. ...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : அவர் தனிப்பட்ட அதிகாரி மேலே குற்றம் சாட்டியதற்கு பொறுப்பு ஏற்கிறார்களா என்பதுதான் இப்போது பிரச்சினை.

* மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



(முற்பகல் 11-00)

திரு. எ. சுப்பிரமணியம் : நான் சொல்வதற்கு அரசாங்கம் தீர விசாரணை செய்து தக்க................

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தீர ஆலோசனை செய்யவேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. நீங்கள் ஆலோசனை செய்ய வேண்டு மென்று சொல்வது எங்களுக்கு உதவி செய்வதுபோல் இருக்கும்.

*       *       *       *       *

என்று சொன்னார்கள். அது சரியா, அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : அமைச்சரவர்கள் அதுகுறித்து தீர விசாரித்து உண்மையைக் கண்டறிந்து ஆவன செய்யவேண்டும். அதற்காகத்தான்..................

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விசாரிக்க வேண்டியது எங்களுடைய கடமை.

திரு. எ. சுப்பிரமணியம் : விசாரிக்க வேண்டியது கடமை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இதுவரை விசாரிக்கவில்லை; விசாரணை நடக்கவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விசாரணை நடக்கவில்லை என்பது தவறு. ஒரு துறையில் தவறு நடக்கிறது என்றால் அரசாங்கத்திலுள்ள இன்னொரு துறைதான் அதைக் கண்டுபிடித்திருக்கிறது. அப்படிக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆதாரம் இல்லாமல் குறிப்பிட்ட ஒரு அதிகாரியின்மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : ஏற்கெனவே நீக்கிவிட உத்திரவிட்டுவிட்டேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : அடுத்தபடியாக, உணவு இலாகா பற்றி ஒருசில கருத்துக்களை மட்டும் கூறி, முடித்துவிடுகிறேன். உணவு இலாகா பற்றி ஏற்கெனவே பலமுறை பேசப்பட்டுவிட்டது. இப்போது இங்கே உணவுப் பிரச்சினையில் ஒரு மோசமான நிலைமை இந்த அரசினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மோசமான நிலைமை உருவான பின்னால் அரசு என்ன செய்திருக்கிறது என்றால் அரசாங்கக் கடைகள் மூலமும் மற்றவைகள் மூலமும் ஓரளவு உணவு வழங்குகிறார்கள். இந்த குறைந்த அளவு உணவு வழங்குவதிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது. நகரப்புறங்களில் 2 கிலோ, 3 கிலோ என்று உணவு கொடுக்கிறார்கள், ஆனால் சிற்றூர்களில்

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அதுவும் இடையாது. அவர்கள் வாழ்வதற்கு தகுதியற்ற மக்கள் என்று ஒதுக்கிவிட்டார்கள். நகரப்புறங்களில் இப்போது சில நேரங்களில் 5 கிலோ கொடுக்கிறார்கள் ;- சில நேரங்களில் கொடுக்கப்படுவதில்லை.

கிராமங்களுக்கு இப்போது சோளம், கம்பு கொடுத்திருக்கிறார்கள், சோளத்திற்கு மார்க்கெட் விலை ஒரு ரூபாய் எண்பது காசு. ரேஷனில் கொடுக்கும் விலை 2 ரூபாய். வெளி விலையைவிட 20 காசு அதிகம். நான் அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டேன். அவர்கள் சொன்ன பதில் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களில் அவைகளை விற்க வேண்டாம்; பேசாமல் வைத் திருந்தால் உணவுப் பொருள் அதிகமாக இருக்கிறது என்று கருதி, வெளி மார்க்கெட்டில் விலை குறைந்துவிடும் என்று அவருக்கு உள்ள நிலைமையில் ஏதோ சொன்னார்.

இப்படி மக்கள் உணவுக்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது பஞ்சாயத்து யூனியனில் உணவுப் பொருளை விற்காமல் 10, 15 மூட்டைகள் என்று சோளம், கம்பு, ராகி போன்றவைகளை அடுக்கி வைத்தால் விலை குறைந்து விடும் என்று சொல்லக்கூடிய நிலையை ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்படுத்தியிருக்கிறீர்கள் என்றால் உணவுப் பிரச்னையில் இதைவிட மோசமான நிலைமை வேறு என்ன வேண்டும் ? (மணியடிக்கப்பட்டது) மாநிலத்திலுள்ள ஒவ்வொருவருக் கும் வாரத்திற்கு 10 கிலோவாவது அரிசி கொடுக்க வேண்டும். கோவையில் 500 ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் ரேஷன் என்று வைத்திருக்கிறார்கள். அதனால் இன்று விலைவாசி ஏற்றத்தால் சம்பளம் கூடிவிட்டதால் கோவையில் பலருக்கு ரேஷன் கிடைக்கவில்லை. சென்னை நகரில் மட்டும் விசேஷமாக ஏதோ 4 கிலோ கொடுத்தார்கள் கோவையில் அதுவும் இல்லை. ஆகவே, அந்த சீலிங் லிமிட்டை எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உணவு— கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களால் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவிலுள்ள பல்வேறு கூட்டுறவு வங்கிகளில் தமிழ்நாட்டிலே தான் தவணை கடந்த கடன் 20 சதவிகிதம் என்று-எ. வங்கியில்- இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே இருப்பவர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

கடந்த ஆண்டுகளில் கூட்டுறவு அமைப்பு விவசாயப் பெருங்குடி மக்க ளுக்கு நல்ல சேவைகளைச் செய்து வந்திருக்கிறது. அந்தச் சேவைகளை தொடர்ந்து விவசாயிகளுக்கு செய்துவரக்கூடிய வகையில் இருக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் துணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



காரணம், இன்றைக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஒரு பக்கம் கூட்டுறவு அமைப்புகளோடு போட்டி போட்டுக்கொண்டு கடனை வழங்க முனைகிறார்கள். அந்த முனைப்பு தொடர்ந்து நிரந்தரமாக இருப்பதில்லை. அவர்கள் இடையிலே விவசாயிகளிடம் ஆசை வார்த்தைகள் கூறி, கடன் வழங்குவதில் பங்குத் தொகை கூட வாங்குவதில்லை; கூட்டுறவுத் துறையில் பல்வேறு காரியங்களுக்கு பிடித்தம் செய்வது போல நாங்கள் செய்வதில்லை; உடனடியாக நாங்கள் கடனைத் தருகிறோம் என்று சொல்லி விட்டு, பிறகு வணிக வங்கிகள் கொடுத்த கடனை வசூல் செய்ய முடியாமல் கடனும் கொடுக்காமல் நிறுத்தி விடுகிறார்கள். இந்தமாதிரியாக இன்றைக்கு வணிக வங்கிகள் ஒருபுறம் கூட்டுறவுத் துறையோடு போட்டி போடுகின்றன. இன்னொருபுறம் அதிகாரிகள் எந்த எண்ணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பழைய காலத்தில் பணியாற்றினார்களோ அதைப் போலவே இந்தக் காலத்திலும் தங்களுடைய எண்ணத்தை வைத்துக்கொண்டு பணியாற்றுகிறார்கள். ஆக, வணிக வங்கிகளின் போட்டியினாலும், அதிகாரிகளுடைய தலையீட்டாலும் எங்கே கூட்டுறவுத் துறை நசுங்கி விடுமோ என்கிற ஐயம் இன்றைக்கு மேலெழுந்தவாரியாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்றைக்கு ரிசர்வ் வங்கியும் வணிக வங்கிகளும் எந்தெந்த காரியங் களுக்கு கடன் உதவி கொடுக்கலாம் என்று சொல்கிறார்களோ அதைப் போல இன்றைக்கு கூட்டுறவு வங்கிகளும் எல்லாக் காரியங்களுக்கும் விவசாயிகளுக்கு கடன் உதவிகளைக் கொடுக்கக்கூடிய வகையில் ரிசர்வ் வங்கியை நம்முடைய மாநில அரசு வற்புறுத்தி கடனைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய கால கடனை மத்திய கூட்டுறவு வங்கி, கிராம நாணய வங்கிகள் மூலம் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டால்தான் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்குமே தவிர, இந்த அளவு கடன்தான் தருவோம் ; அதைத்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலைமை இருக்குமானால் நம்முடைய நாட்டில் கூட்டுறவுத் துறையிலே மக்கள் நாட்டத்தைக் காட்டாமல் வேறு எண்ணத்தில் அவர்கள் செல்வார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல இன்றைக்கு 1/3 ரிட்டயர்மெண்ட் ஆகி, அதற்கு மட்டும் தேர்தல் என்று கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிறது. இந்த முறை கூடாது. மொத்தமாக 3 ஆண்டுக்கு அல்லது 5 ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல், ஒரே முறையில் தேர்தல், இடைத்தேர்தல் கூடாது என்ற நிலைமை ய உருவாக்க வேண்டும். 1/3 ரிட்டயர் ஆகி அதற்கு மட்டும் தேர்தல் என்ற முறை சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல இன்றைக்கு மத்திய கூட்டுறவு வங்கிக்கு உட்பட்டு கிராம நாணயச் சங்கங்கள் இருக்கும்போது அவைகளுக்கு தேர்தல் நடத்த வேண்டுமானால் தேர்தல் அதிகாரி அனுமதித்து தேர்தல் நடத்தவேண்டுமென்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. மத்திய

வங்கியால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியே தேர்தலை நடத்த வேண்டும். ஏனென்றால் அவை மத்திய வங்கிக்கு உட்பட்டிருக்கின்றன. நாணயச் சங்கங்களிலே தவறு ஏற்பட்டால் ஆர்பிட்ரேஷன் போன்றவைகளுக்கு இருக்கிற டி. ஆர். அல்லது உதவிப் பதிவாளர்கள் தேர்தலை நடத்தக் கூடாது. தவறு நடந்தால் நாம் யாரிடம் அப்பீல் செய்கிறோமோ அவர்களே தேர்தல் நடத்துகிற முறை இப்போது இருக்கிறது. அவர்களே தேர்தலை நடத்தினால், அதிலே தவறு நடக்கிறது என்று சொல்லி அவர்களிடமே அப்பீல் செய்தால் எப்படி நியாயம் கிடைக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இவைகளை எல்லாம் மனதிலே கொண்டு காரியங்கள் ஆற்றப்படவேண்டும்.

இன்றைக்கு நில வள வங்கிமூலமாக கடன் வழங்க உலக வங்கியோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் நமக்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. அமெரிக்காவில் ஆயிரம் ஏக்கர் வைத்து விவசாயம் செய்கிற விவசாயிக்கு அந்த ஒப்பந்தம் பொருந்தக்கூடியதாக இருக்கும். அதேமாதிரி இங்கும் விவசாயம் நடக்கும் என்று அவர்கள் கருதி இந்த ஒப்பந்தத்தைத் தயாரித்திருக்கலாம். ஆயிரம் ஏக்கர் வைத்திருந்தால் அவர்கள் சொல்கிறபடி கிணறு வெட்ட, ஆழப்படுத்த, கிணறுகளுக்கு இடையே உள்ள தூரம் எல்லாம் இருக்கும். ஆனால் நம்முடைய நாட்டில் அப்படி இல்லை. எல்லாம் சிறு சிறு விவசாயிகள்தான். உலக வங்கியை இந்தக் காரியத்திற்காக அணுகும்போது அங்கே போயிருந்த நம்முடைய மாநில அரசு நிதிச் செயலாளர் அவர்களும் மற்றவர்களும் நம்முடைய விவசாயிகளின் நிலையை கருத்தில்கொண்டு உலக வங்கியிடம் வற்புறுத்தியிருக்கவேண்டும்.

புதிய கிணறு வெட்ட வேண்டுமென்றால் 600 அடிக்குமேல் இடைவெளி இருக்க வேண்டுமென்றிருக்கிறது. அதைப்போலவே கிணறுகளை அடி ஆழப்படுத்த வேண்டுமானாலும் இந்தக் கண்டிஷன்கள் எல்லாம் இருப்பதால் புதிய கிணறுகளை வெட்டுவதற்கும் பழைய கிணறுகளை அடி ஆழப்படுத்துவதற்கும் கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடன் பெற முடியாமல் விவசாயப் பெருங்குடி மக்கள் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தொல்லைகள் விவசாயிகளுக்கு இருப்பதால்தான் இன்றைக்கு நம்முடைய அரசு அவர்களுக்கு தக்காவி கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு போதுமான அளவுக்கு கடன் கிடைக்க வழியிருந்தால் இந்த வறட்சி நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கென்று நம்முடைய சர்க்கார் தக்காவி கடன் கொடுக்க வேண்டிய நிலை வந்திருக்காது. அவர்கள் கடன் பெற முடியாததால் தான் இன்றைக்கு சர்க்காரே கடன் கொடுக்க வேண்டுமென்ற நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம். ஆகவே, உடனடியாக உலக வங்கியோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கடனே தேவையில்லை என்று ஒதுக்கிவிட்டு நிலவள வங்கிகளிடம்—மாவட்ட அளவில் நிதி இருக்கிறது—அவர்களே கூட புதிய கிணறுகளை வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் உதவி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பெறக்கூடியவர்கள் சிக்கன டெபாசிட்
அதே நேரத்தில் கடன்
என்பதாக நூற்றுக்கு 2 ரூபாய் ஒவ்வொரு கடனுக்கும் செலுத்த
வேண்டுமென்று இருக்கிறது. இது தேவையில்லை. இதை நீக்கிவிடலாம்
என்று பலமுறை கேட்டுக்கொண்டோம். இதை அதிகாரிகள் ஒத்துக்
கொள்ளாமல் இருக்கிறார்கள். இதுபோல கடன் பெறுகிறவர்கள் ஒவ்வொரு
கடனுக்கும் நூற்றுக்கு 2 என்று சிக்கன டெபாசிட் கட்ட
வேண்டிய அவசியம் இல்லை. கட்டவேண்டாமென்று உத்தரவிடவேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியின்
காரணமாக அரசாங்கம் கொடுத்த கடன், கூட்டுறவுத் துறை கொடுத்த
கடன் ஆகிய எல்லாக் கடன்களையுமே வசூலிக்காது ஒத்திவைத்து இருக்
கிறோம் என்று அரசு அறிவிப்பைச் செய்துவிட்டதால் என்ன சங்கடமான
நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். கூட்டுறவு
மத்திய வங்கிகள் எல்லாம் செயலிழந்து நிற்கின்றன. இந்தக்
கூட்டுறவு வங்கிகள் நாளாவட்டத்தில் செயல்பட முடியாத அபாய கட்டத்தை
எட்டிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இன்று குறுகிய காலக் கடனை நீண்டகாலக் கடனாக—இந்த ஆண்டு
கொடுத்துப் பெறவேண்டிய கடனை-மூன்று ஆண்டுகளுக்குக் கொடுத்ததாக
மாற்றித் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசாங்
கத்தின் இந்தக் கருத்தை மத்திய வங்கிகள் ஏற்றுக்கொள்ளலாம்.
மாவட்ட ஆட்சித் தலைவர் அனுவாரி சார்ட்டிபிகேட்டையும் அளிக்கலாம்.
என்றாலும் ரிசர்வ் பாங்க் இதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். ரிசர்வ்
பாங்க் ஒத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறபோது—ரிசர்வ் பாங்குடன்
கலந்து கொண்டு ஒரு ஏற்பாட்டைச் செய்துகொள்ளாது—இந்த
அறிவிப்பைச் செய்துவிட்ட காரணத்தினால் இன்றைக்கு தவணை கடந்த
கடன்கள் மட்டும் ஒவ்வொரு மாவட்ட மத்திய வங்கிக்கும் ஒரு கோடி,
இரண்டு கோடி என்று தங்கிவிட்ட நிலைமை இருக்கிறது. ரிசர்வ் வங்கி
யைப் பொறுத்தவரை 1975-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியில்
இருந்து 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 31ஆம் தேதி வரை கொடுக்கப்
படுகிற கடனைத்தான் 3 ஆண்டு கடனாக மாற்றிக்கொள்ள முடியும் என்கி
றார்கள். 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ஆம் தேதி முதல் 1974-ஆம்
ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி வரை கொடுக்கப்பட்ட கடனுக்கு
இதை அனுமதிக்க முடியாது என்று மறுத்துவிட்டார்கள்.

பயனாக மத்திய வங்கிகள்
ஆனால் அரசாங்கம் செய்த அறிவிப்பின்
அந்தக் காலத்தில் கொடுத்த கடனையோ, வட்டியையோ வசூலிக்க முடியாத
நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரிசர்வ் பாங்கின் வற்புறுத்தலினால் வட்டியை
மட்டிலுமாவது முதலில் வசூலித்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்
கிறோம். விவசாயிகளிடம் அதை 3 ஆண்டுகள் வசூலிக்கக்கூடாது என்றால்
இந்தத் தொகையை அரசாங்கமேயாவது நேரிடையாக மத்திய வங்கி
களுக்குத் தந்தாக வேண்டும். "நாங்களே இந்தக் கடன்—கடன் பேரில்
ஏற்பட்ட வட்டியை ஒவ்வொரு மத்திய வங்கிக்கும் தருவோம்" என்கிற
உத்தரவாதத்தை அளித்தாக வேண்டும்.

ஏற்கெனவே ஓவர்ட்யூஸ் அதிகமாக இருக்கின்றன. வறட்சித் தன்மையை உத்தேசித்து அரசாங்கம் இந்த அறிவிப்பைச் செய்துவிட்ட காரணத்தினால் கடனை வசூலிப்பதற்கு அதிகாரிகள் யாரும் ஒத்துழைப்பதில்லை. "பதிவாளரிடத்தில் இருந்து எங்களுக்கு உத்தரவு வந்துவிட்டது" என்கிறார்கள். நாங்கள் என்ன செய்தோம்? எங்கள் மத்திய வங்கியில் 10 சேல்ஸ் ஆபீசர்கள் என்று இருந்தவர்களை "அப்படியானால் நீங்கள் உங்கள் துறைக்கே சென்றுவிடுங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டோம். இன்றைக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை மத்திய வங்கிகளுக்கு உருவாகியிருக்கிறது. ஆகவே, உடனடியாக அரசு ரிசர்வ் வங்கியுடன் தொடர்பு கொண்டு 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ஆம் தேதியில் இருந்து 1974ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி வரை அளிக்கப்பட்ட கடன்களுக்கும் 3 ஆண்டு தவணையை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியாகவேண்டும். இல்லையென்றால் அந்த கடன் பொறுப்பை நேரிடையாக அரசாங்கமே ஏற்று மத்திய வங்கிகளுக்கு நிதி உதவி செய்தாக வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நெசவாளர்களுடைய பிரச்சினையை நாம் எடுத்துக் கொண்டால், என் தொகுதி நெசவாளர்கள் நிரம்ப உள்ள பகுதி. இன்றைக்கு ஆண்டுதோறும் ஒரே கருத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறோமே தவிர அவர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் ஏதாவது காணப்பட்டிருக்கிறதா என்றால் காணப்படவில்லை. நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு மலிவான விலையில் நூலை விநியோகிப்பதற்காக பண நெசவாளர்கள் சங்கம் என்று அமைத்தோம். அதற்காக அந்த நெசவாளர்களிடம் இருந்தும் பங்குத் தொகையைப் பெற்றோம். ஆனால் இன்றைக்கு அந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டுவிட்டனவே தவிர அந்தச் சங்கங்கள் செயல்படுகின்றனவா என்றால் இல்லை. குறைந்த விலையில் நூலைப் பெற்று அந்தச் சங்க உறுப்பினர்களுக்கு விநியோகிக்கின்றனவா என்றால் இல்லை. இன்றைக்கு அந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தவிர அவை செயல்படவில்லை. இதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தச் சங்கங்கள் செயல்படவில்லை என்றால் சங்க உறுப்பினர்களின் பங்குத் தொகையாக நெசவாளர்களிடம் இருந்து வாங்கிய பணத்தையாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். நம்முடைய நோக்கம் எல்லாம் முதலாளிகளிடத்தில் இருந்து நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான். எல்லா நெசவாளர்களையும் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுகிறோம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களை அமைக்க அரசாங்கம் அனுமதி கொடுக்கிறதா என்றால் இல்லை. அனுமதி கொடுக்கவும் மறுக்கிறார்கள். ஆர்ட் சில்க் போன்றவற்றைத் தயாரிக்கிற நெசவாளர்களாவது சங்கங்களை அமைக்க அனுமதி தரவேண்டும். நூல் சொஸைடிகள் ஏற்படுத்த அனுமதி தர வேண்டும்.

அதேபோல சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்னால் இன்று வரை 32 இடங்களில்தான் நெசவாளர்களுக்கு என்று காலனிகள் கட்டிக்கொடுத்துள்ளோம். இந்தக் காலனிகளிலும் ஒரு வீடு கட்ட



பத்தாயிரம் ரூபாய் ஆகிறது என்றால் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் இந்த வீட்டிற்காக நாம் நெசவாளர்களிடம் இருந்து வசூலிக்கும் தொகை 25 ஆயிரம் ரூபாய் அளவிற்கு இருக்கிறது. வீட்டுக்கு ஆகும் செலவைப் போல 1½ மடங்கு அதிகத் தொகை நெசவாளர்கள் வட்டியாகச் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. ஈட்டிக்காரர்கள் வட்டி வசூல் செய்வதுபோல இது அமைந்திருக்கிறதே, நெசவாளர்களுக்கு இதனால் என்ன நன்மை?

நெசவாளர்களுடைய துயரத்தைத் துடைக்க முன்பு முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி தந்தார்கள். அவர்களுக்கு அதைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டபோது அதை ரத்து செய்தார்கள். இன்றைக்கு என்னுடைய சேலம் மாவட்டத்தில் உள்ள நெசவாளர் காலனியில் உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாதம் 22 ரூபாய் கட்ட வேண்டியவர்களை 37 ரூபாய் கட்டச் சொல்கிறார்கள். இல்லாவிட்டால் வீட்டைக் காலி செய்து கொடுத்துவிட வேண்டுமென்று சொல்வது முறையா? ஆகவே அரசாங்கம் மறுபரிசீலனை செய்து இதற்கு நியாயமான வட்டியை வைத்து அந்தத்தொகையைக் குறைத்துக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை அதிக வட்டி வசூல் செய்திருந்தாலும் அவர்களுக்கு வட்டியைத்தள்ளிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் ஏற்படாதிருக்க தக்க பாதுகாப்பு அளிக்க கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவாதத்தைத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மத்திய வங்கி மூலம் வீவர்ஸ் சங்கத்திற்கு கடன் உதவி செய்கிறபோது—அவர்களது உற்பத்தியில் 25 சதவீதம் தான் கடன் உதவி அளிக்க ரிசர்வ் வங்கி வழங்குகிறது. நமது மாநில அரசாங்கமும் அந்த 25 சதவீதத்தைத்தான் பெற்றுத் தருகிறது. நெசவாளர்கள் சார்பாக பல ஆண்டு காலமாக 40 சதவீதம், 50 சதவீதம் கடன் உதவி செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் மாநில அரசாங்கத்தைக் கேட்டால் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம் என்கிறார்கள். மத்திய அரசிடம் இருந்து பதில் வரவில்லை என்று சொல்லப்படுகிறது. இதற்கும் உடனடியாகப் பரிகாரம் தேடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிடம் ரூபாய் மூன்று கோடிக்கு மேல் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. சங்க உறுப்பினர்களான நெசவாளர்கள் வேலை இழந்து நிற்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களில் அதிகமான அளவுக்கு நெசவாளர்களுடைய துயரைத் துடைக்க வேகம் காட்டுவதைப்போல இந்த மாவட்டத்திலும் காட்ட வேண்டும், இந்தத் துறை வேகமாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்களின் உணவு மானியக் கோரிக்கையின்மீது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்று 27 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. 27 ஆண்டுகள் உருண்டோடிய பிறகும் உணவுப் பிரச்னைக்கு தீர்வுகாணாத நிலையில் இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதை நாம் வெட்கத்தோடு ஒத்துக்கொண்டாக வேண்டும்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு

என்று சொன்னான் வான்புகழ் கொண்ட தேன்மொழி ஆசான் வள்ளுவப் பெருந்தகை. ஒரு நாட்டுக்கான இலக்கணத்தைச் சொல்லும் போது, பசி இன்மையை முதல் இலக்கணமாகச் சொன்னான். அந்த முதல் தகுதியைக் கூட நாம் பெறவில்லையே என்பதற்காக நாமெல்லாம், எல்லா அரசியல்வாதிகளும் வெட்கப்பட வேண்டிய நிலையிலே இருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு திரைப்படத்திற்கு வசனம் எழுதினார்கள். அந்தத் திரைப்படத்தில், பட்டினத்தார் பாடல் என்று நினைக்கிறேன், "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா" என்று கதாநாயகனை பேச வைத்தார்கள். அந்தப் பாடல் 20 ஆண்டுகளுக்கு முன்னால் வெறும் கொட்டகையில் மட்டுமே ஒலித்துக் கொண்டிருந்தது. இன்றைக்கு குடிசைகளில் எல்லாம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு விலைவாசிகள் ஏற்றம் ஏழைகளால் எட்டிப் பிடிக்க முடியாத அளவு பல மடங்கு உயர்ந்திருக்கின்றன என்பதை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளும் என்றே நான் கருதுகிறேன்.

ரிசர்வ் பாங்க் உணவுப் பொருள் மொத்த விலை எந்த அளவு உயர்ந்திருக்கிறது என்பதை வெளியிட்டிருக்கிறது. அதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதன்மூலம் இந்த அரசாங்கம், தன்னுடைய பொறுப்பை நியாயமாக உணரும் என்ற பொறுப்போடு இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

1974 ஜூனில் 1961-62-ஆம் ஆண்டு புள்ளியை 100 என்று வைத்தால், உணவுப் பொருள் 381.1; சிறு தானியங்கள் 261.4; பருப்பு வகைகள் 469.9; காய்கறி-கனி வகைகள் 335.6; மில்க் இனங்கள் 326.2; எண்ணெய் வகைகள் 418.9; இறைச்சி-மீன் வகைகள் 529.9; என்று சொல்லக்கூடிய அளவிற்கு 4 மடங்கு, 5 மடங்கு உணவுப் பொருள்களுடைய விலை பயங்கரமாக ஏறியிருக்கிறது. எனவே, இன்றைய தினம் உணவுப் பொருள்களுடைய விலை ஏழைகள் வாங்கக் கூடிய நிலையிலே இல்லையென்பதை இந்த அரசாங்கம் அறிந்திருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த அளவு விலைவாசி ஏற்றத்திற்கு யார் பொறுப்பாளி, யார் பரிகாரம் காண வேண்டும் என்றால், மாநில அரசாங்கம் மத்திய சர்க்காரைக் காட்டுவதும், மத்திய சர்க்கார் மத்தியக் கிழக்குப் போர்ச் சூழ்நிலையைக் காட்டுவதும் வாடிக்கையாகிவிட்டது. ஆனால், பசிக்கின்ற மக்களுக்குக் காரணங்கள் தேவையில்லை, நியாயங்கள் தேவை அவர்



களுக்கு குறைந்த அளவுக்கு நியாயமான அளவுக்கு, தேவையான அளவு அரிசியை இந்த அரசாங்கம் கொடுத்தாகவேண்டும். அதைச் செய்வதற்குப் பதில் அதில் தோல்விகண்டு, தங்கள் பழிகளை ஒருவர் மீது ஒருவர் போட்டுதப்பிக்க முயற்சிக்கிறார்கள் என்பதை மட்டும்தான் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

உணவுப் பொருள்களின் விலை இந்த அளவு ஏற என்ன காரணம் என்பதைப் பற்றி விவாதங்கள், கருத்துக் கனல்கள், கருத்து மோதல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே எழுப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவருக்குத் துணையாயுள்ள பல அமைச்சர் களும் இந்த மன்றத்தின் உள்ளேயும் சரி, வெளியிலேயும் சரி, மக்க ளுக்குச் சொல்கின்ற கருத்துக்கள் எல்லாம் ஒரு தனி மனிதனுக்கு 400 கிராம் தேவைப்படுகிறது. அப்படியென்றால் ஒரு வருஷத்திற்கு, 146 கிலோ தேவைப்படுகிறது. 4½ கோடி மக்களுககுக் கணக்குப் பார்த்தால் ஏறத்தாழ 67 இலட்சம் டன் உணவுப் பொருள் தேவைப் படுகிறது. அந்த அளவு இந்த நாட்டிலே உற்பத்தியில்லையென்று இந்த மன்றத்திலே சொல்கிறார்கள். அந்தக் கணக்கைப் பார்க்கும் போது சரிதான். தனி மனிதனுக்கு 400 கிராம் என்று வைத்தால் வருஷத்திற்கு 146 கிலோ வரும். 4½ கோடி மக்களுக்கு 67 இலட்சம் டன் தான் வரும். அந்தக் கணக்கிலே தவறு இருப்பதாகச் சொல்ல வில்லை. ஆனால், இது ஒத்துக்கொள்ளக்கூடியதுதானா? நியாய மானதுதானா, ஏற்றுக்கொள்ளக்கூடியதுதானா?

1969-ம் ஆண்டு முன்னாள் உணவு மந்திரி, மறைந்துவிட்ட பெரியவர் திரு. கோவிந்தசாமி அவர்கள் இந்த மன்றத்திற்கு உணவுப் பிரச்னையைப் பற்றி தன்னுடைய மானியக் கோரிக்கையின்போது என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

In normal times, Tamil Nadu is neither surplus nor deficit in rice production but it is capable of reaching its own requirements.

என்று, 1969-லே "மார்ஜினலி செல்ப்ஃ சஃபிஷியண்ட்" என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்பொழுது, நாட்டினுடைய உற்பத்தி, அரிசி உற்பத்தி வெறும் 36 இலட்சம் டன்தான். நாட்டில், அரிசியின் உற்பத்தி 36 இலட்சம் டன் இருக்கும்போது "செல்ப்ஃ சஃபிஷியண்ட்" என்று சொன்ன போது நாட்டினுடைய மக்கள் தொகை 4 கோடியே 10 இலட்சம். இன் றைக்கு 4 கோடியே 50 இலட்சம். ஏறத்தாழ 62 இலட்சம் டன் சிறு தானியங்கள், அரிசி எல்லாம் சேர்ந்து உற்பத்தியாகிறது என்று சொன் னார்கள். நான் ஏன் இவ்வளவு சொல்கிறேனென்றால், இவ்வளவு பெரிய உற்பத்திக்குப் பிறகு, இப்பொழுது எப்படி பற்றாககுறை வருகிறது என் பதை மக்கள் மன்றத்திற்கு இந்த அரசாங்கம் சொல்லியாக வேண்டும்.

இன்றைக்கு அரிசி ஏழைகளுக்கு அவர்களுடைய வருமானத்திற்கேற்ப, வாழ்க்கை வசதிகளுக்கேற்ப, நியாயமாக, குறைந்த விலையில் கிடைக்க இந்த அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அரசாங்கத்தினுடைய உணவு

நடவடிக்கைகள் அல்லது கொள்கைகள் காமராசர் பின்பற்றியதைவிட நல்லவையாக இருக்கலாம்; பக்தவத்சலம் காலத்தைவிடச் சிறந்ததாக இருக்கலாம். ஆனால், அவர்கள் காலத்தில் நம்பிக்கையை இழந்தவர்கள், அண்ணாவின் நல்லெண்ணத்தை நம்பி, அண்ணாவின் தத்துவத்திற்கு ஆளானவர்கள், அண்ணாவை ஆட்சியிலமர்த்தி, அவர் ஆண்ட காலத்தில் எந்த வாழ்வைப் பெற்றார்களோ, எந்தச் சலுகைகளைப் பெற்றார்களோ, அவைகளை இன்றைக்குப் பெறவில்லை என்பது மக்கள் மன்றத்தின் உணர்வாகும். அதைத்தான் இம்மன்றத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அண்ணா காலத்தில், ஏழை மக்களுக்காக 3 வகை சப்சிடிகள் கொடுக்கப்பட்டன. இன்றையதினம் அரசின் நியாய விலைக் கடைகள் மூலம் விற்கின்ற அரிசிக்கு எல்லாக் கணக்கையும் போட்டு ஏழைகள் தலையில் பயங்கரமான சுமையைப் போட்டிருக்கிறது அரசு. ஆனால், அந்தப் பாவத்தை அண்ணா செய்யவில்லை. இப்பொழுது உற்பத்தியாளர்களுக்கு போனஸ் கொடுக்கிறீர்கள். அண்ணாவும் கொடுத்தார். அந்தப் போனஸ் பணத்தை அரசாங்கப் பணத்திலிருந்து ஈடுகட்டிக் கொண்டாரே தவிர வாங்கியவர்கள் தலையில் வைக்கவில்லை. நிதி நிலை அறிக்கையில், இதற்காக 3 கோடியே 17·70 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அரசாங்கக் கஜானாவிலிருந்துதான் கொடுக்கப்பட்டது. நகர்ப்புறத்திலே படியரிசித் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் மூலமாக 3 கோடியே 76.20 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

அதுமட்டுமல்ல, நெல்லை அறைப்பதற்கு வெளியிடத்திற்குக் கொண்டு செல்ல, காயப் போட, உலர்த்தச் செலவாகிறது என்று நம்முடைய அமைச்சர் மாதவன் அவர்கள் பல்வேறு கூட்டங்களிலே சொல்கிறார்கள். அந்தச் செலவு இன்றைக்கு வாங்குகின்ற ஏழைகள்மீது சுமத்தப்படுகிறது. அண்ணா சுமத்தவில்லை. 1 கோடியே 2 இலட்சம் இதற்காக அண்ணா ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, ஏழைகளுக்குச் சோறு போட, வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களுக்கு நியாயமான விலையில் குறைந்த விலையில் சோறு கிடைக்க பேரறிஞர் அண்ணா அவர்கள் 8 கோடியே 80 இலட்சம் ரூபாயை மானியமாகக் கொடுத்தார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

நான் இந்த அரசாங்கத்தை பணிவோடு வேண்டுவது, கனிவோடு வேண்டுவது எல்லாம் பசிக்கின்ற மக்களுக்கு, வாழ்க்கையில் தத்தளித்துக் கொண்டிருக்கிற மக்களுக்கு, பட்டினியால் வாடும் மக்களுக்காக எத்தனை கோடி மானியம் அளிக்கிறோம் என்பதைத் தெரிவியுங்கள்.

ஒருமுறை பத்திரிகையிலே ஒரு செய்தியைப் படித்தேன். அந்தத் தகவல் உண்மையாக இருக்குமானால், நான் சொல்லுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வது, இலங்கையிலே படி அரிசி ரூ. 28-க்கு விற்கிறது என்று பேசியதாக பத்திரிகையிலே வந்தது. பேசினாரா, இல்லையா என்ற ஆராய்ச்சிக்கு நான் முற்படவில்லை. இலங்கையிலே அரிசி விலை அதிகம், எல்லோருக்கும் தெரியும். ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்தார் என்று தெரிந்த நேரத்தில், அண்ணா அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்ததற்கு அரிசிப்-பிரச்னைதான் காரணம் என்ற உண்மையைத் தெரிந்து கொண்ட



ஸ்ரீமாவோ அரசாங்கம் ஒவ்வொரு குடும்பத்திற்கும், யார் யார் வருமான வரி கட்டவில்லையோ அவர்களுக்கெல்லாம் ½ கிலோ அரிசியை இலங்கை அரசாங்கம் இனாமாகக் கொடுக்கிறது. அப்படிக் கொடுப்பதன்மூலம் அரசாங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 100 கோடி செலவாகிறது. இலங்கையிலே அப்படி இருக்கிறது என்று சொன்னால், இலங்கை அரசாங்கம் இந்தப் பிரச்னையைச் சமாளிக்க இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்து, தீவிர நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்த அரசாங்கம் தீவிரமான கொள்முதல் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. பட்டியலைப் படித்துப் பார்த்தால் மிகத் தெளிவாகத் தெரியும். அண்ணா காலத்தில் எப்படி கொள்முதல் செய்யப்பட்டது? இப்பொழுது எப்படி செய்யப்படுகிறது என்பதைப் பார்த்தால், நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஆளுங்கட்சித் தரப்பில் கொடுக்கப்படுகிற வாதம் அப்பொழுது ரேஷன் இருந்தது, பங்கீடு முறை இருந்தது, இப்பொழுது இல்லை என்பதாகும். நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, பங்கீடு இல்லாத மாநிலங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்களிருக்கின்றன. அங்கேயெல்லாம் உணவு தானியங்களைத் தேக்குகிறார்களே தவிர, கொள்முதலைக் குறைக்கவில்லை. அரசாங்கத்திடம் இருப்பு-பஃப்பர் ஸ்டாக் இருந்தால்தான் வெளி மார்க்கெட்டைக் கட்டுப்படுத்துகிற வலிமை, தகுதி அரசாங்கத்திற்கு இருக்கும். தன் கையிலே போதுமான இருப்பு இல்லாவிட்டால் வர்த்தகச் சூதாடிகளுடைய பிடியிலேயிருந்து பொதுமக்களைக் காப்பாற்ற முடியாது—முடியவில்லை. எனவே, பங்கீடு முறை இருந்தாலும் இல்லாவிட்டாலும் மற்ற மாநிலங்கள் கொள்முதலைத் தீவிரப்படுத்துகின்றன.

(முற்பகல் 11–30)

நான் இந்த மன்றத்திற்கு பிற மாநிலங்கள் எப்படி கொள்முதலைக் கையாளுகின்றன என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கர்நாடக மாநிலம் 1968–69 ஆம் ஆண்டில் 66 ஆயிரம் டன் கொள்முதல் செய்தது; 66 ஆயிரம் டன் கொள்முதல் செய்த அந்த மாநிலம் இப்போது 94 ஆயிரம் டன் கொள்முதல் செய்கிறது.

அரியானா மாநிலம் 1968–69 ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 63 ஆயிரம் டன் கொள்முதல் செய்தது; கடந்த ஆண்டு 4 லட்சத்து 15 ஆயிரம் டன் செய்திருக்கிறது.

ஆந்திரப் பிரதேசம் 1968–69 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 77 ஆயிரம் டன் கொள்முதல் செய்தது; கடந்த ஆண்டு 6 இலட்சத்து 48 ஆயிரம் டன் கொள்முதல் செய்திருக்கிறது.

உத்தரப்பிரதேசம் 1968–69 ஆம் ஆண்டில் 2 இலட்சம் டன் கொள்முதல் செய்தது; கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 4 இலட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறது.

பஞ்சாப் மாநிலம் 1968–69 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 70 ஆயிரம் டன் கொள்முதல் செய்தது; இந்த ஆண்டு எவ்வளவு கொள்முதல் செய்திருக்கிறது தெரியுமா? 9 இலட்சத்து 37 ஆயிரம் டன்.

ஆனால், தமிழ் நாடு அரசாங்கம் 1968-69 ஆம் ஆண்டில் 6 இலட்சத்து 87 ஆயிரம் டன் கொள்முதல் செய்தது; சடந்த ஆண்டு 2 இலட்சத்து 71 ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்திருக்கிறது.

இப்படி போதுமான அளவிற்கு இந்த அரசாங்கம் கொள்முதல் செய்யாததன் காரணமாகத்தான் இப்போது பயங்கரமாக உள்ள விலைவாசி யேற்றத்தினைத் தடுக்கின்ற வலிமை இந்த அரசாங்கத்திற்கு இல்லாமல் போய்விட்டது.

இன்றைக்கு நாம் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கிற விலை போதுமானதாக இல்லை. போதுமானதாக இல்லையென்று இந்த அரசாங்கமும் சேர்ந்து வாதிடுகிறது. அப்படி வாதிடுவதன்மூலம் உழவர் பெருங்குடி மக்களின் எதிர்ப்பிலிருந்து தாங்கள் தப்பித்துக்கொள்ள முடியும் என்ற தந்திரத்தோடு அவர்களும் சேர்ந்து கொள்கிறார்கள், அவ்வளவு தான். மத்திய அரசு நிர்ணயித்த விலை 74 ஆக இருக்கலாம்; 83 ஆக இருக்கலாம், அல்லது கட்டுப்படியாகாத விலையாக இருக்கலாம். ஆனால் நீங்கள் அதிகப்படியான போனஸ் கொடுப்பதை எந்தச் சட்டம் தடுத்தது ? எந்த விதி தடுத்தது ? எந்த நியாயம் தடுத்தது ? ஏன் கொடுக்கவில்லை ?

மத்திய சர்க்கார் அனுமதிக்கவில்லையென்று மத்திய சர்க்கார்மீது பழியைப் போட்டு நீங்கள் தப்பித்துக் கொள்கிறீர்கள். கொள்முதல் செய்து லாபம் இல்லாத அளவிற்கு ஏழைகளுக்குக் கொடுக்கிறீர்களா என்றால் அதுவும் இல்லை. இதைப் பற்றி பல்வேறு தலைவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் ஒரு கிலோ ரூ. 1·35 காசுகள் கொடுத்து வாங்குகிறது; ஆனால் செலவினங்களையெல்லாம் சேர்த்து விற்பனை செய்யும்போது ஒரு கிலோவிற்கு 55 காசுகள் அதிகமாக வைத்து விற்கிறது என்றால் இது அவசியந்தானா ? தேவைதானா ? ஒரு கிலோ ரூ. 1·35 காசுகள் என்று வாங்கி, செலவினங்கள் என்ற பெயரால், போக்குவரத்துச் செலவுகள், நிர்வாகச் செலவினங்கள் என்ற பெயரால் ஒரு கிலோவுக்கு 55 காசுகள் அதிகமாக உயர்த்திவிட்டிருப்பது நியாயந்தானா ? தேவைதானா ? முறைதானா ? என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை, கோவை ஆகிய நகரங்களில் நபர் ஒன்றுக்கு 1,400 கிராம் என்ற அளவிற்குக் கொடுத்தார்கள். ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 7 கிலோ என்ற அளவிற்கு 1 மாதத்திற்கு 28 கிலோ அளவிற்குக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் தலைக்கு வாரத்திற்கு 1,000 கிராம்தான் தரப்படுகிறது. அதாவது ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதத்திற்கு 20 கிலோதான் தரப்படுகிறது. அண்ணா காலத்தில் வெளி மார்க்கெட்டில் அரிசி இல்லை. இப்போது வெளிமார்க்கெட்டில் அரிசியிருந்தாலும் அது வானத்தில் உள்ள வண்ண நிலவைப்போல்தான் இருக்கிறதே தவிர ஏழைகளுக்கு எட்டாத தூரத்திலேதான் இருக்கிறதே தவிர ஏழைகள் வாங்கிச் சாப்பிடக்கூடிய அளவிற்கு இல்லை. கடைகளில் தங்க நகைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன; தங்க நகைகள் தொங்கிக் கொண்டிருப்பதாலேயே அவையெல்லாம் ஏழைகளுக்கு கிடைத்து விடாது. ஏழைகளின் சக்திக்குட்பட்டு வாங்குகிற அளவிற்கு கடைகளிலே இன்றைய தினம் இல்லை.



இப்படி வாங்குபவனும் வாழமுடியவில்லை; உற்பத்தியாளனும் வாழ முடியவில்லை என்ற நிலைமை இந்த மாநிலத்திலே இருக்கிறது. இந்தியாவிலே உள்ள எந்த மாநிலத்தையும்விட இந்த மாநிலத்திலே தான் கொள்முதல் கெடுபிடிகள் அதிகமாக இருக்கக்கூடிய வகையிலே விதிகளை வைத்திருக்கிறது இந்த அரசாங்கம்தான்.

எக்கனாமிக் டைம்ஸ் என்ற பத்திரிகையிலே ஒரு கட்டுரை வந்தது. ஆந்திர மாநிலத்திலே கொள்முதல் $2\frac{1}{2}$ ஏக்கர் வரையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

As in the case of other States, producer levy has been imposed in different slabs depending on the size of the holding while holding less than two and a half acres are exempted from levy.

இது ஆந்திராவிலே. அங்கே இரண்டரை ஏக்கர் வரையில் லெவி கிடையாது.

பீகார் மாநிலம், மிகவும் பின்தங்கிய மாநிலம்; உற்பத்தி குறைந்த மாநிலம்; அந்த மாநிலத்திலே லெவி முறை என்ன ?

According to orders, cultivators possessing land upto five acres under irrigated paddy have been exempted from levy.

இறைவைப் பாசனம் மூலம் 5 ஏக்கர் வரை பயிரிடுகிறவர்களுக்கு லெவியே கிடையாது. அதற்குமேல் ஆற்றுப் பாசனம் மூலம் பயிரிடுகிறவர்களுக்கு லெவி போட்டிருக்கிறார்கள். இது பீகார் மாநிலத்திலே உள்ள நிலைமை.

மத்தியப் பிரதேசத்திலே புதிதாக ஆளுங்கட்சி நண்பர்களாக ஏற்றுக் கொண்டிருக்கிற ஜனசங்கத்தினர் போன மாதம் லெவியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்களே, அந்த மாநிலத்திலே ஏற்கெனவே 5 ஏக்கர் வரை எக்ஸம்ஷன் கொடுக்கப்பட்டது. அந்த 5 ஏக்கர் எக்ஸம்ஷன் என்பது போதாது அதை 10 ஏக்கர் வரை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வேறு மாநிலங்களிலே இருந்த போதும் இங்கே மட்டும் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயிகளும் லெவி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்; விவசாயிகளின் வீடு புகுந்து எடுக்கிறார்கள்; விவசாயிகளைக் கேவலமாக நடத்துகிறார்கள். இது என்ன நியாயம் ? விவசாயி உரம் கேட்டால்; தகுந்த காலத்தில் உரம் கொடுப்பதில்லை. விவசாயி பூச்சி மருந்து கேட்டால், சரியாகக் கொடுப்பதில்லை, தண்ணீர் கேட்டால், அதையும் கொடுப்பதில்லை. மின்சாரம் கேட்டு ஆண்டுக்கணக்கில் காத்திருந்தான், இந்த நிலைமைகளிலும் அவன் பயிரைத் தன் உயிராக மதித்துப் பாடுபட்டு வளர்த்து அறுவடை செய்கிற நேரத்திலே களத்துமேட்டிலே, வழிப்பறிக்காரன் போல் நீ தந்துவிட்டுத்தான் போகவேண்டுமென்று சொல்வது சரிதானா? கொள்முதல் தேவையில்லை என்று நாங்கள் சொல்லவில்லை, சிறிய விவசாயிகளைப் புண்படுத்தாத வகையிலே நடந்துகொள்ள வேண்டும்....

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 9 இலட்சம் டன் கொள்முதல் செய்யவேண்டுமென்ற முறையிலே சொன்னார்கள், நல்ல கருத்து, ஆனால் அதே சமயத்தில் விவசாயிகளிடம் போகக்கூடாது என்று சொல்கிறார்களே, அது எப்படி முடியும் என்பதைச் சொன்னால் நல்லது.

திரு. ஆலடி அருணா: என்னுடைய வாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். விவசாயிகளிடம் கொள்முதல் செய்யக் கூடாது என்பது அல்ல நான் சொல்கிற கருத்து. கலைஞர் அவர்கள் சொன்னார்களே, 10 ஏக்கர், 5 ஏக்கர் என்று அதிகமாக நிலம் வைத்திருக்கிறவர்களிடம் வாங்குவோம் என்று சொன்னார்களே, அதைப்போல் செய்யுங்கள். எங்களைப் பின்பற்ற வேண்டாம், கலைஞரைப் பின்பற்றுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. ஆலடி அருணா அவர்கள் ஆந்திர மாநிலத்திலே இரண்டரை ஏக்கர் வரை விதிவிலக்கு என்று இருப்பதாகச் சொன்னார்கள். இங்கே இரண்டரை ஏக்கர் வரை விதிவிலக்கு என்றால் 90 சதவீதம் லெவியே தர முடியாமல் போய் விடும். இங்கே அப்படிப்பட்ட நிலைமை இல்லை. வேறு மாநிலங்களில் வேறு வேறு நிலைமைகள் இருக்கலாம். அந்த அளவை இங்கே நிர்ணயிக்கக்கூடிய நிலைமை இல்லை.

திரு. ஆலடி அருணா: மிட்டா மிராசுதாரர்களிடம் நீங்கள் தயவு தாட்சண்யமின்றி கொள்முதல் செய்தால் சிறிய விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளிக்கலாம். ஆனால் உங்களுக்கு அந்த உள்ளம் இல்லை. ஆகவே, இந்த அரசாங்கத்தின் உணவுக் கொள்கையினால் வாங்குகிறவனுக்குச் சலுகை இல்லை, உற்பத்தியாளனுக்கும் நன்மை இல்லை. இடையிலே இருக்கிற இடைத் தரகர்களுக்குத்தான் உடந்தையாக இருக்கிறது என்று குற்றஞ் சாட்டி அமர்கிறேன், வணக்கம்.

*திரு. கி. ஜெயராமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உணவுக்—கூட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே முன்னாலே பேசிய ஏ.டி.எம்.கே. உறுப்பினர் அவர்கள் உணவுப் பிரச்சனையில் மாநில அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று கேட்டார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது எல்லாம் பொறுப்பிலிருந்து இந்த அரசு விலக வேண்டும் என்பதுதான். ஆனால் அதே நேரத்திலே சென்ற தடவை வட மாநிலங்களிலே எல்லாம் பெரிய உணவு நெருக்கடி ஏற்பட்ட நேரத்திலே இந்தியப் பிரதமர் அவர்களை கம்யூனிஸ்ட் கட்சியினரும், பத்திரிகையாளர்களும் ஏன் நீங்கள்



பதவி விலக வேண்டியதுதானே என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் நான் பொறுப்பிலிருந்து தட்டிக்கழிக்க விரும்பவில்லை, என் கொள்கை பொறுப்பிலிருந்து பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டுமென்பதுதான் என்று சொன்னார்கள். அதைத்தான் நான் இப்போது ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்சனையைச் சந்தித்த நேரத்திலே ஒரு பொருத்தமான யோசனையைச் சொன்னார்கள். வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இதே மாதிரி நெருக்கடி வந்த நேரத்திலே வட மாநிலங்களிலே அத்தனை மாநிலங்களும் சேர்ந்து கோதுமையை இறக்குமதி செய்யவேண்டுமென்று, அந்நியச் செலவாணி நெருக்கடி ஏற்பட்டாலும் சரி என்று சொன்னார்கள். கோதுமையையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தார்கள். ஆனால் என்னவோ தமிழ்நாட்டிலே இப்படி நெருக்கடி வருகிறபோது அவர்கள் வேண்டுமென்றே கவனிக்காமல் விட்டு விடுகிறார்கள் என்பதையும் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஆளுங்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கைத்தறி சம்பந்தமாகக் கொண்டுவந்த மசோதாவை வேண்டுமென்றே நிறைவேற்றாமல் அரசு தள்ளி வைத்திருக்கிறது என்று சொன்னார்கள்.

மற்றொரு புதுத் திட்டத்தையும் அவர்கள் குறை கூறினார்கள். அது பணிக் கூட்டுறவுச் சங்கத்தைப்பற்றித்தான். இந்தப் பணிக் கூட்டுறவுச் சங்கம் சந்தானம் கமிட்டியில் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். வேறு எந்த மாநிலத்திலும் கைத்தறித் தொழிலுக்கு இவ்வளவு தீர்க்க தரிசனத்தோடு கூடிய வசதியை—நம்முடைய மாநிலம் செய்த பிறகு கூட—அவர்கள் செய்வதற்கு முன் வரவில்லை. செய்வதற்கு மனம் இல்லை. ஆனால் இங்கே உள்ள பணிக் கூட்டுறவுச் சங்கம் என்பது விற்பனைக்காக ஏற்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்ல. ஆனால் அடிக்கடி அல்லல்படுவதற்குக் காரணமான நெசவாளர்களுக்குத் தேவைப் படுகின்ற மூலப்பொருளாகிய நூலைப்பெறுகின்ற திட்டத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கம். ஏறக்குறைய சென்ற ஆண்டு முழுவதும் இந்த பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல விலையில், குறைந்த விலையில் ஏறத்தாழ 10,200 நூல் பேல்களை மார்க்கெட் விலையை விடக் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் உறுப்பினர்கள் இன்றைக்குக் குறை கூறுவது என்றால் அவர்கள் எதைக் குறை கூறியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நான் அறிந்த வரையில் அங்கே உண்மையாகவே உபயோகிக்கின்றவர்கள், உண்மையாக நூலைத் துணியாக நெய்பவர்களாக இருந்தால் இன்றைய தினம் நாம் அளிக்கின்ற அந்த நூலைப் பெற முடியும். மார்க்கெட் விலையை விடக் குறைந்த விலையில் நம்முடைய அரசு கொடுக்கிறது. அங்கேயுள்ள நெசவாளப் பெரு மக்கள், உண்மையிலேயே உபயோகிப்பவர்கள் அந்த நூலை வாங்க முடியும். அதை விட்டுவிட்டு இன்னும் எங்களுக்குக் குறைந்த விலையில் கொடுங்கள் என்று கேட்பது, வெளியிலே நூலை விற்பனை செய்வதற்காகத்தான் இருக்க வேண்டுமே தவிர வேறல்ல. உண்மையிலே உபயோகிப்பவர்களுக்குக் கட்டுப்படியாகும், வாங்கி உபயோகிப்பவர்களுக்கு இலாபமாக இருக்கும் என்பதைத் துணிந்து கூற முடியும்.

அடுத்தபடியாக, கைத்தறி மசோதாவைப் பற்றிக் கூறினார்கள். அந்த மசோதா தூங்கிவிடவில்லை. It will not see the light of the day என்று நான் சொல்லவில்லை. ஒன்றை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே மூலப்பொருளாகிய நூலைப்பற்றிப் பேசும் நேரத்தில், மத்திய அரசாங்கம் ஆர்ட் சில்க் யார்ன்-ஐ குறைந்த விலையில் அல்ல, நியாயமான விலையில் விற்க வேண்டுமென்று "டேரிஃப் கமிஷன்"-இன் ரிபோர்ட்டை—மத்திய அரசாங்கம் கமிட்டி போட்டு, முடித்து—கொடுத்து நான்கு ஆண்டு ஆகிறது, நாங்கள் எத்தனை முறை சொன்னோம், அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டில இருப்பதைப்போல் நியாயமான விலையில் தரும்படி. ஆர்ட் சில்க் யார்னை, அது கைத்தறி நெசவாளர்களாகட்டும் அல்லது தொழிற்சாலை முதலாளிகளாகட்டும் அவர்களுக்குப் பயன்படும் வகையில் அந்த ரிப்போர்ட்டை அமல் ஆக்க வேண்டுமென்று சொல்லி, அமைச்சர் பெருமக்களிடத்திலே நேரிலே சந்தித்துச் சொல்லியும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரைச் சந்தித்துப் பல தடவைகள் சொல்லிய பிறகும், அவர்கள் அதை நிறைவேற்றுவதற்கு முன் வரவில்லை. அண்மையில் நிறைவேற்றுவதாகக் கூட மத்திய அமைச்சர் திரு. சட்டோபாத்தியாயா அவர்கள் சொன்னார்கள். நாங்கள் ஆவலோடு காத்துக்கொண்டிருந்தோம். ஆனால் அவர்கள் டெல்லிக்குச் சென்ற பிறகு, எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல மேலும் தனிப்பட்டவர்களின் கமிட்டிக்கு அந்த நூல் விநியோகத்தை குறைந்த விலையில் அல்ல, அவர்களுக்கேற்ற விலையில் விநியோகிப்பதற்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

இங்கே, சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டுள்ள வீட்டு வசதி, கடன் வசதி இன்னும் மார்க்கடிங் ஃபெசிலிட்டிஸ் ஆகிய எத்தனையோ திட்டங்களை அரசு ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து துணிவோடு நிறைவேற்றுகின்ற நேரத்தில், அங்கே நான்காண்டுக் காலமாகியும், டேரிஃப் கமிஷன் ரிப்போர்ட்டை ஒத்துக்கொள்ளாமல்—ஒரு சிலவற்றையாவது ஒத்துக் கொண்டு நிறைவேற்றலாம்—அதற்கு மாறாக, அதற்கு எதிராக, அதற்கு முரணாகத் தனிப்பட்டவர்களுக்கு கோடானு கோடி ரூபாய் பெறுமானமுள்ள அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றி ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் மாண்புமிகு மௌரியா அவர்களிடத்திலே நேரிலே சொல்ல வேண்டும். நாடாளுமன்றத்திலேயும் இதை எடுத்துச் சொல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ரிப்போர்ட்டில் உள்ளவற்றில் குறைந்த பட்சக் காரியங்களையாவது செய்வதற்கு முன் வர வேண்டும். எத்தனையோ ரிப்போர்ட்டை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டுமே விடாப்பிடியாக இருப்பதில் என்ன மர்மம் என்று தெரியவில்லை, என் தயக்கம் என்று தெரியவில்லை.

கைத்தறிப் பிரச்னை என்பது முக்கியமான பிரச்னையாகும். மார்க்கெட்டிங் ஃபெசிலிட்டீசை நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு காலத்தில் நிறைவேற்றித் தந்தார்கள். எல்லா கைத்தறி துணிகளும் விற்கப்பட்டன. இனிப் பிரச்னை இல்லை என்று நாங்களெல்லாம் மகிழ்ச்சியோடுதான் இருந்தோம். ஆனால் இந்த ஆண்டு மீண்டும் தேக்கம் வந்து விட்டது. இது மஸ்தான் வேலையா அல்லது ஸ்மக்லிங் காரணமா? என்று தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் கைத்தறித்தொழிலின் நிரந்தரமான



பிரச்னையான விற்பனையை ஒழுங்குபடுத்த, கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் மசோதாவைக் கொண்டு வந்துள்ளோம். இந்த மசோதா இன்றைய தினம் சட்டசபைக்கு வராததன் காரணம் சில புதிய தகவல்களைப் பெற்றுக்கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்பதுதானே தவிர இதை ஒத்திவைக்கவில்லை.

இந்த நாட்டிலுள்ள அனுமதிக்கப்படாத பவர் லூம்களினால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படாத அளவில் இருக்க வேண்டும் என்பதற்காக விவரங்களைக் கேட்டிருக்கிறோம். அவை வந்தவுடன் நிச்சயமாக சட்டசபைக்கு வரும், அதை நிறைவேற்றத்தான் போகிறோம். அப்பொழுது மத்திய அரசாங்கம் நியாயமான அடிப்படையில் என்ன சொல்லப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

திரு. கே.டி.கே. தங்கமணி: சார், இந்த மிக முக்கியமான மசோதா இந்தத் தொடர் கூட்டத்திலேயே வர வேண்டுமென்று விரும்புகிறார்களா? அல்லது ஒத்தி வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா?

திரு. கி. ஜெயராமன்: அதற்கான விவரங்களைச சேகரித்துக்கொண்டுதான் இருக்கிறோம். இந்த விவரங்கள் எல்லா மாவட்டங்களிலேயிருந்தும் வர வேண்டிய விவரங்களாக இருக்கின்றன.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரு சிறிய விஷயம் எனக்குப் புரியவில்லை. திரு. தங்கமணி அவர்கள், எப்பொழுது வரும் என்று திரு. ஜெயராமன் அவர்களைக் கேட்கிறார்கள். ஜெயராமன் அவர்கள் பதில் சொல்கிறார்கள். அது எப்படி என்று தான் புரியவில்லை; அதை ஜெயராமன் அவர்கள் கொண்டு வருவார்களா அல்லது அமைச்சர் கொண்டு வருவாரா?

திரு. கி. ஜெயராமன்: இந்த நிலையில் கைத்தறியின் மூலம் உற்பத்தியாகும் வேஷ்டி, சேலைகளுக்கு மட்டும்—மற்றவைகளைப்பற்றி இப்பொழுது கவலைப்பட வேண்டியதில்லை—அவைகளை மட்டும் கைத்தறியிலே மட்டும் உற்பத்தி செய்ய வேண்டும், ஆலைகளின் மூலமாகவோ, பவர் லூம்களின் மூலமாகவோ அவைகள் உற்பத்தியாகாமல் கட்டுப்படுத்த வேண்டும் தமிழ் நாட்டில் என்று அரசு தீர்க்க தரிசனத்தோடு வெளியிட்டிருக்கிறது. இதற்கு மாறான கொள்கைகளை, இது சரியல்ல, இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஏற்றதல்ல என்று சொல்பவர்கள் வேறு நல்ல கொள்கைகளையாவது எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லாமல், ஓரளவுக்காவது தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு விடிவெள்ளியாக, யாரும் எதிர்பாராத நல்ல திட்டங்களை—மற்றவர்கள் கொண்டுவரத் தவறிய திட்டங்களைக் கொண்டு வருகிறோம்.

முன்னாள் தொழில் அமைச்சரவர்கள் கூறினார்கள்; மத்திய அமைச்சர் சொல்லியது, வெட்கக் கேடானது, அது வேதனை தரக்கூடியதுதான். நம்முடைய வேதனையை அவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். ஆனால நமக்கு வேதனைதான் தொடர்ந்து இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள முடியும்.

மற்றொன்றையும் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே நாம் பல கடன் வசதிகளையெல்லாம செய்திருக்கிறோம். சாதாரணமானவர்கள் அதிக வசதிகளைப் பெறவேண்டும் என்று அவர்கள் முன்னேறுவதற்குப் பல திட்டங்களை நாம் கொண்டு வந்துதான் இருக்கிறோம். நமது அரசு "கோவாபரேட்டிவ் டெவலப்மெண்ட் ஃபண்ட்" என்று ஒரு திட்டத்தை 5 சதவிகிதம் நிகர இலாபத்தில் கோவாபரேட்டிவ் யூனியனுக்கு ஒதுக்க வேண்டுமென்ற திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. இங்கே பிரைமரி கோவாபரேட்டிவ் சொஸைட்டியாக இருந்தாலும் 5 சதவிகித இலாபத்தை நாம் மாநில யூனியனுக்கு ஒதுக்கியிருக்கிறோம். இந்த மாநில யூனியனிடம் ஏறக்குறைய 60 இலட்சம் அல்லது 70 இலட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கும். இரண்டாண்டுக் காலமாக சூப்பர் மார்க்கெட்டுக்குக் கடன் வசதிகளைச் செய்து தருவதைப் பாராட்டலாம். இருந்தாலும் ஃபிக்செட் டெபாசிட்டில் கோவாபரேட்டிவ் அபிவிருத்தி நிதியை வைத்துக் கொண்டு இந்த நெருக்கடியான நேரத்தில் அது அங்கே ஏன் தூங்க வேண்டும்? ஆகவே அந்த நிதியை, அந்த டெவலப்மெண்ட் பண்டை நிச்சயமாக அபிவிருத்தி வேலைக்கும் நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் நெசவாளர் பெருமக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கும் அல்லது அவர்கள் தொழில் முன்னேற்றத்திற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும், அவர்கள் குழந்தைகளின் படிப்பு வசதிக்கும், இன்னும் எத்தனையோ பிரிவுகளுக்கும் அந்த நிதி முழுவதையும் பயன்படுத்தலாம். எனவே ஃபிக்செட் டெபாசிட்டில் வைத்துக் கொண்டு, இந்த நெருக்கடியான நேரத்தில் அதை வீணாக்குவது கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நலிவுற்ற பஞ்சாலைகளை—டெக்ஸ்டெய்ல்ஸ் சிக் மில்ஸ்—தனிப்பட்டவர்களிடத்திலிருந்து நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தின் சட்டத்தின்கீழ் எடுத்தது. பொதுத்துறையில் திறமையாக வேலை செய்ய முடியும், அதிக இலாபத்தைத் தனிப்பட்டவர்களைவிடப் பெற முடியும் என்ற முறையில் நாம் பணியாற்றி இலாபத்தைப் பெறுகின்ற நேரத்தில், மத்திய அரசு அவைகளையெல்லாம் பொதுவுடைமையாக்க வேண்டுமென்று கொண்டு வந்தார்கள். அதை நாங்கள் வரவேற்றோம். ஆனால் பொதுவுடைமையாக்கப்பட்ட அந்த தனிப்பட்ட நலிவுற்ற பஞ்சாலைகள் இப்பொழுது நம்முடைய மாநிலத்தினுடைய அதிகாரத்தின் கீழ், நிர்வாகத்தின் கீழ் இல்லாமல் தேசவுடைமையாக்கப்பட்ட பிறகு அவைகள் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின்கீழ் வரும். இப்படி இலாபகரமாக நடைபெறும் திட்டத்தை நாமே நடத்த வேண்டும், அதனுடைய நிர்வாகம் மட்டும் நம்முடைய கட்டுப்பாட்டின் கீழே இருக்க வேண்டும், உங்கள் பிரதிநிதிகள் வேண்மானாலும் அதில் இருக்கட்டும் என்று நாம் சொன்னோம். அதற்கு அவர்களிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. அதற்காக நாம் முதலீடு செய்திருக்கிறோம்.

மகாராஷ்டிரம் கூட அப்படிப்பட்ட நலிவுற்ற பஞ்சாலைகள் மாநிலங்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருக்கவேண்டும் என்ற கருத்தை ஆதரித்திருக்கிறது. இவைகளைப்பற்றியெல்லாம் சொல்லப்போனால், அதிகாரம் இருக்கிறது, அந்த அதிகாரத்தையே நீங்கள் சரிவரப் பயன்படுத்துவதில்லை



மேலும் மாநில சுயாட்சி கேட்கிறீர்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் இந்த அதிகாரங்கள், சரியான அதிகாரங்கள், தேவையான அதிகாரங்கள் இந்த அதிகாரங்களை நிச்சயமாக மத்திய அரசு கொடுக்குமா என்றால் என்னுடைய அனுபவத்தைக் கொண்டு பார்த்தால் நிச்சயமாகக் கொடுக்கப் போவதில்லை. இதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மற்றொன்றையும் கூற விரும்புகிறேன். நம்முடைய உணவுப் பொருட்களுக்கு நெருக்கடி வந்த நேரத்தில், விநியோக முறையை நாம் நல்ல முறையில் மேற்கொண்டிருக்கிறோம்.

தனிப்பட்டவர்களிடம் இந்தப் பொருள்களை விநியோகிக்கும் பொறுப்பு இருந்தால் அது சொந்த சுயநலத்திறகாகப் போய்விடுகிறது என்ற காரணத்தால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும், கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவும் அந்தப் பணியை நிறைவேற்றி வருகிறோம்.

இந்த நேரத்தில் மத்திய அரசு தொழிலமைச்சர் பாய் அவர்களும் மத்திய நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களும் நாங்கள் ஒரு புதிய விநியோகத் திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். அதோடு அத்தியாவசியப் பொருள்கள் பட்டியலில் மேலும் இரண்டு பொருள்களைச் சேர்த்துக் கொள்ளுவதாகப் பத்திரிக்கைகளில் கூட செய்தி வந்திருக்கிறது. அவர்கள் அப்படி சொன்னார்களே தவிர, இதுவரை எந்த விநியோகத்தையும் யார் மூலமாகவும் செய்யவில்லை.

இந்த நெருக்கடியான நேரத்தில் அரிசியிலே அரசியலைக் கலக்க வேண்டாமென்று சொன்னது போல் பொறுப்புள்ள எதிர்க் கட்சிகள் கலைஞர் அவர்கள் எடுத்திருக்கும் தீவிர நடவடிக்கைகளுக்கு, பிரச்சினைகளைச் சந்திக்கின்ற முறைகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று சொல்லி மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார்</u>: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு மானியங்கள் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முக்கியமான நாலைந்து மானியங்கள் ஒரே தினத்திலே கொண்டுவரப்படும்போது எல்லா மானியங்களிலும் எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. இருந்தபோதிலும் நான் ஒரு துணி வணிகன் என்ற முறையிலே கைத்தறி சம்மந்தப்பட்ட பிரச்னைகளில் என்னுடைய கருத்தைச் சொல்லுவது நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

கைத்தறி சம்பந்தப்பட்ட வரையில் நம்முடைய அரசின் கொள்கைகள் தெளிவாக இருக்கின்றன; நேர்மையாக இருக்கின்றன. நாட்டு மக்களுக்கு நலம் தருவதாக இருக்கின்றன. இதிலே பிரச்சினை என்னவென்றால் நம்முடைய மாநிலத்திலே நம்முடைய நெசவாளர் குடும்பங்களுக்காக நாம் இயற்றக்கூடிய சட்டங்களை மத்திய அரசு ஒப்புக்கொண்டு, இது தேவைதான்

இதுதான் மக்களின் பிரச்சினைக்குப் பரிகாரம், என்று கருதாமல் அவர்கள் அனுமதி கொடுக்காமல் இருப்பதால் இந்தப் பிரச்சினை இன்னும் வளரக் கூடியதாக இருந்துகொண்டிருக்கிறது.

உதாரணமாக, கைத்தறிக்கென்று ஒருசில ரகங்களை ஒதுக்கி அதன்மூலம் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க சட்டங்களை இயற்ற முயற்சி செய்கிறோம். அம்மாதிரியான சட்டத்தை கொண்டுவரும்போது அதை வடபுலங்களில் உள்ள ஆலைச் சொந்த காரர்களும், மத்திய அரசும் குறுக்கே நின்று வரவொட்டாமல் செய்து விடுகிறார்கள். அதுதான் இதுவரை நடந்து வந்திருக்கிறது. ஏற்கனவே சிலரகங்கள் கைத்தறிக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று சட்டங்கள் இருக் கின்றன. ஆனால் அதை நடைமுறையில் கொண்டுவர முடியாத காரணத் தால் கைத்தறிக்குப் பாதுகாப்பற்ற முறை இருந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பிரச்சினையை மாநில அரசுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

நாம் பாதுகாக்க வேண்டியது கைத்தறித் தொழிலையா அல்லது கைத் தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய நெசவாளர் குடும்பங்களையா? ஊழி ஊழி காலத்திற்கும் கைத்தறித் தொழிலை வளப்படுத்த வேண்டுமா? பல நூற்றாண்டுக் காலத்திற்கு இம்மாதிரிப் பாதுகாப்பு, அரசாங்கத்தால் புட்டிப்பால் ஊட்டக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுகிறது.

நான் இந்த வாய்ப்பில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதனால் மனவருத்தம் வந்தபோதிலும் நாட்டின் நலனைக் கருதி ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நாம் பாதுகாப்புத் தரவேண்டியது இன்று கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்களைப் பாதுகாப்பதற் குத்தானே தவிர இந்தத் தொழிலையே ஊழி ஊழி காலத்திற்கும் அவர்கள் செய்துகொண்டிருக்க வேண்டுமென்ற வகையில் அரசாங்கத்தின் சலுகை கள் தொடர்ந்து இருந்து வர வேண்டுமென்ற கொள்கையை நான் நிச்சயமாக ஆதரிக்கவில்லை. நாளடைவில் இந்தத் தொழிலில் ஈடுபடுப வர்கள் குறைந்துகொண்டே வந்து, அதற்குப் பதிலாக இயந்திரங்களின் சக்தியைப் பயன்படுத்தி குறைந்த மனிதர்களைக் கொண்டு அதிக உற்பத்தி யைப் பெருக்கிக் கொள்ளும் அளவிற்கு யத்தனங்களில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் நாட்டில் வளர்ச்சி ஏற்பட முடியும். இது காந்திஜியின் கொள்கைக்கு மாறுபட்டு இருந்தாலும் கூட இன்றைய தத்துவங்களின் அடிப்படையில், இன்றைய சிந்தனையின் அடிப்படையில் குறைந்த மனிதர் களைக் கொண்டு நிறைந்த அளவு உற்பத்தியைப் பெருக்கிட வழிவகை செய்யவேண்டும்.

இன்று இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்குச் சலுகை கள் போதுமானதாக இல்லை. குடியிருப்புக்கு வேண்டிய வசதிகள் செய்ய வில்லை. குழந்தைகளைப் படிக்க வைக்க வசதிகள் செய்ய வில்லை. நிரந்தரமாக வேலைக்கு வேண்டிய கருவிகள் வாங்க வசதிகள் செய்ய முடியவில்லை. அவர்களுடைய தொழிலில் தேவைக்கான நூல்களை விநி யோகம் செய்கின்ற கடமையைக்கூட நிறைவான வகையில் ஆற்ற முடிய வில்லை.



நம்முடைய மாநிலத்தில் நெசவாளர்களுக்கு நூல்களை விநியோகம் செய்யும் திட்டத்தை வைத்திருக்கிறார்கள் என்று தெரியும். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் மத்திய அரசின் போக்கு இருந்து கொண்டிருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடை மாநிலத்தில் நூலின் உற்பத்தி 75,000 பொதிகள். நம்முடைய தேவை 20,000 பொதிகள்தான். நாலில் ஒரு பங்குதான் நம்முடைய தேவை. நான்கு மடங்கு நாம் கூடுதலாக உற்பத்தி செய்தும் நம்முடைய நெச வாளர்களுக்கு நியாயமான விலையில், கன்ட்ரோல் விலையில், நிரந்தரமான விலையில் இன்று நூல் கொடுக்க முடியவில்லை. இன்று ஒரு விலை, நாளை ஒரு விலை, நாளை மறுதினம் ஒரு விலை என்று இந்த தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சூதாட்டக்காரர்கள் செய்வதன் காரணமாக ஏழை நெசவாளர்களுக்கு நிரந்தரமான நியாய விலையில் நூல் கிடைக்க வில்லை. நூல்களைக் கொள்முதல் செய்து விநியோகிக்க நம்முடைய அரசை மத்திய அரசு அனுமதிக்காமல் இருப்பது மாபெரும் பாதகம் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ரிபேட் இதுவரை 10 பைசா கொடுத்து வந்ததை 5 பைசாவாகக் குறைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பிலிருந்து காண்கிறேன். இந்த ரிபேட்டால்தான் ஓரளவு கைத்தறித் துணி வணிகம் பெருகி வந்தது. இதனால் வெகுவாகத் துணி விற்பனை பாதிக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பட்டு நெசவு சம்பந்தமாக ஒரு கருத்து. இதுவரை நாம் நினைத்துக் கொண்டிருந்தோம்—மல்பரி செடிகள் பெங்களூர் போன்ற குளிர் இடங் களில் தவிர மற்ற இடங்களில் வளராது என்று. தற்போது தர்மபுரி, சேலம், காஞ்சிபுரம், திண்டுக்கல் போன்ற பகுதிகளில் மல்பரி செடிகள் நன்றாக வளருவதை நாம் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலே அதிகமாகப் பட்டுத் துணியை உற்பத்தி செய்ய வசதி இருக்கிறது. நல்ல அழகிய பட்டுச் சேலைகள் வெளி நாடுகளில் உயர்ந்த விலைக்கு விற்றுக் கொண்டிருக் கின்றன. அதனால் கூடுதலான விலையேற்றம் ஏற்பட்டது. வெளிநாட்டுச் செலவாணியைச் சம்பாதிக்கும் வகையில் பட்டு உற்பத்திக்கு அதிக ஆக்கம் தர வேண்டும்.

கைத்தறித் துணி தேக்க நிலை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? இந்தத் துணி உற்பத்தி செய்து விற்பனை செய்யக் கூடியவர்களிடம் சிறிது நாணயக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. வெளிநாட்டு ஆர்டர்களின் பேரில் ஏற்றுமதி செய்யும் போது தரத்தில் மாறுதல் செய்து விட்டார்கள். வணிகர்கள் செய்த தவறு காரணமாக வெளி மார்க்கெட் வெகுவாகக் குறைந்து விட்டது. சில சந்தர்பங்களில் நாம் அனுப்பிய துணிகள் ஒப்புக்கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப் படுகின்றன. இதனால் வெளிநாட்டு ஆர்டர் கிடைக்காமல் போய் விடுகிறது.

நம்முடைய மாநில அரசு இப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் துணிகளைப் பரிசீலித்து அனுமதி கொடுக்க ஒரு தரக் கட்டுப்பாடு அதி காரியை நியமிக்க வேண்டும். அனுமதி இன்றி யாரும் துணியை வெளி நாடுகளுக்கு அனுப்ப முடியாத அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் விடுத்துக் கொள்கிறேன்.

இன்னொரு உண்மை என்னவென்றால், கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் எந்தவிதமான அபிவிருத்தியும் காணப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் விற்பனை நிலையங்களைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். கூடுதலான தொகையைக் காட்ட முடியும். விலையேற்றத்தின் காரணமாக கூடுதல் தொகை வருகிறதே தவிர, அதிக அளவு விற்பனையால் அல்ல. இது தன்னுடைய வாணிகத்தைப் பெருக்கக்கூடிய வகையில் இதர மாநிலங்களில் அதிகமான விற்பனைக் கூடங்களைத் திறந்து அதிக அளவில் விற்பனை செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12–00]

அதோடு, இந்த கைத்தறித் தொழிலுக்குத் தேவையான இரண்டு, மூன்று சாதனங்களைச் செய்து கொடுக்காமல் இருக்கிறோம். சாயம் சம்பந்தப்பட்ட சாயப் பட்டறைகள் போதுமான அளவிற்கு இல்லை. சிறிய நெசவாளர்கள் ஒரு சில பெரிய வசதி படைத்த பணக்காரர்கள் வைத்திருக்கிற சாயப் பட்டறைகளில் சென்று சாயம் நனைக்கும்போது கூடுதலாக அவர்கள் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, வட்டம் தோறும் அல்லது குறைந்த பட்சம் மாவட்டங்கள் தோறும் அரசாங்கத் தரப்பில் சாயப் பட்டறைகளை ஏற்படுத்தினால், இந்த சாயப்பட்டறைகளை நெசவாளர்கள் உபயோகப்படுத்திக்கொள்வதின் மூலமாக அவர்களுக்கு இன்றுள்ள பெரிய சிரமம் தீரும்.

இந்த சாயங்கள் வட நாட்டில் உற்பத்தியாகக் கூடிய சாயங்கள், இவைகளில் பல சாயம் போகக் கூடிய நிலையில் இருக்கின்றன. இதனால் வர்த்தகர்களான நாங்கள் பல சங்கடங்களுக்கு உள்ளாகிறோம். சாயம் போன துணிகளை எங்கள் மூஞ்சியில் எறிகிற காட்சிகளை நாங்கள் பார்க்கிறோம். அவைகளுக்கு நாங்கள் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. ஆகவே, தரமான சாயப்பட்டறைகளை வட்டம் தோறும், மாவட்டம் தோறும் ஏற்படுத்தினால், இந்த சாயப் பட்டறைகளில் தரமான சாயங்களை உபயோகப் படுத்தினால் அது நெசவாளர்களுக்கு மிகுந்த உதவிகரமாக இருக்கும்.

அடுத்து, சூரத் வெள்ளிக் கம்பிகளைப் பெறுவதில் இடைஞ்சல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வளவு தொழில் நுட்பம் தெரிந்த காலங்களில் கூட, சூரத் வெள்ளிக் கம்பிதான் வர வேண்டுமா, அதற்கு தமிழ் நாடு காத்திருக்கிறது என்று சொன்னால் அது நமக்குப் பெருமை தருவதாக இல்லை. இலட்சக் கணக்கான மக்கள் நம்பி வாழக்கூடிய தொழிலுக்கு சூரத்திலிருந்து வெள்ளிக் கம்பிகள் வர வேண்டுமென்று சொல்வது சரியல்ல. மிகப் பெரிய நுண்ணிய கருவியா அது? ஜெட் விமானங்களின் கருவியைத் தயார் செய்கிறபோது, வெள்ளிக் கம்பிகளுக்கு சூரத்தை நம்பியிருக்க வேண்டுமென்று இல்லாமல் இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டு தமிழகம் முன்னேற்றமடைய வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, இந்த ஜரிகை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலை ஒன்றே ஒன்று தான் அரசாங்கத் தரப்பில் இருக்கிறது. இன்னும் பல இடங்களில் இந்த சரிகை தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டும். இதைத் தவிர பளபளப்பான நூல், லூரக்ஸ், ஜப்பானிலிருந்து கள்ளத்தனமாக



நம் மாநிலத்திற்கு வந்து விட்டது. இதைத் தடுத்து நிறுத்துவது என்பதால் இதன் உபயோகம் குறைந்து விடாது. நாடு கடத்தப்பட்டு வருவது குறைந்து விடாது. நம் மாநிலத்திலேயே லூரக்ஸ் உற்பத்தி செய்வதற்குத் தொழிற்சாலையை ஏற்படுத்தி, தரமான லூரக்ஸ் உற்பத்தி செய்யப்படுமானால் அதனால் கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கும், நம் நெசவாள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வாய்ப்பும் ஏற்படும். இதனால் நம் மாநிலத்தின் வருவாயும் பெருகும் என்ற இந்த யோசனையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் கைத்தறி சம்பந்தப்பட்டவரை, கைத்தறி பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக பவர்லூமைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கருதுவது என்னைப் பொறுத்த வரை உசிதமான கருத்தல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சூரத், மாலேகாவ் போன்ற பகுதிகளில் பார்த்தால் ஒவ்வொரு தெருவிலும் வீட்டிற்கு வீடு பல நூற்றுக்கணக்கான பவர்லூம்களை வைத்துக்கொண்டு அவர்கள் செல்வம் கொழிக்க இருக்கிறார்கள். அம்மாதிரி நிலை இங்கு வரவேண்டும். அதை விட்டு ஒரு கொள்கையின் அடிப்படையில், நம் மாநிலம் ஒரு எளிய நாடாக, வறுமை மிக்க நாடாக, நம்முடைய தேவைகளுக்கு அவர்களை நம்பி இருப்பது என்பது நல்லதல்ல.

கைத்தறியைப் பொறுத்த வரை, பருத்தி நூல்களை மாத்திரம் நம்பியிராது, சூரத் போன்ற பெரும் நகரங்களில் செய்வது போன்ற உயர் தரமான நைலான், நைலக்ஸ், பாலிஸ்டர் போன்ற சிந்தடிக் ஃபைபர்களை, மனித யத்தனத்தால் செய்யப்பட்ட நூல்களை உபயோகித்து, அதிக வருவாயை நெசவாளர்கள் பெற முடியும். இதனால் நம் மாநிலத்திற்கு அதிக வருவாய் ஏற்பட வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, உணவு சம்பந்தமாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற மதிப்பீட்டுக் குழுவில் சுட்டிக் காட்டப்பட்டது போன்று இந்த அரவைக்காரர்களுக்கு ஏராளமாக உணவு தானியங்களைக் கொடுத்து அவைகளைத் திரும்பப் பெற முடியாது, பல இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆகவே, இந்த அரவைக்காக தனியாரிடம் கொடுக்கக்கூடிய பழக்கத்தை ஒழிக்க இருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பிலிருந்து தெரிகிறது. இதை நான் மிக மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். உற்பத்தியாளர்களைக் கொண்ட ஒரு குழு அல்லது சங்கம் அமைத்து, அவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை ஒன்று சேர்த்து அதை அரைத்து, அரிசியாக விற்பனை செய்வதற்குண்டான ஏற்பாட்டை செய்யப்போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் செய்ய வேண்டிய காரியம். இதை எவ்வளவு விரைவாக, துரிதமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு மாத தேவை 60 கிலோ என்று சொல்லப்படுகிறது. ஆனால் எனக்கு கிடைப்பதில்லை. காரணம் நான் 450 ரூபாய் சம்பளக்காரன். என்னுடைய ஊரில், எங்கள் திருச்சி மாவட்ட ஆட்சி

யாளர் உத்திரவிற்கு இணங்க 350 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படிக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் மாதம் 60 கிலோ என்று சொல்லப்படுவது கொடுக்கப்படுகிறதாவென்றால் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 12 கிலோ, அதாவது வாரத்திலே 3 கிலோ வீதம் 4 வாரங்களுக்கு 12 கிலோதான் கிடைக்கிறது. மீதி தேவைப்படும் உணவு தானியங்களுக்கு ஒரு குடும்பம் என்ன செய்ய முடியும் என்று யோசிக்க வேண்டும் அவர்கள் கள்ளச் சந்தையில் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் ஊரில் விலை என்னவென்றால் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை ரூ. 370 முதல் 380 வரை விற்கிறது. இந்த விலையில் வசதி படைத்தவர்கள்தான் வாங்கி உண்ண முடியுமே தவிர, வசதியற்றவர்கள் வாங்கிச் சாப்பிட முடியாது. இதனால் வசதியற்றவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இந்த 400, 500 ரூபாய் என்ற வருமான வரையறையை நீக்கி விட்டு, குறைந்த பட்சம் இந்த வருமானம் உள்ளவர்களுக்கு கோதுமையாவது கொடுங்கள், கவலையில்லை. அரிசி கொடுக்கவேண்டுமென்று நாங்கள் நிர்ப்பந்திக்கத் தயாராக இல்லை. நாட்டினுடைய நிலைமை, மத்திய அரசினுடைய போக்கு இவைகளை அறிந்தவர்கள் நாங்கள். மத்திய அரசின் உதவிக்கரம் இல்லாத காரணத்தினால் நாங்கள் நிர்ப்பந்திக்கவில்லை. கோதுமையாவது தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவிற்குப் பேச வாய்ப்பு அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, உணவு, கூட்டுறவு, கைத்தறி, நீதி, நிர்வாகம் ஆகியவைகளுக்காக அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானிய கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த கைத்தறியாளர் பிரச்சனை வரும்போதெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் படும் சிரமமெல்லாம் பார்க்கும்போது இந்த கைத்தறியாளர்கள் நம் மாநிலத்திற்கே, அரசுக்கே ஒரு பெரும் சுமையாக இருப்பது போல் தோன்றிக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது நினைத்துப் பார்க்கும்போது இந்த கைத்தறியாளர்கள் $5\frac{1}{2}$ லட்சம் மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபடாவிட்டால் இந்த நிலைமையை எப்படி சமாளிக்க முடியும் ? வேலையில்லாத் திண்டாட்டம் எந்த உச்ச வரம்பில் இருக்குமென்று பார்க்கிறபோது, அரசின் சுமையைக் குறைப்பது இந்த கைத்தறியாளர்கள் என்று எண்ண இடமிருக்கிறது. ஏனென்றால் கைத்தறியிலே சுமார் 500 ரூபாய் முதலீடு செய்தால் இரண்டு பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும் என்ற நோக்கத்துடன் திட்டமிடப்பட்டதாக அறிக்கையில் பார்த்தேன். ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்கள் நிதி நிலை அறிக்கையிலே 340 கோடி ரூபாய் லிட்கோவில் போடப்பட்டு, வேலை வாய்ப்பு பெற்றுக் கொண்டவர்கள் 17 ஆயிரம் பேர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக இரண்டு லட்ச ரூபாய் முதலீடு செய்தால் ஒரு ஆளுக்கு வேலை கிடைக்கும். இப்படிப் பார்க்கும்போது, இந்த கைத்தறியில் நம் அரசு வழங்கியிருக்கும் தொகை மிக மிகச் சொற்பம் ஆகும். இந்த கைத்தறியாளர்கள் படுகிற கஷ்டம் மிகவும் அதிகம்.



இந்தக் கஷ்டத்தை நீக்க அரசு சற்றுத் தாராளமாக முன் வந்து 2 கோடி, 3 கோடி ரூபாய் முதலீடு செய்து ஷேர் கட்டுகின்ற பிரைமரி கோவாபரேடிவ் சொசைடிகளுக்கு வழங்கினால் கைத்தறியாளர்களின் பிரச்சினையைத் துரிதமாகத் தீர்க்கக் கூடிய வழி இருக்கிறது. இதற்கு அதிகமான செலவு கூட கிடையாது. 340 கோடி ரூபாயிலே 17 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கிறதென்றால் இரண்டு லட்ச ரூபாயில் ஒரு நபருக்குத் தான் வேலை கிடைக்கிறது. ஆனால் கைத்தறியிலே ஒரு லட்சம் முதலீடு செய்தால் எத்தனையோ பேர்களுக்கு வேலை கிடைக்கும். தமிழ் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு, இந்தப் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு, முதலீடு அதிகம் தேவைப்படுகிறது.

இந்தமாதிரி நெசவாளர்களுக்கு ஏற்கனவே கஷ்டங்கள் இருக்கிறபோது, இந்த ஆண்டு புதுக் கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. நூல் விலைகள் இறங்கியவுடனே, மார்க்கெட்டில் தனிப்பட்ட முறையில் தயார் செய்கிறவர்களுக்கு குறைந்த விலையில் நூல் கிடைத்து விட்டது. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிறவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகையினால் அவர்கள் வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, விற்பனை இல்லாமல் இன்றுள்ள நிலைமையில், கூட்டுறவு சொசைடிகளில் ஏராளமாக ஸ்டாக் இருக்கிறது. இதனால் நெசவாளர்களுக்குச் சரிவர தொழில் கொடுக்க முடியவில்லை.

தேங்கிக் கிடக்கிற ஸ்டாக்கை எப்படியாவது விற்கவேண்டுமென்று பார்த்தபோது, அரசு உத்தரவு போட்டது, இவைகளைக் கொள்முதல் செய்யலாம், எந்தத் தொகைக்குக் விற்பனை செய்தார்களோ அதில் 10 சதவீதம் குறைத்து கொள்முதல் செய்யவேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். இந்த உத்திரவு நெசவாளர்களுக்குப் பாதகமாக அமைந்திருக்கிறது. முன்பெல்லாம் மதுரையில் 30, 20 சொசைடி என்று இருந்தால் இப்போது 7, 8 சொசைடிகள் தான் இருக்கின்றன. இந்த மாதிரி உத்திரவு அமலாகி இருப்பதால் இன்னும் இருக்கிற சொசைடிகள் தங்கள் காலில் நிற்க முடியாமல், நெசவாளர்களுக்குத் தொழில் கொடுக்க முடியாத நிலைமைக்கு வந்து விடும் அபாயத்தைக் கருத்தில் கொண்டு அரசு பரிகாரம் காணவேண்டும். அரசு செய்யக் கூடிய பரிகாரம், உடனடியாக அவர்கள் கையிலுள்ள ஸ்டாக்குகள் அத்தனையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அப்படிப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ்நாடு சொசைடியில் வாங்குவதற்காக தேவையான பணம் 1 கோடியோ, இரண்டு கோடியோ முதலீடு செய்ய வேண்டும். ஏராளமான தொழிற்சாலைகளுக்கு முதலீடு செய்யும் இந்த அரசு இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்காக 1 கோடியோ, 2 கோடியோ முதலீடு செய்வது பொருத்தமாக இருக்கும். 6 லட்சம் கைத்தறி நெசவாளர்கள்—அவர்களுடைய குடும்பங்கள் பிரச்னை இது. இந்த கைத்தறி நெசவாளர்களின் பிரச்னையை அரசு நன்றாக உணர்ந்து இருக்கிறது. சென்ற ஆண்டு கஷ்டம் வந்தபோது 1 கோடி ரூபாய் அவர்களுக்குக் கடனாகக் கொடுத்து, அவர்களிடமிருந்து திருப்பிப் பெறமுடியாது என்று அறிந்தபோது, அந்தக் கடனை ரத்து செய்து விட்டார்கள்.

இப்போது நெசவாளர்களுக்கு உதவிசெய்யும் நோக்கத்துடன், அரசு "கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம்" ஒன்றை ஆரம்பித்து இருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சியடைவதோடு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் கூட்டுறவு நெசவாளர்களுக்கு மட்டும் பயன்படும்வகையில் செய்யப்பட்டுள்ளது. சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டில், மொத்தம் இருக்கிற கைத்தறியில் மூன்றில் 1 பங்கு தான் கூட்டுறவுத் துறையில் இருக்கிறது என்றும், மூன்றில் 2 பங்கு தனியாரிடம் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறது. ஆகவே, இந்தத் தனியாரிடத்தில் இருக்கும் நெசவாளர்களுக்கும் சேர்த்து இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக, பைனான்ஸ் டிரேடிங் கார்ப்பரேஷனிடமிருந்து பணம் வாங்கி – அவர்கள் பல விதத்தில் மாஸ்டர் வீவர்களுக்கு உதவி செய்கிறார்கள் – மற்ற நெசவாளர்களுக்கும் செய்து கொடுத்தால் மிகவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நெருக்கடி நேரமாக இருப்பதால் 10% ரிபேட்டை 5% குறைத்து விட்டதாகச் சொல்கிறார்கள். எல்லாக் கூட்டுறவுச் சொசைடிகளிலும் நிறையத் துணி தேங்கிக்கிடக்கிறது. ஆகவே, இந்த 5% என்பதை 20—25% என்று வழங்கி, அவர்களுடைய கையில் இருக்கிற ஸ்டாக்குகளைத் தீர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த 10% ரிபேட்டையாவது நடைமுறைக்குக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். பலபல இடங்களில் கைத்தறியாளர்கள் பொருட்காட்சி நடத்துகிறார்கள். அங்கேயெல்லாம் 20%, 25% ரிபேட் அவர்கள் ஸ்டாக் தீரும் வரை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதுள்ள பிரச்னையில், நெசவாளர் பிரச்னையில், வீட்டுப் பிரச்னை குறித்து நான் அடிக்கடி எடுத்துச்சொல்லி வருகிறேன்.

மதுரை நகரைப் பொறுத்தவரையில் நெசவாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தரவேண்டுமென்று நீண்ட நாட்களாகக்கேட்டுக்கொண்டு வருகிறேன். 1,000 நெசவாளர்களுக்கு பட்டா கொடுத்து இருக்கிறார்கள். பட்டா கொடுத்தார்களே தவிர இன்னும் சர்வே செய்து, கல் நடவில்லை. பரந்த பொட்டல் வெளியாக இருக்கிறது. பட்டா நிலம் யார் யாருடையது என்று தெரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. இன்னின்னாருக்கு இன்ன இன்ன நிலம் என்று தெரிந்தால்தானே வீடு கட்டிக்கொள்ள முடியும். கலெக்டர், ஆர்.டி.ஓ.வை பார்த்துக் கேட்டோம். ஒவ்வொரு நெசவாளரும் ரூ. 8 வீதமாக எல்லா நெசவாளர்களும்கூட்டுச்சேர்ந்து மொத்தமாக ரூ.8,000 கொடுத்தால் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்குப் பணம் கொடுப்பதற்கு நெசவாளர்களிடத்தில் பணம் இல்லை. ஆகவே, அரசே சர்வே செய்து கொடுத்து, கல் நட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னோம். அவர்களும் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில், பல மாவட்டங்களில் நிலைமை மோசமாக இருக்கிறது. ஏழை நெசவாளர்கள் வேலை இல்லாத காரணத்தால — கூட்டுறவு ஸ்தாபனமாக இருந்தாலும் சரி—தனியார்



ஸ்தாபனமாக இருந்தாலும் சரி – சரியாக வேலையும் கிடைக்காமல், கூலியும் சரியாக கிடைக்காத காரணத்தால் அவர்கள் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். அரிசி வாங்கிச் சாப்பிடுவது என்பது மிகமிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, ஏதாவது ஒரு முறையில் அவர்களுக்குத் தனிச்சலுகை கொடுத்து குறைந்த கட்டணத்தில் அரிசி சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எல்லா இடங்களிலும் வறட்சி ஏற்பட்டு விட்டது. ஆகவே, விவசாயிகளுக்கு நல்ல விதத்தில் – விவசாயம் செய்ய சாத்தியக்கூறு உள்ள இடங்களில் – விவசாயம் செய்ய உரம், வட்டி இல்லாக் கடன் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீவிர பெரியாறு பாசனத்தில் நீண்டகாலமாக ஒரு கோரிக்கை இருக்கிறது. கடைசி நிலத்திற்குத் தண்ணீர் வருவது இல்லை. கடைசி நிலத்திற்குத் தண்ணீர் செல்வதற்கு முன்பே இடையில் இருக்கும் மக்கள் மடையைத் திறந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். ஆகவே, எல்லா விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைக்கிற வகையில் பாசன வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட்டுகளில் மெயின்டனன்ஸ் நல்ல முறையில் இருக்க வேண்டும். அங்கே உடைந்த நாற்காலி, மேசை முதலியன இருக்கின்றன. நான் கோர்ட்டுக்குச் செல்கிற நேரத்தில் இவற்றைப் பார்க்க நேரிடுகிறது. ஆகவே, அங்கே நல்ல பர்னிச்சர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறையில் உணவு வசதி நன்றாகத் தரப்படுகிறது. அரசியல் காரணமாக யார் வேண்டுமானாலும் சிறையில் இருக்கலாம். ஆகவே, இன்னும் நல்ல விதத்தில் உணவு கொடுத்துச்சீர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி</u> : பேரவைத் துணைத்தலைவரவர்களே, இந்த அவை முன்னால் இருக்கக்கூடிய பல மானியங்கள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, நீதித் துறையைப் பற்றிக் குறிப்பிட்டு என்னுடைய வேண்டுகோள் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் பல காலமாக அருப்புக்கோட்டையில் ஒரு சிவில் கோர்ட் வேண்டுமென்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரம் கிழக்குப் பகுதி, இராமநாதபுரம் மேற்குப் பகுதி ஆகிய இரண்டு பகுதிகளில் 10—15 மைல் தொலைவிற்குள் ஒரு சிவில் கோர்ட் இருக்கிறது. மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் போன்ற இடங்களில் சிவில்கோர்ட் இருக்கிறது. சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் சிவில் கோர்ட் இருக்கிறது. அருப்புக் கோட்டைப் பகுதியில் எந்தவிதமான சிவில் கோர்ட்டும் இல்லை. இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் வெகு தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் இந்த கோர்ட் அமைப்பது குறித்து அமைக்கப்பட்ட கமிட்டியின் பரிந்துரை வேறு

விதமாக இருந்தாலும் கட்டாயம் ஒரு சிவில் கோர்ட் அமைத்துத் தருவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, கூட்டுறவுத்துறை பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு விஷயத்தைச் சொன்னதால், அது விஷயமாக நான் சிலவற்றைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். நான் அமைச்சர் அவர்களிடத்தில் நேரடியாகச் சொல்லி, அந்த விஷயத்தை முடித்து விடலாம் என்று இருந்தேன். அந்த சொசைட்டிக்கு அனுமதி கொடுத்து விடவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தகவல் கொடுத்து இருந்தார்கள். அப்படி இருந்த போதிலும் கீழே இருக்கும் சிலர் தலையீட்டின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. அதை எளிதாகச் சமாளித்து விடலாம். நிச்சயம் அதற்கு அனுமதி வழங்கப்படும். கொஞ்ச காலதாமதமாகலாம். மற்றபடி வேறு எந்த விதமான பிரச்னையும் இல்லை. சாமுண்டீஸ்வரி சொசைட்டி ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசியவர்கள், பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிச் சொன்னார்கள். அந்தப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டில் என்ன சொன்னார்கள் என்று தெரியவில்லை. பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் முறை மேலும் விரிவாக்கச் செய்ய வேண்டுமென்று ஏற்கனவே ஆலோசித்தோம். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக நம்முடைய உணவுக் கொள்கையைப் பற்றி சில கருத்துக்களை அவசியம் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். நம்முடைய அரசு பல காரணங்களைச் சொல்லி எந்தெந்த காரணங்களுக்காக நிச்சயமாக ஒரு நீண்ட கால உணவுக் கொள்கை ஒன்றை ஏற்படுத்துவது அவசியம் என்று நன்கு சொல்லி இருக்கிறார்கள். அந்தக் காரணங்கள் எல்லாம் மிகவும் உண்மையான காரணங்கள். இந்த காரணங்களுக்காக நீண்ட கால உணவுக் கொள்கை அமைக்க வேண்டும் என்பது உண்மையான விஷயம். ஆனால் இந்த நீண்ட கால உணவுக் கொள்கை நாம் எந்த அடிப்படை முறையில் செயல்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறதோ, அந்த சரியான அடிப்படை செயல் முறையில் இருக்குமா என்று சந்தேகம் இருக்கிறது. என்னுடைய கருத்தை அரசுக்கு சொல்லிக் கொண்டு இதைப் பற்றி அரசு ஏதாவது மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் ஒரு சில விஷயங்களை அரசுடைய கவனத்திற்கு கொண்டு வர ஆசைப் படுகிறேன். இதிலே அரசு சில காரணங்களை, உணவுக் கொள்கையில் இருக்கின்ற சிரமங்கள், கஷ்டங்கள் பற்றி சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக, ஒன்றிரண்டு விஷயங்களை அரசுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய நஞ்சை நிலப் பரப்பு குறைவாகப் போய்விட்டது என்று சொல்கிறார்கள். உண்மையான விஷயம். இதை அரசு ஆழ்ந்து பார்க்கும்போது இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க



வேண்டும். இதைப் போல பல கண்மாய்கள், குளங்கள் தூர்ந்து போய் கட்டடங்கள் கட்டுகிறார்கள். உதாரணத்திற்கு மதுரையில் இருக்கின்ற நஞ்சை நிலத்தில் கட்டடங்கள் புதிதாக வந்து இருக்கின்றன. ஏதாவது தடை செய்து இருக்கிறார்களா என்றால் இதுவரையில் இல்லை. இப்படி ஒரு நிலை வரும்போது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிந்தித்து என்னென்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறோம் என்று சொன்னால் நன்றாக இருக்கும். இதைப் பற்றிச் சொல்லவில்லை.

இன்னொரு முக்கியமான விஷயம், மூன்றாம் பக்கத்தில் முதல் பாராவில் சொல்லப்படுகிறது. நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய நிலங்கள் நெல் உற்பத்தி செய்கிற நிலங்கள் எல்லாம் மிகவும் ஸ்மால் ஹோல்டிங்ஸ் ஆக இருக்கின்றன என்பதைப் பற்றி அரசு சொல்லி இருக்கிறார்கள். சிறிய அளவிலே இருப்பதால் விவசாயிகள் உற்பத்தி செய்ய வேண்டிய பொருளாதார வசதி ரொம்ப குறைவாக இருக்கிறது என்று அரசு உணர்ந்து இருக்கிறது என்று நன்றாகத் தெளிவாக இருக்கின்றது. ஆனால் இதைப் பற்றி அரசு ஸ்மால் ஹோல்டிங்ஸ் இருக்கின்றவர்களுக்கு வேண்டிய வசதி இல்லை, இதைப் போக்குவதற்கு இன்னின்ன செய்து இருக்கிறோம், இன்ன திட்டம் எடுத்து இருக்கிறோம் என்று சொல்லவில்லை.

லாண்ட் சீலிங் கொள்கை கொண்டு வந்து இருக்கிறோம். இந்தக் கொள்கையால் இப்போது நாம் உணரக்கூடிய கஷ்டங்கள், அதிலே இருக்கக் கூடிய இடையூறுகள் என்ன என்று தெளிவாக சிந்தித்து, இந்த லாண்ட் சீலிங் கொள்கை காரணமாக நம்முடைய உணவு உற்பத்திக்கு இடையூறு இருக்கின்றது என்று உணர்ந்தால் நாம் உறுதியான முறையில், போல்டாக, நிச்சயமாக என்ன செய்ய வேண்டும் என்று கொள்கை உணர்வு இருக்க வேண்டும். எனவே இவைகளை மாற்ற, அரசின் கொள்கை இப்படித்தான் இருக்கும் என்று சொல்ல முன் வரவேண்டும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் எப்படி இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்? மழை பெய்யாமல் இருக்கின்றது என்றால் அது இயற்கையின் கொடுமை எனலாம். அதைத் தீர்ப்பதற்கு வழி இல்லை. ஆனால் மற்ற வகையில் இருக்கின்ற கஷ்டங்களை போக்க வாய்ப்பு, திறமை, சக்தி இருக்கின்றபோது இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு போல்டாக அவற்றைத் தீர்க்க முன் வரக்கூடாதா என்று இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படுகிறேன்.

அரசு இனிமேல் இந்த உணவு வழங்கு துறையையும் வாணிபத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதை பிரச்சினையாக வைத்து செயல் பட்டு இருக்கின்றது. இதிலே என்ன சொல்கிறார்கள் அரசுக்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. இதை எடுத்துப் பார்க்கும்போது உணவு விநியோகத்தை எடுத்துக் கொள்வது முடியாது என்று காரணம் சொல்லி இருக்கிறார்கள். அப்படி ஏற்றுக் கொள்வதாக இருந்தால் எந்த மாதிரி செயல் படுகிறது என்று பார்க்கிறபோது குறிப்பில் என்ன சொல்லி இருக்கிறார்கள்? "மாநில எல்லையோரப் பகுதிகள் முழுமையிலும் குறிப்பிட்ட தூரத்திற்குள் முழுமையான பொது விநியோக முறை கொண்டு வந்தாக வேண்டும். இந்த பகுதிகளில் மொத்த, சில்லரை வணிகம் முழுமையாகத் தனியாரிடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும். உணவுப் பொருள்களை இந்தப் பகுதிகளில் எடுத்துச் செல்வதற்கு தனியார் வாகனங்களுக்குத் தடை போட வேண்டும்".

இப்போது நாம் அரவை ஏஜெண்ட், கொள்முதல் ஏஜெண்ட் என்று
வைத்து இருக்கிறோம். இந்த கொள்முதல் ஏஜெண்ட், அறவை ஏஜெண்டு
களை எடுத்துவிட வேண்டும் என்பது நியாயமான விஷயம். விவசாயி
களுக்குக் கிடைக்கவேண்டிய முழுப் பலன் கிடைக்காமல் போகிறது. ஆனால்
இது எல்லாம் கொள்கை விஷயத்தில் சரியாக இருக்கும்போது இதற்கு
பரிகாரம் என்ன சொல்லி இருக்கிறோம் என்று கேட்டால் இந்த அரசு
செய்ய வேண்டிய எல்லா காரியமும் சிரமமாக இருக்கும் என்ற காரணத்
திற்காக இந்த அரசு செய்ய வேண்டிய பணியை, இந்த பொறுப்பை
கோவாபரேடிவ் சொசைடிகள் மேலே தள்ளி விடுவது என்று முடிவு
செய்து இருக்கிறார்கள். இது நல்ல முறையில் செயல்படுமா என்று
சந்தேகமாக இருக்கின்றது.

எங்கே உணவு உற்பத்தி அதிகமாக ஆகிறதோ அங்கே விவசாயிகள்
எல்லாம் சேர்ந்து விவசாயச் சங்கம் அமைத்துக் கொள்ள வேண்டும்
அந்தச் சங்கம் கொள்முதல் செய்யவேண்டும். அரவையையும் செய்
வேண்டும். இந்தச் சங்கம் மற்ற இடங்களுக்குக் கொண்டு போக வசதி
இருக்க வேண்டும். லாரி முதலாளிகளையும், அரவை முதலாளிகளையும்
கட்டுப்படுத்துகிற சக்தி அரசிடம் இருந்தும் கூட அதை அரசு செய்ய
வில்லை.

கோவாபரேடிவ் சொசைடிகள் நல்ல முறையில் செயல்படுவதாகக்
கணக்கில் வைத்துக் கொள்வோம். தப்பு செய்கிற சொசைடிகளும் இருக்
கின்றன. எல்லாக் கோவாபரேடிவ் சொசைடிகளும் நல்ல முறையில் வேலை
செய்கின்றன என்ற கணக்கு வைத்துப் பார்த்தாலும் கூட இந்தப்
பொறுப்பை நிறைவேற்றுகின்ற சக்தி அவற்றிற்கு இருக்குமா என்று
பார்க்கிறபோது நிச்சயமாக இருக்கமுடியாது என்று சொல்ல முடியும்.
நடு வழியாக வேறு இடத்தில் பொறுப்பைத் தூக்கிப் போடுவது போல
காரியம் செய்யாமல் நல்ல முடிவு தைரியமாக செய்ய வேண்டும்.. இன்று
பொறுப்பை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும்
எடுத்துக் கொள்ள வேண்டும்.

நம் அரசு நிர்வாக இயந்திரத்தை நம்பக் கூடாதா? தவறுகள்
இருக்கத்தான் செய்யும். இந்தத் தவறுகளை களைய நடவடிக்கை எடுத்துக்
கொள்ளலாம். இரண்டில் ஒன்று, அந்தப் பக்கம் இந்தப் பக்கம் என்று
இல்லாமல் நடு நிலையில் இருக்கின்றது. பாதி கிணறு தாண்டுவது நல்ல
தாக இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்
தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசு ஒரு முடிவுக்கு வரவேண்டும்.
ஏதாவது திட்டவட்டமான கொள்கை நமக்கு வேண்டும்.

உணவுப் பிரச்னையைப் பார்த்தால் பஞ்சம் வருகிறபோதுதான் இதைப்
பற்றி கவனிப்பது என்ற கொள்கை இல்லாமல் திட்டவட்டமான ஒரு
கொள்கை வைத்துக் கொள்ள வேண்டும். தைரியமாக முடிவு எடுத்து
10 ஆண்டு ஆனாலும் கூட நிறைவேற்றவேண்டிய தைரியம் அரசுக்கு
வேண்டும் என்று கூறி இதைப்பற்றி அரசு நிச்சயமாக நல்ல முறையில்
மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.





இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கின்ற பஞ்ச நிலைமை தமிழகத்தில் இருக்கின்ற பிற மாவட்டங்களைவிட எவ்வளவோ கடுமையாக இருக்கின்றது என்று தெரியும். இப்போது அரசு என்ன செய்ய வேண்டும். அங்கே இருக்கின்ற மக்களுக்கு எவ்வளவு குறைந்த விலையில் மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற விலையைக் காட்டிலும்—இராமநாதபுரம் மக்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு—அரசு பொருள்களைக் கொடுக்க வேண்டும்.

இப்போது இருக்கின்ற நிலைமை என்ன? சென்னையிலே இருக்கின்றவர்கள் அரிசிக்குக் குறைந்த விலை கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களில் அதிக விலை கொடுத்து அரிசி வாங்குகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்றவர்களுக்குப் பஞ்சம் மிகக் கடுமை; ஊதியம் குறைவு. அதிகமாகப் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை. இப்போது நாம் கடைப் பிடித்து வருகின்ற உணவுக் கொள்கை காரணமாக இந்த நிலைமை. இதை மாற்ற என்ன செய்து இருக்கிறார்கள். பல காரணங்கள் சொல்லி இருக்கிறார்கள். எனவே, இருக்கின்ற மூவ்மெண்டைக் கண்ட்ரோல் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்கிறேன்.

(பிற்பகல் 12-30)

ஆனால் எந்தக் கொள்கை எப்படி இருந்தாலும்கூட நம்முடைய அரசு அதற்காக இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட வேண்டுமென்று விரும்புவதாக நான் சொல்லவில்லை. இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று தெரிந்தும் அதை மாற்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் அளித்துள்ள இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவன் என்ற முறையில் இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் நாட்டிலே கைத்தறித் துணிகளைப் பொறுத்த மட்டில் கூட்டுறவுத் துறையானாலும், தனியார் துறையானாலும் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டில் 40 கோடி ரூபாய்க்குமேல் பெறுமானமுள்ள துணி தேங்கிக் கிடக்கின்றது.

இப்படித் தேங்கிக் கிடப்பதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி நாம் ஆராய வேண்டும். கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த நெசவாளர்கள் ஆனாலும் சரி; அல்லது பணிக் கூட்டுறவுக் கழகத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் ஆனாலும் சரி, அவர்களுக்கு அளிக்கக் கூடிய நூல், செயற்கை பட்டுகள் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும். குறிப்பாக பிப்ரவரி மாதம் நான் ஊரில் இருக்கும்போது 60-ம் நம்பர் நூல் விலை ஒரு கட்டு 115 ரூபாயாக இருந்தது. சமீபத்தில் ஊருக்கு சென்று வந்தேன். இப்போது விலை 95 ரூபாய். இப்படி விலைகள் ஏறுவதும் இறங்குவதுமாக

இருப்பதால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு பயம் இருந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் கொள்முதல் செய்து விற்கிற வியாபாரிகளுக்கும் பயம் இருந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, வாங்கிப் பயன்படுத்தக் கூடிய மக்கள்கூட பின்னுல் விலை குறையும், அப்போது எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையில் இருப்பதால் இப்போது திடீரென்று 40 கோடி ரூபாய்க்கு மேல் கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது. ஆகவே, கூட்டுறவுத் துறையிலே உற்பத்தி செய்யக் கூடிய நூலையாவது, வெளி மார்க்கெட்டைப் பார்க்காமல், ஒரு நியாய விலையில் கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே சாயப் பௌடர் சரியாகக் கிடைக்கவில்லை. கைத்தறித் துறையை எடுத்துக் கொண்டால், செயற்கைப் பட்டை பயன்படுத்தும் போது அதற்கு ஒரு வகை சாயப் பௌடர் கட்டாயமாகத் தேவைப்படுகிறது. அந்தப் பௌடர் நியாய விலையில் கிடைக்கவில்லை. ஆகவே, செயற்கைப் பட்டுக்குப் பயன்படுத்தும் சாயப் பௌடரை நியாய விலைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, செயற்கைப் பட்டு இப்போது தமிழகத்தில் உள்ள மக்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. அதற்கான காரணத்தை அமைச்சரவர்களுடைய குறிப்பில்கூட சொல்லியிருக்கிறுர்கள். மில் முதலாளிகளும், தனிப்பட்ட கொள்ளை லாபம் அடிக்கின்ற முதலாளிகளும், தனியாக ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறுர்கள் என்று குறிப்பிலே சொல்லியிருக்கிறுர்கள். அந்த கூட்டு ஒப்பந்தத்தைத் தமிழக அரசு எத்தனையோ தடவைகள் கண்டித்தும், அதற்கு மத்திய அரசு செவி சாய்க்கவில்லை என்பதை ஆளும் காங்கிரஸ் நண்பர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனிப்பட்ட முதலாளிகளும் மில் முதலாளிகளும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றும் அதைத்தான் ஆதரிக்கிறோம் என்றும் சொல்கிறுர்கள். இப்படிக் கொள்ளை லாபம் அடிப்பவர்களை மத்திய அரசு ஆதரிக்கிறது. அதனுல் தமிழ்நாடு நெசவுத் தொழிலாளர்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை மத்திய அமைச்சர்களும், மத்திய ஆட்சியில் இருக்கிற அதிகாரிகளும் சின்னுளப்பட்டி, அருப்புக்கோட்டை, மதுரை, காரைக்குடி, சேலம் போன்ற இடங்களுக்கு வந்து விசாரணை செய்தால் அங்கே தெரியும். இந்த பணக்கார வர்க்கம் செய்யக் கூடிய தில்லுமுல்லுகளினுல்தான் ஏழை நெசவாளர்கள் கஷ்டப்படுகிறுர்கள் என்பதும், தனிப்பட்ட முதலாளிகள் கொள்ளை லாபம் அடிக்கிறுர்கள் என்பதும் அவர்களுக்குப் புலனுகும். அதற்கு மத்திய அரசு தயாரா என்று நம்முடைய அமைச்சரவர்கள் கேட்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏழை நெசவாளர்களுக்கு உணவு விநியோகிப்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் கிராமப் புறங்களிலுள்ள ஏழை மக்களுக்கு, நிலம் இல்லாத விவசாயிகளுக்கு சமீபத்தில் கோதுமை கொடுப்பதாக அறிகிறேன். ஆனுல் அந்த மக்களுக்கு கோதுமை கொடுப்பதோடு அரிசி அல்லது கம்பு, கேப்பை, கேழ்வரகு போன்ற உப தானியங்களையும் விநியோகம் செய்தால் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பற்றி பல நண்பர்கள் சொன்னுர்கள். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு தங்கள் வாழ்க்கையைக் கழிப்பதே கஷ்டம். இந்த நிலைமையில் அந்த ஏழை கைத்தறி நெசவுத்தொழிலாளர்களுக்கு வீடு கட்டக் கொடுத்த கடனை வட்டியுடன் வசூல் செய்வது நியாயமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இதற்கு முன் கடன் கொடுத்திருந்தாலும் அதற்கான வட்டியை தள்ளுபடி செய்து, இனிமேல் வீடு கட்ட வழங்குகின்ற கடனுக்கு வட்டியில்லாமல் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கு வீடு கட்ட அதிகத் தொகை ஆகாது. 5,000 ரூபாய்க்கு ஒரு வீடு கட்டினுல் போதும். இரண்டு வருடங்களுக்கு முன்னுல் சின்னுளம்பட்டியில் 3,000 ரூபாய்க்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறுர்கள். இப்போது 5,000 ரூபாய் செலவு செய்தால் போதும். அந்த வகையில் வட்டி இல்லாத கடன் கொடுத்து, நெசவாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேங்கி இருக்கக்கூடிய கைத்தறி துணியை விற்பனை செய்வதற்கு கைத்தறி வார விழா ஆரம்பிக்க இருக்கிறது. அதில் தள்ளுபடி 10 பைசா கொடுத்துத்தான் ஆகவேண்டும். வேறு வழியே இல்லை. அப்படி கொடுத்தால்தான் தேங்கி இருக்கும் துணியை விற்பனை செய்ய முடியும்.

குறிப்பாக, இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு பல்வேறு வகைகளில் பாடுபட்டு வருகிறது. இருந்தாலும் அதையும் அழிக்கக் கூடிய சக்தி இருக்கிறது. அந்தச் சக்திதான் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதியாகும் துணிகள். வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதியாகும் துணிகளைத் தடுத்து நிறுத்தினுல்தான் நெசவாளர்களுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பு கிடைக்கும். அது வரையில் நிரந்தரப் பாதுகாப்பு கிடையாது. இப்படி பசியும் பஞ்சமும் பட்டினியும் இருந்து கொண்டேதான் இருக்கும். நூல் விலை கூடினுலும் குறைந்தாலும் கஷ்டம். இங்கே அதிகமான துணி உற்பத்தி செய்திருப்பார்கள். வெளி மாநிலத் துணி இறக்குமதியினுல் இங்கே தேக்க நிலை ஏற்படும். அதனுல் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். இப்படியே போய்க் கொண்டிருந்தால் கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினை என்றைக்குமே தீராது. என்றைக்கு வெளி மாநிலங்களிலிருந்து வருகிற துணிகளைத் தடை செய்கிறுேமோ அன்றைக்குத்தான் இந்த நாட்டு கைத்தறி நெசவாளர்களின் வாழ்வு மலரும். எப்படி மது பண்டங்கள் இங்கே கொண்டு வருவதற்கு தடை செய்கிறுேமோ அதேமாதிரி, வேறு மாநிலங்களிலிருந்து கைத்தறித் துணியாக இருந்தாலும், மில் துணியாக இருந்தாலும் இந்த மாநிலத்திற்கு வரும்போது இந்த அரசின் அனுமதி பெற்றுத்தான் வரவேண்டுமென்று வைத்திருந்தால் ஓரளவு நிலைமை சீரடையும். இங்கே அதிக உற்பத்தி இருந்து, வேறு மாநிலத்திலிருந்து துணிகள் இங்கேவராமல் இருந்தால், அதிக உற்பத்தி இருந்தாலும் சரிக்கட்டிக் கொள்ளலாம். அந்த நிலைமை

என்றைக்கு ஏற்படுகிறதோ அன்றைக்குத்தான் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வு மலரும், நல்ல பாதுகாப்பு ஏற்படும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. சோ. அழகர்சாமி** : தலைவரவர்களே, முதலில் இந்தக் கைத்தறி சம்பந்தமான மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தமாக திரு. சந்தானம் கமிட்டி செய்த பல சிபாரிசுகளில் ஒரு முக்கியமான சிபாரிசு என்னவென்றால் உற்பத்தியாகும் துணியை எல்லாம் அரசாங்கமே வாங்க வேண்டுமென்றும், விநியோகம் செய்யும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் செய்யப்பட்டிருக்கிற சிபாரிசாகும். இந்த ஒரு சிபாரிசை மட்டுமாவது உடனடியாக அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற லட்சக்கணக்கான மக்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் காப்பாற்ற முடியும்.

இன்றைக்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1½ லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் நிரந்தரமாக தடங்கல் இல்லாமல் நடக்கக்கூடிய அளவுக்கு ஊதியம் சரியாகக் கொடுக்க வேண்டும். தேக்கமான ஜவுளிகளை உடனுக்குடன் கொள் முதல் செய்து, விற்பனை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கை ஓரளவேனும் முன்னேற்றமடையும்.

இன்னொன்று, எங்களுடைய வட்டாரத்தை எடுத்துக் கொண்டால் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 50,000 ரூபாய்தான் ஒரு சங்கம் கடன் வாங்க முடியும். ஆனால் அதைவிட அதிகமான அளவுக்கு துணி தேக்கமடைந்திருக்கின்றது. ஒவ்வொரு சங்கத்திலும் 60,000, 70,000 ரூபாய்க்கு மேல் துணி தேக்கமடைந்திருப்பதால் அதற்கு மேல் நூல் வாங்குவதற்கு வழியில்லை. கடனும் வாங்க முடியவில்லை. அதனால் அவர்கள் பட்டினி கிடக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. ஆகையால் தேங்கிக் கிடக்கின்ற துணிகளை எல்லாம் உடனடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சம்பந்தப்பட்ட மட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் பூராவும் எப்படிச் செயல்படுகின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் கூட்டுறவு என்று இல்லாமல் ஆளுங்கட்சிக்காரர்களுடைய டிப்பார்ட்மெண்டாக—கிளைகளாகத்தான் மாறியிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பூராவிலும் ஆளுங்கட்சிக்காரர்களைக் கொண்டுவந்து விட வேண்டும் என்பதற்காக பல விதமான விதிகளை—தவறான விதிகளை எல்லாம் புகுத்தியிருக்கிறார்கள். மாநில பாங்க், மாவட்ட பாங்குகளில் எல்லாம் தங்களுக்கு வேண்டியவர்களைப் போட வேண்டும் என்பதற்காக வேண்டாத ஸ்தாபனங்களை எல்லாம் ஏற்படுத்தி, ஆயிரக் கணக்கான மெம்பர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்து—மூவாயிரம் பேர்கள் மூன்று பேர்களைக் கூட தேர்ந்தெடுக்க உரிமை பெற்றிருக்க முடியாத நிலையை ஏற்படுத்தி என்ன என்ன செய்தார்கள்



என்பதை அறிவோம். லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டிகள் என்று ஏற்படுத்தி ஒவ்வொன்றுக்கும் மூன்று டைரக்டர்களை போட்டார்கள். அது போல சொஸைடிகளை பயனுள்ள வகையில் செயல்படவில்லை—அதைப் போல அக்ரோ என்ஜினியரிங் சர்வீஸ் சொஸைட்டிகள் என்று சொல்லி இரண்டு இரண்டு டைரக்டர்களைப் போட்டு—கூட்டுறவு சங்கங்களையே நாசம் செய்துவிட்டார்கள்—அவற்றை எல்லாம் ஆளுங்கட்சியின் சங்கங்களாக ஆக்கிவிட்டார்கள். இவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொன்று, கூட்டுறவு சங்கத்தில் புதிய விதிகளைப் போட்டு லாபத்தில் இருந்து 5 சத விகிதம் டெவலப்மெண்டு பண்டுக்காக என்றும், 2 சத விகிதம் எஜூகேஷன் பண்டுக்காக என்றும் எடுக்கச் சொல்கிறார்கள். இந்த இரண்டு பண்டுமே வேண்டாம். இதை அறவே நீக்க வேண்டும். அதோடு சங்கத்திற்கு அரசாங்கம் டைரக்டர்களை நியமனம் செய்கிறார்கள். சர்க்கார் பணம் மூலதனமாகப் போடப்படுகிறது என்றால் டிபார்ட்மெண்டு செக்ரடரியே அந்தப் பணம் முறையாக நிர்வகிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணித்துக் கொள்ள முடியும். அதைவிட்டு இப்படி எல்லாம் நியமனம் செய்வதன் மூலம் சங்க நிர்வாகச் செலவுகள் அதிகமாக ஆகின்றன. 25 பேர், 30 பேர் என்று போட்டு ஏகப்பட்ட செலவுகள்தான் ஆகின்றன.

சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடனுக்கு நியாயமான வட்டியாவது வாங்கப்படுகிறதா என்றால் இல்லை. அநியாய வட்டி வாங்குகிறார்கள். 5½ சதவிகிதத்திற்கு மேல் நாம் வட்டி வாங்கக் கூடாது என்று சொல்லுகிறோம். கூட்டுறவு சங்கங்களே விவசாயிகளிடம் கொடுக்கிற பணத்திற்கு 12 சத விகிதம் வட்டி வாங்குகிறார்கள். காரணம், மேலே இருந்து கீழே வருவதற்குள் ஏகப்பட்ட சங்கங்கள்—அடுக்கடுக்காக பல படிகளைத் தாண்டி கீழே வருவதற்குள் 12 சத விகிதம் வட்டிக்கு வந்து விடுகிறது. இன்னும் அடுத்தபடியாக அபராத வட்டி என்று வாங்குகிறார்கள். அப்புறம் எதற்கு இந்தச் சங்கங்கள் ? இவை எல்லாவற்றையுமே கலைத்து விட்டு விவசாயிகளை லேவாதேவிக்காரர்கள், மார்வாடிகளிடமே விட்டு விடலாம். சர்க்காரே அபராத வட்டி வாங்குவதில் நியாயமில்லை. குறித்த தவணையில் செலுத்தவில்லை என்று கூட்டுறவுச் சங்கங்கள் வாங்குகிற அபராத வட்டியை அறவே நீக்கியாக வேண்டும். ரிசர்வ் பாங்கிடம் இருந்து வாங்குகிற பணத்திற்கு குறைந்த மார்ஜின் லாபத்தில் வட்டியை வைத்து இந்தப் பணத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிவில் சப்ளை சம்பந்தமாக பல விவரங்களோடு ஒரு அழகான புத்தகத்தை அச்சடித்துக்கொடுத்திருக்கிறார்கள். நமது உணவு அமைச்சர் அவர்கள் அதைத் தயாரிப்பதில் தம் திறமையைக் காட்டியிருக்கிறார்கள், ஆனால் கடைசியாகச் சொல்லுகிறபோது போகாத ஊருக்கு வழி காட்டுவதைப் போல சொல்லிவிட்டார்கள். இன்றுள்ள நிலைமையைச் சொல்லுகிற போது—உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு நன்மை பயக்காத முறையாக அமைந்துள்ளது. வாங்கி உண்ணும் பொது மக்களுக்கும் பயன் கிடைப்பதாக இல்லை. இடையில் உள்ளவர்கள் கொள்ளை லாபம் அடிப்பதற்குத்தான் இன்றுள்ள முறை பயன்படுகிறது என்பதை அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். லாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல்

ரூ. 14 க்கு நெல்லை வாங்கி கிலோ ரூ. 1-80 க்கு அரிசியை அரசு விற்கிறது என்று சொல்லியுள்ளார்கள். எங்கே ரூ. 1-80 க்கு விற்கிறார்கள்? ரூ 2-க்கு விற்கிறார்கள். சொல்லுகிறபோது அழகாகச் சொல்லி விடலாம். நல்ல அனுபவம் பெற்ற வியாபாரிகளிடம் கேட்டால் சொல்வார்கள் இன்றைக்கு மக்களுக்கு என்ன விலையில் விற்கிறோமோ அதே விலைக்கு விற்றாலே—இன்னும் முப்பது ரூபாயை அதிகமாக விவசாயிகளிடம் இருந்து வாங்கும்போது கொடுக்கமுடியும். முப்பது ரூபாயை நெல் விலையில் கூட்டி விவசாயிகளுக்கு கொடுத்தாலும்கூட இன்றைக்கு நாம் என்ன விலைக்கு மக்களுக்கு கொடுக்கிறோமோ அதேவிலைக்கு அரிசியைக் கொடுக்க முடியும் நஷ்டம் இல்லாமல் என்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன ? வா வாங்குகிற விலை—விற்கிற விலை இரண்டுக்கும் 40 சத விகிதம், 50 சதவிகிதம் இடைவெளியா இருக்க வேண்டும்? ஹல்லிங் ஏஜெண்டுகள் கொள்ளை அடிக்கிறார்கள். ப்ரோகுயூர் மெண்டு ஏஜெண்டுகள் கொள்ளை அடிக்கிறார்கள். இது எல்லாம் நிர்வாகத்தில் உள்ளவர்களுக்குத் தெரியாமலா இருக்கின்றன.

தஞ்சை ஜில்லாவில் கொள் முதல் எப்படி நடக்கிறது என்பதை நானே நேரில் பார்த்தேன்—அவசரப்பட்டுக்கொண்டு தானே நெல்லை முன்னால் கொண்டு வந்து கொடுக்கிற சிறு விவசாயிகளுக்கு எல்லாம் ரசீதே போட்டுக் கொடுக்காது—நெல்லை வாங்கிக் கொட்டிக் கொள்வது—பெரிய நிலக்காரர்கள் அளக்க வேண்டிய நெல்லுக்கு இந்த நெல்லை அளந்து ரசீது போட்டு கொடுத்துவிட்டு மூட்டைக்கு பத்து ரூபாய் வாங்கிக்கொள்வது அந்தப் பெரிய நிலக்காரர்கள் தம்மிடம் உள்ள நெல்லை கொள்ளை விலைக்கு லாரிகளில் கடத்துவது இதுதான் நடக்கின்றது. ஊழல் நிறைந்த அதி காரிகள் துணையோடு படி எட்டு, பத்துக்கு இவர்கள் விற்கிறார்கள்.

பொதுமக்கள் ஒத்துழைப்போடுதான் இதைச் சமாளிக்க வேண்டும் என்று அமைச்சர் சொல்லிவிடலாம். பொதுமக்களே இதுபோல் அதிக விலைக்கு விற்பதை வாங்காது எதிர்த்து நிற்கக்கூடிய அளவுக்கு ஒற்று மையாக இருந்தால் அரசாங்கமே தேவையில்லாது போய்விடும். அரசாங் கம் என்று எதற்கு இருக்கிறது ? உணவு தானிய வியாபாரம் முழுவதை யும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும், எந்தத் தனியார் கையிலும் இருக்கக்கூடாது என்பதை நாங்கள் ஆரம்ப முதலே வற்புறுத்தி வருகி றோம். அரசாங்கமே உணவு தானிய மொத்த வியாபாரத்தை எடுத்துக் கொண்டு அங்கங்கே மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். பார்டர் ஏரியாக் களில் இருக்கிற சிற்றூர்களில் முழு ரேஷனையும் போடுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கி றார்கள். சரி, பாக்கி என்ன ஆவது?

இது போன்ற ஒரு தவறான உணவுக்கொள்கையை—அது தவறு என்று உணர்ந்தும் வைத்துக்கொண்டிருந்தால் எதிர்காலத்தில் என்ன ஆவது? நாம் நாற்பது லட்சம் டன் அரிசி உற்பத்தியாகும் என்று நினைத்தோம். 17 லட்சம் டன் தான் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது, 14லட்சம் டன் சிறு தானியங்கள் உற்பத்தியாகும் என்று நினைத்த இடத்தில் 6 லட் சம் டன்தான் கிடைக்கும் என்று மதிப்பிடுகிறபோது—நெல்—சிறுதானிய விளைச்சல் பாதிக்குப் பாதி குறைந்துவிடுகிறது. நம்முடைய தேவையோடு இதை ஒப்பிடுகிறபோது நமக்கு 20 லட்சம் டன் உணவு தானியம் தேவைப்





படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறபோது நாம் இந்த உணவுக் கொள்கையில் சரியான ஒரு முடிவை எடுக்கவில்லை என்றால் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியதாகிவிடும். இப்போதே முகவை மாவட்டத்தில் பலர் பட்டினியால் செத்து விட்டார்கள். நெல்லை மாவட்டத்திலும் பட்டினிச் சாவுகள் ஏற்படும் ஆபத்து உருவாகிக்கொண்டி ருக்கிறது. நாமோ இது வரை மொத்த உற்பத்தியில் 1½ லட்சத்தைக் கொள் முதல் செய்துவிட்டு, பாக்கியை வியாபாரிகள் இஷ்டம் போல் விற்றுக் கொள்ள அனுமதித்து தந்துவிட்டோம். இது சம்பந்தமாக ஒரு கறாரான உணவுக் கொள்கையை வகுத்துக்கொள்ள நாம் தயாராய் இல்லை. இடைத்தட்டில் இருக்கிறவர்கள் கொள்ளை அடிப்பதற்கு அரசு இதுவரை பாதுகாப்பாகவே இருந்து வந்திருக்கிறது. இடைத்தட்டில் இருப்பதற்கு தங்களுடைய ஆட்களை அனுமதித்துவிட்டு—இன்றைக்கு அவர்களைப் பகைத் துக்கொள்ளவும் அரசு தயாராய் இல்லை. அவர்களுடைய எதிர்ப்பை எல்லாம் முறியடித்து விட்டு மொத்த வியாபாரம் முழுவதையுமே அரசாங் கம் ஏற்றுக்கொண்டால்தான் விவசாயிகளுக்கும் நாம் ஏதாவது செய்ய முடியும். வாங்கி உண்பவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக ஆங்காங்கே விநியோகம் செய்யமுடியும். இந்த மாதிரி காரியத்தைச் செய்ய அரசாங்கம் தயாராய் இல்லை. மொத்த உற்பத்தி 50 சத விகிதம் குறைந்து விட்டது என்று சொல்லிவிட்டு—நமக்கு 20 லட்சம் டன் பற்றாக் குறை என்பதைச்சொல்லிவிட்டு இப்படியே இதைவிட்டு விட்டால் இப்போதே படி ஆறு ரூபாய் ஏழு ரூபாய் என்று விற்கிறது. இது அறுவடை சமயம்— அறுவடை முடிந்து இரண்டு மூன்று மாதம் ஆகிவிட்டால் நிலைமை என்ன ஆவது ?

உணவு சம்பந்தப்பட்ட மட்டில் எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் ஆரம்ப முதலே சொல்லி வருகிறோம். அரசாங்கமே மொத்த வியாபாரத்தை நேரிடையாகத் தம் கையில் எடுத்துக்கொள்ள வேண்டும். விநியோகத்திற்குச் சரியானபடி மக்கள் கமிட்டி அடிப்படையில்— கூட்டுறவுச் சங்கம் மூலம் செய்ய வேண்டும், கல்லல் என்ற ஊரில் கூட்டுறவு ஸ்டோர் இருக்கிறது. அங்கே உணவு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. அது கம்யூனிஸ்ட்கள் வசம் இருக்கிறது என்பதால் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு சங்கம் மூலம் அங்கே உணவு தானியம் சப்ளை செய்வ தில்லை. இப்படி எதையும் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது சரியல்ல. ஆளும் கட்சியில் உள்ளவர்களை—இடைத்தட்டில் உள்ளவர்களைப் பகைத்துக் கொள் வதா என்று அஞ்சி இந்தப் பிரச்சினையை சமாளிக்க முடியாது. வேண்டு மென்றால் அங்கங்கே சர்வ கட்சி கமிட்டி போடுங்கள். 46-லே உணவு நெருக்கடி இருந்தது. உணவுக் கமிட்டிகள் மூலம் சமாளிக்கப்பட்டது. நீங்கள் அதற்குத் தயாராக இல்லை. நீங்கள் உங்கள் கட்சியைப் பார்த்துக் கொண்டு, வேறு கொள்கைகளுக்கோ, அல்லது கூட்டுறவு சங்கங்களுக்கோ அல்லது சர்வ கட்சி கமிட்டி போடவோ தயாராக இல்லை. அதுதான் உணவுப் பிரச்னையிருப்பதற்குக் காரணம். ஏற்கெனவே ரூ. 8, ரூ. 10-க்கு வந்தாகிவிட்டது படி அரிசியின் விலை. இனி ரூ. 20-க்குப் போகக்கூடிய ஆபத்து இருக்கிறது. நீங்கள் சர்வ கட்சிக் குழுவை வைத்து விநியோகம் கொள் முதல் இவற்றைக் கண்காணிக்க வேண்டாமா? கொடுக்கிற அரிசி, கொடுக்கிற சீனி, கொடுக்கிற மண்ணெண்ணெய் இவைகளைச் சரியான அமைப்புக்களைக் கொண்டு, சரியான கண்காணிப்புக்கள் வைத்து, சர்வ கட்சிக் குழு அமைத்து; அந்தந்த கிராமத்திலேயிருக்கிற கூட்டுறவுப் பண்டக

சங்கங்கள் மூலம் விநியோக நடவடிக்கையைத் துரிதமான நடவடிக்கையாக எடுக்க வேண்டும். இல்லையென்றால் சென்ற ஆண்டை விட பயங்கரமான நிலை ஏற்படும். அதைச் சமாளிக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கல்லல் கூட்டுறவு சங்கத்தைப் பற்றி சொன்னார்கள். ஏற்கெனவே மனு கொடுத்தார்கள். அதைப்பற்றி விளக்கம் சொன்னேன். கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரிடத்திலே அதைப்பற்றி சொன்னேன். இராமநாதபுரத்திலே கம்யூனிஸ்ட் கட்சி புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்வது நல்லதல்ல. அங்கு நல்ல முறையில்தானிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். கல்லலில் திராவிடமுன்னேற்றக் கழகத்திற்கும் யாருக்கும் சண்டையில்லை. அது அவர்களுக்கே தெரியும். வேறு ஒரு கட்சிக்குச் சம்பந்தமிருக்கிறது. இருந்தாலும் விவரம் சொல்ல விரும்பவில்லை. விசாரணையிலே கண்டு பிடிக்கப்பட்டிருப்பது மக்களுக்கு விநியோகிக்கப்படாத கார்டுகளுக்கு கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை வகித்த சங்கத்திலே அரிசி வழங்கப்பட்டிருப்பதாக ரெக்கார்டு செய்யப்பட்டிருக்கிறது. இது ஒன்று. இரண்டு விஷயத்தைப் பற்றி மட்டும் நான் சொல்கிறேன். மற்றொன்று, மக்களுக்கு வழங்கப்பட்ட கார்டுகளுக்கு அவர்கள் அரிசி வழங்கவில்லை. ஆனால், அந்தக் கார்டுகளின் பேரில் அரிசி வழங்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. கார்டு வைத்துள்ள மக்களுக்கு அரிசி வழங்காமல் இருக்கும்போது, அவர்களுக்கு அரிசி வழங்கியதாக ரெக்கார்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலிருக்கிற சங்கங்கள் மாவட்டங்களிலே நல்ல முறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், அங்கே பல கட்சித் தகராறுகள் இருக்கிற காரணத்தாலே இந்த நிலை ஏற்பட்டு, இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது ஒரு கூட்டுறவு சங்கத்துக்குத்தான். ஆகவே எல்லாக் கட்சியினரும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்து, முடிவு செய்வார்களானால் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சொன்னேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தவறுகள் இருப்பதாகச் சொன்னார்கள். நான் விசாரித்தேன். அங்கே மீதியிருக்கிற அரிசியை—திராவிட முன்னேற்றக் கழகம், மற்ற கட்சிகள், கம்யூனிஸ்ட் கட்சிகள் எல்லோரும் இருக்கிறார்கள்—அவர்கள் கார்டு இல்லாதவர்களுக்கு, ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறார்களே தவிர, ஒரு காசு கூட கூட்டிவைத்து விற்கவில்லை. அந்த மாதிரி சிறு காரியங்களை வைத்து மாற்றுவது என்று சொன்னால், தமிழ் நாட்டிலே எந்த விதமான சங்கமும்,பாங்கும் செயல்பட முடியாது. இது சிறு விஷயம். அங்கே பண்டகச் சாலை சரியாக நடக்கிறது. ஊர் மக்களே சொல்கிறார்கள். அதையெல்லாம் மீறி யாரோ ஒருவர், இரண்டு பேர் சொல்கிறார்கள் என்பதற்காக, சிறு காரணங்களை வைத்து இவ்வாறு செய்யப்படுகிறது. அமைச்சரே காரணங்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்றால், எந்தக் காரணத்தையும் கண்டுபிடிக்கலாம்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> இது சிறு காரணம் அல்ல. மக்களுக்குக் கொடுக்கப்படாத கார்டுகளுக்கு வழங்குவோம்; தவறாக வழங்குவோம் என்று கூட்டுறவு சங்கம் சொல்வது சிறிய காரணம் அல்ல.



<u>*திரு. எஸ். நடராசன் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே தாக்கல் செய்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். பொதுவாக, எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் உணவுப் பஞ்சத்தைக் காரணமாகக் காட்டி, இந்த அரசு உணவுத் துறையிலே சரியாகச் செயல்படவில்லையென்று குறிப்பிட்டார்கள். கடுமையான வறட்சிக்குப் பிறகும் நல்ல விளைச்சலில்லாது, நம் வாழ்நாளிலேயே கண்டறியாத பஞ்சத்திற்குப் பிறகும் இந்தத் தமிழ்நாட்டிலே ஓரளவுக்கு உணவு வழங்கப்படுகிறது, உணவு இல்லையென்ற நிலையில்லாமல்—விலை அதிகமாக இருந்தாலும்—சரியாகப் பங்கிடப்படுகிறது என்பதைப் பார்க்கும் போது இந்த அரசு உணவுத் துறையிலே மிகக் கவனத்தோடு பணியாற்றுகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இவ்வளவு பஞ்சம் வராத மாநிலங்களிலே கூட, உணவு பஞ்சம் வந்த நேரத்திலே, திங்கட்கிழமை* சாப்பிடக் கூடாது, சனிக்கிழமை அரிசி உண்ணக் கூடாது என்று சொன்ன செய்தியெல்லாம் நாம் அறிவோம். அப்படியில்லாமல் எப்படியாவது சமாளிக்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு, சீராக செம்மையாக..............

<u>திரு. கே.டி. கே. தங்கமணி :</u> திங்கட்கிழமை சாப்பிடக் கூடாது என்று சொல்லி மகாத்மா காந்தி ஏதோ உண்ணாநோம்பு தொடங்கினாரே தவிர, அரசாங்கத்தின் சார்பில் வாரத்திற்கு ஒரு நாள் அரிசி உணவில்லாமல் மற்ற உணவு சாப்பிட வேண்டுமென்றுதான் உத்தரவு போட்டதாக எனக்கு ஞாபகம்.

<u>திரு. எஸ். நடராசன் :</u> அதைத்தான் நானும் குறிப்பிட்டேன். இன்றைக்கும் மராட்டிய மாநிலத்திலே சனிக்கிழமை உணவு உண்ணக் கூடாது என்ற நிலையிருக்கிறது. இன்றைக்குத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும் கூட்டுறவுத் துறையும் உணவு வழங்கீடு துறையும் சரியாகச் செயல்பட்டு வருவதை......

<u>திரு. ஏ. சுப்பிரமணியம் :</u> மராட்டியத்திலே வாரத்திலே ஒரு நாள் அரிசி உணவு உண்ணக் கூடாது என்றிருக்கிறது. இங்கே வாரத்திலே 7 நாளும் அரிசி உணவு உண்ணக் கூடாது என்று போடப்படாத சட்டம் வந்திருக்கிறதே, தமிழ்நாட்டிலே?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அவர் போட்ட சட்டத்தைப் பற்றித்தான் சொல்கிறார், போடாத சட்டத்தைப்பற்றி சொல்லவில்லை.

<u>திரு. எஸ். நடராசன் :</u> கூட்டுறவுத் துறையைப் பற்றி கூட்டுறவு பண்டக சாலைகளைப் பற்றி, கூட்டுறவு பண்டகசாலையிலே அங்கம் வகிக்கின்றவன் என்ற காரணத்தால், ஒருசில சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு மக்களுடைய தேவை நாளுக்கு நாள் அதிகமாக வளர்ந்து கொண்டே போகிறது. விலைவாசியும் ஓரளவு அதிகமாகிக் கொண்டே போகிறது. கூட்டுறவுப் பண்டக சாலைகளில் வாங்கவேண்டுமென்ற எண்ணம் மக்களுக்கு அதிகமாக வருகிற இந்த நேரத்தில் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளுக்கு, அவைகளுடைய வியாபாரத்திற்காக அளிக்கப்படு

கின்ற தொகை போதுமானதாக இல்லை: அந்தக் கூட்டுறவுப் பண்டக சாலைகளின் பங்குத் தொகை, ஈட்டுத் தொகை இரண்டையும் சேர்த்து அந்தத் தொகைக்கு 5 பங்கு அளவிற்குத் தொகை கொடுக்கப்படுகிறது. இந்த 5 பங்கு தொகையை வைத்துக்கொண்டு மக்கள் விரும்புகின்ற அத்தனைப் பண்டங்களையும் கூட்டுறவு பண்டக சாலைகளின் மூலமாக வழங்குவதென்றால், அந்தத் தொகை போதுமானதாக இல்லை. ஆகவே, 5 மடங்கு என்பதை மேலும் 5 மடங்கு போட்டு, 10 மடங்காகக் கொடுத்தால் நன்றாக, பொருள்களை வழங்கமுடியும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, கண்ட்ரோல் துணிகள்—ஏழை எளியவர்களுக்கு வழங்க வேண்டுமென்பதற்காக, நூற்பாலைகளுக்கு, துணி நெசவாளர்களுக்கு மத்திய அரசு கட்டளையிட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கண்ட்ரோல் துணிகளை வழங்கவேண்டுமென்று கட்டளையிட்டு, கூட்டுறவு சங்கங்களும் வழங்கி வருகின்றன. அப்படி வழங்கப்படுகின்ற துணி, டெக்ஸ்டைல் கமிஷனர் மூலமாக, தேசிய நுகர்வோர் கழகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்கள் தமிழ்நாடு நுகர்வோர் கழகத்திற்கு விநியோகத்திற்காக அனுப்புகிறார்கள். தமிழ்நாடு நுகர்வோர் கழகம் மாவட்டங்களிலே, வட்டங்களிலே உள்ள, சிறப்பங்காடிகளுக்கு அந்தத் துணிகளை மொத்த விற்பனையாக அனுப்புகிறது. அப்படி அனுப்புகிற நேரத்தில், அந்தத் துணிகள் மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற நிலையிலிருக்கிறதா என்றால், கொஞ்சங்கூட வாங்கத் தகுதியில்லாத துணிகளை அனுப்புகிறார்கள். அதிலும், குறிப்பாகத் தென்னாட்டு ஆலையிலே நெய்யப்படுகிற துணிகள் அனைத்தும், தமிழ்நாடு ஆலையிலே நெய்யப்படுகிற துணிகள் அனைத்தும், மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற அளவிலே இருக்கின்றன. ஆனால் வட நாட்டு ஆலைத் துணிகள் ஒரு முழம் அளவுக்கு மண்டையிலே முண்டாசு கட்டத்தான்—அதற்குப் பயன்படுத்துவார்களே, அப்படித்தானிருக்கிறதே தவிர, வாங்கி உடுத்தக் கூடிய அளவுக்குப் பயன்படுத்தக்கூடிய அளவிலே இல்லை. ஆகவே, பல இலட்சக்கணக்கான பேல் துணிகள் வாங்குவோர் இன்றி தேங்கிக் கிடக்கின்றன. அந்தத் துணிகள் தேங்கிக் கிடப்பதன் காரணமாக, கடந்த 7, 8 மாதங்களாக வட்டி நஷ்டமான நிலையில், முதலீடு முடங்கிக்கிடப்பதால் வேறுபொருள்களையும் வாங்கி விநியோகிக்க முடியாத நிலையிருக்கிறது. அதை மாற்றித் தரவேண்டும். அதை எப்படியாவது விற்பனை செய்ய பதிவாளர் மூலம் இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, கடத்தல் பொருள்களைச் சிறப்பு அங்காடிகள் மூலமாகவும், மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலமாகவும் முன்னால் விற்பதற்கு அனுமதித்தார்கள். கடத்தல் பொருள்களை வாங்க வேண்டும் அல்லது அதன்மீது மோகம் ஏற்படவேண்டுமென்ற எண்ணத்திற்கு நான் மாறுபட்டவன். இருந்தாலும் அப்படி விநியோகிக்கின்ற முறை கூட்டுறவு பண்டக சாலைகள் மூலமாக இருந்த காரணத்தால், அந்தப் பொருள்களை உறுப்பினர்களுக்குத்தான் வழங்கவேண்டுமென்று பதிவாளருடைய உத்தரவு இருந்த காரணத்தால், உறுப்பினர்கள் அதிகமாக அந்தப் பண்டக சாலையில் சேருவதற்கு வாய்ப்பிருந்தது.



இன்றைக்கு சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற நகரங்களுக்கு மட்டும் அந்தத் துணிகள் விநியோகிக்கப் படவேண்டுமென்று உத்திரவு வந்திருப்பதன் காரணமாக அதைத் தவிர்த்த மற்ற பண்டக சாலைகளிலும், சிறப்பங்காடிகளிலும் அந்தத் துணிகள், அந்தப் பொருள்கள் விற்கக்கூடிய நிலைமை இல்லாத நிலை இருப்பதால் அவைகளிலே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் பங்குத் தொகையைத் திரும்பக் கேட்டுப் பெற்றுக் கொண்டு அப்படிப்பட்ட பொருள்களும் துணிகளும் வழங்கப்படுகிற பண்டகசாலைகளில் உறுப்பினர்களாக மாற்றிக்கொள்வதற்கு முன் வந்திருக்கிறார்கள். இதனால் பல பண்டக சாலைகள் தங்கள் பங்குத் தொகையை இழக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(பிறபகல் 1–00)

மத்திய அரசின் ஆதரவு மூலமாக ஆரம்பிக்கப்படுகிற சிறப்பு அங்காடிகள், சிறு அங்காடிகள் இவற்றிற்கு மானியம் கடன், பங்குத் தொகை இவை கொடுத்து வந்தார்கள். இப்போது செய்யப்பட்டிருக்கிற மாற்றத்தின் மூல மாக மானியத்திலே குறைவு ஏற்பட்டிருக்கிறது, அதை முழுமையாக மீண்டும் ஆக்கித்தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக, கூட்டுறவு அங்காடிகள், கூட்டுறவு விற்பனை நிலையங்கள் செம்மையாக, சீராக நடைபெறுகிற நகரங்களிலேகூட, மாடல் ஷாப் என்று வைக்கிறார்கள். அப்படி வைத்திருப்பதன் காரணமாக—கூட்டுறவு நிறுவனங்கள் இல்லாத இடங்களிலே அவற்றை துவக்கலாம், அதை மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். குறிப்பாக, தஞ்சை நகரத்திலே 41 ஆயிரம் கார்டுகளுக்கு கூட்டுறவுப் பண்டகசாலை மூலமாக தேவையான பொருட்கள், சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் வழங்கப்படுகின்றன, இப்போது மாடல் ஷாப் என்று அங்கே வைக்கப்பட்டிருப்பதன் காரணத்தினால் அவர்களும் இதை வழங்குகிறார்கள். இதன் மூலம் கூட்டுறவுக்கும் சிவில் சப்ளைஸ் துறைக்கும் போட்டியா என்றுகூட மக்கள் எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் சிவில் சப்ளைஸ் நிறுவனத்திற்கு சீனி வந்தவுடனே அவர்கள் மக்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால் பண்டகசாலைகள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்த பிறகு அதற்கான பணம் கட்டி விநியோகிப்பதற்கு இரண்டு நாள் ஆகிறது. அவர்கள் உடனே தந்துவிடுகிறார்கள், இவர்கள் இரண்டு நாள் கழித்துத் தருகிறார்கள் என்பதால் மக்கள் கூட்டுறவு சங்கமே சரியாக இயங்கவில்லை என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். கூட்டுறவு நிறுவனங்கள் உள்ள இடங்களில் மாடல் ஷாப் வைக்காமல் குறைத்துக்கொண்டு விட்டால் மக்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் ஏற்படாது. கூட்டுறவுத் துறையிலே உள்ள கார்டுகளுக்கு வழங்கப்படுகிற சீனி மற்றப் பொருட்கள் எல்லாம் குறைத்து வழங்கப்படுகிறது, ஆனால் சிவில் சப்ளைஸ் இலாகா மூலமாகக் கொடுக்கப்படும்போது அதிகமாகக் கொடுக்கிறார்கள். அவர்கள் இரண்டு கிலோ கொடுக்கிறார்கள் என்றால் இவர்கள் ஒரு கிலோ தான் கொடுக்கிறார்கள், இதனால் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் ஏன் எங்களுக்குக் கொடுத்த சீனியை என்ன செய்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஏன் நீங்கள் மட்டும் குறைத்துக்கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். இதைத் தவிர்க்கவேண்டும்.

உணவு இலாகாவைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தின் சார்பாக நான் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு தங்களுக்கு சரியான விலை கிடைக்கவில்லையென்ற குறை இருக்கிறது என்பதை யாவரும் உணர்வோம். தனியார்கள் எல்லாம் சேர்ந்து தங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு அனுப்புவதற்காக ஒரு சங்கம் வைத்துக்கொண்டு அதன் மூலம் விற்க இருப்பதால் அதிலே வருகின்ற பலனை அவர்களே அனுபவிக்கிறார்கள் என்று கூறி தஞ்சை மாவட்டத்து மக்கள் அதைப் பெரிதும் வரவேற்பார்கள் என்று கூறி வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இங்கே விவாதிக்கப்படுகின்ற மானியக் கோரிக்கைகளின்பேரில் எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூறலாமென நினைக்கிறேன். கூட்டுறவு இயக்கமானது மேல் நாடுகளிலே பொதுமக்களால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம். ஆனால் நம் நாட்டில் அரசாங்கமே ஆரம்பித்துச் செயல்படுகிற இயக்கமாக இருந்துவருகிறது. ஆதலால் அரசாங்கத்தின் பிடியிலும் அரவணைப்பிலும் இருந்துகொண்டிருக்கின்ற இயக்கமாக இருக்கிறது. "ஈச் பார் ஆல், ஆல் பார் ஈச்" "எல்லோரும் ஒவ்வொருவருக்காவும் பாடுபடவேண்டும், ஒவ்வொருவரும் எல்லோருக்காவும் பாடுபடவேண்டுமென்ற" உயர்ந்த லட்சியத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்க வேண்டிய இயக்கமாகும். ஆனால் இன்று நடைமுறையில் "ஈச்" "ஆல்" "ஒவ்வொருவரும்" "எல்லோரும் என்ற" வார்த்தைகளைப் பார்த்தால் அது யாருக்குப் பொருத்தமாக இருக்கும் என்று பார்த்தால் பொது மக்களுக்கு அல்லது அங்கத்தினருக்குப் பொருந்துமா என்றால் நடைமுறையிலே பார்த்தால் தலைவர்கள் டைரக்டர்கள் நிர்வாகிகளுக்கே பொருந்துகிறது. தலைவர்களும் நிர்வாகிகளும் தொடர்ந்து அங்கம் வகிக்கிறார்கள். தேர்தல் ஒழுங்காக நடத்தப்படுவதில்லை, ஒழுங்காக தேர்தல் வாக்காளர் பட்டியல் பிரசுரிக்கப்படுவதில்லை, தேர்தலுக்கு ஒழுங்காக நோட்டீஸ் கொடுக்கப்படுவதில்லை, சில சங்கங்களைப் பொறுத்தவரையில் ஏதோ பேப்பர் தேர்தல் என்ற முறையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து இருந்த தலைவர்களே பதவி வகித்துக்கொண்டு இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்கு வேண்டியவர்களும்தான் நாமினேட் செய்யக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். அவர்கள் ஏதாவது தவறு செய்துவிட்டால் அரசு ஊழியர்களால் அவர்களைக் கண்காணிக்கக் கூடிய நிலைமை இல்லாமல் இருக்கிறது. கூட்டுறவு இயக்கமானது ஒரு புனிதமான இயக்கமாக செயல்படவேண்டுமானால், கூட்டுறவு இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாக செயல்படவேண்டுமானால், ஜனநாயக இயக்கமாக செயல்பட வேண்டுமானால், நியமனமுறையை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தலைவர்கள் நிர்வாகிகள் எல்லாம் இரண்டு தடவைகளுக்குமேல் நீடிக்கக்கூடாது என்ற வழிவகையை சட்டம் மூலம் நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும். ஒழுங்காக தேர்தல்கள் நடக்க வேண்டும். ஒழுங்காக தேர்தல் நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும். வோட்டர்ஸ் லிஸ்ட் சரியாக பப்ளிஷ் செய்யப்படவேண்டும். ஜெனரல் பாடி மூலமாக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தவேண்டும். கடன்பெறுவதற்கான வாய்ப்புக்கள் யாவருக்கும் சமமாக கிடைக்கும்படி செய்யவேண்டும்.



லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடி பெயரளவில்தான் இருக்கிறது. அது செயல்படவில்லை. பேப்பரில்தான் இருக்கிறது. இது சிறிய நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு உதவி செய்வது என்ற நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல சங்கங்கள் செயல்படவில்லை. அப்படி செயல்படவில்லையென்றால், அவ்வித லிப்ட் இர்ரிகேஷன் சங்கங்களை ரிஜிஸ்டரிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ட்ரல் பாங்கிலே டைரக்டர் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு கருவியாக அதைப்பயன்படுத்தப்படுகிறதே தவிர சரியாக பங்க்ஷன் ஆவதில்லை. அதை நீக்க வேண்டும்.

கோவாப்ரேடிவ் டிபார்ட்மெண்டில் சுதந்திரமான, ரிஜிஸ்திராருக்கு கட்டுப்படாத விதத்தில் ஆடிட் விங் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஓவர் டியு உள்ள சொஸைடிகளில் ஒழுங்காக இருக்கும் அங்கத்தினருக்கு லோன் கிடைக்கும் விதத்தில் அவைகள் மேல் உடன் நடவடிக்கை எடுத்து ஒழுங்காக இருக்கும் அங்கத்தினர்களுக்கு கடன் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். கூட்டுறவில் கூட்டுறவுத் துறை என்றும் கூட்டுறவு நிறுவனம் என்றும் இருக்கிறது. கூட்டுறவுத் துறையானது கூட்டுறவு நிறுவனத்தைக் கண்காணிக்க வேண்டும். ஆனால் ஆளும் கட்சியினர் தலைவர் நிர்வாகி ஆதலால், துறையினர் கண்காணிப்பு சரியாக நடைபெறவில்லை. அந்த நிலைமை மாற வேண்டும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கூட்டுறவுத் துறையானது உணவுப் பொருட்கள், உரம் ஆகியவற்றை விநியோகிப்பதற்கு சேவை செய்யக்கூடிய இயக்கமாகச் செயல்பட வேண்டும். கடன் வழங்குவதிலே இருக்கக்கூடிய காலதாமதம், உரம் வழங்குவதிலே இருக்கக்கூடிய காலதாமதம், தவறுகள் இல்லாமல் இருக்கச் செய்ய வேண்டும்.

உணவுத்துறையைப் பொறுத்தவரையில் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். தமிழ்நாடு உணவு உற்பத்தியில் உபரி மாநிலம், கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களை எடுத்துக் கொண்டால் அவை பற்றாக்குறை மாநிலங்கள். ஆனால் கேரளத்தில் இன்றிருக்கின்ற உணவு தானிய விலையை விட தமிழ்நாட்டிலே உயர்ந்து இருக்கிறது. அதற்கு ஒரு காரணம் வறட்சி காரணமாக இருக்கலாம். மழையின்மை காரணமாக இருக்கலாம். முக்கியமான காரணம் அரசாங்கத்தின் உணவுக் கொள்கைதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டே இந்த ஆண்டில் உணவு நெருக்கடி ஏற்படும் என்ற அறிகுறிகள் காணப்பட்டன. எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன. ஆனால் அதற்கு முன் நடவடிக்கையாக அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க அரசு தவறிவிட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். உணவை ஸ்டாக் செய்து வைத்துக் கொள்வதில் இந்த அரசு தவறிவிட்டது. அரிசிக்கு மத்திய அரசை நம்பியிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. வெளிமார்க்கட்டில் தானியம் கிடைக்காத நிலை இருக்கிறது. அதோடு வாங்கி உபயோகிக்கும் சக்தி மக்களுக்கு இல்லாமல் இருக்கிறது. விலை எட்டு ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த விலையேற்றத்திற்கு முக்கியக் காரணம் உற்பத்திக் குறைவு. அதோடு பதுக்கல், கடத்தல், கருஞ்சந்தை இவைகளைத் தடுக்க தீவிரமான நடவடிக்கைகளை எடுக்காததும் காரணங்களாகும். அரசு அடுத்தடுத்து பிறப்பித்த உத்தரவுகளும் இதற்குப் பெரும் காரணமாகும். மாவட்டத்திற்குவெளியே

போகலாம் என்று ஒரு உத்தரவு. மாவட்டத்திற்கு வெளியேகொண்டு போகக்கூடாது என்று ஒரு உத்தரவு. மாவட்டத்திற்கு வெளியே கொண்டு போகலாம் என்ற உடனே மாவட்டத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்டு, பிறகு மாநிலத்திற்கு வெளியே எடுததுச்செல்லப்பட்டு பிறகு தேசத்திற்கு வெளியேயும் கொண்டு போகப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். இன்றிருக்கும் நெருக்கடி நிலையைப் போக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த காலத்தில் அரிசிக்கு மிகவும் பஞ்சம் ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அரிசி விலையை எடுத்துக்கொண்டால் பல முரண்பாடான நிலைமை இருக்கிறது. விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு உற்பத்திச் செலவும் அதிகமாக இருப்பதால் விலை அதிகமாக வேண்டுமென்று கேட்கிறார்கள். அதே சந்தர்ப்பத்தில் வாங்குபவர்களின் விலையும் உயர்ந்திருக்கிறது. வாங்கக் கூடிய சக்தி இல்லை என்று சொல்லுகிறார்கள். இன்றைய தினம் மூன்றுவிதமான விலைகளை நாம் பார்க்கிறோம். லெவி விலை ஒன்றாக இருக்கிறது, ரேஷன் விலை ஒன்றாக இருக்கிறது, வெளி மார்க்கெட்டில் விலை ஒன்றாக இருக்கிறது. இவ்விதமாக ஒவ்வொன்றுக்கும் மிகவும் வித்தியாசமான நிலையை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் ஆகும் செலவு, டிரான்ஸ்போர்ட் சார்ஜ், இன்னும் மிஸலேனியஸ் செலவுகளையெல்லாம் ரேஷன் விலையோடு சேர்ப்பதால் அதிக விலையாக விற்கும் நிலையிருக்கிறது. எனவே, அரசு, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் ஆகும் செலவையும், மற்ற செலவுகளையும் சகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது உணவுப் பிரச்னையானதால் அதில் தாராளமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுக்கு மிகவும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். மிச்சமாக இருக்கின்ற நெல்லை அதிக அளவிற்கு அரசுக்கு விற்க விவசாயிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடியான சமயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க விவசாயிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது பொதுமக்களுக்கு செய்யும் தொண்டு. ஆனால், விவசாயி விளைச்சல் எல்லாம் லெவியாக லெவி விலையில் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் விவசாயத்தின் மூலம் அவர்களுக்கு வருமானத்திற்கு பதிலாக நஷ்டம்தான் ஏற்படும் என்ற நிலையிருக்கிறது. ஆகவே, இன்றைக்கிருக்கக்கூடிய லெவி விலையை உயர்த்துவது மிகவும் அவசியமாகும். லெவி அளவுபற்றிய முறையும் மாற்றியமைக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது.

உணவு தானியங்களின் விலையை உயர்த்தினால் எல்லாப் பொருட்களின் விலையும் உயர்ந்துவிடும் என்று கருத்து கூறப்படுகிறது. ஆனால் அதை நாம் முற்றிலும் ஏற்கக்கூடிய கருத்தாக இல்லை. ஏனென்றால், சர்க்கார் நிர்ணயிக்கின்ற விலைக்கும், மக்கள் மார்க்கெட்டில் கொடுக்கும் விலைக்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, மற்ற சாமான்களின் விலையெல்லாம் அரசு நிர்ணயிக்கும் விலையைவிட உயர்ந்துவிடும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் என்ன விலை கொடுக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் மற்றப் பொருட்களின் விலையும் உயர்வதாக இருக்கிறது. அதோடு ஏகதேசம் 10 சதவிகிதம் அல்லது





அதற்குக் குறைந்த அளவில்தான் மக்கள் ரேஷன் அளவில் பொருட்களை வாங்குகிறார்கள். அதோடு ரேஷன் வாங்குபவர்கள்கூட வெளிமார்க் கெட்டில் இந்தப் பொருட்களை வாங்கும் நிலையையும் நாம் காண்கின்றோம்.

லெவியைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்வது பொருத்தம் என்று கருதுகிறேன். அதிக அளவில் கொள்முதலுக்கு அரசிற்கு நெல் கொடுக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் சிறுசிறு விவசாயிகளையும் பாதிக்கும் முறையில் இந்த லெவி முறை இருக்கிறது. ஐம்பது சென்ட் நிலம் உள்ளவர்கள் கூட லெவி கொடுக்க வேண்டியநிலை. அவர்களுக்கு என்ன அவசியம் இருக்கிறது ? விவசாயிகளுக்கு விளைச்சல் சரியாக இருக்கிறதா என்று பார்க்காமல் அவர்களிடத்தில் அந்த லெவி நெல் அளக்கப்படுகிறது. விளைச்சலின் அளவைவிட லெவியின் அளவு அதிகமாக இருக்கும் நிலையும் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், விளைச்சலின் ஒரு பகுதியை வெளி மார்க்கெட்டில் விற்றுவொழிய அந்த விவசாயி உற்பத்தியை அதிகமளிக்க விவசாயத்தில் கவனம் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. சிலயிடங்களில், விவசாயி கள் லெவி அளந்தபிறகு, தங்களுக்குத் தேவைப்பட்டதும் நெல்லை, விவசாயக் கூலியாட்களுக்கு கொடுக்க வேண்டிய நெல்லை வெளிமார்க்கெட்டிலிருந்து வாங்கினால்தான் முடியும் என்ற நிலை மிக கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கொள்முதல் விலையை உயர்த்தி, அதன்மூலம் உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகும் விலை வீதத்திலே, உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் விதத் திலே விலைகளை நிர்ணயம் செய்ய வேண்டும். அதே நேரத்தில் வாங்கு பவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விதத்திலும் இருக்க வேண்டும். அவர்களுக்குக் கஷ்டமில்லாமல் இருக்கும் நிலைமை இருக்க வேண்டும்.

சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால், கொள் முதல் விநியோகம் ஆகியவற்றில் பல தவறான காரியங்கள் இருக்கின்றன. அவைகளைச் சரியாக கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் 25 சென்ட் நிலம் உள்ளவர்கள் அரிசி வாங்கக் கார்டுகள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, 50 சென்ட் நிலம்வரை உள்ளவர்களுக்குக் கார்டுகள் கொடுக்க உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரியில் ஒரே கடையில் அநேக கார்டுகள் இருப்பதால் வாங்குபவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதைப் பிரித்து பலருக்கும் சீராக விநியோகம் செய்யும் அளவிற்கு அந்தக் கடைகளுக்குப் பகிர்ந்து, பல கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அளவு குறைவு, தரக்குறைவு போன்றவைகள் இருக்கின்றன. அவைகளையும் சீர்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீனி இன்று வாங்குபவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. எனவே, சீனி வாங்குபவர்களுக்கு அது ஒழுங்காகக் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீதி நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால், பொதுமக்களுக்கு, கடைசி ஆயுதமாக இருக்கிறது. எனவே, திறமையான அனுபவம் உள்ளவர்களை நீதி நிர்வாகத்தில் பிரஸைடிங் ஆபீசர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கட்சிக் கண்ணோட்டத்தில் நியமனம் இருக்கக்கூடாது,

[திரு. என். டென்னிஸ்] [1975 மார்ச் 22

சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிக்கப்படுபவர்கள் என்றைக்கும் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுடைய நிலையை சீர் படுத்த வேண்டும்.

" Justice delayed is justice denied "

என்று சொல்வார்கள். ஆதலால் பெண்டன்சி இருக்கின்ற இடங்களில் அதிகமான அடிஷனல் கோர்ட் பெஞ்சுகளை தற்காலிகமாகவாவது நிய மித்து பெண்டன்சியைத் தீர்க்க வேண்டும்.

மதுரையில் ஹைகோர்ட் பெஞ்ச் ஏற்படுத்தினால் தென்மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு வசதியாக இருக்கும்.

" ஜூரிஸ்டிக்ஷன் ஆஃப் கோர்ட் " கமிட்டியால் அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கைக்குப் பிறகும் அதை " இம்ப்ளிமெண்ட் " செய்யாமல் இருக்கிறது. மிகவும் அவசியமான இடங்களுக்கு அந்தக் கோர்ட்டுகளை அறிக்கையின் அடிப்படையில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குழித்துறையில் ஒரு சப்-கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்றை குழித்துறையில் ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் கூறினார்கள். அதை உடனடியாக ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றிருக்கின்ற முதல் வகுப்பு கோர்ட்டு களில் வேலைப்பளு அதிகமாக இருக்கிறது.

விளவங்கோடு தாலுக்காவிலுள்ள எல்லாப் பகுதிகளையும் குழித்துறை யிலுள்ள கோர்ட்டுக்கு, சிவில் அண்ட் கிரிமினல் வழக்குகளைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக குழித்துறையில் டிஸ்ட்ரிக்ட் முன்சிஃப் கோர்ட்டில் இரண்டு பெஞ்சு இருந்தது. அதற்கான கட்டிடமும் இருந்தது. ஆனால் இன்று 4 பெஞ்சுகள் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட்டில் செயல்படுகின்றது. ஆனால் அதிகக் கட்டிடங்களை ஏற்படுத்தவில்லை. மிகமிக இடநெருக்கடி கஷ்டம். எனவே, அதற்கான அந்தக் கட்டிடங்களையும் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது பேரவையில் மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நீதி, நிர்வாகம், சிறைச்சாலை, கூட்டுறவு, கைத்தறி, பல்வகை முதலிய மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1975 மார்ச் 22] [திரு. காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி]

இன்றைய தினம் நீதித் துறையிலே நல்ல பல வளர்ச்சிகளைக் கண்டிருக்கும் இந்த அரசு இன்னும் பல இடங்களில் புதிய புதிய நீதி மன்றங்களை ஏற்படுத்த வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று தெரி வித்துக் கொள்கிறேன்.

சிவில் வழக்குகளை விசாரிப்பதில் ஆங்காங்கு அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. ஏறத்தாழ 3, 4, தாலூக்காக்களைக் கொண்ட நீதிமன்றங் கள் இருக்கும் காரணத்தால் வழக்குகள் காலதாமதம் ஆகும் நிலைமை ஏற்படுகிறது. அதை மனதில் எண்ணி இந்த அரசு அருப்புக்கோட்டை யில் ஒரு சப்கோர்ட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். மேற்கே உள்ள பகுதிகளில் சப்கோர்ட்டே இல்லாத நிலை இருக் கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்கே இருக்கும் பகுதிகளுக்கு இரண்டு நீதி மன்றங்கள் இருக்கின்றன. ஆகவே, முதுகளத்தூர், அருப் புக்கோட்டை, சாத்தூர் வட்டங்களை இணைத்து அருப்புக்கோட்டையில் சப் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதுகளத்தூரில் அதிகமான வழக்குகள் வருகின்றன. அங்கிருந்து இராமநாதபுரம் எஸ். டி.எம். கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் பொதுமக்களுக்குச் செலவும், காலதாமதமும் ஆகி றது. ஆகவே, முதுகளத்தூரில் எஸ்.டி.எம். கோர்ட், டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் ஏற்படுத்தித் தரவேண்டும்.

கமுதி பெரிய துணைத் தாலூகாவாகச் செயல்பட்டு வருகிறது. அங்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசாங்க விதிமுறைகள் இடம் கொடுக்காத நிலைமை இருக்குமானால் முதுகளத் தூரில் நெருக்கடியில் முகாம் கோர்ட்டாக நடத்தப்படுவதை சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தேங்கிக் கிடக்கும் நிலைமை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கூறியது போல் மதுரையில் ஒரு உயர்நீதிமன்றப் பிரிவை, ஒரு பெஞ்சை ஏற்படுத்த மத்திய அரசோடு தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆங்காங்குள்ள அசிஸ்டண்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்களை அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் வாழ்க்கைக்கேற்றவாறு சற்றுத் திறமையானவர் களாக மாறுதல் செய்ய வேண்டும். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சட்டத்தை நல்ல முறையில் தெரிந்தவர்கள். கிரிமினல் வழக்குகள் அதிக மாக வருகிற பகுதிகளுக்குத் திறமையான ஏ.பி.பி.க்களை மாறுதல் செய்துபோட முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஏ.பி.பி. கிரேடு-1 என்று மாவட்டத்திற்கு ஒருவர் இருக்கிறார். முன் பெல்லாம் திறமையானவர்களை வைத்து முக்கியமான வழக்குகளில் வழக் காடச் செய்வார்கள். இப்போது ஏ.பி.பி. கிரேடு-1 அந்தந்த பகுதி களுக்குச் சென்று வழக்காடுகிறார்கள். முக்கியமான வழக்குகளில் வழக் காட திறமையான அசிஸ்டென்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர்களை அனுப்ப வேண்டும்.

[திரு. காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி] [1975 மார்ச் 22

மதுவிலக்குக் குற்றங்கள் ஆங்காங்கு அதிகமாக நடக்கின்றன. சில
சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் அரசாங்கம் இயற்றியிருக்கிற சட்டத்திற்கேற்றவாறு
தண்டனை வழங்காமல் இருப்பதால் மதுவிலக்குக் குற்றங்கள் வளர்ந்து
வருகின்றன. அரசு உயர்நீதி மன்றத்தோடு கலந்து பேசியாவது மது
விலக்குக் குற்றங்களுக்கு தகுந்த தண்டனை, கடுமையான தண்டனை
கொடுக்கச் செய்தால் மதுவிலக்குக் குற்றங்கள் குறைய வாய்ப்பு ஏற்படும்.

சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் சிறைக் கைதி
கள் பல்லாண்டு காலம் சிறையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
சிலபேர் 15 ஆண்டு காலமாகியும் விடுதலை பெற முடியாத நிலைமை
இருக்கிறது. இதற்காக அட்வைசரி போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த
போர்டின் அறிக்கை அங்கிருக்கும் போலீஸ் நிலையத்தின் சிபாரிசை ஒட்டி
விடுதலை செய்யக்கூடிய வாய்ப்பு இருக்குகிறது. இந்த மாதிரி நீண்ட
கால ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வது பற்றி போலீஸ்
ரிப்போர்ட்டைப் பார்க்காமல் அவர் இருந்த சிறைச்சாலையில் அவர்கள்
எப்படி நடந்து கொண்டார்கள், அங்கே ஒழுங்காக நடந்து கொண்டி
ருந்தால் அந்தச் சிறைச்சாலை அதிகாரிகளுடைய குறிப்பையொட்டி அவர்
களை விடுதலை செய்யலாம் என்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

சிறைச்சாலையில் அரசியல் கைதிகளுக்குத் தனி இடம் ஒதுக்க வேண்
டும். இதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்.
அரசியல் கைதிகளை மற்றக் கைதிகளோடு சேர்த்துப்போடும்போது சிலபல
நிலைமைகள் ஏற்படுகின்றன. ஒத்த நடைமுறை இல்லாத நிலைமை இருக்
கிறது. ஆகவே, சிறைச்சாலையில் அரசியல் கைதிகளுக்குத் தனி இடம்
ஒதுக்க வேண்டும்.

சிறையில் உணவு சற்று அதிகமாகக் கொடுக்கப்படவேண்டும். இப்
போது நல்ல உணவு கொடுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். சோளக்
கஞ்சி போடுகிற வழக்கம் இருந்தது. இப்போது எப்படி என்று தெரியாது.
சோளக் கஞ்சியை தினசரி சாப்பிட்டால் சோகை நோய் ஏற்படும். சோளக்
கஞ்சி கொடுப்பதை நிறுத்தி மாற்று உணவு கொடுக்க வேண்டும்.
கழக அரசு வருவதற்கு முன்பு வார்டர்களுக்கு நீளமான தொப்பி
இருந்தது. சிறையில் உணவுப் பற்றுக்குறையாக இருந்தாலும் வெளியே
இருந்து பிரியாணி போன்ற உணவுகளை எல்லாம் அவர்கள் வாங்கிக்
கொடுப்பார்கள். இப்போது வார்டர்கள் தொப்பியை மாற்றியமைத்துவிட்
டார்கள். இப்போது ஒரு பீடியைக் கூட வாங்க முடியாத நிலைமை
இருக்கிறது. சிறையில் நல்ல உணவு சற்று அதிகமாக வழங்க முயற்சி
எடுத்துக்கொள்ள வேண்டும்.

இராமநாதபுரத்தில் முதுகளத்தூர் பகுதியிலே திறந்தவெளி சிறைச்
சாலை அமைக்க நிலப்பரப்பு அதிகமாக இருக்கிறது. முதுகளத்தூர் சப்-
ஜெயிலில் நான்கு அறைகள்தான் இருக்கின்றன. அதிலே நூற்றுக்
கணக்கானவர்களை அடைத்து விடுகிறார்கள். இதனால் சுகாதாரக் கேடு
ஏற்பட்டு பல நோய்கள் ஏற்படக் காரணமாக இருக்கின்றது. இந்தச்
சிறையை விரிவாக்கி கூடங்களைக் கட்ட உடனடியாக ஏற்பாடு செய்ய
வேண்டும். அதோடு உடனுக்குடன் மத்திய சிறைக்கு அனுப்ப ஏற்பாடு
செய்யவேண்டும்.



1975 மார்ச் 22] [திரு. காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி]

சென்னை, கோவை, திருச்சி போன்ற வெளி மாவட்ட சிறைச்சாலை களுக்குக் கைதிகளை அனுப்புகிறார்கள். இராமநாதபுரம் மாவட்ட கைதிகளை இப்படி மற்ற மாவட்டச் சிறைச்சாலைகளுக்கு அனுப்புவதன் காரணமாக அந்தக் கைதிகளைச் சென்று பார்த்து வர அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு வெளியூர் சென்று வரக்கூடிய நிலைமை. இராமநாதபுரம் மாவட்டக் கைதிகளை மதுரை மத்திய சிறையில் மட்டுந்தான் வைக்க வேண்டும். அதற்கு நிரந்தர அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்குத் தனிச் சிறைச்சாலை வேலூரில் இருப்பதாகக் கேள்விப் படுகிறேன். மதுரையில் பெரிய சிறைச்சாலை இருக்கும் காரணத்தால் அங்கு பெண்களுக்கென்று தனியாக ஒரு சிறைச்சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைதிகள் விடுதலை பெற்று வெளியே வரும்போது எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். 15 ஆண்டு காலம் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் தொழில் செய்ய சக்தியற்றவர்களாக இருந்தால் எப்படி தொடர்ந்து வாழ்க்கையை அவர்கள் நடத்த முடியும். அவர்களுக்கு சிறையில் இருக்கும் காலத்தில் தொழிற் பயிற்சி அளித்து வெளியே வரும்போது தொழிற் செய்ய கடனும் கொடுத்து ஊக்குவிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பலவிதமான திட்டங்களை வகுத்து நிலவள வங்கிகளை எல்லாம் ஏற்படுத்தி விவசாய உற்பத்தி பெருக வழிவகைகளை செய்து வருகிறார்கள். வறட்சிப் பகுதிகளில் கூட்டுறவுக் கடனை ஒத்தி வைத்திருப்பது பாராட்டுக்குரியதாகும். ஒரு வேண்டுகோள். ஓராண்டுக் கால குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால், வட்டி வசூலை நிறுத்த முடியாது. மத்திய வங்கி அனுமதியளிக்க வில்லை என்று சொல்லுகிறார்கள். ஸ்தல மானியங்களுக்கு லோகல் செஸ் சார்ஜ் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வட்டியை ஓராண்டு காலம் கன்வர்ஷன் செய்து வட்டியை ஈடு செய்வது போல் மத்திய வங்கி வட்டி வசூலை நிறுத்தி வைக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் பத்து பதினைந்து ஒன்றாக சேர்ந்திருப்பதால் நடைமுறை நிர்வாகத்திற்கு மிகக் கஷ்டமாக இருக்கிறது. எங்கள் தொகுதியில் பல சொசைடிகளை ஃபைபர்கேட் செய்ய வேண்டும். நிலவள வங்கிகளில் இருந்து கடன் பெற "பேஸ் கண்டிஷன்"—தூரம் இடையூறாக இருக்கிறது. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இது பற்றி எடுத்துச் சொல்லி ரிலேக்சேஷன் தரவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. மத்திய அரசு மானியம் வரவில்லை என்ற நிலைமையில் தக்காவிக் கடன் கொடுத்து கிணறுகளை ஆழப்படுத்த நல்ல பல திட்டங்களை அரசு நிலவள வங்கிகள் மூலமாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசன வசதிகளை செய்ய ஆயிரம் ரூபாய் வழங்கியிருப்பதைப் பாராட்டுகிறேன்

ஆனால் அதே பம்ப் செட்டை வெளியில் இருக்கிற ஏஜண்டு மூலம் வாங்கினால், அதாவது கிர்லோஸ்கர், பி. எஸ். ஜி. இவைகளிடம் வாங்கினால் ஆயிரம் ரூபாய், ஐந்நூறு ரூபாய் குறைவாகக் கிடைக்கிறது. குறிப்பிட்ட பம்ப் செட்டை, அங்கீகரிக்கப்பட்ட பம்ப் செட்டை எந்தக் கம்பெனியில் வாங்கினாலும் மானியம் வழங்கப்படவேண்டும் என்று இதற்கான உத்திரவு வழங்கப்படவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல உணவுத் துறையில் எல்லாக் கிராமங்களுக்கும் குடும்பக் கார்டு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டாலும், ஒரு சில கிராமங்களுக்கு வழங்கப்பட்டு மற்ற சில கிராமங்களுக்கு வழங்கப்படாத நிலை இருக்கிறது. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, எல்லா கிராமங்களுக்கும் குடும்பக் கார்டு வழங்கப்படவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவுடன் முடிவுற்று, திங்கட்கிழமை 24—3—1975 அன்று காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## (5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

147. Notification issued in Roc. No. 188040/74-E4, Director of Rural Development, dated the 15th December 1974 in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Thiruvalam Panchayat, North Arcot district. (*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 [*Tamil Nadu Act XXXV of* 1958].

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 99. Policy Note on Demand No. 56—Miscellaneous Capital Outlay—(Craftsmen Training Schemes) (English).

@ 100. Speech by Hon. Thiru S. Madhavan, Minister for Food and Co-operation on the Food Demand (English).

@ 101. The Performance Budget on Handloom and Textiles, 1975-76.

---

* Cut motions circulated separately.

@ Despatched to members on 20th March 1975.



## இணைப்பு I

[6 ஆம் பக்கத்தில் 418 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(a)

1 Northwick Girls High School, Royapuram, Madras-13.
2 St. Theresa's Girls High School, Kasimode, Madras-13.
3 Corporation Girls High School, Aminjikarai.
4 Lady M. Ct. M. Girls High School, Madras-7.
5 Government Secondary School for Muslim Girls, George Town, Madras-1.
6 Monahan Girls High School, Royapettah.
7 The Childern's Garden High School, Madras-4.
8 Manilal M. Mehta Girls High School, Madras-3.
9 Ganapathy Iyer Girls High School, Madras-2.
10 Chintadripet Kalyanam Girls High School, Madras-2.
11 Sri Ramakrishna Math Vivekananda Centenary Girls High School, Madras-1.
12 Corporation High School for Girls, 200, Waltax Road, Madras-1.
13 K. T. C. T. Girls High School, 58, Narayana Mudali Street, Madras-1
14 Dr. R. S. M. Girls High School, Madras-1.
15 Madras Seva Sadan Girls High School, Chetput.
16 The Tarapore and Loganathan Girls High School, Madras-23.

---

17 The Moongibai Goenka Girls High School, Sowcarpet.
18 Lady Sivaswamy Ayyar Girls High School, Mylapore.
19 Anderson Girls High School, Madras-1.
20 N. K. Thirumalachariar National Girls High School, Triplicane.
21 Corporation Girls High School, Madras-7.
22 Sri Ramakrishna Mission Sarada Vidyalaya Girls High School, T. Nagar, Madras.
23 Corporation Girls High School, Perambur.
24 St. Raphael's Girls High School, Mylapore.
25 St. Anne's Girls High School, Broadway.
26 St. Antony's Girls High School, Madras-28.
27 St. Ebba's Girls High School, Mylapore.

28 Bentinck Girls High School, Madras-7.
29 Corporation Girls High School, Madras-8.
30 Vidyodaya Girls High School, T. Nagar.
31 Lourdes Girls High School, Perambur.
32 Corporation Girls High School, Nattupillai Koil Street, Madras-1,
33 Guntur Subbiah Pillai Theagarayanagar Girls High School, Madras-17.
34 The Rani Meyyammai Girls High School, Madras-28.
35 A. R. C. Girls High School, Muthialpet.
36 St. Joseph's Girls High School, Vepery.
37 Corporation Girls High School, Korukkupet.
38 Muruga Dhanuskodi Girls High School, Tondiarpet.
39 Presidency High School for Girls, Egmore.
40 G. G. Jain Girls High School, Madras-1
41 Corporation Girls High School, Nungambakkam.
42 Government Hobart Secondary and Training School, Royapettah.
43 Jamalia High School, Perambur.
44 Shrit Shuddhawaita Vaishnav High School, Madras-3.
45 Panathope Railway Colony Aided High School, Ayanavaram.
46 Sir Theagaraya College School, Madras-21.
47 St. Peter's High School, Royapuram.
48 Sir M. C. Muthiah Chettiar High School, Purasawalkam.
49 Dr. Guruswami Mudaliar T. T. V. High School, Madras-1.
50 Dharmamurthi Rao Bahadur Calvala Cunnan Chetty's High School, Perambur.
51 The Madras Progressive Union High School, Madras-1.
52 Don Bosco High School, Perambur.
53 The Hindu Theological High School, Madras-1.
54 I. C. F. High School, Madras-28.
55 Motilal Forma Santana Dharma High School, Madras-1.
56 St. Gabriel's High School, Broadway.
57 The Muthialpet High Sshool, Madras-1.
58 E. L. M. Fabricus High School, Madras-7.
59 Pachaippa's College School, Madras-1.
60 Railway Colony High School, Ayananavaram.



61. S. K. P. D. Boys High School, Madras-1.
62. Govindu Naicker's Secondary School, Madras-1.
63. K. C. Sankaralinga Nadar High School, Washermanpet.
64. The Hindu Union Committee High School, Choolai.
65. Government Muslim High School, George Town, Madras-1.
66. Sri Thiruvoteeswarar Free High School, Vepery.
67. Corporation High School, Madras-21.
68. Corporation High School, Thiruvothiyur High Road, Madras-81.
69. Corporation High School, Kosapet, Madras-12.
70. Muslim High School, Triplicane.
71. Kesari High School, Mylapore.
72. Corporation High School, West Mambalam.
73. Rani Meyyammai High School, Adyar.
74. Ramakrishna Mission Residential High School, Mylapore.
75. Anjuham High School, Madras-33.
76. The Egmore High School, Egmore.
77. M. C. N. High School, T. Nagar.
78. The Hindu High School, Triplicane.
79. Government Madrasa-I-Azam, Madras-2.
80. Corporation High School, Lloyds Road, Madras-14.
81. The Chintadripet High School, Chintadripet.
82. Government High School (Boys), West Mambalam.
83. Sri Ramakrishna Mission High School, T. Nagar.
84. Sri Ramakrishna Mission High School (South), T. Nagar.
85. Kesari High School, T. Nagar.
86. Wesley High School, Royapettah.
87. P. S. High School, Mylapore.
88. Corporation Boys High School, Nungambakkam.
89. Santhome High School, Mylapore, Madras-4.
90. Corporation High School, Alwarpet.
91. The Besant Thesophical High School, Adyar.
92. Avvai Home T. V. Ramamurthi Government High School, Madras-20.

[1975 மார்ச் 22

மக்களது உணவுப் பழக்கம் வெகு வேகமாக மாறி வருவது தெளிவாகின்றது. நாகரிக வளர்ச்சி பெருகிட மக்களின் உணவுப் பழக்கமும் விரைவில் மாறுகின்றது. அரிசி உண்பவர்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் பெரும் அளவுக்குப் பெருகி இருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். நமது உணவுப் பழக்கத்தில் அரிசியினுடைய அளவு பெரும் பகுதியாக அமைந்துள்ளது. மற்ற நாட்டு மக்களைப்போல பல்வகை உணவுப் பழக்கம் நம்மிடத்தில் பரவவில்லை. அதற்கேற்ற வசதி வாய்ப்பு ஏழ்மையின் காரணமாக மக்களிடத்தில் காணப்படவில்லை என்பதும் உண்மையாகும். பல்வகை உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து எளிதில் கிடைக்கச்செய்து உணவுப் பழக்கம் மாறச் செய்வது நமது கடமையாகும்.

மக்கள் உற்பத்தி பெருகிடும் வேகத்திற்கு ஒப்ப உணவு உற்பத்தி பெருகிடவில்லை என்பது சிந்திக்கத்தக்கதொன்றாகும். தேவையைக் கட்டுக்குள் கொண்டுவந்து உற்பத்தியைப் பெருக்கிடும் பொருளாதார அமைப்பு முறைதான் ஒரு நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்கு உகந்ததாகும். தமிழகத்தில் நிரந்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகக் குறைவு. சில குறிப்பிட்ட பகுதிகளில் தான் நீர்வளம் பெற்று நிலவளம் பெருக்கி உற்பத்தியைப் பெரும் அளவிற்கு பெருக்குகின்ற வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்தின் பெரும்பகுதி மானம் பார்த்த பூமியாக மழை நீரை நம்பி நிரந்தர பாசன வசதியற்ற நிலையில் அமைந்துள்ளது. பெரும் அளவிற்கு நெல் உற்பத்தியாகும் பகுதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன.

சிறிய நில அளவிற்குச் சொந்தமான விவசாயிகள்தான் ஏராளம் நமது நாட்டில். இந்தச் சிறிய விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாக உள்ளது. உற்பத்தியைப் பெருக்குகின்ற வாய்ப்பு வசதிகளும் குறைவு. இந்த நிலை தமிழகத்தில் வேளாண்மைத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இந்த விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இடர்ப்பாடுகளைத் தந்து வருகின்றது.

உணவுப் பொருட்களின் வணிகமுறை இடர்ப்பாடுகள் நிறைந்ததாக உள்ளது. உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு நன்மை பயக்காத முறையாக அமைந்துள்ளது. வாங்கி உண்ணும் பொது மக்களுக்கும் பயன் கிடைப்பதாக இல்லை. இடையில் பல்வேறு கட்டங்களில் லாபம் பங்கிடு செய்யப்பட்டு விலை ஏற்றத்திற்குத்தான் காரணமாக அமைந்துள்ளது. உழவர்களிடத்தில் கொள்முதல்



[1975 மார்ச் 22

செய்பவர்கள், மொத்த வணிகர்கள், நெல் அரைவையாளர்கள், சில்லரை வணிகர்கள் இவர்களை எல்லாம் தாண்டி வாங்கி உண்ணும் பொதுமக்களுக்கு வந்துசேரும்போது, விலையேற்றம் இயற்கையாக ஏற்படுகின்றது. இடையில் ஏற்படும் செலவுகளைக் குறைத்து, உழவர்களுக்கு அதிக விலை கிடைக்கச் செய்யும் புதிய திட்டம் உருவாக்கப்பட்டாலொழிய இந்த நிலை தொடரும். கோதுமை போன்ற தானியங்களைப்போல் அல்லாமல், நெல்லைப் பொறுத்த அளவுக்கு, உற்பத்தி ஸ்தானத்திலிருந்து விநியோகிக்கும் இடம் வரை பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. சுத்தப் படுத்தி காயவைத்து கெடாமல் பாதுகாத்து நெல்லை அவித்து அரைத்து அரிசியைச் சுத்தப்படுத்திப் பாதுகாத்து விநியோகம் செய்கின்ற வரையில் சிரமங்கள் ஏராளம். மாநிலத்தில் சில பகுதி களில்தான் அதிகம் உற்பத்தி செய்யப்படுவதால் மாநிலத்தில் பல வேறு பகுதிகளுக்கு எடுத்துச்செல்வதே ஒரு பெரும் பிரச்சினை யாக அமைந்துவிடுகிறது. இதற்கான செலவு முறை கூடுகின்றது. சுத்தப்படுத்தி, உலர்த்தி, அவித்து, அரைப்பது என்ற முறையால் நெல் அரைவை ஆலைகளின் மூலம் இடர்ப்பாடுகள் ஏராளமாக உருவாக்கப்படுகின்றன. அரிசி ஆலைகள் பலவகைப்பட்டன. நெல் வணிகம் செய்யும் ஆலைகள் பெரும் பிரச்சினையை உருவாக்கு கின்றன. அதுவும் பற்றாக்குறை சமயத்தில் சமூக விரோதச் செயல்களுக்கு அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது.

தமிழகத்தில் நமது தேவைக்கேற்ப நெல் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருந்தாலும், பக்கத்து மாநிலங்களின் பற்றாக்குறை நம்மைப் பெரும் அளவிற்குப் பாதிக்கின்றது. நிரந்தரமாகப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களுடைய உணவுப் பிரச்சினை தீர்க்கப் பட்டாலொழிய அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை நமது மாநிலத் தில் தொடர்ந்து சந்தித்தாக வேண்டும்.

அகில இந்திய உணவுக் கொள்கையின் அடிப்படையில் நாமும் பாதிக்கப்படுகின்றோம். அனைத்து மாநிலங்களிலும் உணவு உற் பத்தியைப் பெருக்கி, உற்பத்தி குறைந்தபோது வெளிநாடுகளி லிருந்து தேவையான உணவுப்பொருட்களை இறக்குமதி செய்து பற்றாக்குறையைப் போக்குகின்ற முயற்சிகளில் வெற்றி அடைந்தா லொழிய, அகில இந்தியாவில் ஏற்படும் உணவுப் பிரச்சினைகள் நமது மாநிலத்தையும் பாதிக்கத்தான் செய்யும். இந்தியாவின் வட பகுதிகளில் கோதுமைப் பற்றாக்குறை ஏற்பட்டவுடன் வெளி நாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்து நிறைவு

1975 மார்ச் 22]

செய்ய வேண்டுமென்ற மத்திய அரசினுடைய கொள்கை அரிசிப் பற்றாக்குறையைப் பொறுத்த அளவிற்குப் பின்பற்றப்படுவதில்லை. இதன் விளைவாக, அரிசி உற்பத்தியாகும் மாநிலங்களில் பற்றாக் குறை ஏற்படும்போது உணவுப் பிரச்சினைகள் பயங்கர நிலையை உருவாக்குகின்றன. அரிசி இறக்குமதி செய்யப்படும் என்ற முடிவை மத்திய அரசு எடுத்தாலொழிய அரிசிப் பற்றாக்குறையைப் போக்கிட முடியாது. அரிசி உண்பவர்கள் கோதுமை உண்பதற்குப் பழகிட வேண்டும் என்பதுதான் மத்திய அரசின் பதிலாக அமைந்துள்ளது. கோதுமை உண்பவர்களின் எண்ணிக்கை பெருகினால்தான் அகில இந்தியாவின் அரிசிப் பற்றாக் குறைப் பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என்பது மத்திய அரசினுடைய வாதமாக தொடர்ந்து அமைந்துள்ளது.

உணவு மண்டலங்களை உருவாக்குவதில் சர்ச்சை தொடர்ந்து இருந்து வருகிறது. ஒவ்வொரு மாநிலமும் ஒரு உணவு மண்டலமாக அமைவதுதான் சிறந்ததாகும். ஆனால் இந்தக் கொள்கையை உபரி மாநிலங்கள் ஆதரிக்கின்றன; பற்றாக்குறை மாநிலங்கள் எதிர்க்கின்றன. அகில இந்தியப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மத்திய அரசும் இதை எதிர்ப்பதாகவே தோன்றுகின்றது. மாநிலத்திற்கு மாநிலம் நடைபெறும் உணவு வணிகம், போக்குவரத்து இவைகளை மாநில அரசுகளே ஏற்று நடத்தினால்தான், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

உணவு வணிகத்தில் சுதந்திர வாணிபம் நடைபெற வேண்டும் என்பதும் முழுமையாகப் பொது விநியோகமுறை அமைந்திட வேண்டும் என்பதும் இரு வேறு துருவங்களாக வாதிடப்படு கின்றன. உணவு உற்பத்தி மிகுதியாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் எழாது. பற்றாக்குறை நிலை தொடருகின்ற நாட்டில் சுதந்திர வணிகம் என்பது பிரச்சினைகளைத்தான் உருவாக்கும். சுதந்திர உணவு வணிகம் என்ற பெயரால் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தை அனுமதிப்பது நமது நாட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். வணிகர்களுடைய சுதந்திரத்திற்காக மக்களிடையே உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தை உருவாக்குவது கூடாத ஒன்றாகும்.

உணவு வணிகம் முழுமையும் அரசுத்துறையே ஏற்று, கொள் முதல் செய்வதிலிருந்து விநியோகம் செய்வது வரை ஏற்றுக் [illegible] நடைமுறைச் சிக்கல்கள் பலவற்றை உருவாக்கு



1975 மார்ச் 22]

கின்றன. வேளாண்மைத் துறை முழுவதும் தனியாரிடத்தில் இருக்கும்போதும், அதுவும் பெருமளவிற்கு சிறிய விவசாயி களிடத்தில் இருக்கும்போதும், உணவுப் பொருட்களைக் கொள் முதல் செய்வதென்பது பெரும் பிரச்சினையாக எழுகின்றது; நெல் கொள்முதலிலிருந்து அரிசியாக ஆக்கி விற்பனை செய்யும் வரை பல கட்டங்களில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. கொள் முதல் நெல்லை அரைத்தல், பல்வேறு பகுதிகளுக்கு அரிசியை எடுத்துச் செல்லுதல், பொதுமக்களிடத்தில் விநியோகித்தல், அனைத்தையும் அரசே ஏற்பது என்பது செயல்முறைச் சிக்கல்களை உருவாக்குகின்றது.

இதுவரை உணவு வணிகததில் இந்தச் சிக்கல்களால் பல பிரச்சினைகள் எழுந்து வந்துள்ளன. அரசு அலுவலர்கள் நேரிடையாகக் கொள்முதல் செய்வதென்பது சிக்கலான ஒன்றாகும். இதற்காக கொள்முதல் ஏஜெண்டுகளை நியமிக்கிறார்கள். இந்த ஏஜெண்டுகளால் ஏற்படும் தொல்லைகள், பித்தலாட்டங்கள் ஏராளம். கொள்முதல் செய்யப்பட்ட நெல் அரைப்பதற்காக அரவை ஏஜெண்டுகளிடம், நெல் ஆலை அதிபர்களிடம் ஒப்படைக் கப்படுகிறது. நமது நெல்லை நெல் ஆலை அதிபர்களிடம் ஒப்படைத்துவிட்டு அரிசிக்காகத் தவிப்பது நடைமுறை ஆகிவிட்டது. அரவை ஆலைகளிடம் மாட்டிக்கொண்டு கெட்ட பெயர் எடுப்பதுதான் மிச்சமாகிறது. தரமுள்ள அரிசியாக, அளவு குறையாது அரிசி ஆலை அதிபர்களிடம் வாங்குவதென்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தக் கஷ்டங்களை எல்லாம் தாண்டி அரசு பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச்செல்லுவதற்கு லாரி உரிமையாளர்களையே நம்பி செயல்படுகிறது. அவர்கள் தரும் தொல்லைகள் அதிகம். இந்த அரிசியை மக்களுக்கு விநியோகிப்பதற்காக தனியார் துறையை நம்புவது மேலும் சிக்கல்களை உருவாக்குகிறது. அரசுத் துறையே மாநிலம் முழுவதும் அரிசி விற்பனைக்காக மட்டும் கடைகள் திறப்பது என்பது பெரும் நஷ்டத்தை உருவாக்கும். இப்படி கொள் முதலிலிருந்து விநியோகம் வரை பல தொல்லைகளைச் சந்திக் கின்றோம். இந்தத் தொல்லைகளின் விளைவாகத்தான் உணவுக் கொள்கையை நிரந்தரமாகத் திட்டமிட முடியாத அளவுக்கு ஒவ்வொரு உணவு அமைச்சரும் அல்லலுக்கு ஆட்படுகின்றார். பற்றாக்குறைக் காலத்தில் மட்டும் உணவு விநியோகத்தில் தீவிரமாக ஈடுபடுவதால் இந்தத் தொல்லைகள் பல மடங்கு

பெருகுகின்றன. தவறுகளும் பெருகி அவதூறுகளும் அள்ளி வீசப்படுகின்ற நிலை தான் ஏற்படுகின்றது. உற்பத்தியாளர், கொள்முதல் செய்பவர், அரவையாளர், லாரி சொந்தக்காரர்கள், வணிகம் செய்யும் அரசு அலுவலர்கள், வாங்கி உண்ணும் பெருமக்கள், இவர்கள் அனைவரின் வெறுப்பையும் எதிர்ப்பையும்தான் சந்திக்க நேரிடுகிறது.

மாநிலத்திற்குள் உணவுப் பொருட்களின் போக்குவரத்துக் கட்டுப்பாடு பிரச்சினைகளையும் குழப்பங்களையும் தோற்றுவிக்கும். உபரி, பற்றாக்குறை மாவட்ட எல்லைகளில் மக்களிடத்தில் கோப தாபங்களையும், வெறுப்பு உணர்ச்சிகளையும் விளைவிக்கும். தவறு செய்யும் அதிகாரிகளுக்கும், கடத்தல் செய்யும் வணிகர்களுக்கும் கொள்ளையடிப்பதற்கு வாய்ப்பை உருவாக்கும். விவசாயிகளுக்கு பெரும் தொல்லைகளை உருவாக்கும். சொந்த உபயோகத்திற்காக உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லுவதில் பொது மக்களுக்கு இடர்ப்பாடுகளை உருவாக்கும். மாநில எல்லைக்குள் போக்குவரத்து கட்டுப்பாடு இல்லாத முறை தான் நிரந்தரமான பயனைத் தரும். ஆனால் மாநில எல்லையோரப் பகுதிகளில் பல சிக்கல்கள் தோன்றும். குறிப்பாக பற்றாக்குறை மாநிலத்தின் எல்லையோரப் பகுதிகளில் கட்டுக்கடங்காத நிலை உருவாகும். இந்த நிலைமைகளுக்கு நிரந்தர பரிகாரம் கண்டாக வேண்டும். மாநில எல்லையோரப் பகுதிகள் முழுமையிலும் குறிப்பிட்ட தூரத்திற்குள் முழுமையான பொது விநியோக முறை கொண்டு வந்தாக வேண்டும். இந்தப் பகுதிகளில் மொத்த, சில்லரை வணிகம் முழுமையாக தனியாரிடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும். உணவுப் பொருட்களை இந்தப் பகுதிகளில் எடுத்துச் செல்வதற்கு தனியார் வாகனங்களுக்கு தடை போட வேண்டும். இந்தப் பகுதிகளில் அரிசி ஆலைகள் அனைத்தும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும். இந்த முறைகள் எல்லையோரப் பகுதிகளில் ..மல் நடத்தப்பட்டால் மாநிலத்தில் பிற பகுதிகளில் எந்தவித போக்குவரத்து கட்டுப்பாடும் தேவையில்லாத நிலை ஏற்படும்.

விலையேற்றம் அகில இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையில் ஏற்படுகின்றது. உற்பத்திக் குறைவு, தேவை மிகுதி, பணவீக்கம், நாம் பின்பற்றும் நிதிநிலைக் கொள்கைகள், இவைகளின் ஒட்டுமொத்தமான விளைவுதான் விலைவாசி ஏற்றம். உணவுப் பொருட்களின் விலையை மட்டும் கட்டுப்படுத்திவிட



முடியும் என்பது வெறும் கற்பனைதான், இன்றைய அமைப்பு முறையில் லாப வேட்டை நோக்கமுள்ள வணிகர்களுக்கும், தவறு செய்யும் அரசு அலுவலர்களுக்கும்தான் இந்தக் கட்டுப்பாட்டு முறைகள் அதிகமான அளவுக்குப் பயனளிக்கின்றன. உற்பத்திச் செலவின் அடிப்படையில் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் அடிப்படையில் நெல்லுக்கு விலை நிர்ணயிக்க வேண்டுமென்பது விவசாயிகளுடைய வாதமாகும். ஏழ்மை நிறைந்துள்ள இந்த நாட்டில் பொதுமக்களின் வாங்கும் சக்திக்கேற்ப, உணவுப் பொருட்களின் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பது ஏனைய பொதுமக்களின் வாதமாகும். இந்த இரண்டு நிலைகளையும் கணக்கில் எடுத்து முடிவு எடுப்பதென்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. கொள்முதல் விலையைக் கட்டுக்குள் கொண்டு வந்தாலொழிய, அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதென்பது முடியாத ஒன்றாகும். ஆனால், விவசாயிகளின் உற்பத்திச்செலவு கட்டுப்படுத்தப்பட்டு, விவசாயிகளுக்குத் தேவையான மற்ற பொருட்களுடைய விலையும் கட்டுப்படுத்தப்பட்டு, உற்பத்தியாளர்களின் வாழ்க்கைத்தரத்தை நிர்ணயித்தாலொழிய, கொள்முதல் விலையை நிர்ணயிப்பது இயலாத ஒன்றாகும். இந்தப் பிரச்சினைகள் ஒரு தொடர் கதையாகும். உடனடியான சில திட்டங்களை நாம் உருவாக்கி ஆகவேண்டும். பல ஆண்டுகளாகப் பின்பற்றிவரும் ஏஜெண்டுகள் மூலம் நெல் கொள்முதல் செய்வது, அரிசி ஆலை அதிபர்களிடத்தில் நெல்லை கொடுத்துவிட்டுத் தவிப்பது, நெல் அளவிற்கேற்ற அரிசி அளவைப் பெற முடியாது அல்லல்படுவது, அரிசியின் அளவை அதிகப்படுத்த தரம் கெட்ட அரிசியைத் தருகின்ற முறையை நீடிப்பது, ஏஜெண்டுகள் என்ற இடைத் தரகர்களிடத்தில் மாட்டிக்கொண்டு முழிப்பது, தவறு செய்யும் அதிகாரிகளுக்கு வாய்ப்பு அளிப்பது — இந்தக் கொள்கைகளை எல்லாம் மாற்றினாலொழிய, இந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடமுடியாது. கொள்முதலிடத்திலிருந்து அரிசி விநியோகிக்கும் இடம் வரை இடையிலுள்ள லாபப் பங்கீட்டு முறைகள் ஒழிக்கப்பட்டு இறுதிவரை கிடைக்கின்ற லாபம் உழவர்களுக்கே போய்ச்சேரும் முறை கொண்டுவரப்பட்டால்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரப் பரிகாரம் கிடைக்கும். நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் இலட்சக் கணக்கில் உள்ளார்கள்; வாங்கி உண்பவர்கள் கோடிக் கணக்கில் உள்ளார்கள். பொது மக்களுடைய நலனைக் காக்க அரிசி விலையைக் கட்டுக்குள் கொண்டு வந்துதான் ஆகவேண்டும். விவசாயிகளுடைய எதிர்ப்பைச்

சந்தித்துத்தான் ஆகவேண்டும். இதற்கேற்ற புதிய முறையை உருவாக்கிட முயலவேண்டும்.

நெல் அதிக உற்பத்தியுள்ள பகுதிகளில் அனைத்து விவசாயிகளும் சேர்ந்து கூட்டுறவு சங்கங்களை நிறுவிட வேண்டும். நெல் கொள்முதலிலிருந்து அரைத்து அரிசியாக்கி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் சென்று சில்லரை வணிகர்களிடம் விற்கும்வரை உழவர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பு ஏற்றிடவேண்டும். உற்பத்தி செய்த நெல்லின் ஒரு பகுதியை விற்கும் வசதியுள்ள அனைத்து விவசாயிகளும் இந்தச் சங்கத்தில் அங்கம் பெறவேண்டும். இந்தச் சங்கத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நெல், அரிசி மொத்த வணிகம் தனியாரிடத்திலிருந்து எடுக்கப்பட்டுவிட வேண்டும். இந்த சங்கம் அதிகாரிகள் நிறைந்த அமைப்பாக மாறிவிடாது, உற்பத்தியாளர்கள் சேர்ந்து நடத்தும் வியாபாரமுறை நோக்கமுள்ள ஒரு அமைப்பாகச் செயல்பட வேண்டும். இந்தச் சங்கம் கொள்முதல் செய்கின்ற அனைத்து நெல்லையும் அரைத்து அரிசி ஆக்குகின்ற அரிசி ஆலை வசதி இந்தச் சங்கத்திற்கே சொந்தமாக அமைந்திடவேண்டும். அரிசியை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் வசதி வாய்ப்பும் இந்தச் சங்கத்திற்குத் தரப்பட வேண்டும். கொள்முதல் ஏஜெண்டு, அரவை ஏஜெண்டு என்ற முறை ஒழிக்கப்பட வேண்டும். இந்த வணிக முறையில் இந்தச் சங்கத்திற்கு ஏற்படும் செலவுகளில் ஒரு பகுதியை அரசே ஏற்றிட வேண்டும். இந்தச் சங்கத்தின் கொள்கைகளை வகுத்திட, கொள்முதல், விநியோக விலையை நிர்ணயித்திட, நிறைவேற்றிட அரசின் பங்கும் முழுமையாக இருக்கவேண்டும். அரசும் உற்பத்தியாளர்களும் சேர்ந்து செயல்படும் இந்தப் புதிய முறை ஊக்குவிக்கப் பெறவேண்டும். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பொது மக்களிடம் நேரிடையாக விற்கும் விநியோக முறையில், சில்லரை வணிகத்தில் அதிகம் தலையிடக் கூடாது. விநியோக முறையில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை திட்டமிட்டுப் பெருக்கிட வேண்டும். கொள்முதலிலும், போக்குவரத்திலும், அரவை முறையிலும் உள்ள கமிஷன் ஏஜெண்டு முறை ஒழிக்கப்பட வேண்டும். மொத்த வணிகம் தனியார் கையில் அமைந்து பற்றாக்குறைக் காலத்தில் உணவுப் பொருட்களின் விலையேற்றம் ஏற்படும் நிலை தவிர்த்தாக வேண்டும். சந்தையில் ஏற்படும் விலை ஏற்றத் தாழ்வு முறையை உணவுப் பொருட்களைப் பொறுத்த அளவுக்கு அனுமதிக்க முடியாது. இந்தச் சந்தை ஏற்றத் தாழ்வைப் பயன்படுத்தி இலாபம் அடிக்கும் முறையும் தகர்க்கப்பட்டாக வேண்டும். பொதுமக்களுக்கு அரிசி விற்பனை செய்யும் எல்லைவரை ஏற்படும் இலாபம் உற்பத்தியாளர்களுக்கே சேர வேண்டும். அதிகாரிகளுடைய தொல்லை இல்லாமல், உற்பத்தியாளர்களே கொள்முதல் செய்யும் வாய்ப்பு ஏற்படுகிறது. இடைத் தரகர்கள் நீக்கப்படுகிறார்கள். அரிசி விலையைக் குறைக்க வேண்டுமானால், இந்த வணிக முறையில் ஏற்படும் செலவின் பெரும் பகுதியை அரசே ஏற்று விலையைக் குறைத்துவிட முடியும். இந்த முறையில் லாபத்தில் பெரும் பங்கு உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதோடு, இடையில் ஏற்படும் வணிக முறைச் செலவுகளைக் குறைக்க முடியும். பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் அரசினுடைய முழுமையான கட்டுப்பாடு கொண்டு வருவதற்கு இந்த முறை வாய்ப்பு அளிக்கும். ஆண்டுக்கு ஒரு கொள்கை, பற்றாக்குறைக் காலத்தில் பரபரப்பு என்ற நிலை மாற்றப்பட்டு, நிலையான நிரந்தரமான உணவுக் கொள்கையை அமல் நடத்துவதற்கு இந்த முறை வாய்ப்பு அளிக்கின்றது. இந்த முறை மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படுமானால், உற்பத்தியாளர்களுடைய பிரச்சினைகளும், வாங்கி உண்பவர்களுடைய பிரச்சினைகளும் நிலையாகத் தீர்க்கப்பட்டுவிட முடியும். பொதுமக்கள் நேரிடையாக விநியோகிக்கின்ற திட்டத்தை நுகர்வோர் சங்கங்கள் மூலம் நிறைவேற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.



## II. இன்றைய உணவு நிலைமை.

தமிழ்நாட்டில் பருவமழை தொடர்ந்து பொய்த்ததின் விளைவாக நெருக்கடியான உணவு நிலைமை ஏற்பட்டுள்ளதையும், அதைச் சமாளிக்கத் தமிழக அரசு, துணிவுடனும் உறுதியுடனும், துரிதமான நடவடிக்கைகளை எடுத்து வருவதையும், இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். சென்ற சில ஆண்டுகளாக உணவு உற்பத்தியைப் பெருக்க உருவான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு, குறிப்பிடத்தக்க வெற்றியையும் நாம் கண்டுள்ளோம். இச்சாதனையின் முழுப்பலனும் நமக்குக் கிட்டாத வண்ணம், இந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலைமை மாநிலத்தின் பல பகுதிகளிலும் பரவலாக ஏற்பட்டுள்ளது.

[1975 மார்ச் 22

இந்நிலையில் நாம் பின்பற்றவேண்டிய உடனடி உணவுக் கொள்கையின் முக்கியமான அம்சங்களை வலியுறுத்த விரும்புகிறேன். இயற்கையின் சோதனைகளை வென்று இயன்ற அளவு உணவு உற்பத்தியைப் பெருக்க நாம் முனைப்பாகச் செயல்படவேண்டும். குறிப்பாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கிராம மக்களுக்கு நியாயமான விலையில் அவர்களுக்குத் தேவையான உணவுத் தானியங்களில் ஒரு பகுதியாவது வழங்குவதற்கு நாம் ஏற்பாடுகள் செய்யவேண்டும். பொது விநியோக முறையைத் திறமையாகச் செயல்படுத்துவதற்கு நாம் நமது கொள்முதலைத் தீவிரப்படுத்தவேண்டும். இவ்வளவும் செய்தும், நாம் ஈடுசெய்ய முடியாத பற்றுக்குறையைப் போக்க மத்திய அரசிடமிருந்து கணிசமான அளவு உணவுத் தானியங்களைப் பெற்று விநியோகிக்க வேண்டும். மத்திய அரசிடமிருந்து அரிசியும், கோதுமையும் பெறுவதற்கு மேலாக, மற்ற மாநிலங்களிலிருந்து சிறு தானியங்களை வாங்கி விற்பனை செய்ய வகை செய்ய வேண்டும். இவையே இக் கட்டத்தில் அரசு வகுத்துள்ள உடனடி உணவுக் கொள்கையின் அடிப்படை அம்சங்களாகும்.

1974-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததைத் தொடர்ந்து வடகிழக்குப் பருவமழையும் பொய்த்ததால் நமக்குக் கடுமையான சோதனை ஏற்பட்டுள்ளது. வழக்கமாக ஓராண்டிற்குப் பெய்யும் 960 மி.மீ. மழைக்கு எதிராக 1974-ம் ஆண்டு 631.5 மி.மீ. மழைதான் பெய்தது. அதிலும், 1974 அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் வடகிழக்குப் பருவமழை காலத்தில் சாதாரணமாகப் பெய்யும் 465 மி.மீ. மழைக்கு எதிராக 203 மி.மீ. மழைதான் பெய்தது. 1975-ம் ஆண்டு சனவரி திங்களில் சாதாரணமாகப் பெய்யவேண்டிய 35.5 மி.மீ. மழைக்கெதிராக 14.6 மி.மீ. மழைதான் பெய்தது. சென்ற 100 ஆண்டுகளில் மழை மிகவும் சொற்பமாகப் பெய்த ஆண்டு 1974-75 தான்.

பருவமழை தவறியதால் தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் 1974 ஜூன் முதல் டிசம்பர் வரை தண்ணீர் வரத்து, பெருஞ்சாணி நீர்த்தேக்கம் ஒன்றைத் தவிர, மற்றெல்லாவற்றிலும், அந்த நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்ட காலம் முதல் உள்ள சராசரி



1975 மார்ச் 25]

வரத்தைவிட மிகக் குறைவாயிருந்தது என்பது கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாகும்:—

| நீர்த்தேக்கம். | சாதாரணமான வரவு (அணை கட்டியது முதல் சராசரி). | ஜூன் 1974 முதல் டிசம்பர் 1974 வரை நீர் வரவு. | குறைவு. |
|---|---|---|---|
| | (மில்லியன் கன அடிகளில்) | | |
| 1. மேட்டூர் | 345,976 | 252,778 | 93,198 |
| 2. கீழ்ப்பவானி | 62,136 | 41,570 | 20,566 |
| 3. அமராவதி | 15,211 | 10,592 | 4,619 |
| 4. பெரியாறு | 24,964 | 19,326 | 5,638 |
| 5. பேச்சிப்பாறை | 11,238 | 8,375 | 2,863 |
| 6. பாபநாசம் | 19,642 | 16,187 | 3,455 |
| 7. மணிமுத்தாறு | 6,814 | 2,679 | 4,135 |

தமிழ்நாட்டில் சாதாரணமாகக் குறுவை நெல் 15 இலட்சம் ஏக்கராவில் பயிரிடப்பட்டு 12 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தியாகும். 1974-ம் ஆண்டு குறுவையில் 8.13 இலட்சம் ஏக்கராக்களில் தான் நெல் பயிரிடப்பட்டு, 6.5 இலட்சம் டன்கள் அரிசி தான் உற்பத்தியாயிற்று. நடப்பு ஆண்டு சம்பாவைப் பொறுத்த வரையிலே, சாதாரணமாக சம்பா பயிரிடப்படும் 49 இலட்சம் ஏக்கராக்களில் உற்பத்தியாகும் 40 இலட்சம் டன்கள் அரிசிக்கு மாறாக, 26.49 இலட்சம் ஏக்கராக்கள் தான் பயிரிடப்பட்டன. நடப்பு சம்பாவில் 17 இலட்சம் டன்கள் அரிசி தான் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாதாரண ஆண்டில், 5 இலட்சம் ஏக்கராக்களில் நவரை பயிரிடப்பட்டு, சுமார் 3 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தியாகும். இந்த ஆண்டு நவரைக்கான வாய்ப்புகள் நம்பிக்கை அளிப்பதாயில்லை.

இதுபோலவே மற்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படும் நிலப் பரப்பும் கணிசமாகக் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் சாதாரணமான ஆண்டில் உற்பத்தியாகும் 14 இலட்சம் டன் சிறு தானியங்கள் உற்பத்திக்கு மாறாக இந்த ஆண்டு 6 இலட்சம் டன் அளவில்தான் சிறு தானிய உற்பத்தி அமையுமென்று மதிப்பிடுகிறோம். இவ்வாறு, நெல் விளைச்சலும் சிறு தானிய விளைச்சலும் பாதிக்குமேல் குறைந்துவிட்ட காரணத்

னால், தமிழ்நாட்டில் மொத்த உணவுத் தேவையில், இந்த ஆண்டு 20 இலட்சம் டன்களுக்குமேல் பற்றுக்குறை ஏற்படுமென்று அஞ்சுகிறோம்.

தமிழ்நாட்டில் மக்கள் தொகை 4½ கோடி. ஒரு குடும்பத்தில் ஐந்து பேர் என்ற அடிப்படையில் கணக்கிட்டால் சுமார் 90 இலட்சம் குடும்பங்கள் தமிழ்நாட்டில் இருக்கும். சர்க்கரைக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ள முறையை எடுத்துக் கொண்டால், ஏறக்குறைய 99.8 இலட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப் பட்டுள்ளன. இதில் வறட்சியால் பாதிக்கப்படாத பகுதிகளில் பயிர் செய்யும் குடும்பங்கள் தங்கள் தேவைகளுக்கு வேண்டிய உணவுத் தானியங்களை வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஆகவே, அவர்களுக்கு உணவுத் தானியங்களை வழங்க வேண்டிய அவசியம் பொதுவாக இராது. ஆனால், உணவுத் தானிய உற்பத்தி யாளர்களைத் தவிர மற்ற குடும்பங்களுக்கும், குறிப்பாக, நகராட்சி, நகரியம், நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கும், வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கும் நாம் உணவுத் தானியங்களை ஓரளவாவது வழங்கவேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

வயது வந்த ஓர் ஆளுக்கு நாள் ஒன்றுக்கு 400 கிராம் உணவுத் தானியங்கள் குறைந்தபட்ச தேவையாகும். ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு இந்த அடிப்படையில் மாதம் 60 கிலோ உணவுத் தானியங்கள் தேவைப்படும். இதை முழுவதும் பொது விநியோக முறையின் கீழ் வழங்க முடியாது. ஆனால், மாதம் ஒன்றுக்கு 60 கிலோ தேவைப்படும் இடத்தில் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோவாகிலும் வழங்க நாம் முயலவேண்டும். இதில் 10 கிலோ அரிசி, 10 கிலோ கோதுமை என்று கணக்கிட்டால், நமக்கு மாதம் 98,000 டன் அரிசியும், 98,000 டன் கோதுமையும் தேவைப்படும்.

சில மாதங்களுக்கு முன்பு வரை பொது விநியோக முறையின் கீழ் 37 இலட்சம் கார்டுகளுக்குத்தான் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. வறட்சி நிலைமையை முன்னிட்டு மேலும் 35 இலட்சம் குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் விநியோகத்தை விரிவுபடுத்தி, மொத்தம் 72 இலட்சம் குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.



முன்பு நாம் 37 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கி வந்த முறையின் கீழேயே நமக்கு மாதம் 55,000 டன் அரிசி தேவைப் படும். அடுத்த குறுவை வரை இந்த ஆண்டில் முதல் 10 மாதங் களுக்கு 5½ இலட்சம் டன் அரிசி தேவைப்படும். ஆகவே, இப் போது நாம் மேலும் 35 இலட்சம் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகத்தை விரிவுபடுத்த முற்படும்போது பெரும் பாலும் கோதுமையையும் சிறு தானியங்களையும் மட்டும்தான் விநியோகிக்க வேண்டிய நிலையிலுள்ளோம்.

அரிசியைப் பொறுத்தவரையிலே முன்பு நாம் மேற் கொண்டிருந்த குறுகிய விநியோக முறையின் கீழேயே நமக்கு ஐந்தரை இலட்சம் டன் அரிசி பத்து மாதங்களுக்குத் தேவைப் படுகிறது. சாதாரணமாக, நல்ல விளைச்சலிருக்கும்போது, சம்பா, தாளடி, நவரை போன்ற பயிர்களிலிருந்து நாம் இதுவரை கொள்முதல் செய்துள்ள உச்ச அளவு 5.5 இலட்சம் டன்கள். இந்த ஆண்டு சம்பா, தாளடி, விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தாலும் ,நவரை போன்ற பயிர்களுக்கான வாய்ப்பு மிகக் குறை வாக உள்ளதாலும், நாம் இந்த ஆண்டு சம்பாவிலும், தாளடி யிலும் மூன்று இலட்சம் டன்களுக்கு மேல் கொள்முதல் செய்ய முடியுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. இந்த மூன்று இலட்சம் இலக்கை அடைவதற்கும் விவசாயப் பெருமக்களின் முழு மன தான ஒத்துழைப்பு தேவை. இவ்வாறு மூன்று இலட்சம் டன்கள் கொள்முதல் செய்தாலும், 5½ இலட்சம் டன்கள் தேவைப் படும் இடத்தில் இரண்டரை இலட்சத்திற்கு மேலாகத் துண்டு விழும். வறட்சி நிலைமையை முன்னிட்டு, நாம் பொது விநியோக முறையை விரிவுபடுத்த வேண்டிய நிலையில் இருப்பதால், துண்டு விழும் அளவு மேலும் அதிகமாகும். இவற்றை மனதிற்கொண்டு தான் மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன்கள் உணவு தான்யங்கள் வழங்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தி யுள்ளோம். நம்முடைய வேண்டுகோளின்பேரில், சென்ற ஆண்டு வழங்கிவந்த மாதம் 5,000 டன் கோதுமைக்கு மாறாக, பொது விநியோக முறையின் கீழ், பிப்ரவரி மாதத்தில் 41,000 டன் கோதுமையையும் மார்ச்சு மாதத்தில் 51,000 டன் கோதுமையை யும் வழங்க மத்திய அரசு தாராளமாக முன்வந்துள்ள போதிலும், இதுவரை சிறிதளவு அரிசியைக்கூட மத்திய அரசு ஒதுக்கவில்லை என்பது சோர்வளிப்பதாய் உள்ளது. நாம் மத்திய அரசிடமிருந்து இந்த ஆண்டு முதல் பத்து மாதங்களுக்கு ஐந்து இலட்சம் டன் அரிசி கேட்டுள்ளோம். இது கிடைத்தால்தான் நாம் பொது

[1975 மார்ச் 22

விநியோக முறையை ஓரளவாகிலும் செம்மையாக நடத்த முடியும். ஆக, நம்முடைய பொது விநியோக முறை மக்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும் வகையில் செயல்பட வேண்டுமானால், இரண்டு அம்சங்கள் இன்றியமையாதனவாகும். ஒன்று, கொள்முதலில் நாம் வெற்றி காண வேண்டும். இரண்டாவதாக, மத்திய அரசு நமக்கு அளிக்கும் கோதுமைக்கு மேலாக, அக்டோபர் திங்களுக்குள்ளாக ஐந்து இலட்சம் டன்கள் அரிசி வழங்கவேண்டும். நெருக்கடி நிலையின் நிர்ப்பந்தத்தின் காரணமாக நாம் எழுப்பியுள்ள இந்த நியாயமான கோரிக்கையை மத்திய அரசு ஏற்று, ஐந்து இலட்சம் டன்கள் அரிசி வழங்குவதற்கு முன்வரும் என்று நம்புகிறோம்.

அரிசி, கோதுமையைத் தவிர, சிறு தானியங்களையும் வழங்குவதற்காக மற்ற மாநிலங்களிலிருந்து பெருமளவில் வாங்கி கிராமப் பகுதிகளில் நியாயமான விலைக்கு விற்க அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இவ்வாறு வாங்கும் பணிகளில், கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷனும் முனைந்து செயல்பட்டு வருகின்றன. இந்த பத்து மாதங்களில் இரண்டு இலட்சம் டன் அளவில் சிறு தானியங்களை நாம் நம் மாநிலத்தில் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளோம். இப்போதுள்ள நிலைமையின்படி, ஒரு இலட்சம் டன்கள் சிறு தானியங்கள் வெகு விரைவில் கிடைக்குமென்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

## III. கொள் முதல்.

இச் சூழ்நிலையில், நெல் கொள்முதலில் நாம் தீவிரமாகச் செயலாற்றிக் கணிசமான வெற்றி காண்பது இன்றியமையாததாகும்.

விளைச்சல் நிலைமையை மனதிற்கொண்டும், நாம் எய்த வேண்டிய கொள்முதல் இலக்கை மனதிற் கொண்டும், இந்த லெவி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நாம் மேற்கொண்டுள்ள பொது விநியோக முறை முறிந்துவிடாமல் செயல்பட வேண்டுமென்றால் கொள்முதலை தீவிரப்படுத்துவது அவசியமாகிறது. இந்த நிலைமையை விவசாயப் பெருமக்கள் உணர்ந்து, கொள்முதலில் சிரமத்தைப் பார்க்காமல் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். நாம் நிர்ணயித்துள்ள லெவி விகிதங்களுக்கு



1975 மார்ச் 25]

மேலாகவே விளைச்சல் கண்டுள்ள இடங்கள் உள்ளன. அது போலவே, சில இடங்களில் நாம் நிர்ணயித்ததற்குக் குறைவாக விளைச்சல் ஏற்பட்டிருக்கக்கூடும். நிலைமையை ஆராய்ந்து ஆங்காங்கு நீக்குபோக்கு காட்டும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தரப்பட்டுள்ளது.

ஆற்றுப்பாசன நிலங்களில் இப்போது அரை ஏக்கர் வரை கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதை ஒரு ஏக்காராவாக உயர்த்த வேண்டுமென்று யோசனை கூறப்படுகிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள நில உடைமைகளில் நெல் சாகுபடியாகும் உடைமைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| | இலட்சம் உடைமைகள். |
|---|---|
| 1 ஏக்கரா வரை | 9.88 |
| 1 ஏக்கராவிற்கு மேல் 3 ஏக்கரா வரை | 5.83 |
| 3 ஏக்கராவிற்கு மேல் 5 ஏக்கரா வரை | 1.36 |
| 5 ஏக்கராவிற்கு மேல் 7 ஏக்கரா வரை | 0.54 |
| 7 ஏக்கராவிற்கு மேல் 10 ஏக்கரா வரை | 0.31 |
| 10 ஏக்கராக்களுக்கு மேற்பட்ட நிலவுடைமைகள் | 0.28 |

இவை 1968-ம் ஆண்டு புள்ளி விவரங்கள். அதற்குப் பின்பு நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக, சிறு உடைமைகளின் எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது. ஒரு ஏக்கராவிற்கும் அதற்குக் குறைவாகவும் உள்ள நிலவுடைமைகள் மொத்த நிலவுடைமைகளில் ஏறக்குறைய பாதியாகும். மேலும் இந்த ஆண்டு வறட்சி நிலைமையின் காரணமாக, பெரிய உடைமையாளரும், முழு அளவில் சாகுபடி செய்ய இயலாமற் போன நிலைமையினால், ஒரு ஏக்கராவுக்கும் குறைவாக சாகுபடி செய்யப்பட்ட உடைமைகளின் எண்ணிக்கை இன்னும் உயரும். அவை அனைவற்றிற்கும் கொள்முதலிலிருந்து விலக்கு அளித்துவிட்டால், கொள்முதலில் நாம் வெற்றி காண முடியாது. மேலும், விவசாயப் பெருமக்களின் சொந்த உபயோகத்திற்கான தானியங்கள், விதை, கூலி இவற்றிற்கான தேவைகள், ஆகியவற்றை அவர்களிடமே

செல்ல வேண்டும். கொள்முதல் செய்யும் செலவை ஏற்க வேண்டும். மூன்று குவிண்டால் நெல்லிலிருந்து இரண்டு குவிண்டால் அரிசிதான் கிடைக்கும். நெல்லுக்கு அரைவைக் கூலி தரவேண்டும். சாக்குகளின் விலை இப்பொழுது உயர்ந்துள்ளது. நெல் பிடித்து இருப்பு வைக்கும் சாக்குகளில் தேய்மானம் ஏற்படுகிறது. அரைத்த அரிசியை பல்வேறு மாவட்டங்களுக்கும், மாவட்டங்களில் விநியோகம் நடத்தும் பல்வேறு இடங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவை மேற்கொள்ள வேண்டும். கொள்முதல் செய்யும் நெல்லை இருப்பில் வைக்கும்பொழுது, காய்ச்சல்பாட்டின் காரணமாக குறைவு ஏற்படுகிறது. அரிசியை கிடங்கில் சேமித்து வைத்திருக்கும் கட்டத்திலும், ரயில் மூலமாகவும், லாரிகள் மூலமாகவும் பல்வேறு மாவட்டங்களுக்கும் மாவட்டங்களில் பல்வேறு விநியோக முனைகளுக்கும் எடுத்துச் செல்லும் கட்டத்திலும் சேதாரம் ஏற்படுகிறது. கொள்முதல் செய்வதற்கு நாம் செலவு செய்யும் கோடிக்கணக்கான ரூபாய்களை ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பெறுகிறோம். அக்கடனுக்கு வட்டி செலுத்த வேண்டும். நம்முடைய மாநிலம் முழுவதும் பரவலாக ஆயிரக்கணக்கான கிராமங்களில் லட்சக்கணக்கான விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து, ஆலைகளுக்கு எடுத்துச் சென்று அரைத்து, மீண்டும் பல்வேறு கிராமங்களில் விநியோக முனைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு மிக விரிவான ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான நிர்வாகச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மொத்த விநியோகம் செய்யும் பொறுப்பையும் சில்லரை விற்பனை செய்யும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் அவர்கள் செலவுக்கு ஒரு தொகை அளிக்க வேண்டும். இவற்றையெல்லாம், கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது ரூ. 74-க்கு குவிண்டால் நெல்லை வாங்கி கிலோ ரூ. 1.80-க்கு அரிசியை விற்று வந்தபோது நமக்கு வரவும் செலவும் ஏறக்குறைய ஈடுகட்டி வந்தன என்பது தெளிவாகும். இப்பொழுது ரூ. 74-க்கு மேலாக ரூ. 15 விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறோம். அந்த கூடுதல் செலவை ஏற்கும்பொழுதும் கூட நாம் அரிசி சில்லரை விற்பனை விலையை உயர்த்தவில்லை.

பொது விநியோக முறையின் கீழ் குடும்பக் கார்டுகளின் பேரில் நாம் வழங்கி வரும் உணவுப் பொருட்கள் நகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் மக்களுக்கு ஒழுங்காகவும் சிரமமின்றியும்



கிடைப்பதற்கு வகை செய்ய ஏறத்தாழ 9,000 சில்லரை விற்பனை முனைகள் ஆங்காங்கு திறக்கப்பட்டுள்ளன. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்தும் கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் கடைகள் ஆகியவற்றின் மூலமாக இந்த விநியோகம் நடந்து வருகிறது. தனியாரிடமிருந்து இப்பொறுப்பை எடுத்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடமும், கூட்டுறவுச் சங்கங்களிடமும் ஒப்படைப்பதே அரசின் கொள்கை. இது இப்பொழுது பெரும்பாலும் பின்பற்றப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் இயன்றவரை ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு கடையும், அல்லது அருகாமையிலுள்ள ஒன்று அல்லது இரண்டு கிராமங்களுக்கு ஒரு கடையும் திறக்கப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு நிறுவனங்களின் கடைகள் இயங்காத இடத்தில், அவசியம் ஏற்படும்போது, ஊராட்சி அமைப்புகளையும் கிராம பொதுமக்கள் குழுக்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலே தனியார் நடத்தி வந்த கடைகள் அடியோடு அகற்றப்பட்டு கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலமாகவும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் மூலமாகவும்தான் இப்பொழுது விநியோகம் நடந்து வருகிறது. முன்பு ஐயாயிரம், ஏழாயிரம் அளவில் அட்டைகள் ஒரு கடைக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலைமையை மாற்றி, இப்பொழுது ஒரு கடைக்கு இரண்டாயிரம் அட்டைகளுக்கு மேற்படாமல் ஒதுக்கி வருகின்றோம். இதனால் இக்கடைகளுக்கு முன்பு நீண்டு வந்த கியூ வரிசைகள் நீக்கப்பட்டு இப்பொழுது விநியோகம் சீராகவும் சிரமமின்றியும் நடந்து வருகின்றது.

**கோதுமை.**—மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிடும் கோதுமையின் அளவு மிகக் கணிசமாக உயர்ந்துள்ளது. மார்ச் மாதத்திற்கு பொது விநியோக முறையின்கீழ் 51,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர தமிழகத்திலுள்ள 26 ஆலைகளுக்கு கோதுமைப் பொருள்கள் தயாரிப்பதற்காக மாதம் 9,000 டன் கோதுமையும் வழங்கப் படுகிறது. பொது விநியோக முறையின்கீழ் ஒதுக்கப்படும் கோதுமை முழு கோதுமையாக குடும்பக்கார்டுகளின் பேரில் மக்களுக்கு வழங்கப்படுகிறது. மாதம் ரூ. 500-க்கு மேல் வருமானமுள்ளவர்களுக்கும் எல்லா மாவட்டங்களிலும்

தாராளமாக கோதுமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரில் இந்தப் பிரிவினருக்கு குடும்பத்திற்கு மாதம் 10 கிலோ கோதுமை மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து வழங்கப்படுகிறது.

ஆலைகளுக்கு ஒதுக்கப்படும் கோதுமையிலிருந்து மைதா, ரவை, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு டன் கோதுமையை அரைத்தால் அதிலிருந்து 55 விழுக்காடு மைதாவும், 15 விழுக்காடு ரவையும், 8 விழுக்காடு ஆட்டாவும், 22 விழுக்காடு தவிடும் நமக்குக் கிடைக்கின்றன. மைதா, ரவை ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரித்து, ஆட்டா, தவிடு போன்றவற்றின் உற்பத்தியை எந்த அளவிற்கு குறைத்துக் கொள்ள முடியும் என்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இப்பொருட்கள் பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

கோதுமை தவிட்டின் விலை முன்பு குவிண்டாலுக்கு ரூ. 90 ஆக இருந்தது. இது சற்று மிகையாகவுள்ளது என்று பொது மக்களிடமிருந்து முறையீடுகள் வந்ததையொட்டி மார்ச் மாதத்திலிருந்து கோதுமை தவிட்டின் விலை குவிண்டாலுக்கு ரூ. 80-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**சர்க்கரை.**—தமிழ்நாட்டில் 16 சர்க்கரை ஆலைகளும், பாண்டிச்சேரி மாநிலத்தில் ஒரு ஆலையும் இயங்கி வருகின்றன. இந்த 17 சர்க்கரை ஆலைகளில் ஆண்டுக்கு உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையின் அளவு சுமார் 4 லட்சம் டன்னுக்கு மேலாகும்.

தமிழ்நாட்டில் வழங்கப்பட்டுள்ள குடும்பக் கார்டுகளின் பேரில் விநியோகம் செய்வதற்கு நமக்கு மாதம் தேவைப்படுவது 15,000 டன்கள் ஆகும். 1974 ஆம் ஆண்டு முதல் 6 மாதங்களில் மாதம் ஒன்றுக்கு 10,550 டன்கள் லெவி சர்க்கரையை ஒதுக்கீடு செய்து வந்த மத்திய அரசு ஜூலை மாதம் முதற்கொண்டு 9,481 டன்கள்தான் ஒதுக்கீடு செய்து வருகிறது. இந்த ஒதுக்கீட்டை உயர்த்தி தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் பாதியை தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று அரசு விரும்புகிறது. நம் மாநிலத்திற்கு சர்க்கரை ஒதுக்கீட்டை மத்திய அரசு உயர்த்த வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.



நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 70 விழுக்காட்டை லெவி சர்க்கரையாக பொது விநியோகத்திற்கு ஒதுக்கீடு செய்து 30 விழுக்காட்டை வெளிச் சந்தையில் ஆலைகள் விற்றுக் கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்து வந்தது. அண்மையில் வெளிச் சந்தை ஒதுக்கீட்டை 30-லிருந்து 35 விழுக்காடாக மத்திய அரசு உயர்த்தி விட்டது. இதன் விளைவாக லெவி விலையில் பொது மக்களுக்கு கிடைக்கும் சர்க்கரை அளவு குறைந்து விடக்கூடும் என்று மாநில அரசு அஞ்சுகிறது.

**பயறு வகைகள்.**—நமது மாநிலத்தில் பயறு வகைகளின் உற்பத்தி குறைவாகவே உள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை, பயறு வகைகளில் நமது தேவை, உள்ளூரில் உற்பத்தியாகும் அளவு, ஏனைய அண்டை மாநிலங்களிலிருந்து இறக்குமதியாகும் அளவு, ஆகிய விபரங்களைக் காட்டும்:—

| | உள்ளூர் உற்பத்தி. | இறக்குமதி. (டன்களில்) | உபயோக அளவு. |
|---|---|---|---|
| துவரையும், துவரம் பருப்பும் .. | 59,000 | 65,000 | 124,000 |
| உளுந்து, பச்சைப்பயறு, அதன் பருப்பு வகைகளும் .. | 155,000 | 50,000 | 205,000 |
| கொண்டைக்கடலையும், கடலைப் பருப்பும் .. .. | 6,000 | 240,000 | 246,000 |
| | 220,000 | 355,000 | 575,000 |

பெரும்பான்மையான அளவு இறக்குமதியையே நாம் நம்பி இருக்க வேண்டியுள்ளதாலும், இப்பருப்பு வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்து கட்டுப்பாடு விதித்தால் வெளியிடங்களிலிருந்து இறக்குமதி செய்ய வணிகர்கள் மறுப்பர் என்ற காரணத்தாலும் இப்பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய இயலவில்லை.

**மண்ணெண்ணெய்.**—இந்திய அரசு நமக்கு மாதந்தோறும் சராசரியாக 23,000 மெட்ரிக் டன் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறது. இது சற்றேறக்குறைய நமது தேவைக்குப்

போதுமானதாகும். மண்ணெண்ணெய் தற்போது தட்டுப்பாடில்லாமல் கிடைத்து வருகிறது. மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் ஆகியோரின் விற்பனையைக் கண்காணிப்பதன் மூலமும் விலைக்கட்டுப்பாட்டைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதன் மூலமும் நிலைமை சீராகவுள்ளது.

## Va. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

அரசுத் துறையில் சாதாரணமாக நடைமுறையில் காணப்படும் இடையூறுகள், அரசு வாணிகத் துறையின் செயலாற்றல் தன்மையைப் பாதிக்கக்கூடாது என்ற அடிப்படையில் ஏற்கெனவே உணவு வழங்குத் துறையினரால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்த கொள்முதல், சேமிப்பு, விநியோகம் ஆகியவற்றை மேலும் சிறந்த முறையில் செயலாற்றும் நோக்கத்துடன், போதுமான அதிகாரங்கள் கொண்ட ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்துவது என்று தமிழக அரசு முடிவு செய்தது. அதன் அடிப்படையில் 1956-ம் ஆண்டு கம்பெனிச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்) 24—4—1972-ல் பதிவு செய்யப்பட்டு, 1—7—1972 முதல் செயல்பட்டு வருகின்றது. இந்த நிறுவனமானது, முழுவதும் அரசுக்குச் சொந்தமானதாகும்.

இவ்வாணிபக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 3 கோடியாகும். செலுத்திய மூலதனம் ரூ. 100.05 இலட்சங்களாகும்.

இக்கழகத்தின் வாணிபத் திட்டங்களுக்காக கடன் வசதி 30 கோடி ரூபாய் அளவில் வங்கிகள் மூலமாக மாநில அரசின் பொறுப்பு உறுதியின் பேரில் பெறப்பட்டுள்ளது.

1974-75-ம் ஆண்டு இவ்வாணிபக் கழகத்தின் முக்கிய சாதனைகள் கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**அரிசி, நெல்.**—மாநில அரசின் சார்பாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல், அரிசி ஆகியவற்றை லெவி முறை



மூலமாகவும் வெளிச் சந்தையில் வாங்குதல் மூலமாகவும் கொள்முதல் செய்து வருகின்றது.

சென்னை நகரம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டம் எல்லையோரப் பகுதிகள் ஆகிய இடங்களில் பொது விநியோக முறையின் கீழ் (Informal Distribution Scheme) மாத வருமானம் ரூ. 300-ம் அதற்குக் குறைவாகவும் உள்ள அட்டைதாரர்களுக்கு இலாப நட்டமில்லாத விலையில் அரிசியை இவ்வாணிபக் கழகம் விநியோகம் செய்கின்றது. அத்திட்டத்தின்கீழ் விநியோகம் பெற்று வரும் அட்டைதாரர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறாகும்:—

| | |
|---|---|
| (1) சென்னை நகரம் | 4.10 லட்சம் |
| (2) கோயம்புத்தூர் | 1.03 லட்சம் |
| (3) கன்னியாகுமரி எல்லையோரப் பகுதிகள். | 1.03 லட்சம் |

கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் வெளிச் சந்தையில் அரிசி விலையானது படிப்படியாக உயர்ந்ததின் காரணமாக, சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் மாத வருமானம் ரூ. 301-லிருந்து ரூ. 499 வரை உள்ள 138,000 குடும்பக் கார்டுகளுக்கும் லாப நட்டமில்லாத விலையில் அரிசியை வழங்கவும், மற்ற மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், தொழிலாளர், நெசவாளர் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும், நியாய விலையில் அரிசி வழங்கவும் அரசு முடிவு செய்தது. அதன் காரணமாக ஏற்கெனவே மாதம் 12,000 டன் என்ற அளவில் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலைமை மாறி, ஏறக்குறைய 55,000 டன் வழங்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. எனவே கொள்முதலை தீவிரப்படுத்த வேண்டி உற்பத்தியாளர் லெவி முறையை படிப்படியாக எல்லா மாவட்டங்களிலும் அரசு கொண்டு வந்தது. மாநில அரசின் ஏகப் பிரதிநிதியாக கொள்முதல் பணியை இவ்வாணிபக் கழகம் மேற்கொண்டது.

[1975 மார்ச் 22

1974-ம் ஆண்டு சம்பா பட்டத்தில் இவ்வாணிபக் கழகம் 128,295 மெட்ரிக் டன் அரிசி கீழ்க்கண்டவாறு கொள்முதல் செய்தது :—

| | |
|---|---|
| லெவி | 78,195 |
| வெளிச்சந்தை | 50,100 |
| | 1,28,295 |

கடந்த இரண்டு ஆண்டுகளில் உணவு வழங்குத் துறையினரால் சம்பா பட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட அரிசி, நெல் கீழ்க்கண்டவாறாகும் :—

| | |
|---|---|
| 1972 | 1,09,883 |
| 1973 | 1,12,284 |

1974-ம் ஆண்டு குறுவைப் பட்டத்தின்போது, எல்லா மாவட்டங்களிலும் 147,649 மெட்ரிக் டன் அரிசிக்குச் சமமான நெல் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டுகளில் உணவு வழங்குத் துறையினர் குறுவைப் பட்டத்தில் கொள்முதல் செய்ததின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1972 | 22,006 |
| 1973 | 17,079 |

பட்டுள்ளது.

1975-ம் ஆண்டு சம்பா பட்டத்தில் 11-3-1975-ம் தேதி வரை 185.066 டன் அரிசிக்குச் சமமான நெல் கொள்முதல் செய்யப் இவ்வாணிபக் கழகம் கொள்முதல் பொறுப்பை ஏற்றதிலிருந்து அதில் தேவையான ஊக்கம் காட்டி, கொள்முதலைத் தீவிரப்படுத்தியுள்ளது கவனிக்கத்தக்கது.

சென்னை நகரம் மற்றும் கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களில் பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்காக 10,000 டன் பச்சரிசி ஆந்திர மாநிலத்திலிருந்தும், 5,000 டன் அரிசிக்குச் சமமான நெல் கர்நாடக மாநிலத்திலிருந்து கடனாகவும்



1975 மார்ச் 22]

பெறப்பட்டு 1974-ம் ஆண்டில் விநியோகம் செய்யப்பட்டது. இவ்வாணிபக் கழகம் இவற்றைக் குறுகிய காலத்தில் இரு மாநிலங்களிலிருந்து கொணர்ந்தது குறிப்பிடத் தக்கது.

**பதன் செய்தல்.**—கொள்முதல் செய்யப்பட்ட நெல்லைப் பதன் படுத்த 13 நவீன அரிசி ஆலைகள் வாணிபக் கழகத்தினால் நடத்தப் பட்டு வருகின்றன. ஆயினும் பொது விநியோகத்திற்குத் தேவையான அரிசி முழுவதையும் இந்த நவீன ஆலைகளில் அரைவை செய்யப் போதுமான அரைவைத் திறன் இல்லாத காரணத்தினால், பல்வேறு மாவட்டங்களிலும் தனியார்க்குச் சொந்தமான அரிசி ஆலைகளையும், கூட்டுறவு துறையில் உள்ள அரிசி ஆலைகளையும் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நெல்லை அரைவை செய்ய முகவராக நியமனம் செய்துள்ளது. அவர்களிடமிருந்து காப்புத் தொகை பெறப்படுவதோடு, அரைவைக்குத் தரப்படும் நெல், அரிசி ஆலையின் உரிமையாளர், வாணிபக் கழகத்தின் அலுவலர் ஆகிய இருவரின் கூட்டுப் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது. 1973-74-ம் ஆண்டில் 57 ஆக இருந்த முகவர்களின் எண்ணிக்கை 600-க்கு மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அரைவைத் திறனும் மாதமொன்றுக்கு 12,000 டன் என்றிருந்தது இன்று 1,43,075 டன் என உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, ஏற்கெனவே கூட்டுறவுத் துறையில் இயங்கி வந்த 13 நவீன அரிசி ஆலைகளும் வாணிபக் கழகத்திற்கு மாற்றம் செய்யப் பட்டது. அந்த ஆலைகள் தம் முழுத் திறனுக்குச் செயல்படும் வண்ணமும் தரமான அரிசியை உற்பத்தி செய்யவும் வாணிபக் கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1. ஒவ்வொரு ஆலையிலும் நாள் ஒன்றுக்கு மூன்று முறை வேலை செயல்படுத்துவதற்காகக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப் பட்டனர்.

2. கொதிகலன், உலர்த்தல் சாதனம் ஆகியவற்றில் காணப் பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டன.

3. கூடுதலான அரைவைக் கருவிகள் பொருத்தப்பட்டன.

4. நவீன அரிசி ஆலைகள் செயல்படும் தன்மையை உன்னிப்பாகவும் சீரிய முறையிலும் கண்காணிக்க மூன்று தனிப் பொறியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்கண்ட நடவடிக்கைகளின் விளைவாக, உற்பத்தித் திறனும், அரிசியின் தரமும் உயர்ந்துள்ளன.

**சேமிப்பு.**—பொது விநியோகத்திற்கென கொள்முதல் செய்யப்படும் உணவுப்பொருள்களைத் தக்க முறையில் சேமித்து வைப்பது மிக்க அவசியமாகும். இதற்கென, இவ்வாணிபக் கழகம் தனக்குச் சொந்தமான கிடங்குகளையும், மாநில, மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனங்களுக்குச் சொந்தமான கிடங்குகளையும், அத்தகைய கிடங்குகள் இல்லாத இடங்களில் தனியார்க்குச் சொந்தமான கிடங்குகளையும் பயன்படுத்தி வருகின்றது. தற்போதுள்ள சேமிப்பு வசதிகளின் விபரம் கீழ்க்கண்டவாறாகும் :—

| | | (கொள்ளளவு மெட்ரிக் டன்களில்.) |
|---|---|---|
| 1. சொந்தக் கிடங்குகள் | .. | 34,020 |
| 2. தனியார்க்குச் சொந்தமான வாடகைக் கிடங்குகள் | .. | 26,664 |
| 3. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம். | | 88,280 |
| 4. மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் | .. | 1,16,810 |
| 5. இந்திய உணவுக் கழகம் | .. | 5,350 |

சேமிப்பு வசதிகளை அதிகரிக்க வேண்டிய அவசியத்தின் காரணமாக வாணிபக் கழகமானது தனக்குச் சொந்தமான முறையில் கிடங்குகளைக் கட்டுவதற்காக ஒரு நிர்வாகப் பொறியாளரையும் அவருக்குத் துணையாக இதர பல பொறியாளர்களையும் கொண்ட ஒரு நிர்மாணப் பிரிவு தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. ரூ. 9 கோடி செலவில் அடுத்த ஐந்தாண்டு காலத்தில் 3 இலட்சம் டன் சேமிப்பு வசதியை உருவாக்குவதற்கென திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.



தற்போது சென்னை நகரில் 6,600 டன் சேமிப்பு வசதி கொண்ட மூன்று கிடங்குகளுக்கான திட்டம் அனுமதிக்கப்பட்டு, ஒரு கிடங்கின் வேலை முடிவுற்று, மற்றொன்றின் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மூன்றாவது கிடங்கின் வேலை விரைவில் துவங்கப்படும். இது தவிர, நவீன அரிசி ஆலைகள் உள்ள செய்யாறு, பட்டுக்கோட்டை, கும்பகோணம், மன்னார்குடி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 22,600 டன் சேமிப்பு வசதிகள் கொண்ட கிடங்குகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இதற்கு எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 56 இலட்சங்களாகும். மேலும் செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலைப் பகுதிகளில் 5,000 டன் சேமிப்பு வசதி கொண்ட கிடங்குகள் ரூ. 12 இலட்சம் செலவில் அமைக்கும் பணி விரைவில் துவங்கப்படவிருக்கின்றது.

**விநியோகம்.**—மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் வாணிபக் கழகம் சில்லறை விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றது. சென்னை நகரில் ஏற்கனவே செயல்பட்டு வந்த தனியார் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு மாற்றாக கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக இப்பண்டங்களை வழங்க வேண்டுமென்று அரசு எடுத்த முடிவையொட்டி, இக் கழகம் 204 சில்லறை விற்பனை நிலையங்களை குறுகிய காலத்தில் ஏற்படுத்தி 1—12—1974 முதல் செயல்படுத்தி வருகின்றது. மேலும், ஏற்கெனவே அதிக அளவில் உணவுப் பங்கீடு அட்டைகள் இணைக்கப்பட்டிருந்ததால், சில்லறை விற்பனை நிலையங்களிலிருந்த கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும், மக்களுக்கு வசதிகளை மேலும் அதிகப்படுத்தவும், ஒவ்வொரு நிலையத்திலும் 2,000 அட்டைகளுக்கு அதிகப்படாவண்ணம் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு மேலும் பல புதிய சில்லறை விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இக்கழகத்திற்கு செலவு அதிகம் ஏற்படினும், பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

தற்போது சென்னை நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் 270 சில்லறை விற்பனை நிலையங்களையும், மற்ற மாவட்டங்களில் 182 சில்லறை விற்பனை நிலையங்களையும் இவ்வாணிபக் கழகம் நடத்தி வருகின்றது.

**கோதுமை, கோதுமைப் பொருள் விநியோகம்.**—1974-75-ம் ஆண்டில் இம் மாநிலத்திற்கு வழங்கப்பட்ட 1,38,925 டன் லெவி கோதுமையை இவ்வாணிபக் கழகம் கையாண்டு பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது. மேலும் வட இந்திய மாநிலங்களில் 5,005 டன் கோதுமையை நேரிடையாகக் கொள்முதல் செய்து இங்கு கொணர்ந்து சுத்தம் செய்யப்பட்ட முழு கோதுமையாகவும், அரைவை செய்து மைதா, ரவை போன்ற பொருள்களாகவும் விநியோகம் செய்தது.

மத்திய அரசு, தமிழ்நாட்டில் உள்ள கோதுமை அரைவை ஆலைகளில் கோதுமைப் பொருள்களாக அரைப்பதற்கென கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை 23,075 டன் கோதுமையை வழங்கியது. அதன்பின் கோதுமை கொள்முதல் கொள்கையில் மத்திய அரசு மேற்கொண்ட புதிய முடிவின் காரணமாக ஜூலை 74 முதல் செப்டம்பர் வரை மாவு ஆலைகளுக்கென கோதுமையை இம் மாநிலத்திற்கு வழங்கவில்லை. ஆனால் திரும்பவும் அக்டோபர் 74 முதல் மார்ச்சு 75 வரை 54,000 டன் கோதுமையை சற்று அதிக விலையில் (குவிண்டாலுக்கு ரூ. 170) வழங்கியுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் மைதா, ரவை, ஆட்டா ஆகிய பொருள்கள் அனைத்தையும் இவ் வாணிபக் கழகம் எடுத்துக்கொண்டு அவற்றை மாநிலம் முழுவதும் உணவு வழங்குத் துறையினரால் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்கின்றது. மேலும் குடும்பக் கார்டு வைத்திருப்பவர்களுக்கும் மைதா, ரவை, ஆட்டா போன்ற பொருள்கள் வழங்கப்படுகின்றன.

**சர்க்கரை.**—1974-75-ம் ஆண்டு மத்திய அரசு இம் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்த 1,16,473 மெட்ரிக் டன் சர்க்கரையை இவ் வாணிபக் கழகம் கையாண்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்தது.

மேலும் பரீட்சார்த்த அடிப்படையில் கிடங்குகளிலிருந்து சில்லறை விற்பனை நிலையங்களுக்கு சர்க்கரை வழங்குவதற்கு மாற்றாக, கிராமங்களில் நேரிடையாக சில்லறை விற்பனை நிலையங்களுக்கு கொண்டு சென்று வழங்கும் முறை வட ஆற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



**பருப்பு வகைகள்.**—இம்மாநிலத்தில் பயிறு வகைகளில் நிலவி வரும் பற்றாக்குறையை நீக்குவதற்கும், விலை ஏற்றத்தைத் தடுத்து சீரான நிலையில் வைக்கவும், கடந்த இரண்டு ஆண்டுகளில், உளுந்து, துவரை, கடலை போன்ற பருப்பு வகைகள் 4,610 மெட்ரிக் டன் வெளிமாநிலங்களில் கொள்முதல் செய்யப்பட்டு, சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக பொதுமக்களுக்கு குடும்பக் கார்டு அடிப்படையில் வழங்கப்படுகிறது.

**கடலை எண்ணெய்.**—மாநில அரசின் லெவி கொள்முதல் திட்டப்படி இவ்வாணிபக் கழகமானது 6,001 மெட்ரிக் டன் கடலை எண்ணெயையும், 6,286 மெட்ரிக் டன் கடலைப் பருப்பையும், ரூ. 5.34 கோடி முதலீட்டில் கொள்முதல் செய்தது.

கடலை எண்ணெயை பொதுமக்களுக்கு உணவுப் பங்கீடு அட்டையின் அடிப்படையில் வழங்கி வருகிறது. மேலும், அதில் 1,101 டன் எண்ணெய் சுத்தம் செய்யப்பட்டு, மலிவு விலையில் வாணிபக் கழகத்தின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விநியோகிக்கப்படுகிறது.

**சிறு தானியங்கள் கொள்முதல்.**—1974-75-ம் ஆண்டில் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து 4,981 டன் மைலோ வாங்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

மாநிலத்தில் தற்போது பல்வேறு மாவட்டங்களில் நிலவிவரும் கடும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டிருக்கும் உணவுப் பற்றாக்குறையைப் போக்க, கேழ்வரகு, கம்பு, சோளம், மக்காச் சோளம் போன்ற சிறுதானியங்கள் வெளி மாநிலங்களில் வெளிச் சந்தையில் இதுவரை ஏறக்குறைய 1,15,000 டன் வாங்குவதற்கு உத்திரவு கொடுக்கப்பட்டுள்ளது. தானியங்கள் வெளி மாநிலங்களிலிருந்து துரிதமாக வந்து கொண்டிருக்கின்றன.

**தரக் கட்டுப்பாடு.**—இவ்வாணிபக் கழகம் கையாளுகின்ற உணவுப் பொருள்களின் தரத்தை மேம்பாடு செய்யவும், உணவுப் பொருள்களின் தன்மை கெடாமல் பாதுகாக்கவும், தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாநிலம் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் உணவு, விவசாயத் துறையில் அனுபவம் பெற்றுள்ள தொழில் நுட்ப அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, இப்பணி சீராக நடைபெறுவதைக் கண்காணிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## திங்கட்கிழமை 1975 மார்ச் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**தலைமை அமைச்சர் வருகையின்போது பாதுகாப்பு ஏற்பாடுகள்**

*431 வினா—**திரு. என். கிட்டப்பா :**

**திரு. எல். கணேசன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்தியத் தலைமை அமைச்சர் 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபொழுது மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தமிழ்நாடு அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவுத் தொகை யாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சி முதலிய இடங்களுக்கு வருகை வந்தபோது மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மாத்திரம் ஏற்பட்ட செலவு ரூ. 85,628.52—காவல் செலவு மாத்திரம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய பிரதம அமைச்சர் தமிழகத்திற்கு வருகை தந்ததையொட்டி ஏற்பட்ட மொத்த செலவுத் தொகை எவ்வளவு? அதில் சென்னையில் அவர்கள் பேசிய கூட்டத்தில் மேடை அமைக்க ஏற்பட்ட செலவு எவ்வளவு? பாதை ஓரமாக பொதுமக்கள் அவரைப் பார்ப்பதற்காக அமைக்கப்பட்ட அடைப்புக்கான செலவு எவ்வளவு? காஞ்சிபுரம் சென்றுவந்த போது இவ்வகையில் ஏற்பட்ட செலவு என்ன? இந்த விவரங்கள் முதலமைச்சரவர்கள் அறிவிக்க இயலுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, பிரதமர் 1974 செப்டம்பர் திங்களில் சென்னை, காஞ்சி ஆகிய இடங்களுக்கு வந்ததையொட்டி ஏற்பட்ட மொத்த செலவு ரூ. 3,77,781. சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி பொதுக் கூட்டத்தில் மேடை, பந்தல், அலங்காரங்கள் ஆகியவைகளுக்கும், காங்கிரஸ் கட்சி ஊழியர் கூட்டத்திற்கும் மொத்தம் செலவானது ரூ. 33,489. சென்னையில் (பாரிகேட்) வழியில் பாதுகாப்புக்காக கம்புகள் கட்டப்பட்டது—சென்னையில் ரூ. 98,174. காஞ்சிக்கு சென்று மீனம்பாக்கம் வருகிற வரையில்—வழியில் பாதுகாப்புக்காக 'பாரிகேட்' கட்டப்பட்டது ரூ. 76,300.

*திரு. கோவை செழியன்:* தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அமைச்சர்கள்—முதலமைச்சரிலிருந்து மற்ற அமைச்சர்களெல்லாம் வெளியூர் போகின்றபோது போலீஸ் பந்தோபஸ்து ஏராளமாகப் போடப்படுகிறதே—அதுவும் ஒரு நகரத்திலிருந்து இன்னொரு நகரத்திற்குப் போகும்போது—ஒரு பர்லாங்குக்கு ஒரு போலீசாரை நிறுத்தி வைத்திருக்கிறார்களே, இந்தச் செலவெல்லாம் மாநில அரசே செய்கிறதா? அல்லது, வேறு ஏதாவது நிதியிலிருந்து தரப்படுகிறதா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, பழைய நினைவில் நண்பர் செழியன் பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு நகரத்திலிருந்து இன்னொரு நகரத்திற்குச் செல்கிற பாதையில் பர்லாங்குக்கு ஒரு போலீஸ்காரர் போடுவதென்பது பழைய கால வழக்கம். இப்பொழுது அப்படிப்பட்ட வகையில் ஒரு பர்லாங்குக்கு ஒரு போலீஸ்காரர் நிற்கத் தேவையில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. முக்கியமான ஊர்களில் மாத்திரம் போலீசார் இருந்தால் போதும் என்று கூறப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழக அமைச்சர்கள் செய்யும் சுற்றுப்பயணத்தின்போது பயன்படுத்தப்படுகிற போலீஸ் பாதுகாப்புக்காக ஆகும் செலவைத் தமிழக அரசுதான் ஏற்றுக்கொள்ளுகிறது.

*திரு. நா. வீராசாமி:* தலைவர் அவர்களே, பிரதம அமைச்சர் தமிழகத்திற்கு வந்து கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் மேடை அலங்காரம் போன்ற செலவுகளுக்கு முப்பதாயிரத்திற்கும் மேலாக செலவு செய்திருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். பொதுவாக, இப்படிப்பட்ட அவர்களுடைய பொதுக்கூட்டங்கள், கட்சிக் கூட்டங்கள் நடைபெறுகிறபோது அவை சம்பந்தமான





செலவுகளை அவர்களுடைய கட்சிதான் ஏற்கவேண்டும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய அரசாங்கம் முடிவு எடுத்ததே. அதன்படி அந்தக் கட்சி இதுவரையில் பிரதமர் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களுக்கு தமிழக அரசு செய்திருக்கும் செலவுப் பணத்தைத் திருப்பிச் செலுத்தியிருக்கிறதா? இரண்டாவது—'பாரிகேட்' அமைப்பதற்காக எண்பதாயிரத்திற்கும் மேல் செலவாயிற்று என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிரதம அமைச்சர் வரும்போது அப்படியொன்றும் பொதுமக்கள் ஏராளமாகக் கூடி, கட்டுக்கடங்காமல், வேடிக்கை பார்க்கவில்லை. ஆகவே, 'பாரிகேட்' போன்ற வசதிகளை இனிமேலாவது நிறுத்தி—இப்படிப்பட்ட வீண் செலவுகளை செய்யாமலிருக்க அரசு முன்வருமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளையும் ஒரே கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். பிரதமர் அவர்கள் சுற்றுப்பயண விதிமுறைகள் என்ற புத்தகம் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த விதிமுறைகளின்படி பிரதமர் சுற்றுப்பயணம் வரும்போது ஆகிற செலவுகள், அரசாங்க நிகழ்ச்சியாக இருந்தாலும் அல்லது அவர்கள் கலந்து கொள்கிற ஒரு கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்தக் கட்சி நிகழ்ச்சிக்கு, மேடை உட்பட, விளக்குகள் உட்பட, ஒலிபெருக்கி உட்பட ஆகும் எல்லா செலவுகளையும் மாநில அரசு தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விதிமுறையில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவேளை பிரதமர் தேர்தல் பிரசாரத்திற்காக வருவாரானால் அந்த நோக்கில் மாத்திரம் மேடை அமைப்பு போன்ற ஒரு சில சில்லறைச் செலவுகளை மட்டும் அந்தக் கட்சி அரசுக்குத் திருப்பித் தரவேண்டும் என்று இருக்கிறது. வழியில் 'பாரிகேட்' கட்டவேண்டுமா? என்று இன்னொரு கேள்வி கேட்டார்கள். பிரதமருக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டியது ஒரு மாநில அரசாங்கத்தினுடைய கடமையாகும்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்:* தலைவர் அவர்களே, பிரதம அமைச்சருக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு விதிமுறைகளெல்லாம் வந்திருக்கின்றன என்று முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இந்த மாதிரி அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதில் இருக்கின்ற கஷ்டங்களை இந்த அரசாங்கம் அவர்களுக்கு ஏதாவது ஆட்சேபனையாகத் தெரிவித்திருக்கிறதா? பிரதம அமைச்சருக்குப் பாதுகாப்பு கொடுப்பதில் கட்சிகள் எவ்வாறு பங்கேற்றுக்

கொள்வது என்று திட்டவட்டமாக ஏதாவது அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதை முதலமைச்சரவர்கள் வெளியிடுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிரதமருக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டியது மத்திய அரசாங்கத்தினுடைய கடமை மாத்திரம் அல்ல; ஒவ்வொரு மாநில அரசாங்கத்தினுடைய கடமையும் ஆகும். காவல் துறை—அதுவும் தமிழகத்தைப் பொறுத்த வரையில்—மிக உன்னிப்பாக—கவனமாக—பிரதமருடைய பாதுகாப்புக் காரியங்களைக் கவனித்து வருகிறது. இதை மத்திய அரசாங்கத்திலே உள்ளவர்கள்கூட பாராட்டுகிற அளவுக்கு பிரதமருக்கு தமிழகத்திற்கு அவர்கள் வருகிறபோதெல்லாம் அவ்வப்போது அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், அவர்கள் கலந்துகொள்கிற கட்சிக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள். ஊழியர் கூட்டங்களுக்கும்கூட அரசாங்கம்தான் செலவு செய்யவேண்டும் என்கிற அந்த விதிமுறையை நாம் ஏற்றுக்கொள்வதற்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, பிரதமர் நமது மாநிலத்திற்கு வருகிற மாதிரி மற்ற மாநிலங்களுக்கும் செல்கிறார்கள். அந்த மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய நேரத்தில் பாதுகாப்புக்காக போலீஸ் பந்தோபஸ்து, இன்னும் பாரிகேட் போடுவது போன்றவை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். அம்மாதிரியாக இந்தக் குறிப்பிட்ட தினத்தன்று சுமார் இரண்டு இலட்ச ரூபாய் இதுசம்பந்தமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்பது அரசினுடைய விருப்பமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாநில அரசுதான் ஏற்கவேண்டும் என்று இருக்கிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல், பிரதமர் சுற்றுப் பயணம் பற்றிய ஒரு விதிமுறை வகுக்கப்பட்டு. மாநில அரசுதான் ஏற்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, தலைமை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வருகிறபோது அவர்களுடைய சுற்றுப் பயணச் செலவு பூராவையும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. அதேபோல், ஒரு மாநில முதல் அமைச்சர்கள் வேறு மாநிலத்திற்குச் செல்கிறபோது அப்படிப்பட்ட நிகழ்ச்சி



களில் கலந்துகொள்வதற்கு ஆகும் செலவுகளை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா? அல்லது, அந்தந்த மாநில அரசு ஏற்றுக்கொள்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் இன்னொரு மாநிலத்திற்குச் செல்கிற நேரத்தில், அந்தந்த நிலைமைக்கேற்ப, அந்த மாநில முதலமைச்சராலோ அல்லது மாநில அரசாலோ அழைக்கப்பட்டிருந்தால் அதற்கான செலவுகளை அந்த மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதாக எந்த வகையும் இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, பிரதமரோ அல்லது முக்கிய தலைவர்களோ தமிழகத்திற்கு வருகிறபோது மாநகராட்சியினுடைய பாதைகளில்—பிளாட்பாரங்களில்—ஆயிரக் கணக்கான குழிகள் தோண்டப்படுகின்றன. இதனால் மாநகராட்சிக்கு எவ்வளவு செலவு ஏற்படுகிறது என்பதையும், அதைத் தவிர, பொதுமக்களுக்கும் எவ்வளவு இடைஞ்சல் இருக்கிறது என்பதையும் அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது செலவைப்பற்றிய விஷயம் அல்ல; நாட்டினுடைய பிரதமர் ஒரு மாநிலத்தினுடைய தலைநகரத்திற்கு வரும்போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு செய்யக்கூடிய ஏற்பாடுகள். இப்படிப்பட்ட சில சில செலவுகள் ஏற்படக்கூடும். ஆகவே, அந்தச் செலவுகளையெல்லாம் நாம் சரியானவையல்ல என்று வாதிப்பது முறையல்ல.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, பிரதமருக்கு அளிக்கக்கூடிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. அண்மையில் இஸ்ரேலுக்கு வந்த கிசிங்கருக்கு எட்டு ஜோடி விமானங்கள் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டன. இதுபற்றி குடியரசுத் தலைவர் போர்டைக் கேட்டபோது, 'கிசிங்கருக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்புக்காக எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை' என்று சொன்னார்கள். ஆகவே, அத்தகைய அடிப்படையில் பிரதமருக்கு அளிக்கவேண்டிய பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அந்தச் செலவினங்களைப் பெரிதுபடுத்தாமல், அரசியல் நோக்கம் கற்பிக்காமல் இருக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நண்பர் அருணா அவர்களுடைய பரந்த பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன். நான் ஏதோ பாதுகாப்பு அளிக்கக்கூடாது என்று பதிலளித்ததைப் போல் பிரதமருக்காக வக்காலத்து வாங்கிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக நம்முடைய மாநிலத்திற்குப் பிரதமர் வருகிறபோது எந்த ஒரு சிறு அசம்பாவிதமும் நடைபெறாமலிருக்க பாதுகாப்பு அளிக்கப்படுகிறது என்ற பாராட்டை நம்முடைய மாநிலம் பெற்றிருக்கிறது. ஆகவே, பிரதமருக்குப் பாதுகாப்பு அளிப்பதில் அல்லது அவரை அழைத்து விழாக்களில் கலந்து கொள்ளச் செய்வதில் எந்தவிதமான அபிப்பிராயபேதமும் இல்லை. அவர்கள் சார்ந்திருக்கிற அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கும் அரசாங்கத்தின் சார்பில்தான் மேடைகள் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்பதுதான் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. பிரதமர் பாதுகாப்புக்காக அரசாங்கச் செலவிலேயே, அரசாங்கத்தின் மேற்பார்வையிலேயே, பொதுக்கூட்ட மேடையைக் கூட அமைத்துக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால், கட்சிக் கூட்டமாக இருந்தால், அதற்கான செலவை அந்தக் கட்சி ஏற்றுக்கொள்வதுதான் முறையாக இருக்கும். அதிலேகூட ஒருவேளை அருணா அவர்கள் இப்பொழுது நாம்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று வாதிட்டாலும் வாதிப்பார்கள்.

**திரு. செ. கந்தப்பன்:** தலைவரவர்களே, பிரதமருக்கு பாதுகாப்பு சிறப்பாக அளிக்கப்படுகிறது என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பாதுகாப்பு அளிப்பதை மனதில் வைத்துக் கொண்டு பிரதமர் நிகழ்ச்சி நிரல் மாநில அரசைக் கலந்துகொண்டு தயாரிக்கப்படுகிறதா? கட்சிக்காக சில நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும்போது, மாநில அரசுக்கு தகவல் தெரிவிக்கப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, குறைந்தபட்சம் டெல்லிக்கு நம்முடைய முதலமைச்சர் போகிறபோது முதலமைச்சர் என்ற மரியாதையோடு சில பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கோ அல்லது மாநிலத்திற்கோ வருகிற நேரத்தில் நான் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சொல்ல முடியும்—சில நேரங்களில் மாநில அரசு அழைத்து அவர்கள் நிகழ்ச்சி நிரல் வகுக்கிறார்கள். அந்த நிகழ்ச்சிநிரல் மாநில





அரசுக்கு அறிவிக்கப்படுகிறது. சில நேரங்களில் அவர்களாகவே நம்முடைய தமிழகத்திற்கு வருவதற்கான நிகழ்ச்சி நிரல் வகுத்துக்கொண்டு அறிவிக்கிறார்கள். அந்த நேரத்தில் மாநில அரசு நிகழ்ச்சி ஏதாவது வைத்துக்கொள்ளலாமா என்று கேட்டு, சில நேரங்களில் பிரதமர் அவர்கள் ஒப்புதல் தருகிறார்கள்.

மாநில முதலமைச்சர் டெல்லிக்குச் செல்கிறபோது பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்று கேட்டார்கள். ஒரு முறை மறைந்த பெரியவர் டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் மேலவையில் பேசிய பேச்சை நினைவுபடுத்த விரும்புகிறேன். "முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் டெல்லி விமான தளத்தில் இறங்கி, விமான நிலையத்தில் நல்ல மழை பெய்து கொண்டு இருந்த காரணத்தால் காரை விமான தளத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டபின்பும், அனுமதி கொடுக்கப்படவில்லை. முதலமைச்சர் அண்ணா அவர்கள் மழையில் நனைந்து கொண்டு விமான தளத்தை விட்டுச் சென்றார்" என்று மறைந்த டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் மேலவையில் சொல்லி வருத்தம் தெரிவித்தார்கள்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, தேர்தல் நேரங்களில் பிரதம அமைச்சர் அவர்கள் தமிழகத்திற்கு வருகிறபோது சில சில்லரை செலவுகளை அந்தந்த இயக்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி 1971 தேர்தல் நேரத்தில் அவர்கள் இங்கே வந்தபோது, இவ்வளவு செலவாகியிருக்கிறது என்று அந்த இயக்கத்திற்கு அரசால் சொல்லப்பட்டிருக்கிறதா, அது எவ்வளவு என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பொதுக்கூட்டங்கள் அல்லாமல், கட்சிக் கூட்டம் அல்லாமல், தேர்தலுக்காக கட்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டால், அதிலே ஒரு பகுதி செலவை அந்தக் கட்சி மாநில அரசுக்குத் தந்து விடவேண்டுமென்று இருந்தாலும் கூட, 1971-லே மாத்திரம் அல்ல, 1967-ம் ஆண்டிலிருந்தே பிரதமர் அப்படி வந்தபோது தேர்தல் பிரசாரத்திற்கான செலவின் அந்தப் பகுதியை அந்தக் கட்சிகள் அரசுக்குத் தரவில்லை.

**திரு. நா. காசிராமன்:** தலைவரவர்களே, பிரதமராக இருந்தாலும் மக்கள் மனதை கவர்ந்த பல தலைவர்களாக இருந்தாலும் சுற்றுப் பயணம் வரும்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள்.

அப்படி பாதுகாப்பு கொடுப்பதானது, பிரதமருக்கோ அல்லது தலைவருக்கோ மட்டுமல்ல, மக்களுக்கும் சேர்த்துத்தான் என்பதை அரசு உணருகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பாதுகாப்பு அனைவருக்கும் சேர்ந்து அளிக்கப்படவேண்டுமென்று அரசு உணர்ந்த காரணத்தால் தான், அதிலும் முக்கியமாக நாட்டின் பிரதமருக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிற காரணத்தால் தான் நான் இந்த வகையிலே பதில் கூறி வருகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, பிரதமரின் சுற்றுப்பயணம் சம்பந்தமாக ஒரு விதிமுறைகள் இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த விதிமுறைக்குட்பட்டுத்தான் அவர்கள் கட்சிக் கூட்டங்களுக்கு வரும்போது, கட்சி மேடை அமைப்பதற்கும் இந்த மாநில அரசு செலவு செய்ய வேண்டுமென்று இருக்கிறதா? இல்லையென்று சொன்னால், அந்தச் செலவை மாநில அரசு ஏற்றுக்கொள்ளமுடியாது, அந்த விதி முறைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசாங்கம் தெரிவித்தது உண்டா? அதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து என்ன பதில் வந்தது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாம் ஒன்றும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. பிரதமர் சுற்றுப்பயணம் என்கிற விதிமுறை வகுக்கப்பட்டு அது எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு இருக்கிற காரணத்தால், அதை ஏற்றுக்கொண்டோம். இந்த சிறிய பிரச்னைகளில் அத்தகைய பெரிய தகராறு பிரதமரோடோ, அல்லது மத்திய சர்க்காரோடோ வைத்துக் கொள்ள வேண்டாமென்று இந்த அரசு பெருந்தன்மையோடு கருதுகிறது.

## அரசிதழ் பதிவுபெறு அலுவலர் இடமாற்றம்

* 432. வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை பகிர்வாரா—

அரசிதழ் பதிவுபெறாத அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது அவர்களது மாத ஊதியம் தாமதமின்றி கிடைக்கச் செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரசிதழ் பதிவுபெறாத அலுவலர் தாம் மாற்றப்பட்டுள்ள புதிய ஊரில் சம்பளம் பெறுவதற்கு அவசியமான நேர் முன் ஊதியச் சான்றிதழின் Last Pay Certificate நகலொன்றைச் சம்பந்தப்பட்ட அலுவலரிடமே கொடுத்துவிட வகை செய்யப்பட்டுள்ளது; இந்த ஏற்பாட்டின் மூலம் அந்த அலுவலர் அப்புதிய ஊரில் அச்சம்பளச் சான்றிதழைக் கொடுத்து, தமது சம்பளத்தைத் தாமதமின்றி பெற்றுக்கொள்ள இயலும்.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவரவர்களே, பொதுவாக அரசிதழ் பதவிபெறாத ஊழியர்கள் மாற்றப்படும்போது, அவர்களுக்கு சம்பளம் கிடைக்க காலதாமதம் ஆகிறது—அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பள சர்ட்டிபிகேட் ஏ.ஜி. ஆபீஸிலிருந்து வரவேண்டுமென்றும், அதனால் 2-3 மாதங்கள் ஆகிவிடுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அது உண்மையா? அப்படிப்பட்ட காலதாமதம் இல்லாமல் சம்பளம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நாம் எடுக்கப்பட்ட சிறந்த, சீரிய நடவடிக்கையைக் குறிப்பிட்ட பிறகும் மாண்புமிகு உறுப்பினர் காலதாமதம் ஆகிறது என்கிளை, வகையிலே அவர்களுடைய கேள்வியை எடுத்து இருக்கின்றும். இப்படிப்பட்ட காலதாமதங்கள் என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தின் சார்ப அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு 1972 ஜூன் 1 தேதி பிறப்பிக்கப்பட்ட புதிய ஆணையின்படி சம்பளம் பெர் கொள்ளும், மெட்ராஸ் டிரஷரி கோட் என்கிற விதிக கல்வி- கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. றவுக்கு

"அரசிதழ் பதிவு பெறாத அலுவலர் ஒருவர் ஓரிடத்திலிரு இன்னொரு இடத்திற்கு மாற்றலாகிச் செல்லும்போது—இரத்திடும் 'லாஸ்ட் பே சர்ட்டிபிகேட்' நகல்கள் தயாரித்து—அ ஒன்றை மாற்றலாகிச் செல்லும் அலுவலர் கையிலும், மற்றொ அஞ்சல் மூலமாகவும் அனுப்பவேண்டும்—மாற்றலாகிச் செ புகளைக் அலுவலர் கொண்டு செல்லும் சர்ட்டிபிகேட்டை சம்பள பி யர்களை சேர்த்து சம்பளத் தொகையை பெற்றுக்கொள்ள வழி செ வேண்டும். அஞ்சலில் பெறப்படும் நகலை அலுவலகத்தில் அலுவலரில் நேரில் தந்த சான்றிதழோடு ஒப்பு நோக்கிக் கொள்ளலாம்." ஏற்கனவே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒரு அலுவலர் மாற்றலாகிச் செல்வாரானால் அங்கே அவர் சென்ற

[1975 மார்ச் 24

2-3 மாதத்திற்குப் பிறகு தான் சம்பளம் வாங்க முடியும் என்ற சூழ்நிலை இருந்தது. காரணம், அவர் கடைசியாக பெற்ற சம்பளம் 'லாஸ்ட் பே' என்பதற்கான சான்றுகள் உடனடியாகக் கிடைக்காமல் இருந்ததுதான். அதை அனுப்பி வைக்க 2 மாதம், 3 மாதம் ஆகிற சூழ்நிலை இருந்தது. அதை மாற்றுவதற்கான வகையில், தற்போது மாற்றலாகிச் செல்லும்போதே அவர் கையில் 'லாஸ்ட் பே சர்ட்டிபிகேட்' நகல் ஒன்று கொடுத்துவிடவேண்டுமென்றும், மற்றுமொரு நகலை அஞ்சல் மூலம் அனுப்பிவிடவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அவர் தடங்கல் இல்லாமல் உடனடியாக சம்பளம் பெற்றுக்கொள்ள இப்போது வழி பிறந்து இருக்கிறது.

## *Teachers Provident Fund*

* 433 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether it is a fact that private managements of Aided Schools contribute towards Teachers Provident Fund; and

(*b*) if so, the amount of contribution?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**ிரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த பிராவிடென்ட் பண்டு ரனியார் பள்ளிகளில் கொடுக்கவில்லை, என்பது சர்க்காருக்குத் 'யுமா? கொடுக்கவில்லை என்றால் அவர்கள் மீது என்ன வடிக்கை எடுக்க சர்க்கார் உத்தேசித்து இருக்கிறது என்று விரும்புகிறேன்.

**ண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, டென்ட் பண்ட் செலுத்துகிற அத்தகைய முறை, உதவி துவக்கப்பள்ளிகள் உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகள் ழந்தவரையில் 1964-65-ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டு டது. அதற்குப் பிறகு, பிராவிடென்ட் முறை இல்லை. னெனில் அரசாங்கமே இலவசக்கல்வி கொண்டு வந்ததால் அந்த முறை இல்லை. 1—4—64 முதல் உதவிபெறும் துவக்கப்பள்ளிகளைப் பொறுத்தும், 1—6—65 முதல் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் பொறுத்தும் நிறுத்தப்பட்டு விட்டது. 1—6—70 விருந்து



1975 மார்ச் 24]

அதுவரையில் அரசாங்கமே முழு பிராவிடென்ட் பண்டு செலுத்தி வந்தது. 1—6—70-லிருந்து அவர்களுக்கு பென்ஷன், தரும் முறை, நாம் மேற்கொண்ட காரணத்தாலும், தாராள ஓய்வூதியம் தரும் முறை, குடும்ப ஓய்வூதிய முறை கொடுத்ததன் காரணமாக, 1—6—70-லிருந்து அரசாங்கத்தின் சார்பாகவோ, பள்ளிகளின் சார்பாகவோ இப்போது செலுத்தப்படுவதில்லை. அவர்களுக்கு கிராசுவுடி, பென்ஷன் வழங்குவதன் காரணமாக. பி.எப். முறை இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இப்போதும் கூட ஆசிரியர்கள் 10 சதவிகிதம் பிராவிடன்ட் பண்டு செலுத்து கிறார்கள். இந்தப் பள்ளி மானேஜ்மென்ட் 10 சதவிகிதம் கொடுப்பதில்லை. பதவி முடிந்த பிறகு கிராஜுவிட்டியாக 16 மாத சம்பளம் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே இந்த 10 சதவிகிதம் மானேஜ்மென்ட் கொடுத்தார்கள். அதை அவர்கள் நேரடியாக அரசுக்கு, கிராஜுவிட்டி எவ்வளவு செலுத்துகிறார்களோ அந்த அளவுக்கு செலுத்த வேண்டுமென்று ஏதாவது ஆணை பிறப்பிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதற்கான விபரம் தற்போது இல்லை; தனிக் கேள்வி போடவும்.

## ஆரம்பப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள்

* 434 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்பப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமித்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1-5 வகுப்புகளைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சியைக் கட்டாயப் பாடமாக அரசு வைத்திருப்பதால் அதற்கு ஏற்றவகையில் கீழ் மட்டத்திலிருந்தே மாணவர்களை தயார் படுத்தும் வகையில் ஆரம்பப்பள்ளிகளிலும் உடற்பயிற்சியை நல்லமுறையில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் கட்டாயமாக உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். 1973-74 ஆம் ஆண்டு 5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின்கீழ் 195 உடற்பயிற்சி ஆசிரியர்கள் உயர் தொடக்கப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டார்கள். 1975-76-ஆம் ஆண்டிலும் நாம் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிற நிதியிலிருந்து 200 உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, physical education activities are part and parcel of education in all stages and they take away bore and weariness and inculcate in the minds of the children team spirit, orderliness and discipline which are very important. So, may I know from the Hon. Minister whether he will make arrangements to teach physical education from the elementary school stage itself?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் அங்கு பணியாற்றுகிற ஆசிரியர்களே உடற்பயிற்சி கற்பித்து வருகிறார்கள். அங்கு தனியாக உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கவில்லை. உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சியை கட்டாயப் பாடமாக ஆக்கவேண்டுமென்ற செயற்குறிப்பு இருப்பதால் அது நடைமுறைக்கு வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தும் பரிசீலிக்கப்படும்.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற முதுமொழிக்கேற்ப ஆரம்பப்பள்ளிகளிலிருந்தே சரியான முறையில் உடற்பயிற்சிகளை கற்பிப்பதற்கு ஆரம்பப் பள்ளிகளில் கட்டாயமாக உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்போது உயர்தொடக்கப் பள்ளிகளிலேயே உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்வது முற்றுப்பெறாத நிலையில் இருக்கிறது. அதில் முதல் கவனம் செலுத்தி, முற்றுப்பெற்ற பிறகுதான் தொடக்கப் பள்ளிகளுக்குப் போகவேண்டும். உயர்



தொடக்கப் பள்ளிகளில் முற்றுப்பெறாமல் இருப்பதற்கு நிதி பற்றாக்குறை தான் காரணமாக இருக்கிறது. இந்த ஆண்டு 200 உடற்பயிற்சி ஆசிரியர்களை உயர்தொடக்கப் பள்ளிகளில் நியமனம் செய்ய ஏற்பாடு செய்துவருகிறோம்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, 500 மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிகளிலாவது இந்த உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஏராளமான பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்தால் ஓரளவு அவர்களுக்கு வேலையில்லாப் பிரச்சனை தீரும். ஆகவே, அரசாங்கம் அதுபற்றி பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, முதலில் உயர் தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் முழு அளவில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். உயர் தொடக்கப்பள்ளிகளில் அடுத்தாண்டிலிருந்து உடற்பயிற்சியை கட்டாயப் பாடமாக கொண்டுவரலாமா என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி கட்டாயமாக்கும்போது மேலும் பல உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும். ஆனால் ஆரம்பப்பள்ளிகளில் நியமனம் செய்ய இப்போதைய நிதிநிலை இடம் தரவில்லை. உயர் தொடக்கப் பள்ளிக்கே இன்னும் முழு அளவில் நியமனம் செய்யப்படாத போது ஆரம்பப்பள்ளிக்கு எப்படி இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆக, நிதி நிலையை உத்தேசித்து, முதலில் உயர்தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே. உடற்பயிற்சி ஆசிரியர் வேலைக்கு படித்துவிட்டு, 10 ஆண்டு, 8 ஆண்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். எல்லாத் தொடக்கப்பள்ளிகளிலும் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்வதாக இருந்தால் அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அதனால் அரசாங்கம் இந்த விஷயத்தில் துரித நடவடிக்கை எடுத்து உயர் தொடக்கப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதில் இருக்கிற சங்கடம் நிதிப் பற்றாக்குறைதான். இந்த ஆண்டு 200 ஆசிரியர்களை நியமிக்கத்தான் நீங்கள் எல்லாம் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். மேலும் நிதி ஒதுக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் நியமனம் செய்யலாம்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, 1975-76 ஆம் ஆண்டு 200 உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசு முடிவு செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் எந்தெந்தப் பள்ளிகளுக்கு, எந்த தகுதியின் அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. முறையான சில பல வன்முறைகளை ஏற்படுத்தி, அதன் அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்கள்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளும் உயர்தொடக்கப் பள்ளிகளும் சேர்ந்து இருக்கிற பள்ளிகளில் கூட போதுமான வகுப்புகள் அதிகம் இல்லாததால் உயர்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த உடற்பயிற்சி ஆசிரியர்களை போடுவதை அரசாங்கம் தடுக்கிறது. அதை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆண்டுக்காண்டு இத்தனை பேர்களை நியமிப்பது என்ற வரன்முறையை ஏற்படுத்தியிருப்பதால், எங்கெங்கு மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகமிருந்து, போதுமான விளையாட்டு இட வசதிகளும் இருக்கிறதோ அதற்கு முன்னுரிமை தருகிறோம். அதன் காரணமாக படிப்படியாக இதில் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவரவர்களே, உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்வதில், பொதுவாக உயர்தொடக்கப் பள்ளிகளுக்கு 1½ ஏக்கர் நிலமாவது விளையாடும் இடம் இருந்தால் தான் நியமனம் செய்யப்படும் என்ற விதிமுறை இப்போது இருக்கிறது. கிராமப்புறங்களில் பொதுமக்கள் உபயோகிக்கும் இடம்



அல்லது ஊர் நத்தமாக இருப்பதால் அந்த அளவுக்கு விளையாட்டு இடம் இல்லாததால் அது மறுக்கப்படுகிறது. ஆகவே, அந்த விதிமுறையை தளர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த விதிமுறை தளர்த்தப்பட்டால் பிறகு எங்கே போய் விளையாடுவது என்று தெரியாது. விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் விளையாடும் இடங்கள் கொடுத்தால்தான் பள்ளிக்கூடங்கள் தொடங்க முடியும். ஐந்து ஏக்கர் நிலம் இருந்தால்தான் உயர்நிலைப்பள்ளி தொடங்கலாம். அந்த 5 ஏக்கர் நிலத்திலும் கட்டடம் கட்டுவதில்லை. விளையாட்டிடம் வேண்டுமென்பதற்காக அப்படி வைத்திருக்கிறோம். அதைப் போலவே உயர்தொடக்கப் பள்ளிக்கு 1½ ஏக்கர் நிலம் இருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில்சொல்லும்போது ஆரம்பப்பள்ளிகளில் இப்போதுள்ள ஆசிரியர்களே உடற்பயிற்சியும் கற்றுத் தருவதாகச் சொன்னார்கள். அதற்கான விசேஷ பயிற்சி பெற்றவர்கள் கற்றுத் தருவதாக இருந்தால் இந்த உடற்பயிற்சியோடு 'சிவிக் ரெஸ்பான்ஸிபிலிடி' என்று சொல்லக்கூடிய வகையில் நல்ல பிரஜையாக சாலை விதிகள், சுகாதார முறைகள் போன்றவையும் கற்றுதரப் பட்டு—மாணவர்கள் திகழ முடியும். அந்த வகையில் உடற்பயிற்சி கற்றுத்தர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சி பெறும் போது அவர்களுக்கு உடற்பயிற்சி வகுப்பும் நடத்தப்படுகிறது. அந்த பயிற்சியை வைத்துக்கொண்டு, அவர்களே தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி கற்றுத் தருகிறார்கள். இப்போது நாம் கட்டாயமாக எல்லா பள்ளிகளிலும் கொண்டுவர வேண்டுமென்று விரும்புவதால் இப்போது ஆங்காங்கு இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற உடற்பயிற்சி ஆசிரியர்களைக் கொண்டு பக்கத்தில் இருக்கிற தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கும் உடற்பயிற்சி கற்றுத்தர முடியுமா என்பதுபற்றி பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செயற்குறிப்பு அனுப்பிய பிறகு தக்க பயிற்சி தர இயலுமா என்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

[1975 மார்ச் 24

**பிரான்மலையை சுற்றுலா மையமாக்கல்**

*435 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிரான்மலையை சுற்றுலா வாரியத்தில் பார்க்க வேண்டிய இடம் என சேர்க்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவரவர்களே, பிரான்மலை என்பது "முல்லைக்கு தேர் கொடுத்த பாரியின் மலை' ஆகும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதோடு மருது பாண்டியர்கள் கூட அங்கே இருந்தார்கள் என்று வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த அந்த இடத்தை சுற்றுலாத் துறையில் சேர்த்தால் மிகுந்த பயனுள்ளதாக இருக்குமே. அதுபற்றி அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இது முக்கியமான சுற்றுலா சார்ந்த இடங்கள் என்று கணிக்கப்படுகிற நிலை இல்லை. சுற்றுலாவுக்கு ஏற்ற வகையில் செல்வாக்கு பெற்று, பொதுமக்களை ஈர்க்கின்ற வகையில் சிறப்பு பெற்று, பொது மக்கள், உள்நாட்டு மக்கள், வெளி மாநிலத்து மக்கள், வெளி நாட்டு மக்கள் எல்லாம் அந்த இடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பெருமளவில் வந்து செல்லக்கூடிய வகையில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்ற இடமாக இருந்தால் அதை ஒரு சுற்றுலா சிறப்புப் பெற்ற இடமாக அமைத்து, சுற்றுலா வாரியம், சுற்றுலா துறை மூலமாக தக்க வசதிகளைச் செய்து கொடுக்கலாம். அது அல்லாமல் இது இது சுற்றுலா சிறப்பிடம் என்று நாம் பட்டியல் போட முடியாது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முல்லைக்கு தேர் ஈந்த பாரியின் மலை என்பது எல்லோருக்கும் தெரியும் என்று சொன்னார்கள். இங்கே இருப்பவர்களுக்கே எல்லோருக்கும் தெரியுமா என்பது சந்தேகம் (சிரிப்பு). பெருமளவில் மக்கள் வந்து செல்லக்கூடிய வகையில் மக்களை ஈர்க்கின்ற வகையில் அந்த இடம் சிறப்புப் பெற்றிருந்தால் அதற்கேற்ப சுற்றுலா வாரியம் வசதிகளைச் செய்யும்.



1975 மார்ச் 24]

(முற்பகல் 9-30)

திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலுள்ள சுற்றுலாவுக்குத் தகுதியான இடங்கள் என்னவென்று நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரிவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற அங்கத்தினர்களுக்கே தெரியாதபோது பொதுமக்களுக்குத் தெரியவும் நியாயம் இல்லை. ஆகவே, சுற்றுலாவுக்கு ஏற்ற முக்கியமான இடங்களைச் சினிமாப் படங்கள் எடுத்து—நாட்டு மக்களிடையே விளம்பரப்படுத்த—அதன் மூலம் சுற்றுலா இடங்களை அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சுற்றுலா வாரியம் இது சம்பந்தமாக வண்ணப்படம் எடுத்து—வெளிநாடுகளுக்கு அனுப்பவும், உள்நாட்டில் பலயிடங்களில் போட்டுக்காட்டி விளம்பரப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. முக்கியமான இடங்கள் கோவில், கோபுர, சிற்பக்கலைகள், நாட்டியக் கலை சம்பந்தமான சிற்பங்கள் ஆகிய எல்லாவற்றையும்கூட ஒரு படமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் மேல்நாட்டாருக்கு எந்த முறையில் படம் எடுத்தால் கவர்ச்சிகரமாக இருக்கும் என்று கருதி, அந்த முறையிலும் நிபுணர்களைக் கொண்டு வண்ணப் படம் எடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ஆறுமுகம்:** தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் சுற்றுலா நிலையங்கள் இருக்கின்றன, அவற்றை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவதாகக் கருதப்படுகிறது.

சென்னை மாநகரம்—அமைந்துள்ள மாவட்டம் சென்னை.

திருக்கழுக்குன்றம் (யாத்திரைத்தலம்), திருத்தணி (யாத்திரைத்தலம்), காஞ்சிபுரம் (ஆலயச் சிற்பங்கள்; யாத்திரைத்தலம்), மாமல்லபுரம் (ஆலயச் சிற்பங்கள்), வேடந்தாங்கல் (பறவைகள் உய்விடம்)—அமைந்துள்ள மாவட்டம் செங்கற்பட்டு.

வேலூர் (கோட்டை), திருவண்ணாமலை—அமைந்துள்ள மாவட்டம் வட ஆற்காடு.

[1975 மார்ச் 24

சிதம்பரம் (யாத்திரைத்தலம்), பிச்சாவரம் (உல்லாச விருந்துக்கேற்ற இடம் தாவர இயல் முக்கியத்துவம் வாய்ந்த இடம்), செஞ்சி, (கோட்டை)—அமைந்துள்ள மாவட்டம் தென் ஆற்காடு.

காவிரிப்பூம்பட்டினம் (தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடம்), கோடிக்கரை (பறவைகள் உய்விடம்), தஞ்சாவூர் (ஆலயச் சிற்பங்கள்), திருவையாறு (யாத்திரைத்தலம், தியாகராஜர் வாழ்ந்த இடம்), வேளாங்கண்ணி (கிறிஸ்தவ யாத்திரைத் தலம்), நாகூர் (முகமதியர் யாத்திரைத் தலம்), கும்பகோணம் (யாத்திரைத்தலம்)—அமைந்துள்ள மாவட்டம் தஞ்சாவூர்.

திருச்சிராப்பள்ளி (யாத்திரைத்தலம்), ஸ்ரீரங்கம், நார்த்தமலை, சித்தன்னவாசல், புதுக்கோட்டை, திருமயம் (வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை)—அமைந்துள்ள மாவட்டங்கள் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை.

மதுரை (யாத்திரைத்தலம் ஆலயச் சிற்பங்கள்) சுருளி அருவி (அருவியும், கண்கவர் காட்சியும்), கோடைக்கானல் (மலை விறைவிடம்), அழகர்கோயில் (யாத்திரைத்தலம்)—அமைந்துள்ள மாவட்டம் மதுரை.

இராமேஸ்வரம் (யாத்திரைத்தலம்)—அமைந்துள்ள மாவட்டம் இராமநாதபுரம்.

திருநெல்வேலி (யாத்திரைத்தலம்)—சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்தது, ஆலயச் சிற்பங்கள் நிறைந்தது; திருச்செந்தூர் (யாத்திரைத்தலம்), சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடம்; பாபநாசம் (அருவி)—அமைந்துள்ள மாவட்டம் திருநெல்வேலி.

திருமூர்த்தி அருவி (அருவியும், கண்கவர் காட்சியும்), டாப்ஸ்லிப் (வேட்டை ஆடுவதற்கு ஏற்ற இடம், வன விலங்கு உய்விடம்)—அமைந்துள்ள மாவட்டம் கோயம்புத்தூர்.

திரு. க. உரொ. எட்மண்ட்: நெல்லை மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களைப்பற்றிச் சொன்னார்கள். பாளையங்கோட்டைக்கு அருகில் இருக்கிற கிருஷ்ணாபுரம் சிற்பங்களில் தலை சிறந்த இடம்—அதையும் இந்த லிஸ்டில் சேர்க்க முன்வருவார்களா?



1975 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முக்கியமான இடங்களைப்பற்றித்தான் குறிப்பிட்டேன் தவிர எல்லா இடங்களையும் குறிப்பிடவில்லை. ஆவுடையார்கோவிலைப்பற்றியும் சொல்லவில்லை. நான் முக்கியமான இடங்களைத்தான் குறிப்பிட்டேன்.

### கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கால்வாய்களைப் புதுப்பித்தல்.

* 436 வினு—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால்களை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

The Hon. THIRU P. U. SHANMUGHAM: (a) & (b) Yes. Government have approved of scheme for remodelling of the Kalingarayan channel, and Arakkankottai channel. Remodelling of Thadapalli channel is under consideration.

* 437 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம். பவானி அருகிலுள்ள பழைய காளிங்கராயன் கால்வாயை அபிவிருத்தி செய்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. எஸ். கே. சுப்பிரமணியம்: காளிங்கராயன் வாய்க்கால் வேலை துவக்கப்பட்டுவிட்டதா? துவக்கப்பட்டுவிட்டால் இதற்காக எவ்வளவு மூலதனம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு செலவாகியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காளிங்காயன் வாய்க்கால் வேலை துவக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறேன். அதற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிற தொகை ரூ. 60 லட்சம். எவ்வளவு செலவாகியிருக்கிறது என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை.

[1975 மார்ச் 24

### தலைக்கானிகுப்பத்தில் புதிய ஏரி

*438 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் தலைக்கானிகுப்பம் கிராமத்தில் புதிய ஏரி கட்டுவதற்காக அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) ஆம். ரூ. 1-05 லட்சத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *Vermiculite deposits in Thiruppathur*

*439 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the progress made so far in the implementation of the scheme taken up by the Geology Branch formed under Industries and Commerce Department for mining and processing of Vermiculite in Tiruppathur taluk in North Arcot district?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 1972 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சுரங்கத்தில் முறையான உற்பத்தி தொடங்கப் பெற்று சுமார் 800 டன் நீர் அபிரகப்படிவம் வெட்டியெடுக்கப்பட்டு தரம் வாரியாகப் பிரித்து சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. நீர் அபிரகப்பட்டைத் தொழிற்சாலை, அதற்கு வேண்டிய எல்லா இயந்திரங்களுடன் 1973-ம் ஆண்டு மத்தியில் அம்பத்தூரில் நிறுவப்பட்டது. இத்தொழிற்சாலையில் மாதிரி ஓட்டம் நடத்தியதில், ஊக்கமளிப்பதாக இருக்கிறது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு ஒரு டன் நீர் அபிரகப்பட்டை தயாரிக்குமளவிற்கு தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** இதை விற்பதன் காரணமாக நமக்கு உத்தேசமாக எவ்வளவு வருமானம் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** உத்தேச வருமானம் எவ்வளவு என்ற விவரம் இல்லை. இது புதிய விதமான கண்டுபிடிப்பு—இதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு வரவில்லை.



1975 மார்ச் 24]

Since this is a new type of mineral and as its different uses were not earlier experimented upon by private agencies, they have not come forward to buy the exfoliated vermiculite in large quantities. However, the Geology branch has been making enough publicity by way of distributing pamphlets and samples of exfoliated vermiculite to interested enterpreneurs. About 12 tonnes of exfoliated vermiculite has been manufactured and sold to Tamil Nadu Small Industries Corporation, I.C.F. of Southern Railway and to private firms on demand.

இதைக் கொண்டு insulation Boards, tiles, partition walls ஆகியவை செய்யலாம் என்று சொல்லப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்தத் தாதுப்பொருளை வெட்டுவதற்கு எவ்வளவு மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளது? இது அரசாங்கத் துறையில் செய்யப்படுகிறதா? தனியார் துறையில் செய்யப்படுகிறதா? மொத்தம் எவ்வளவு எடுக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** என்னிடத்தில் இருக்கிற குறிப்பின்படி வடாற்காடு மாவட்டத்தில் சேவத்தூர் என்ற இடத்தில் 60 ஏக்கராவில் இதுபோன்ற கனிப்பொருள் எடுக்கப்படுகிறது. அங்கே 3 லட்சம் டன் கனிவளம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்காக மூணேமுக்கால் லட்சம் ரூபாய் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### *Survey on granite deposits*

*440 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state:

(a) whether it is proposed to undertake a Geological Survey in the districts of Dharmapuri, North Arcot, South Arcot and Salem to find out the availability of Black Granites; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) தொழில் வணிகத்துறையைச் சேர்ந்த மாநில புவியியல் பிரிவு தருமபுரி, சேலம், வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் புவியியல் ஆய்வினை மேற்கொண்டது. தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் இவ்வாய்வு முடிவடைந்துள்ளது. வடாற்காடு மாவட்டத்தில் ஆய்வு நடந்தேறி வருகிறது.

[1975 மார்ச் 24

இந்த ஆய்வு மேற்கொண்டதன் விளைவாக கணிசமான அளவு கருங்கல் படிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப் படிமங்களை வெட்டியெடுப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

*441 வினா—**திரு. ந. முத்துவேல்:** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் குன்னம், பெரும்பாக்கம் பகுதியில் கிடைக்கும் கருப்புக் கற்களை ஏற்றுமதி செய்யாமல் அங்கேயே தொழிற்சாலை நிறுவி சுத்தம் செய்ய அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) வானூரில் கருங்கல் மெருகிடும் உற்பத்தி நிலையம் துவங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் அங்கு கருங்கல் மெருகிடும் பயிற்சி நிலையம் துவங்குவதற்கான தொழில் வணிக இயக்குநரின் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தக் கருங்கல் என்ன என்ன வேலைகளுக்கு உபயோகப்படும்? சிலர் யாருக்கும் தெரியாமல் வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பி பணம் பெறுகிறார்களே, அவை இந்த க்ரானைட்டில் சேருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எனக்குள்ள தகவல்படி அன்பாலிஷ்டாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக தகவல் இருக்கிறது. நாமே பாலிஷிங் யூனிட்டுகளை எங்கெங்கே அமைக்கலாம் என்பதை வணிக இயல் துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். சில மாவட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் ஆய்வு செய்யப்பட்ட பிறகு இதை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பது யோசிக்கப்படும்.

**திரு. அ. ஆறுமுகம்:** கருங்கல்லை வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் தமிழக அரசுக்கு வருமானம் எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?



1975 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் என்று இல்லை. ராயல்டி என்ற முறையில் கிடைக்கும் என்று நினைக்கிறேன். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. தி. பொன்னுமலை:** தலைவரவர்களே, சேலம்-தர்மபுரி போன்ற மாவட்டங்களிலே இந்தக் கருங்கல் இருப்பதைக் கண்டுபிடித்து பல பேர் லைசென்ஸ் வாங்கி வெட்டி எடுக்கிறார்கள். வெட்டி எடுத்த பல பேர் இலட்சக்கணக்கான முதலை இழந்துவிட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த அரசு ஏதாவது பாதுகாப்பு அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** யாருக்குப் பாதுகாப்பு? வெட்டி எடுத்தவருக்குப் பாதுகாப்பா? அல்லது பணம் சம்பாதித்தவருக்குப் பாதுகாப்பா?

**திரு. எம். சுரேந்திரன்:** கருங்கல் படிவங்களைப் பற்றி ஆய்வு செய்ததிலே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு கிடைக்கும் என்று ஏதாவது கணக்கிடப்பட்டிருக்கிறதா? அப்படி ஓரளவு கிடைக்கச் செலவிட வேண்டிய பணம் பற்றி கணக்கிடப்பட்டிருக்கிறதா? இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு அனுப்பப்படுகிறது என்பதைப் பற்றி ஏதாவது கணக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, Black-granite in Dharmapuri and Salem districts would be in the order of 14 lakhs cubic metres in Dharmapuri district and 2.60 lakhs cubic metres in the Salem district; systematic survey of black granite in South Arcot has been completed and the work in North Arcot is nearing completion; after completion of survey in all the districts, the Director of Industries will send a detailed note of the promising deposit.

வணிகத் துறை இயக்குநருடைய அறிக்கை வந்த பிறகுதான் இந்த விவரங்களை எல்லாம் நம்மால் தர முடியும்.

[1975 மார்ச் 24

இந்த ஆய்வு மேற்கொண்டதன் விளைவாக கணிசமான அளவு கருங்கல் படிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப் படிமங்களை வெட்டியெடுப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

*441 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் குன்னம், பெரும்பாக்கம் பகுதியில் கிடைக்கும் கருப்புக் கற்களை ஏற்றுமதி செய்யாமல் அங்கேயே தொழிற்சாலை நிறுவி சுத்தம் செய்ய அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) வானூரில் கருங்கல் மெருகிடும் உற்பத்தி நிலையம் துவங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் அங்கு கருங்கல் மெருகிடும் பயிற்சி நிலையம் துவங்குவதற்கான தொழில் வணிக இயக்குநரின் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தக் கருங்கல் என்ன என்ன வேலைகளுக்கு உபயோகப்படும்? சிலர் யாருக்கும் தெரியாமல் வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பி பணம் பெறுகிறார்களே, அவை இந்த க்ரானைட்டில் சேருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எனக்குள்ள தகவல்படி அன்பாலிஷ்டாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக தகவல் இருக்கிறது. நாமே பாலிஷிங் யூனிட்டுகளை எங்கெங்கே அமைக்கலாம் என்பதை வணிக இயல் துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். சில மாவட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் ஆய்வு செய்யப்பட்ட பிறகு இதை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பது யோசிக்கப்படும்.

**திரு. அ. ஆறுமுகம்:** கருங்கல்லை வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் தமிழக அரசுக்கு வருமானம் எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?



1975 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் என்று இல்லை. ராயல்டி என்ற முறையில் கிடைக்கும் என்று நினைக்கிறேன். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. கி. பொன்னுமலை:** தலைவரவர்களே, சேலம்-தர்மபுரி போன்ற மாவட்டங்களிலே இந்தக் கருங்கல் இருப்பதைக் கண்டுபிடித்து பல பேர் லைசென்ஸ் வாங்கி வெட்டி எடுக்கிறார்கள். வெட்டி எடுத்த பல பேர் இலட்சக்கணக்கான முதலை இழந்துவிட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த அரசு ஏதாவது பாதுகாப்பு அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** யாருக்குப் பாதுகாப்பு? வெட்டி எடுத்தவருக்குப் பாதுகாப்பா? அல்லது பணம் சம்பாதித்தவருக்குப் பாதுகாப்பா?

**திரு. எம். சுரேந்திரன்:** கருங்கல் படிவங்களைப் பற்றி ஆய்வு செய்ததிலே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு கிடைக்கும் என்று ஏதாவது கணக்கிடப்பட்டிருக்கிறதா? அப்படி ஓரளவு கிடைக்கச் செலவிட வேண்டிய பணம் பற்றி கணக்கிடப்பட்டிருக்கிறதா? இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு அனுப்பப்படுகிறது என்பதைப் பற்றி ஏதாவது கணக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, Black-granite in Dharmapuri and Salem districts would be in the order of 14 lakhs cubic metres in Dharmapuri district and 2.60 lakhs cubic metres in the Salem district; systematic survey of black granite in South Arcot has been completed and the work in North Arcot is nearing completion; after completion of survey in all the districts, the Director of Industries will send a detailed note of the promising deposit.

வணிகத் துறை இயக்குநருடைய அறிக்கை வந்த பிறகுதான் இந்த விவரங்களை எல்லாம் நம்மால் தர முடியும்.

[1975 மார்ச் 24

**திரு. மு. சண்முகம்:** தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலே திருவக்கரை என்ற ஊரில் கருங்கல் படிவப் பகுதிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? அவை பற்றி குறிப்புகள் ஏதேனும் உண்டா? அதைப் பற்றி அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இந்த சர்வே முடிந்திருப்பதாகக் குறிப்பு இருக்கிறது. வணிகத் துறை இயக்குநர் அவர்களின் அறிவிப்பு வந்த பிறகுதான் முடிவான கருத்துச் சொல்ல முடியும்.

**திரு. ந. நாச்சியப்பன்:** தலைவரவர்களே, தென்னாற்காடில், கல்விராயன் மலைப்பகுதியில் சடையக் கவுண்டன் ஜாகிரில் இதுபோன்ற கருப்பு கருங்கல்லை ஜாகீர்தார் தனியாக விற்பனை செய்வதாகத் தெரிகிறது. அது அரசுக்குத் தெரியுமா? அதனைத் தனியாக விற்க இடம் கொடுக்காமல், அரசே மேற்கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலிருந்து அதுபற்றி நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தக் கருங்கல்லுக்கு வெளி நாடுகளிலே அதிகமாகக் கிராக்கியிருப்பதாலே, டிஸ்கோ போன்ற அரசு நிறுவனங்கள் மூலம் வியாபாரம் பண்ணினால் அரசுக்கு அதிகமாக இலாபம் வரும். ஆகவே, தனியாருக்குக் கொடுத்த லைசென்ஸை ரத்து செய்துவிட்டு, சர்க்கார் துறையிலே நடத்த ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் ஏற்கனவே சொன்னதுபோல் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுவரையிலே இப்பொழுதிருக்கிற நிலைமையையே நீடிக்க முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அப்பொழுதுதான் தனியார் துறையிலே அனுமதிக்கலாமா அல்லது அரசுத் துறையிலே ஏற்றுக் கொள்ளலாமா என்று முடிவு செய்யலாம். அந்த அறிக்கை வருகிற வரை, தனியார் துறையை அனுமதிக்கிறோம்.



1975 மார்ச் 24]

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இதுவரை பிளாக் கிரானைட்ஸ் எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்ப எத்தனை தனிப்பட்டவர் களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்தக் கணக்கு இப்பொழுது இல்லை. அதைப்பற்றி பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. இப்பொழுது சில விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படி, மாவட்ட ஆட்சித் தலைவரே அனுமதிக்கலாம். குறிப்பிட்ட ஏரியாவுக்கு மேல் போனால் அரசாங்கத்திற்கு அனுப்பி, அனுமதி வாங்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. இப்பொழுது வணிகத் துறை இயக்குநரின் அறிக்கை வரும் வரையிலே, தற்போதுள்ள முறையைப் பின்பற்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இந்த கிரானைட்டை ஏற்றுமதி செய்வதன் மூலம் நிறைய அன்னியச் செலாவணி கிடைக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே செய்யாறு, திருவண்ணாமலை, வந்தவாசி வட்டங்களில் ஏராளமான கிரானைட் இருப்பதாகவும் ஆனால் அரசாங்கம் தனிப்பட்ட யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று முடிவெடுத்துள்ள காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் யாருக்கும் அனுமதி கொடுக்காமலிருக்கிறார்கள். இதை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஏராளமான அன்னியச் செலாவணி கிடைக்கின்ற காரணத்தால், இதை ஊக்குவிக்கத் தனியார் யாராவது விண்ணப்பம் செய்தால், அவர்களுக்கு இந்த கிரானைட் வெட்டி எடுக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்திரவு அனுப்ப அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வட ஆற்காடு மாவட்டத்தில் சர்வே முடியவில்லையென்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அது முடிகிற நேரத்திலே இந்தப் பிரச்னை வரும்போது சர்க்கார் முடிவு எடுக்கும். அதுவரை தனியாருக்கு அனுமதி கொடுக்கலாம். குறிப்பிட்ட விதிமுறைகளுக்குட்பட்டு கொடுக்கலாம் என்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட ஏரியாவுக்கு மேல் என்று சொன்னால், அரசாங்கத்திற்கு அனுப்பி, அரசாங்க அனுமதியைப் பெற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, granite stones of various sizes and colours are available in Dharamapuri in various parts. Though we are just now investigating, the merchants from neighbouring areas have been exploiting the stones in the last 50 years and more and they have been making plenty of money. May I know from the Hon. Minister for Electricity and Industries when the investigation will be over and when the Government would start the factory in Dharamapuri district?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: As I have already said that so far as Dharamapuri and Salem districts are concerned, the survey is over, while so far as South Arcot is concerned, it is also over; in the North Arcot district, the survey is pending. After completion of survey in all districts, the Director of Industries will submit a report and only on that report Government will come to any conclusion.

*Construction of College buildings by Housing Board*

* 442 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the Housing Board has offered assistance to private colleges for putting up buildings; and

(b) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.*

*(இ) இக்கேள்விக்கு இடமில்லை.*

*திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கல்விக்காகப் பெரும் தொகை ஒதுக்கப்படுகிறது. கல்லூரிக்கு ரெக்கக்னிஷன் கிடைக்க பிறகு, பல கல்லூரிகளுடைய கட்டடங்கள் நல்ல விதத்தில் இல்லாத காரணத்தினால் வகுப்புகளை ஒழுங்காக நடத்த முடியாமலிருக்கிறது. ஆகவே, கல்வித் தரம் குறைவாக இருக்கிறது. ஆகவே, இவ்விதமாக தனியார் கல்லூரிகளில் கட்டடம் சரியாக இல்லாத கல்லூரிகளுக்காவது இந்தத் தொகையைக் கொடுத்து, அதற்கு வேண்டிய செக்யூரிட்டியையும் வாங்கி, இன்ஸ்டால்மெண்ட் பேஸிஸிலாவது அந்தத் தொகையைத் திரும்பப் பெற உரிய திட்டங்களை அரசு வகுக்குமா என அறிய விரும்புகிறேன்.*





*மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், வீடுகள் கட்டிக் கொடுக்கவே நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருக்கிறது. ஒரு கல்லூரிக்கு கட்டடம் கட்ட ரூ. 5 இலட்சம், ரூ. 6 இலட்சம் ஆகிறது. தவணை முறையில் ரூ. 50,000 என்ற வகையில் பெற்றுக் கொள்ளலாமென்றால்கூட, ரூ. 5 இலட்சம் என்ற வகையில் கொடுக்க வேண்டி வந்தால், ரூ. 10,000-ல் 40, 50 பேர்களுக்கு வீடுகள் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் தவிர்க்கப்படும். ஆகவே, மக்களுடைய தேவைகளை அதிகமாகக் கவனிக்கக்கூடிய தன்மையில் தற்பொழுது வீட்டு வசதி வாரியம் செயல்பட்டு வருகிறது.*

*Medical Representatives*

* 443 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the State Government have represented to the Centre on the question of declaring medical representatives in the State as 'Workmen' under the Industrial Disputes Act; and

(b) if so, whether any reply has been received from the Centre?

*மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) மருத்துவப் பிரதிநிதிகளையும் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் கொண்டுவர அச்சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டுமென்று, தமிழ்நாடு மருத்துவப் பிரதிநிதிகள் சங்கத்திடமிருந்து வந்துள்ள ஒரு மனுவை, 1970-ம் ஆண்டு அக்டோபரில் இவ்வரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்பியுள்ளது. எவ்வித பதிலும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.*

*திரு. என். கே. பழனிசாமி: சார், 1970-ம் வருஷத்திலே இந்தச் சர்க்கார் எழுதியிருக்கிறது. ஆனால், இதுவரையிலும் பதில் வரவில்லை என்பதால், மறுபடியும் அது பற்றி அகில இந்தியத் தொழில் மந்திரிகள் மாநாட்டிலே வற்புறுத்த சர்க்கார் முயற்சி செய்யுமா?*

[1975 மார்ச் 24

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நாம் மத்திய அரசிடம் கேட்டபொழுது, இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் பில் என்ற ஒரு காம்ப்ரஹென்சிவ் பில்லைக் கொண்டு வருவோம். அதிலே எல்லாம் அடங்கிவிடும், அடங்கிவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மசோதா எப்பொழுது வருகிறதோ, அப்பொழுதுதான் விமோசனம் கிடைக்கும். ஆனால், சம்பந்தப்பட்ட மாநாட்டிலே, மதுரையிலே, நானே கலந்து கொண்டேன். அந்த மாநாட்டிலே அவர்கள் சொன்ன கோரிக்கை நியாயம் என்று எனக்குப் பட்டது. ஆனால், அகில இந்திய ரீதியில் இந்தப் பணியாளர்கள் இருக்கிற காரணத்தால், அகில இந்திய ரீதியில் சட்டம் கொண்டு வந்தால்தான் நல்லது என்ற வகையில், மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். மத்திய அரசினுடைய சம்மதத்திற்காகக் காத்திருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்டைப் பொறுத்தவரையிலும் சில மாநிலங்கள் திருத்தம் கொண்டு வந்து, சட்டமாக்கியிருக்கிறார்களே, அதே மாதிரி இந்தத் தொழிலாளிகள் யார் என்பதை நம்முடைய அரசிலே யார் யாரை இணைக்க விரும்புகிறார்களோ, அவர்களை இணைக்கச் சட்டத்திருத்தம் கொண்டு வர யோசனை செய்யுமா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அந்த மாநாட்டுகளுக்குப் போனேன். அவர்கள் சொன்ன கருத்து நியாயமாகப்பட்டதைச் சொன்னேன். 'வர்க்மென்' என்ற தலைப்பின்கீழ் அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் தமிழக அரசுக்கு இருக்கிற எண்ணம். ஆனால், அகில இந்தியா பூராவும் அப்படிப்பட்ட பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அகில இந்திய அளவில் சட்டமாக வந்தால்தான் நல்லது. அங்கே இருக்கிற தொழிலாளர் நலத் துறைக்கு நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். அவர்கள் எல்லாம் பில் கொண்டு வரப் போகிறோம், கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரும் வரையிலும் பொறுத்திருக்க வேண்டுமென்று கருதுகிறோம்.



1975 மார்ச் 24]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மருத்துவப் பிரதிநிதிகளைப் போல், இன்னும் பல்வேறு தொழிலாளர்கள் தொழிலாளர் சட்டத்தின் பயனைப் பெற வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தினை திருத்துவதற்குள்ள உரிமை மத்திய அரசாங்கத்திடம் இருந்தாலும், இந்தச் சட்டத்தின்கீழ் செயலாற்றும் உரிமை (வித்தின் ஃபிரேம்ஒர்க்) மாநில அரசுக்கு உண்டு. ஆகவே, அந்த ரூல்ஸை மாற்றி, இன்னும் மேற்கொண்டு எந்தெந்தத் தொழிலாளர்களைச் சேர்க்கவேண்டுமோ, அவர்களைச் சேர்க்க ஆவன செய்ய அரசாங்கம் முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட கருத்து ஒரு நல்ல யோசனையாகும். அரசு ஆலோசிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: சார், 1970-ல் மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1970-க்குப் பின்னாலே இதுவரையிலும் பதிலே இல்லை. அப்படியானால் அதற்குப் பிறகு நினைவுபடுத்துகின்ற வகையிலே ஏதாகிலும் கடிதம் எழுதியிருக்கிறார்களா? தொழிலாளர் என்பதற்கான விளக்கத்திற்கு நாமே விதிமுறைகளை மாற்றியமைக்கலாமே அப்படிச் செய்யாமல் ஏன் மத்திய அரசாங்கத்தினை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதைப் பற்றி தொழிலாளர் நல அமைச்சரைச் சந்திக்கிறபோதெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டே வந்திருக்கிறோம். அகில இந்தியா பூராவிலும் இப்படிப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அகில இந்தியா பூராவிற்குமாகச் சேர்த்து இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் நல்லது, அப்படியில்லாமல் இருந்தால் அங்கே ஒருமாதிரி இருக்கிறது, இங்கே ஒருமாதிரி இருக்கிறது என்ற நிலவரம் இருக்கும். ஆகவே பொதுவாக அகில இந்தியா பூராவிற்கும் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதுதான் முறையாக இருக்கும் என்றுதான் நாம் அந்த முறையிலே சிபாரிசு செய்திருக்கிறோம்.

[1975 மார்ச் 24

### Bull Mother Farm, Ooty

*444 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) whether separate allotment has been made for Bull Mother Farm at Ooty for the maintenance of heifers and Bulls obtained from abroad during 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) உதகமண்டலத்திலுள்ள பொலி காளை-கடாரி பண்ணையைப் பேணி வருவதற்காக ரூ. 14,98,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இதுவரையிலும் எந்த எந்த வெளிநாடுகளிலிருந்து இம்மாதிரி புல்ஸ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன? வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய ஆடுமாடுகளுக்குப் பொதுவான நோய்கள் வருவதன் காரணமாக அது இங்கேயும் பாதிக்கிறது என்று சொல்கிறார்களே. அதைக் தடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, வெளிநாடுகளிருந்து கொண்டுவரக்கூடிய இப்படிப்பட்ட காளைகள் உதகமண்டலத்தில் வைக்கப் படுவதால்தான் போதுமான தட்பவெட்ப நிலைக்குப் பொருந்தி வருகிறது என்ற காரணத்தினால்தான் அங்கே வைக்கிறோம். வெளிநாடுகளிலிருந்து வருகின்றன என்றால் ஆஸ்திரேலியாவிலிருந்து, இங்கிலாந்திலிருந்து, இன்னும் பல்வேறு நாடுகளிலிருந்து எல்லாம் கடந்த 3, 4 ஆண்டுக்காலத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. உதகமண்டலத்திலே 50 பசுமாடுகளைப் பராமரிப்பதற்காகவும் தொத்துநோய்கள் தடுக்கப்படுவதற்கான முறையிலேயும் ஏற்பாடுகள் செய்வதற்குத்தான் இந்த அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 மார்ச் 24]

### கொள்ளிடம் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்

*445. வினா—திரு. டி. வி. சம்பத்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் கூட்டுறவு பால் வழங்கு சங்கம் தற்பொழுது செயல்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம். கொள்ளிடம் பால் வழங்கு கூட்டுறவு சங்கம் பால் உற்பத்திக் குறைவு, முறைகேடான நிர்வாகம், உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு இன்மை ஆகிய காரணங்களால் 28—5—1972 முதற்கொண்டு செயல்படவில்லை.

(இ) 1970–71-ல் அச்சங்கத்திற்கு அரசு ரூ. 41,500 அளவிற்குக் கடனும் ரூ. 41,500 அளவிற்கு உதவித் தொகையும் வழங்கியது. கடன் தொகையில் 8,000 ரூபாயை மட்டுமே சங்கம் திருப்பிச் செலுத்தியது. எஞ்சியுள்ள ரூ. 33,500 அசலையும், ரூ. 8,456.93 வட்டியையும் அது செலுத்த வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### தமிழ்நாட்டில் தனியாக முதலமைச்சரின் வறட்சி நிவாரண நிதி அமைக்கப்பட்டதும், அதன் விளைவுகளும் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர்,

"Serious situation arising out of unwanted rivalry with the Centre by constituting a separate Fund for Relief and making it a party issue in collections and consequent unrest"

சொல்லத்தான் நான் வந்தேன். தமிழ் நாட்டிலே தமிழ் நாடு அரசு இந்திய அரசின் ஒப்புதல் பெற்று இருக்கக்கூடிய அரசு, மத்திய அரசு நமக்கு உதவி செய்யக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இயற்கையின் சீற்றத்தின் காரணமாக ஏற்படக் கூடிய காரியங்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு

Subject to correction, the Central Government has allotted Rs. 161 crores for the year 1975-76.

161 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கக் கூடிய நிதியிலிருந்து நமக்கு வேண்டியதைப் பெற வேண்டியது நம்முடைய கடமை. அந்த முறையிலே பெறுவது என்பது தமிழ் நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிகளினுடைய பொறுப்பு ஆகும். அப்படியிருக்கிறபோது நிதிநிலையறிக்கையில் That is also subject to correction 30 கோடி கொடுப்பார்கள் என்றும் நாம் 25 கோடி செலவு செய்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது. இப்போது. தனியாக ஒரு நிதியை அமைப்பது முறையானதல்ல, சரியானதல்ல; இதனால்; பல நிர்ப்பந்தங்கள் வரும். வெல்லத்திலே பிள்ளையார் செய்து அதிலே கொஞ்சம் எடுத்து நெய்வேத்தியம் செய்வது மாதிரியான கதையாக இருக்கிறது. கோயில் நிதி இருக்கிறது. அதிலிருந்து ஐந்தேகால் லட்சம் என்று இதற்கு நிதி கொடுக்கப் படுகிறது. சர்க்கார் சிப்பந்திகளுக்கு பஞ்சப்படி கொஞ்சம் கொடுக்கிறோம். அவர்களுக்கு அரியர்ஸ் கிடைத்தால் அந்தப் பணத்தை எடுத்துக்கொள்வது என்று பலவிதமான நிர்பந்தங்கள் இருக்கின்றன. எல்லா ஜில்லாக்களிலேயும் சர்க்கார் அதிகாரிகளுக்கு இனிமேல் இதே வேலையாகத் தான் போய்விடும்.

மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், இப்போது இப்படிச் செய்வது சரியல்ல. இது தனிப்பட்ட ஒருவருடைய பிரச்னையல்ல, இதைப்பற்றி மத்திய அமைச்சரே தெளிவாக்கியிருக்கிறார், காலைப் பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன. நான் பேசியது தவறாக இருந்தால்கூட அது அல்ல முக்கியமான பிரச்னை என்று சொல்லியிருக்கிறார்கள். வறட்சி நிதி என்று தனியாக அமைப்பது சரியல்ல. இது அவசியந்தானா என்று



விவாதிக்கக்கூடிய முறையிலே சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்ற முறையிலேதான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறோம். அரசினுடைய பொறுப்பு அதிகமாக இருக்கிறது, சிலருடைய ஆவேசமான நிலைமை அரசையும் கட்டுப்படுத்தி, அரசைச் சேர்ந்த எல்லோரையும் கட்டுப் படுத்துகிறது என்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு இடைஞ்சலாக இருக்கிற காரணத்தினால் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

DR. H. V. HANDE: Sir, I seek the leave of the House to move a specific motion that the business of the House do stand adjourned to discuss a matter of urgent public importance namely, diversion of normal administrative machinery towards the collection of funds for the State for drought relief funds as a result of the State Government not seeking adequate Central aid for the same. In other words, the basis of my adjournment motion is to pinpoint the problem of the State when it raised State Drought Relief Fund, with the Hon. Chief Minister as its head. If the entire Governmental machinery is diverted towards it, what will happen to the State is a very important matter. When the Hon. Chief Minister goes for raising funds, the entire retinue of Government officials will try to please him. Cabinet Ministers will try to please him. The House will notice that during the last three or four days, a number of advertisements have come in the newspapers. On the first day itself, a sum of Rs. 50,000 was donated by an important business man. My point is that four or five advertisements were published in newspapers and for which a sum of Rs. 90,000 was spent. I would like the Hon. Chief Minister to give an explanation as to why so much of money should be spent for these advertisements which were published in 'The Hindu', 'The Indian Express' and in parts papers and in some papers in two pages it was published. I want to know whether it is worthwhile to spend such an amount and whether it is necessary that they should spend it,

Then, Sir, I want the entire episode to be dropped. I have mentioned it earlier. In the interests of the State the entire episode should be dropped. Let by-gones be by-gones. Let us not bother about what C.S. has stated. We must bring the financial obligation of the Centre for the State to pre-Subramaniam-Karunanidhi controversy, that is 10 or 15 days before the controversy took place. Now if we take up this controversy, we must see how it snowballed into the present level.

Thiru Subramaniam made a speech in a public meeting held at a street corner and he referred to this matter in a casual way and the bulk of his speech related to something else. But this was magnified in the newspapers and ultimately when the matter was brought before the House, the Hon. Chief Minister got angry and gave tit for tat. I want the Hon. Chief Minister to reconsider his position. He is a mature and senior Member of this House and he has been the Chief Minister for about four or five years and he may be young in age, and he may be irritated and annoyed over it and he wants to give tit for tat and has said—

நான் திரு. சுப்ரமணியம் இருக்கிறவரையிலும் வாங்கமாட்டேன்.

In fact that is the main crux of the matter and he could have avoided that statement in this House.

Now I want the Government at least to lay on the table of the House a weekly statement on the amount spent from the Drought Relief Fund.

In this connection I want the Chair to recollect what the Hon. Minister had stated in this House about what the Governor had stated—the Hon. Speaker was not in the Chair at that time and only the Deputy Speaker was in the Chair. The Governor wanted that the educated and well-to-do persons could be charged twice the amount paid by the less well-to-do persons and he also pointed out certain omissions and commissions. I do not say that the Governor accused the Hon. Chief Minister but certain misgivings were expressed by the Head of the State with regard to the manner in which expenditure is incurred in various fields. So, I would urge that a weekly statement about the manner in which the amount is spent should be laid on the table of the House and also the governmental machinery should not lose concentration in



the day-to-day administration. Now, we find that the Hon Minister for Hindu Religious and Charitable Endowments has donated about Rs. 5½ lakhs from the Temple Funds towards the Fund. Now there would be rivalry among the other Ministers to see that as much amount as is possible is donated to the Fund to please the Hon. Chief Minister..........

அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்காக சொல்கிறேன். அமைச்சர்களுக்குள்ளே போட்டி மனப்பான்மை வருகிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

Now I come to another point. They have asked the N.G.O.s to pay one day's salary as donation to the fund. Many of them are already in great financial stress and strain. Then a number of small-scale industrialists and lorry owners have been asked to pay Rs. 1,000 each. Many of them are already facing hardships and they have to pay interest for the loans borrowed by them.

In this connection, I want to point out that any amount that is taxed will generate less of mal-practice than the amount collected as donation. So, I would like the House to appreciate the point that pressurizing these persons will lead to a lot of problems.

(Mr. Speaker sounded the gong)

I am only trying to tell the Hon. Speaker the reasons why the business of the House should be adjourned.

Another point is that party colour is given to these donations. In the public meetings donations of Rs. 20 or 30 are collected. Again I appeal to the Hon. Chief Minister that he should not get excited and angry. If he does, he will get into trouble........

(மணியடிக்கப்பட்டது)

Therefore, I want the Hon. Chief Minister to carefully consider the points I have raised.

Finally, I would like to say that let not this discussion be a diversionary tactics to wean away the public........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சொல்லுங்கள். ஒரு டிஸ்கஷனிலே பேச வேண்டியதையெல்லாம் பேசியாகி விட்டது.

[1975 மார்ச் 24

DR. H. V. HANDE : We have to give the arguments.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்திற்கு அனுமதித்தால் அப்போது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லிவிட்டு நீங்கள் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிக்கொண்டேயிருந்தால் அது எப்படி?

DR. H. V. HANDE : I shall explain Government's respousibility and then I have finished.

I would like to say one thing. Let not the Hon. Chief Minister adopt diversionary tactics to wean away public mind from the asts of commission and omission of this Government. People should not forget that. What I say is, let this controversy be put an end to. This will completely divert the mind of the pubilc from the omissions of this Government.

The Hon. Union Finance Minister has said that he wanted to put an end to the controversy. What I say is, if the House is adjourned, we can discuss the things threadbare and come to conclusions so that this matter will not be discussed any further and so that we can come to conclusions once and for all.

My adjournment motion will be thus advantageous to Government in coming to conclusions. That is why, in order to prevent this Government from diverting the whole issue, I request you, Hon. Speaker, to allow the adjournment of the House to discuss this vital issue so that we can thrash out the whole issue and come to a settlement.

THIRU V. M. ABDUL JABBAR : Mr. Speaker, under Rule 42 of the Assembly Rules, I have given notice of the following motion :

> "That the business of the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the situation caused by the creation of the Drought Relief Fund by the Hon. Chief Minister of Tamil Nadu".

தலைவரவர்களே, இது சம்பந்தமாக நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது, நூறாண்டுகளாக தமிழகம் கண்டிராத ஒரு மாபெரும் வறட்சி



1975 மார்ச் 24] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

தற்பொழுது நிலவிக்கொண்டிருக்கிறது. இம்மாதிரி சூழ்நிலையில் மக்களுடைய துயரைப் போக்க மத்திய அரசிடத்திலிருந்து நாம் நிதி கோரினோம். மத்திய அரசாங்கம் ஏழுரை கோடி ரூபாய் தருவதாகச் சொல்லி ஆறு கோடி ரூபாய் வரையில் ஏற்கெனவே தந்தார்கள். அந்த நிதியைப் பயன்படுத்தி நாம் மக்களுடைய துயரைத் துடைப்பதற்கு யத்தனங்கள் செய்துகொண்டிருக்கும் பொழுது நம்முடைய மரியாதைக்குரிய மத்திய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சென்னைப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்பொழுது இந்த நிதி ஏதோ துஷ்பிரயோகம் செய்யப்படுவது போன்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மீண்டும் இதை நான் பரிசீலித்து, அந்த இடங்களையெல்லாம் பார்த்த பிறகுதான் மேற்கொண்டு நிதி தர முடியும் என்ற அளவிற்கு ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அது ஏற்கெனவே துயர் துடைப்பு வேலையில் ஈடுபட்டுள்ள இந்த அரசாங்கத்தின் மீது வீணாக ஒரு களங்கத்தை உண்டாக்கும் வகையில் இருந்ததால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது குறித்து தங்களது ஆட்சேபணையைத் தெரிவித்தார்கள்.

ஆனால், அவர்கள் கொடுத்து வந்த நிதியைப்பற்றிப் பேசுகையில், இங்கே செய்யப்பட்ட வேலைகளை வந்து பார்த்த பிறகுதான் கொடுப்பது என்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, மக்களுடைய துயரத்தைத் தீர்ப்பதற்கு அதுவரையில் காத்திராது, மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களைச் செய்ய வேண்டியிருப்பதால், நிதியமைச்சரவர்கள் வந்து பார்வையிட்டு பிறகு புதிதாக தொகை வரும்வரையில் காத்திருக்க முடியாது என்ற காரணத்தினால், மக்களுடைய துயரைத் தீர்ப்பதற்காக ஒரு நிதியை ஏற்படுத்தினார்கள். அதை உண்மையிலே தனிப்பட்ட முறையிலே நம்முடைய முதலமைச்சரவர்கள் ஆரம்பித்து வைத்தபொழுதிலும் கூட அந்தத் தொகை முழுவதும் நம்முடைய மாநில அரசின் நிதித் துறையால் மேற்பார்வை செய்யப்படும். நிதித் துறையிடம் தான் ஒப்படைக்கப்படும். அதனுடைய வரவு-செலவுக் கணக்கு மாநில நிதித் துறையின் மூலம்தான் நடைபெறும் என்று திட்டவட்டமாக இந்தச் சபையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதிலே எந்தவிதமான தீங்கான செயலுக்கும் இடமில்லை என்பது தெள்ளத் தெளிவாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் இந்த மூன்று நான்கு தினங்களாக இந்த நிதிக்கு ஏராளமானவர்களால் கட்சிப் பாகுபாடு இன்றி, மனிதப் பாகுபாடு இன்றி, இன்னும் சொல்லப் போனால் மாநிலப் பாகுபாடு இன்றி, இட வித்தியாசம் இல்லாமல் அளிக்கப்பட்ட தொகை ஏராளமாக வந்து குவிகிறது. இதன் மூலமாகத் தமிழ் நாட்டில் நடந்து வரும் பஞ்ச நிவாரண வேலைகள் ஒழுங்காக நடைபெறும் என்ற நிம்மதியோடு நாம் இருந்தோம்.

அம்மாதிரி இருக்கும் நிலையிலேயும், நம்முடைய மத்திய நிதியமைச்சர் இராஜ்ய சபையில் பேசும்பொழுது நான் இதோடு இந்தப் பிரச்னையை முடிவிற்குக் கொண்டு வர விரும்புகிறேன், மேற்கொண்டு வளர்க்க விரும்பவில்லை என்ற நல்ல கருத்தைக் கூறினார்கள். ஆனால் மீண்டும் மதுரைக்கு வந்த பிறகு, இரண்டு தினங்களிலே மதுரைக்கு வந்து மீண்டும் பேசும்பொழுது, என்னுடைய இலாக்கா பார்வையிடுவதற்கு உரிமை இருக்கிறது, நான் இரண்டு மூன்று தினங்களில் பார்க்க இருக்கிறேன் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், அவர் சார்ந்திருக்கின்ற இந்திரா காங்கிரஸ் சார்பாக இம்மாதிரி பஞ்ச நிவாரணக் கமிட்டி என்ற ஒன்றை அமைத்து அதற்கும் நிதி திரட்டுவதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதிலே ஒரு விஷயம் என்னவென்றால், முதலமைச்சரவர்கள் ஆரம்பித்த நிதி அரசாங்க சார்புடையதாகவும், அரசாங்க நிதி இலாக்கா மேற்பார்வையிடக்கூடியதாகவும், பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாகவும் இருக்கிறது. இந்தமாதிரி நேரத்தில் தனிப்பட்ட ஒரு கட்சி நாங்களும் ஒரு நிதியை ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்வது, மக்கள் ஒருமுகமாக நிதியைத் தந்து மக்களுடைய துயரைத் துடைப்பதற்காகச் செய்யக்கூடிய யத்தனங்களைக் குறைப்பதாகவும், திசை திருப்புவதாகவும் இருக்கிறது. இந்த மாதிரி நான் ஏன் சொல்கிறேன் என்றால், பம்பாய் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர்—ரஜ்னிகாந்த் பட்டேல் என்று நினைக்கிறேன்—5 இலட்சம் ரூபாய் இந்த மாநில வறட்சி நிதிக்குத் தருவதாக வாக்களித்துள்ளார்கள். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், தனியொரு கட்சி ஆரம்பித்துள்ள ஒரு தனிப்பட்ட நிதிக்கு 3 இலட்சம் ரூபாயும், அரசாங்க நிதிக்கு இரண்டு இலட்சம்



ரூபாயும் என்று சொல்கிறார்கள். இப்படி தனியொரு கட்சி இப்படிப்பட்ட நிதி ஒன்றை ஆரம்பிக்காமல் போயிருந்தால் மொத்தமும், 5 இலட்சம் ரூபாயும் முதலமைச்சர் நிதிக்கு வந்து, நியாயமான முறையில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு, நிவாரண வேலைகள் நடத்தப்பட்டு, மக்களுடைய துயரம் நீக்கப்பட்டிருக்கும்.

ஆகவே, இது உண்மையிலேயே பார்க்கப் போனால், முதலமைச்சர் பணம் இல்லை என்று சொல்லிய சமயத்தில், நான் பார்வையிட்ட பிறகுதான் மீண்டும் தருவோம் என்று சொன்னது ஒரு பக்கம் இருக்கிறது. அது ஒரு பக்கத்திலிருந்தாலும், நாமாக ஒரு நிதியைத் திரட்டி அரசாங்கத்தின் மூலம் செய்ய யத்தனிக்கும்பொழுது மக்களைத் திசை திருப்பும் வகையில், அந்த நிவாரணத்திற்கான பணம் சேரவிடாமல் தடுக்க, மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, இப்படித் திசை திருப்பிவிடுகிறார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

ஆகவே, இதுவொரு மிகவும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயம். எனவே, தாங்கள் தயவுகூர்ந்து இதற்கு ஒரு நேரம் ஒதுக்கி இவைகளையெல்லாம் விவாதிப்பதன் மூலமாகத் தமிழ்நாடு ஒரு சீரான வழியில் செல்ல, நூற்றாண்டுக் காலமாகக் கண்டிராத வறட்சியிலிருந்து மீட்சி பெற ஒரு வழிவகை ஏற்படும் என்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசும்பொழுது நண்பர் ஹாண்டே அவர்கள், நான் ரொம்பக் கோபப்படுகிறேன் என்று சொன்னார்கள். அது இந்த அவைக்கு நன்றாகத் தெரியும்: கோபப்படுகிறவர்கள் யார் என்று, இந்த அவையிலே அதிகம் கோபப்படுகிறவர்கள் யார் என்பது இந்த அவைக்கு நன்றாகத் தெரியும். கண்டிக்கிறேன் என்று சொல்லும் வார்த்தையைக்கூட நான் மென்மையாகத்தான் சொல்வேன். அதே நேரத்தில் பாராட்டுகிறேன் என்று சொல்லும் வார்த்தையைக் கூட ரொம்பக் கோபமாகச் சொல்லப் பழகிக்கொண்டவர் நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள். அவர்கள், நான் ஆவேசத்தில், கோபத்தில்

ஏதோ சில பதில்களை வழங்கியதாக இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தமிழகத்திற்குக் கடந்த 15-ஆம் நாளன்று வருகை தந்தபொழுது நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய கருத்துக்களின் தொடர்பாகத்தான் இவ்வளவு பெரிய பிரச்னை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே எழுந்திருக்கிறது.

சொந்த முறையிலே ஏற்பட்ட கோபம் என்று மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் எண்ணுவார்களே யானால் அல்லது திரு. சுப்பிரமணியம் அவர்களே அப்படிக் கூறுவாரேயானால், அவருடைய மனதைத் தொட்டு அவரே பார்ப்பாரேயானால் இது சொந்த முறையில் ஏற்பட்ட கோபதாபம் அல்ல என்பதை அனைவரும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். அவர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்திலேயும், அதன் பின்னர் மத்திய நிதியமைச்சராக ஒரு பெரிய பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்ட நேரத்திலேயும், மகிழ்ந்து, பாராட்டியவர் களில் நானும் ஒருவன்.

இந்த அரசின் சார்பில் நாம் உருவாக்கிய சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்கின்ற மிகப் பெரிய ஒரு திட்டத்தை மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வந்துதான் தொடங்கி வைக்க வேண்டுமென்று நாம் விரும்பி அவரை வரவேற்று சிறப்பித்து அந்த விழாவை நடத்தினோம் என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அவர் நிதியமைச்சர் பொறுப்பையேற்றதும் தனக்கு இன்னார்தான் ஒரு தனிமைச் செய லாளராக வேண்டுமென்று கேட்டபொழுது, அவர் யாரைக் குறிப் பிட்டாரோ அந்தச் செயலாளரை அவருக்கு—அவர் தமிழகத்தில் கோவை மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்தபோதிலும், அவரை மாறுதல் செய்து—உடனடியாக திரு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டதற்கிணங்க இந்த அரசின் சார்பில் அனுப்பி வைத் திருக்கிறோம்.

ஆகவே, எந்தத் தனிப்பட்ட மனக் குரோதங்களும் மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்களுக்கும் எனக்கும் அல்லது இந்த அரசுக்கும் ஏற்படுவதற்கு எந்த நியாயமும், அடிப்படையும் கிடையாது என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.



அவர்கள் 'தானே தவறு செய்திருந்தாலும் இப்படிப்பட்ட முடிவுகளை இந்த அரசோ அல்லது முதலமைச்சரோ எடுத்திருக்கக் கூடாது' என்று நேற்றையதினம் நிருபர்களிடத்தில் கூறியிருப்பதைத் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கு எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் இப்போது நிருபர்களிடத்தில் பேசுகின்ற பேச்சாக பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது எல்லாம் 'நான் மேலெழுந்தவாரியாகத்தான் வறட்சி நிவாரண நிதி பற்றிச் சொன்னேன். நான் சொன்னதெல்லாம் வேலூர் மருத்துவ மனையைப் பற்றிக் கூறி அதன் விவகாரத்தில் இந்த அரசு தலையிட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றித்தான்' என்று விளக்கம் அளித்திருக்கிறார்.

அதையே எடுத்துக்கொண்டால்கூட வேலூர் மருத்துவமனை விவகாரத்தில் அரசு தலையிடுகிறதா இல்லையா என்பதைப் பற்றி எங்களிடத்தில் கலந்து பேசுவதற்கு அவருக்கு வாய்ப்பு இருக் கிறது. நான் அந்தப் பிரச்னைபற்றி பிரதமரிடத்தில் பேசியிருக் கிறேன்; திரு. பிரம்மானந்த ரெட்டியார் அவர்களிடத்தில் நேரிலேயே பேசியிருக்கிறேன். மத்திய அமைச்சர் கரன்சிங் அவர் களிடத்தில் தொலைபேசி மூலமாக நிலைமைகளை விவாதித்து இருக்கிறேன். அவர்களும் கேட்டிருக்கிறார்கள். விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். அதைப் போன்ற பொறுப்பில் இருக்கும் நிதி அமைச்சர் அவர்களும் அதைப் பற்றி என்னிடம் கேட்டிருக்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் பேசுகின்றபோது 'சப்ஜக்ட் மேட்டரை விட்டுப் போகக் கூடாது' என்று சொன்னீர்கள். முதலமைச்சர் அவர்கள் வேலூர் மருத்துவமனை பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அதைப் பற்றித் தீர்மானம் கொடுக்கவில்லை. அப்படி இருக்க அதை இணைத்து இதிலே பேசலாமா? சப்ஜக்ட் மேட்டர் வேறாக இருக்கிறது. வேலூர் மருத்துவ மனை பற்றி இதிலே பேச வாய்ப்புக் கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்களே பேசினீர்கள். தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது இன்று சுப்பிரமணியம் அவர்கள் தந்திருக்கிற, நிருபர்களுக்குக் கொடுத்த அறிவிப்பில் 'இதைச் சொல்லவில்லை; அதைத்தான் பெரிதுபடுத்திச் சொன்னேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு நான் பதில் சொல்லுகிறேன்.

மேலும் வேலூர் மருத்துவ மனை பற்றி 15-ம் தேதியன்று காலையிலேயே சட்டசபையில் விவாதிக்கப்பட்டு முடிவெடுத்து, அதற்காக அனைவரும் மகிழ்ச்சி தெரிவித்து அதற்குப் பிறகு, நடைபெற்ற மாலை பொதுக்கூட்டத்தில்தான் அவர் பேசியிருக்கிறார். பொதுக்கூட்டத்தில் மேலெழுந்தவாரியாகத்தான் பேசினேன் என்று சுப்பிரமணியம் அவர்கள் சொல்லுகிறார்கள். இம்மாதம் 15-ம் தேதி, 16-ம் தேதி வெளிவந்த பத்திரிகைக் குறிப்புகளை அதற்குள்ளாக மறந்திருக்க மாட்டோம். அவர் பேசியது சுப்பிரமணியம் அவர்கள் 15-ம் தேதி கூட்டத்தில் என்ன பேசினார் என்றால்

'After scrutinising how the sum had been spent, further assistance would be given.'

He said he would visit Tamil Nadu again after March 20th and study how the money granted had been utilised before sanctioning more funds......

இது தான் அவருடைய பேச்சாரும். இது தன்மானத்திற்கு விடப்பட்ட அறைகூவல் என்று சொல்லலாமா என்று கே. டி. கே. அவர்கள் இன்றைய விவாதத்தில் கேட்டார்கள். இப்படிப்பட்ட நிதியமைச்சருடைய ஒரு பேச்சுக்குப் பிறகு ஒரு மாநில அரசு எடுத்த இந்த நடவடிக்கை எப்படித் தவறானதாக ஆகமுடியும்? அதே நாள் 16-ம் தேதி வெளிவந்த 'தினமணி'-யிலும்

"வறட்சி நிவாரணப் பணிகளுக்காக பிப்ரவரி, மார்ச் ஆகிய இரண்டு மாதங்களுக்கு ஆறு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக மத்திய சர்க்காரிலிருந்து ஏழரைக் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். இதற்கு மேல் கொடுக்க வேண்டுமானால் கணக்கைப் பார்த்துதான் கொடுக்கவேண்டி இருக்கும்" என்று கூறியதாகத்தான் செய்தி வந்துள்ளது.

இப்போது, சுப்பிரமணியம் சொல்கிறார் "நான் அப்படிச் சொல்லவில்லை; மேலெழுந்தவாரியாகத்தான் சொன்னேன்" என்று.

"கணக்கைப் பார்த்து விட்டுத்தான் இதற்கு மேல் கொடுக்க வேண்டியிருக்கும்" என்று அவர் சொன்னது இந்துப் பத்திரிகையில், தினமணி பத்திரிகையில் வந்திருக்கிறது.



இவைகளாவது 'இந்து', "தினமணி" பத்திரிகைச் செய்தி. ஆனால் அவர்களுடைய இந்திரா காங்கிரஸ் கட்சிக்காக நடைபெறுகிற "மித்திரன்" பத்திரிகையிலும்

". . . . . . அதற்குரிய சரியான கணக்கை வைத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் அதிகமான தொகை வேண்டுமென்று விரும்பினால் கணக்கைப் பார்த்துத்தான் கொடுக்கப்படும்"

என்று இந்த அளவுக்கு ஒரு மாநிலத்தை மிகுந்த அடிமை மனப்பான்மையோடு, சந்தேகக் கண்ணோட்டத்தோடு ஒரு பொறுப்புள்ள நிதியமைச்சர் பார்க்கிறாரே, பார்ப்பது மாத்திரமல்ல, பொதுமேடையிலே அப்படிப்பட்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கிறாரே என்ற ஆதங்கம் ஒரு அரசுக்கு, அந்த அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துகிற எனக்கு ஏற்படுவதில் என்ன தவறு என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, காழ்ப்போ, கோபமோ எனக்கு வரவில்லை. சுப்பிரமணியம் அவர்களின் கோபமும் அல்லது அரசியல் ரீதியில் ஏற்பட்ட உணர்ச்சியும்தான் காரணம். பிறகு அவரே 'இதை இதோடு விட்டு விடுங்கள்' என்று கூறுகின்ற அளவுக்கு வந்திருக்கிறார். பாராளுமன்றத்தில் கேட்டிருக்கிறார்கள். டாக்டர் மாத்யூ குரியன் என்ற சி. பி. எம். உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களைப் பார்த்து,

'You yourself started the controversy'

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

விஸ்வநாத் மேனன் என்ற சி. பி. எம். உறுப்பினர் திரு. சுப்பிரமணியத்தைப் பார்த்து

'When you were the Food Minister, you said you would not give rice to **Kerala.**'

என்று சொல்லியிருக்கிறார். 'கேரளாவுக்கு அரிசி தரமாட்டேன்' என்று சொன்ன அந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார். அதற்கு சுப்பிரமணியம் அவர்கள்

'My intention is not to raise another controversy but to close the controversy'.

என்ற வகையில் பதில் சொல்லியிருக்கிறார்.

'நான் இன்னொரு கான்ட்ரோவர்சியை உருவாக்க விரும்பவில்லை' என்று சுப்பிரமணியம் சொன்னதிலிருந்து 'முதல் கான்டரோவர்சியை அவர்தான் உருவாக்கினார்' என்பதை பாராளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு அளித்த பதிலிலிருந்துத் தெளிவாக நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

இப்போது ஏற்பட்டிருக்கும் வறட்சி நிவாரண நிதியைப் போன்ற ஒரு நிதியைத் தமிழக அரசு ஏற்படுத்தலாமா? இது தமிழக அரசுக்கோ, மாநில அரசுக்கோ உடன்பாடானதா? இது தவறு அல்லவா? என்ற கேள்விகள் இங்கு எழுப்பப்பட்டன. நம்முடைய நண்பர் ஜப்பார் அவர்கள் இப்போது தமிழக அரசு உருவாக்கியிருக்கும் வறட்சி நிவாரண நிதிக்குத் தமிழ் நாட்டுப் பொது மக்களுடைய ஆதரவு எந்த வகையில் இருக்கிறது என்று இங்கு எடுத்துச் சொன்னார்கள். நான் அந்த விவரங்களுக்குள் எல்லாம் நுழைய விரும்பவில்லை. ஒன்றைச் சொல்ல வேண்டும்.

தமிழகம் ஏற்கெனவே, 1953, 1954, 1955-ஆம் ஆண்டுகளில் புயலால் பாதிக்கப்பட்டபோது, அப்பொழுதிருந்த காங்கிரஸ் அரசு புயல் நிவாரண நிதி என்ற ஒரு நிதியை உருவாக்கி அதற்காக் பணம் திரட்டியிருக்கிறது. ஆகவே, இது ஒன்றும் புதிது அல்ல. நான் கேள்விப்படுகிறேன்—மராட்டியம் போன்ற மாநிலங்களில் கூட வறட்சி நிவாரண நிதி என்ற தலைப்பில் ஒரு நிதி திரட்டப்படுவதாகக் கேள்விப்படுகிறேன்—தகவல்தான், அதைச் சரியாகச் சொல்ல இயலாது என்றாலும் அப்படிப்பட்ட மாநிலங்களில் வறட்சி நிவாரண நிதி திரட்டப்படுவதாகக் கேள்விப்படுகிறேன்.

இங்கே திரட்டப்படுகின்ற வறட்சி நிவாரண நிதியில் நிர்ப்பந்தம் இருக்கக்கூடும்; அமைச்சர்கள் எல்லாம் நல்லவர் களாக காட்டிக்கொள்ள இதை, அதிகமாகப் போட்டி போட்டுக் கொண்டு வசூலிக்கக்கூடும் என்றெல்லாம் நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அமைச்சர்கள் ஏதோ என்னிடத்தில் நல்லவர்களாகப் பெயர் வாங்க வேண்டு மென்பதற்காக இதிலே போட்டி போட்டுக் கொண்டு காரியங்கள் செய்வார்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்களைப் போன்றவர்கள் குறிப்பிடுவது உள்ளபடியே வேதனைக்குரிய





ஒன்றாகும். ஏனெனில் நான் இந்த அமைச்சரவையில் இருக்கின்றவர்களை, மத்தியில் இருக்கும் அமைச்சர் மாநிலத்திலே உள்ள அமைச்சர்களை நடத்துவதைப் போல் நடத்துவது இல்லை யென்பதையும், அனைவரையும் சம நிலையில் வைத்துத்தான் இந்த அமைச்சரவையிலே நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் 'நடத்து கிறேன்' என்று சொன்னால்கூட அது ஏதோ மேலே இருந்து நடத்துவதாகக் கருதப்படும் என்பதற்காகத்தான் சம நிலையில் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

இதிலே நம்முடைய நிர்வாகம் பயன்படுத்தப்படக் கூடும்; வலியுறுத்தி வசூலிக்கக் கூடும் என்ற சந்தேகங்களை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். திட்டவட்டமாகச் சொன்னார்கள். வறட்சி நிதிக்காகத் தாங்களாகவே வலுவிலே முன்வந்து தருவதைத்தான், வழங்குகின்ற நிதியைத்தான் நாங்கள் பெறுவதாக இருக்கிறோமே அல்லாமல், அதிகாரிகளையோ அதிகாரத்தையோ பயன்படுத்தி நிதி தரவேண்டுமென்று வற்புறுத்துகிற வசூலிக்கின்ற உத்தேசம் கிடையாது; அப்படிப் பட்ட அரசு ஆணைகள் எதுவும் அந்த வகையில் அரசின் சார்பில் வழங்கப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்காவது அதிகாரிகள் யாராவது தொந்தரவு செய்து நிதி கேட்டார்கள் என்று செய்தி வருமேயானால், அதை என்னுடைய கவனத்திற்கு, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் கூட உரிமை இருக்கிறது; அதன்படி கொண்டு வரலாம், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்வேன்.

வறட்சி நிதி திரட்டப்படுகிற நேரத்தில் எல்லாம்—நாங்கள் சில நேரத்தில் எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறோம். எதிர்க் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது இப்படிப் பட்ட நிதி வசூலிக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் அரசின் சார்பில் நடைபெற்றிருக்கின்றன. தஞ்சையில் புயல் வீசி மக்கள் பாதிக்கப் பட்டார்கள். அந்த நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்து கிட்டத்தட்ட

50,000 ரூபாய்க்கு மேல் நன்கொடை வசூலிக்கச் செய்து அந்த 50,000 ரூபாயை—அன்றைய அரசு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது என்றாலும்கூட, அரசு ஈடுபடும் இப்படிப்பட்ட காரியங்களில் அனைவருக்கும் பொதுவான அரசு என்ற வகையில் அந்தத் தொகையைக் காங்கிரஸ் முதலமைச்சருடைய கையில் காங்கிரஸ் அரசின் பொறுப்பில் அன்றைக்கு ஒப்படைக்கப்பட்டது. பிறகு அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் தமிழகத்திலே யுத்த நிவாரண நிதியை அப்போது முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்கள் திரட்டினார்கள். அந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக யுத்த நிதி பல்வேறு பகுதிகளில் திரட்டப்பட்டு அந்த யுத்த நிதிக்கு அதில் வந்து குவிந்த நகைகள் உள்பட அனைத்தையும் நானும் அன்றைய சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நம்முடைய நாவலர் அவர்களும் இரண்டு பேரும் கொண்டு போய் அன்னாள் முதலமைச்சர் காமராஜர் வீட்டிற்குச் சென்று அவரிடத்தில் ஒப்படைத்துவிட்டு வந்தோம். இவைகளெல்லாம் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது கடைப்பிடித்த நாகரிகங்களாகும். இதைத் தான் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்தார்கள்.

(முற்பகல் 10-30)

ஆகவே, அனைவரும் இப்படிப்பட்ட காரியங்களில் யார் ஈடுபட்டாலும், வறட்சி நிதியோ, புயல் நிதியோ, யுத்த நிதியோ திரட்டினாலும் அப்படித் திரட்டப்பட்ட தொகையை அரசாங்கத்தினுடைய கையில் ஒப்படைப்பது தான் முறையேயல்லாமல் அவரவர்களாக செலவு செய்வதென்பது சரியல்ல. இப்போது நாம் திரட்டுகின்ற நிதிக்கு நிதி இலாகாவில் கணக்கு வழக்குகளை வைத்துக் கொண்டு, அந்தக் காரியங்களில் ஈடுபடுகின்ற நேரத்திலே அதிலே எங்காவது சொத்தை, சோடை தென்படுமா என்றெல்லாம் ஆராய்கின்ற நேரத்தில், தனிப்பட்ட கட்சிகள் இதற்கென ஒரு அறக்கட்டளையை உருவாக்கிக் கொண்டு வறட்சி நிவாரண நிதி என்கிற வகையில் வசூலிப்பார்களேயானால் அது எங்கே கொண்டு போய் விடும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.





உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன். யுத்த காலத்தில் தமிழக அரசின் சார்பில் ரூ. 6 கோடி அரசின் சார்பில் வசூலித்துக் கொடுத்தோம். அப்போது இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் நேரு ஸ்டேடியத்தில் நட்சத்திர இரவு என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்தினார்கள். அதனுடைய கணக்கு வழக்கு என்ன ஆயிற்று? அது போய்ச் சேர்ந்ததா? மீதம் என்ன? இவைகளைப் பற்றி இன்னும் விமரிசனம்தான் நடந்து கொண்டிருக்கிறது. அதுபற்றிப் பெரிய பிரச்னைகள் எல்லாம் அந்தக் கட்சிக்குள்ளேயே எழுந்தது. இங்கே தமிழக அரசு வறட்சி நிவாரண நிதி திரட்டலாமா என்று மிகுந்த ஆத்திரத்தோடு கேட்ட உறுப்பினர்கள் திரு. கே. டி., கே. தங்கமணி அவர்களும் அல்லது டாக்டர் ஹாண்டே அவர்களும் இந்திரா காங்கிரசார் ஒரு டிரஸ்ட் என்று வைத்து இப்போது நிதி திரட்டுகிறார்களே அதைத் திரட்டலாமா என்று கேட்கவில்லை. பரவாயில்லை அவர்களும் கேட்கவில்லை. நாங்களும் கேட்கப் போவதும் இல்லை. ஆனால் எனக்குள்ள சங்கடம் எல்லாம் ஒவ்வொரு கட்சியும் ஒரு டிரஸ்ட் அமைத்து நிதி திரட்டினால் அது எங்கு போய் முடியும்? இதைப்போல இன்னொரு கட்சி யுத்த நிதி திரட்டலாம். யுத்தம் இல்லையே ஏன் திரட்டுகிறீர்கள் என்று கேட்டால், யுத்தம் வராமலா போய் விடும், வருகிற காலத்தில் செலவழிப்போம், இப்போது யுத்தத்தின் காரணமாக கால் ஒடிந்தவர்கள் கையொடிந்தவர்கள் இவர்களுக்கு எல்லாம் தரப் போகிறோம். எப்படிச் செலவழிக்க வேண்டும் என்று உதாரணமாக எடுத்துக்காட்டாக இரண்டு, மூன்று இடங்களில், சிலருக்குச் செய்யப் போகிறோம் என்று ஆரம்பித்தால், இப்படிப் பல இடங்களில் நிதி திரட்டுகின்ற காரியங்களை ஒவ்வொரு கட்சியும் ஆரம்பித்துவிடக் கூடும்.

இப்படித் தனியாகத் திரட்டுகின்ற நிதிகள் அரசாங்கத்திடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்கட்சியாக இருந்தபோது கடைப்பிடித்த முறை என்பதையும் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது திரட்டுகிறவர்கள் எல்லாம் அரசாங்கத்திடம் தான் ஒப்படைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தப் போவதுமில்லை. வலியுறுத்தவும் மாட்டேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 மார்ச் 24

இப்போது மத்திய அரசிடமிருந்து நிதி கேட்க மாட்டோம் என்று சொல்லிவிட்ட காரணத்தால் என்ன ஆவது, உங்களுக்குள் ஏற்பட்ட தகராறால் தமிழ் நாட்டு மக்கள் அல்லவா அல்லலுக்கு ஆள்படுகிறோம், என்றெல்லாம் பேசப்படுவதற்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசினுடைய வறட்சி நிவாரண நிதிக் கொள்கை எந்த வகையில் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எந்த மாநிலத்தில் வறட்சியோ அல்லது வெள்ளமோ ஏற்பட்டாலும் அப்படி ஏற்படுகிற அந்த நிதி ஆண்டுக்கு நம்முடைய நிதி ஆண்டு மார்ச்சோடு முடிகிறதென்றால் இந்த நிதி ஆண்டில் அதற்கு மாத்திரம் தான் சிறப்பு உதவி மத்திய அரசு தரும். நடப்பு ஆண்டுக்குத் தான் இந்த மார்ச் முடியத் தான் மத்திய அரசு தரும். இந்த மாநிலத்தில் வறட்சியோ வெள்ளமோ ஏற்பட்டாலும் இந்த மாநிலத்திற்கு நடைபெறுகிற நடப்பு நிதி ஆண்டுக்குத் தான் உதவி தருவார்கள். அந்த உதவியும் திட்ட உதவியின் முன்பணமாகத் தான் இருக்கும். நம்முடைய திட்டத்திற்கு ஒதுக்குகிறார்களே உதவி அதற்கான முன்பணமாகத் தான் இருக்கும். இப்போது ரூ. 7½ கோடி என்று சொல்கிறோமே அந்த ரூ. 7½ கோடியும் திட்டகாலத்திற்குள் கூடியசீக்கிரம் திட்ட உதவியிலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.

ஏதோ வருவதை வேண்டாம் என்று சொல்லுகிறார்களே அதற்கு விளக்கம் அளிக்கிறேன். எந்த மாநிலத்திலாவது வறட்சியோ வெள்ளமோ ஏற்பட்டாலும் அப்படி ஏற்படுகிற அந்த நிதி ஆண்டுக்குத்தான் 'ஸ்பெஷல்' உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும். அந்த உதவியும் திட்ட உதவியின் முன் பணமாகத்தானிருக்கும். நமக்குத் தரப்படுகிற இந்த நடப்பு ஆண்டுக்கு ரூ 7½ கோடி திட்ட காலத்திற்குள் கூடிய சீக்கிரம் திட்ட உதவியிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். திட்ட உதவியைப் போலவே இந்த 7½ கோடியிலும் 70 சதவிகிதம் கடன் என்ற அளவிலும் 30 சதவிகிதம் மானியம் என்ற வகையிலும்தான் அமையும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. திட்டம் 41 கோடி என்றால் அதில் 70 சதவிகிதம்



1975 மார்ச் 24] [டாக்டர் மு. கருணாநிதி]

கடன் 30 சதவிகிதம் மானியம் என்பதை மறந்துவிடக்கூடாது. வருகிற நிதி ஆண்டில், மார்ச்சு மாதத்திற்குப் பிறகு, அந்த நிதி ஆண்டில் 'நார்மல்' திட்ட அளவுக்குள்தான் வறட்சி செலவு அடங்கவேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கையாகும். நாம் 'நார்மலாக' போட்டிருக்கிற திட்டச் செலவு இருக்கிறதே அந்தத் திட்ட வரையறைக்குள் தான் வறட்சி நிவாரண நிதிச் செலவு அடங்க வேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கையாக அமைந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, நமது கவர்னர் பெருமான் உரையில் திட்டத்திற்கு எவ்வளவு தேவை வறட்சிக்கு எவ்வளவு தேவை என்று நாம் தனித்தனியாகப் பிரித்துக் காட்டி கவர்னர் உரையில் விளக்கம் தந்திருக்கிறோம். ஆகவே, திட்ட உதவியோடு இணைக்காமல் திட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் வறட்சிக்காக வருகிற நிதி ஆண்டிற்காகக் கொடுக்கப் போகிறார்களா? எவ்வளவு கொடுக்கப் போகிறார்கள்? மத்திய சர்க்கார் ஏதோ தருகிறோம் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். வேண்டாம் வேண்டாம் என்று பேசுகிறீர்களே, திரு. சுப்பரமணியம் அவர்களும் இங்கே நிருபர்களிடம் பேசுகிற நேரத்தில் தருவதாகக் கூறிவிட்டுப் போயிருக்கிறார்களே என்று கேட்கப்பட்டது. அவர்களிடம் எல்லாம் நான் கேட்க விரும்பும் கேள்விதான் இது. திட்ட உதவியோடு இணைக்காமல் திட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் வறட்சி நிவாரணப் பணமாக வருகிற நிதி ஆண்டுக்கு மத்திய சர்க்கார் பணம் கொடுக்கப் போகிறார்களா? அப்படியானால் எவ்வளவு கொடுக்கப் போகிறார்கள்? அதுபற்றி விவரங்கள் நமக்கு இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, அந்த விவரங்களை நான் சொல்லுவதற்கு முடியாத நிலைமையில் இருக்கிறேன்.

இன்றைக்கு அவர் நிருபர்களிடம் பேசும்பொழுது சொல்லியிருக்கிற கருத்து எங்களுக்கு ஒப்புதலான கருத்துத் தான். அன்றைக்கே இதைத் தான் சொன்னேன். சென்ற வாரம் தியாகராயநகர் பொதுக் கூட்டத்தில் வறட்சி நிவாரண உதவிப் பிரச்னை பற்றி மேலெழுந்தவாரியாகக் குறிப்பிட்டேன், வறட்சி நிவாரண நிதி திட்ட முறைக்கு இசைவானதே, அதற்கு

செய்யப்பட்ட செலவுகளைப் பரிசீலனை செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு உரிமை உண்டு என்று சொல்லுகிறார்கள். இதை யாரும் மறுக்கவில்லை. இதற்காகத் தான் அக்கவுண்டன்ட் ஜெனரல், ஆடிட்டர் ஜெனரல் எல்லாம் இருக்கிறார்கள். அந்த வகையில் பணம் வரவர, வந்த பணத்திற்கு இங்கே 'யுடிலைசேஷன்' சர்டிபிக்கேட் அனுப்பக் கடமைப் பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட கணக்கு வழக்கு வகை செய்வதை அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அதில் எந்தத் தகராறும் இல்லை. வந்த தகராறு, இனிமேல், கொடுத்ததற்கு என்ன செலவு என்று கணக்குப் பார்ப்பேன், அதற்குப் பிறகு தான் மேலும் கொடுப்பேன், மறுபடியும் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து கண்காணித்து சரிவர செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து விட்டுத்தான் நான் மறுபடியும் தருவேன் என்றெல்லாம் சொன்னதால் தான் பதில் சொல்ல வேண்டி வந்தது. இப்போது அவரே சொல்லியிருக்கிறார். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று.

தங்கமணி வறட்சி நிவாரண நிதி மாநில அரசின் சார்பில் திரட்டப்படுவது சரியல்ல என்று வாதிட்டார். ஆனால், நாம் திரட்டும் வறட்சி நிதி சரிதான் என்று ஒப்புக்கொள்வதைப் போலவே திரு. சுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய ஒரு மாதச் சம்பளத்தை இதற்காக வழங்கியிருக்கிறார்கள். ஆகவே மத்திய சர்க்கார் சார்பில் மத்திய நிதியமைச்சர் நம்முடைய வறட்சி நிவாரண நிதிக்காக அளித்திருப்பதில் இருந்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் வாதம் அடிபட்டு விடுகிறது என்று கருதுகிறேன்.

ஆனால் நான் ஒன்றை மாத்திரம் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். திட்டச் செலவுக்கு அப்பாற்பட்டு வறட்சி நிவாரண நிதி தரப்போகிறீர்களா, எவ்வளவு தரப் போகிறீர்கள்? அதை மத்திய அரசு அறிவிக்குமேயானால் அதற்குப் பிறகு தமிழக அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்து இந்த விவாதங்களுக்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இதுபற்றி மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அமைகிறேன்.





**டாக்டர் எச். வி. ஹாண்டே:** முதலமைச்சர் அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். எனக்குள்ள சந்தேகம் எல்லாம் இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் நான் இனிமேல் கேட்க மாட்டேன் என்று சொன்னார்கள் அதாவது திரு. சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருக்கின்ற வரையில்.

If he had taken this stand **earlier** it would have been different

கேட்பதற்கும் கேட்காமல் இருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்க மாட்டேன் என்றால் நமக்கு எவ்வளவு நஷ்டம், கேட்கிறேன் என்றால் எவ்வளவு லாபம் இருக்கிறது என்ற விளக்கத்தை முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொள்கிறார்கள். விளக்கத்திற்கு பிறகு நான் கேட்க மாட்டேன் என்று சொன்னார்களே அந்த 'ஸ்டாண்டை' மாற்றிக் கொண்டு Let by-gones be by-gones 'ப்ரி கான்டிரோவர்சி பொசிஷனுக்கு' வருவதற்குத் தயாராய் இருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் எழுப்பிய சந்தேகங்களுக்கு மத்திய அமைச்சர் பதில் சொல்வார்களானால் திட்ட உதவியோடு இணைக்காமல் வறட்சி நிதிக்கு மாத்திரம் எவ்வளவு தர இருக்கிறார்கள் என்று மத்திய அமைச்சர் சொல்வார்களானால் அதற்குப் பிறகு நான் பரிசீலிக்க இயலும்.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விவாதம் அல்ல. திரு. தங்கமணி.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இரண்டு மூன்று விஷயங்கள் எழுப்பியதால், அந்த விஷயங்களைத் தெளிவாக்க விரும்புகிறேன். திட்டத்திற்கும் அப்பாற்பட்டு, நிவாரண நிதி என்று பிரச்னை எழுப்பினார்கள். எனது கட்சியின் சார்பாக சமீபத்தில் நடந்த அகில இந்திய மாநாட்டில் இது சம்பந்தமாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் தீர்மானத்திலே பல மாநிலங்கள் திட்டத்திற்கு உட்பட்டுச் செலவு செய்யவேண்டுமென்று சொல்வது சரியல்ல, திட்டத்திற்கு அப்பாற்பட்டு நிதி கொடுக்க வேண்டு மென்று தீர்மானம் போட்டு இருக்கிறோம். அது ஒரு பொசிஷன், நமக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 24

அடுத்தாற்போல் திட்டத்தோடு சேர்ப்பது சரியல்ல என்று சொல்வது ஒரு நிலை. அப்படிக் கொடுக்கிற பணத்தை முறைப்படி வாங்கிக்கொண்டு, அந்தப் பணத்தை திட்டச் செலவோடு சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று வாதிட்டு இருக்க வேண்டும்.

இரண்டாவது, அவர்கள் சொன்னார்கள். இப்போது சி. எஸ். அவர்களே இந்த மாதிரி நிவாரண நிதி திரட்டுவது சரிதான் என்று தன்னுடைய ஒரு மாதச் சம்பளத்தை கொடுப்பதாக இருக் கிறார்கள். என்று சொன்னார்கள் அவருடைய நிலை அதுவாக இருக்கலாம். ஆனால் நாங்கள் ஒரு அரசியல் நிலை எடுத்து இருக் கிறோம். அதனால் கொடுப்பதாக இல்லை. அப்படிக்கொடுக்க கூடாது என்று சொல்லப்போகிறோம். அது மாத்திர மல்லாமல். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி ஒரு அறை கூவலை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கொடுக்கக்கூடாது என்று சொல்லுங்கள். நாங்கள் கொடுங்கள் என்று சொல்கிறோம். மக்கள் பணம் தருகிறார்களா இல்லையா என்பதைப் பார்ப்போம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அரசில் இருப்பவர்கள் பணம் கேட்டால் வரும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாங்கள் அரசில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பணம் வரும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** திருவள்ளுவரே சொல்லியிருக்கி றார், அரசு பிச்சை கேட்பது பற்றிச் சொல்லியிருக்கிறார், வேலை கையில் பிடித்துக்கொண்டு கொடுங்கள் என்று கேட்டால் . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. தங்கமணி அவர் களுக்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். சி. எஸ். அவர்கள் ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தி இருக்கிறார்களே அதற்காக அரசை அப் பால் வைத்து விட்டா நிதி கேட்கிறார்கள், அரசைக் கையில் வைத்துக்கொள்ளாமலா நிதி கேட்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உங்கள் அளவுக்கு எங்களுக்கு முடியாமல் இருக்கலாம். எங்களால் முடிந்த அளவுக்கு தொழி லாளர்களிடத்தில் ஒரு ரூ. 20.000 வரையில் வசூல் செய்து சில காரியங்கள் செய்து இருக்கிறோம்.



1975 மார்ச் 24]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் குறிப்பிட்டது, மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் 'கோகுல்' ஓட்டலில் ஒரு டிரஸ்ட் ஆரம்பித்து நிதி திரட்டுகிறார்களே அது அரசைக் கையில் வைத்துக்கொண்டு செய்யப்படுகிறதா? அல்லது அரசை அப்பால் தூக்கி வெளியே வைத்து விட்டு நிதி திரட்டுகி றார்களா. இதைத்தான் நான், திரு. சுப்பிரமணியம் அவர்களோடு உறவாடிக்கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்தக் கட்சியைக் கேட்டால் விளக்கம் சொல்வார்கள். அவர்கள் என்னென்ன செய்யப்போகி றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு நிவாரணங்களுக் காகப் பல காரியங்களைச் செய்ய இருக்கிறது. நாங்கள் ஏதோ சிறிய முறையில் எங்களுக்குத் தெரிந்த அளவுக்கு சில காரியங் களைச் செய்வோம். நவம்பர் மாதம் முதலே எங்கள் கட்சியின் ஆட்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். பல காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஏதோ புதிதாக யாருக்கும் அக்கறை கிடையாது.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விவாதம் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி தர மறுக் கிறேன். அடுத்து கவன ஈர்ப்பு.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஏதோ சபையின் நடவடிக்கைக்குத் தொந்தரவு கொடுப்பதற் காக நான் இதைக் கேட்கவில்லை. நான் சுருக்கமாக 8 நிமிடம் பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்க உரை கொடுத்தார்கள். அப்படிக்கொடுக்கிறபோது அதற்கு நான் ஆட்சேபனை சொல்லவில்லை.

MR. SPEAKER: No, no. No point of order.........

DR. H. V. HANDE: I am on a point of order, Sir. I expected the ordinary courtesy of allowing a chance. He himself said that I could ask for clarification.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். அது முடிந்து போன விவகாரம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கிட்டத்தட்ட ½ மணி நேரம் பேசியிருக்கிறார்கள்.

ஒரு பாயின்ட் மட்டும் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது திட்டச் செலவில் என்பதால், அதை ஏற்றுக் கொள்ளவில்லை, அதற்காகத் தனி நிதி கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஒப்புக்கொள்கிறேன். இந்தக் கேள்வி புதிதாக எழவில்லை. திட்டச் செலவில் என்பது முதலிலேயே இருக்கிறது. நீங்கள், சி. எஸ்.—கருணாநிதி கான்டிரோவர்சிக்குப் பிறகு ஒரு ஸ்டான்ட் எடுத்து இருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் இதை ஏற்கனவே சொல்லி இருக்கவேண்டும். கவர்னர் உரையில் சொல்லியிருக்கலாம், அல்லது நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் எப்படி பாயின்ட் ஆர்டரில் வரும்?

DR. H. V. HANDE: My point is that the Chief Minister should have taken this stand eariler. That means......

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எனக்கு ஒரு தெளிவு வேண்டும். இந்த மாதிரியாக நம்முடைய மன்றம் பூராவும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறது என்று சொன்னால், அரசு தீர்மானத்தைக் கொண்டு வர இருக்கிறார்களா? இந்த மாதிரி நிதி அமைப்பு உருவாக்கப்போகிறோம் என்று தீர்மானம் கொண்டு வரப்போகிறீர்களா? இல்லை முதலமைச்சர் சட்டசபையில் சொன்னதுதான் என்றால், அதற்கு புரொடஸ்ட் செய்கிற அளவில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். வெறும் ஒரு முதலமைச்சரின் ஒரு வேண்டுகோள்படி எல்லோரும் கொடுக்க வேண்டும் என்று நிலை இருக்குமானால் அதுதான் முறையா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, எல்லோரும் வறட்சி நிவாரண நிதிக்குப் பணம் கொடுங்கள் என்று நான் கேட்டேன். இப்போது தங்கமணி அவர்கள் நான் கொடுக்கக்கூடாது என்று சொல்லப்போகிறேன் என்று சொன்னார்கள். அவர் அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வரட்டும், சட்டசபையில் ஓட்டுக்கு விடலாம்.



**திரு. கோவை செழியன்:** ஒரு சின்ன பாயின்ட் ஆப் ஆர்டர். முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது திட்டச் செல வுக்கு அப்பாற்பட்ட முறையில் மத்திய அரசு இந்த வறட்சி நிவாரண நிதிக்காக தனியாக பணம் தர முன்வந்தால் பரிசீலனை செய்கிறேன் என்று சொன்னார்கள். அப்படி மத்திய அரசு பணம் தர முன் வந்தால் முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது நான் அப்போதே சொன்னேன். திட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையில் வறட்சிக் காக இவ்வளவு பணம் தரப் போகிறோம் என்று மத்திய அரசு அறிவிக்குமானால் அது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இதை முதலிலேயே சொல்லியிருக்கவேண்டும். லேட்டாகத்தானே சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜேம்ஸ், நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படியுங்கள்.

### 3. நடைமுறைக் கேள்விகள்.

#### (அ) அரிசன நல அமைச்சர் ஒரு தவறான விடை அளித்தார் என எழுப்பப்பட்ட பிரச்னை குறித்து.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஒரு துணை வினாவிற்கு பதில் அளிக்கிற நேரத்தில் மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள். . .

MR. SPEAKER: No point of order. Mr. James.........

THIRU P. SOUNDARAPANDIAN: Sir, I am on a point of order, Point of order should be given preference.........

MR. SPEAKER: No, no. Mr. James.

THIRU G. R. EDMUND: Sir, you are going to another subject. He is on a point of order. How can you disallow him without hearing? Point of order is our right. Every member has got the right to raise a point of order at any time.

MR. SPEAKER: With the permission of the Chair தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும்.

THIRU G. R. EDMUND: No member is at the mercy of the Speaker here . . . . . .

Mr. SPEAKER: With the permission of the Chair— தான் point of order raise செய்ய முடியும். Right இல்லை

திரு. க. உரா. எட்மண்ட்: சபாநாயகர் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்புக் கூறலாமே தவிர, பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு முன்பே இல்லை என்று சொல்ல முடியாது. சபா நாயகர் தயவில் யாரும், எந்த உறுப்பினரும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து ஒருவர் கேட்டால் அனுமதிக்க முடியும். கிட்டத்தட்ட 7 பேர் எழுந்து நின்று பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டால் யாரை அனுமதிக்க முடியும்? அதை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது.

THIRU G. R. EDMUND: 'We should get the consent of the Speaker'—there is no provision in the rules like that.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் இங்கே உட்கார்ந்திருந்திருக்கிறீர்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் கூட பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால் தான் எழுப்ப முடியும்.

திரு. க. உரா. எட்மண்ட்: நீங்கள் அவரை என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்ல அனுமதி கொடுங்கள். பிறகு உங்கள் தீர்ப்பைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, என்ன உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 10—3—1975-ம் தேதி அன்று நான் எழுப்பிய ஒரு துணைக் கேள்விக்கு மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் ஒரு தவறான. . .



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

THIRU P. SOUNDARAPANDIAN: Under rule 186 of our Assembly Rules, a Privilege Motion . . . .

MR. SPEAKER: Rule 186 says, a matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon.

THIRU P. SOUNDARAPANDIAN: I refer to the last sentence, . . . . the House shall be entitled to immedate precedence over all other business.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவிலேஜ் எழுப்புவதற்கும் பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால்தான் முடியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கடைசி வாக்கியத்தைக் குறித்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரி. பிரிவிலேஜ் மேட்டருக்கு எல்லாவற்றையும் விட முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதற்கும் பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால் தான் முடியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பிரிவிலேஜ் மோஷனுக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். நான் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் மீது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவிலெஜ் மோஷன் கொண்டு வருவதற்கு பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்த பிறகுதான் நீங்கள் பேசலாம்.

திரு. க. உரா. எட்மண்ட்: திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைத்தான் எழுப்பியிருக்கிறார்கள்.

[1975 மார்ச் 24

MR. SPEAKER: He is going to the privilege issue.

THIRU G. R EDMUND: Let me explain our position. Why should you presume certain things?

அந்த ஒழுங்குப் பிரச்னை என்னவென்றால்—விதி முறைகளில் கேள்வி நேரம் முடிந்த பிறகு ஸீரோ அவரில் பிரிவிலேஜ் மோஷன் எழுப்புவதற்கு உரிமையிருக்கிறது என்று விதிமுறை வைத்திருக்கிறோம்.

MR. SPEAKER: With the permission of the Speaker or without the permission of the Speaker. . . .

THIRU G. R EDMUND: I quite concede with the Chair that it is with the permission of the Speaker.

(மணி அடிக்கப்பட்டது.) என்னைச் சொல்லிவிட மாட்டேன் என்கிறீர்களே. பிரிவிலெஜ் மோஷன் எடுக்காமல் 41, 42 விதிகளின் கீழ் எப்படி எடுக்கலாம் என்பதற்காகத்தான் திரு. சௌந்தரபாண்டியன் ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் அறையில்தான் முடிவெடுக்கவேண்டும். இதுபற்றி முன்பே அறையில் முடிவெடுக்கப்பட்டு உறுப்பினருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அதை இந்த அவையில் எப்படி எழுப்புவது?

THIRU G. R. EDMUND: You can give any ruling. The Chair is entitled and is perfectly at liberty to give any ruling whether it is a point of order or not a point of order. You can straightaway say that it is not a point of order and then he will sit. Our point of order is that you cannot prevent him from raising a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் தடுக்கவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அன்றைய தினம்கூட திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் உரிமைப் பிரச்னையில் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார், உரிமைப் பிரச்சினையிலுள்ள விவகாரத்திற்கே செல்லாமல் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னார். யார் மீது என்ன விவகாரம்



1975 மார்ச் 24] [டாக்டர் மு. கருணாநிதி]

என்றெல்லாம் சொல்லவில்லை. ஆனால் திரு. சௌந்தரபாண்டியன் என்ன உரிமைப் பிரச்னை, யார் மீது கொடுத்தேன் என்பதையெல்லாம் சொல்வது முறையல்ல.

திரு. சௌந்தரபாண்டியன்: * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் இங்கே இப்பொழுது சொன்னதெல்லாம் அவைக் குறிப்பேட்டில் ஏறாது.

THIRU P. SOUNDARAPANDIAN: I am raising a point of Order.

MR. SPEAKER: Thiru James . . . .

THIRU P. SOUNDARAPANDIAN: I am not going to allow you to proceed with the other proceedings.

(Thiru P. Soundarapandian was standing)

THIRU J. JAMES: Sir, I wish to call the attention . . . . .

THIRU P. SOUNDARAPANDIAN: On a point of Order, Sir. You allow me to speak. It is my right.

(Thiru P. Soundarapandian was standing)

**4. கவன ஈர்ப்பு.**

குமரி மாவட்டம் வில்லுன்னிக்கோணம் கிராமத்திலுள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

THIRU J. JAMES: Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the fire accident that occured in January 1975 destroying two buildings of the Villuonnikonam Government Middle School in Kanyakumari district and consequent sufferings of the students for want of accommodation.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

THIRU P. SOUNDARAPANDIAN : Point of order, point of order, Sir.

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் நின்றுகொண்டேயிருந்தார்.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை கல்வி மாவட்டத்திலுள்ள வில்லுன்னிக்கோணம் கிராமத்திலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் 29—1—1975 இரவு ஒரு தீ விபத்து ஏற்பட்டது உண்மை. அப்பள்ளித் தலைமையாசிரியை இதுபற்றிய தகவலை தந்திமூலம் 30—1—1975 அன்று பள்ளிக் கல்வி இயக்குநருக்குத் தெரியப்படுத்தினர். முதன்மை கல்வி அலுவலர் தலத்திற்குச் சென்று பார்த்து விவரமான அறிக்கை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். பள்ளிகளின் துணை ஆய்வாளர், விபத்து நடந்த தினமான 29—1—1975 அன்றே அவ்விடத்திற்குச் சென்று பார்த்ததாகவும், தீயணைப்புப் படையினரால் தீ அணைக்கப்பட்டு விட்டதாகவும், இவ்விபத்தினல் நாசமடைந்த பொருள்கள், உபகரணங்கள் ஆகியவற்றின் மதிப்பு ரூ. 4,400 என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், உயிர்சேதம் எதுவுமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. கூரை வேயப்பட்ட இரு கட்டிடங்கள் எரிந்து விட்டன எனவும், அதன் மதிப்பு ரூ. 2,500 எனவும் மேஜை, நாற்காலிகள் முதலியவை எரிந்ததினல் நஷ்டம் ரூ. 1,900 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர் தீ விபத்துக்குக் காரணம் சதி வேலையாக இருக்கலாமென்று சந்தேகிப்பதால், அதைப்பற்றி புலனய்வு செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நாகர்கோயில் கோட்ட நிருவாகப் பொறியாளர் இப்பள்ளிக் கட்டிடத்திற்கு சிறப்பு மராமத்து வேலைகள் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறர். பள்ளிக்கு இட வசதியின்பொருட்டு முதன்மைக் கல்வி அலுவலர் உடனடியாக தற்காலிகமான கூரை வேய்ந்த கொட்டகை போட்டுக் கொடுக்கவும் ஏற்பாடு செய்துள்ளார்.



திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த தீ விபத்து ஏற்பட்டதால் இரண்டு கட்டிடங்கள் எரிந்துபோயிற்று. இரண்டு கட்டிடங்களிலும் பத்து வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. அந்த விபத்திற்குப் பிறகு அந்தப் பத்து வகுப்புகளும் நடத்துவதற்குள்ள வாய்ப்பில்லாமல் மாணவர்கள் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு அரசாங்கம் சிப் மினிஸ்டர் பண்டில் இருந்தாவது உடனடியாக கட்டிடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வகுப்புக்களை நடத்துவதற்கு பள்ளிக்கு முதன்மை கல்வி அலுவலர் அங்கு மராமத்து வேலைகள் செய்து உடனடியாக கூரை வேய்ந்த கொட்டகை போட்டுத் தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறர்கள். மேற்கொண்டு அரசாங்கத்தின் சார்பில் என்ன செய்யவேண்டுமென்று முடிவெடுக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, I want to offer a few remarks in support of my cut motions . . . . . .

THIRU P. SOUNDARAPANDIAN : Point of Order, point of Order . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் கொடுத்த தீர்ப்பின் மீது எந்தவிதமான பேச்சும் இருக்கக்கூடாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : முழுமையாகக் கேட்டுவிட்டு பிறகு சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படித்தான் தீர்ப்பளிக்க வேண்டும், அப்படி அளிக்கக்கூடாது என்றெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1975 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எட்மண்ட், உங்கள் கட்சி உறுப்பினர் சொல்வது பாயின்ட் ஆப் ஆர்டரில் வருமா? இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. சௌந்தரபாண்டியன் சொன்னதெல்லாம் அவைக் குறிப்பேட்டில் ஏறுது.

(5) 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

(இ) நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும்.

(உ) நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல்.

(ஊ) நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு.

THIRU B. VENKATASWAMY: Sir, in support of my cut motions on the Demands for Grants in respect of Administration of Justice, Jails, Co-operation, Handlooms and Textiles, Civil Supplies and Miscellaneous Capital Outlay, I want to offer a few remarks. Regarding Jails, for example, you will have to provide more facilities to convicts who are put up in the jails . . . .

THIRU P. SOUNDARAPANDIAN: Point of order, point of order . . . .

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் நின்றுகொண்டே இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சௌந்தரபாண்டியன், நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா?

(திரு. பெ. ளெசந்தரபாண்டியன் நின்றுகொண்டேயிருந்தார்).



1975 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் நிகழ்ச்சிகளுக்கு தடங்கலாக இருப்பதால் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களை அவையிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: என்னை வெளியேற்ற முடியாது.

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் இருக்கையில் அமர்ந்து விட்டார்.)

THIRU B. VENKATASWAMY: Facilities are to be improved to the convicts in the jails. At certain times certain facilities are not available properly. Food is also not given properly. You will have to provide some educational facilities to the convicts. Those who were not having facilities to study in the beginning stages might have converted themselves into criminals or thieves. To create a good opportunity to them, I hope and trust, to give them an opportunity to mend them in the jails, those who are having some technical skill may be given some technical education, so that when such people come out, they can take up some job or start some industry. Any other education can also be given.

(முற்பகல் 11-00)

Sir, I have given notice of a cut motion to discuss the need to conduct classes in Jails to teach criminals to improve their moral habits. This is necessary to make them behave well in society and also to improve their moral character after they come out of the jail. I have also given notice of another cut motion to discuss the need to provide matrimonial opportunities to prisoners to lead a normal life. I request the Government to look into this aspect of the matter and see that some matrimonial alliances among the convicts are brought about.

Regarding the supply of fertilisers, its supply to co-operatives is very bad. In our area, fertilisers comes to the society after its need is over. Also, when it is available, the Secretary will not be available and if he is available, the President would not have issued the necessary order for its distribution. So, a

proper system should be evolved to see that fertilisers are supplied to the ryots at the right time. Also, sometimes urea is supplied when it is not required by the ryots. They would require super-phosphate but that would not be available. Also, there is no co-ordination between the Agricultural Extension Officer and the Co-operative Societies. The Agricultural Extension Officer would recommend NPK fertiliser but that would not be available in the society. So, the Government should see that the right type of fertilisers is made available to the societies and to the ryots at the right time. Otherwise, there will be a lot of waste in the use of fertilisers and it will also result in loss to the Government and the Societies.

In this connection, I would suggest that fertilisers should be supplied to the Panchayat Unions. Now, the Agricultural Extension Officer is under the control of the Panchayat Union.

(3) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்களை அவையைவிட்டு வெளியேறும்படி பேரவைத் தலைவர் ஆணையிட்டும், அவர் வெளியேறாதது குறித்து.

திரு. க. சுப்பு : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் இந்த அவையின் அலுவல்களை தடை செய்கிறார் என்ற காரணத்தால், வெளியேற உத்தரவு போட்டீர்கள். ஆனால் அவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்கான தங்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஒரு பிரிவிலேஜ். பேரவைத் தலைவரின் தீர்ப்புக்குப் பணியவில்லை என்றால் அது ஒரு பிரிவிலேஜ் மாட்டர் ஆகும்.

திரு. க. சுப்பு : இந்தச் சபையின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் அவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதால் அவர்கள்மீது நான் ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவருகிறேன்.



திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிமைப் பிரச்சனை கொண்டுவருவது என்றால் தாராளமாகக் கொண்டு வரலாம். அப்போது எனக்கு பேச வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியேற்றப்பட்ட உறுப்பினர் பேசியதாக எந்தக் குறிப்பும் வரக்கூடாது ; நான் அனுமதிக்கவில்லை.

திரு. க. உரா. எட்மண்ட் : தலைவரவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சபையின் மரபு கெடாமல், விதிமுறைகளுக்கு மாறுபடாமல் சபை நடக்க வேண்டுமென்றால். அதற்கு சபாநாயகர் மட்டும் ஒத்துழைத்தால் போதாது. கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நாம் சில விதிமுறைகளை வகுத்துக் கொண்டு, அதன்படி சபையை நடத்துகிறோம். அதற்கு மாறாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்று, அதை கட்சித் தலைவர்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது என்றால் சபையை ஒழுங்காக நடத்த முடியாது. இதற்கு முன்னால் "நான் பேசாமல் உட்கார்ந்து விடுகிறேன்; நீங்கள் சபையை நடத்துங்கள்" என்று ஒரு சபாநாயகர் சொன்னது எல்லோருக்கும் நினைவிருக்கும். கட்சித் தலைவர்கள் ஒத்துழைக்காமல் சபை இப்படி நடப்பதாக இருந்தால் அந்த சபாநாயகர் சொன்னதைத்தான் நானும் சொல்லவேண்டிவரும்.

THIRU G. R. EDMUND : Sir, on a point of order and also on a point of clarification.
எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களை தாங்கள் வெளியேறச் சொன்னீர்கள். அவர் வெளியேறமாட்டேன் என்று சொல்லி உள்ளே உட்கார்ந்திருக்கிறார். அதற்குப் பின்னால் திரு. சுப்பு அவர்கள் உரிமைப் பிரச்சனை எழுப்பியிருக்கிறார்கள். வெளியேற வேண்டுமென்று சபாநாயகர் சொன்ன பின்னும் உட்கார்ந்திருப்பதால் உரிமைப் பிரச்சனை கொண்டு வருவதாக அவர்கள் சொன்னார்கள். அதற்கு சௌந்தரபாண்டியன் அவர்கள் சில வார்த்தைகள் பேசியிருக்கிறார்கள். "அவையிலிருந்து வெளியேறச் சொல்லியும் வெளி

யேறாமல் உள்ளே உட்கார்ந்துகொண்டு பேசியிருக்கிறார்; அப்படிப் பேசிய பேச்சு நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது' என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

ஒரு உறுப்பினரை வெளியேறச் சொல்ல, அல்லது வெளியேற்ற பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. உறுப்பினர் போவதும் போகாததும் அவருடைய இஷ்டத்தைப் பொறுத்தது. அதை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இஷ்டத்தைப் பொறுத்ததா? பேரவைத் தலைவர் ஒரு ஆணை பிறப்பித்தால் அதற்கு உறுப்பினர்கள் கட்டுப்பட வேண்டும்.

THIRU G. R. EDMUND: I am speaking with reference to Rules.

உறுப்பினர் கட்டுப்பட வேண்டும். ஆனால் தொடர்ந்து உள்ளே இருக்கிறார். உங்கள் உத்தரவை மீறி, தொடர்ந்து உள்ளே இருப்பவரை நீங்கள் இங்கே இருக்கிற காவல் துறையினரை அல்லது சார்ஜண்டை கூப்பிட்டு, வெளியேற்ற முடியும்.

The Hon Speaker has got ample discretionary powers to see that he is taken outside the House by the Police, but he has not exercised that power. The fact that he has not exercised that power shows implied consent for Thiru Soundarapandian to continue to sit . . . .

ஆகவே, பேசிய பேச்சு குறிப்பில் ஏறாது என்று சொல்வது சரிதானா? சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, வள்ளுவர் படம் இங்கே நம்முடைய அவையை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. "கடிதோச்சி மெல்ல எறிக" என்பது வள்ளுவர் வாக்கு. அந்த வகையில் தாங்கள் 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற வகையில் நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். நண்பர் எட்மண்ட் அவர்கள் சார்ஜண்டை விட்டு, சௌந்தரபாண்டியனை வெளியேற்ற வேண்டுமென்று சொல்லி, அதை ஒரு பெரிய செய்தியாக்க வேண்டுமென்று



விரும்புகிறார்கள். ரொம்ப ராஜதந்திரமாக நடந்துகொண்டு, தாங்கள் இப்போது வெளியேற வேண்டுமென்று சொன்னபிறகு அவர்கள் பேசிய வார்த்தைகளையும் இனிமேலும் பேசக்கூடிய வார்த்தைகளையும் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் என்னைவிட தாங்கள் வள்ளுவத்தில் அதிகப் புலமை வாய்ந்தவர்கள். வெளியேறுங்கள் என்று சொன்னதும் அவர்கள் உட்கார்ந்துவிட்டார்கள். ஆகவே, தங்கள் ஆணைக்கு அடங்கிவிட்டார்கள் என்றுதான் அர்த்தம். அதனால் தங்களுடைய உத்தரவை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, now that the matter is over, and things have quietened down, we can forget the whole matter and we can proceed with the discussion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதே புரியவில்லை. என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இப்போது சூழ்நிலை அமைதியாக இருக்கிறது. இந்த அமைதியான சூழ்நிலையைக் கெடுக்க வேண்டாம். முதலமைச்சர் அவர்கள் சொன்னதும் நான் சொன்னதும் கருத்து வேறுபாடு கொண்டதல்ல. நமக்கு நேரமும் ஜாஸ்தி இல்லை. அமைச்சர் மாதவன் அவர்கள் நிறைய பதில் கொடுக்க இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சனையை இப்படியே விட்டுவிடலாம். அமைதியான சூழ்நிலை அப்படியே இருக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உறுதிமொழியாவது வர வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி இந்த அவையில் வராது என்று தலைவர்களாவது உறுதிமொழி கொடுக்க வேண்டும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நம்முடைய முதலமைச்சரவர்கள் சில வார்த்தைகளை வைத்து விளையாடுவதிலே மிகக் கெட்டிக்காரர். நான் காவல் துறையினரை வைத்து உறுப்பினரை வெளியேற்ற வேண்டுமென்று விரும்பியதாக, என்னுடைய

விருப்பத்தைத் தெரிவித்ததாகச் சில கருத்துக்களைத் தெரிவித்து, என்னைச் சிக்கலிலே இழுக்க முற்படுகிறார்கள். நான் சொன்னது, சட்டமன்றத் தலைவருக்கிருக்கிற அதிகாரங்களைத்தான். அதைத் தான் நான் சுட்டிக்காட்டினேன். அப்படிச் சுட்டிக்காட்டிய நேரத்தில், இவ்வளவு பெரிய அதிகாரம் உங்களுக்கு இருந்தும், அவரை வெளியேற்ற நீங்கள் உத்தரவிடாமல் இருப்பது உங்களுடைய பெருந்தன்மையைத்தான் காட்டுகிறது என்று தான் சொன்னேன். ஆகவே, உங்களுக்கு அவ்வளவு அதிகாரம் இருந்தும், வலுக்கட்டாயமாக, பலவந்தமாக அவரை வெளியேற்றுகின்ற அதிகாரம் இருந்தும் உள்ளே இருந்து அவர் பேச வேண்டுமென்று அனுமதித்து, பிறகு அவர் பேசிய பேச்சை ஏன் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்றுதான் கேட்டேன். அவரை வெளியேற்ற வேண்டுமென்பதிலே எனக்கு எந்தவிதமான அக்கறையும் இல்லை. எங்களுடைய உறுப்பினர் இருந்து கருத்து தெரிவிப்பதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த விவாதத்திலே பங்குகொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தமாதிரி சட்டமன்ற நிகழ்ச்சிகளில் தலைவர்கள் ஒத்துழைப்பு தரவில்லை என்ற உணர்வை தாங்கள் சொன்னதை நாங்கள் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறோம். கட்சித் தலைவர்கள் ஒழுங்காக, அமைதியாக நடக்க வேண்டுமென்று எல்லோரும் விரும்பித்தான் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறோம். வீணாக சண்டை சச்சரவுகள் கிளப்ப வேண்டுமென்ற எண்ணத்தோடு நாங்கள் யாரும் மன்றத்திற்கு வரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, இப்பொழுது நடந்த நிகழ்ச்சிகள் மனதைப் புண்படுத்துவதாக இருந்தாலும், மேலும் சுமுகமாக நடத்த முதலமைச்சரவர்கள் ஒரு ஆலோசனை கூறியிருக்கிறார்கள். தாங்களும் அவாறு மேலான கருத்தை ஏற்றுக்கொண்டு இந்த அளவோடு இதனை விட்டுவிட்டு அவையை நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனக்கு ஒன்றுமில்லை. நான் பெருந்தன்மையாகத்தான் நடந்துகொள்கிறேன். பெருந்தன்மையாக நடந்து கொள்வதே தவறு என்று சொல்லக்கூடிய அளவுக்கு



நிலைமை இருப்பதாக நான் கருதுகிறேன். நான் விதிமுறைகளையொட்டித்தான் அவையை நடத்துகிறேன். விதிமுறைகளையொட்டி அவையை நடத்தவில்லையென்று சொன்னால், விதிமுறைகளையொட்டிக் கூட நடத்தத் தெரியவில்லை என்று பின்னால் அவப்பெயர் வரும். புலவர் கோவிந்தனுக்கு எந்தவித இழுக்கும் வருவதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. பேரவைத் தலைவருக்கு இழுக்கு வரக் கூடாது. அதிலே பேரவைத் தலைவருக்கு மட்டுமல்ல, உறுப்பினர்கள் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எட்மண்ட், திரு. பொன்னப்ப நாடார் ஆகியோரும், முதலமைச்சர் அவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் இந்த அளவோடு இதை விட்டுவிடுகிறேன்.

### (5) 1975-76—ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

Thiru B. VENKATASWAMY : I was talking about the supply of fertilisers to ryots. In the District Development Council meeting also I have spoken about this fertiliser supply to the ryots of Dharmapuri district. I request the Hon. Minister concerned to see that the Civil Supplies Department distributes this in a fair manner. I have complained to the Civil Supplies Commissioner about this.

(மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரமாயிற்று. இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?

Thiru B. VENKATASWAMY : I will finish quickly. I find that worms are there in the atta supplied by the Civil Supplies Department. I have complained about this. If such supplies are made, it will spoil the health of the people. Unless ISI certificate is given, unless the Civil Supplies authorities assure about the

[Thiru B. Venkataswamy] [1975 மார்ச் 24

quality, the food stuffs should not be supplied; otherwise the health of people would be affected. Warehouses should take care about the preservation of quality. The concerned officer of the Civil Supplies Department must give a certificate that the stuff is fit for consumption. Then ony it should be released for distribution.

In Hosur border area, they have put up a checkpost in Mariamman temple. The police people are camping there and they are taking meat, etc., and as such for two to three years, the festivals could not be celebrated in the temple. I have complained to the District Collector but nothing has been done so far. What I say is, checkposts should not be situated in such places but should be near the border in Hosur, Berigai, etc.

I am glad that the Government of India have permitted free movement of millets throughout. Just like that if they permit free movement of rice in the Southern zone, we will get enough rice from Andhra and Karnataka. I hope the Chief Minister will take up this matter with the Centre and do the needful. With these words, I resume my seat.

THIRU C. ARANGANAYAKAM: On a point of Order, Sir. Out of the many Demands being discussed here, Administration of Justice is one Demand. Government is getting sizable income from court fees, etc. Now a case is reported in the 'Hindu'. . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பாயின்ட் ஆப் ஆர்டரை முதலில் கேளுங்கள். பிறகு, இல்லையென்றால் டிஸ்அலவ் பண்ணுங்கள் என்று சொல்வது முறையல்ல. நம்முடைய விதி முறைகள் மீறப்பட்டால், நாம் பின்பற்றுகிற மரபுகள் மீறப்பட்டால், அவ்வாறு ஏதாவது இங்கு நடைபெற்றால், அது பாயின்ட் ஆஃப் ஆர்டரின்கீழ் வரும்.

THIRU C. ARANGANAYAGAM: I will come to the point. After that Judgement, will it be proper . . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஜட்ஜ்மென்டெல்லாம் இதில் வராது. வேண்டுமென்றால், டிமாண்டில் பேசுங்கள். இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.



1975 மார்ச் 24]

*திரு. மா. சுப்பிரமணியன்:* பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 5½ லட்சம் தறிகள் இயங்கி வருகின்றன. இந்த 5½ லட்சம் தறிகளை நம்பி 30 லட்சம் மக்கள் தொழில் பெற்று, வாழ்க்கை பெற்று வருகிறார்கள் என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. இந்த 5½ லட்சம் தறிகளில் 1½ லட்சம் தறிகள் 740 கூட்டுறவு சங்கங்களின் தறிகளாக இயங்கி வருகின்ற பெருமையினை இந்த அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அப்படி கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் வந்துள்ள 1½ லட்சம் தறிகளின் மூலம் ஆறு, ஏழு லட்சம் மக்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்பதையும் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அந்த அளவுக்கு கூட்டுறவுத் தறியின் மூலம் இங்கிருக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல வாழ்வினை இந்த அரசு வழங்கியிருப்பதற்கு கைத்தறி நெசவாளர் பெருமக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த நெசவாளர்கள் சங்கங்களுக்கு 87½ லட்சம் ரூபாயை அரசாங்கம் தந்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களில்—ப்ரைமரி சங்கங்களுக்கு பங்குத்தொகை மூலமும் அரசு உதவியை வழங்கியிருக்கிறது.

(திரு. என். டென்னிஸ் தலைமை)

அதோடு மட்டுமல்ல, சமீபத்தில் 3 கோடி ரூபாயை சிறப்புக் கடனாகக் கொடுக்க உத்தரவாதம் தந்து, இந்த 3 கோடி ரூபாய் கடனைப் பெற்று கூட்டுறவுச் சங்கங்கள் ப்ரைமரி சொசைடிகளிடம் இருந்து கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து கூட்டுறவுத் துறையில் இருக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வும் தந்துகொண்டிருப்பதை நான் இந்த நேரத்தில் நன்றி உணர்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் ஹாண்ட்லூம் பைறென்ஸ் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் தனியார் துறையில் இருக்கிற நெசவாளர்களுக்கு நல்ல உதவியினை இந்த அரசாங்கம் செய்து வருகிறார்கள். எச்.எப்.டி.ஸி. நேரிடையாக வியாபாரத்தில் ஈடுபடாமல் இருந்தது. சென்ற ஆண்டில் இருந்து தொழில்துறையில் தயாரிக்கப்படுகிற துணிகளை எச்.எப்.டி.ஸி. வியாபாரம் செய்கிற முறையினை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றை கேட்டுக்கொள்கிறேன். எச்.எப்.டி.ஸி. கண்காட்சிகளில் கடைகளை வைத்து விற்பனை செய்கிற நேரத்தில்—அந்தக் கண்காட்சியில் அதற்கு ஏற்படுகிற செலவை மானியமாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேநேரத்தில் மற்றொன்று. இந்த அளவுக்கு நமது மாநில அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வை வளப்படுத்த, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில்—தனியார் துறையில் இருக்கிற தறிகளையும்—கூட்டுறவுத் துறையில் இருக்கிற தறிகளையும் காப்பாற்றியாகவேண்டும், அவர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியாகவேண்டும் என்கிற அடிப்படையில் அந்த 30 லட்சம் மக்களுக்கு நலம் செய்கிற முயற்சியில் நமது அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில்—அதோடு மட்டுமல்ல—இன்றைக்கு ஆலைத் துணிகளின் போட்டியை எதிர்த்து கைத்தறித் துணிகள் நிலைத்து நிற்க—கைத்தறிகளுக்கே எந்தந்த துணிக்கான பாதுகாப்பை அளிப்பது என்பதுபற்றி எல்லாம் ஆராய்ந்து—பொருத்தமான ஒரு சட்டத்தைக் கொண்டுவர—அது இன்றைக்கு பொறுக்குக் குழுவின் ஆய்வில் இருந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில்—மத்திய அரசாங்கம் கண்டிரோல்ட் கிளாத் ஸ்கீம் என்கிற புதுவகையான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் ஆலைகளில் தயாரிக்கப்படுகிற மொத்த உற்பத்தியில் 30 சதவிகிதம் மலிவான துணிகளை தயாரித்துத் தர வேண்டும் என்கிறார்கள். அதுவும் கைத்தறிகளில் வேட்டி, புடவைகள் நெய்யப்படுகின்றன என்றால் அதேபோன்று மலிவான வேட்டி, புடவைகள் ஆலைகளில் தயாரித்துத் தரப்பட வேண்டும் என்கிற நிலை இந்தச் சட்டத்தின் மூலம் உருவாவதால் மத்திய அரசு மறைமுகமாக கைத்தறிகளுக்கு அழிவையே தேடுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. மலிவான விலையில் இந்த நாட்டு மக்களுக்கு துணிகள் தயாரித்துத் தரப்படவேண்டும் என்பது மத்திய அரசின் லட்சியமாக இருந்தால் கைத்தறிகளில் தயாரிக்கப்படுகிற வேட்டி,





புடவைகளுக்கு அதிகமான ஆதரவைத் தர முன்வந்திருக்க வேண்டும். அப்படி இல்லாது மாநில அரசு கைத்தறிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க எல்லா வகையிலும் முயன்று கொண்டிருக்கிற நேரத்தில் அதற்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய முறையில்தான் இதுபோன்ற புதிய ஏற்பாட்டினைக் கொண்டுவந்திருக்கிறார்களோ என்று எண்ணக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றையதினம் கைத்தறித் துணி தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ரூபாய் 40 கோடி அளவுக்கு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் தறிகளில் மட்டும் ரூபாய் 17 கோடி அளவுக்கு கைத்தறித் துணி தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தேக்கத்தினைப் போக்குகின்ற வகையில்தான் இன்றைய தினம் கூட்டுறவுத் துறையிலே கோவாப் டெக்ஸ் மூலம் தமிழ்நாடு முழுமையும் 27 ஆம் தேதி தொடங்கி அடுத்தமாதம் 14 ஆம் தேதி வரை 17 நாட்களுக்கு மேல் கண்காட்சிகளை நடத்தினால் ஓரளவு விற்பனை செய்ய முடியும் என்ற எண்ணத்தில் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் கடந்த நூறாண்டாக இல்லாது இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டிருக்கிற நேரத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற நெசவாளர்களுக்கு, மிகவும் பின்தங்கியவர்களுக்கு, பிழைப்பும் வாழ்வும் கொடுத்தாக வேண்டும் என்ற நிலையில் கண்காட்சியினை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு இதேபோல கண்காட்சி நடைபெற்றபோது 2 கோடி ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றிருக்கிறது. அந்த நேரம் அரசாங்கம் 10 பைசா தள்ளுபடி—ரிபேட் வேறு கொடுத்தது. இன்றையதினம் அரசாங்கம் இந்தத் தள்ளுபடி தருவதாக இது வரை ஆணை பிறப்பிக்கவில்லை. நான் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த ஆண்டு கண்காட்சியின்போதும் விற்பனை ஆகிற துணிகளுக்கு ரூபாய்க்கு 15 பைசா ரிபேட் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்தால் 3 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகும் என்று நம்புகிறேன்—இந்த 15 சதவிகிதம் ரிபேட் கொடுப்பதன் மூலம் அரசுக்கு பெரிய தொகை ஒன்றும் செலவாகிவிடாது. கிட்டத்தட்ட 45 லட்சம் ரூபாய் செலவாகலாம். ஆனால் 45 லட்சம் ரூபாய் அரசாங்கம் செலவிடுகிற நேரத்தில் 30 லட்சம் மக்களுக்கு வாழ்வு தருகிற நிலைமை ஏற்படுகிறது என்பதை நாம் மறந்துவிட

[திரு. மா. சுப்பிரமணியன்] [1975 மார்ச் 24

வதற்கில்லை. இந்த 3 கோடி ரூபாய் அளவுக்கு தேங்கியிருக்கக் கூடிய கைத்தறித் துணிகளை நாம் அகற்றினாலேயே நான்கைந்து மாதங்களுக்கு இந்த நெசவாளர் பெருமக்கள் நிம்மதியான வாழ்க்கையினைப் பெறுவார்கள். ஆகவே கண்காட்சி நேரத்தில் அரசாங்கம் இந்த 15 பைசா ரிபேட்டை—சிறப்புத் தள்ளுபடியாக அளிக்க முன்வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, வறட்சி நிவாரணப் பணிக்காக நாம் 29 கோடி சொச்சம் ரூபாயை ஒதுக்கி நாம் 6 லட்சம் பேர்களுக்கே வேலை வாய்ப்பைத் தந்து கொண்டிருக்கிறோம் என்ற நிலைமை இருக்கிறது. இந்த குறைந்த செலவான 45 லட்சம் ரூபாயை நாம் ரிபேட்டாக அளிக்க முன்வருவதன் மூலம் 25 லட்சம் மக்களுக்கு நல்வாழ்வினைத் தந்தவர்களாவோம். ஆகவே, இந்த ஆண்டு கண் காட்சியின்போது சிறப்புத் தள்ளுபடியாக 15 நயா பைசாவை அளிக்க நமது அரசு முன்வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல அரசின் எல்லாத் துறைகளிலும் இந்தக் கைத் தறித் துணிகளை வாங்கவேண்டும் என்று செய்வதன் மூலம் பெருமளவுக்கு தேங்கிக்கிடக்கிற கைத்தறித் துணியை அகற்ற முடியும். இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் வாங்குகிற நிலைமை முழுமையாக ஏற்படவில்லை. 1968-69 இல் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது—முதன்முதலாக அந்தத் துறையில் கைத்தறித் துணிகளை உபயோகிக்க வேண்டுமென்று செய்தார்கள். இன்றைக்கும் போக்குவரத்துத் துறையில் பெரும் அளவுக்கு கைத்தறித் துணிகளை உபயோகப்படுத்துகிறார்கள். அரிசன நல இலாக்காவில் ஓரளவு கைத்தறித் துணியை உபயோகப் படுத்துகிற நிலைமை இருக்கிறது. மற்ற எல்லாத் துறைகளிலும் கூட கைத்தறித் துணியை வாங்கி உபயோகிக்க ஏற்பாடு செய்தால் ஆண்டுதோறும் நிரந்தரமாக 3 கோடி அளவுக்கு அரசுத் துறையில் மட்டும் கைத்தறித் துணி செலவழியக்கூடிய நிலைமை ஏற்படும். குறிப்பாக காவல் துறையில்—இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டு—பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு—



1975 மார்ச் 24] [திரு. மா. சுப்பிரமணியன்]

இங்கெல்லாமும் கூட கைத்தறித் துணிகளையே வாங்க வேண்டு மென்று ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இப்போது இல்லாவிட்டாலும் முன்பு நெசவாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக அரசாங்கத்தில் கடன் வழங்கப் பட்டது. அப்படி வழங்கப்பட்ட கடனில் நெசவாளர்கள் வீடு கட்டிக்கொண்டு அந்தக் கடன் தொகையை வட்டியோடு தவணை முறையில் திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் அதற்கு வட்டிமட்டும் வருகிறது. இந்த வறட்சி நிலையை எண்ணியாவது இந்த ஆண்டு அந்த வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்வதன் மூலம் பல்லாயிரக் கணக்கான நெசவாளர் பெருமக்களுக்கு நாம் உதவி செய்தவர் களாக இருப்போம். அந்த 3 லட்சம் வட்டித் தொகையை இந்த ஆண்டு நெசவாளர் பெருமக்களுக்குத் தள்ளுபடி செய்து தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதேபோல் மீண்டும் இந்த நெசவாளர்ப் பெருங்குடி மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு ஈரோட்டிலே தமிழ் நாட்டிலே வேறு எங்குமே இல்லாத அளவிற்கு ஒரு கூட்டுறவு வார்பிங் சொசைடி இருக்கிறது, அதுவும் மிகவும் இக்கட்டான நிலையில் இருந்துகொண்டு இருக்கிறது. அங்கே உற்பத்தி செய்யப் படுகின்றவற்றை அங்கேயிருக்கின்றவர்களே வாங்கிக்கொள்ளுமாறு ஆணை பிறப்பிக்க வேண்டும், அப்படிச் செய்தால் தான் அந்தக் கூட்டுறவு சொசைடி நல்ல முறையிலே இயங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கோவை செழியன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த டிமாண்டுகளின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஜெயில்கள் சம்பந்தமாகவும், கோவாப்பரேஷன் சம்பந்தமாகவும் கோர்ட், ஹைகோர்ட் ஆகியவை சம்பந்தமாகவும் சில கருத்துக் ளை இங்கே தெரிவித்திருக்கிறார்கள், பொதுவாகப் பல பிரச்னை

[திரு. கோவை செழியன்] [1975 மார்ச் 24

களை இரண்டு நாட்களாக விவாதித்துக்கொண்டிருக்கிறோம். சனிக்கிழமையன்று இந்தப் பிரச்னையிலே இந்த மன்றத்திலே நல்லமுறையிலே விவாதித்து இருக்கிறார்கள். முதலிலே ஜெயில்களைப் பொறுத்தவரையிலும் இந்த மன்றம் சனிக்கிழமையன்று நல்ல விவாதம் செய்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் அதைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஜெயில் டிபார்ட்மெண்டில் ஏன் இவ்வளவு குறைகள் இருக்கின்றன யார் காரணம் யாரைக் குறைசொல்வது என்று நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. அமைச்சரைக் குறைசொல்ல முடியாது, அதிகாரிகளைக் குறைசொன்னாலும் இதற்கு யார் யார் உண்மையிலேயே காரணம் என்பதைக் கண்டுபிடித்தாக வேண்டும். பொதுவாக ஜெயில்களைப் பொறுத்தவரையில் ஜெயில் ஐ.ஜி.யாக யாரைப் போடுகிறார்கள் என்றால் போலீஸ் டிபார்ட்மெண்டில் இருக்கிறவர்களைத்தான் போடுகிறார்கள். அங்கே டி. ஐ.ஜி.யாக இருக்கிறவர் புரமோஷனில் இங்கே ஐ.ஜி.யாக வருகிறார். பொதுவாக இந்த அரசாங்கத்திற்கு எந்த டி.ஐ.ஜி. மீது கோபம் வந்தாலும் அவரை உடனே இந்த ஜெயில் டிபார்ட்மென்ட் ஐ.ஜி.யாகப் போட்டுவிடுகிறார்கள். அவர் அங்கே சோர்ந்துபோன நிலையிலே விரக்தியடைந்த நிலையிலே பொறுப்பை ஏற்கிறார்கள். அதனால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் நமக்கு ஏதோ ஒரு தண்டனை கொடுத்திருக்கிறார்கள், நாம் ஏன் இதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும், எல்லாம் டி.ஐ.ஜி. பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, அங்கே வருகிறவர்கள் எல்லோரும் அப்படிப்பட்ட நிலைக்கு வந்துவிடுகிறார்கள். ஏதோ அதை அவமானமாக நினைத்துக்கொள்ளுகிறார்களே தவிர கௌரவமாக நினைத்துக் கொண்டு பணியாற்றுவதில்லை, இதை நான் அமைச்சர் அவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன்.

பொதுவாக ஜெயிலுக்கு கைதிகளை அனுப்புகிறோம் என்றால் குற்றஞ் செய்தவர்களை கைதுசெய்து நிரூபித்து அதற்குப் பிறகு தான் அனுப்புகிறோம். ஆனால் ஜெயில் நிர்வாகிகளே கைதிகளை விட குற்றஞ் செய்தவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்



1975 மார்ச் 24] [திரு. கோவை செழியன்]

களுக்கு எந்தத் தண்டனை தருவது? உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டிலே கோயம்புத்தூர் சென்ட்ரல் ஜெயிலில் சில வார்டர்கள் ஏற்கெனவே அங்கே கைதிகளாக இருப்பவர்களோடு ஒன்றாகச் சேர்ந்து கொண்டு கள்ள நோட்டு அடித்தார்கள். வெளியிலே அடித்தார்கள் என்று உள்ளே போட்டார்கள். அவன் வசதியாக உள்ளே உட்கார்ந்துகொண்டு அங்கேயிருக்கிற கைதிகளை கையிலே போட்டுக்கொண்டு கள்ள நோட்டு அடித்தார்கள். இம்மாதிரி உலகத்திலே எங்கேயும் பார்த்ததில்லை, இங்கே தான் பார்க்கிறோம், ஆனால் ஏதோ சில வார்டர்களைமட்டும் கைதிகளைமட்டும்தான் தண்டித்திருக்கிறார்கள். யார் யார், அதற்கு ரெஸ்பான்சிபிள், அங்கே இருக்கிற சூப்பிரண்டெண்டெண்டை பிடித்திழுத்து நீ தான் காரணம் என்று தண்டித்தால் இப்படியெல்லாம் வராது. எல்லாம் அதிகாரிகள், எல்லாம் வேண்டியவர்கள் என்று சொன்னவுடனே விட்டுவிடுகிறார்கள். அதனால்தான் ஜெயிலிலேயே கள்ள நோட்டு அடிக்கிற பயங்கரமான நிலைமை எல்லாம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த சூப்பிரண்டெண்டெண்ட பிடித்து கைதுசெய்து கோர்ட்டில் நிறுத்தி ஜெயிலுக்கு அனுப்பியிருந்தால் மற்ற இடங்களிலே இப்படிப்பட்ட நிலைமை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: மாண்புமிகு உறுப்பினர் செழியன் அவர்கள் ஜெயிலுக்குள் கள்ள நோட்டு அடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது எப்படி செழியனுக்கு தெரியும். ஏதாவது புழக்கத்தில் விடப்பட்டிருக்கிறதா?

**திரு. கோவை செழியன்**: நான் பெரிய பிரச்னையைப் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் திசைதிருப்பிவிடுகிறார்கள்.

ஜெயிலுக்குள் கள்ளநோட்டு அடிக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது, நான் புதிதாகச் சொல்லவில்லை, உலகத்திற்குத் தெரியும்.

கோயம்புத்தூர் ஜெயிலில் நூலை நிறுத்துத் தருகிறார்கள் அந்த நூலை வாங்கிக்கொண்டு அங்கேயுள்ளவர்கள் கொஞ்சம் தள்ளித் தள்ளி நெய்கிறார்கள், அந்த வகையிலே வாரத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நூல் வெளியே கடத்தப்படுகிறது. வெளியிலே ஏஜண்ட்களே இருக்கிறார்கள், அவர்கள் கேட்கிறார்கள்

[திரு. கோவை செழியன்] [1975 மார்ச் 24

ஜெயில் நூல் வேண்டுமா என்று, அந்த அளவிற்கு அக்கிரமம் நடந்து கொண்டிருக்கிறது. துணியை மீட்டர் கணக்கிலே தருகிறார்கள், அப்படியில்லாமல் துணியையும் நிறுத்துக்கொடுத்தால் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாது, இப்படிப் பல குற்றச்சாட்டுகள் எல்லாம் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

ஜமக்காளத்தைப் பற்றி காலிகிளாத்தை ரெக்ஸினாக மாற்றியதுபற்றி, பினாயில் பற்றியெல்லாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அங்கே கைதிகளுக்குப் போடுகிற சோற்றிலே ஏமாற்றுகிறார்கள். தரவேண்டிய அளவிற்கு 80 கிராம் தரவேண்டுமென்று சொன்னால் 50, 60 கிராம்தான் தருகிறார்கள், அந்த வகையிலே ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்கள், இப்படி அரிசி, பருப்பு எல்லாவற்றிலும் திருட்டு நடக்கிறது, இதற்காக ஒரு தனி விஜிலென்ஸை போட வேண்டும். விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டிலே உள்ள அதிகாரிகளை ஜெயிலுக்கு அனுப்பி என்ன நடக்கிறது என்று கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திருச்சியிலே 1972 ஆம் ஆண்டில் விவசாயப் போராட்டம் நடைபெற்றபோது கைதுசெய்யப்பட்டார்கள். அங்கே இருந்தவர்கள் வெளியிலே வந்து விடுகிறார்கள். ஹோட்டலிலே சாப்பிடுகிறார்கள், சினிமாவுக்குப் போகிறார்கள், ஏதோ மாமியார் வீட்டுக்குப்போவதுபோல் ஜெயிலுக்குப் போகிறார்கள், போய் வந்தவர்களே என்னிடம் சொன்னார்கள், அது ஜெயிலா அல்லது மாமியார் வீடா என்று தெரியவில்லை. என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் ஜெயிலுக்குப் போனால் ரொம்பவும் கண்டிப்பாக இருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலருக்கு மட்டும் லீனியன்ஸி தரப்படுகிறது, இதைப்பற்றி கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில் ஹைகோர்ட்டு பொறுத்தவரையில் நாம் இந்த மானியத்திலே பணம் ஒதுக்குகிறோம். நாம்தான் இதைப்பற்றியெல்லாம் விமரிசனம் செய்யவேண்டும். தனிப்பட்ட யாரைப்பற்றியும் சொல்லவில்லை. ஜட்ஜுகள், முன்சீப்



1975 மார்ச் 24] [திரு. கோவை செழியன்]

ஆகியவர்கள் நியமிக்கப்படும்போது வேண்டியவர்களைத்தான் நியமிக்கிறார்கள். மாவட்டச் செயலாளராக இருந்தவர், எலக்ஷனிலே தோற்றுவிட்டார். அவரைச் சமாதானப்படுத்துவதற்காக அவரை பப்ளிக் பிராஸிக்யூட்டராகப் போட்டு ஜட்ஜாக உயர்த்தியிருக்கிறார்கள். இதுவெல்லாம் முறைதானா என்பதை அறிந்து கொள்ளவிரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . .

I am not yielding, Sir. திரு. கோவை செழியன் :

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்தைப்பற்றிப் பேசுவது முறைதானா? உயர்நீதி மன்ற நீதிபதிகளைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் ஒரு பேனலை அனுப்பி மத்திய அரசாங்கம். . . . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் இங்கே இருக்கிறார், அவருக்கு நிர்வாகத்தைப்பற்றித் தெரியும் அவர் சொல்லட்டும். இவர் எதற்காக . . . . .

திரு. நா. வீராசாமி : நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புகிறேன்.

Let the Chair give a ruling

மத்திய அரசாங்கம் இந்த மாநில அரசாங்கம் செய்கிற சிபாரிசுகளை ஏற்று ஒப்புதல் தருகிறது. . . .

திரு. க. சுப்பு : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் விதிமுறைகளைப்பற்றியதாகத்தான் இருக்க வேண்டும். இப்போது திரு. வீராசாமி எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டரிலே நீதிபதிகள் நியமனம் பற்றிச் சொல்கிறார்கள் அப்படிச் சொல்லலாமா?

டாக்டர் எச். வி. ஹாண்டே : நண்பர் திரு. சுப்பு அவர்கள் சொல்வதைத்தான் நான் சொல்ல வந்தேன். நான் சொல்ல வந்த கருத்தும் நண்பர் சுப்பு அவர்கள் சொல்லிய கருத்துத்தான். அமைச்சருக்குத் தெரியும் விஷயம் எல்லாம். எனவே சொல்லக்கூடிய கருத்துக்களுக்கு அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வார்கள். வீராசாமி அமைச்சரா ? என்ன விஷயம் ?

MR. CHAIRMAN (Thiru N. Dennis): Let the hon. Member Mr. Kovai Chezian continue his speech.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நான் எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் நான் சொன்னேன். பணம் ஒதுக்கப்படும்பொழுது எப்படிப் பேசாமல் இருப்பது? அப்படியில்லாவிட்டால் ஏன் இந்த டிமான்டைக் கொண்டு வர வேண்டும், பேசாமல் சேங்க்ஷன் செய்துவிடலாமே. எனக்கு உரிமையிருப்பதால்தான் சொல்கிறேன். நாட்டிலே நீதிமன்றங்கள் புனிதமானவைகளாக இருக்க வேண்டும். அவற்றைப் பாழ்படுத்திவிடக் கூடாது. இதற்கெல்லாம் காரணம் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இவைகளைக் களங்கப்படுத்தி விடக் கூடாது. களங்கப்படுத்தினால் அதை எப்படி ஒத்துக்கொள்வது. இதையெல்லாம் சொல்லும் பொழுது எரிச்சல் ஏன் வருகிறது? அரசியல் காரணங்களுக்காக ஜட்ஜ்களை நியமிக்கக் கூடாது. ஜட்ஜ்களை நியமிக்கும்பொழுது யோக்கியமானவர்களைத்தான் நியமிக்க வேண்டும், நாணயமானவர்களைத்தான் நியமிக்க வேண்டும். * * (குறுக்கீடு) நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam): Sir, I demand that it should be expunged.

MR. CHAIRMAN (THIRU N. Dennis): The word '[**] is expunged.

திரு. கோவை செழியன்: * * என்ற வார்த்தையை நானே மாற்றிக் கொண்டு முறைகேடாக நடப்பவர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். *

MR. CHAIRMAN (THIRU N. Dennis): The word '[**] has already been ordered to be expunged.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள், ஒரு மாவட்டச் செயலாளராக இருந்தவர், ஒரு தொகுதியில் நின்று தோற்றுப்போனவர்,

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



அவரை பப்ளிக் ப்ராசிக்யூட்டராக நியமித்து ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியாக நியமித்ததைப்பற்றிக் கூறினார்கள். பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவும், உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் நியமனம் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி நடைபெற்றது 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு முன்னாலோ அல்லது அதற்குப் பின்பா என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னால் எங்களுக்கெல்லாம் பெரிய தெளிவு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, ஒருவர் ஜட்ஜாக வர வேண்டுமென்று ரெகமெண்ட் செய்யும் பொழுது அவர் எப்படிப்பட்டவர் என்பதை முதலில் பார்க்க வேண்டும். சி. ஐ. டி., மூலமாகவும், விஜிலென்ஸ் மூலமாகவும் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் மதுவிலக்கு கேசிலே போலீசாரால் கைது செய்யப்பட்டவர்கள் சிபார்சு செய்யப்படலாமா என்பது என் கேள்வி. நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அப்படிப்பட்டவர்கள் நீதிபதியாக வந்தால் நீதிஸ்தலங்கள் என்னவாகும், ஹைகோர்ட் நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டபிறகு அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும், தேர்தலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது? ஹைகோர்ட்டாகட்டும், கீழ்க் கோர்ட்டாகட்டும், 'ஃப்ரி மேசன்' கிளப் என்ற ஒரு கிளப் இருந்து, அவர்கள் சொத்தையெல்லாம் தர வேண்டுமென்று சண்டை போட்டு வாங்கி வருகிறார்கள். அது இரகசியமாக இருக்கிறது. அப்படி ஏன் இரகசியமாக, சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும். ஏன் அதன்மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது? எலெக்ஷன் வரும்பொழுது ஒருவருக்கொருவர் உதவி செய்வது என்ற முறையிருந்தால் எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள், அதிலே மெம்பர்களாக இல்லாவிட்டால் என்ன நிலைமை ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக, ஜட்ஜ்கள் போகிறார்கள். * * *

* ராஜ தர்பாரிலே ஜட்ஜ்கள் போகிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

திரு. கோவை செழியன்: சும்மா இரு அப்பா.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam): The hon. Member says that judges on tour are canvassing assistance to their friends. Is it proper? You are a lawyer, Sir, practising in the High Court. I want your judgment. Are we in order in discussing the conduct of judges in this manner?

MR. DEPUTY SPEAKER: I would like to draw attention to Article 211 of our Constitution which makes a specific bar that we should not discuss about the conduct of judges of the High Courts and the Supreme Court in the discharge of their duties. But if it is the conduct of a judge as a private person, then it can be discussed (hear, hear)

DR. H. V. HANDE: A Daniel comes to judgment!

திரு. கோவை செழியன்: நான் தனிப்பட்ட நீதிபதியின் தீர்ப்பைப் பற்றியோ, ஹைகோர்ட் பற்றியோ நுழையவில்லை. வெளியே சென்று கொண்டிருக்கிறேன். சேலம், கோயம்புத்தூருக்குப் போகிறேன். அங்கேயெல்லாம் என்னை ஏன் தூக்கிக் கொண்டே வருகிறீர்கள்? * * * இதைப்பற்றி நான் சொல்லாமல் வேறு யார் இந்த நாட்டிலே சொல்லப் போகிறார்கள். ஆகவே, இந்த முறையை மாற்ற வேண்டும். எலெக்ஷனுக்கு வரக்கூடாது, ஃப்ரீ மேசன் கிளப்பில் அவர்கள் யாரும் மெம்பர்களாக இருக்கக்கூடாது என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிறையப் பேசவேண்டும். ஆனால் நேரம் தான் இல்லை. ஹைகோர்ட் சம்பந்தமான விஷயம் என்றால் எல்லாம் சென்னைக்கே வர வேண்டியிருப்பதால் சில கால தாமதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, கேம்ப் ஹைகோர்ட் மாதிரி, அல்லது மொபைல் ஹைகோர்ட் மாதிரி மதுரையிலேயும்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



கோயம்புத்தூரிலேயும், சேலத்திலேயும், தஞ்சாவூரிலேயும் ஒரு முறையை வகுத்துக்கொண்டால், கேஸ்கள் உடனடியாக டிஸ்போசல் ஆக வழி ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக, இந்திய அரசியல் சட்டப்படி ஏற்கனவே அங்கே உள்ள ஸ்டேட்டில், ஸ்டேட் லாங்க்வேஜிலே கோர்ட் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டாலும், ப்ரொஸீடிங்ஸ், ஜட்ஜ்மெண்ட் போன்றவைகளெல்லாம் ஆங்கிலத்திலே இருக்க வேண்டுமென்று கான்ஸ்டிட்யூஷனில் சொல்லியிருக்கிறது. அவர்கள் அதை மாற்றியிருக்கிறார்கள். டெல்லி பாராளுமன்றத்திலே அதை மாற்றியிருக்கிறார்கள்.

Act 19 of 1963 allows use of Hindi and other official languages in judgments, etc., in Courts

என்று போட்டு இதிலே ஸ்டேட் லாங்க்வேஜிலே ஜட்ஜ்மென்ட் தரலாம் என்றும் இருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் தமிழிலே ஜட்ஜ்மெண்ட் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, ஒரேயொரு வார்த்தையில் முடித்துக் கொள்கிறேன்.

கோவாப்பரேட்டிவ் இலாக்காவிலே ஒழுங்காக இருந்துகொண்டு வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு அமைச்சர் அதற்கு இருந்தார், அவர் இப்பொழுது இல்லை. அவர் கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மென்டையே குட்டிச்சுவராக்கி, நாசமாக்கிவிட்டார். புதிய புதிய சட்டங்களைப் போட்டு. யாரை வேண்டுமானாலும் வேண்டியவர்களை மெம்பர்களாக ஆக்கக்கூடிய முறையில் செய்து விட்டார். எனவே, இன்றைக்கு கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மென்டைப் பார்த்தாலே பயப்படுகின்ற அளவிற்கு இருக்கிறது, எல்.டி. பேங்காகட்டும், அங்கே மக்கள் நினைப்பவர்கள் வர முடியாது. அமைச்சரை, ஐயா, ஐயா என்று சொல்லிக்கொண்டே பின்னால் போகிறவர்கள்தான் அங்கே வரமுடியும். இதனால் ஆளுங் கட்சியிலே உள்ளவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சியிலே இருப்பவர்களை விடுங்கள். அந்த அளவிற்குச் செய்யப் பட்ட சட்டங்களை புதிய அமைச்சராவது மாற்ற வேண்டும். அங்கே ஜனநாயகப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வர வேண்டும்

கோயம்புத்தூரிலே குத்துவெட்டெல்லாம் கூட நடந்தது. எனவே, அதை ஏன் மாற்றக் கூடாது? அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் புதிய அமைச்சரவர்கள் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்.டி. பேங்குகளில் போன் இல்லாவிட்டால் என்ன கெட்டு விடப் போகிறது? போலிஸ் ஸ்டேஷன்களுக்கே போன் இல்லை.

கடைசியாக ஒன்றை மட்டும் கூறிக்கொள்கிறேன். கமலாம்பாள் அர்பன் கோவாப்பரேட்டிவ் பேங்க் லிமிடெட் என்று திருவாரூரில் இருக்கிறது. அங்கே தேர்தல் நடந்தது. அங்கே 16,847 பேர் மொத்த வோட்டர்கள் 833 பேர் இன்வேலிட் என்று சொன்னார்கள். ஆனால் 6,636 வோட்டர்கள்தான் வேலிட் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவரவர்களே, இதைத் தனியாகத் தங்களின் கவனத்திற்குக் கொடுக்கிறேன். பக்கம் 12 முதல் 134 வரையில் உள்ள அத்தனை வோட்டர்களும் உண்மைக்கு மாறாக, தவறான முறையிலே சேர்த்துக் கொள்ளப்பட்ட வோட்டர்கள்தாகும். அந்த எலெக்ஷன் நடைபெற்றிருக்கிறது. இது நியாயமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கூறிமுடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் பேசிய நேரத்தில் நீதிபதிகளின் நடத்தையைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அவைகளிலே என்னென்ன இங்கு பேசப்பட வேண்டும், என்னென்ன பேசப்படக் கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. அதைத்தான் நான் பாயிண்ட் ஆப் ஆர்டருக்குத் தீர்ப்புச் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். அந்த ப்ரொசீடிங்சைப் பார்த்து எது எது பேச்சுரிமைக்கு உட்பட்டது, எது எது வராது என்று நான் முடிவு அறிவிக்கும் வரையில் இதை எந்தப் பத்திரிகையும் வெளியிடக் கூடாது என்று தெரிவிக்கிறேன்.

**திரு. க. சுப்பு**: பாயிண்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, சபாநாயகர் ஆசனத்திலே ஒருவர் இருந்தார். அவர் அனுமதித்துவிட்டுப் போயிருக்கிறார். நீங்கள் அப்போது இங்கு இல்லை. இங்கு நடந்தது உங்களுக்குத் தெரியாது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அறையில் ஒலி பெருக்கி வைத்திருக்கிறார்கள். என்ன பேசினார்கள் என்ன நடந்தது என்பதைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

**திரு. க. சுப்பு**: ஒரு சேர்மன், மாற்றுத் தலைவர் இருந்தார், அவர் அனுமதித்து விட்டார். அதைப் போய் நீக்குவது முறைதானா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: சபையினுடைய நடவடிக்கைகளைப் பற்றி எந்த நேரத்திலும் அந்த நடவடிக்கை நம்முடைய மரபுக்கு மாறாக இருக்குமானால் அதைப் பரிசீலிக்கக்கூடிய வாய்ப்பு, அதிகாரம் என்றைக்கும் சபாநாயகருக்கோ, துணைச் சபாநாயகருக்கோ உண்டு. நடைபெற்ற விவாதம் மிக நுணுக்கமாக நடைபெற்ற விவாதம். எந்த இடத்தில் சட்டத்திற்கு விரோதமாக, மரபுக்கு விரோதமாக இருக்கிறது என்று சாதாரணமாக பேச்சைக் கேட்டவுடன் சொல்லிவிட முடியாது. அது நாளையதினம் பத்திரிகைகளில் வந்து பெரிய பிரச்சினையாக ஆகாமல் எந்த அளவுக்குப் பாதுகாப்புத் தேட வேண்டுமோ அந்த அளவுக்குப் பாதுகாப்புத் தேட வேண்டுமென்ற பொது நோக்கத்தோடு தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு**: தலைவர் அவர்களுக்கும் துணைத் தலைவர் அவர்களுக்கும் இருக்கக்கூடிய உரிமை தற்காலிக சபாநாயகருக்கு இருக்கிறதா இல்லையா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: முழு உரிமை இருக்கிறது. சபாநாயகராக அந்த நேரத்திலே கொடுக்கிற தீர்ப்பை அடுத்த நிமிஷமே இந்தப் பொறுப்பில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் மாற்றிச் சொல்ல அதிகாரம் இருக்கிறது. ப்ரொசீடிங்ஸைப் பார்த்துச் சொல்லுகிறேன் என்றுதான் சொல்லுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have been rising for a long time. Sir, so far as Judges are concerned, it is quite proper that we should not discuss the conduct of the Judges here.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 மார்ச் 24

சாதாரணமாக நீதிபதிகள் அரசியல்வாதிகளின் பயமுறுத்தலுக்கோ, அச்சுறுத்தலுக்கோ கூட அப்பாற்பட்டவர்களாக இருக்கவேண்டும். இல்லையென்றால் வேறுமாதிரி அக்கிரமங்கள் வந்து விடும் . . .

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* பார்லிமெண்டிலேயே அவர்களைப் பற்றி அரசியல்வாதிகள் வாட்டி வாட்டி எடுக்கலாம் என்ற அளவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்கள் பேசக் கூடாது என்று சொல்ல முடியாது. சில விதிமுறைகளுக்கு உட்பட்டுப் பேசவேண்டும்.

*திருமதி த. ந. அனந்தநாயகி :*
Just a minute. Let me finish.
நீதிபதிகளின் மற்ற காண்டக்ட் பற்றி பர்டிகுலராகப் பேசக்கூடாது. ஜெனரலாகவும், அசோசியேஷனுக்குப் போகக்கூடாது, லயன்ஸ் கிளப்புக்குப் போகக் கூடாது, பொதுமக்களிடம் பழகக்கூடிய வாய்ப்பைக் குறைத்துக் கொள்ளவேண்டும்; அப்போதுதான் நீதி ஒழுங்காக நடைபெறும் என்று சொல்வது தவறு அல்ல. ஆகையால் நீங்கள் நீக்கும்போது கொஞ்சம் பார்த்து எந்த அளவுக்குச் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்குச் செய்தால் நீதிபதியையும் பாதுகாக்க முடியும், நீதியையும் பாதுகாக்க முடியும்.

*திரு. பெ. சீனிவாசன் :* அவையில் போய்த் திரும்பப் படித்து விட்டு ஒட்டுதல் செய்வது பொருத்தமாக இருக்காது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* ஒட்டுதல் இருக்காது. வெட்டுதல்தான் இருக்கும்.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* கோவை செழியன் அவர்கள் பேசிய நேரத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி (குறுக்கீடு) ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய நேரத்தில்—

Whatever it may be, I am bothered about Thiru Krishnamurthy and not whether it is Nallikuppam or Nellikuppam.



1975 மார்ச் 24] [திரு. க. உரொ. எட்மண்ட்]

அந்த ஒழுங்குப் பிரச்சினைக்குத் தாங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். அப்படிப் பேசலாம் என்று தீர்ப்புச் சொல்லிவிட்டு அதற்கு இன்னொரு தீர்ப்பை, மாறுபாடான தீர்ப்பை—அதைப் படித்துப் பார்த்துச் சேர்க்கலாமா என்று முடிவு செய்வதாகச் சொல்லுவது முறைதானா? Having given a ruling on a point of order raised . . . .

MR. DEPUTY SPEAKER : I have given a general ruling. As regards the specific points I have to decide and I will decide.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I want to make a submission . . .

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : I want to make a submission.

MR. DEPUTY SPEAKER : Hon. Thiru Ponnappa Nadar is also making a submission. Thiru Ponnappa Nadar.

THIRU R. PONNAPPA NADAR : So far as our constitutional provisions are concerned, Article 211 says—

> "No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties . . ."

'Discharge of his duties' means only judicial duties. Beyond that I think this House can just discuss. You have been pleased to give a ruling . . .

MR. DEPUTY SPEAKER : A Judge is doing judicial duties as well as administrative duties. Both the duties are covered under the Articles of the Constitution.

THIRU R. PONNAPPA NADAR : Administrative duties—I will just refer to Article 229 regarding the appointment of staff, etc. Our Legislature has got powers and I will speak when I speak regarding the Demand which is now before the House under discussion. I do not think that there is absolute immunity and nothing could be said. If it is a question of any other thing, I can understand. If certain words are objectionable, those words may be considered by the Chair and appropriate action taken.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)* : கனம் உதவி **சபாநாயகர்** அவர்களே, நான், இந்தப் பிரச்சினை வருகிற காரணத்தால்தான் முன்னதாகவே இதை எழுப்பினேன். இதைப் பேசுவதற்கும் அனுமதித்து விட்டோம். ஹைகோட்டில் ஜட்ஜ்மெண்ட் கொடுத்தது தப்பு, ஜட்ஜ்மெண்ட் கொடுத்த முறை தப்பு என்றெல்லாம் பேசக்கூடாது என்றுதான் தாங்கள் தீர்ப்பளித்ததாகக் கருதுகிறேன். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னதைப் போல் இங்கேயானாலும் சரி, பார்லிமென்டிலும் சரி ஜட்ஜ்களைப் பற்றி எதையும் பேசுவது என்பது கூடாது. இம்பீச்மெண்ட்தான் செய்வார்கள். ஹைகோர்ட்டில் ஜட்ஜ்மெண்ட் கொடுக்கிறார்கள் என்றால் அதை மட்டும் விவாதிப்பது என்பது பிரச்சினை அல்ல. வெளியில் அவர்கள் செய்யக்கூடிய காரியத்தை பற்றியும்— குறிப்பாக ஒரு குறிப்பிட்ட **ஜட்ஜ் இப்பேர்ப்பட்ட தவறான** காரியங்களில் ஈடுபட்டு விட்டால், கோவை செழியன் சொன்னது போல் கோவையில் இப்படி ஒரு ஜட்ஜ் தவறு செய்து விட்டார் என்று பேசலாமா என்றால் அதுவும் கூடாது. அப்படிப் பேசினால் அவர்கள் எப்படி மறுப்படியும் ஹைகோர்ட்டில் வந்து நியாயமான ஜட்ஜாக நடந்து கொள்ள முடியும்? ஒரு ஜட்ஜை அதிகமாகப் புகழ்ந்து பேசுவதும், அதே நேரத்தில் வெளியில் அவருடைய காண்டக்டை கிரிடிசைஸ் செய்து பேசுவதும் சட்டமன்றத்திற்கு நியாயமானது அல்ல; அது சட்டமன்றத்திற்குப் புறம்பானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திருவாளர்கள் எம். சுரேந்திரன், பெ. சீனிவாசன் எழுந்து நின்றனர்)

MR. DEPUTY SPEAKER : Let Thiru Surendran finish...

THIRU P. SEENIVASAN : In continuation of his view I want to say something. Supposing a Judge commits an offence, can he not take up the matter with the Government?

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : He should not. Supposing a Judge without permit takes alcohol, can you make a speech without bringing a motion for impeachment......

THIRU P. SEENIVASAN : Supposing a Judge commits murder . . .





THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : The Member has got a right to impeach him . . .

*திரு. எம். சுரேந்திரன்* : இந்தச் சபையிலே மானியம் வருகிற போது அந்த மானியத்தின்மீது பேசுவதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. அப்படிப் பேசும்போது அதையொட்டி ஒட்டு மொத்தமாக சில நிகழ்ச்சிகளைச் சொல்லக் கூடாது என்பது உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாகும். சபையில் இருக்கும் தற்காலிக சபாநாயகர் ஒரு பிரச்சினை பற்றிப் பேசும்போது அது சட்டத்திற்கு உட்பட்டதுதான் என்று கூறிய பிறகு அடுத்தாற்போல் துணைச் சபாநாயகர் ரூலிங் கொடுக்கும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஏற்கனவே, அந்த பாயின்ட் ஆப் ஆர்டரை சுப்பு ரெய்ஸ் பண்ணியபோது அதற்குத் தீர்ப்புக் கொடுத்து விட்டேன்.

(டாக்டர் ஹண்டே எழுந்தார்)

*திரு. எம். சுரேந்திரன்* : நான் இன்னும் முடிக்கவில்லை. தற்காலிக சபாநாயகரால் அனுமதிக்கப்பட்ட விவரங்கள் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியந்தானா என்பது ஒன்று. இன்னொன்று—மானியம் இங்கு வருகிற காரணத்தால் உறுப்பினர்கள் பேசுகிறார்கள். மானியத்திலே சம்பந்தப்பட்டவர்கள் மேம்பாடாக இருக்க வேண்டுமென்பதற்காக எடுத்துக் காட்டாக குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்லுகிறார்கள். பொதுவான விவகாரங்களை அப்படி எடுத்துக் காட்டுவதில் என்ன தடை இருக்கிறது?

(நண்பகல் 12-00)

**டாக்டர் எச். வி. ஹண்டே** : இரண்டு விஷயங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஹைகோர்ட் ஜட்ஜுகளுக்கு 'கன்சாலிடேடட் பண்ட்ஸ்'லிருந்து சார்ஜ் செய்யப்படுகிறது. அதற்கு 'டிமாண்ட்ஸ் பார் கிராண்ட்ஸ்' தேவையில்லை. இதைப்பற்றி 'டிஸ்கஷன்' கூடாது என்பதற்காக 'எக்ஸ்பென்சஸ்' சார்ஜ் பண்ணுகிறார்கள். 'வித்அவுட் எனி டிமாண்ட்ஸ் பார் கிராண்ட்ஸ்'.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** ஒரு ஒழுங்குப் பிரச்சினையை கிளப்புகிறேன். பேரவைத் துணைத் தலைவர் வந்த பிறகு பல கருத்துக்களைச் செழியன் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் பேரவைத் தலைவர் கூர்ந்து கவனித்தார்கள். துணைத் தலைவர் வந்த பிறகு 'எக்ஸ்பஞ்ச்' பிரச்சினை எழாது என்று கருதுகிறேன். முதலில் அவைத் தலைவர் 'பேனல் ஆப் சேர்மன்' உட்கார்ந்த நேரத்தில் ஒரு வார்த்தையை மட்டும் எக்ஸ்பஞ் செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள பிரச்சினை வெளியே ஜட்ஜுகளின் கான்டக்டைப் பற்றி பேசலாமா என்று புதிதாக வி. கிருஷ்ணமூர்த்தி கிளப்புகிறார். அரசியல் சட்டத்தில் 211-வது பிரிவு தெளிவாகச் சொல்லுகிறது.

'No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties.'

MR. DEPUTY SPEAKER: Even if he commits any mistake or irregularity in his conduct as a judge and in the discharge of his duty, the hon. Member cannot criticise him. His conduct as a person and as a citizen of India can be discussed and that is all.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** இதைத் தான் சொல்ல வந்தேன். உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இன்னும் நீங்கள் ஏன் தாமதம் செய்யவேண்டும் என்பது தான்.

MR. DEPUTY SPEAKER: I have given the ruling. I have stated that I will review the proceedings and then order expunction . . .

DR. H. V. HANDE: How much time will you take?

MR. DEPUTY SPEAKER: One week or ten days and that is left to my will and pleasure . . .

DR. H. V. HANDE: This is not the way you should speak . . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member should not dictate terms to the Chair and he should not teach the Chair . . . .





DR. H. V. HANDE: Does the Chair want one week or ten days?

MR. DEPUTY SPEAKER: That is left to my convenience.

DR. H. V. HANDE: The Chair should discharge his duties and he cannot take one week or ten days......

MR. DEPUTY SPEAKER: The hon. Member cannot dictate terms to the Chair and he should know the elementary principles.........

DR. H. V. HANDE: The Chair should know the elementary principles.

MR. DEPUTY SPEAKER: The Chair has understood all the elementary principles.

DR. H. V. HANDE: What the Chair should know, is, how to conduct.........

**திருமதி த. ந. அனந்தநாயகி:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய இன்பர்மேஷன் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நோ இன்பர்மேஷன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** லயன்ஸ் கிளப் ஃப்ரீ மேசன், போன்ற ஸ்தாபனங்களில் நீதிபதிகள் தலைவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக தவறு ஏற்படுகிறதாக சொன்னார்கள். அவர்கள் அப்படி இருப்பதற்கு உத்தரவு இருக்கிறதா அல்லது அனுமதி தரப்பட்டு இருக்கிறதா? லயன்ஸ் கிளப்பின் கவர்னராக அவர்களைப் போட்டு விட்டு அவர்களை பற்றி பேசக் கூடாது என்று சொன்னால் என்ன பொருள்? அரசாங்கம் அவ்வாறு அனுமதி கொடுத்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்கள் அனுமதி கேட்கவும் இல்லை, கொடுக்கவும் இல்லை. அனுமதி கொடுக்க வேண்டிய அவசியமும் கிடையாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்கள் இருக்கக்கூடாது என்று சட்டம் போடலாமே.

* திரு. எம். செல்வராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சற்றுமுன்பாக இந்தப் பேரவையில் ஜட்ஜுகளைப் பற்றியெல்லாம் பேச்சு நடந்தது. ஒரே ஒரு சூழ்நிலையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்ற ராஜ்ய சபைத் தேர்தலில் ஒரு உயர் நீதி மன்ற ஜட்ஜ் வீட்டில் பேரங்கள் பேசப்பட்டு தேர்தல் வேலை நடந்திருக்கிறது என்று இந்த அவை அறியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். யாருடைய வீடு என்று தெரியாது. யார் யார் பெயர்களையோ சொல்லுகிறார்கள். * * இப்படி எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது எதிர்க் கட்சிகள் இந்தக் குற்றச்சாட்டுகள் நம்மீது திரும்பிப் பாயும் என்று பார்க்காமல் இந்தக் குற்றச்சாட்டுக்களை சாட்டுகிறார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டிஸ்சார்ஜ் ஆப் பங்ஷன்ஸில் எப்படி இது வரும்.

திரு. பெ. சீனிவாசன்: ஒரு ஜட்ஜ் வீட்டில் ராஜ்யசபை தேர்தல் சம்பந்தமாக பேச்சுக்கள் * நடந்திருக்கிறது என்று . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, on a point of order. Is it fair that the name of the judge should be mentioned and the Hon. Deputy Speaker has to give his deceision on it. As a lawyer, I would say with great humility that we shall not attack a judge in a collateral way. We may have several privileges but our privileges should not be abused. These things should be said in a polished manner and they should be sugar-coated so that the House may know it and the public may know it. The hon. Member should have adopted that attitude. Instead of that he has mentioned the name of the judge and it is not a happy thing to do. I would request the hon. Member not to mention the name of the judge...

MR. DEPUTY SPEAKER: I order expunction of the name of the concerned judge.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



திரு. நா. வீராசாமி: ஒரு மாவட்டச் செயலாளர் தேர்தலில் தோற்றுப் போனவர். அவர் ஒரு ஜட்ஜ் ஆகிவிட்டார் . . .

திரு. எம். செல்வராஜ்: இங்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஆங்கிலத்தில் சுகர் கோட்டட் என்று சொல்லி விட்டார்கள். இங்கு நம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மானியத்தை வைத்து நம்மிடத்தில் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

கூட்டுறவுத் துறையில் எனக்கு முன்பு பேசிய செழியன் அவர்கள் அந்தத் துறையில் நிர்வாகம் கெட்டுவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். பொதுவாக கடந்த 7, 8 ஆண்டு காலமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறை நல்லமுறையில் வளர்ச்சியடைந்து அதிலும் குறிப்பாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் நிலவளவங்கிகளின் மூலமாக ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டிருந்தாலும் கூட 38 ஆண்டுகளுக்குப் பிறகு தான் உயர்ந்த பட்ச கடன் அளவை எட்டிப் பிடித்திருக்கிறோம். 38 ஆண்டுகளுக்குப் பிறகு கிட்டத்தட்ட 8 ஆண்டுகளில் 122 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். கடந்த காலத்தில் 34 கோடி ரூபாய் தான். ஏறத்தாழ நான்கு மடங்கு அளவுக்கு நாம் கடன் அளவைப் பெருக்கியிருக்கிறோம். அதிலும் குறிப்பாக இந்தத் தொகை கடந்த 5 ஆண்டுகளில் 102 கோடிக்கு அது உயர்ந்திருக்கிறது. இந்த 102 கோடி ரூபாயில் குறிப்பாக ஏழை நடுத்தர விவசாயிகள் தான் இதில் பயன் பெற்றிருக்கிறார்கள். அதாவது 81 கோடி அளவுக்கு பயன் பெற்றிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் கிணறுகள் வெட்டுவதற்கும் பம்பு செட்டுகள் அமைக்கவும் ஆயில் என்ஜின் அமைத்து கீழே உள்ள தண்ணீரை மேலே கொண்டுவந்து சாகுபடி செய்ய பல்வேறு திட்டங்களை நல்ல முறையில் செயலாற்றியிருக்கிறோம்.

இன்றையதினம் தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் டிராக்டர்கள் ஓடுகின்றன. டிராக்டர்களை, நம்முடைய நிலவள வங்கியின் மூலம் கடன் பெற்று வாங்கி விவசாயத்தை பெருக்கியிருக்கிறார்கள். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாக நம்முடைய முதலமைச்சர் சட்ட சபையில் அறிவித்ததற்கு இணங்க இந்தத் தேதி வரையில் ஏறத்தாழ 3,500 டீசல் என்ஜின்கள் கடனுதவி பெற்று ஏழை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறோம். இந்த மாத இறுதிக்

குள் அல்லது அடுத்த மாதம் 10 தேதிக்குள்ள டீசல் என்ஜின் கிட்டத்தட்ட 5,000 என்ற அளவுக்கு வந்துவிடும். இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்வது எல்லாம் ஏற்கனவே கடன் பெற்று மின் இணைப்பு கிடைக்காமல் பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இது பற்றி ஏற்கனவே நமது முதலமைச்சரிடமும், மின்சாரத் துறை அமைச்சரிடமும் பேசி உடனடியாக மின் இணைப்பு கிடைக்க முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, மிகவும் ஆழமான பகுதிகளிலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டும். இப்போது வறட்சியின் காரணமாக கிணறுகளை ஆழப்படுத்தி கீழே இருந்து தண்ணீரைக் கொண்டுவர வேண்டுமென்றால் மின் இணைப்பு இருந்தால் தான் மோட்டார் பம்பு செட்டுகள் மூலம் தான் கொண்டுவர முடியும். ஆயில் என்ஜின்களை வைத்துக்கொண்டு விவசாயிகள் ஒன்றும் செய்ய முடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லுகிற காலத்தில் இதில் அதிக கவனம் மின்சாரத் துறை செலுத்தி ஆழக் கிணறுகளுக்கு எங்கே வாய்ப்பு இருக்கிறது என்று பார்த்து, அதற்கு முதலிடம் கொடுக்க பிரத்யேக ஒரு பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய துறை அமைச்சர் சட்ட அமைச்சராக இருப்பதால், நான் இந்த மன்றத்தின் மூலமாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு, சர்ப்ளஸ் நிலங்களை எல்லாம் ஏழை விவசாயிகளுக்கு பிரித்துக்கொடுத்து இருக்கிறோம். அப்படி பிரித்துக்கொடுத்தவர்கள் பூராத் தொகையும் அரசுக்குச் செலுத்தினால் ஒழிய நிலவள வங்கியிலிருந்து கடன் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. விவசாயிகள் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக நிலம் பெற்றுக்கொண்ட பின்பும், அவர்கள் கடன் வசதி பெற்று விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அரசுக்குக் கட்டவேண்டிய பூராத் தொகையும் கட்டாவிட்டாலும், அவர்களுக்கு நிலவள வங்கி மூலமாகக் கடன் பெற்று பயிர் செய்ய வகை செய்யும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஏற்கனவே இது பற்றி நான் பேசி இருக்கிறேன். நிலவள வங்கி மூலமாக சர்க்காருக்கு அவர்கள் செலுத்த வேண்டிய முழுத் தொகையும் கட்ட தயாராக இருக்கிறோம். அதற்காக அரசாங்கம் போதிய பணம் ஒதுக்கித் தர உத்தரவு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் ஏற்கனவே கூட்டுறவுத் துறை மாநாடு நடக்கிற நேரத்தில், பல இடங்களில் மாநாடுகள் நடக்கிற நேரத்தில் எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். இப்படி ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும், இன்ன வகையில் செலவு செய்ய பணம் தரலாம் என்கிற நிலை வருகிறபோது அது சட்டபூர்வமாக இருக்கவேண்டும்.

மின் இணைப்புகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் நிலவள வங்கியின்மீது சொல்லப்படுகிற ஒரு குற்றச்சாட்டு, கிரௌண்ட் வாட்டர் கன்டிரோல் பற்றிச் சொல்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து வந்த உலக வங்கியினர் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, தென்னாற்காடு மாவட்டத்திற்கு வந்தார்கள். அவர்களிடத்தில் ஒரே கிணற்றில் மூன்று பம்ப் செட்டுகள் போட்டு இருப்பதைக் கூட காட்டினோம். இப்படியா நிலைமை என்பதையும் உணர்ந்தார்கள். ஆனால், தமிழ் நாட்டை விட்டு அடுத்த மாநிலத்திற்குச் செல்கிறபோது 'கிரௌண்ட் வாட்டர் டிசிப்பிளின்' அவசியம் கொண்டு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மீறினால் நாம் ஏற்கனவே பணம் கொடுத்து இருப்பதைப் பற்றி கேள்வி கேட்கவேண்டியிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். உலக வங்கி மூலம் நாம் கடன் பெற்ற பணம் முழுவதையும் நாம் கடன் கொடுத்துவிட்டோம். இருந்தும், மத்திய ரிசர்வ் வங்கி இதிலே பழைய நிலையையே எடுத்து இருக்கிறது. இதையெல்லாம் பல முறை எடுத்துச் சொன்னதன் காரணமாக, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் 20 சதவிகிதம் ரிலாக்சேஷன் கொடுத்து, இப்போது ஓரளவுக்கு அதிகக் கடன் கொடுத்து வருகிறோம்.

மாநில நிலவள வங்கி மூலமாக தமிழ் நாட்டில் இருக்கும் பிரதம நில வள வங்கிகள் எந்த அளவுக்கு டீசல் இன்ஜின்கள் விவசாயிகளுக்குக் குறுகிய காலத்தில் கொடுத்து உதவுகிறதோ, அவர்களுக்கு எல்லாம் மாநில நில வள வங்கி மூலமாக பரிசுகள் கொடுப்பதற்கு—முதல் பரிசு நான்கு, இரண்டாம் பரிசு நான்கு—

என்று 8 பரிசுகள்—ஏறத்தாழ ரூ. 1,000—ரூ. 1,500 என்ற அளவில் பரிசுகள் இருக்கின்றன—முடிவு எடுத்து இருக்கிறோம். அதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக நான் நம்முடைய அமைச்சர் அவர்கள் முன் வைக்க விரும்புவது எல்லாம், பொதுவாக லாபகரமாக நடத்தும் சொசைடிகள் இருக்கின்றன, பாங்குகள் இருக்கின்றன. அவற்றில் டிவிடெண்ட் என்று சொல்கிறபோது 6 சதவிகிதம் மேல் கொடுக்க முடியாது என்ற நிலை இருக்கிறது. இதனால் கூட்டுறவுத் துறையில் யாராவது டிபாசிட் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, டிபாசிட் செய்கிறவர்களாக இருந்தாலும், ஷேர்ஹோல்டர்களாக இருந்தாலும், அவர்களை ஈர்க்கும் வகையில் 6 சதவிகிதம் என்பதை குறைந்தது 12 சதவிகிதம் என்று உயர்த்திக்கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் நாங்கள் 3 ஆண்டு காலம் தவணைகொடுத்து, கடன்களை மாற்றி இருக்கிறோம். ஏறத்தாழ குறைந்தது ரூ. 20-30 கோடி இருக்கும். ஆனால், ரிசர்வ் வங்கி வட்டி செலுத்தினால்தான் ஒப்புக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். சர்க்கார் வட்டிக்குக் கடன் கொடுத்து, மத்திய கூட்டுறவு வங்கிகளை அந்த classification கீழே இறக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, பல்வேறு மானியங்களில் எனது கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக நீதி, நிர்வாகத்தைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். இன்று பல்வேறு இடங்களில் சுணக்கம் ஏற்பட்டு இருக்கிறது, நீதி நிர்வாகத்திலே என்ற கருத்தை நான் இங்கே கூற கடமைப்பட்டு இருக்கிறேன். சாதாரணமாக வழக்கறிஞர்கள் ஒரு கேஸ் பற்றி வாதங்கள் சொன்னால், 14 நாட்களுக்குள் தீர்ப்புக்கொடுக்கவேண்டுமென்று சபார்டினேட் ஜுடிஷியரிக்கு இருக்கிறது. அதைத்





துரிதமாக ஒழுங்காக நடத்துவதற்கு வழி ஏற்பட, ஹைக்கோர்ட் மூலமாகச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உயர்நீதி மன்றத்தில் இன்று பல்வேறு நீதிபதிகள் நியமனம் பூர்த்தியாகாமல் இருக்கிறது. ஆதலால், அங்கே தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது. உடனடியாக அந்த நீதிபதிகளை நியமனம் செய்ய, இந்த அரசாங்கம் பரிந்துரை வழங்கி, மத்திய அரசோடு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நீதி மன்றத்தில் இந்த மாதிரி 14 நாட்களுக்குள் ஜட்ஜ்மென்ட் தரவேண்டுமென்று விதிமுறை இல்லாத காரணத்தால் பல கேஸ்களில், பல ஜட்ஜ்மெண்டுகள் ரிசர்வட் என்று சொல்லி, பல நாட்களாக, பல மாதங்களாக, 6 மாதங்களுக்கும் மேலாக, சில கேஸ்களில், ஜட்ஜ்மென்ட் வராமல் இருக்கும் முறை இருக்கிறது. ஆறு மாதம் இப்படி நீடிக்கும் என்று சொன்னால், நிச்சயமாகச் சொல்கிறேன், எப்படிப்பட்ட திறமைவாய்ந்த நீதிபதியாக இருந்தாலும் அவர்கள் கேட்ட வாதம் மறக்க வாய்ப்பு ஏற்படும் என்று வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த மாதிரி நீண்ட இடைவெளியை தடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த செஷன்ஸ் நீதிபதிகளில் செலக்ஷன் கிரேடு அமைப்பு வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். அது மாதிரி செலக்ஷன் கிரேடு நீதிபதி நியமிக்கிற காலத்தில் அவர்கள் அந்தக் கோர்ட்டில் பெற்றுள்ள முன் அனுபவத்தை நிச்சயமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற ஆலோசனையை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில், இந்த செலக்ஷன் கிரேடு நீதிபதிகளாக ஒரு செஷன்ஸ் கேஸ் கூட நடத்தாத ஒரு சிலர் இந்த செஷன்ஸ் நீதிபதிகளாக ஆகியிருக்கிறார்கள் என்றால், அது நீதி நிர்வாகத்திற்கு

It would be an insult

என்கிற நிலைமையை நான் உணருகிறேன். இந்த மாதிரியான பல்வேறு குறைபாடுகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 மார்ச் 24

பொதுவாக, நீதி நிர்வாகத்தில் அவர்களுக்கு அதிக லேட்டிட்யூட் இருக்கிறது. அவர்களுக்கு பரிபூர்ணமான சுதந்திரம் இருக்கிறது. ஆனால், அங்கே சபார்டினேட் ஜுடிஷியரிக்கு எப்படி பணியாற்றவேண்டுமென்று விதிமுறை வகுக்க தலைமை நீதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. விதிமுறை இருக்கிறது. அரசியல் சட்டத்தின் 229 பிரிவின் கீழ் நாம் ஒரு சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

அரசியல் சட்டம் Article 229 (2) -லே

"Subject to the provisions of any law made by the Legislature of the State, the conditions of service of officers and servants of a High Court shall be such as may be prescribed by rules made by the Chief Justice of the Court or by some other Judge or officer of the Court authorised by the Chief Justice to make rules for the purpose :

Provided that the rules made under this clause shall, so far as they relate to salaries, allowances, leave or pensions, require the approval of the Governor of the State......"

இந்த மாதிரி நமக்கு சட்டம் செய்வதற்கு, இந்த மாநில அரசாங்கத்திற்கு, மாநில சட்டசபைக்கு அதிகாரம் இருக்கிறது. நாம் விரைவில் அதுபோன்ற சட்டம் கொண்டு வர வேண்டும். எப்படி இந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நியமனம் ஏற்படுகிறதோ, அதே முறையைப் பின்பற்றி, இந்தச் சட்டமானது, இதிலே வரும் நியமனங்களுக்கு எல்லாம், நீதிபதிகளுக்கு பரிபூர்ண அதிகாரம் கொடுக்காமல், சட்டத்தின் அடிப்படையில், விதியின் அடிப்படையில் அந்த நியமனங்கள் நடைபெறுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 229 ஷரத்தின் அடிப்படையில் ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் நீதித்துறையிலே இருக்கிற வேறு சில காரியங்களைப் பற்றி கூற வேண்டுமென்று நினைக்கிறேன். இங்கே பல்வேறு இடங்களில் புதிதாக முன்சீப் கோர்ட்டுகள், சப்-கோர்ட்டுகள் நிறுவவேண்டும். அதற்காக ஒரு கமிஷனை நிய கோர்ட்டுகள் நிறுவ வேண்டும். அதற்காக ஒரு கமிஷனை நியமித்து, அவர்கள் அதுபற்றி ஒரு பரிந்துரை கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைபடி நீதித்துறை ஏற்பட கால



)75 மார்ச் 24] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

தாமதம் ஆகிறது. அது மாதிரி நீதித்துறையைப் பொறுத்த வரையில், மதுரையில் ஒரு பெஞ்ச் வேண்டுமென்று பல முறை வலியுறுத்திக் கூறிவருகிறேன். நிச்சயமாக தென் மாவட்டங் களில் இருக்கின்றவர்களுக்கு மதுரையில் ஒரு பெஞ்ச் ஏற்படு மானால், அடிஷனல் பெஞ்ச் ஏற்படுமானால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பெரிய மாநிலங்களில் இரண்டு பகுதிகளில் பெஞ்ச் இருக்கின்றது. அலாகாபாத், பாட்னா போன்ற இடங்களில் இருக்கிறது என்று கருதுகிறேன். இப்படி —3 பகுதிகளில் இம்மாதிரியான அமைப்புகள் இருக்கின்ற காரணத்தால், அந்த முறையை நம்முடைய அரசாங்கமும் கைக் கொள்ளவேண்டுமென்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு ருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஜெயில்களில் நடப்பதைப்பற்றி குறிப்பிட ரும்புகிறேன். நான் முன்பொரு முறை கடலூர் ஜெயிலில், ஒரு யுள் கைதி பொன்னு என்ற நபர் அங்கே சந்தேகமான முறை ல் அவர் இறந்தார் என்றும், அவர் அடித்துக் கொல்லப்பட்டார் ன்றெல்லாம் கூறினேன். அது சம்பந்தமாக பிராசிகியூஷன்கள் செய்யப்பட்டனவா? அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை டுக்கப்பட்டது என்ற விபரத்தையெல்லாம் அமைச்சரவர்கள் ரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி திகள், அதுவும் ஆயுள் கைதி அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் ன்றால் அதில் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் லையாய கடமை என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்பு றேன்.

அடுத்து, இன்னொரு விஷயத்தைப் பற்றி கூற விரும்புகிறேன். 2 அக்டோபர் திங்களில் எங்கள் கட்சி சார்பில் ஒரு அறப் ராட்டம் நடந்தது. அதில் 35,000-க்கும் மேலான ண்டர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அப்போது ஒரு தவறுகள் நடந்திருக்கின்றன என்று எனக்கு தகவல் வந்திருக் து. நாங்களெல்லாம் பாளையங்கோட்டை ஜெயிலில் அடைக் பட்டோம். அங்கே இருந்தபோது பல்வேறு சங்கடங்கள் பட்டன. அது தனிப்பட்ட விஷயமாக இருப்பதால் அதை ன் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

திருச்சியில் அஜிடேஷன் காலத்தில் ஒரு சில சாமான்கள் ாங்கினார்கள். 2 லட்சம் ரூபாய்க்குப் புதிதாக சாமான்கள் ாங்கினார்கள். அதே மாதிரி கொட்டகை போட்டார்கள், பெட்

ஷீட் வாங்கினார்கள். ஒரு பெட்ஷீட்டுக்கு 18 ரூபாய் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். தணிக்கை அதிகாரிகள் இதைக் கண்டித்திருக்கிறார்கள். விதி முறைக்கு அப்பாற்பட்டு இதெல்லாம் நடந்திருக்கிறது என்பதற்கான தகவல்கள் என் கையில் இருக்கின்றன. அதில் 21,000 ரூபாய்க்கு மேல் 'அவாய்டபிள் வேஸ்ட்' என்றெல்லாம் நடந்திருக்கிறது என்று தெரிகிறது. இந்த மாதிரி முறைகேடுகள் நடக்குமானால் அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கேயிருக்கிற சென்ட்ரல் பிரிசனில் சோப் வாங்கியது சம்பந்தமாக ஊழல் நடந்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. அங்கே சப்ளை செய்யப்பட்ட பார் சோப் ஒழுங்காக இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், என்று பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜெயில்களில் இந்த மாதிரி சிறிய தவறுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதிலும் உணவு கொடுப்பதிலும், மற்ற காரியங்களிலும் பல தவறுகள் நடக்கின்றன என்று தெரிகிறது. ஆகவே, இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு இலாகாவைப் பற்றி ஒன்றிரண்டு கருத்தைக்கூற விரும்புகிறேன். அதில் குறிப்பாக டி.யு.சி. எஸ்.-ஸைப்பற்றி என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். அந்த நிர்வாகம் கலைக்கப்பட்டிருக்கிறது. அது நியாயமா இல்லையா என்பதைப் பற்றி நான் இந்த சந்தர்ப்பத்தில் விரிவாக எடுத்து கூற விரும்பவில்லை. அதில் முறைகேடுகள் நடந்திருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி அது அப்பீலில் இருக்கிற காரணத்தால் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால் அதில் ஒரு விஷயத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கு தலைமை நிர்வா. அதிகாரி தற்போது தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இது கூட்டுறவு விதிகளுக்கு அற்பாற்பட்டதாக இருக்கிறது என்று கருதுகிறேன். ஒரு கமிட்டியை சூப்பர்சீட் பண்ணியபோது அந்த அதிகாரியை மறுபடியும் சிறப்பு அதிகாரியாகப் போட்டால் அது முறையாக இருக்காது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டி.யு.சி.எஸ்.-ஸுக்கு கொடுத்த பணத்தை ஒழுங்காக செலவு செய்யவில்லை என்று நான் கூறவில்லை. ஆனால் அதில்



நியாயமாக நடக்கவில்லை, ஆகவே, அதை விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி தவறுகள் ஒரு இடத்தில் மாத்திரமல்ல. கூட்டுறவு இலாகாவில் பல்வேறு தவறுகள் நடந்து வந்தன. அதையெல்லாம் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே கூறிக்கொள்கிறேன்.

வேறொரு விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். முஞ் சறையில் இருந்த லேபர் காண்ட்ராக்ட் சொசைடி பேங்கை 1973 மார்ச்சில் சூப்பர்சீட் செய்தார்கள். அந்த சொசைட்டியில் அரசாங்கத்திடமிருந்து கடனாகவோ, வேறு எந்த வகையிலோ பணம் வாங்கப்படவில்லை. கே.டி.சி.எஸ். பேங்கிலும் வாங்கப்படவில்லை. அதை சூப்பர்சீட் செய்கிற காலத்தில் 22,000 ரூபாய் கேஷாக வைத்திருந்தார்கள். ஸ்பெஷல் ஆபீசர் நியமனத்திற்குப் பிறகு என்ன வேலை நடந்திருக்கிறது என்று சொன்னால் அங்கேயிருக்கிற வேலையெல்லாம் நடத்த வேண்டியதில்லை என்று தீர்மானம் செய்து கொடுத்த வேலையையெல்லாம் நடத்த வேண்டியதில்லை என்று செய்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அந்த 22,000 ரூபாயில் ஒரு வேலையும் செய்யாமல் இருந்த ஸ்பெஷல் ஆபீசர் சம்பளமாக 15,000 ரூபாய் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் இது கட்டு சோற்றில் எலியை வைத்திருக்கிற மாதிரி இருக்கிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அதுவும் இது அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு செய்யப்பட்டதாக நான் குற்றஞ் சாட்டுகிறேன். இந்த மாதிரி காரியங்கள் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த கருத்தைக் கூறுகிறேன்.

இதே மாதிரி இன்னொரு விஷயம். பணல்மேடு சொசைடியில் கங்காதரன் என்பவர் பிரசிடெண்டாக இருக்கிறார். அவருக்குப் பல்வேறு தொல்லைகளெல்லாம் கொடுத்தார்கள். அது சம்பந்தமாக ஹைகோர்ட்டில் ரிட் மனு கொடுக்கப்பட்டது. அதையெல்லாம் நான் இங்கே எடுத்துக் கூற விரும்பவில்லை. அதில் ஒரு பகுதியை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அதாவது அங்கேயிருந்த ரெக்கார்டுகளையெல்லாம் நிர்வாக அதிகாரி பறித்துக் கொண்டு போய்விட்டார். அது சம்பந்தமாக வழக்கு நடந்தது.

"Apart from that, when the petitioner had given the list of records by his letter, dated 4th May 1974, it was the duty of the respondent to make the records available to the petitioner, if he had control over them or give the

petitioner suitable information so that he could take necessary steps to obtain the records. The respondent had erred in passing the impugned order without doing any of these two things. Under these circumstances, the writ petition is allowed and the impugned order of the respondent, dated 15th May 1974 is quashed. There will be no order as to costs."

இந்த மாதிரி கூறி இந்த ரெக்கார்டுகளையெல்லாம் அவருக்குக் காட்டவேண்டுமென்று ரிட் பெட்டிஷன் நம்பர் 1430/74ல் தீர்ப்புக் கூறி இருக்கிறார்கள். ஆனால் உயர்நீதி மன்றத்தில் கொடுத்த தீர்ப்புகள் அத்தனையையும் புறக்கணித்துக் கொண்டிருக்கிறது இந்த இலாகா என்பதையும் நான் கூற விரும்புகிறேன். ஒரு வேளை அந்த சொஸைட்டியில் இருக்கிறவர்கள் ஒரு காங்கிரஸ்காரர் என்பதற்காக இப்படி நடப்பதாக இருக்கலாம். ஆனால் அங்கே நியாயமாக நடக்கிறதா என்றெல்லாம் பார்க்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. இதே கங்காதரன் என்ற பிரஸிடெண்ட் அவர்கள் 1972-ல் ஒரு ரிட் பெட்டிஷன் கொடுத்தார்கள். அதில் விரிவாக, தெளிவாகப் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இதில் கோவாப்பரேடிவ் சொஸைட்டியில் இருக்கிற ஜாயிண்ட் ரெஜிஸ்ட்ரார் அவர்கள் ஒருதலைப் பட்சமாக நடந்திருக்கிறார் என்று குறிப்பிட விரும்புகிறேன். அதில் கடைசி பாராகிராபை மட்டும் ஆழ்ந்த கவனத்திற்காகக் கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

"It cannot be said that the resolution passed by the financing Bank prior to the date of submission of the report by the Inspector, acting under section 66, could be a substitute for the consultation which the Registrar is expected to have by way of a legal necessity, before he could take action under section 72(1) of the Act. I am therefore of the view that the statutory requirement as to consultation under section 72(6) of the Act has not been done in the instant case. It is only, in the show cause notice, given to the petitioner, that the first respondent, for the first time, stated that there was a resolution of the financing Bank recommending dissolution of the Society and that he was also inclined to act upon it. This attitude of the first respondent cannot be



said to be quite in consonance with the requirements of law and, particularly the mandate enunciated in section 72(6) of the Act,"

என்று சொல்லி, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கூறி இருக்கிறது. இந்த மாதிரி பார்க்கும்போது இது ஒழுங்காக நடைபெறவில்லை என்ற கூற்றுகளை எல்லாம் கூறி இருக்கிறார்கள். இந்தமாதிரி கூட்டுறவுச் சங்கங்கள் நடக்கும்போது, கட்சிக்காரர்களுக்கு ஒன்று, மற்றவர்களுக்கு ஒன்று என்ற முறைகள் எல்லாம் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுப் பிரச்சனையைப் பொறுத்த வரையில், இந்த நாட்டிலே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அரசாங்கம் இன்னும் பல்வேறு விஷயங்கள் செய்ய தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை சுமத்த விரும்புகிறேன். செழுமையாக இருக்கும்போது மத்திய அரசுக்கு கொடுக்கவேண்டியதை—அதாவது சென்ட்ரல் பூலுக்கு கொடுக்க வேண்டியதை ஒழுங்காக கொடுத்திருந்தால் நிச்சயமாக நமக்கு இந்த கஷ்டம் இன்றைக்கு ஏற்பட்டிருக்காது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

5 லட்சம் டன் இப்போது கேட்கிறோம். நமது கைவசம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக கொள்முதல் அடிப்படையில், இன்றைக்கு பல்வேறு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சிறு விவசாயிகள் சில புகார்களைக் கூறுகிறார்கள். என்னைக் கேட்டால், 5 ஏக்கருக்குமேல் விவசாயம் செய்கிற பெரிய நிலச்சுவாந்தார்களிடம் இருந்து மார்க்கெட்டபிள் சர்ப்பிளஸ் எவ்வளவு இருந்தாலும் முழுவதையும் கைப்பற்ற வேண்டும். சிறு விவசாயிகளை துன்புறுத்தாமல் விட்டுவிட வேண்டும். கிரேடட் லெவி 10 ஏக்கருக்குமேல் இருக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு குறைவாக இருக்கிறவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும். இப்போது கொடுத்திருக்கிற 50 சென்ட் என்பது மிகவும் குறைவு.

கொள்முதல் விலையை 100 ரூபாயாக்க வேண்டும். இப்போது ஏறக்குறைய 89 ரூபாய் குவிண்டாலுக்கு கொடுக்கிறார்கள். அதை 100 ரூபாயாக்கினால் பொருத்தமாக இருக்கும். அதனால் விற்பனை விலை எந்தக் காரணத்தைக்கொண்டும் கூடுதலாகக்கூடாது. அரசாங்கத்திற்கு சிறிது நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை.

கிறேன். மத்திய அரசோடு வாதாடி, மாநில சுயாட்சி பிரச்சனை போல் இந்தப் பிரச்சனையையும் அணுகி, நூலுக்கு ஒரு நியாய மான விலை நிர்ணயம், ஒரு கன்ட்ரோல் விலை நிர்ணயம் செய்து, வர்த்தகத் துறையில் ஏற்படுகின்ற மோசடியை, பகல் கொள்ளையை தடுத்து நிறுத்த இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டு, இந்த அரசு நெசவாளர்களுக்குச் செய்து வந்திருக்கிற பல நல்ல காரியங்களுக்காக நெசவாளர் சமுதாயத்தின் சார்பிலே என்னுடைய நன்றி கலந்த பாராட்டைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

* திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உணவு மானியத்தைப் பொறுத்தவரை நம்முடைய தமிழ் நாட்டில் இந்த வறட்சி நிலையிலேயும் உற்பத்தியாகி இருக்கிற நெல்லை கொள்முதல் செய்வதில் மிகப் பெருந்தன்மையோடு நடந்துகொண்டு வருகிறார்கள். எந்த இடத்தில் விளைந்துள்ளது, எந்த இடத்தில் விளையவில்லை என்பது பற்றி கணக்கிலே ஒன்று இருந்தாலும் அங்கே உண்மையாக நடப்பது வேறு ஒன்றாக இருக்கிறது. இருக்கிற நிலைமையைப் பார்த்து ஆங்காங்கு கொள் முதல் செய்கிற அதிகாரிகளோடு அந்தந்த கிராமத்திலேயுள்ள பொறுப்பிலே இருக்கிற பெரியவர்கள் ஒத்துழைத்தால்தான் இந்த உணவு நெருக்கடியை நாம் போக்குவதற்கு ஒரு சிறந்த உதவியைச் செய்வதாக அமையும். இன்றைய சூழ்நிலையில் அரசு மேற்கொண்டிருக்கும் இந்த அமைதியான கொள்முதலும் விநியோகமும் வேறு எந்த அரசாக இருந்தாலும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியைப் பொறுத்த வரை, கைத்தறி நெசவாளர்கள் துயரைப் போக்குகின்ற வகையில் குறைந்த அளவில் கூட்டுறவுத் துறையின்கீழ் வருகின்றவர்களுக்காவது, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப் போல, கைத்தறி கண்காட்சியைத் தொடங்கி 15 சதவிகிதம் கழிவுத் தொகை கொடுத்து, கைத்தறி நெசவாளர்களின் துயரைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கூட்டுறவைப் பொறுத்த வரையில், நாம் பெருமைப்படக் கூடிய வகையில் தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களும் கூட்டுறவுத் துறையின்கீழ் இன்று கொண்டுவரப் பட்டிருக்கின்றன. இருந்தாலும், இந்த இயக்கம் நல்லமுறையில் வளர ஆங்காங்கு சில சங்கங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக அந்த சங்கங்கள் நிர்வாகம் சிறப்பு அலுவலரின்கீழ் நீண்டநாள் இயங்குவது சரியல்ல. குறிப்பாக எங்கள் வட்டாரத்தை எடுத்துக் கொண்டால் லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கம், லால்குடி கூட்டுறவு நிலவளவங்கி என்ற இந்த இரண்டும் சிறப்பு அலுவலரின் நிர்வாகத்தின்கீழ்தான் இருக்கின்றன. ஒரு ஜனநாயக நாட்டில் தனி உடைமை, பொது உடைமை இரண்டுக்கும் இடையிலே இருக்கிற கூட்டுறவுத் துறை நல்ல முறையில் இயங்க வேண்டுமானால் சிறப்பு அலுவலர்களின்கீழ் இருக்கிற நிர்வாகத்தை கூடிய விரைவில் அகற்றிவிட்டு, தேர்ந் தெடுக்கப்பட்ட நிர்வாகத்தினர் சங்கங்களின் நிர்வாகத்தை நடத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக கிராம கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்த ஆண்டு 79 கோடி ரூபாய் நம்முடைய அரசு விவசாயிகளுக்குக் கடனைக் கொடுத்திருக்கிறது. இது மிகவும் பாராட்டத் தக்கது. ஆனால் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் நன்றாக இயங்க, சில சங்கங்கள் தன்னுடைய லேவாதேவியை பெருக்கிக்கொள்ளும் வகையில் விவசாய காரியங்களுக்குக் கடன் வழங்குவது மட்டுமல்லாது மற்ற பல பணிகளைச் செய்யவும் ஊக்குவிக்க வேண்டும். எல்லாச் சங்கங்களையும் இந்த முறையில் அனுமதிப்பது சிரமம் என்றாலும் நன்றாக இயங்குகின்ற கிராம விவசாயக் கடன் சங்கங்களையாவது அனுமதிக்க வழிவகை செய்ய சட்டத்திலே திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, இதுவரை நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்கள் செலுத்தியிருக்கிற பங்குத் தொகைக்குப் பொதுவாக 6¼ சதவிகிதம் டிவிடெண்டுதான் கொடுக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய திரு. செல்வராஜ் அவர்கள்கூடக் கூறினார்கள். வட்டி விகிதம் எல்லாம் ஏறியிருக்கிற இந்த நேரத்தில் 6¼ சதவிகிதம் என்பது மிகமிகக் குறைந்த சதவிகிதமாகும். இதைக் கூட்டினால்தான் பலரும் இதில் சேர்வதற்கு ஆர்வம் உண்டாகும். அதை அவசியம் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 24

மூன்றாவது—கைத்தறிகளைப் பற்றி ஒரு தனி மசோதாவை கொண்டுவந்து அதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி—அவர்கள் தமிழ்நாடு பூராவும் சென்று ஆங்காங்கு இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பலரை விசாரித்து நல்ல முறையில் இன்றைக்கு கைத்தறி—கைத்தறித் தொழிலாளர்களுடைய நிலைமை என்ன, அதில் என்ன சிக்கல் இருக்கிறது என்பதை எல்லாம் தெளிவாக தெரிந்துகொண்ட பின்பும்—அந்த மசோதா என்ன ஆயிற்று? அப்படியே அந்தரத்தில் இருக்கிறது. இந்த நேரத்தில் அந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் ஒன்றிரண்டு சிக்கல்கள் வரலாம். நூலைப் பூராவும் கொள்முதல் செய்வது அரசாங்கத்தால் முடியுமா என்பது—அதை நெகோஷியேட் பண்ணலாம். அன்-ஆதரைஸ்டாக கைத்தறி நெசவாளர்கள் விசைத்தறிகளை வைத்திருந்தாலும் அதைப் பர்மிட் பண்ணலாம். விசைத்தறிகளையும் இணைத்த பாதுகாப்பான சட்டம் அது.

இன்றைக்கு கூட்டுறவில் மட்டும் 20 கோடிக்கு கைத்தறித் துணி ஸ்டாக் தேங்கிக்கிடக்கிறது என்கிறார்கள். பரமக்குடி கூட்டுறவில் மட்டும் 25 லட்சம் ஸ்டாக் இருக்கிறது. தென்னகத்தில் இருக்கிற அரசாங்கங்களின் சார்பில் மத்திய சர்க்காரிடத்தில் பேசியிருக்கிறார்கள். மிக முக்கியமான பிரச்சினை. கைத்தறித்துணி மொத்த உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கு தமிழகத்தில் உற்பத்தியாகிறது. அமைச்சர் அவர்களே விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஐந்தேமுக்கால் லட்சம் தறிகள் இருக்கின்றன. 25 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று. இப்பேர்ப்பட்ட முக்கியமான கைத்தறித் தொழில் சம்பந்தமாக நல்லமுறையில் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

அடுத்தாற்போல ஜெயில்—சட்டம் ஆகிய இரண்டு விஷயங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். ஜெயில்கள் சம்பந்தமாக எனக்கு நிறைய கருத்துக்கள் உண்டு. அது சம்பந்தமாக பேசுவதற்கு எனக்கு அதிக உரிமை இருக்கிறது என்று கருதுகிறேன். ஒ மாதம்—இரண்டு மாதம் அல்ல—பல வருஷங்கள் ஜெயிலில் இரு அங்கிருக்கிற நிலைமைகளைத் தெரிந்தவன் என்று சொல்கிறே அங்கே 'பேசிக்-டிரான்ஸ்பர்மேஷன்' உண்டாகவேண்டு



1975 மார்ச் 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஐ.ஜி.-யைப் போட்டிருக்கிறோம். அவர் போலீஸ் இலாக்காவில் இருந்து வருபவர். அவருக்கு ஜெயில் இலாக்காவைப்பற்றித் தெரியாது என்று சொல்லமாட்டேன். அங்கே டி.ஐ.ஜி.-யாக இருந்து இங்கே ஐ.ஜி.-யாக வந்திருக்கிறார். ஏற்கனவே ஒரு செட் அப் இருக்கிறது. அதை மீறி இவரால் போக முடியவில்லை. அதை மீறிப் போகவேண்டுமென்றால் அதிகமான அதிகாரம் இவருக்குக் கொடுத்தாகவேண்டும். என்னைக் கேட்டால்—ஒருவரை டி.ஐ.ஜி. அட்மினிஸ்ட்ரேஷன் என்று போட்டு அவரை சென்னையில் இருக்கக்கூடிய டி.ஐ.ஜி. யாக்க வேண்டும். சப்-ஜெயில்களுக்கு என்று ஒரு டி.ஐ.ஜி.-யைப்போடலாம். சதர்ன் ரேஞ்ஜுக்கு ஒரு டி.ஐ.ஜி. யைப் போடலாம். இந்த மூன்று டி.ஐ,ஜி,-க்களுக்குள் ஒருவரை ஒருவர் எங்கு வேண்டுமானாலும் மாற்றலாம் என்று வைத்துக்கொள்ளலாம்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஜெயில்களைப் பொறுத்த வரையில்—சேலம் ஜெயிலோ, கோயம்புத்தூர் ஜெயிலோ அல்லது மதுரையில் இருக்கக் கூடிய ஜெயிலோ எல்லா இடத்திலும் பல சாமான்களை உற்பத்தி செய்கிறோம். நமக்கு நிறையச் சாமான்கள் கிடைக்கின்றன. உற்பத்தியில் ஈடுபடக்கூடிய கைதிகளுக்கு நாம் ஊதியம் கொடுப்பதில்லை [illegible]ளத்தில் கொஞ்சம் கொடுக்கிறார்கள் —அவர்களது உழைப்புக்கேற்ற ஊதியம் இங்கே கொடுக்கப்படுவதில்லை. அதனால் என்ன நிலைமை இருக்க வேண்டும். அந்தச் சாமான்களில் இருந்து நமக்கு அதிகமான வருமானம் வர வேண்டும். ஆனால் இன்றைக்கு அந்தமாதிரி அதிகமான வருமானம் வராத அளவுக்குப் பல கோளாறுகள் வருகின்றன.

நிலமீட்சிப் போராட்டத்தின்போது கைது செய்தவர்களை ஒவ்வொரு சிறையிலும் அதனதன் கப்பாசிடிக்கு ஐந்து மடங்கு, ஆறு மடங்குக்குமேல் உள்ளே வைத்திருந்தார்கள். இடம் போதவில்லை என்ற காரணத்தினால் கொட்டகை போட்டார்கள். அப்பொழுது அங்கே ஜமக்காளம் கொடுக்கப்பட்டது. என்ன விலை? அன்றைக்கே விசாரித்தோம். ஒரு ஜமக்காளம் ரூ. 7-3/4 ஆனால் ரூ. 12-3/4 க்கு வாங்கப்பட்டது. அதே போல், பெட்ஷிட்—கிட்டத்தட்ட டபிள் மடங்கு விலைக்கு வாங்கப்பட்டது. இதை உதாரணத்திற்காகச் சொன்னேன். இதற்கெல்லாம் இன்டிபென்டன்ட் ஆடிட் வையுங்கள். இல்லாவிட்டால், நாங்கள் குற்றம் சொல்கிறோம், அங்கேயிருக்கிற அதிகாரிதான் தவறு செய்தார்

ஃபைன்டிங்ஸை, மற்ற இலாகாக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இப்படி ஒரு நிலைமையிருக்கிறது. அதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

D. C. Ramalingam, a teacher; he was dismissed in 1973. The Assistant Collector ordered reinstatement; but the Development Commissioner did not implement the order. The Law Department has given its consent to the teacher being reinstated and have said that otherwise it will be a negation of justice.

அப்படி பார்க்கும்போது, அன்டச்சபிலிட்டியை பிரீச் பண்ணுகிறவர்களுக்கு 6 மாதம் தண்டனை என்று ஒரு சட்டமிருக்கிறது. ஆனல், அது அமுல் நடக்கிறதா? சிரமமிருக்கிறது. அதை முயற்சி செய்து, அமுல் நடத்தவேண்டும்.

அரிசனங்களுக்கு வீடு கட்ட இடம் கொடுத்தால்—லாண்ட் அக்குவிசிஷன் புரசீடிங்ஸ் போட ஆரம்பித்தவுடனே, இங்கே கேள்வி வந்தது—கோர்ட்டிலே நிறைய நடந்துகொண்டிருக்கிறது—உடனடியாக முயற்சி எடுத்துச் செய்ய வேண்டுமென்று சொன்னேன்.

மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் மதுரையிலே ஒரு பெஞ்ச் வேண்டுமென்று சொன்ஞர்கள். அதைத்தான் நானும் கூறுகிறேன். அதே மாதிரி, மெட்ராஸ் ஹைக்கோர்ட்டிலே லேபர் பெஞ்ச் இருப்பது நல்லது. சுப்ரீம் கோர்ட்டிலே கான்ஸ்டிட்யூஷன் பெஞ்ச் இருக்கிறது. அதேமாதிரி, இங்கே ஹைக்கோர்ட்டிலே லேபர் பெஞ்ச் இருப்பது நல்லது. இன்றைக்கு, சென்னையிலே டிரிபியூனல்ஸ் இருக்கின்றன. கோயம்புத்தூரிலே லேபர் கோர்ட் இருக்கிறது, மதுரையிலே லேபர் கோர்ட் இருக்கிறது. அவர்களெல்லாம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜஸ் லெவலில் உள்ளவர்கள். லேபர் கோர்ட்டுகளுக்கு அனுப்புகிறவர்களை, மற்ற கோர்ட்டுகளிலேயிருந்து, அவ்வளவு சாதுரியமாகச் செயல்படவில்லையென்பவரை அங்கே தள்ளிவிடாதீர்கள். அந்த மாதிரியான காரியம் நடந்து வருகிறது. கொஞ்சம் திறமையானவர்களை அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் ஜட்ஜுக்கே உள்ள குணங்களை மீறி ஏதோ மாதிரி ஆக்கிவிடுகிருர்கள். சமுதாயத்தைச் சுற்றியிருக்கிற கிற கோளாறுகள் அவர்களிடமிருக்கின்றன.



அதே மாதிரி கிளார்க்குகள் 15 வருஷம், 18 வருஷம் ஒரே இடத்தில் இருக்கிருர்கள். அவர்களையும் 3 வருஷத்திற்கு ஒரு முறை மாற்றுங்கள். ஆகவே, சென்னையிலே ஒரு லேபர் கோர்ட் வேண்டும். ஹைகோர்ட்டிலே ஒரு லேபர் கோர்ட் இருந்தது. இப்பொழுது டிரிபியூனல் மட்டுமிருக்கிறது. லேபர் கோர்ட்டை வேறு இடத்திலே கொண்டு போய் வைத்திருக்கிருர்கள். It is in an isolated corner near panchavati அங்கு டெலிஃபோன் கிடையாது, போகிறவனுக்குச் சாப்பாடு கிடையாது. அங்கேயிருக்கிற வேடிக்கை என்னவென்ருல், 3 ஜட்ஜ்—2 கோர்ட். 3 ஜட்ஜுக்கு 2 கோர்ட். எந்த ஜட்ஜ் எப்பொழுது வருவார் என்று தெரியவில்லை. மியூசிக்கல் சேர் மாதிரி அங்கே நடக்கிறது. ஆகவே, லேபர் கோர்ட்டை சென்னையிலே வைத்துக் கொள்ளுங்கள்.

இன்னொரு விஷயம்—என்னுடைய அனுபவத்தை வைத்துத்தான் சொல்கிறேன். என்னைப் போன்றவர்களும், அவர்கள் படக்கூடிய கஷ்டத்தையும் பார்த்துத்தான், அனுபவத்தை வைத்துத்தான் இந்த விஷயங்களை இப்பொழுது சொல்கிறேன்.

இன்ஞென்று, லேபர் டிரிபியூனலுக்கு மேலே அப்பெலெட் டிரிபியூனல் என்றிருந்தது. The Appellate Tribunal was abolished எதற்காக, அப்பீலுக்குப் போகாதே என்று எடுத்துவிட்டார்கள். இப்பொழுது ஓர்க்கர்ஸ் ரீஇன்ஸ்டேட்மெண்ட் என்று வந்தால், உடனே ரிட் போகிறது. அதே மாதிரி ஓர்க்கர்ஸுக்குக் கொஞ்சம் பெனிஃபிட் கிடைக்கும் என்று சொன்ஞல் ரிட்டுக்குப் போகிருர்கள். நாம், ரிட்டுக்குப் போகக்கூடாது என்று சொல்லமுடியாது. நான் கொஞ்சம் டிசுவேட் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கிருந்து ஜட்ஜுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த மாதிரி தொழிலாளிகளை வேலையைவிட்டு நீக்கி திரும்ப வேலையில் சேர்த்துக் கொள்கிற நிலைவருகிறபோது, மானேஜ்மென்ட் ரிட் ஃபைல் செய்தால், அட்மிஷன் பண்ணும்போது 10 தடவை சிந்தியுங்கள். பெரிய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வேண்டுகோள் விட நமக்கு அதிகாரமில்லை. இந்த வேலையை இப்படித்தான் செய்யவேண்டுமென்று சொல்ல நமக்கு அதிகாரமில்லை.

[1975 மார்ச் 24

THIRU K. T. K. TANGAMANI: Even in the State Labour Advisory Committee we generally pass a resolution dissuading the management from going on writ action . . . . Like that this is a request.

MR. DEPUTY SPEAKER: That kind of request can be addressed to the management and not to the Judiciary. You have to make a distinction......

*திரு. கே. டி. கே. தங்கமணி:* * இப்படி ஒரு நிலையிருக்கிறது. அந்த நிலை மாறினால் தொழிலாளிகளுக்குக் கொஞ்சம் உதவிகரமாக இருக்கும் என்பதால்தான் நான் இந்த விஷயத்தை முதலிலேயே சொன்னேன்.

(பிற்பகல் 1-00)

இப்போது மதுரையிலே ஒரே கோர்ட் ஒரே பில்டிங்கில் இருக்கிறது, ரொம்ப நல்லது. அங்கே இருக்கிற லேபர் கோர்ட்டும் அதே பில்டிங்கில்தான் இருக்கிறது, ரொம்ப நல்லது. ஆனால் வக்கீல்களுக்கு சேம்பர் இல்லை, அவசியம் அங்கே அவர்களுக்கு ஒரு சேம்பர் வேண்டும், கோர்ட் ஹாலிலே முக்கியமான கேஸ் நடந்தால் பாதி வக்கீல்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள், அவர்கள் உட்காருவதற்கு சேர்களாவது போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்—நான் சில கேஸ்களுக்காகப் போகவேண்டியிருந்தது பார்த்திருக்கிறேன்—உசிலம்பட்டியிலே ஒரு கோழிக்கூண்டுபோல்தான் இருக்கிறது, அதைப் பெரிய கட்டடத்திற்கு மாற்றவேண்டும் அல்லது வேறு கட்டடம் ஏற்பாடு செய்யவேண்டும். அதே போன்று தான் திருவாடானையில் உள்ள சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டும். அங்கே கோர்ட் மாத்திரமல்ல, போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இன்னும் என்ன என்ன ஆபீஸ்கள் எல்லாமோ இருக்கின்றன, எந்த இடத்திற்குப் போகிறோம் என்றுகூடத் தெரியவில்லை, ஆகவே

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 மார்ச் 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டுகள், சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகள், டிஸ்டிரிக்ட் கோர்ட்டுகள் இவைகள் எல்லாம் வசதியாக இருக்கக்கூடிய முறையிலே அங்கேயுள்ளவர்கள் ஜட்ஜாக இருந்தாலும், மாஜிஸ்திரேட்டாக இருந்தாலும், வக்கீல்களாக இருந்தாலும் உட்கார்ந்து பேசக்கூடிய முறையிலே இட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். திருவாடானையிலே அது கிடையாது, இரண்டுபேர் தான் உட்காரலாம் என்ற நிலைமை இருக்கிறது, வக்கீல்களுக்கும் உட்காருவதற்கு இடவசதிகளைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இந்த டிலேயைப்பற்றிச் சொல்லவிரும்புகிறேன். டிலே என்றால் சாதாரணமாக சிவில் கேஸ்கள் என்றால்—நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—சிங்கப்பூரிலேயெல்லாம் எப்படிப்பட்ட காம்பிளிக்கேட்டட் சிவில் கேஸாக இருந்தாலும்கூட சுப்ரீம்கோர்ட் அப்பீல் வரையிலேகூட 6 மாதம் தான் ஆகிறது. அந்த அளவிற்கு அங்கே புரசீஜர் இருக்கிறது. delayed justice is negation of Justice என்ற மாதிரி இல்லாத அளவிற்கு இருக்கக்கூடிய வகையில் ஏற்கெனவே பெண்டிங் ஆக இருக்கக்கூடிய கேஸ்களையெல்லாம் சீக்கிரமாக முடிக்கக்கூடிய வகையிலே ஏற்பாடுகளை, முறைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் பேசிய நேரத்திலே * என்ற முறையிலே சொன்ன அந்த வாசகங்களை மாத்திரம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI: Why, Sir?

MR. DEPUTY SPEAKER: That is imputation against the judiciary. It implies that they are partisan and that they are one-sided.

THIRU K. T. K. TANGAMANI: There is nothing wrong, it is only a general statement. I just said that a certain set of cases are admitted. What is wrong in that?

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member will be aware that it implies certain things . . . .

Thiru K. T. K. TANGAMANI : I can't understand how it is wrong.

Mr. DEPUTY SPEAKER : Out Rules are clear; Rule 67(4) clearly says that we should not reflect upon the conduct of any Court of Justice; apart from the provision in the Constitution, it is in our rules also. Now. *
—that is the statement made by the hon. Member—that implies that the judiciary is partisan.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இப்படித் திருத்திக்கொள்ளலாமா என்று யோசிக்கவேண்டும். 'தொழிலாளர்களுக்கு விரோதமான ரிட்களைச் சுலபமாக அட்மிட் செய்யாமல் இருக்கவேண்டுமென்று கோருகிறேன்' என்ற அளவிலே மாற்றிக்கொள்ளலாமா என்று யோசிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* அப்படிக் கோரினால் கூட இப்போது அப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று ஆகிவிடும்.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* சட்டத்திற்குக் கண்கள் உண்டு, இதயம் இல்லை என்று சொல்வார்கள். நீதிபதிகள் இப்போது சமுதாயம் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். சட்ட சபையிலே அப்படிச் சொல்வதால் ஏற்றுக்கொள்ளமுடியாது, நான் துணைச் சபாநாயகர் அவர்கள் சொல்லக்கூடியதை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலே இருக்கிறேன். Judges know how the society is moving ஆகவே, நாம் இப்படித்தான் செய்யவேண்டுமென்ற முறையிலே பிரதிபலிக்கின்ற முறையிலே இங்கே சொல்வோமானால் அவர்களுக்கு ரிட்களை இப்படித்தான் செய்யவேண்டுமோ என்று நினைக்கக்கூடிய அளவிற்குப் பயம் வந்துவிடும், ஆகவே அந்த நிலைமையிலே சொல்வது சரியல்ல. இன்றைக்கு நம்முடைய சமுதாயம் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நீதிபதிகள் நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



Thiru K. T. K. TANGAMANI : Big discussions are going on in the Country about Committed Judiciary and other things.

அவர்கள் இன்று வந்து சமுதாயத்தைப் புரிந்து கொண்டிருக்கலாம், இங்கே இருக்கக்கூடிய ஜட்ஜ்கள் உலகத்தைப் புரிந்துகொள்ளவில்லை. உலகத்தைப் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற முயற்சியிலே அவர்கள் ஈடுபடவில்லை. தொழிலாளர்கள் பிரச்னைகளைத் தெரிந்து கொள்ளவில்லை. *

Mr. DEPUTY SPEAKER : I fully appreciate the anxiety of the hon. Member to protect and safeguard the rights of the workers. But still I feel that the statement contained an imputation and reflection. I therefore ordered the expunction of that particular statement.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* தலைவர் அவர்களே. பல்வேறு மானியங்களுடைய கோரிக்கைகளின்மீது சட்டப் பேரவை உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைச் சொன்னதற்காக முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ஆங்காங்கு சிறுசிறு குறைகளைச் சுட்டிக்காட்டியதால் அவைபற்றி அரசு கவனமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமென்ற உறுதியை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற அலுவலர்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுடைய நல்ல கருத்துக்களை எல்லாம் ஏற்றுத் தங்களுடைய துறையைத் திறம்பட நடத்துவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பேசிய பல்வேறு மானியங்களிலே குறிப்பாக நீதித் துறையினைப்பற்றி மிக விரிவாகப் பல்வேறு அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய நோக்கமெல்லாம் நீதித் துறை சுதந்திரமாக இயங்க வேண்டும், சமுதாய முன்னேற்றத்திற்கு அவர்களுடைய பங்கையும் செலுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு சொல்லியிருப்பார்கள் என்று நம்புகிறேன். நீதித் துறையை விமர்சிப்பதுபற்றி ஒரு கருத்துப் பரிமாற்றம் இங்கே

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

செய்யப்பட்டது. சட்டப்படி எப்படிப்பட்ட உரிமைகள் இருந்தாலும் நம்முடைய கடமை நீதித் துறையிலே உள்ளவர்கள் யாருக்கும் அஞ்சாது சுதந்திரமாக நீதியை வழங்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அனைவரும் இருக்கின்ற காரணத்தால் நாம் இங்கே பயன்படுத்துகின்ற சொற்கள் அவர்களைப் புண்படுத்தி விடாது அவர்களுடைய வேலையிலே குறுக்கிட்டுவிடாது இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீதித் துறையிலே பணியாற்றுகிறவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற பிரச்னை இங்கே எழுப்பப்பட்டது. இதைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இருக்கலாம், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கலாம். ஆனால் அரசியலமைப்புச் சட்டப்படிதான் நாம் நடத்த முடியும். ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களை நீதிபதிகளாக நியமிக்கலமா என்பது இங்கே எழுப்பப்பட்ட வாதம். நாம் அனுபவத்திலே பார்த்த ஒன்று, இன்றைக்கல்ல பல்வேறு நிகழ்ச்சிகளில் பல ஆண்டுகளாக, இப்படிப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டு இருப்பார்கள், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கிறது. அவர்கள் எல்லாம் திறமையுள்ளவர்களா, நேர்மையுள்ளவர்களா என்று பார்த்து நம்முடைய அரசு சிபாரிசு செய்கிறது, மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்கிறது. இந்த உணர்வோடு இதை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் சட்டப்படி அதைத் தடுக்க முடியாது என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர், கட்சியிலே உள்ள உறுப்பினர், சட்ட மன்றத்தில் அல்ல, எதிர்க் கட்சியிலே உள்ள உறுப்பினர், தேர்தலிலே போட்டியிட்டுத் தோல்வியுற்ற பின்னரும்கூட நீதித் துறைக்குத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதைத் தடுத்துவிட முடியாது. இன்றைக்கு தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிற காரணத்தினால் இதே தி.மு.க.-வை எதிர்த்துத் தேர்தலிலே போட்டியிட்டவர். நீதித் துறைக்கு வரும்போது அதை மறுத்து விட முடியாது. ஆகவே அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான் இப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். உயர்நீதி மன்றத்திற்கு, உச்ச நீதிமன்றத்திற்குக் கூட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர், பாராளுமன்றத்திலே பணியாற்றிக் கொண்டிருந்தவர், உச்ச நீதி மன்றத்திற்கு, உயர்நீதி மன்றத்திற்கு நியமிக்கப்படக்கூடிய



வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. அதேபோல் நம்முடைய மாநிலத்திலேயும் தேர்தலிலே போட்டியிட்டவர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி இங்கேயுள்ளவர்கள் எடுத்துக் கூறிய காரணத்தினால் அகில இந்தியாவிலும் இந்தக் கொள்கை மாறினால் தவிர இன்றைக்கு நாம் அரசியல் சட்டப்படி இருக்கிற அந்த உரிமையைப் பறிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே சமயத்திலே இங்கே சிபாரிசுகளைச் செய்யும்போது நேர்மையின் அடிப்படையிலே, திறமையின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப் படக்கூடிய முறையை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

புதிய நீதிமன்றங்களை ஏராளமாகத் திறக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் நாம் கமிஷன் நியமித்தோம். அதனுடைய சிபார்சுகளும் வந்திருக்கின்றன. சுமார் 45 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, 'பேஸ்ட் ப்ரோக்கிராம்' என்ற அடிப்படையில் ஆண்டுதோறும் நிறைவேற்ற வேண்டுமென்று, எந்தெந்த இடங்களிலே உடனடியாக நிறைவேற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைப் பற்றி உயர்நீதிமன்றத்திலே கேட்டிருக்கிறோம். அந்த ஆலோசனையின்படி அமல் நடத்தப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் **கொள்கிறேன்.**

காலதாமதம் அதிகமாக இருக்கின்ற நிலை மாற்றப்பட வேண்டுமென்ற கருத்தை எல்லோருமே ஏற்றுக் கொள்வார்கள். அகில இந்தியாவிலும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய நீதிமன்றங்கள் மிகச் சிறப்பான முறையில் நடந்து, வருவதாகவும், அதிக காலதாமதம் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இல்லை என்றும் பலபேர் பாராட்டும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலே காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அத்தனை முயற்சிகளையும் அரசாங்கம் எடுக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்ட உதவி ஏழைகளுக்குச் செய்ய, 'லீகல் எய்ட் பில்' கொண்டுவந்தும் அதில் காலதாமதம் இருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய மன்ற அங்கத்தினர்களின் பரிசீலனையில் இருப்பதும், அதற்காக மத்திய அரசாங்கமே ஒரு சட்டத்தைக்

கொண்டு வந்திருப்பதால் அதன் விளைவாகக் காலதாமதம் ஏற்படுவதும் மன்ற அங்கத்தினர்களுக்குத் தெரியும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய நீதிமன்றத்தில் நீதிபதிகள் பணியாற்றும்பொழுது அவர்கள் எப்படிப் பணியாற்ற வேண்டும், நீதி கிடைக்கும் அவர்களிடத்திலே, அவர்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள், அவர்கள் யாருக்கும் கட்டுப்படாதவர்கள் என்றெல்லாம் மக்கள் நினைக்கும் அளவிற்கு நடந்து கொள்ள வேண்டுமென்ற கருத்தைப் பொதுவாகச் சொன்னார்கள். அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. நம்முடைய நீதிபதிகள் அந்த உயர்ந்த நிலையை இன்றைக்கும் நிலைநாட்டி வருகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் சில சங்கங்களில் சேரலாமா என்ற பிரச்னையை எழுப்பினார்கள். இன்றைக்குள்ள அரசியலமைப்புச் சட்டத்தின்படி அதைத் தடுப்பதற்கு நிச்சயமாக முடியவே முடியாது. ஆனால் மன்ற அங்கத்தினர்களின் கருத்துக்களை நிச்சயம் அவர்கள் எடுத்துக் கொண்டு, அந்த நீதிபதியினுடைய நிர்வாகத்திலே மக்களுக்கு ஒரு சார்புடைத்தாகப் போய்விட்டது என்ற எண்ணம் உருவாகாத அளவிற்கு நாம் நீதித் துறையிலே சிறந்த அக்கறை கொண்டிருக்கிறோம். அவர்களும் அதை விரும்புபவர்களாக இருக்கலாம், புறக்கணிக்க மாட்டார்கள் என்ற உறுதியை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதித்துறையை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் உயர்ந்த அளவிலே, சிறப்பாக வைக்கும் முயற்சியிலே நாம் அனைவரும் சேர்ந்து, அரசியல் கட்சி வேறுபாடின்றி ஒத்துழைப்புத் தர வேண்டும். அப்பொழுதுதான் நீதித் துறை சிறப்பாக நடந்து செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறைத் துறையைப் பற்றி ஏராளமான கருத்துக்கள் பேசப்பட்டன. முக்கியமான கருத்து, சிறைத் துறையிலே தவறுகள் நடக்காது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்து எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது. அந்தக் கருத்தை நிச்சயமாக அரசாங்கம் கவனத்தோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை, நம்முடைய சிறைத் துறையிலுள்ளவர்கள், ஆடிட் பிரிவைச் சேர்ந்தவர்கள், சில சிறைச்சாலைகளுக்குச் சென்று கவனமாகப் பரிசீலித்து, அதிலுள்ள



குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டப்பட்ட கருத்துக்களின்மீது சிறைத் துறையிலே உள்ளவர்கள் கவனம் செலுத்துவது இதிலிருந்து புலப்படும்.

ஆனால் ஆங்காங்கே சில அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் நடக்கும்பொழுது அதிகமான அளவிற்குச் சிறைச்சாலைகள் நிரம்பும் வாய்ப்பு இருக்கிறது. அது இப்பொழுது புதிதாக ஏற்படவில்லை. எங்களுடைய ஆட்சிக்காலத்தில் அது ரொம்பக் குறைவு. ஆனால் முன்னால் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அப்படியிருக்கும்பொழுது சிறைத்துறை நிர்வாகத்திலே சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. அப்பொழுதுதான் சில தவறுகள் ஏற்பட்டதாக இங்கே சொல்லப்பட்டது. அப்பொழுது அதிகமாக வரும். ஆயிரக்கணக்கான அளவில் வரும், கைதிகளுக்கு பொருட்களை வாங்கும்பொழுது தவறு நடக்கிறது என்பதைத் தான் இங்கே காண்பித்தார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கும் ஏற்கனவே கொண்டு வரப்பட்டது. அதை நாங்களும் தீரப் பரிசீலித்தோம். திடீரென்று பல்லாயிரக்கணக்கான அளவில் கைதிகள் வரும்பொழுது அவர்களுக்குப் பொருட்களை வாங்கும் பொழுது சில முறைகளைப் பின்பற்ற முடியாமல் போகிறது. அவசரகாலத்திலே இந்த முறைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்து 'ரிலாக்சேஷன்' கொடுத்து, பிறகு அரசாங்கம் 'ரேட்டிஃபிகேஷன்' செய்யும் முறை இருக்கிறது.

ஆனால், அப்படி வாங்கும்பொழுதுகூட, தன்னிச்சையாக வாங்காமல், கூட்டுறவுத் துறை, அரசுத்துறையின் மூலமாக வாங்குகின்ற முயற்சியிருந்தால் இப்படிப்பட்ட தவறுகள் தவிர்க்கப்பட முடியும் என்ற ஆலோசனையையும் அரசு சிறைத் துறைக்குத் தெரிவித்திருக்கிறது. எதிர்காலத்திலே இக்கட்டான சூழ்நிலைகளிலே விதிகளுக்கு ரிலாக்சேஷன் கொடுத்து வாங்கும் பொழுதும்கூட தவறு ஏற்படாமல், அதிக விலைகொடுத்து வாங்கி விடாமல் பார்த்துக்கொள்ளும்படி நாங்கள் வலியுறுத்தி வருகிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, சேலம் சிறைச்சாலையில், 'ரெக்சின்' என்ற பொருளுக்குப் பதிலாக, 'காலிகோ' என்ற பொருளை, அதிக விலை உள்ள பொருள் என்று குறைந்த விலை உள்ள பொருளை வாங்கி விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுதுகூட அந்தச்

[திரு. செ. மாதவன்] [1975 மார்ச் 24

சிறைச்சாலை பற்றி நம்முடைய சிறைத்துறையில் பரிசீலித்து, உடனடியாகத் தொடர்பு கொண்டு விசாரிக்கும்படி சொன்னோம். அங்கே 'ரெக்சின்' என்ற பொருள்தான் பயன்படுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அங்கத்தினர்களின் கருத்துக்களை ஐ.ஜி. அவர்களை கவனத்திற் கொண்டு பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன் என்ற உறுதியை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் கொடுத்து வாங்கும்பொழுது நாம் வாங்கும் நூலும் வெளியே எடுத்துச் செல்லப்படும் பொருளும் ஒரே எடை இருக்க வேண்டுமென்ற கருத்தை அங்கத்தினர்கள் வலியுறுத்தினார்கள். விதிமுறை தெளிவாக இருக்கிறது. நாம் வாங்கும் நூலுக்கும், உற்பத்தி செய்யும் பொருளுக்கும் எடை வேறுபடாமல் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அவைகள் இன்னும் அதிகமாக அமல் நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தை யாரும் ஆட்சேபிக்க முடியாது. அந்த முறையும் பின்பற்றப்பட வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேநேரத்தில் அவர்கள் பயன்படுத்தும், பினாயில், சோப்பு இதுபோன்ற பொருட்களுக்குக் கொடுக்கும் மூலப்பொருளுக்கும், உற்பத்தியாகும் பொருளுக்கும் இடையில் எடை வேறுபாடு இல்லாமல் இருக்க வேண்டுமென்ற கருத்தும் சொல்லப்பட்டது. இதுவும் சிறைத் துறைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டு, குறிப்பாக இந்தப் பொருட்களின் எடையைப்பற்றி, விற்கும்பொழுது நாம் பரிசீலிக்க வேண்டுமென்ற ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்தத் தவறும் நடக்காமல் பார்த்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பிருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிறைத்துறையிலே கள்ள நோட்டு அடித்த வழக்கைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே இந்த மன்றத்திலே கேள்வி கேட்கப் பட்டு பதில் தரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகள் நடப்பது உண்மையிலேயே வருந்த வேண்டிய ஒன்றாகும். வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்—பக்கத்து மாநிலத்தைச் சேர்ந்தவர்—இந்தக் குற்றத்திலே ஈடுபட்டு, வந்திருக்கின்றபொழுது, அவரும் அங்கேயுள்ள சிறைத்துறையினரும் சேர்ந்து செய்துவிட்ட குற்றத்தை நாம் உடனடியாகக் கண்டுபிடித்து நடவடிக்கை



1975 மார்ச் 24] [திரு. செ. மாதவன்]

எடுத்து, அவர்கள் மீது கிரிமினல் வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே இந்த மன்றத்திலே கூறிய செய்தியை நினைவு படுத்த விரும்புகிறேன். இதுபோன்ற தவறுகள் நடக்க, எந்த விதி வாய்ப்புகள்—லூப்ஹோல்ஸ்—இருந்தாலும் அதையெல்லாம் மாற்றுவதில் அந்தந்த சிறையின் தலைமை அதிகாரிகள் மிகுந்த கவனமாக இருக்க வேண்டுமென்று, இந்த வழக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனேயே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித் திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைத் துறையிலே அதிக வசதி வாய்ப்புகள் கொடுக்க வேண்டும், கொடுமையான எண்ணத்தோடு சிறைக்கைதிகளை நடத்தக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். அதிலே இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறைத் துறையில், சிறை சென்றவர்கள் சம்பந்தமாகப் பல புதுமையான கருத்துக்களை அமல் படுத்தியிருக்கிறோம். சிறைக் கைதிகளை நல்ல உணர்வோடு நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கல்வித் துறையிலே தேர்ச்சி பெறுவதற்கான சலுகைகளை வழங்கியிருக்கிறோம். இப்பொழுது, அங்கே படித்து, பல தேர்வுகளிலே வெற்றி பெற்றவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். சிறைத் துறையிலே கொடுக்கப்படும் உணவுபற்றி அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஏற்கனவே இங்கே சொல்லி யிருக்கிறேன். குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுத்த பிறகு, அவர்களை மிகுந்த பழி வாங்கும் உணர்வோடு நடத்தக் கூடாது என்ற கருத்தை ஏற்று அந்த முறையைப் பின்பற்றுவோம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறித் துறையைப்பற்றிக் கவலையோடு பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. அதை யாரும் மறுக்க முடியாது. கைத்தறி நெசவாளர்கள் இலட்சக்கணக்கான பேர் இந்தத் தொழிலை நம்பி யிருப்பதால் இதற்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய கைத்தறித் துறை முழுவதும் கூட்டுறவுத் துறைக்கே வர வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தலைமைச் சங்கத்தின் சார்பாக 1966-67 ஆம் ஆண்டில் சுமார் பத்தே

முக்கால் கோடிக்கு அவர்களுடைய உற்பத்தி இருந்த நிலைக்கு மாறாக இன்றைக்கு சுமார் 33 கோடிக்கு உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இதை மேலும் மேலும் வளர்த்தும் முயற்சியிலே அரசாங்கம் திட்டங்களை வகுக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல் கூட்டுறவுத் துறைக்கு மட்டுமல்லாது தனியார் துறைக்கும் அதிக வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு அங்கத்தினர் துரைசாமி அவர்கள் கவலையோடு எடுத்துச் சொன்னார்கள். அதற்காக நம்முடைய அரசாங்கம் புதிய திட்டத்தை உருவாக்கி, ஹாண்ட்லூம் பினான்ஸ் கார்ப்பரேஷன் தனியாருக்குக் கடன் கொடுப்பதோடு நின்று விடாமல் அவர்களுக்கு நூல் கொடுக்கவும், அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகளை வாங்கி விற்கின்ற முயற்சிகளிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. 1964-ஆம் ஆண்டு 78 லட்சம் ரூபாய் கடன் கொடுத்த நிலைமை மாறி இன்றைக்கு 125 லட்சம் ரூபாய் வரை கடன் கொடுக்கும் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விற்பனை முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறோம்.

விற்பனை செய்யும்போது சலுகை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். அந்த முயற்சிகள் தொடரும் என்ற கருத்தை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இவர்களுக்காக சர்வீஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளை உருவாக்கினோம். அவை சரியாகச் செயல்படவில்லை என்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள். அது உண்மை என்பதை மட்டும் ஒப்புக்கொள்ள விரும்புகிறேன்.

தனியார் பங்கு பெருகிய, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல்களை நூற்பாலையில் இருந்து பெற்றுக் கொடுக்கும் காலகட்டம் வருகின்ற வரையில் முழுமையாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. பணிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பேல் நூல்கள் வழங்கியிருக்கிறார்கள். தொடர்ந்து வழங்குவதிலுள்ள சிக்கலை மட்டும் தெரிவித்தேன். அதுவும் தொடர்ந்து பரிசீலனைக்குரியதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.





கழிவுத் தொகை—ரிபேட் கொடுக்கும் விஷயத்தில் இந்த அரசாங்கம் பின்தங்குகிறது என்ற குறையைச் சொன்னார்கள். இந்த ரிபேட்டை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்பதிலே தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே ஆளும் கட்சிக்கும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு இல்லை. 1966–67-ல் இதற்காக 67 லட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 200 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தவரை இதற்கு அதிகமான தொகை ஒதுக்க வேண்டுமென்று அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது. இருந்தாலும் அது போதவில்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதற்காக 1967–68-ல் 118 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வருகிற ஆண்டு 261 லட்சம் ரூபாயைச் செலவழிக்கின்ற நிலையை எய்தியிருக்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தத் துறைக்கு இரண்டு மடங்குக்கு மேலாகச் செலவழிக்க வேண்டும். இன்னும் அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்ற கருத்தையும் வலியுறுத்தி வருகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமைச் சங்கத்திலிருந்து விற்பனையும் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. 1966–67-ல் 4 கோடி ரூபாய்க்கு விற்பனை நிலைமை இருந்தது இன்றைக்கு 13 கோடி ரூபாய்க்கு மேல் போகிறது. அந்த அளவுக்கு விற்பனையில் வெற்றி பெற்றிருக்கிறோம். அதைப்போல் ஏற்றுமதியிலும் வெற்றி பெற்றிருக்கிறோம். தலைமைச் சங்கங்கள் மூலமாக பிரதம சங்கங்களுக்கு நூல் கொடுக்கிற முறையிலும் அதிக அளவு வெற்றி பெற்றிருக்கிறோம். முன்பு 20,000 பேல்கள் நூல் கொடுக்கப்பட்டது. இப்போது சுமார் 79,000 பேல்கள் அளவு தலைமைச் சங்கங்கள் மூலமாக பிரதம சங்கங்களுக்கு வழங்கும் அளவுக்கு அந்த முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறோம்.

நம் முன்னால் இருக்கும் முக்கியமான பிரச்சினை—எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும், தனியாரிடத்திலும் கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதைப் பற்றிக் கவலைப்பட்டு எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். இதை வாங்குவதில் மாவட்டத்திற்கு மாவட்டம் வேற்றுமை காட்டக் கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்தத் துணிகளை வாங்கும்போது எந்த

[திரு. செ. மாதவன்] [1975 மார்ச் 24

மாவட்டத்தில் உடனடியாக விற்பனை செய்ய முடியாமல் தேங்கிக் கிடக்கிறதோ, அந்தச் சங்கங்களில் இருந்து அதிகமாக வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் பல சங்கங்கள் பாதிக்கப்படும். அதிகமான தேக்கம்—இராமநாதபுரத்திலே 186 லட்சம்; சேலம், தர்மபுரியிலே 149 லட்சம். சேலம் தருமபுரியிலிருந்து 63 லட்சமும் இராமநாதபுரத்திலிருந்து 61 லட்சமும் வாங்கியிருக்கிறோம். இரண்டு கோடிக்குத்தான் வாங்க முடிந்திருக்கிறது. இன்னும் ஒரு கோடிக்கு வாங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்னும் சில நாட்களில் மாநிலம் முழுவதும் தொடங்க இருக்கும் கண்காட்சி மூலமாகத் தேங்கியிருக்கும் சரக்குகளை கூட்டுறவுத் துறையில் அதிகம் விற்க வேண்டுமென்று முயற்சி எடுத்திருக்கிறோம். அதிக அளவுக்கு அதன் மூலம் விற்க முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டு வருகிறோம்.

கைத்தறித் துறையில் ஏற்பட்டு வருகிற பிரச்சினைகள் தொடர்ந்து ஏற்பட்டு வருகிற பிரச்சினைகள்—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் அந்தப் பிரச்சினைகள் என்ற நிலை இல்லை. சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் தொடர்ந்து இந்தத் துறையில் பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சில ஆண்டுகளில் நூல்கள் ஏராளமாகத் தேங்குகிறது, வாங்க ஆள் இல்லை. சில ஆண்டுகளில் நூலே கிடைக்கவில்லை. நூல் விலை அதிகமாக இருக்கிறது. சில ஆண்டுகளில் கைத்தறித் துணித் தேக்கம் ஏராளமாக ஆகிவிடுகிறது. சில ஆண்டுகளில் விற்பனை அதிகமாக ஆகிறது. ஆக, தொடர்ந்து இந்தத் துறைக்குப் பிரச்சினை வந்து கொண்டே இருக்கிறது. இதை மொத்தமாகப் பரிசீலித்து பொருளாதாரத் துறையில் பரிகாரம் கண்டாலொழிய விமோசனமே கிடையாது.

இதற்காக ஒரு சட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது. இந்த அரசாங்கத்திற்கு அதிலே எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. இருக்கிற சூழ்நிலையை எல்லா அங்கத்தினர்களுக்கும் விளக்கி இருக்கிறேன். நாம் போடுகிற சட்டத்திற்கு மத்திய அரசாங்கம் அனுமதி



1975 மார்ச் 24] [திரு. செ. மாதவன்]

தந்தாலொழிய நாம் சட்டம் போட்டுப் பயனில்லை. இந்த மசோதா கொண்டு வந்ததற்குப் பின்னால்தான் மத்திய அமைச்சரோடு தொடர்ந்து வாதித்திருக்கிறோம். அண்மையில் முதலமைச்சரும், நானும் சென்றிருந்தபோது மத்திய அமைச்சரோடு வாதித்தோம். மிகுந்த உருக்கத்தோடு கேட்டார்கள்; ரொம்ப மகிழ்ச்சி ஏற்படுகிறது; தமிழ்நாடு தான் வழி காட்டுகிறது, தமிழ்நாடு இதைச் சட்டமாக நிறைவேற்றினால் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்று சொல்லிவிட்டு கடைசியில் அனுமதி என்ற பிரச்சினை வந்தவுடன் 'இது அகில இந்திய அளவில் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று; உங்களுடைய மாநிலத்திற்கு மட்டும் அனுமதி கொடுப்பது என்பது பிரச்சினையாகும்' என்று சொன்னார். 'நீங்களே அகில இந்திய அளவில் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டால் ஆட்சேபணை இல்லை' என்று சொன்னோம். அப்படி அவர்கள் கொண்டு வர முடியாது என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை குறிப்பாக தென் மாநிலங்களைப் பொறுத்தவரை கைத்தறிப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. வடபுல மாநிலங்களைப் பொறுத்தவரை ஆலைத் துணி உற்பத்தி அதிகம், விசைத்தறித் துணி உற்பத்தி அதிகம்; கைத்தறித் துணி உற்பத்தி குறைவு என்ற நிலைமை இருக்கிறது. அது நம்மைப் பாதிக்கிறது. அண்மையில் தென் மாநில அமைச்சர்கள் சேர்ந்து பரிகாரம் காண வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலம், கம்யூனிஸ்டு கட்சி ஆளுகின்ற மாநிலம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற நம்முடைய மாநிலம் ஆகிய அனைத்துக் கட்சிகளும் ஒரே கருத்தைச் சொல்லுகிறார்கள். அவ்வப்போது பிரதம அமைச்சரையும், நிதியமைச்சரையும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் கண்டு ஒவ்வொருவராகப் பார்த்து எல்லோரிடத்திலும் கூறி ஒட்டுமொத்தமான பொதுவான கோரிக்கையாக எழுப்பினோம்.

இது நமக்குப் புதிது அல்ல. நம்முடைய சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி நண்பர்களிடத்தில், ஆளும் காங்கிரஸ் கட்சி நண்பர்களிடத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

இதிலே அரசியல் கட்சி வேறுபாடு இல்லை என்று நம்முடைய நிதியமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறோம், அப்போது அவர் தொழிலமைச்சராக இருந்தார். இதிலே ஏதேனும் கான்ட்ரவர்சி இருக்குமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். அனைத்துக் கட்சிகளும் விரும்புகிற கொள்கையைக் கூட நம்மால் நிறைவேற்ற முடியவில்லையே என்னும்போதுதான் வருத்தமாக இருக்கிறது.

அந்த அமைச்சரிடத்தில் சொல்லும்போது இந்தச் சட்டத்தைத் தமிழ் நாட்டுக்கு மட்டுமாவது பயன்படுத்திக்கொள்ளுகிறோம். பம்பாயிலுள்ளவர்கள் குஜராத்திலுள்ளவர்கள், அங்குள்ள ஆலை முதலாளிகள் எதிராக இருக்கிறார்கள் என்றால், எங்கள் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய அனுமதி கொடுங்கள் என்று கேட்டுப் பார்த்தோம். நடக்கவில்லை

பிரதம அமைச்சரிடத்தில் பேசியிருக்கிறோம். நான் எப்போதும் கைத்தறியின் பக்கத்தில் இருக்கிறேன் என்று சொன்னார்கள். மிகுந்த மகிழ்ச்சியோடு சொன்னார்கள். பிரதமர் பொறுப்பை ஏற்றவுடன் எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் எந்தெந்த மாநிலச் சட்டமன்றம் விரும்புகிறதோ அவர்கள் சட்டம் கொண்டு வரலாம் என்று கடிதம் எழுதினார்கள். அதைப் பிரதம அமைச்சருக்கு நினைவுபடுத்தினோம். 'நீங்களே கடிதம் எழுதியிருக்கிறீர்கள். அதையொட்டி அந்த அடிப்படையில் சட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்தினோம். சிரித்துக் கொண்டிருந்தார்கள். என்ன ஆகப் போகிறது என்று தெரியவில்லை.

**திரு. செ. அரங்கநாயகம்:** தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படி ஒரு நிலைமை ஏற்படுமேயானால் வட நாட்டு ஆலைத் துணிகளுக்குத் தமிழ்நாடு சந்தையாகிவிடும் முயற்சியாக அது ஆகிவிடாதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்தத் துணிகள் நம்முடைய மாநில எல்லைக்குள் வரக் கூடாது என்று சட்டத்தில் போட்டிருக்கிறோம். அதைப் படித்துப் பார்த்திருந்தால் இந்தக் கேள்வியே எழுந்திருக்காது.



கைத்தறித் துறையிலுள்ள பிரச்சினையைத் தீர்க்க நூல் உடனடியாகக் கொடுக்க வேண்டும். குறைந்த விலையில், தேவையான அளவு கொடுக்க வேண்டும். ஆலைக்குக் கொடுக்கின்ற நூல் விலைக்கும், விசைத்தறிக்குக் கொடுக்கின்ற நூல் விலைக்கும், கைத்தறிக்குக் கொடுக்கின்ற நூல் விலைக்கும் ஏற்றத் தாழ்வு இருக்க வேண்டும். கைத்தறிக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்கச் செய்யவேண்டும். இதைத் தான் மொத்தமாக எல்லா மாநில அமைச்சர்களும் சேர்ந்து வற்புறுத்தி இருக்கிறோம்.

சிவராமன் குழு தெரிவித்திருப்பது போல் அகில இந்திய அளவில் நூற்பாலையிலே இருந்து 62½ சதவிகிதம் நூல் கைத்தறிக்குத் தேவையாக இருக்கிறது. மாநில அரசோ அல்லது மத்திய அரசோ அதைக் கையகப்படுத்தி கைத்தறிக்கு ஒதுக்க முடியாத நிலை இருந்து வருகிறது. எப்படி சர்க்கரை சாதாரண மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோமோ அதேபோன்று நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க சலுகை காட்ட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-30)

இது முதற்கட்டமாக கைத்தறிக்குச் செய்ய வேண்டும். அடுத்த கட்டமாக கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்கள் மத்திய சர்க்காரின் ஒரு ஆணையின் மூலமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சட்டபூர்வமாக பாராளுமன்றத்திற்கும் மாநிலங்களுக்கும் அதிகாரங்கள் இருந்தும் சட்டம் ஆக்கப்படவில்லை. இதற்கு 'ஸ்டாசுடரி புரொட்டெக்ஷன் பார் ரிசர்வேஷன்' கொடுத்தால் ஒழிய கைத்தறிக்கு விமோசனம் இல்லையென்று இரண்டாவது கருத்தை வலியுறுத்தியிருக்கிறேன். இக்கருத்து அனைத்து இந்திய கட்சிகளுக்கு ஒத்து இருந்தும் மத்திய சர்க்கார் இதற்கென ஒரு சட்டத்தை நிறைவேற்றாமல் இருக்கிறது. இவ்வாறு பரிகாரம் கண்டாலொழிய கைத்தறித் துறையில் நமக்கு விமோசனம் இல்லை. இதற்கான ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சியினரும் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்று நினைவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை அனுமதியுடன் நேரத்தை சற்று நீட்டிக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கூட்டுறவுத் துறையில் அரசியல் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது என்று பெரும்பாலும் சொல்லப்பட்டது. இது ஒவ்வொரு ஆட்சியிலும் சொல்லப்படுகிற

கருத்து. இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். எல்லோரும் சேர்ந்து கூட்டுறவுத் துறையை வளர்க்க வேண்டும். தனிப்பட்ட அரசியல் கட்சி என்ற நிலையில்லாமல் எல்லோரும் கூட்டாக வளர்க்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது.

இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கூட்டுறவுத் துறை மிக அதிகமான அளவுக்கு விரிவாக்கி வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. விவசாயத் துறையில் 1965-66-ல் ரூ. 30 கோடி குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன் என்று இருந்தது. இது ரூ. 100 கோடிக்கு வரவேண்டுமென்று திட்டமிட்டு சென்ற ஆண்டில் 1973-74-ல் 78 கோடி ரூபாய் கிட்டத்தட்ட 250 சதவிகிதம் உயருகிற அளவுக்கு விரிவான அளவில் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் இந்தத் துறை வெற்றி பெற்றிருக்கிறது. அகில இந்தியாவில் நம்முடைய மாநிலத்தில் தான் 7.8 சதவிகிதம் 'ஓவர்டியூஸ்' பாக்கியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாக நம்முடைய மத்திய வங்கி 'ஏ' பிரிவு வங்கி என்று ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொண்டிருக்கிறது.

1966-67-ல் 42 கிளைகள் என்று இருந்ததை 328 கிளைகளாகக் கொண்டு வந்து மாநிலம் முழுவதும் விவசாயிகள் உடனடியாக கடன் பெறுகிற முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறோம். அதைப் போல நீண்ட காலக் கடன் ஏராளமாகக் கொடுக்க வேண்டுமென்று எல்லாத் தரப்பினரும் வற்புறுத்தியிருக்கிறார்கள். 1966-67-ல் ரூ. 3.4 கோடி நிலவள வங்கியின் மூலமாக நீண்ட காலக் கடன் கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்பட்டது. சென்ற ஆண்டில் கிட்டத்தட்ட ரூ. 20½ கோடி கொடுத்திருக்கிறோம். இந்த அளவுக்கு 8 அல்லது 9 மடங்கு அதிகமாகக் கொடுக்கிற முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறோம்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நிலையெல்லாம் ரிசர்வ் வங்கி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து ஒரு சட்டத்தைப் போட்டு கிணறுக்குக் கிணறு இடையே உள்ள தூரம் அதிகமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மத்திய சர்க்கார் நிதி அமைச்சரிடம் வாதிட்டேன். மத்திய சர்க்கார் இதற்கென ஒரு குறிப்பு கேட்டார்கள். அதைக் கொடுத்து



வந்திருக்கிறோம். ரிசர்வ் வங்கியின் அதிகாரிகளை இதுபற்றி வாதிக்க அனுப்பி வைக்கிறோம் என்று சொன்னார்கள். ஏற்கனவே வாதிட்டும் நடக்கவில்லை என்று சொன்னேன். மத்திய சர்க்கார் ரிசர்வ் வங்கியின் அதிகாரிகளை அனுப்புகிறோம். அவர்கள் முன்னால் வாதிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வாதத்தின் மூலம் நல்லகாலம் தமிழ் நாட்டிற்குப் பிறக்கும் என்ற நம்பிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: வாதிக்கிறேன் என்று சொல்லு கிறீர்கள். உங்கள் கருத்தையும் சொல்லுங்கள். 400 அடிக்கு இடையில் கிணறுகள் தோண்ட வசதி செய்கிறோம். அது ஓர்ல்டு பேங்கின் டேர்மா? அதை ரிசர்வ் வங்கி மாற்றுமா? அது டெக்னிகல் ஒப்பினியனா? இவைகளால் வந்துவிட்டது என்று சொன்னால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே சட்டசபையில் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். பத்திரிகையில் வந்திருக் கிறது. முக்கியமாக இவ்வளவு இடைவெளி இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஓர்ல்டு பாங்க் சொன்னது. அதை ரிசர்வ் பாங்க் ஏற்றுக் கொண்டு அவர்களுடைய கடன் மாத்திரம் அல்ல; நம் முடைய சொந்தப் பணம் கொடுத்தாலும் வலியுறுத்துகிறார்கள். அதை 'சையின்டிபிக்' ஆக ஆட்சேபிக்க முடியாது. அமல் நடத்துவதற்கு முடியவில்லை.

திரு. கோவை செழியன்: ஐ.நா. சபையிலிருந்து 'அன்டர் கிரவுண்டு வாட்டர்' பற்றிய 'சப் சாயில்' சம்பந்தமாக ஒரு சர்வே நடைபெற்று அந்த சர்வே ரிப்போர்ட் ஐ.சி.-ஆருக்கு அனுப்பப்பட்டு புத்தகமாக வெளிவந்தது. நான் படித்துப் பார்த்தேன். அதில் இடைவெளி என்று தமிழ்நாட்டில் குறிப்பிட்டது தவறானது என்று விஞ்ஞானிகள் சொல்லியிருக் கிறார்களே இதை எடுத்து வைத்தாவது ரிசர்வ் வங்கியிடம் வாதிடக் கூடாதா என்று ஏற்கனவே பேசியிருக்கிறேன். அதற்கு அமைச்சர் விளக்கம் தரவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தவறு என்று சொல்லி யிருப்பதாகத் தெரியவில்லை. எல்லா விஞ்ஞானிகளுக்கும் இது போன்ற ஒரு முறை இருக்க வேண்டும் என்பதில் ஆட்சேபனை இல்லை. நாம் சொன்ன கருத்து தமிழ்நாடு முழுவதும் சர்வே

[திரு. செ. மாதவன்] [1975 மார்ச் 24

செய்து எங்கெங்கு 'வாட்டர் பொட்டன்ஷியல்' இருக்கிறது என்று கண்டுபிடித்து அந்த இடங்களில் கிணறுகள் தோண்டினால் தண்ணீர் கிடைக்கும் என்பதில் எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. விஞ்ஞானிகளும் ஒன்றும் சொல்லவில்லை. இது தான் பிரச்னையாக இருக்கிறது. இடைவெளி இத்தனை அடி என்பதற்குப் பதிலாக வாட்டர் பொட்டன்ஷியல் என்ற கருத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு எங்கெங்கு நிபுணர்கள் தண்ணீர் இருக்கிறது என்று ஒத்துக்கொண்டாலும் அங்கே இடைவெளி என்ற பிரச்னை இல்லாமல் அனுமதி தந்து விடுங்கள் என்று வலியுறுத்துகிறோம். இதைத் தான் மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதை ஒத்துக் கொண்டால் பிரச்னையே இல்லை.

ஓர்ல்டு வங்கி நண்பர்களை மாநில வங்கித் தலைவர்களுடன் அழைத்துக் கொண்டு கிணறுகளைக் காட்டச் சொன்னேன். அவர்கள் சென்றபோது 300 அடி இடைவெளி உள்ள இடங்களில் தண்ணீர் இல்லாததையும், 50 அடி இடைவெளிக்குள் ஏராளமாகத் தண்ணீர் இருப்பதையும் பார்த்தார்கள். ஆகவே, உங்களுடைய முறை இந்த நாட்டுக்கு ஏற்ற முறை அல்ல என்று அனுபவ ரீதியாக விஞ்ஞானிகள் கண்டாலும் அதன் அடிப்படையில் வாதங்கள் எப்படியிருந்தாலும் நடைமுறையில் இதில் சிக்கல் இருக்கிறது.

டிடெயில்டு சர்வே தமிழ் நாடு முழுவதும் செய்து ஒவ்வொரு இடத்திலும் தண்ணீர் இருக்கிறதா என்று கண்டு பிடிக்க வாய்ப்பு ஏற்பட்டிருந்தால் சரியாக இருந்திருக்கும். அவர்களுடைய இடைவெளி என்ற முறையை மாற்றி வாட்டர் பொட்டன்ஷியல் இருக்கிறது என்று சொல்லப்பட்டால் தமிழ்நாடு முழுவதும் 29 ஆயிரம் கிணறுகள் வெட்ட வாய்ப்பு இருக்கிறது என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எவ்வளவு என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும் வெட்டுகிற கிணறுகளுக்கு இவ்வளவு இடைவெளி இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த முரண்பாடு நீடிக்காமல் எங்கெங்கு கிணறுவெட்ட வாய்ப்பு இருக்கிறதோ அதற்கு அனுமதி கொடுங்கள் என்பது தான் நமது வாதம். அதை மத்திய சர்க்கார் நிதி மந்திரி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். இதில் பெய்லூர் ஆப் வெல்ஸ் இருக்கலாம். அதை வற்புறுத்தக் கூடாது என்று எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்.



1975 மார்ச் 24]

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நிதி அமைச்சர் ஏற்றுக் கொள்வதற்கு பதில் ஓர்ல்டு பாங்க் ஏற்றுக் கொண்டால் வசதியாக இருக்கும் அல்லவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய வாதங்களை ஓர்ல்டு பாங்கின் முன் வைப்பது என்ற திட்டத்தை அவர்களிடம் சொல்லி அதற்காகப் பணம் கொடுத்து அந்தப் பணம் முழுவதும் தமிழ் நாட்டில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் ரிசர்வ் வங்கி கொடுக்கிறது. ஏ.ஆர்.சி. கொடுக்கிற பணமாக இருந்தாலும், நம்முடைய மாநில நிலவள வங்கி சொந்தப் பணம் கொடுப்பதாக இருந்தாலும் ரிசர்வ் வங்கியின் அனுமதி வாங்க வேண்டும். ரிசர்வ் பாங்கின் சட்டம் அவ்வாறு இருக்கிறது. இதை மறைக்க வேண்டியதில்லை.

ரிசர்வ் பாங்க், மத்திய அரசு என்று சொன்னால் பயந்து விடக் கூடாது. நிதியமைச்சர் என்று சொன்னால் பயப்படக் கூடாது. நிதி அமைச்சர் நம் அமைச்சர், தமிழ் நாட்டுக்கு நன்மை செய்வார் என்ற நம்பிக்கையுடன் கூறுகிறேன். நம்முடைய மத்திய வங்கி மேலும் கடன் கொடுக்கும் ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு அதிக சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள முயற்சித்திருக்கிறோம். அதற்கு ஒரு பாஸ் புக் கொடுத்து விவசாயி ஒவ்வொருவரும் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தை நம்பாமல் தானே சொந்தமாக செக் எடுத்துக் கொண்டு வங்கிக்குச் சென்று கடனைப் பெற முடியும் என்ற புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இது விரிவாக்கப்படுகிறபொழுது கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தவறுகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு, அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்குமென்று நம்புகிறேன்.

அதைப்போல் கிணறுகள் வெட்டுவதில் 2, 2½ ஏக்கருக்குக் குறைவாக உள்ள ஏழை விவசாயிகள் கிணறுகள் வெட்ட முடியாத நிலைமையை மாற்றி அமைக்க ஒரு புதிய திட்டத்திற்கு ரிசர்வ் வங்கியிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அவரவர்கள் பகுதியில் ஒவ்வொரு கண்மாயிலும் பொதுக் கிணறு ஊராட்சி ஒன்றியமே வெட்டி அதற்குள்ள பணத்தை நிலவள வங்கியே கொடுத்து விவசாயிகளிடமிருந்து வசூலித்துக் கொடுக்கிற ஒரு முறையை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அது வருமானால், பல பிரச்னைகள் தீர்க்கப்பட்டு, சாதாரண விவசாயிகளுக்கு, நிலம் குறைவாக உள்ள

விவசாயிகளுக்கு பொதுக்கிணறு திட்டம் மூலமாக, பஞ்சாயத்து யூனியன் மூலமாக கிணறு வெட்டிக் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுப் பிரச்னை பற்றி யாரும் அதிகம் பேசவில்லை. எல்லோருக்கும் ஓரளவிற்கு ஒரு மன நிறைவு ஏற்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். இந்த உணவுப் பிரச்னையை நல்ல வகையில் தீர்க்கவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. கடைசியாகப் பசி எடுக்கும் நேரத்தில் உணவுப் பிரச்னை வருகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 42 லட்சம் குடும்பங்களுக்கு உணவு அளிக்கிறோம். குறிப்பாக, நாம் எல்லோருக்கும் உணவு கொடுக்கிறோம். ஒவ்வொருவருக்கும் தேவையான அளவு உணவு கொடுக்கப்படவில்லை என்பது தான் குறை. இதை யாரும் மறுக்க முடியாது. நம்மிடத்தில் இருப்பதை வழங்குகிறோம். எல்லோருக்கும் கொடுக்கும் அளவில் கிடைக்குமானால், மத்திய அரசாங்கம் கொடுக்கும் வாய்ப்பு இருக்குமானால், இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது மாதம் தோறும் 56,000 டன் அரிசியும், 51,000 டன் கோதுமையும், 13,000 டன் சிறு தானியமும் வழங்கும் வாய்ப்பைப் பெற்று இருக்கிறோம். இன்னும் அதிகமாக வழங்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசாங்கத்தில் கையிருப்பில் இல்லாவிட்டாலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தாவது கொடுக்க வேண்டும். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒன்றாக, ஆளும் காங்கிரஸ் உள்பட, அவர்கள் நிதி அமைச்சர் கூடச் சொல்லி விட்டார், தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரே நிலையில் ஒருமித்த குரலாக—எப்படி கோதுமை வாங்கித் தரப்படுகிறதோ அதேபோல் அரிசி வாங்கித் தரவேண்டுமென்று—எல்லோரும் சேர்ந்து பேசுவதால் மத்திய அரசும் அதை கவனிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ப்ரோக்யூர்மென்ட் பற்றி எல்லோரும் குறைபட்டுக் கொண்டார்கள். விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குகிற நிலை எப்போதுமே கஷ்டமான நிலை. இது எந்தக் காலத்திலும் இருக்கும். மார்க்கெட்டிங் சர்ப்ளஸ் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். அது இன்னும் ரொம்ப பயங்கரமான நிலைமையை அரசாங்கத்திற்கு உருவாக்கும். இவ்வளவு கட்டுப்பாடு இருந்தாலும்





நம்முடைய தேவைக்கேற்ற அளவுக்கு நம்மாலே இன்னும் நெல், அரிசி வாங்க முடியவில்லை. ஆங்காங்கே ஏதாவது சங்கடங்கள் ஏற்பட்டாலும், விவசாயப் பெருங்குடி மக்கள் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து, கொள்முதலை வெற்றிகரமாக நடத்தித் தருவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அரசியல் கட்சிகள் ஆங்காங்கு குறை இருந்தாலும் அதைப் பெரிது படுத்தாமல், விவசாயப் பெருங்குடி மக்களை கொடுக்கவேண்டுமென்று கருத்து சொன்னால், அந்தக் குறைகள் நாளடைவில் மறைந்துவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வாங்குகிற விலைக்கும், விற்கிற விலைக்கும் அதிக வித்தியாசம் விலையில் இருக்கக் கூடாது என்று எல்லோரும் சொன்னார்கள். அதை ஏற்றுக் கொள்கிறேன். அதற்காகும் செலவை கணக்கிட ஒரு 'காஸ்ட் ஒர்க்ஸ் அக்கௌன்டென்ட்' போட்டு இருக்கிறோம். அவர் அவற்றை ஆராய்ந்து எவ்வளவு விலை நிர்ணயிக்கலாம் என்று அரசுக்குச் சொல்கிறாரோ அது நிர்ணயிக்கப்படும். எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க முயற்சிக்கப்படும். முன்பு இருந்த விலையைவிட நாம் அதிகம் விற்கிறோம் என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். அது தவறு. அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொள்முதல் ரூ. 42 எப்படி விற்றிருக்கிறார்கள் என்றால், 80 பைசா என்று விற்று இருக்கிறார்கள். இன்று ரூ. 89 கொடுக்கிறோம். இரண்டு மடங்கிற்கு மேல் கொடுக்கிறோம். விலையும் இரண்டு மடங்கிற்கு மேல் இருக்க வேண்டும். இன்று சில செலவுகள்—லாரி ப்ரெயிட் போன்ற போக்குவரத்துச் செலவு—நிர்வாகச் செலவு எல்லாம் பல மடங்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், நாம் விற்கிற விலை அதிகமாக இல்லை. ப்ரொபோர்ஷனேட்டாகப் பார்க்கப்போனால், அந்தக் கட்சி இந்தக் கட்சி என்று பார்க்காமல், இன்று விற்கும் ரேட் அதிகம் இல்லை. இது உண்மை. இருந்தாலும் குறைப்பதற்குண்டான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்ற கருத்தை நான் மறுக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுத் துறையைப் பற்றி யாரும் அதிகம் சொல்லவில்லை. கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்களும் உணவுத்துறையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அதை மிகமிக விரிவுபடுத்த வேண்டும், சீரமைப்புச் செய்ய வேண்டும், சிறப்பாக நடத்த வேண்டும்

என்பது தான் எல்லோருடைய கருத்தாகும் என்று நினைக்கிறேன். ஆங்காங்கு தவறு இருந்தாலும், அவைகள் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது தான். இதிலே அரசியல் கட்சி வேறுபாடு இருக்காது. எல்லாக் கட்சிகளும் நிர்வாகம் ஒழுங்காக நடக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் நான் இந்தக் குறைபாடுகளைச் சொல்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், அதிக லாபம் சம்பாதிக்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது. ஆண்டுக்கு 5 லட்சத்திற்கு மேல் லாபம் இல்லை. லாப நஷ்டம் இல்லாத முறையில் நடக்க வேண்டும். அதிக லாபம் என்கிற கருத்து வலுப்பட்டு விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நிர்வாகச் செலவு அதிகமாகிறது என்று சொன்னார்கள். இப்போது 1 லிருந்து 2 சதவிகிதம் தான் நிர்வாகச் செலவு ஏற்படுகிறது. அதை அதிகச் செலவு என்று சொல்லிவிட முடியாது. அரசாங்கம் எடுத்துக் கொண்டால் சிலருக்குச் சம்பளம் அதிகம் கொடுக்கலாம். அதையெல்லாம் யாரும் மறுத்துவிடக் கூடாது. நிர்வாகச் செலவைக் குறைக்க வேண்டுமென்பதில் நான் கருத்து வேறுபாடு கொண்டவன் அல்ல. இப்போது 24.06 லட்சம் நிர்வாகச் செலவு வரும் என்று கணக்குப் போட்டு இருக்கிறோம். நிர்வாகச் செலவு அதிகம் இல்லாது பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லி, உணவுத் துறையைப் பொறுத்தவரை, நல்ல சிறப்போடு நடக்க வேண்டுமென்று, நல்ல எண்ணத்தோடு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கோரி, இதிலே கொடுத்து இருக்கும் வெட்டுத் தீர்மானங்களில் கொண்டுள்ள கருத்துக்களை மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்க உறுதி கூறியிருக்கிற காரணத்தால், அதை வற்புறுத்த வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது 42 லட்சம் குடும்பங்களுக்கு நியாயவிலைக் கடையில் அரிசி, கோதுமை வழங்கப்படுவதாகக் கூறினார்கள். வறட்சிப் பகுதிகளில் எல்லாக் குடும்பங்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி கோதுமை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் மட்டும் பல இடங்களில் கொடுக்கப்படுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் கொடுக்கப் படவில்லை. தருமபுரி, திருச்சி ஜில்லாக்களில் கொடுக்கப்படவில்லை.



ஒரு மணி கோதுமை கூட கொடுக்கப்படவில்லை. அவையெல்லாம் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் நியாயவிலையில் பொருள்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வாரம் ஒரு நபருக்கு 2 கிலோ கோதுமை, அரிசி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 42 லட்சம் குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதிலிருந்தே இன்னும் குடும்பக் கார்டுகள் கொடுக்க வேண்டுமென்று தெரிகிறது. வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கொண்டு—நெசவாளர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்கள் வாழும் பகுதிகளைக் கணக்கிட்டு, அவர்களுடைய தேவை என்ன என்பதை கணக்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். 51,000 டன். கோதுமை இப்போது கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இன்னும் அதிகமாக கோதுமை வருமானால் கொடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உணவு விநியோகத்தில் முடிந்த வரை பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுங்கள். உணவுப் பொருள் வினியோகத்தை அவர்கள் மூலம் செய்ய முயற்சி எடுத்தால் பல குறைபாடுகளைத் தீர்க்க முடியும். ஆகவே, பெண்கள் இப்படிப்பட்ட கன்சுமர் கோவாபரேடிவ் சொசைடி ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள்—கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் இருக்கிறார்—உணவுத் துறை அமைச்சராகவும் இருக்கிறார்—ஊக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெண்கள் தவறே செய்ய மாட்டார்கள் என்று அம்மையார் அவர்கள் கூறியது மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்களே முன் நின்று நடத்துவார்கள் என்று விருப்பம தெரிவிக்கவும் ஆசைப்படுகிறேன். இது பற்றி நம்முடைய அரசு ஒரு அறிக்கை விட்டு அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்து இருக்கிறது. குறிப்பாக பெண்களுக்கு என்று குறிப்பிட்டு, அந்தந்த இடங்களில் உள்ள மக்கள் முன்வருவார்களானால் அந்த இடத்தில் உடனடியாக ஒரு கூட்டுறவுச் சங்கம் துவங்க முழு ஒத்துழைப்புத் தருகிறோம் என்று சொன்னோம். அந்தச் சங்கத்தின் மூலம் விநியோகம் செய்ய வேண்டுமென்பது தான் அரசின் நோக்கம். அதைப் படித்துவிட்டு, அந்த நினைப்பில் பேசியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

[1975 மார்ச் 24

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, வருமான உச்சவரம்பு இல்லாது எல்லோருக்கும் உணவு விநியோகம் செய்ய வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் விட்டேன், அதற்கு அமைச்சர் அவருடைய கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** முன்பு ரூ. 300 வரை என்று இருந்தது. இப்போது ரூ. 500 வரை என்று உயர்த்தி இருக்கிறோம். 500க்கு மேல் உள்ளவர்களுக்கு கோதுமை கொடுக்க வேண்டுமென்று முயற்சி எடுத்து இருக்கிறோம். 42 லட்சம் குடும்பக் கார்டுகளுக்கு அரிசி கோதுமை கொடுக்கிறோம். 75 லட்சம் குடும்பங்களுக்கு கோதுமை கொடுக்கிறோம்.

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, கிராமங்களில் உள்ளவர்களுக்கு உணவுப் பண்டங்கள் தருகிறார்கள், அதிலே அரிசிக்குப் பதிலாக புஞ்சை தானியங்கள் தருகிறார்கள். வெளி மார்க்கெட்டில் விற்கும் விலையை விட அங்கே அதிகமாக விலை இருக்கிறது. அது மட்டுமல்ல, கோதுமை வாங்க வேண்டுமென்றால், புழுத்துப்போன சோளம் வாங்கினால் தான் கோதுமை தருவேன் என்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** புஞ்சை தானியங்கள் வெளி மாநிலத்திலிருந்து வாங்குகிறோம். ஆகவே, விலை சற்று அதிகமாக இருக்கலாம். ஆனால் கோதுமை வாங்கினால் தான் மற்ற பொருள்கள் தருவோம் என்று சொல்லக் கூடாது, அப்படி வற்புறுத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMI: In the drought affected areas of Dharmapuri district, rice and millets have not been issued. May I know from the Hon. Minister whether rice and millets will be distributed in the drought affected areas of Dharmapuri district?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய பேச்சிலேயே சொன்னார்கள். தருமபுரி மாவட்டத்திற்கு ஏராளமான சரக்குகள் வந்து கொண்டு இருக்கின்றன, கஷ்டமில்லை என்று சொன்னார்கள். அதை அவர் புரிந்து கொண்ட காரணத்தால் அதைப் பற்றி நான் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது.



1975 மார்ச் 24]

**திரு. கே. எ. வகாப்:** விவசாயிகள் லெவி கொள்முதலுக்கு நெல் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொன்னால் நெல் விலை குறைவாக இருப்பதால்தான் அந்த நிலை ஏற்படுகிறது. ஆகவே, நெல் விலையை அரசாங்கம் அதிகமாக அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதுபற்றி குழப்பமான பிரச்சினைகள் கூறப்படுகின்றன. ஆனால் சட்டமன்றத்தில் எல்லாக் கட்சிகளும் ஒரே கருத்தைக் கொண்டிருக்கிறோம். இதில் மத்திய அரசின் ஒத்துழைப்போடுதான் நெல் விலையை உயர்த்த முடியும். மத்திய அரசு நெல் விலையை உயர்த்த அனுமதித்தால்தான் உயர்த்த முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

அடுத்து வாக்கெடுப்பு.

திருவாளர்கள் கே. என். குமாரசாமி, ஜே. ஜேம்ஸ், பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டவைவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,92.78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், கே. என். குமாரசாமி, ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. கே. எ. வகாப், திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,38.95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்",

[1975 மார்ச் 24

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் ஏ. சுவாமிநாஸ், பெ. சௌந்தரபாண்டியன், கே. என். குமாரசாமி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. எ. வகாப், கே. டி. கே. தங்கமணி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,58,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் கே. என். குமாரசாமி, ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. ஏ. வகாப், சோ. அழகர்சாமி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும்—துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,94,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



1975 மார்ச் 24]

திருவாளர்கள் கே. என். குமாரசாமி, ஜே. ஜேம்ஸ் ஆகியோர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. எ. வகாப், கே. டி கே தங்கமணி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,49,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,61,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்** : திரு. கோவை செழியன் அவர்களின் பேச்சின் பகுதிகளை ஆராய்ந்து அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க முடிவு சொல்வதாக முன்பு அறிவித்தேன். அந்தப் பகுதிகள் * என்ற பகுதியையும் * என்ற வார்த்தையையும், * என்ற பகுதியையும், * என்ற பகுதியையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.56 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

### (6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders*

'NIL'

### B. *Reports, Notifications and Other Papers*

@ 102. Review of the Progress made in Co-operative Development Schemes, 1974–75 (Tamil).

@ 103. Policy Note on Demand No. 56—Miscellaneous Capital Outlay—(Craftsmen Training Schemes)—(Tamil).

@ 104. Policy Note on Department of Approved Schools and Vigilance Service 1975–76 (Under Demand No. 14) (English and Tamil).

@ 105. Policy Note on subsidised Housing Schemes for Industrial Workers and Tamil Nadu Government Servants' Rental Housing Scheme, 1974–75 (English and Tamil).

@ 106. The Tamil Nadu Gaming (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 8 of 1975).

% 107. Notice of Demands for Further Grants during the year 1974–75 (English and Tamil).

@ 108. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1974–75 (English and Tamil).

% 109. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister Presenting the Final Supplementary Estimates for the year 1974–75 (English and Tamil).

---

@ Despatched to members on 21-3-1975.

% Laid on the table of the House on 22-3-1975.

# தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

---

செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 25

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

*Shift system in Schools and Colleges.*

*446 *Q.*—Thirumathi T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) the number of Colleges and High Schools in this State in which the shift system was introduced during 1972—73 and 1973–74; and

(*b*) the expenditure incurred on that account during those years?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> தலைவர் அவர்களே,

| | 1972–73. | 1973–74 |
|---|---|---|
| (அ) கல்லூரிகள் | இல்லை. | இல்லை. |
| உயர்நிலைப்பள்ளிகள் | 26 | 23 |

(இ) இதற்காகத் தனிச் செலவு ஏற்படவில்லை.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி:</u> மதுரை சட்டக் கல்லூரியில் இம் மாதிரி ஷிப்ட் சிஸ்டம் இப்பொழுது அமுலாகியிருக்கிறதே அதனுடைய அனுபவம் என்ன?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> அதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரக் குறிப்புக்களைத் தரலாம். உயர்நிலைப்பள்ளிகளில் மாத்திரம் வகுப்புகளைப் பிரிப்பதன் காரணமாக ஷிப்ட் முறை வைத்திருக்கிறோம். அதற்காகத் தனிச் செலவு ஏற்படவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, சில தனியார்க் கல்லூரிகளில் ஷிப்ட் முறை அனுசரிக்கப்படுவதாகத் தெரிகிறது. அனேக கல்லூரிகளில் தற்போது இட நெருக்கடி இருப்பதால் அங்கெல்லாம் இப்படிப்பட்ட ஷிப்ட் முறையைக் கொண்டுவர அரசு உத்தேசிக்குமா? உயர்நிலைப்பள்ளிகளிலும் இப்படிப்பட்ட முறையைக் கொண்டுவந்தால், புதிய பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு ஆகும் கட்டடச் செலவைத் தவிர்க்க அரசுக்கு வசதியாக இருக்குமல்லவா? ஆகவே, ஷிப்ட் முறையை விரிவுபடுத்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஷிப்ட் முறை வருவதை அரசு ஆதரிக்கிறது. இட நெருக்கடி காரணமாக அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படும்போது எந்த உயர்நிலைப்பள்ளியோ, எந்தக் கல்லூரியோ ஷிப்ட் முறை வைக்க முன்வருமானால், அதற்கு ஆதரவு தரும் வகையில் அரசு இருக்கும். வகுப்புகளைப் பிரித்து, அதிகமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், அதற்கும் அரசு அனுமதி அளிக்கும்.

திரு. கு. காமாட்சி : எல்லாக் கல்லூரிகளிலுமே ஷிப்ட் முறையைக் கொண்டுவராவிட்டாலும் மாலை நேரக் கல்லூரிகளிலாவது தொழிலாளர்கள் நிறைந்த பகுதியில் அவர்கள் கல்லூரிப் படிப்பு படிப்பதற்காக, ஷிப்ட் முறையைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் குறிப்பிட்ட இடத்தில் போதுமான எண்ணிக்கை மாணவர்கள் வரக்கூடிய வாய்ப்பு வசதி இருந்தால், அதுபற்றி விண்ணப்பிப்பார்களானால், அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : பி.காம்.—க்கு அதிக டிமாண்டு இருக்கிறது. உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்கள் திறமையை வளர்த்துக்கொள்ள வசதியாக பி.காம். படிப்புக்கு ஷிப்ட் முறையைக் கொண்டுவர சென்னை பல்கலைக்கழகத்தில் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஷிப்ட் சிஸ்டம் இட நெருக்கடியைப் பொறுத்து வருகிற ஒன்று. பி.காம். வகுப்புகளைப் பல்கலைக்கழகத்தின் அனுமதியின்பேரில் பல்வேறு கல்லூரிகளில் நிறுவ வேண்டியிருக்கிறது. அதற்குப் போதுமான ஆசிரியர்களை உருவாக்கும் தன்மையைப் பொறுத்து பல்கலைக்கழகம் அனுமதி அளித்து வருகிறது. இட நெருக்கடியைப் பொறுத்து அந்த நிலைமைகள் ஏற்படவில்லை. சில குறிப்பிட்ட கல்லூரிகளில் போதுமான அளவு இட வசதி இல்லாத காரணத்தால் மேல் பட்டப் படிப்பு போன்றவைகளுக்கு அனுமதி தருவது இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் எந்தக் கல்லூரியாவது ஷிப்ட் முறையை வைக்க முன்வந்தால் அரசு அதற்கு ஆதரவு அளிக்கும்.



## அரசு உயர்நிலைப்பள்ளி மேலத்திருப்பூந்துருத்தி.

*447. வினா.—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மேலத்திருப்பூந்துருத்தி அரசு உயர்நிலைப்பள்ளிப் புதிய கட்டடத்திற்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) இணைமானியத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு மேற்படி தொகை நிர்வாகப் பொறியாளருக்கு செலுத்தப்பட்டு கட்டிட வேலை துவங்கப்படவுள்ளது.

## தொட்டபெட்டா—உதகை இழுவை ரயில்:

*448. வினா.—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுற்றுலாப் பயணிகளைக் கவர தொட்டபெட்டா சிகரத்திற்கும், உதகை நகருக்கும் இடையே இழுவை ரயில் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

இல்லை.

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, தொட்டபெட்டா சிகரத்திற்கும் உதகை நகரத்திற்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதையும் அதற்கிடையில் இழுவை இரயில் விட செலவு எவ்வளவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இழுவை இரயில் போடுவது என்பது, செங்குத்தான மலையாக இருந்து அதற்குப் போக வேண்டுமானால், அதற்கு இழுவை இரயில் போடலாம். உதகையிலிருந்து தொட்டபெட்டா மூன்றரை-நான்கு மைல் தூரம் இருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் இழுவை இரயில் போடுவதற்கில்லை. ஆனால்

அங்கே கம்பியின்மூலமாக ஏர்-சேர் என்னும் வகையில் அமைக்க ஏற்பாடு செய்யலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. அது பரிசீலிக்கப்பட்ட வகையில், 30 இலட்ச ரூபாய்க்குமேல் ஆகும் என்று கருதியதன் காரணமாக, அதற்குரிய நிதித் தன்மையை அடிப்படையாக வைத்து செயற்குறிப்பு கைவிடப்பட்டது. மீண்டும் பரிசீலிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மது விலக்கை மீண்டும் அமுல்படுத்தியதாலும், குதிரைப் பந்தயத்தை ஒழித்ததாலும் உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை ஈடு செய்யும் வகையில் இம்மாதிரி இழுவை இரயில் விடுவது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டும், இன்னும் இதுபோன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும், உதகையை உல்லாச இடமாக ஆக்க இனியாவது அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த எந்த வகையில் உதகமண்டலத்தை சுற்றுப் பயணிகளுக்கு ஏற்ற இடமாக மாற்றலாம் என்பதைப்பற்றியும், அதனைக் கவர்ச்சிகரமாக ஆக்க என்ன என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றியும் சுற்றுலாத் துறை ஒரு சர்வே நடத்தி வருகிறார்கள். அந்த முறையில்தான் மேல் கம்பி போட்டு, ஏர்-சேர் மூலமாக போக்குவரத்தை விரிவுபடுத்தி அதனை ஒரு கவர்ச்சியான இடமாக அமைப்பது குறித்து கருதிக்கொண்டிருக்கிறோம். முப்பது இலட்ச ரூபாய் செலவாகும் என்பதனால் திட்டம் கைவிடப்பட்டது. எனினும் மீண்டும் சுற்றுலாத் துறை அதைப்பற்றி பரிசீலிக்கும்படியாக அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த வகையில் உதகையை கவர்ச்சிகரமாக ஆக்கமுடியுமோ அதிலும், அங்கே வருகிறவர்களுக்கு வசதி வாய்ப்பை எந்த எந்த வகையில் அதிகரிக்க முடியுமோ அதை அதிகரிப்பதிலும் மேற்கொண்டு முயற்சிகள் மேற்கொள்வதில் அரசு முயன்று வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார் இப்போதுக்கூட வால்பாறையில் தேயிலை எடுத்துச் செல்ல இந்தமாதிரியான முறை கையாளப்படுகிறது. வெளிநாடுகளிலும் இம்மாதிரி வைத்து ரேஸ்டுகளை பெரிதும் கவரும் முறைகளைக் கையாண்டு உற்சாகப்படுத்துகிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் உதகை ஒரு முக்கியமான இடமாக இருப்பதால் அதுபற்றி மறு பரிசீலனை செய்து, வருகின்ற ஆண்டிலாவது மீண்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று இத்திட்டத்தை அங்கு கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் 1—10—1974 அன்று மகாபலிபுரத்தில் கூடிய சுற்றுலா வளர்ச்சிக் கூட்டத்தில் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பரிசீலனை செய்து எந்த அளவுக்கு செலவு ஏற்படும், எந்த முறையிலே நிறைவேற்றலாம் என்பது பற்றி அரசு ஆராயும்.





திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தற்போது கொடைக்கானலுக்கும் பழனிக்கும் இடையே இப்படிப்பட்ட ஒரு இழுவை ரயில் போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப்போலவே, ஜப்பான் போன்ற நாடுகளில் செய்யப்பட்டிருப்பதைப்போலவே; மேட்டுப்பாளையத்திலிருந்து மேலே செல்வதற்கு இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுத்தால் ஏராளமாக அந்நியச் செலாவணி ஈட்ட முடியும். ஆகவே, செலவு அதிகமாக இருந்தாலும் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுற்றுலாத் துறையில் அதுபற்றி செயற்குறிப்பு இல்லை. அவைகளை எல்லாம் நிறைவேற்றுவது நல்லதுதான். அதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நிதிவசதி. நிதி வசதி ஏற்படும்போதுதான் அவைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

### கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவமனை.

* 449 வினா.—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரியில் உள்ள ஒன்றிய மருத்துவமனையை அரசு மேற்கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, கொரடாச்சேரி தஞ்சை மாவட்டத்தில் ஒரு முக்கியமான பகுதியாக இருந்தும், இன்னும் ஊராட்சி ஒன்றிய மருந்தகமாக இருப்பதால் அதை விரிவு படுத்தவோ, மேலும் சிறப்பாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற முறையில் மருந்துகள் கொடுக்கவோ ஒன்றியத்தால் இயலவில்லை என்பதால் அதை அரசாங்கம் இனியாவது உடனடியாக எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒன்றியங்களால் நடத்தப்படுகின்ற இத்தகைய மருந்தகங்களில், மாவட்ட கழகத்தால் ஒரு காலத்தில் நடத்தப்பட்டு, அதற்குப் பின்னால் இந்த ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மருந்தகங்களை முதற்கட்டமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவுசெய்துள்ளது. அந்த வகையிலே தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 40,45 மருந்தகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு

ஆண்டுக்கும் 5,6 மருந்தகங்கள் எடுத்துக்கொள்வது என்ற முறையில் இதுவரையில் 18 அல்லது 20 மருந்தகங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. தொடர்ந்து நிதி வசதிக்கு எற்ப அதிக மருந்தகங்களை எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யும்போது கூடுமானால் இந்த மருந்தகத்தையும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆரம்ப சுகாதார நிலையம், காட்டாம்பூண்டி.

* 450 வினா.—திரு. எம் எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், காட்டாம்பூண்டி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இதுவரை வாகன வசதி அளிக்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 24—5—1972-ல் ஓர், வாகனம் காட்டாம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு யூனிசெஃப் (UNICEF) நிறுவனம் மூலம் மற்றுமொரு வாகனம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) வினாவுக்கு இடமில்லை.

போலி சர்டிபிகேட்டுகளுடன் வைத்தியத் தொழில் நடத்துவோர்.

* 451 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தய்வு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போலி சர்ட்டிபிகேட் வைத்து வைத்தியத் தொழில் நடத்தி வந்ததாக சென்னையில் யாராவது கைது செய்யப்பட்டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவ்விதம் கைது செய்யப்பட்டவர்களின் விபரம் என்ன ?



மாண்புமிகு திரு. க. அன்பழகன்.

(அ) & (இ) எஸ்.எஸ்.எல்.சி. வரை மட்டுமே படித்ததாகச் சொல்லப் படுகிற காளை என்கிற லட்சுமி நாராயணன் என்பவர் (B.SC., M. B. B. S., M.D.) பி.எஸ்ஸி., எம்.பி.பி..எஸ்., எம்.டி., பட்டம் பெற்ற சிவில் உதவி அறுவை மருத்துவராக தம்மைக் கூறிக்கொண்டு, டாக்டர். ஆர். எம். நாரா யணன் என்ற பெயரில் ஆரம்பாக்கம், சென்னை மாநகரில் கொண்டித் தோப்பு ஆகிய இடங்களில் மருத்துவத் தொழில் நடத்தினார். இவர் 10—11—1973 அன்று கைது செய்யப்பட்டார். இவருக்கு எதிராக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு,சென்னை, குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவால் புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இப்போது பிரை வேட்டாக வைத்தியம் செய்பவர்களுடைய சர்டிபிகேட்டுகளையும் மற்ற விபரங்களையும் ஆண்டுக்கு ஒரு முறை அரசாங்க அதிகாரிகளால் பரி சோதனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ? அதோடு பட்டம் பெற்ற டாக்டர்கள் அதிகம் பணம் வாங்குவதால் இப்படிப்பட்ட போலி டாக்டர் கள் உருவாகிறார்கள். ஆகவே, அதையும் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, டாக்டர்களாக பட்டம் பெறுவதற்கு பல ஆண்டுகள் படித்து, பட்டம் பெற்று,மெடிக்கல் கவுன்சில் மூலம் பதிவு செய்யப்பட்டு, அதற்குப் பின்னால்தான் அந்தப் பணி செய்ய முடியும். ஆனால் போலி பட்டம் பெற்ற பலர் ஆள் அடை யாளம் தெரியாத இடங்களில் மருத்துவம் செய்கிறார்கள். அதிலும் பலர் பட்டம் பெற்ற வேறு ஒருவரின் சர்டிபிகேட்டுகளை வைத்துக்கொள்ளும் நிலைமையும் இருப்பதாகத் தெரிகிறது. அந்த சர்டிபிகேட்டுக்கு உரியவர் யார் என்பது அங்குள்ளவர்களுக்குத் தெரியாததால் அவர்களைக் கண்டு பிடிப்பது கஷ்டம். அவர்களுடைய நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டு, பொதுமக்கள் புகார் செய்தால் போலீசார் புலன் விசாரணை செய்து நட வடிக்கை எடுப்பார்கள். அதற்குப் பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். வேண்டுமானால் டாக்டர்களுக்கு பாஸ்போர்ட் முறை வைத்து, இவர்தான் இந்த டாக்டர் என்று தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்வது பற்றி பரிசீலனை செய்யலாம். இப்போது ஒன்றிரண்டு இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. அது கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சர்டி பிகேட்டைப் பார்த்து போலி டாக்டர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டம் என்று சொன்னார்கள். இருந்தாலும் பொதுமக்களிடம், இது போன்ற செய்திகள் பரவலாக வருவதால், பீதி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, எந்த டாக்டர் மருத்துவம் செய்தாலும் உரிய அதிகாரிகள் பரிசோதனை செய்வதற்கு விதி முறைகளை ஏற்படுத்தி, அவர்கள் தருகின்ற குறிப்பின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி சந்தேகம் வருகிற எந்த ஒருவரைப் பற்றியும் போலீசாருக்குத் தகவல் கொடுத்தால் அதுபற்றி விசாரணை செய்யப்படுகிறது. நான் ஏற்கெனவே சொன்னது தவிர, இன்னொருவர் எஸ். கே. அரோரா என்பவர் மேக நோய், பால் நோய் போன்றவைகளுக்கு சிறப்பு வைத்தியம் நடத்தி வந்தார். அவர் பெற்றிருக்கிற பட்டங்கள் எல்லாம் அமெரிக்காவில் பெற்றது என்று சொல்வார். அவை இந்திய மெடிக்கல் கவுன்சில் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டங்கள் அல்ல. ஆகவே, அவர் உண்மையாக பயிற்சி பெற்றவரா என்பது குறித்து மேலும் புலன் விசாரணை செய்யப்படுகிறது.

அதைப்போலவே சீனியர் ஹவுஸ் சர்ஜன் பயிற்சி பெற்றவர் என்ற முறையில் ஒரு டாக்டர் பெயரால் மற்றொருவர் குழந்தைகள் மருத்துவ மனையில் இடம் பெற்று, அவர் கொடுத்த சான்றிதழ்களை எல்லாம் பார்க்கும்போது உண்மையானதாகவே தெரிந்தது. அது ஏற்கெனவே தேர்ச்சி பெற்ற ஒருவருடைய சான்றிதழ் என்ற உண்மை பின்னால் தெரியவந்தது. அந்த மருத்துவர் பணியாற்றும்போது அவர் நடந்து கொண்ட முறையில் சந்தேகம் ஏற்பட்டு, அவர் போலி மருத்துவர் என்பது கண்டறியப்பட்டிருக்கிறது. மேலும் புலனாய்வு நடக்கிறது.

ஏமாற்றுக்காரர்கள், போலிகள் எங்கும் இருக்கலாம். அதை அவ்வப்போது கண்டுபிடிக்க வேண்டும் ; அதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். ஏறத்தாழ 10,000 டாக்டர்கள் தகுதியுள்ள பட்டம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அது தவிர, ஹோமியோபதி டாக்டர்கள், சித்த வைத்தியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இன்னும் ஆர்.ஐ.எம்.பி. பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கு கிராமங்களில் மருத்துவம் செய்கிறார்கள். அகில இந்திய அடிப்படையில் அலோபதித் துறையில் இந்த மருத்துவர்களையும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. எங்கே சந்தேகம் இருந்தாலும் போலீசார் தகுந்த முறையில் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, உயிர்களோடு விளையாடுகின்ற இந்தப் போலி டாக்டர்களை கடுமையாக தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சட்டப்படி தண்டனை வழங்க முடியும். இதுவரை வழக்குகள் நடைபெற்று, முடிவுகள் தெரிந்துகொள்ள முடியாததால், இப்போது அளிக்கப்படுகின்ற தண்டனை போதுமானதாக இல்லையா என்பதுபற்றி பின்னர் ஆராயலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்போது மெடிகல் கவுன்சில் அகில இந்திய ரீதியிலும், மாநில ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் கூட இருந்து நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. சிறந்த டாக்டர்கள்



அந்தக் கவுன்சிலில் இருக்கிறார்கள். அந்தக் கவுன்சில் யார் யார் இம்மாதிரி போலி டாக்டர்கள் இருக்கிறார்கள் என்று விசாரணை செய்து அரசுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அகில இந்திய ரீதியில் இந்தியன் மெடிகல் கவுன்சில இருக்கிறது. மாவட்ட அளவில் இருப்பது ஒரு சங்கத்தைப் போன்றது ; அகில இந்திய அடிப்படையில் இருப்பது ஒரு ரெஜிஸ்டிரேஷன் பாடி போன்றது ; ரெகக்னிஷன் தருவதற்கு அவர்கள் இருக்கிறார்கள். மாவட்ட அளவில், அங்கு இருக்கின்ற டாக்டர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் எல்லோரும் அதில் உறுப்பினராக இல்லை. 800 பேர் இருந்தால் 400 அல்லது 500 பேர் சேர்ந்து சங்கம் வைத்துக்கொள்கிறார்கள். சிலர் அந்தச் சங்கத்தில் சேருவதில்லை. ஆகவே, அந்த சங்கத்தினர் விசாரணை செய்து, தகவல் கொடுப்பது என்பது அவ்வளவாக முடியாது என்று கருதுகிறேன். ஆனால் அந்தச் சங்கத்தில் உள்ளவர்கள் எங்கெங்கு போலித் தனம், ஏமாற்று நடக்கிறதோ அதைப்பற்றி அரசுக்குத் தகவல் கொடுத்தால் உடனடியாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும். அவர்கள் யார் மீதாவது சந்தேகப்பட்டு அரசாங்கத்திற்குப் புகார் அனுப்பினால் அதுபற்றி கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, சில இடங்களில் ஹோமியோபதி டாக்டர் பட்டம் பெற்றவர்கள் அலோபதி முறையில் வைத்தியம் செய்கிறார்கள். ஸ்ட்ரெப்டமைசின் போன்ற ஊசிகளை எல்லாம் போடுகிறார்கள். இப்படி அலோபதி முறையில் பயிற்சி பெறாதவர்கள் அலோபதி முறையில் மருத்துவம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஹோமியோபதி முறையில் பயிற்சி பெற்றவர்கள் அலோபதி முறையில் சிகிச்சை செய்வது முறையல்ல என்ற கருத்து இருந்துகொண்டிருக்கிறது. ஹோமியோபதி மருத்துவர்களே இந்தக் கருத்தைச் சொல்கிறார்கள். ஹோமியோபதி மருத்துவத்தில் ஊசி மருந்து கிடையாது. ஆனால் ஹோமியோபதி முறையிலும் இப்போது ஊசி மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே, ஹோமியோபதி மருத்துவர்கள் ஊசி போடுவதைப்பற்றிக் கேட்டால் இது ஹோமியோபதி மருந்துதான் என்று சொல்லக்கூடும். இந்த முறையில் ஊசி மருந்தைப் பயன்படுத்தக்கூடாது என்ற கருத்தும் இருக்கிறது. இந்த ஹோமியோபதி முறை விரிவு படுத்தப்பட்டு, பரவலாகச் செயல்படுமானால் இந்தக் கருத்து மாறக்கூடும். ஆகவே, அந்தக் காலகட்டத்தில் அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. கே. ஏ. வகாப் : இப்படி போலி டாக்டர்கள் ப்ராக்டீஸ் செய்வதைத் தடுக்க—டாக்டர்கள் தம்முடைய சர்டிபிகேட்டை விளம்பரப் பலகையோடு வைத்திருக்கவேண்டுமென்று செய்தால் அவ்வப்போது அதிகாரிகள் சென்று செக் செய்வதற்கு நலமாக இருக்கும். அதோடு போலி டாக்டர்

தான் என்று தெரிந்தாலும் கூட கைராசி இருக்கிறது என்று சொல்லி அவரிடமே பலர் போகிற நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் சொன்ன கைராசி என்பது மற்றொருவருடைய சர்டிபிகேட்டை எடுத்துக்கொண்டு ஏமாற்றுகிற கைராசியாகும். ஏமாற்றுகிறவர்கள் எப்படியும் ஏமாற்ற முடியும். மருந்து பலிக்காவிட்டாலும் பேசுகின்ற பேச்சிலேயே தம்மிடம் வருகின்றவர்களை ஏமாற்ற முடியும். பொதுவாக தமிழ்நாட்டில் இந்த எண்ணிக்கை மிகக் குறைவு. காரணம் டாக்டர்களும் ஏராளமாகப் படித்தவர்கள் அங்கங்கே இருக்கிற காரணத்தினால் போலி டாக்டர்கள் நுழைவது கடினம். இங்கே வந்தவர்கூட கேரளாவில் அப்படி ஏமாற்றிவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறார். இவரைக்கூட அங்கே போய்த்தான் கைது செய்ய வேண்டிய நிலைமை இருந்தது. இது போன்று ஏமாற்றுகிற நிலை நம் மாநிலத்தில் அதிகம் இல்லை. ஆனாலும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி : போலி டாக்டர்கள் பெண்களை வசீகரிக்கிறார்கள்—அதிலும் ஒருவர் பல பெண்களைத் திருமணம் செய்துகொண்டிருக்கிறார் என்பதாக பத்திரிகையில் போட்டிருந்தார்களே, இப்படிப் பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவை எல்லாம் விசாரணையில் இருப்பதாகத்தான் எனக்குத் தகவல் இருக்கிறது. காவல் துறையினர் இதற்குப் பல்வேறு சான்றுகளைத் தேடவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவற்றைத் தேடிய பிறகே வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சிலர் எந்த விதமான மருத்துவ சர்டிபிகேட்டும் இல்லாமல் சர்டிபிகேட் உள்ளவர்களது போர்டுகளைப் பிரகடனப் படுத்திக்கொண்டு ப்ராக்டீஸ் செய்கிறார்கள். சர்டிபிகேட் உள்ள டாக்டர்கள் இதற்குத் துணை போகிறார்கள். அவ்விதம் துணை போகிற டாக்டர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : திரு. ஜேம்ஸ் அவர்கள் விவரம் தெரிந்துதான் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார் என்று கருதுகிறேன். அந்த விவரத்தையும் தருவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : ஹோமியோபதி மருத்துவத்தில் ஊசி போடக்கூடிய முறை இருக்கிறது. சாதாரணமாக ஹோமியோபதி முறையில் காப்பி சாப்பிடக்கூடாது, புகை பிடிக்கக்கூடாது—ஊசி போடுவதனால் உடனடியாக நல்ல பலன் இருக்கிறது என்று ஊசி போடுகிறார்கள். மெடிகல் கண்டிரோல் என்ற முறையில் இப்படி ஊசி போடுகிறவர்களை ஹராஸ் பண்ணுகிறார்களே, இது சர்க்காருக்குத் தெரியுமா ?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து பதில் சொல்ல முடியும். ஹோமியோபதி முறையில் ஊசிபோடுகிற முறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சிலயிடங்களில் அப்படி மேற்கொள்ளுகிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய செய்தி பற்றி எனக்குத் தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் அறிந்து பதில் சொல்ல முடியும்.

திரு. ந. சோமசுந்தரம் : போலி டாக்டர் சிகிச்சையில் ஏதாவது உயிர்ச்சேதமோ, விபத்தோ ஏற்பட்டதாக அரசுக்குத் தகவல் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி விவரமாகத் தெரியவில்லை. போலி டாக்டர்கள் தருகிற மருந்து நோயைக் குணப்படுத்துவது என்பது மிகக் கடினமான காரியமாகும்.

## சிறு பாசன ஏரிகள்.

* 452 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஊராட்சி ஒன்றியங்களின் கண்காணிப்பில் இருந்து வரும் ஏரி, குளங்களை பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்துவரும் 100 ஏக்கர்களும் அதற்கு மேலும் உள்ள ஆயக்கட்டுகள் கொண்ட ஏரி, குளங்களை பொதுப்பணித்துறையின் கட்டுப் பாட்டில் கொண்டுவர அரசு மே 1974-ல் உத்தரவிட்டுள்ளது.

திரு கோவை செழியன்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி மைனர் இர்ரிகேஷன் டாங்குகளை அமைக்கிறபோது அவற்றை உடனடியாக நிறைவேற்ற முடியாததற்குக் காரணம் தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி ஆர்ஜிதம் செய்கிற முறையில் ப்ராஸஸில் நீண்டநாள் எடுக்கிற காரணத்தினால் அவற்றை எல்லாம் மாற்றுகிற முறையில் புதிய சட்டம் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இது புதிய குளங்கள் அமைப்பது பற்றியது அல்ல. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்து வருகிற நூற்றுக்கு மேற்பட்ட ஆயக்கட்டுக்களைக் கொண்ட ஏரி, குளங்களைப் பொதுப்பணித் துறைக்கு மாற்றுகிற திட்டமாகும். இதில் யாருடைய நிலத்தை எடுக்கிற பிரச்சினை எழாது.

திரு. மு. இரத்தினசபாபதி: இந்தத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இருந்து எவ்வளவு குளங்கள் மேற்கொள்ளப்பட்டு செப்பனிடப்பட்டன? எவ்வளவு பணம் அதற்காக ஒதுக்கியது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்து வரும் 100 ஏக்கர்களும், அதற்கு மேலும் உள்ள ஆயக்கட்டுகள் கொண்ட 2,454 குளங்களைப் பொதுப்பணித் துறையின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

இதற்காக ஒதுக்கியிருக்கிற பணம்—ஆக்ஸிலிரேடெட் ரிப்பேர்ஸ் என்ற அடிப்படையில்—துரிதமுறை—திட்டத்தின் கீழ் ரூ. 99,82,000 ஒதுக்கப் பட்டது.

நூறு ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுக்களைக் கொண்ட குளங்களை ஸ்டாண்டர்டைஸ் பண்ணி ஊராட்சி ஒன்றியங்களிடமே கொடுப்பதற்கு ரூ.75 லட்சம் ஒதுக்கப்பட்டது. அதுபோல ஜமீன் கண்மாய்களைச் சீர்படுத்த வும் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதுது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சிறிய ஏரி, குளங்களையும் கூட பொதுப்பணித் துறையினரே ஏற்றுச் செப்பனிடுவதே பொருத்தமாக இருக் கும். ஆகவே எல்லா ஏரி, குளங்களையும் பொதுப்பணித் துறையினரே மேற்கொள்வதில் என்ன சிரமம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நூறு ஏக்கர், அதற்கு மேற்பட்ட ஆயக்கட்டுக்களை உடைய ஏரி, குளங்களை எல்லாம் பொதுப் பணித்துறையே எடுத்துக் கொண்டுவிட்டது. நூறு ஏக்கருக்குக் குறை வான ஆயக்கட்டுக்களை உடைய குளம், குட்டைகளைத்தான் பொதுப்பணித் துறை ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றையும் ஸ்டாண்டர்டைஸ் செய்து ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கிற திட்டத்தைத்தான் வகுத்திருக் கிறோம். சிறிது சிறிதாக எல்லாவற்றையும் பொதுப்பணித் துறையே மேற் கொள்வதில்—மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல—சிரமம் ஏற்படாது. இப்போதைக்கு நூறு ஏக்கராவுக்குக் குறைவான ஆயக்கட்டு களை உடைய குளங்களை ஸ்டாண்டர்டைஸ் செய்து கொடுக்கிற பொறுப்பைத் தான் பொதுப்பணித் துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: ஜமீன் பிரதேசம் பூராவும் சிறுசிறு கண் மாய்களாக ஆரம்ப காலத்தில் இருந்து வந்ததுதான் இப்போது ஊராட்சி ஒன்றியங்களிடம் தரப்பட்டிருக்கிறது. ஜமீன் காலத்திலேயே அவற்றை பராமரிக்க எந்தத் திட்டமும் வகுக்கப்படவில்லை. நிதி ஒதுக்கீடும் செய்யப் பட்டதாகத் தெரியவில்லை. இன்றைக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிற, நிதியில் இருந்தும் அவற்றைச் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, பொதுப்பணித் துறையே எல்லாவிதமான குளங்களையும் எடுத்துக்கொண்டு பராமரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கெனவே நான் விடை அளித்தேன். ஜமீன் குளங்களை ஸ்டாண்டர்டைஸ் பண்ணிக் கொடுப்பதற் காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்தப் பணம் போதுமா என்பது வேறு. நிதிப் பற்றாக்குறை காரணமாக முழுவதையும் எடுத்துக் கொள்ள முடியவில்லை. நிதிநிலை சீராகும்போது எல்லாவற்றையும் பரா மரித்து சீர்படுத்தி, ஊராட்சி ஒன்றியத்தினிடத்தில் ஒப்படைக்கப்படும்.

திரு. கு. காமாட்சி: ஏரி, குளங்கள் எல்லாவற்றையும் பொதுப் பணித் துறையே எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணை இருக்க முடியாது. அதே நேரத்தில் பாசிக் குத்தகை, மரங்கள் ஏலம் ஆகியவற்றை அந்த ஊராட்சி ஒன்றியங்களிடமே விட்டு வைத்திருந்தால் ஊராட்சி ஒன்றியங் களுக்கு கொஞ்சம் வருமானமாக அவை இருக்கும். இதை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நூறு ஏக்கராவுக்குக் குறை வான ஆயக்கட்டுக்களை உடைய ஏரி, குளங்களை எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிடமே விட்டு வைத்திருக்கிறோம். அவற்றில் பாசி, மர குத் தகை தகராறு எதுவும் இருக்காது என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 9–30)

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இப்பொழுது சிறிய குட்டையை நிறைவேற்றுகின்ற திட்டத்தைப் பொதுப்பணித் துறை மேற்கொண்டிருக்கிறது. அதேபோல், சிறிய குளத்தையும் பொதுப்பணித் துறை மேற்கொள்ளுமா? அதை மட்டும் ஏன் ஊராட்சி மன்றத்திடம் விட்டுவிட வேண்டும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாண்ட் ஸ்கீம் என்பது நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வராது. பக்கத்திலே யிருக்கிற கிணறுகளிலெல்லாம் ஊற்று பெருக வேண்டுமென்பதற்காகப போடுகின்ற திட்டமாகும் அது. ஆனல், சிறு ஏரி என்று சொல்வது, நீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் வரும். ஆகவேதான், 100 ஏக்கரா ஆயக்கட்டுக்கு உள்ளவற்றையெல்லாம், ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைத்திருக் கிறோம். இருப்பினும், அவற்றிற்காக, ஊராட்சி மன்றங்களுக்கு ரூ. 80 இலட்சத்திலிருந்து ரூ. 90 இலட்சம் வரை மானியமாகக் கொடுக்கிறோம். அவர்களுக்குச் சிரமம் இருக்காது என்று கருதுகிறேன். அப்படி, சிரமம் ஏற்படுகின்ற நேரத்தில், அரசு தன் நிதிநிலையை வைத்துப் பரிசீலிக்கும்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி ஊராட்சி மன்றத் தில் கொஞ்ச நஞ்சம் பராமரிக்கிறார்கள். அதையும் எடுத்து விட்டால் ஊராட்சி மன்றங்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். எல்லாக் குளங் களையும் பி.டபிள்யூ. டி. மெய்ண்ட்டென்ஸ் செய்து, ஊராட்சி மன்றங்கள் வேலை செய்ய திட்டங்களை வகுத்தால் வசதியாக இருக்கும். ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வசதியாக இருக்கும். அதை யோசனை செய்யுமா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு சௌந்தரபாண்டியன் கேட்ட கேள்விக்கு நேர்மாறான கேள்வி இது. ஊராட்சி மன்றங்கள் வைத்திருப்பவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது நோக்கமல்ல. ஆனால் அவைகளை நிலைப்படுத்த, ஸ்டாண்டர்டைஸ் செய்ய அரசு உத்தேசித்து, இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

*Bridge on Korakathur-Valapandal road.*

*453 *Q.*—Thiru P. ETTIYAPPAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the scheme for the construction of a road-bridge (தரைப்பாலம்) between Korakathur and Valapandal on the Cheyyar River is under the consideration of the Government ; and

(*b*) if so, when the work is expected to be taken up ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த கொரகத்தூர் வாழப்பந்தல் சாலை இன்றைய தினம் பஸ் போக்குவரத்துக்கு வந்தவாசி, செய்யாறு போன்றவற்றையெல்லாம் இணைக்கிற சாலை.

ஆகவே, இப்பொழுது இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது இந்தப் பாலத்தைக் கட்ட அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா? அதோடு செய்யாற்றிலே தண்ணீர் வந்தால் வாழைப்பந்தல் ஊரின் ஓரத்திலே கொஞ்சம் கொஞ்சமாக அரித்து, ஊருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வாழைப்பந்தல் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் அமைப்பதையும் தடுப்புச் சுவர் அமைப்பதையும் இரண்டையும் ஒரே கேள்வியிலே கேட்டிருக்கிறார்கள். அங்கத்தினர் கேட்டிருக்கிற பாலம் அமைப்பது சம்பந்தமாக பக்கத்தில் ஒரு தாம் போகி, ரூ. 2½ லட்சம் செலவில் கட்டியிருக்கிறோம் இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தாம் போகி மிகவும் முக்கியமானது என்பதை நானே நேரில் போய் பார்த்து அறிந்து கொண்டிருக்கிறேன். அரசாங்கம் நிதிநிலையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தடுப்புச் சுவர் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.



கூட்டுறவு அரிசி ஆலை, தூத்துக்குடி.

*454. வினா—திரு. இரா. இராமலிங்கம்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் உள்ள நெல்லை மாவட்டக் கூட்டுறவு விற்பனை விநியோக சங்கத்திற்கு அரிசி ஆலை சொந்தமாக உள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த ஆண்டில் (1974) எத்தனை நாட்கள் ஓடியிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 1974-ம் ஆண்டில் 106 நாட்களுக்கு அரிசி ஆலை செயல்பட்டுள்ளது.

திரு. மு. இரத்தினசபாபதி: தலைவரவர்களே, இந்த அரிசி ஆலை எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பித்ததிலிருந்து எந்த ஆண்டிலாவது அது தனது முழுத திறன் அளவையும் பயன்படுத்தி அரிசி அரைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிவில் சப்ளைஸ் இலாகாவிலிருந்து நெல் கொடுக்கும்போதெல்லாம் அதிக அளவுக்கு அரைக்கப்பட்டிருக்கிறது. 1967-68, 1968-69, 1969-70—அதற்குப் பின்னாலே குறைவாக இருக்கிறது. இப்பொழுது மறுபடியும் அதிக அளவுக்கு நெல் கொடுக்கப்பட்டு, அரைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU N. K. PALANISAMI : The question is about the number of days this unit has worked during the year 1974.

அதற்கு கனம் அமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை. ஆலை எத்தனை நாள் அரைத்தது? இது மாதிரி பல ஆலைகள் இருக்கின்றன. அது சரியான முறையிலே நடக்கவில்லை. இப்பொழுது 3, 4 மாதங்களாகத் தான் ஓடுகிறது. சர்க்காரே இந்த மாதிரி முறையிலிருந்தால் சரியா சர்க்கார் போதுமான அளவு அரைத்து, கோவாப்பரேடிவ் ஸ்டோர்களுக்கு சப்ளை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 106 நாட்கள் என்று ஏற்கெனவே சொன்னேன். நாம் அதிகமாக புரக்யூர்மென்ட் செய்து—கொள்முதல் செய்து—அரசாங்கம் நெல்லைக் கொடுக்கும்போது, இந்த ஆலைகள் நன்றாக நடைபெறுகின்றன. இப்பொழுது மறுபடியும் கொடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.

[1975 மார்ச் 25

## உமியை எரிபொருளாகக் கொண்டு நெல் உலர்த்தல்

* 455 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உமியைக் கொண்டு நெல்லை உலர்த்தும் புதுமுறையை தமிழ் நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பரீட்சார்த்தமாக நடத்திப் பார்த்ததா ?

(இ) ஆமெனில், சோதனையின் முடிவு யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ&இ) திருவாரூரில் உள்ள நெல் பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையம் கருத்து தெரிவித்த வடிவமைப்பு குறிப்பீடுகளின் அடிப்படையில் திருவாளர்கள் ஷாவாலஸ் நிறுவனம் தயாரித்துள்ள உமியை எரிபொருளாகப் பயன்படுத்தி நெல்லை உலர்த்தும் இயந்திர உடிவ மாதிரி ஒன்று நெல் பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வும் சோதனையும் செய்யப்பட்டு வருகின்றது. இதன் செயல் முறையின் அடிப்படையில் மேற்கொண்டும் மாறுதல்கள் செய்யப்படலாம். அந்த மாறுதல்கள் அடிப்படையில் அதன் செயல் முறை மேறகொண்டும் பரிசீலிக்கப்படும். அதன் பின்னர் தான் இந்த இயந்திரம் நல்ல முறையில் செயல்பட இயலுமா என்பது பற்றி முடிவு செய்ய இயலும்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் அதிகமான இடங்களில் எஃப்.சி.ஐ. மூலமாக நெல் உலர்த்தும் ஆலைகளிருக்கின்றனவே, அவ்வாலைகளை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உபயோகிக்க இப்பொழுது வாய்ப்பிருக்கிறதா ? இல்லையானால், அவற்றினை உபயோகப்படுத்த அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது தனிக் கேள்வி. தனியாகக் கேட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த உமியானது தவிடாக் கப்பட்டு, மாடுகளுக்குத் தீவனமாக இருக்கிறது. இப்பொழுது மாட்டுத் தீவனத்துக்கு மிகவும் பற்றுக்குறை இருக்கிற சூழ்நிலையிலே, உமியை எரிபொருளாக்குவது நல்லதல்ல. உமிக்கு பதிலாக, வேறு பொருளை அரசாங்கம் எரிக்க எற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அவர் சொல்லுவதை (உமியை) உணவாகப் பயன்படுத்த முடியாது, மாடும் தின்ன முடியாது. உமியை வேறு எந்த உணவுப் பொருளாகவும் பயன்படுத்த முடியாது. சாதாரணமாக, குடும்பங்களிலே, உமியை அடுப்பு எரிக்கத்தான் பயன்படுத்துவார்கள். ஆகவே, இயந்திரங்களுக்குப் பயன்படுத்தலாம்.



1975 மார்ச் 25]

## மணல் மேடு அங்காடி

* 456 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டில் ஊராட்சி மன்றத்தின் சார்பில் அங்காடி அமைக்கும் கட்டடப்பணி தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அங்காடி கட்டும் வேலையில் கீழ்த்தளம் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. அங்காடியை விரைவில் கட்டி முடிக்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, வினா எண். 456, 457 ஆகிய இரண்டு கேள்விகளிலும் கேட்டவற்றைப் பொறுத்தவரையிலே, மணல் மேட்டில் ஊராட்சி ஒன்றியம் சார்பில் அங்காடி அமைக்கும் பணியும், அதைப் போலவே பேருந்து அமைக்கும் பணியும் இடையிலே நின்று போய் இருக்கின்றன. கேட்டால், சிமெண்ட் போதுமான அளவுக்குத் தரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, உரிய முறையில் சிமெண்டை அளிக்க முயற்சி செய்து, விரைந்து முக்கியமான இந்தத் தேவைகளை நிறைவு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான முயற்சி செய்யப்படுகிறது. விரைவில் சிமெண்ட் கிடைக்கும்.

திரு. எஸ். வடிவேல் : பேரவைத் தலைவரவர்களே, மாயூரம் மணல் மேடு தொழிற்சாலைகள் வளர்ந்து வருகின்ற பகுதி. தொழிற் சாலைகள் உள்ளதால், அங்கே அங்காடி அமைத்தால் தொழிலாளர்களுக்கு உகந்த குறைந்த விலையில் தானியம் கிடைக்கும். ஆகவே, துரிதமாக அரசு அங்காடி அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை வருவதற்கு முன்னாலேயே, இந்தத் திட்டம் போடப் பட்டு, ரூ. 15,000 செலவில், பேஸ்மெண்ட் வரையில் வந்திருக்கிறது. மேல் வேலை விரைவில் முடிந்துவிடும்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, மணல்மேட்டில் நியாய விலைக் கடை வருவதைப் போல், மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சவர்கள் எப்பொழுது வரும் என்று அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நியாய விலைக் கடையைப் பற்றி என்னிடம் கேட்டுப் பயனில்லை. மாண்புமிகு உணவு அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

[1975 மார்ச் 25

மணல்மேடு பேருந்து நிலையம்.

* 457 வினு—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டில் பேருந்து நிலையம் புதியதாக அமைக்கப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) பேருந்து நிலைய வேலை துவக்கப்பட்டு, தரை மட்டத்திலிருந்து தூண்கள் எழுப்பப்பட்டு, மேல் தளம் காங்கிரிட் போடும் நிலையில் கட்டிடம் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மணல் மேட்டில் ஒரு நூற்பாலை இருக்கிறது. அந்த நூற்பாலைக்குச் செல்ல வேண்டுமென்றால் இந்த பஸ் ஸ்டாண்டில்தான் இறங்கவேண்டும். அங்கு, எந்த பஸ் ஸ்டாண்டும் ஒழுங்காக இல்லை. ஆகவே, அந்தப் பகுதியில் யாராவும் பஸ் நிற்கிற இடத்தில்தான் இறங்க வேண்டுமென்று இருக்கிறதே, ஆகவே, துரிதமாக வேலை செய்து, அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். தொழிற்சாலைக்குப் பக்கத்தில் பஸ் நிற்கக்கூடிய ஸ்டாண்டுக்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. பஸ் ஸ்டாண்டுக்குப் பணம் கொடுப்பது பற்றித்தான் இத்துறை ஆராயும். பஸ் எங்கெங்கே நிற்கவேண்டுமென்பதற்கான விளக்கங்கள் என்னால் சொல்ல முடியாது. ஆகவே, பஸ் ஸ்டாண்டைப் பொறுத்தவரையிலே வேலையைத் துரிதமாக முடிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்து வருகிறோம்.

ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள பனை மரங்கள்.

* 458 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், சில்லாங்குளம் பஞ்சாயத்திலிருந்து ஓ. சவலணபுரம் செல்லும் சாலையில் உள்ள பனைமரங்களை அகற்றக் கோரி விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



1975 மார்ச் 25]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) மேற்படி மரங்களை பகிரங்க ஏலத்தில் விட்டு வெட்டி அப்புறப்படுத்த கோவில்பட்டி கோட்ட ஆட்சித் தலைவர் 15—2—75 அன்று ஆணை பிறப்பித்துள்ளார். ஒட்டப்பிடாரம் தன்னியல் துணை வட்டாட்சியர் மேல் நடவடிக்கை எடுப்பார்.

திரு. எம். முத்தையா : 15—2—1975-ல் ஆணை பிறப்பித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், அங்கு விசாரித்ததில், இதுநாள் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக ஏற்பாடுசெய்து அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, எந்த ஏலம் விட வேண்டியிருந்தாலும் 15 நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அந்த முறைப்படி உத்தரவை ஆர்.டி.ஓ. போட்டிருக்கிறார். அங்கிருந்து தாவில்தார் ஆபிஸிற்குப் போயிருக்கிறது. அவர் அதற்கான நடவடிக்கையை எடுத்து முறைப்படி, ஏலம் போட ஏற்பாடு செய்வார்.

போக்குவரத்துக் கழகங்களில் வைப்பீட்டுத் திட்டம்

* 459 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்பத்தூர் சேரன் போக்குவரத்து நிறுவனம் பொது மக்களிடமிருந்து Fixed Deposit திட்டத்தின் அடிப்படையில் பணம் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) இத்திட்டத்தை, இதர போக்குவரத்து நிறுவனங்களுக்கும் நீட்டிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கடன் திரட்ட தன்னாட்சி உரிமைபெற்ற கழகங்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. தன்னாட்சி உரிமைபெற்ற கழகமான சேரன் போக்குவரத்துக் கழகம், வைப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து கடன் திரட்டியுள்ளது.

(இ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகமும் குறித்தகால வைப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பொதுமக்களிடமிருந்து கடன் திரட்டியுள்ளது. ஏனைய கழகங்கள் பொதுமக்களிடமிருந்து கடன் திரட்டவில்லை. அக் கழகங்கள் விரும்பினால், அவை இத் திட்டத்தின்கீழ் கடன் திரட்டலாம்.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதை ஏனைய போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு ஏதாகிலும் செயற் குறிபபு அரசாங்கம் வைத்திருக்கிறதா ? இதனால் பொதுமக்களுக்கு எந்த எந்த வகையில் பயனுள்ளதாக இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, போக்கு வரத்துக் கழகங்கள் தங்களுடைய நிதிநிலையைப் பெருக்கிக்கொள்வதற்கான வழிவகைகளைக் காணும்பொருட்டு இத்தகைய அனுமதிகள் பொதுமக்களிட மிருந்து பணம் திரட்டுவதற்கு வழங்கப்படுகின்றது. அண்மைக் காலத்திலே வங்கிகளின் மூலம் போதுமான நிதி கிடைக்காத காரணத்தினால் பொது மக்களிடமிருந்து பணம் திரட்டுகிற இத்தகைய தன்மை அனுமதிக்கப்பட் டிருக்கிறது. இப்படிப்பட்ட குறையை எல்லாப் போக்குவரத்துக் கழகங் களிலும் போக்குவதற்கு ஏற்கனவே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக்கழகம் ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளோம்.

திரு எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தில் இப்படிப்பட்ட பிக்ஸட் டெபாசிட் தொகை எவ்வளவு வசூலித் திருக்கிறார்கள் ? அதேபோல் மற்ற போக்குவரத்துக் கழகங்களும் பிக்ஸட் டெபாசிட் தொகை வசூல் செய்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : சேரன் போக்குவரத்துக் கழகம் 9 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாயும், சோழன் போக்குவரத்துக் கழகம் 7 இலட்சத்து 43 ஆயிரத்து 500 ரூபாயும் இதுபோல் வசூல் செய்திருக் கிறார்கள்.

திரு கே.டி.கே. தங்கமணி : சார், இந்தக் கடமையை நிறைவேற்று வதற்கு ஒரு பைனான்ஸ் கார்ப்பரேஷன் அமைப்பதாக இருந்ததே, அது அமைக்கப்பட்டு இருக்கிறதா ? எந்தநிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு டிரான்போர்ட் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற ஒரு நிறுவனம் ஏற்கனவே கம்பெனிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் அதனுடைய ஆரம்பச் செலவு களுக்காக இந்த ஆண்டே நிதி ஒதுக்கம் செய்து அதற்காக ஆரம்பவேலைகள் எல்லாம் முடிந்து வருகின்ற நிதியாண்டில் இருந்து அது தன்னுடைய பணிகளை நல்லமுறையிலே துவங்கும். போக்குவரத்துக் கழகத்திலே பேருந்துகள் வாங்குவதற்கும், கப்பல் போக்குவரத்துக் கழகத்திலே கப்பல்கள் வாங்குவதற்கும் அதோடு மட்டுமல்லாமல் ஆதாயம் இல்லாமல் இருக்கிற வழித்தடங்களில் பஸ்களை விடுகிறபோது குறைந்த வட்டியிலே பஸ் வாங்குவதற்குமான வகைகளிலே இந்த நிதிக்கழகம் பயன்படுத்தப்படும்.





திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இந்தப் போக்கு வரத்துக் கழகங்கள் இதுபோன்ற பிக்ஸட் டெபாசிட் வாங்கும்போது கொடுக்கின்ற வட்டி மிகவும் குறைவாக இருக்கிறது. 11% வட்டி தான் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களே வங்கிகளிலே வாங்குகிற போது ஓவர் டிராப்ட் வாங்கினால் 15%, 16% வட்டி கொடுக்கிறார்கள். அந்த அளவிற்கு பொதுமக்களுக்கும் பிக்ஸட் டிபாசிட் வாங்கும் போது 13%, 14% என்ற அளவிலே கொடுத்தால் நிறைய பணம் வரும், ஆகவே வட்டியை உயர்த்துவதற்கு அவர்களுக்கு அரசு ஆலோசனை கூறுமா ? பிக்ஸட் டெபாசிட் வாங்கும்போது அரசாங்கம் பிக்ஸட் டெபாசிட்காரர்களுக்கு ஏதாவது கியாரண்டி கொடுத்திருக்கிறார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் பேங்குகளிலிருந்து பணம் வாங்குகிறபோது அதிக வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே பிக்சட் டெபாசிட் பொதுமக்களிடமிருந்து வாங்குகிறபோது வட்டி செலுத்துகின்ற தன்மை இருப்பதால் தனி நிதிக் கழகத்தை உருவாக்குகிறோம். அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் பொது மக்கள் ஏதோ பணம் போட வரமாட்டார்கள் என்று கருதுவதற்கு இடமில்லை. ஏனென்றால் இதுபோன்று பிக்ஸட் டெபாசிட் போடுவதற்கு பொதுமக்கள் தயாராக இருக்கிறார்கள். வட்டி விகிதத்தை எந்த எந்த அளவிற்கு வைத்துக்கொள்ளலாம் என்பது இந்த நிதிக் கழகம் உருவானதற்குப் பின்னால் அவர்கள் மேற்கொள்ள வேண் டிய முடிவு.

திரு. எஸ். வடிவேல் : அரிசனங்கள் சார்பில் கூட்டுறவுத் துறை யில் ஒரு பஸ் விடுவதாக இருந்தது.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வி வேறு, இதிலே வராது. பிக்ஸட் டெபாசிட் பற்றிய கேள்வி இது, ஆகவே உங்கள் கேள்வி இதிலே வராது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், நகரமன்றங்கள் சார்பில் இப்படி பிக்ஸட் டெபாசிட்கள் போடுவதற்கு ஆர்.டி.எல்.ஏ. இலாகா மூலம் போக்குவரத்துக் கழகங்கள் அணுகிப் பார்க்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத னுடைய முக்கிய நோக்கமே நாட்டுடைமையாக்குகின்ற திட்டத்தில் பொது மக்களும் பங்குகொள்ள வேண்டுமென்ற அடிப்படைதான். ஆகவே ஊராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும் அப்படி வழங்குவது நல்லதுதான்.

பேருந்துப் போக்குவரத்து நிபுணர் குழு

*460 வினா. திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பஸ் போக்குவரத்துப் பற்றி அரசுக்கு ஆலோசனைகூற நிபுணர் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் முக்கிய பணிகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(இ) போக்குவரத்துத் துறை அல்லது போக்குவரத்துக் கழகங்கள் ஆழ்ந்து ஆய்வு செய்ய வேண்டிய பிரச்சினைக்குட்பட்ட குறிப்பான பகுதிகளை இக்குழு கண்டறியும். மாநில அரசு நிறுவனங்களின் ஆராய்ச்சி வளர்ச்சி திட்டங்களுக்கு திட்டவட்டமான ஆலோசனை நல்கி, அவைகளின் செயல் திறனை மேம்படுத்தவும் இது உதவிபுரியும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தக் கழகத்தில் யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் கூறமுடியுமா ? அவர்கள் கூறிய பரிந்துரைகள் யாவை என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துத் துறை நிபுணர் கழகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைவராக இருக்கிறார், மறைந்த டி. எஸ். கிருஷ்ணா, இப்போது இல்லை, ஏற்கனவே அங்கத்தினராக இருந்தார். திரு. என். மகாலிங்கம், ஸ்டேட் பிளானிங் கமிஷனைச் சேர்ந்த டாக்டர் பிரைட்சிங். பாலகிருஷ்ணா பிரதர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த எல். ஜி. வரதராஜன், டாக்ஸ் கன்ஸல்ட்டன்ட் சி. எஸ். வித்தியாசங்கர், அசோக்லேலண்ட் சார்டர்ட் அக்கவுண்ட்டன்ட் சங்கரநாராயணன், நிதித் துறை செயலாளர், போக்குவரத்துத்துறை செயலாளர் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். பொதுவாக அவர்களுடைய ஆலோசனை போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படுகிற செலவினங்களை எந்த எந்த வகையிலே குறைக்கலாம் என்பதைப் பற்றி அவர்களுடைய அனுபவத்தின் அடிப்படையிலே, அவர்களுடைய அறிவாற்றலின் அடிப்படையிலே தருகிறார்கள். அந்த அடிப்படையில் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். வடிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிபுணர் குழு அமைப்பதைப்போல் ஒவ்வொரு மாவட்டத்திலும்—சில தடங்களில் வசூல் அதிகமாகிறது சில ரூட்களில் வசூல் இல்லை—வசூல் இல்லாத இடங்களிலும் பஸ்கள் போகின்றன, போக்குவரத்துக் கழகங்கள் செம்மையாக நடத்தப்படக்கூடிய முறையில் மாவட்ட வாரியாக பொதுமக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைக்கப்படுமா ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது நிபுணர் குழு. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற குழு பொதுமக்கள் குழு. அந்த அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் அவர்களுடைய எல்லைக்குள் இப்படிப் பட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைத்துக் கொள்ளலாம் என்ற ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்காக உள்ள நிபுணர் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் எல்லாம்—நம்முடைய சட்ட மன்றத்திலே உள்ள உறுப்பினர்களில் சிலர் இந்தத் தொழிலிலே நல்ல நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள், மதுராந்தகம் ஆறுமுகம் போன்றவர்கள் இந்தத் தொழிலை ஆரம்பத்தில் இருந்து தெரிந்தவர்களாக இருக்கிறார்கள் — அவர்களுக்கு ஏன் இடம் கொடுக்கவில்லை.? இனிமேலாவது அப்படிப்பட்டவர்களுக்கு இடம் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான அளவிற்கு நேரம் இல்லை யென்ற காரணத்தினால்தான் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வில்லையே தவிர அவர்கள் நிபுணர்கள் அல்ல என்று கருதுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சட்டப் பேரவை, சட்ட மேலவை உறுப்பினர்கள் உள்ள ஆலோசனை வழங்குகின்ற [illegible] ஆலோசனைக் குழு இருக்கிறது. இந்தத் தொழிலிலே [illegible] அனுபவம் பெற்று இன்றைய தினம் [illegible] தங்களுடைய பேருந்துகளை அரசிடம் ஒப்படைத்துவிட்டவர்கள் அவர்களுடைய அனுபவம் [illegible] விடக்கூடாது என்ற அடிப்படையில்தான் அத்தகைய அனுபவம் வாய்ந்தவர்கள் இத்தகையக் குழுவில் [illegible] போடப்பட்டிருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த [illegible] குழு போக்குவரத்தில் ஏற்படும் செலவினங்களை [illegible] குறைப்பது என்பதைப்பற்றி சிபார்சு செய்திருக்கிறார்கள் என்று [illegible] அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த [illegible] கருத்தை [illegible] அவர்கள் கூறியிருக்கிறார்களா அல்லது பல கருத்துக்களையும் கூறியிருக்கிறார்களா? அப்படிக் கூறியிருந்தால் அந்த ரிப்போர்ட் [illegible] இந்த [illegible] யிலே சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவர்கள் நிறையப் பரிந்துரைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் மிகவும் தொழில் நுட்பம் வாய்ந்தவை. டீசல் கன்சம்ப்ஷன், ஆவரேஜ் ஸ்பீட், டோகோ கிராஃப் என்றெல்லாம் தொழில் நுட்ப அடிப்படையிலே அவர்கள் தருகிறார்கள். அவற்றை ஒவ்வொன்றாகச் செயல்படுத்த வேண்டுமென்று போக்குவரத்துக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில் "காஸ்ட் ஆஃப் ஆப்பரேஷன்" நன்றாக இருக்கவும், நிர்வாகச் செலவைக் குறைக்கவும்

இந்தக்குழு ஆலோசனை தந்திருக்கிறது. வேண்டுமானால் உறுப்பினர்கள் களுக்கு அந்தக் குழுவின் பரிந்துரைகளைச் சட்ட மன்றத்தில் வைப்ப தற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, நிபுணர் குழுவில் பஸ் முதலாளிகளை நியமிப்பதன் மூலம் சுயநலத்தோடு செயல்பட வேண்டிய நிலையும், நிர்பந்தமும் ஏற்படும். எனவே, நிபுணர் குழுவில் பஸ் முதலாளிகளை அனுமதிக்கலாமா ? ஏற்கனவே நிபுணத்துவம் பெற்ற, அதாவது பஸ் முதலாளிகள் அல்லாதவர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பஸ் தொழிலில் ஈடுபடாமல் எப்படி நிபுணத்துவத்தைப் பெறுவது என்று, எனக்குத் தெரியவில்லை. அவர்களெல்லாம் ஒரு காலத்தில் பஸ் முதலாளிகள், இப்பொழுது இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த நிபுணர் குழுவின் அறிக்கையைக் கொடுப்பது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற மன்றங்களிலேயெல்லாம் "கன்சல்டேட்டிவ் கமிட்டி" என்று. அதாவது டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக ஒரு ஆலோசனைக் குழு, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அம்மாதிரி இருந்தால் அந்த ஆலோசனைக் குழுவில் ஜனங்களின் பிரச்னைகளைக் கொண்டு வர முடியுமே, அந்த வகையில் செய்ய ஆலோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறிய இந்த ஆலோசனை குழுவில் முழுக்க முழுக்க ஏற்கனவே தனியார் துறையிலே பஸ் போக்குவரத்தை நடத்தியவர்கள் இருக்கிறார்கள். தனியார் துறையிலே இருந்து நாம் அரசுத் துறைக்கு மாற்றியதன் நோக்கமே, மக்களுக்கு அதிகமாகன வசதிகளைச் செய்ய வேண்டுமென்ற பிரதான நோக்கமே தவிர, அதிக வருவாயைப் பெறுவது அல்ல. ஆகவே, தனியார் துறையிலே ஏற்கனவே பஸ் தொழிலை நடத்தியவர்கள் இப்பொழுது கூறுகின்ற ஆலோசனைகளும் பெரும்பகுதி அதிக வருவாயைப் பெருக்குவது என்ற முறையிலேதான் இருக்கும். அதை விட இந்தக் குழுவிலே மக்களுக்கு எப்படி அதிக வசதிகளைச் செய்வது என்ற ஆலோசனையைத தருவதற்கு, வசதியாக சட்டமன்ற உறுப்பினர்களையும், சமுதாய நலனில் ஈடுபட்டுள்ள முக்கியஸ்தர் களையும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை நியமித்தால் நன்மை குபயக்ம் அல்லவா ? அதை அரசு ஆலோசிக்குமா ?

மாண்டமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவாரவர்களே, இந்தக் குழு நியமிக்கப்பட்டதின் அடிப்படையே, அறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னது மட்டுமல்லாமல், தேர்தல் அறிக்கையிலேயும



குறிப்பிட்டதைப் போல, தொழில்களை மட்டும் தேசிய மயமாக்குவது மட்டுமல்லாமல், தொழில் அதிபர்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில், அவைகள் அனைத்தும் அரசுக்குப் பயன்பட வேண்டுமென்ற அடிப் படையில் இந்தக் குழு உருவாக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் குழு ஏதோ வசதிகளை நிராகரித்துவிட்டு, வருவாயை மட்டும் பெருக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டது என்று கருதுவது சரியான தாகாது. அதுமட்டுமல்லாமல், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் போக்குவரத்து சம்மந்தமான பல குழுக்களில் ஏற்கனவே இடம் பெற்றிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அவ்வப்பொழுது அவர்கள் ஆலோசனைகளை நேரிலேயும் தெரிவிக் கிறார்கள். ஆகவே, பொதுமக்களின் நலன் எந்த வகையிலும் புறக்கணிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நிபுணர் குழுவில் பெரும்பாலும் தொழில் அதிபர்களே இருக்கிறார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம் பெறலாமே என்றால், அவர்களுக்கு வேலை அதிகம் என்று சொல்கிறார்கள். எனவே பொதுமக்களோடு தொடர்பு கொண்ட சிலரை இதிலே அங்கம் வகிக்கச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம்பெற பல குழுக்கள் இன்னும் தனியாக இருக்கின்றன. ஆலோசனைக் குழு என்ற அடிப்படையில் இருக்கிறது. ஆகவே, இதிலேதான் போட வேண்டுமென்ற அவசியம் அவர்களுக்கு இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ். : தலைவரவர்களே, இப்பொழுது அமைக்கப் பட்டிருக்கின்ற நிபுணர் குழுவில் இருக்கும் அங்கத்தினர்கள் பலரும் முதலாளிகளாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபடியும் மறுபடியும் அதையே கேட்கிறீர்களே.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதோடு அங்கே தொழிலாளர்களின் சார்பில் யாரும் இடம்பெறவில்லை. அதுமட்டுமல்லாமல், இதன் நோக்கமே செலவினங்களைக் குறைத்து வருவாயைக் கூட்டும் நோக்கத்தோடு இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஏற்படும் விளைவு நேரடியாகத் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர் களுடைய கருத்துக்களை மேற்கொண்டால் தொழிலாளர்களுக்குச் சாதாரணமாகக் கொடுக்கப்பட வேண்டிய கூலி போன்ற இந்தச் செலவினங்களைக் குறைத்து வருவாயைக் கூட்டும் சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இப்பொழுது போக்குவரத்துத் துறையிலே உள்ள மிகப்

குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். அது நாளை மறுநாள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் குறித்து மேலவைத் தலைவர் அனுப்பியுள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/75), 3—3—1975-ஆம் நாளன்றும், தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/75), 22—3—1975-ஆம் நாளன்றும் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

மேலும், கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகள், 22—3—1975-ஆம் நாளன்று மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, திருத்தம் எதுமின்றி, ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/75).

2. தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/74).

(முற்பகல் 10.00.)

## (3) தகவல் கோரல்.

## (அ) அறிவிக்கை கொடுக்கப்பட்ட சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள்மீது உறுப்பினர்கள் தகவல் கோரல்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சட்டக் கல்லூரி விடுதியில் நேற்று இரவு மாணவர்கள் தாக்கப்பட்டு 50 பேர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். அப்பேர்பட்ட நிலையைப் பற்றிக் கண்டிப்பாக...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி தகவல் கேட்டிருக்கிறோம், இன்னும் தகவல் வரவில்லை என்று அரசுத் தரப்பிலிருந்து கூறியிருக்கிறார்கள். இதை விவாதிக்க எடுத்துக் கொள்ள



அனுமதித்தால் அரசுத் தரப்பில் பதில் சொல்ல வாய்ப்பு இருக்க வேண்டும். ஆகவே நாளை மறுநாள் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அரசுத் தரப்பில் தகவல் இருந்து இதை எடுத்துக் கொள்ளலாம் என்றால் இன்று எடுத்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதுதான் இப்படி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தது என்று 10 நிமிஷத்திற்கு முன்புதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய தகவல்களை விசாரிக்காமல் விளக்கங்களை அளிப்பது முறையாக இருக்காது. ஆகவே, நாளை மறுநாள் எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்குமென்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன். சரியான விவரங்கள் இல்லாமல் அதற்கான விவாதத்திற்குப் பதிலோ, ஒத்திவைக்க வேண்டும், வேண்டாம் என்பதற்கான விளக்கமோ அளிப்பது இயலாது.

திரு. கோவை செழியன்: ஒத்தி வைக்கப்படாவிட்டாலும் அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கான நடவடிக்கைகள் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. சீனிவாசன்: நான் ஒரு பிரச்சினையைக் கொடுத்திருந்தேன். சம்மந்தப்பட்ட அமைச்சர் சட்டசபைக்கு வரவில்லை. வரவு செலவுத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அவரது இலாக்காவை இன்னொரு அமைச்சரிடம் ஒப்படைத்திருக்க வேண்டும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தப்பட்ட அமைச்சர் வந்தார். வரவில்லை, இன்னொரு அமைச்சரிடம் இலாகா பொறுப்பை ஒப்படைத்திருக்க வேண்டும் என்று எந்த விதிமுறைகளின் கீழ் இதைக் கூறுகிறீர்கள்? விதிமுறைகளை விட்டுவிட்டு பேசுவது அவைக்கு நல்லதல்ல.

திரு. பெ. சீனிவாசன்: எல்லாமே விதிமுறை என்றால் ஒன்றுமே பேச முடியாது. ஒரு சிறு உதாரணம். பாக்வார்டு கிளாஸஸ் அமைச்சர் வரவில்லை. தி. நகர் பாக்வார்டு கிளாஸஸ் ஹாஸ்டலில் மாணவர்கள் சாப்பாடு இல்லாமல் இருக்கிறார்கள். போலீஸ் வந்து அந்த மாணவர்களை அடிக்கிறார்கள்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த முறையை ஒட்டி நீங்கள் பேசுகிறீர்கள்? நீங்கள் இந்த அவையை நடத்தியவர்கள்......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுக்குச் சில தகவல்கள் வந்திருக்கின்றன. அரைகுறையாகத் தகவலை வைத்துக்கொண்டு பேசக் கூடாது. எனக்கு வந்திருக்கிற தகவல் அங்கு வேலை செய்கிற ஆட்களை மாணவர்கள் அடித்தார்கள் என்பது.

திரு பெ. சீனிவாசன் : ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்று..

திரு. கே. டி. கே. தங்கமணி : உண்மையில் அந்தச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அந்த மாணவர்கள் பல பேர் எம். எல். ஏ. ஹாஸ்டலுக்கு வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சீனியர் மெம்பர். நீங்கள் எல்லாம் விதிமுறைகளுக்கு மாறாக, மீறிப் பேசுவது என்றால் அவையை எப்படி நடத்துவது என்று தெரியவில்லை. ஒரு நிலையைக் குறித்து அவசரப் பிரேரணை வந்திருக்கிறது. தகவல் வந்ததும் நாளைக்கு எடுத்து கொள்கிறேன் என்று சொன்னார்கள். அந்த நிலையில் நடந்த நிகழ்ச்சி பற்றியெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி இன்றைக்கு சொல்வது என்ன முறை ? எந்த முறையின்கீழ் இந்த அவையை நடத்திச் செல்வது ?

திரு. கே. டி. கே. தங்கமணி: என்னைப் பொறுத்தவரையில் இந்த அட்ஜர்ன்மென்ட் மோஷனைக் குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்க வேண்டுமென்று காலை 8–20 மணிக்கே கொடுத்து விட்டேன். அப்படியானால் அரசாங்கத்தினுடைய இயந்திரம் வேகமாக வேலை செய்யவில்லை என்று தெரிகிறது. நான் முழு விவரத்தைச் சொல்லவில்லை. இதிலே சில தடுப்பு வேலைகள் செய்யப்பட வேண்டும். தாக்கப்பட்ட மாணவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது பற்றிய விவரங்களை எடுத்துக்கூற வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றிய பாதுகாப்பு நடவடிக்கைகள் அரசு சார்பில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பெ. சீனிவாசன்: நீங்கள் சொல்லுவது....

மாண்புமிகு பேரவைத தலைவர் : நீங்கள் ஒதறி வைப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் அல்ல.

திரு. பெ. சீனிவாசன் : நான் தீர்மானம் கொடுத்து தாங்கள் ரிப்ளை கொடுத்திருக்கிறீர்கள். 110 மாணவர்கள், பி. யு. சி. மாணவர்கள், பி. எல் மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். வார்டன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த நோட்டீஸ் மீது பேரவைத் தலைவர் முடிவை அறிவித்த பிறகு அதைப் பற்றி இந்த அவையில் பேசுவது முறையா ? இந்த முறையைப் பின்பற்றினால் எப்படி இந்த அவையை நடத்துவது ? ஒரு விதி முறையே இல்லையா ?

திரு. பெ. சீனிவாசன் : நான் தெரிந்து கொள்ள விரும்புவது......



மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த அடிப்படையில் நீங்கள் பேசுகிறீர்கள் ? பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்ட பிறகு முடிவு அறிவித்துவிட்ட பிறகு எந்த அடிப்படையில் அதையொட்டி இந்த அவையில் பிரச்சினையை எழுப்புகிறீர்கள் ? அந்தக் கருத்துக்களை எந்த விதியின் கீழ் சொல்வது ?

திரு. பெ. சீனிவாசன் : நான் சொல்வதைக் கேளுங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்வதைக் கேட்கத்தான் இருக்கிறேன். நீங்களும் இந்த அவையை நடத்தியவர். எந்த விதியின்கீழ் பேசுகிறீர்கள் ?

திரு. பெ. சீனிவாசன் : உலகத்தில் இருக்கும் எல்லாமே விதிகளின் கீழ் வந்துவிடாது. திரு. தங்கமணி அவர்களுடைய தீர்மானதநை எடுதநுக் கொள்வது பற்றி ஒரு பதில் சொன்னீர்கள். என்னுடைய தீர்மானத்தை எப்படி ரிஜெக்ட் செய்தீர்கள் ?

(திரு. எம். முத்தையா எழுந்து நின்று கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முத்தையா, உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன ?

திரு. எம். முத்தையா : விதிமுறையைப் பின்பற்றுவதாகச் சொல்லுகிறீர்கள். தற்சமயம் கேள்வி நேரத்தில் நான் கை தூக்கினேன். விதி விதி என்று தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் கையைத் தூக்கிக் கொண்டே இருந்தேனே, என்னை ஏன் கூப்பிடவில்லை ? தலைவர் அவர்களுக்கு இந்த பாரபட்சம் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முத்தையா கை தூக்கியதை நான் பார்க்கவில்லை. தெரிந்திருந்தால் நிச்சயமாகக் கூப்பிட்டிருப்பேன். என்னுடைய கண்ணில் படவில்லை.

(4) நடைமுறைக் கேள்விகள்.

(அ) சட்ட மன்ற நுழைவாயிலில் ஓர் உறுப்பினர் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய சட்ட மன்றத்திற்குள்ளே நுழைய பல வாயில்கள் இருக்கின்றன. தென்புறம், வடபுரம் உள்ள வாயில்களில் காவலர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நேற்று நான் உள்ளே வரும்போது என்னைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அங்குள்ள பணியாளர்கள் நான் எம். எல். ஏ. என்று சொன்னவுடன் என்னை அனுமதித்தார்கள்.

சட்ட மன்றத்திற்குள்ளே காவலர்களை நியமித்திருப்பதைப் பார்க்கும்போது இது ஒரு புறக் காவல் நிலையம்போல் தோன்றுகிறது. இது நடைமுறைக்குச் சரியாக வராது. இனிமேலாவது பேரவைத் தலைவர் அவர்கள் சட்ட மன்றப் பணியாளர்களை நியமிக்கவும், காவலர்கள் சட்ட மன்ற எல்லைக்குள் இல்லாமல் இருக்கவும், ரகசிய போலீஸ் நடமாடாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்கிற ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னது கவனிக்கப்படும்.

## (3) தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) சட்டப் பேரவை சார்ஜன்ட் அமைச்சரின் பாதுகாவலரால் பயமுறுத்தப்பட்டது பற்றி எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற சனிக்கிழமை குறிப்பிட்ட பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். அசெம்பிளி சார்ஜென்ட் ஒரு அமைச்சருடைய பாதுகாவலரால் பயமுறுத்தப்பட்டார் என்பது பற்றி எழுப்பிய நேரத்தில் அப்போது உதவி சபாநாயகர் அவர்கள் அது சம்பந்தமாக முடிவெடுத்து அறிவிப்பதாகச் சொன்னார்கள். அது என்றைக்கு அறிவிக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* *

திரு. கோவை செழியன் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரா? இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. இது நிகழ்ச்சிக்குறிப்பில் வராது.

* *

*திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் சௌந்தரபாண்டியன் கூறியமாதிரி, நேற்றைய தினம் எனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. சட்ட மன்றத்தின் தெற்கு வாசலில் வரும்பொழுது அமைச்சர்களின் காவலர்கள் என்னை மறித்தார்கள். பக்கத்தில் இருப்பவர் இவர் ஒரு உறுப்பினர் என்று சொன்ன பிறகுதான் அனுமதித்தார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை மானியக் கோரிக்கையின் மீது ஒரு மணி நேரத்தில் விவாதத்தை முடித்து விட்டு அடுத்த டிமாண்டை எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. இப்போது மணி 10-10. 11-10-க்குள் விவாதம் முடியவேண்டும்.

## (5) துணை மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு அதிக வாய்ப்புகள் அளிப்பது குறித்த வேண்டுகோள்.

Dr. H. V. HANDE: Mr. Speaker, Sir, I have been trying to point out in this House several times that so far as the Supplementary Budget is concerned, this House does not get adequate opportunity to discuss it. In fact, yesterday in the Legislative Council for nearly three hours they were able to discuss it. Sir, I am not casting aspersion on the other House. What I am trying to point out is that the opportunity given to the other House to discuss it at length is not given to this House. This has been going on for a number of years and I have been continuously battling on this aspect of the matter. Sir, after the discussion on the Supplementary Budget, we will pass it and then the Supplementary Budget will come in the form of an Appropriation Bill and when that Bill is brought before the House we are not given an opportunity to discuss it even though it is a Money Bill. Even though the other House has no right to vote on the Money Bill, they have been given ample opportunity to discuss it at length and any number of Members speak on it. I have been continuously fighting on this point and I have brought it to your kind notice a number of times. Sir, I am very much hurt and pained that this House is being neglected in this way. You kindly look into this aspect of the matter and take whatever decision you like.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தை உணர்ந்து கொள்கிறேன். மேலவையில் இந்த டிமாண்ட்ஸ் பெருவாரியாக விவாதிப்பதில்லை. அங்கே பெரிய அளவில் விவாதம் செய்திருக்கலாம். விவாதம் அதிக நேரம் கூடாது என்பது அல்ல. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முதலில் இதற்கு இவ்வளவு நேரம் என்று முடிவு எடுத்து விட்டு அதன்படி நடக்க வேண்டும். அம்முடிவின்படி துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் ஒரு மணி நேரத்தில் முடித்துக் கொள்வது என்பதாகும். டாக்டர் ஹாண்டே அவர்களின் கருத்தை கட்சித் தலைவர்களிடம் சொல்லி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அந்த முடிவை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் உறுப்பினர்களின் உரிமைகளைக் காப்பாற்றுவதற்குத் தயாராக இருக்கிறேன். அங்கே முடிவு எடுத்துவிட்ட பிறகு அதன்படிதான் நடக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவு சப்ளிமெண்டரி டிமாண்டு முடிந்தவுடன் விவசாய மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்வது என்று. அதற்கு கடைசியில் அரை மணி அல்லது ஒரு மணி நேரம் தான் வரும். ஆகவே துணைமானியக் கோரிக்கை மீதான விவாதத்தை 1 மணிக்குள் முடித்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்ற ஆண்டு கூட இக் கோரிக்கையை 10 மணிக்கு எடுத்து 11 மணிக்கு முடித்திருக்கிறோம். அந்த முறையை ஒட்டித்தான் இப்போது சொல்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வோட் ஆன் அக்கவுண்ட், அப்ராப்ரியேஷன் பில் பொறுத்தவரையில் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லையென்று ஏற்றுக் கொண்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வேண்டாம் என்று சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சில முக்கியமான விஷயங்கள் வரும் பொழுது, ஒரு மணிக்குள் முடிக்க வேண்டுமென்றால், டிமாண்டைப் போட்டு ஒவ்வொன்றுக்கும் கட் மோஷன் சொல்லி முடிப்பதற்கு 20 நிமிஷம் ஆகிவிடும். பின் பேசுவதற்கு 40 நிமிஷங்கள் கூட இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு இருக்கக்கூடிய குறைபாடுகள்—அப்ராப்ரியேஷன் பில்லைப் பொறுத்தவரையில் பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு செய்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்ளுகிறோம்; மறுக்கவில்லை. பல நேரங்களில் ஏற்படக் கூடிய சங்கடங்களைச் சொல்லுகிறேன். 1967-68-ம் ஆண்டை எடுத்துக் கொண்டு பார்த்தால்—அப்ராப்ரியேஷன் பில் வருகிற நேரத்தில் திடீரென்று ஒரு பிரச்னை வருகிறது, அந்த நேரத்தில் அது பற்றி பேசியது உண்டு. பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவு என்று இருந்தாலும் அப்போது மதிப்புக்குரிய ஆதித்தனார் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தார்கள்; திடீரென்று ஒரு பிரச்னை வந்தது. பேசவேண்டுமென்று கேட்டோம். அவர் வாய்ப்புக் கொடுத்தார். மேலவையில் திரு. ஏ. எல். முதலியார் அவர்கள்—அப்ராப்ரியேஷன் பில் வந்த நேரத்தில் ஒரு பிரச்னை வந்தது—அப்போது ஐந்து நிமிஷங்கள் பேச வேண்டுமென்று கேட்டார்கள். உடனே அதை ஒத்துக்கொண்டார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தால் அவசரம் இல்லையென்று மறுக்கிறீர்கள். அப்ராப்ரியேஷன் பில் வந்தால் அதையொட்டி பிரச்னைகளைப் பற்றி பேச வாய்ப்பு இருக்கும். சென்ற தடவை வோட் ஆன் அக்கவுண்ட் நேரத்தில் திடீரென்று ஒரு பிரச்னை வந்தது. அதுபற்றி பேசுவதற்கு 5 நிமிஷங்கள் கேட்கப்பட்டது. ஆனால் அது மறுக்கப்பட்டது. இருக்கக்கூடிய சங்கடங்களைச் சொல்லுகிறேன்.





முக்கியமான மணி பில் அப்ராப்ரியேஷன் பில், சப்ளிமெண்டரி பட்ஜெட், இவைகளுக்கு கட் மோஷன் கொடுக்க உரிமை இருக்கிறது. அப்படியிருந்தும், தயவுசெய்து சொல்ல வாய்ப்புக் கொடுங்கள். ரூல்ஸ் பிரகாரம் நடக்க உரிமை இருக்கிறது. இப்படியெல்லாம் இருந்தும் ஒரு மணி நேரம் முக்கால் மணிநேரம் என்று கட்டுப்படுத்தினால் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லுவது போலாகும். சட்ட மன்றத்தில் முழுக்க முழுக்க நடைபெறக்கூடிய விவாதங்களில் பேசக் கூடிய வாய்ப்புகள் தடுக்கப்படுகிறமாதிரி ஒரு அதிருப்தி மன்றத்தின் உறுப்பினர்கள் மத்தியில் இருக்கிறது என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாள் அல்லது இரண்டு நாள் விவாதம் செய்யலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நாம் எடுத்துக்கொண்ட முடிவைச் சொல்லுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்றைக்கு நேரம் கொஞ்சம் கொடுங்கள். நேற்றைய மானியத்தைப் பொறுத்தவரையில் 2 மணி வரை நீட்டினோம். நாம் இன்றைக்கு 1 மணிக்கு முடிக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. நேரத்தை சுருக்கி விவாதத்தைத் தொடங்கலாம். சப்ளிமென்டரி டிமான்ட்ஸ் மீது விவாதம் நடந்து பின்னடி கட் மோஷனைத் துவக்குவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் 1 மணியுடன் விவாதத்தை முடித்துக் கொள்ளலாம் என்றார். முடிந்த பிறகு விவசாய மானியக் கோரிக்கையை எடுத்துக் கொண்டால் அது நாளை மறு நாள் வியாழக்கிழமையும் வருகிறது. அந்த நாளில் முடித்து விடுவதாக முடிவு. இன்று ஒரு மணி வரை விவாதத்தை வைத்துக் கொண்டு நாளை மறு நாளோடு அடுத்தக் கோரிக்கையை முடித்துக் கொள்வதானால் இப்போது ஒரு மணி வரை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணிக்கு இதை பேசி முடிப்பது என்று சொன்ன பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எதற்கு? ஒரு மணிக்கு எடுத்துக்கொள்வது என்று முடிவு ஆகிவிட்டது.

கோவை செழியன் அவர்கள் உறுப்பினர் வீராசாமி பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். அது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏற வேண்டாம் என்று உத்தரவிடுகிறேன். பத்திரிகையிலும் செய்தியாக ஏறவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

## (6) 1974-75-ம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கைமீது பொது விவாதம்.

*திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, சப்ளிமென்டரி பட்ஜெட்டின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிறேன். இங்கே வரவு-செலவுத் திட்டத்திற்குப் பின்னால் பல்வேறு துறைகளுக்கான மானிய கோரிக்கைகளின் மீது விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விவாதங்களுக்கும் நாட்டில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளுக்கும் எந்த வகையிலும் சம்பந்தம் இல்லையோ என்ற ஒரு அச்சத்தை என்னுடைய உள்ளத்தில் ஏற்படுத்துகிறது.

சென்னை நகரில், நம்முடைய பேரவை கூடியிருக்கின்ற தலைநகரில் தியாகராயநகரில் பிற்பட்டோர் நலத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் விடுதியில் கடந்த சில நாட்களாக, ஒன்று இரண்டு வாரங்களாக சகிக்க முடியாத அளவுக்கு அக்கிரமங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. அந்தத் துறைக்கென ஒரு தனி அமைச்சரும், அவருக்கென அந்தரங்க உதவியாளர்களும். அதற்கு என்று ஒரு இலாகாவும் இருக்கின்ற இந்த நேரத்தில் இங்கே நகரில் ஒரு விடுதியில் மாணவர்களை அடிக்கவும் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களுக்கு உணவு வழங்காமல் அவர்களை ஏராளமான போலீஸ் வழக்குகளில் சம்பந்தப்படுத்த முயற்சி நடப்பதும் மிகவும் பரிதாபத்துக்குரிய ஒன்று என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

24-ம் தேதி—நேற்றைய தினம் பி.யு.சி. மாணவர்கள் பரீட்சை எழுதப் போகிறார்கள். ஆனால் அங்கே 110 மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதியில் —நெ. 6 ஹாஸ்டல் என்று அதற்குப் பெயர்—வார்டனாக இருப்பவர் தலைமறைவாகி இருக்கிறார். வாட்ச்மேன் தலைமறைவாகியிருக்கிறார். டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசரைக் கேட்டால் நான் ரிடையர் ஆக இன்னும் ஒரு வருஷம் தான் இருக்கிறது: நான் இதில் தலையிட விரும்பவில்லை என்று சொல்கிறார். மாண்புமிகு அந்தத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டசபைக்கு இப்போது வருவதைக் காணோம். இந்த வகையில், இந்த மாணவர்களின் நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து விசாரித்து, ஏற்ற நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தலைநகரத்திலேயே இந்த அக்கிரமம் நடக்குமானால், அதைக் கேட்க இவ்வளவு தாமதம் ஆகுமானால், நாடு முழுவதும் இருக்கும் நிலை பற்றி நான் எடுத்து விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஏதோ சம்பிரதாயத்துக்காக நாங்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே பேசுவதும், அந்தப் பேச்சுகளுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்குள்ள சாமர்த்தியத்தால் வார்த்தை ஜாலங்களை அள்ளி வீசுகிற வகையில் அவற்றை சமாளித்து பதில் சொல்லுவதும், நாம் கேட்டுவிட்டு, நம் கடமை நிறைவேறி விட்டதாக நாம் கருதிக் கொண்டு போவதாகத்தான் நிலைமை இருக்கிறது.





இப்போது சமீபத்தில் நாட்டில் இருக்கும் நிலைமை வறட்சி. இந்த வறட்சி பற்றி பேசியே நம்முடைய நேரத்தில் முக்கால் பகுதியை நாம் செலவழித்துக்கொண்டு இருக்கிறோம். மத்திய அமைச்சர் சொன்னது சரியா, மாநில அமைச்சர் சொல்வது சரியா என்பதை இந்த சட்டமன்றத்திலும், வெளியே மன்றங்கள் கிடைக்கும் நேரத்திலும் நம்முடைய நாட்டின் அரசியல் பிரச்னையாக நாள் தவறாமல் பேசிக் கொண்டு இருக்கிறோம். உள்ளபடியே இந்த வறட்சியால் பாதிக்கப்படும் மக்கள் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்து மக்கள்தான். அவர்களுடைய நிலைமையில் கொஞ்சம்கூட மாறுதல் இல்லாமல், இந்த வறட்சியால் மேலும் மேலும் அவர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதே தொடரில் கேள்வி நேரத்தில் நான் முதலமைச்சர் அவர்களை ஒரு கேள்வி கேட்டேன். வறட்சி நிவாரணப் பணிகளை சாதாரணமாக நாம் 20—25 ஆண்டுகளாகச் செய்து வந்ததைப் போல், கண்மாய்களை ஆழப்படுத்துவது, கண்மாய் கரைகளை உயர்த்துவது, கால்வாய் தூர் எடுப்பது போன்ற வேலைகளைச் செய்வது மட்டுமல்லாமல், உண்மையிலேயே விவசாயிகளுக்குப் பயன்தரக்கூடிய வகையில் கிணறுகளை ஆழப்படுத்தவும், விவசாயிகளுக்குத் தேவையான உரம், நல்ல விதைகள் தரவும் போன்ற பணிகளை நல்ல வகையில் ஏற்றுச் செய்யவேண்டுமென்று கேட்டேன். முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய பதிலைத் தரவில்லை.

இன்று பஞ்சாயத்து யூனியன்களில் எப்படி வறட்சி நிவாரண வேலைகள் நடைபெறுகின்றன என்றால், பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. ஊருக்கு ஊர் வர்ணம் பூசிய பெரிய பலகைகள் போட்டு, வறட்சி நிவாரணப் பணி என்று போட்டு, அதற்கு என்ன தொகை செலவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டு, அங்கே ஒரு 10—15 பேர் வேலை செய்கிறார்கள். அந்த வேலை முடிந்த பிறகு செக் வெட்டுகிறார்கள். உண்மையிலேயே அந்தப் பணியால் யாருக்காவது நன்மை கிட்டியதா என்று கேட்டால், நாம் யாருடைய பயன் கருதி அந்தப் பணத்தை ஒதுக்கினோமோ அந்த மக்களுக்கு அந்தப் பணம் போகவில்லை என்பது மாத்திரமல்ல, செலவழிக்கப்பட்ட திட்டங்களின் மூலம் நிரந்தரமான பலனோ, தற்காலிக நன்மையோ இல்லை என்பதைத்தான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் ஊராட்சி ஒன்றியத் தலைவனாக இருக்கிறேன் என்ற முறையில் சொல்கிறேன். எங்களுடைய பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வாழ்கிற மக்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பாகத்தான் நான் இந்தக் கருத்தை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த பஞ்ச நிவாரண வேலைகள் மூலம் சில கண்டிராக்டர்கள் பணம் சேர்க்கிறார்கள். சில அதிகாரிகள் சில வசதிகளைப் பெறுகிறார்கள். சில இடங்களில் அரசாங்கத்திற்கு விளம்பரம் கிடைக்கிறது. இதைத் தவிர, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இதனாலே எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தப்பஞ்சம் ஏற்படுவதற்கு முன்னாலே, ஒரு வறட்சியைச் சமாளிக்கும் அளவுக்குக் கூட இந்த நாட்டிலே இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களை——குறிப்பாக இராமநாதபுரம் மாவட்ட மக்கள், மதுரை மாவட்ட மக்கள்—வறட்சிப் பகுதியில் இருக்கும் மக்களை நாம் தயாரிக்கவில்லை என்பதை மறந்து விடக்கூடாது.

ஒருதடவை கார்காலம் பொய்த்துவிட்டால், நாம் ஆகாயத்தையும், டெல்லியையும் காட்டுகிற அளவுக்கு இருக்கிறோம். நம்முடைய அமைச்சர்களுக்கு வருமுன் காக்கும் விவேகம் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் வறட்சி நிலையைப் பார்த்தால் தெரியும். 60 அடிக்குமேல் தோண்டி தண்ணீர் எடுத்து அவர்கள் அதிலே பயிர் செய்கிறார்கள். நம்முடைய விவசாய அமைச்சருக்கு அந்தப் புள்ளி விவரம் எல்லாம் வந்து இருக்கும் என்று நினைக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் சில இடங்களில் மிக அருமையான மண் இருக்கிறது. அந்த மண்ணின் வளம் மிக அருமையானது. அந்த இடங்களில் தண்ணீர் கிடைத்தாலும், தண்ணீர் உவர் சத்துடையதாக இருக்கிறது. மாண்புமிகு விவசாய அமைச்சர் கூட அதைப் பார்வையிட்டார்கள் என்று கருதுகிறேன். அன்று அவர்கள் எந்த இலாகா அமைச்சராக இருந்தார்கள் என்று எனக்கு நினைவு இல்லை. அவர்களும், நானும், முதலமைச்சர் அவர்களும் அந்த இடங்களைப் பார்வையிட்டோம். அவருக்கு அந்த நிலங்களைக் காட்டினேன். அவர்களுக்கு நான் சொன்னதில் நம்பிக்கை இல்லை. தண்ணீர் பாய்ந்தால் நிலம் விளையாமல் கூட இருக்குமா என்று அச்சம் தெரிவித்தார்கள். அந்த அளவுக்கு தண்ணீரின் தன்மை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு மலைப் பிரதேசங்களிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து தந்தால் ஒழிய, அந்த நிலைமையைச் சீரமைக்க முடியாது என்று சொன்னேன். இது இராமநாதபுரத்தில் இருக்கும் நிலைமை.

ஏதோ நீர்ப்பாசன திட்டங்களையெல்லாம் மிக அருமையான முறையில் செய்து வருவதாகச் சொன்னார்கள். அழகர் அணைத் திட்டம், வைகை பேயனாறு திட்டம் ஆகியவற்றை குறித்து ஆனந்தராவ் தலைமையில் ஒரு குழு அமைத்து, அவர்களும் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கின்றார்கள். அந்த அறிக்கை வந்ததற்குப் பின்னாலே, அமைச்சர்களின் சொந்தப் பகுதிகளுக்கு, சொந்த தொகுதிகளுக்கு ஏராளமான திட்டங்கள்—அன்-எகனாமிகல் திட்டங்கள்—நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்த அழகர் அணை, வைகை பேயனாறு திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் மீது இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான அக்கரையும் இல்லை என்ற வகையில், மக்கள் மீது இந்த அரசுக்கு எந்தவிதமான அக்கரையும் இல்லை என்பதை எடுத்துக் காட்டும் வகையில் இராமநாதபுரத்து மாவட்ட மக்கள் இருக்கிறார்கள்.





உலகத்தில் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், இவ்வளவு கடுமையான வறட்சிக்குப் பிறகும் நம்பிக்கையோடு கடுமையாக உழைக்கும் பெருங்குடி மக்களைப் பார்க்க முடியாது. இவ்வளவு கடுமையான வறட்சியிலும், ஏராளமான கடன்கள் இருந்தபோதிலும், இன்னும் நம்பிக்கையோடு அந்த இராமநாதபுரத்து மாவட்ட மக்கள் பாடுபட்டுக் கொண்டு, பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ளுகிறேன். அவர்களுக்குத் தேவையானது எல்லாம் ஒரு நீர்ப்பாசனத் திட்டம். அதை நம்முடைய அமைச்சர் அவர்கள், நம்முடைய அரசாங்கம் இன்னும் நிறைவேற்றவில்லை. அப்படி நிறைவேற்றாதவரை அந்த விவசாயிகளின் குறை, கஷ்டம் தீரப்போவதில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் செய்வது எல்லாம், நல்ல விவசாயம் செய்யக் கூடிய தஞ்சைப் பகுதியில் சில திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி, அதனாலே பட்டங்கள் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். பாராட்டைப் பெற்று இருக்கிறார்கள். சில கல்லூரிகளில் 75—80 மார்க்குகள் எடுத்த மாணவர்களைத்தான் அட்மிட் செய்வார்கள். அவர்களுக்கு கடைசியில் ரிசல்ட் வருகிறபோது 80—90 சதவிகிதம் வரும். நன்றாக விளையும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சில நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, சில நெற்பயிர்களை பரிசோதனை செய்து விட்டு—நிபுணர்களின் சாமர்த்தியத்தை மறைத்து—அமைச்சர்கள் பெருமை தேடிக் கொள்வதுதான் இன்றைய நிலைமையாக இருக்கிறது. உண்மையான திறமையான, சாமர்த்தியமான விவசாயிகள் இராமநாதபுரத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அதை அவர்கள் செய்யவில்லை.

20 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தே இதே நிலைமை, கொஞ்சம் கூட மாறாமல் அப்படியே இருக்கும் பகுதி இராமநாதபுரம் மாவட்டப் பகுதியாகும். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், மதுரை மாவட்டத்தில் தேனி தொகுதியில், தேனிக்கு 5 மைல் தொலைவிற்குப் அப்பால், 1 ஏக்கர் இன்றும் 5000 விலை போகும்—நல்ல புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. ஆனால் கடந்த 10 ஆண்டு காலமாக அங்கே எந்தவிதமான விவசாயமும் நடைபெறவில்லை. எப்போதாவது மழை பெய்தால் விவசாயம் செய்வார்கள். வள்ளல் நதி வைகை நதியும், பெரியாறும் இரண்டு பக்கமும் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அந்த "ட" வளைவுக்குள் இந்தக் கிராமம் பாசன வசதியில்லாமல் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் அந்தக் கிராமத்திற்குச் சென்று, வாக்குறுதி கொடுத்து விட்டு வந்தார்கள். வாக்குறுதி கொடுத்ததற்குப் பின்னாலே இலாகா மாறியதே தவிர, அந்த மக்களின் நிலைமை மாறவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் என். ஆர். டி. வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்கள் நிறைவேற்றவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை அவர்கள் ஓட்டு போட்டார்கள். இப்போதும் மாறாமல் அதே பயங்கரமான நிலைமை இருக்கிறது. இவ்வளவு பயங்கரமான

நிலைமை இருந்தும், அந்த நிலம் 1 எக்கர் 5000. போகும். அந்த நிலத்தில் உயர்தர பருத்தியும், மிளகாய் வத்தலும் பயிராகும். இப்போது நீர் இல்லாத காரணத்தால் அங்கே பலகீனமாக இருக்கிறது. அதற்கு ஒரு நல்ல நீர்த் திட்டம் தீட்ட வேண்டுமென்று அந்த வட்டார மக்கள் எவ்வளவோ கேட்டுக்கொண்ட பின்பும் அது நிறைவேற்றப்படவில்லை. காரணம், இந்த அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட கடுமையான பிரச்னைகளில் கவனம் திரும்புவது இல்லை. காங்கிரஸ் சர்க்கார் எந்தப் பாதையில் போனார்களோ அதே பாதையில்தான் இன்றும் இவர்கள் போய்க் கொண்டு இருக்கிறார்கள். இந்த நாட்டில் எங்கே பார்த்தாலும் விழாக்கள் கொண்டாடுவதும், ஊர்வலங்கள் எடுப்பதும் போன்றவற்றில் தான் நம்முடைய அமைச்சர்கள் தீவிரமாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலைமை நீடிக்குமானால் நிச்சயமாக எந்தவிதமான பலனும் ஏற்படாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த பஞ்ச நிவாரணத்தைப் பொறுத்த வரையில் நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் தெளிவாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இன்று செலவழிக்கும் பணம், கிராமப்புறங்களில் செலவழிக்க ஒதுக்கியிருக்கும் பணம் 90—70 சதவிகிதம் எந்தப் பலனும் இல்லாமல் சில இடங்களில் சில பணக்காரர்கள் கையில் சேமிப்பாகப் போய் முடங்கி இருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

[முற்பகல் 10·30]

அதைத் தடுப்பதற்குரிய முறையில் ஒவ்வொரு ஊரிலும் இருக்கிற விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்தி அந்த முறையில் விவசாயிகளுக்கு நேரடியாகப் பலன் கிட்டக்கூடிய முறையில் செய்ய வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அதற்கு வேறு வகையில் விளக்கம் தந்தார்கள்.

நமது அரசாங்கம் முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறது என்று நாங்கள் பல முறை சுட்டிக் காட்டி இருக்கிறோம். அப்படிச் சுட்டிக்காட்டுகிற நேரத்தில் பல முறை முதலமைச்சர் அவர்களுடைய கோபத்திற்குக்கூட ஆளாகியிருக்கிறோம். கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூட அதுபற்றிச் சொல்வார்கள். அருப்புக்கோட்டை தொகுதி எம். எல். ஏ., சொன்னால் இன்னும் தெளிவாகச் சொல்வார்கள். அங்கே ஒரு பெரிய முதலாளி பஸ் சர்வீஸ் நடத்துகிறார். அந்த பஸ்ஸை ஓட்டுகிற டிரைவருக்கு லைசென்ஸ் இருக்காது. அப்படி அந்த பஸ்ஸை திடீரென்று விருதுநகரிலிருந்து எந்த ஊருக்கு கூட்டம் அதிகமாக இருக்கிறதோ அந்த ஊருக்கு ஓட்டுகிறார். அப்படி திராவிட முன்னேற்றக் கழக எம். எல். ஏ. கூட அந்தப் பஸ்ஸில் பயணம் செய்து ஆச்சரியப்பட்டிருக்கிறார்.

நாங்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ராஜபாளையம், அருப்புக்கோட்டை பகுதிகளில் பஸ் முதலாளிகளின் மொனோபொலி இருக்கிறது, அதைத் தடுக்க வேண்டுமென்று. ஆனால், அதைத் தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



மதுரை—புளியங்குடி என்று பஸ் போகிறது. ஜெய விலாஸ் முதலாளியைப் பாதுகாப்பதற்காக அந்த பஸ் ஓடுகிறது. அந்த முதலாளியிடம் வேலை செய்கிறவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. இப்படி அருப்புக்கோட்டையில் ஒரு பஸ் முதலாளி இருக்கிறார். இன்னொருவர் ராஜபாளையத்தில் இருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் இந்த அரசாங்கம் முதலாளிகளை ஆதரிக்கிறது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

மானாமதுரை—செட்டிகுளம் கிராமத்தில் ஒரு கொலை நடந்தது. அது பற்றி இதற்கு முன்னால்கூட முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். அந்தக் கொலை வழக்கில் நீதி மன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது. அப்படித் தீர்ப்பளிக்கப்பட்டதற்குப் பிறகு அதில் சிறை தண்டனை விதிக்கப்பட்டவருடைய வீட்டிற்குச் சென்று நம்முடைய காவல்துறையைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டர் சர்வாதிகாரமான முறையில் மோட்டார்களை உடைப்பதற்கு ஆளை வைத்து வேலை செய்திருக்கிறார். அவருடைய பெயரைக்கூட என்னால் சொல்ல முடியும். நான் அதை நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரும்பினால் அவருடைய பெயரை நான் சொல்கிறேன். அந்த இன்ஸ்பெக்டருக்கு இரண்டு முறை டிரான்ஸ்பர் ஆர்டர் வந்தும்கூட, அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவருக்கு சலுகை செய்து வருகிறார். ஐ.ஜி. அவர்களிடம் இதுபற்றி சொல்லியிருக்கிறோம். முதலமைச்சரவர்களிடமும் சொல்லியிருக்கிறோம். இப்படி இது நடப்பதற்குக் காரணம் அதில் சம்பந்தப்பட்ட ஒருவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர். இன்னொருவர் ஸ்தாபன காங்கிரசைச் சார்ந்தவர். ஆகவே, எதிர்க்கட்சிக்காரர்களைப் பழி வாங்குகிற மனப்பான்மையை இந்த அரசாங்கம் காட்டி வருகிறது.

எங்களுடைய மாவட்டத்தில் மாத்திரம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் மீது 5,000 வழக்குகள் போட்டிருக்கிறார்கள். அதில் கிட்டத்தட்ட 4,000 வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என்று சொல்லி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கத்தின் எண்ணமெல்லாம் ஏழைகளை வாழவைக்க வேண்டுமென்பதல்ல, எதிர்க் கட்சிக்காரர்களை ஒடுக்க வேண்டுமென்ற முறையில் செயல்பட்டு வருகிறார்கள். ஆகவே, அரசாங்கத்தின் இந்தப் பஞ்ச நிவாரணத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.' நன்றி.

***திரு .எம். ஆண்டி அம்பலம் :** தலைவரவர்களே, எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.

எங்கள் தொகுதியிலுள்ள வலையன்மலையில் (பெரும்மலை) பல திரா வெள்ளைக் கற்கள் இருக்கின்றன. அதை லாரிகளில் ஏற்றி திருடிச் செல்கிறார்கள். அதற்கு நத்தம் ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும் உடந்தையாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒருவித வெள்ளைச் சோளம் ஒரு கிலோ 16·50 ரூபாய்க்கு அரசு விற்கிறது, ஆனால் அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுப்பது மூட்டைக்கு 200 ரூபாய்தான். ஆக இது விவசாயிகளுக்கு எப்படி கட்டுப்படியாகும்? ஆகவே விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகிற விலையை அரசு கொடுக்க வேண்டும்.

அடுத்து, தமிழ் நாட்டிலுள்ள காவல் நிலையங்களில் குறிப்பாக நகரங்களில் இருக்கிற காவல் நிலையங்களுக்கு ஜீப் கார் இருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற நிலையங்களுக்கு ஜீப் கார் இல்லை. அவைகளுக்கு 40 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் கிராமம் எல்லையிருக்கிறது. அங்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்ட நேரத்தில் வாடகை டாக்சியைக் கேட்டால் காவல் துறையினர் வாடகை தருவார்களோ மாட்டார்களோ என்று பயந்து டாக்சி தர மறுக்கிறார்கள். ஆகவே எல்லாக் கிராமக் காவல் நிலையங்களுக்கும் ஜீப் கார் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நத்தத்திற்குப் பக்கத்தில் ஒரு விவசாயி இருக்கிறார். ஒடுகம்பட்டி என்ற கிராமத்தில் குப்பம்பட்டி என்ற பகுதியில் உள்ள ஹரிஜன மக்களுக்கு அவரது நிலத்தை எடுப்பதற்கு உத்தரவு வந்திருக்கிறது. அதை எடுத்து வந்து ஹரிஜன நல அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். அப்போது பக்கத்தில் விவசாயிகளுக்கு நிலம் காலியிருக்கிறது, அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். இருங்கள் பார்ப்போம் என்று சொல்லிவிட்டு அங்கேயிருந்த 200 தென்னை மரங்களை வாண வேடிக்கையுடன் வெட்டி வீழ்த்திவிட்டார்கள் என்று அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டிலுள்ள டவுன் பஞ்சாயத்துக்களில் பணிபுரியும் ஸ்வீப்பர் போன்றவர்களுக்கு குடும்ப பென்ஷன் முறை ஏற்படுத்தவில்லை. ஸ்கான்வன்ஜர்களுக்கும் குடும்ப பென்ஷன் முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மாதத்திற்கு முன்னால் கொடைக்கானலில் ஏற்பட்ட பஸ் விபத்தில் இறந்தவர்களுக்கு முதலமைச்சர் அவர்களுடைய நிதியிலிருந்து நிதி கொடுக்கப்பட்டது. அதேபோன்று என்னுடைய தொகுதியில் ஒரு வருடத்திற்கு முன்னால் ஒரு பஸ் விபத்தில் 16 பேர் இறந்தார்கள். அவர்களுக்கு அரசியல் கண்ணோட்டத்துடன் பணம் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் கம்பப்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு பொது இடுகாடு. அதை நத்தம் தாசில்தார் அவர்கள் ஒரு தனி நபருக்கு பட்டா செய்து கொடுப்பதாகத் தகவல் வந்திருக்கிறது என்று கிராம மக்கள் என்னிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்தை இடுகாட்டிற்கே ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, என்னுடைய தொகுதியில் கோட்டையூரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் காட்டிலாக்காவிற்குச் சொந்தமாக இருக்கிறது. அதில் அரசாங்கத்திற்கு எந்த விதமான வருமானமும் இல்லை. அந்த நிலத்தை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால் அவர்கள் அதில் விவசாயம் செய்து பிழைத்துக் கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மாங்கன்றுகள் ஏராளமாகப் பயிரிடப்பட்டு அங்கு நிறைய மாம்பழம் கிடைக்கிறது. ஆகவே அங்கு ஒரு பழத் தொழிற்சாலையை ஏற்படுத்தி அரசாங்கமே மாம்பழங்களைக் கொள்முதல் செய்து அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும், வேலையற்றவர்களுக்கும் அந்தத் தொழிற்சாலையில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் கால் ஊனமுற்றோருக்கு படுக்கை வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு படுக்கை வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நத்தம் ஊராட்சியில் 1973ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதி அன்று வீரிய திட்டத்திற்குப் பணம் கட்டியிருக்கிறார்கள். அங்கே இரண்டு வருஷம் ஆகியுங்கூட வேலை துவங்கவில்லை. அங்குள்ள மக்கள் குடிநீர் இல்லாமல் மிகுந்த வேதனையுடன் இருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாகச் செய்ய வேண்டும்.

நத்தத்தில் தீயணைக்கும் பிரிவு இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதற்கான வேலையைத் துவங்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் துணை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

இங்கே, தன்னுடைய உரையின் ஆரம்பமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சி துயர் தணிப்பை வைத்துத்தான்—எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமோ அதற்கு முதலிடம் கொடுத்து—உரையைத் தொடங்கியிருக்கிறார்கள். அதிலும் அவர்கள் வறட்சி துயர் தணிப்பு என்றுதான் கூறியிருக்கிறார்களே தவிர வறட்சி துயர் துடைப்பு என்று கூறவில்லை. ஏனென்றால் வறட்சியை பூரணமாகத் துடைக்க முடியாது என்பதால் இங்ஙனம் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, இன்றையதினம் குடி தண்ணீருக்காக பெருமளவில் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். 8 கோடியே 56 லட்சம் ரூபாய் குடி தண்ணீருக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக செலவழிக்க

ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் மிக, மிகத்தேவை குடிநீர். அதற்கு அளிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தொகையை வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லை என்றால் தாமதம் எவ்வளவு சிரமமான சூழ்நிலையை மக்களுக்கு உண்டுபண்ணும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

குடிநீர் வாரியத்தின் மூலம் செலவழிக்க அதிலிருந்து 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். குடிநீர் வாரியத்தின் மூலம் நடைபெறும் வேலைகள் பல இடங்களில் காலதாமதமாக நடைபெறுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதியில் திருப்பாற்கடல் என்ற ஊர் இருக்கிறது. பெயர்தான் திருப்பாற்கடல். அழகான பெயர். ஆனால் அங்கே குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. பாலாற்றிலிருந்து காவேரிப்பாக்கத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. அதிலிருந்து இந்த திருப்பாற்கடல் ஊருக்கு தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு, அதற்கு இன்வெஸ்டிகேஷன் எல்லாம் முடிந்து, தேவையான பணமும் கட்டியாகிவிட்டது. அங்கே தண்ணீர் கொடுப்பதற்கு, தேவையான இணைப்புக்கு, ஒரே ஒரு குழாய்தான் வேண்டும். அதில் தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வளவு காலதாமதமாக குடிநீர் வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் இன்னும் அந்த ஊருக்கு தண்ணீர் கொடுக்க முடியவில்லை. குறிப்பு அனுப்புகிறார்கள். ஆர். டி. ஓ-வுக்கு போகிறது. பிறகு மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் போகிறது. இப்படி போய்கொண்டிருக்கிறதே தவிர, தண்ணீர் கிடைப்பதற்கு வழியில்லை. ஆகவே, இந்த விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நிலைமையில்தான் செட்டித்தாங்கல், லாலாபுரம் என்ற ஊர்களும் இருக்கின்றன. அவர்கள் வேறு எதையும் கேட்கவில்லை. குடி தண்ணீர் தாருங்கள் என்று கேட்கிறார்கள். இரண்டாண்டுக் காலமாக வேலை நடக்கிறது. இன்னும் குடிதண்ணீருக்கு வழியில்லை. இப்படிப் பட்ட இடங்களுக்கு முதலிடம் கொடுத்து, உடனடியாக குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆறு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் மிக மிக பெருமைப்படத்தக்கது. ஆனால் அந்த வேலைவாய்ப்பைப் பெறுகின்ற நபர்கள் யார் யார் என்பதைப் பார்க்க வேண்டும். யார் கூலி வேலை செய்கிறார்களோ அவர்களுக்கு அந்த வாய்ப்புப் போய்ச் சேர வேண்டும். அந்த வகையில் திட்டம் இருக்க வேண்டும். காண்ட்ராக்ட் முறையில் "மாஸ் காண்ட்ராக்ட்" என்று சொல்லி, அந்த ஊரில் இருக்கிற, அந்த வேலையில் ஈடுபடுகின்ற கூலிக்காரர்களுக்கு. அந்த காண்ட்ராக்டை தர வேண்டும். நான் பலமுறை இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். அந்த காண்ட்ராக்டில் வருகின்ற ஆதாயம் அந்தக் கூலிகளுக்கே கிடைக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல. இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரம்பித்திருக்கிற வறட்சி நிதிக்கு "உங்களுடைய மழைக் கரங்களை நீட்டுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழக மக்கள் அதற்கு முன் வந்தால் நிச்சயமாக வெற்றிகரமாக நடைபெறும். இயன்ற அளவு உதவ முன்வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மக்கள் மனமுவந்து தருகின்ற நிதியை வசூல் செய்து, பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் தணிப்பது நல்லது என்று மத்திய நிதி அமைச்சர் கூட கூறியிருக்கிறார்கள். நல்ல காரியங்களுக்கு தமிழக மக்கள் எப்போதும் உதவ முன்வருவார்கள். ஆனால் இப்படி வசூல் செய்யும் பணத்திற்கு இன்றைக்கு அரசாங்கத்திடம் கணக்கு கேட்பது போல தனிப்பட்ட ஸ்தாபனங்கள் வசூல் செய்து செலவிடும் பணத்திற்கு கணக்கு கேட்க முடியாதது மட்டுமல்ல, அவர்களால் சரியாக செயல்பட முடியுமா என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆகவே, அவர்கள் வசூலிக்கின்ற பணத்தை எல்லாம் அரசாங்கத்திடம் கொடுத்து செலவழிக்க ஏற்பாடு செய்தால் மக்களுக்கு இப்படிப்பட்ட கட்சிகளின் பெயரில் ஓரளவு நம்பிக்கை ஏற்படும். யார் வசூல் செய்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும், அந்தப் பணத்தை அரசாங்கத்திடம் கொடுத்து முறையாகச் செலவிடுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நமக்கு எல்லாக் காரியங்களுக்கும் மின்சாரம் இன்றியமையாத தேவையாக இருக்கிறது. இன்றைக்கு நம்மை எதிர்நோக்கி இருக்கின்ற பெரிய பிரச்சனைகளில் மின்சாரமும் ஒன்று. அண்மையில் வருகின்ற செய்திகளைப் பார்த்தால் நமக்கு கவலையளிப்பதாக இருக்கிறது. நெய்வேலியில் 300 மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டது குறைந்து இப்போது 220 மெகாவாட் என்ற அளவுக்கு சூழ்நிலை வந்துவிட்டது. எண்ணூரில் இன்னும் அபிவிருத்தி ஏற்படவில்லை. நம்முடைய நீர் நிலையங்களில் தண்ணீர் இல்லை. இதை எல்லாம் யோசித்துப் பார்க்கும்போது எதிர்காலத்தில் நமக்கு மின்சாரம் கிடைக்குமா என்ற அளவில் அச்சம் ஏற்படுகிறது. ஆகையால் உடனடியாக மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பி, மின்சார உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ள தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய அரசும் இப்படிப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு குறையாமல் அதை மேலும் பெருக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான கோரிக்கையை உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, அதை நிறைவேற்றுவதற்கு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

[திரு. கே. ஏ. வகாப்] [1975 மார்ச் 25

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

60,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு தரும் திட்டம் சொல்லப் பட்டிருக்கிறது. அது மிக மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றாகும். அதிகாரிகள் அதில் காலதாமதம் செய்யாமல் உடனடியாக இணைப்புகளை கொடுக்க வேண்டும். இந்த அறிவிப்பைக் கேட்ட உடன் நாங்கள் எல்லாம் பெரு மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால், இப்போது அதிகாரிகளைக் கேட்கும்போது அவர்கள் சொல்வதைப் பார்த்தால், அவர்கள் போடுகின்ற கண்டிஷன் களைப் பார்த்தால் மனம் தளர்ச்சி அடைகிறது. உங்களுக்கு ஒரு கம்பம் இருந்தால்தான் இணைப்பு தருவோம் என்று கண்டிஷன் போடுகிறார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்னால் மனு செய்திருந்தால்தான் பரிசீலிப்போம் என்கிறார்கள். அதனால் இந்த 60,000 இணைப்பு எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. கண்டக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது, தேவையான இதர சாமான்கள் தட்டுப்பாடு இருக்கிறது என்றெல்லாம் காரணம் சொல்கி றார்கள்.

மால்கோ நிறுவனம் நம்முடைய தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. அங்கு உற்பத்தியாகின்ற பொருட்களை நாம் பயன்படுத்திக்கொள்ள முடிய வில்லை. அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் அலுமினியத்தை எங்கெங்கோ கொண்டு போய் கம்பி களும் மற்றவைகளும் செய்யப்படுகின்றன. ஆனால், சிரமப்பட்டுக்கொண் டிருக்கின்ற நமக்கு கிடைக்காமல் இருக்கிறது. நமக்கு போதிய அளவு அதைப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப் போதுதான் மின்சார இணைப்புகள் நல்லமுறையில் தர முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் கொள்முதலுக்காக 15 கோடி ரூபாய் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கூட்டுறவுத் துறைக்கு ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிக, மிகக் குறைவு. ஏனென்றால், இப்போது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கொள் முதல் விலைக்கும், கூட்டுறவுத் துறை கொள்முதல் விலைக்கும் வித்தியாசம் இருப்பது நமக்குத் தெரியும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் விலையைவிட சற்று கூடுதலாக கூட்டுறவுத் துறையில் கொடுக்கும் முறையில் லெவி கொள்முதல் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். சிவில் சப்ளைஸ் கார்ப்ப- ரேஷன் நிர்ணயித்திருக்கின்ற விலைக்கு மேல் கொடுக்க தயக்கம் காட்டுகி றார்கள். கூட்டுறவுத் துறையில் சற்று கூடுதலாக இருப்பதால் அது மக்களுக்கு ஓரளவு திருப்தி அளிப்பதாக இருக்கும்.

இன்றைக்கு விவசாயிகள் தங்கள் வீட்டுத் தேவைக்கு போதுமான் நெல் வைத்திருப்பார்கள், வறட்சி நிலையை எதிர்பார்த்து ஒரு வருடத்திற்குப் போதுமான நெல்லைக்கூட வைத்திருப்பார்கள். அதை எல்லாம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது அவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையாவது கொடுக்க வேண்டும். கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுத்தால் இருக்கின்ற நெல்லைக் கொடுக்க ஓரளவு முன்வருவார்கள்.



1975 மார்ச் 25] [திரு. கே. ஏ. வகாப்]

விவசாயிகளுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் யாவருக்கும் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஒரு ஏக்கர் பயிர் செய்ய குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் செலவாகிறது. கிடைக்கக் கூடிய நெல் 1,300 ரூபாய் அல்லது 1,400 ரூபாய்க்கு இருக்கும். ஆக, 4 மாதம் ஒரு விவசாயி பாடுபட்ட பிறகு 400 ரூபாய்தான் கிடைக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மத்திய அரசு கொள்முதல் விலையைப்பற்றி எப்படிச் சொல்லியிருந்தாலும் மாநில அரசு கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்க வேண்டும். அரசாங்க கொள்முதலுக்குக் கொடுத்தால் பெருத்த நஷ்டம் ஏற்படுமே என்று விவசாயிகளுக்கு இருக்கிற அச்சத்தைப்போக்குவ தோடு அதிக விலை கொடுத்தால் வீட்டு உபயோகத்திற்கு வைத்திருக்கக் கூடிய நெல்லைக் கூட கொடுப்பார்கள். ஆகவே, கூட்டுறவுத்துறைக்கு இன்னும் அதிகத் தொகை ஒதுக்கி, நெல் கொள்முதலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு மார்க்கெட் ரேட் கொடுக்க வேண்டு மென்று கூட நான் சொல்லவில்லை. 75 கிலோ நெல் மூட்டைக்கு 125 ரூபாய் மார்க்கெட் ரேட் வருகிறது. அப்படியானால் ஒரு குவிண்டாலுக்கு 175 ரூபாய் வரும். அந்த அளவுக்கு கொடுக்காவிட்டாலும் ஒரு குவின் டாலுக்கு 150 ரூபாய் கொடுங்கள். இப்போதே இந்த விலை இருக்கிறது. இன்னும் 3, 4 மாதங்கள் பற்றி நினைக்கும்போது நிலைமை பயங்கரமாக இருக்கிறது. இப்படி கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுத்தால்தான் கொள்முதலுக்கு ஒழுங்காக நெல் கிடைக்கும்; வறட்சியை ஓரளவு சீர் செய்ய முடியும். அரசாங்கத்திற்குத் தேவையான உணவு தானியம் கிடைக் கும். ஆகவே, அந்த வகையில் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தணிக்கைச் சாவடிக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பாக, தாலுகா அளவிலும் தணிக்கைச் சாவடிகள் வைத்து இருக்கிறார்கள். அதை மாற்றி விட்டு, மாவட்ட அளவில் தணிக்கைச் சாவடிகளை வைத்துக் கொண்டால் பொதுவாக எல்லோருக்கும் பயனுள்ள தாக இருக்கும். பல வசதிகளும் அதனால் பெருகும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் வந்தவாசியில் ஒரு பட்டணம் படி விலை ரு. 3-50 அதே அரிசி வேலூரில் 6 ரூபாய்க்கு விற்கிறது. ஒரே மாவட்டத்தில் இப்படி இரண்டுவிதமான விலை இருக்கிறது. ஒருபுறம் விவசாயிகளுக்கு போதுமான விலை கிடைக்காத கஷ்டம், இன்னொருபுறம் இருக்கிற மக்கள் வாங்கிச் சாப்பிடுகிற அளவுக்கு விலை இல்லாத கஷ்டம். இப்படி பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட அளவில் அரிசி, தானியங்களை எடுத்துச் செல்லலாம் என்ற முறையில் திட்டங்களை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் பல நல்ல திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 5 புதிய தொழு நோயா ளிகள் பாதுகாப்பு இல்லங்கள், ஊனமுற்றோருக்கு மேலும் உதவி போன்ற திட்டங்களை கருணை உள்ளத்தோடு முதலமைச்சாவர்கள் அறிவித் திருக்கிறார்கள். ஏற்கெனவே பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு, செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதைப்போல இன்னொரு திட்டத்தையும் அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம். எங்கள் மாவட்டத்தையும் பக்கத்துப் பகுதிகளையும் இணைத்து, இந்தப் போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பேருந்துகள் "ஹைதர் அலி காலம்" என்று சொல்வார்களே, அந்தக் காலத்து வண்டிகளைக் கொடுத்திருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்கள் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்த பேருந்துகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். அதோடு நான் கேள்வி நேரத்தில் கூட சொன்னதைப்போல அந்தக் கழகம் நல்ல முறையில் செயல்பட, வடார்காடு, தென்னார்காடு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் ஆலோசனைக் குழுவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு முறையை வைத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்று கேட்டால் சிரமங்கள் எங்களுக்குத் தெரிகிறது. பொது மக்களுடைய சிரமங்களை நாங்கள் அங்கே எடுத்துச் சொல்லவும் வசதியாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் இது போல வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றி.....:

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: நீங்கள் விவசாய டிமாண்டிலே அதைப் பற்றிப் பேசலாம். நேரமாகிவிட்டது.

<u>திரு. கே. ஏ. வகாப்</u>: ஆகவே, இந்த துணை நிதி மானியக் கோரிக்கையில் நல்ல அம்சங்கள் இருப்பதை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அடுத்ததாக, திருமதி சத்தியவாணிமுத்து. பத்து நிமிடம். 11 மணிக்கெல்லாம் முடித்து விடுங்கள்.

<u>திருமதி சத்தியவாணிமுத்து</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரியுள்ள துணை மானியக் கோரிக்கைகள் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வறட்சி நிவாரண நிதிக்காக அவர் எடுத்துள்ள முயற்சியை நான் பாராட்டுகிறேன். ஆனால், அதிலே நாட்டிலே பெரிய சர்ச்சை ஏற்பட்டதைக் குறித்து நான் வருந்துகிறேன். நிதி திரட்டுவதில் நமது முதல்வர் அவர்கள் மிகவும் கெட்டிக்காரர். அவருடைய பெயரிலேயே நிதி அமைந்திருக்கிறது என்ற எண்ணத்தோடு கேட்டுக் கேட்டு நிதி வாங்கிப் பழக்கப்பட்டதன் விளைவாக—மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற நிதியைக் கூட வேண்டாம் என்று சொல்லிவிட்டு—இன்றைக்கு வறட்சி நிவாரணத்திற்காக நிதி வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அதைக் குறித்து எதிர்க்கட்சி





களுக்கும் அவருக்குமிடையே கூட வாக்குவாதங்கள் நடைபெற்றன. "ஏன் மத்திய அரசு கொடுக்கிற பணத்தைக் கூட வேண்டாம் என்று சொல்லிவிட்டு, நிதி வசூல் செய்ய வேண்டும்? நாங்கள் கொடுக்க மறுக்கிறோம்" என்றார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அரசு நிதி வசூல் செய்யட்டும்—அதிகாரிகள் வசூல் செய்யட்டும். அதை எதிர்க்கட்சிக்காரர்கள் தடை செய்ய வசதி இல்லை. நிதி அனுப்புகிறவர்கள் அரசு இலாகாவுக்கு அனுப்பட்டும். அரசு இலாக்கா அதற்குரிய கணக்கு வழக்குகளைத் தயாரிக்கட்டும்.

ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழக்கமாக அவர்கள் நிதி வசூல் செய்கிற முறைகள் இருக்கின்றன. அவர்கள் தனிப்பட்ட முறையில் கட்சியின் சார்பிலும் – தனது இல்லத்திலேயே அந்த வசூலைத் துவக்கி – கட்சியின் சார்பில் வசூல் செய்கின்ற காரணத்தினால் அதில் கணக்கு வழக்குகள் சரியாக இல்லை என்பது அன்றிலிருந்தே இந்தக் குற்றச்சாட்டுக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். இன்றைக்கு இதைப்போல – வறட்சி துயர் தணிப்புக்கு இவர்கள் மத்திய அரசு கொடுக்கிற நிதியினை வேண்டாம் என்று சொல்லி மக்களிடத்தில் இருந்து நேரில் வசூல் செய்கிறேன் என்று சொல்லி – வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

காரணம், அவர்களுக்கு நிரம்ப நம்பிக்கையுண்டு. தம்மிடத்தில் அதிகாரம் இருக்கிறது. அதிகாரத்தில் இருந்துகொண்டு எவ்வளவு அச்சுறுத்த முடியுமோ அவ்வளவு அச்சுறுத்தியும் வருகிறார்கள். பலர் பணமும் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது கட்சிக்காரர்கள் இன்றைக்கு முதல்வர் கூறிவிட்டார் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு பொது மக்கள் மத்தியில் எவ்வளவு மிரட்டி பணத்தை வாங்க முடியுமோ அவ்வளவு மிரட்டி பணத்தை வாங்கி வழங்கவும் முற்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அறிக்கையும் விட்டிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, தீப்பற்றி எரிந்த நேரத்தில் அதற்கான நிவாரணம் அளிக்க நிதியினைச் சேகரித்த போது தம் பெயருக்கே நிதியினை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஐந்து ரூபாயாக இருந்தாலும், 2 ரூபாயாக இருந்தாலும் அவர் பேருக்கே அது போய்ச் சேரும். அரசு சார்பிலும், அதிகார பூர்வமான முறையிலும் அந்த வசூல் நடைபெறும்.

ஆனால் இன்றைக்கு ஆளுகிற கட்சியைச் சார்ந்தவர்கள் தந்திருக்கிற அறிக்கை மூலம் அமைச்சர்கள் வரும்போது "மாலைக்குப் பதிலாகப் பணம் கொடுங்கள் – வறட்சி நிதிக்கு தாருங்கள்" என்று கேட்கிறார்கள். அமைச்சர்களுக்கு மாலை போட வருகிறவர்கள் – அரசாங்கத்தின் தயவை நாடி வருகிறவர்கள் பல்பேர் – கட்சிக்காரர்களாக வருகிறவர்கள் பலபேர்கள் – அவர்கள் கொடுக்கிற பணத்திற்கான கணக்கை அங்கே யார் எடுப்பார்கள்? அமைச்சர்கள் கலந்துகொள்ளுகிற கூட்டங்களில் அதிகாரிகள் யார்போய்

கணக்கு எடுக்கிறார்கள்? அமைச்சர்கள் தங்களிடம் பொதுக்கூட்டங்களில் கொடுக்கிற பணத்தை அந்த இடத்தில் யார் கையில் எப்படி ஒப்படைக்கிறார்கள்? அது அரசு கணக்கில் வருமா? அவரிடம் அங்கே கொடுக்கப்படுகிற பணம்—அதை அவர் வாங்கி தம் பின்னால் இருப்பவர்களிடம் கொடுக்கிற பணம் பூராவும் கணக்கில் எப்படி வரும்? நம்பிக்கைக்குரிய வகையில் எப்படி வரும் என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு ஒரு சட்டசபை உறுப்பினர் ஒரு துண்டு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே, "முதல்வர் அவர்களும், நாவலர் அவர்களும் இந்த ஒரு கூட்டத்திற்கு வருகிறார்கள். எனவே வறட்சி நிவாரண நிதிக்கு—மாலையிடுவதற்குப் பதிலாக பணத்தைக் கொண்டுவந்து தாருங்கள்" என்று துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இப்படி யார் வேண்டுமானாலும் அறிக்கை வெளியிட்டு—பணம் திரட்டித் தரலாம் என்று சொன்னால்—அதற்கு என்ன கணக்கு? இப்படி வசூல் செய்யப்படுவதில் ஏற்படுகிற கோளாறுகள் எல்லாம் என்ன என்பதை நாம் முன்பே அறிவோம். இந்த மன்றத்திலும் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு சட்டமன்ற உறுப்பினர்—கட்சி ஊழியர் எப்படி வசூல் செய்யலாம்? கட்சியின் சார்பில் அதற்கென ஒரு திட்டத்தை ஏற்படுத்தி—கட்சி பொதுச் செயலாளர் அதற்கென ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தி—கட்சியில் இருந்து துண்டு அறிக்கை வெளியிட்டு வசூல் செய்வது என்றால்—அப்படி வசூல் செய்யப்படுகிற பணம் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலமாக வசூலித்து அரசுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தால் அந்த வசூலுக்கான கணக்கு பூராவும் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இருக்கும். அப்படிச் செய்தால் அது ஒரு சரியான முறையாகும்.

இன்றைக்கு காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் பணம் வசூல் செய்கிறார்கள். அந்த வசூல் முழுவதும் கட்சிக் கணக்கில் வரும். கட்சிக்கு கணக்குக் காட்டியாக வேண்டும், பொது மக்களுக்கும் இரண்டாவது முறையாகக் காட்ட முடியும். (திரு. கு. பெரியசாமி குறுக்கீடு) அதைவிட்டு கட்சிக்காரர்களே துண்டு அறிக்கை வெளியிட்டு அங்கங்கே நிதி திரட்ட முற்படுகிறபோது கணக்கு ஒழுங்கான முறையில் வருமா மாலைகள் போடுவதற்குப் பதிலாக மேடைகளில் கொடுக்கப்படுகிற பணம் எப்படி கணக்குக் வரும்?

<u>திரு. கு. காமாட்சி :</u> உறுப்பினர் அமைச்சராக இருந்தபோது மாலைகளுக்குப் பதிலாகப பணம் வாங்கியிருப்பார்களே, அதற்கு கணக்கு எப்படிக் காட்டப்பட்டது?

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> அந்த அனுபவத்தில்தான் சொல்கிறேன். பணத்தை வாங்கி வாங்கி கொடுத்தால் அதை யாரும் ஒழுங்காக வாங்கிக் கொண்டுபோய்ச் சேர்ப்பது கிடையாது. மேடையில் பணத்தை வாங்கும்போது பின்னர் யார் கையில் கொடுக்கிறோம் என்பதே அமைச்சர்களுக்குத் தெரியாது. மேடையில் போடுகிற துண்டுகளே வீட்டிற்க்கு வந்து



சேராது. அமைச்சர்களுக்குப் போடப்படுகிற கைத்தறித் துண்டுகளே இப்படி பின்னால் போனது போனதுதான் என்கிறபோது பணத்தைப்பற்றி என்ன சொல்ல? அமைச்சர்கள் திரும்பி பி.எ. கையில் கொடுக்கிறோமா, யார் கையில் கொடுக்கிறோம் என்பது தெரியாமலேயே நீட்டுகிற கையில் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். எத்தனையோ கைகள் நீட்டி நீட்டி வாங்கிக்கொள்ளும். யார் பணத்திற்கு யார் கணக்கு வைப்பது? அரசாங்க அதிகாரி அங்கு இருக்கிறாரா? இது அரசாங்கத்திற்குச் சேருமா என்பது முக்கியமான விஷயம்.

இன்றைக்கு முதல்வர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என்ற முறையில் கேட்கவில்லை. இந்த மாநிலத்தின் முதல்வர் என்ற முறையில் கேட்கிறார். அரசு அதிகாரிகளையும் உடன் வைத்துக்கொண்டு வசூல் செய்தால் கணக்கு முறையாக வரும். இப்போது அந்த நிலை இல்லை.

நேற்று கூட நான் குடும்பக் கட்டுப்பாடு விழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கே ஒருவர் 10 ரூபாய் வறட்சி நிவாரண நிதிக்காக இதோ இந்தக் கவரில் போட்டு கட்டிக் கொடுத்தார். இதுபோல மேடைகளில் கொடுக்கப்படுகிறபோது அவற்றைக் கணக்கில் கொண்டுவருவது எப்படி முடியும்? நானே இதை இங்கே கொண்டுவந்து கொடுக்காது வேறு நிதிக்கே போய்ச் சேர்த்திருப்பேன். இதை யாரும் ஏன் செய்ய முடியாது?

நாணயத்தில் நம்பிக்கை இருந்தால் கேள்விக்கே இடமில்லை. நாணயத்தில் நம்பிக்கையில்லை என்றாகிவிட்ட பிறகு ஏன் இந்த நிதி வசூல் முறைகள்? இதுதான் கேள்வி.

சட்ட சபை அங்கத்தினரை ஏவிவிட்டு—முதலமைச்சருக்கு தாங்கள் நல்லவர்களாகப் போகவேண்டுமென்று அவர்கள் வசூல் செய்கிறார்கள்—அவர்கள் கொடுக்கவில்லை என்றால்—சட்டசபை அங்கத்தினர் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கப்பட்டுவிடுமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். அதற்குப் பயந்துகொண்டுதான் பணத்தையே கொடுப்பார்கள். இப்படிப்பட்ட ஒழுங்கற்ற முறையில்தான் நீங்கள் வறட்சிப் பணிக்கு நிதியைச் சேகரிக்கிறீர்கள் என்பதால்தான் இப்படிப்பட்ட முறைக்கு ஒத்துழைக்க அவர்களுக்கு மனம் வரவில்லை.

நானும் எனது கட்சியின் சார்பில் அந்தப் பணத்தைக் கொடுக்கத் தயாராய் இல்லை. கொடுக்க மறுக்கிறோம். நாங்கள் ஒருவரோ—இருவரோ மேலும் ஏழைகள்—நிவாரணப் பணிக்காக வசூலிக்கப்படுகிற பணத்தில் பெருந்தொகை எங்கள் சமுதாய மக்களுக்கே போய் சேரவேண்டும்..

மத்திய நிதி அமைச்சர் கூறியிருக்கிறார் – தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணியில் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று, அதற்கு அதிகப்படியான ஊதியம் தரவேண்டுமென்று.

நமது அரசைப் பாராட்டுகிற கவர்னர் அவர்கள் கூட நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகிற இடங்களைப் பார்வையிட்டபோது காண்ராக்டர்கள் எப்படி ஏழை எளியமக்களுக்குக் கொடுக்கவேண்டிய கூலியைக் கொடுக்காது இருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் சொல்லியிருக்கிறார். மண்ணை வெட்டுவது – மண்ணை வாரிப்போடுவது ஆகிய இந்தப் பணிகளில் எல்லாம் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களே ஈடுபடுகிறார்கள். அவர்களுக்குரிய கூலிப்பணம் அவர்களிடம் போய்ச் சேரவேண்டும். கவர்னரே கூறியிருக்கிறார். காண்டிராக்டர்கள் 7 ரூபாய் கொடுக்கவேண்டிய இடத்தில் 1 ரூபாய்,

(முற்பகல் 11-00)

2 ரூபாய் கூலியாகக் கொடுக்கிறார்கள் என்று. எனவே இன்று அவரே கேட்டதைச் சொல்லும்போது இந்த நிதியை நீங்கள் கேட்கிறீர்கள். வறட்சிக்குக் கேட்கிறீர்கள், துணைக் கோரிக்கை வைக்கிறீர்கள். துணைக் கோரிக்கை வைக்க வேண்டிய அளவு மத்திய அரசு விட்டிருக்கிறதா என்று நான் நம்புவதற்குக் காரணம், மத்திய அரசு கொடுக்கிற பணத்தை, உங்களுக்கிருக்கிற கோபதாபம், உங்களுக்கிருக்கிற ஆத்திரம், முன்கோபம் இவைகளாலெல்லாம் இந்த நாட்டிற்கு முறையாக, மத்திய அரசிலிருந்து சேரவேண்டிய பணத்தை, இன்றைக்கு வாங்க மறுத்துவிட்டு, மத்திய அரசு நிதியை மறுத்துவிட்டு நிதிச் சேர்த்து, சேர்த்துப் பழக்கப்பட்ட காரணத்தால், தவறான முறையிலே நீங்கள் பணத்தைச் சேர்க்கத்தான், இன்றைக்கு மத்திய அரசு சொல்லியது, பழம் நழுவிப் பாலில் விழுந்துவிட்டதுபோல், அவர்மீது கோபம் கொள்வதுபோல், நிதி வசூலில் ஈடுபட்டிருக்கிறீர்கள்.

அடுத்து, சென்னையில் குடிதண்ணீரில்லை. இதற்கு முன்னாலே, 3 நாளைக்கு ஒரு நாள் தண்ணீர் என்றார்கள். இப்பொழுது என்ன சொல்கிறார்கள்? வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் என்கிறார்கள். எப்படி சென்னையிலேயிருக்கிற மக்கள் சேர்த்து வைத்துக் குடிக்கமுடியும்? எப்படி சுகாதாரமான முறையில் சேர்த்து வைக்கமுடியும்? ஏழை பாழைகள், சட்டியிலே, பானையிலே தண்ணீரைச்சேர்த்துவைத்து, சுகாதாரம் கெட்டு, நோய் பரவாதா? அந்தப் பரவுகிற நோயைத் தடுக்க எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும்? எனவே, எப்படியாவது குடி தண்ணீர் வழங்க இந்த அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. வை. பாலசுந்தரம்</u>: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்றைய தினம் இந்தத் துணை மானியத்தை வரவேற்றுச் சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். நிதிநிலை அறிக்கையானாலும் துணை மானியமானாலும் ஏழை பாழைகளை மையமாக வைத்துத் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றுகின்ற இந்த அரசு, இந்தத் துணை மானியத்திலும் தன்னுடைய பெருமை



யான அறிவிப்புகளைச் செய்திருப்பதைப் பார்க்கமுடிகின்றது—வரவேற்புக்குரியது என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு செய்கின்ற நல்ல பணிகளைக் குறை கூறவும், குந்தகம் விளைவிக்கவும் பல பகுதிகளிலிருந்து அபசகுனங்கள் ஏற்பட்டாலும், அது ஏழை பாழைகளுக்குச் செயலாற்றுவதற்கான சூழ்நிலையைச் சூளுரையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழக அரசு இன்றைய தினம் நல்ல பணியை ஆற்றிவருகிறது என்பது நாங்கள் அறிந்த உண்மை என்பதைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கிற கோரப் பிரசனை எப்படிச் சுற்றினாலும், எங்கே சுற்றினாலும் வறட்சிக்குத்தான் வந்து நிற்கவேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இன்றைக்குத் தமிழ்நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் வறட்சிப் பணிகளில், ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், கிராமப் புறங்களிலே இந்த வறட்சி நிவாரணப் பணிகளை எவ்வளவு ஆசையோடு, ஆர்வத்தோடு வரவேற்கிறார்கள் என்பதை நான் இரண்டு மூன்று நாட்கள் என்னுடைய தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்தறிந்த காரணத்தாலே சொல்லுகிறேன்.

ஒரு கவளம் சோற்றுக்குக் கூட கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஏழைகள், பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், இன்றைக்கு இந்த வறட்சி நிவாரணப் பணி, தங்களுக்குச் சாதகமாக இருக்கிறதென்பதை மகிழ்ச்சியோடு சொல்வதை என் காதாலேயே கேட்டேன். அந்தப் பகுதியிலே வறட்சி நிவாரணப்பணி செய்கின்றபோது, தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 6 இலட்சம் ஏழைகள் இன்றைக்கு இந்த வறட்சி நிவாரணப்பணியாலே ஆதாயம் பெறுகிறார்கள் என்ற புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. இந்தப் புள்ளி விவரம் உண்மையான புள்ளி விவரமா என்ற கேள்விக் குறியைச் சிலர் எழுப்புகிறார்கள். கேள்விக் குறியை எழுப்பிப் பழக்கப் பட்டவர்கள், நல்லதைச் செய்யும்போது குறைகூறிச் தங்களைத் தயார் படுத்திக் கொண்டவர்கள், இந்த ஆட்சி எதைச் செய்தாலும் குந்தகம் விளைவிக்கின்ற குறுமதியோடுதான் இந்தப் பணியைக் குறை கூறிவருகிறார்கள். ஆனால், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், அவற்றையெல்லாம் காதாலே கேட்காமல், இன்றைக்கு நம்முடைய அரசு, நம்முடைய முதல்வர் நல்ல பணியாற்றுகிறார் என்பது நாடறிந்த உண்மையாகவிருக்கிறது. அதற்கு ஒந்தியத் துணைக் கண்டமே நற்சாட்சி கூறுகின்ற வகையில் நல்ல செயல்முறைகள் அமைந்திருக்கின்றன என்பதை நல்ல உள்ளம் கொண்டவர்கள், நல்லவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய இக்கட்டான கட்டத்திலேதான் பல சோதனைகளைக் கஷ்டங்களைத் தாங்கித் தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சோதனைகளைக் கஷ்டங்களைத் தாங்கிக்கொள்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள் மிகவும் வேதனையாக இருக்கிறார், பொதுமக்களும் உணர்ந்திருக்கிறார்கள்.

அதுவும் பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், இந்த அரசு இந்த வறட்சி நிவாரணப் பணியில் தங்களுக்குத் தேவையானவைகளைத் தேவைக்கேற்றவாறு, தன்னால் இயன்ற வரை, முடிந்தவரை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கிருக்கிற பிரச்னைக்குத் தீர்வு காண்பதையே பெரும் கடமையாகக் கொண்டிருக்கிறது இந்த அரசு. அதற்கு எந்தெந்த வகையில், எப்படியெல்லாம் தன்னால் இயன்றவரையில் செயலாற்ற முடியுமோ அதனைச்செய்து கொண்டிருக்கிறது.

மத்தியிலிருப்பவர்கள் வஞ்சகம் புரிந்தாலும், மத்தியிலிருக்கிறவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டிருந்தாலும் ஒரு கண்ணிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு, மறு கண்ணிலே சுண்ணாம்பு வைத்துக்கொண்டு பாகுபாடு காட்டினாலும் நிர்வாகத் திறமையிலே, நேர்மையாகவுள்ள நம்முடைய முதல்வர் தன்னால் எப்படியெல்லாம் நிதி திரட்ட முடியுமோ திரட்டி, திரட்டுகின்ற நிதியை எப்படிப் பயன்படுத்த முடியுமோ அந்தந்த வகையிலே செய்து கொண்டிருக்கிறார்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வறட்சி நிவாரணப் பணியிலே கொள்ளை அடிக்கிறார்கள், கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். கான்ட்ராக்டர்கள் ஆதாயம் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்காக, உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன். உண்மை நிலையை அவர்களறிந்தால் இப்படிப் பேசமாட்டார்கள். இன்றைக்கிருக்கிற சூழ்நிலையைச் சுட்டிக்காட்டினேனானால், கான்ட்ராக்டர்கள் கான்ட்ராக்ட் எடுக்கும் போது, ஏரி வேலைகளையோ, ஏரி மராமத்து வேலைகளையோ செய்யும் போது, கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள் என்று சொல்லும்போது, கான்ட்ராக்டர்களுக்காகத் துதி பாடுகிறேன் என்று பொருள் அல்ல.

இன்றைக்கு ஏரிகளுக்குத் தூர் வாருகின்றபொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பணம் ஒரு ஏரிக்கு இவ்வளவு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானதாக இல்லையென்று கூறப்படுகிறது. அது ஒரு பக்கம் போகட்டும். அவைகளைப்பற்றிக் கவலையில்லை.

நமக்கு இருக்கிற கவலையெல்லாம் ஏழைகளாக இருக்கிறவர்கள், கிராம மக்கள் ஆதாயம் பெறவேண்டும், அதுதான் நமக்கிருக்கிற கவலை. ஆகவே தான் ஏரிகளாக இருந்தாலும், குளம் வெட்டுகிற வேலைகளாக இருந்தாலும் அவற்றை ஆயக்கட்டுதாரர்கள் மூலம் தரவேண்டுமென்று அங்கீகாரத்தை நாம் வழங்குகின்ற நேரத்தில், ஆயக்கட்டுதாரர்களின் மூலம் பணி செய்கின்றபொழுது அப்படிப்பட்ட பணியைச் செய்து நிலையை உருவாக்கும்போது பணக் கஷ்டம் அவர்களை வாட்டுகின்ற காரணத்தால், ஆயக்கட்டுக்காரர்கள் சரிவர அந்தப் பணியைச் செய்ய இயலாமல் போகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருகிறேன்.





இப்படி ஆயக்கட்டுக்காரர்களின் மூலம் வேலை வாய்ப்புத் தருகின்ற நிலைமையை அரசு உருவாக்கி, ஆயக்கட்டுக்காரர்களின் மூலம் செய்கின்ற வேலைகளுக்கு முன்பணம் தருகின்ற சூழ்நிலையை நம்முடைய அரசு உருவாக்கித் தர வேண்டுமென்பதை என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிராமப்புறங்களில் நம்முடைய அரசின் திட்டத்தின்படி, எந்தக் கிராமமாக இருந்தாலும் குடிநீர் அவர்களுக்கு அவசியம் தேவைப்படுகின்றது என்று சொல்கின்றபொழுது, பல இடங்களிலே, ரூ. 5,000—ரூ. 10,000 செலவிட்டுக் கிணறுகள் தோண்டுகின்ற நேரத்தில், பாறைகள் இடைப்பட்டு தண்ணீர் கிடைக்காமல் போகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. என்னுடைய யோசனையெல்லாம், நல்ல இடத்தில், தண்ணீர் அதிகமாகவருகிறது ஓரிடத்தில் என்றால், அவற்றைக் கவனிக்கவேண்டும். பல இடங்களிலே, தண்ணீர் எடுக்க, நிறையப் பம்புகள் மூலம், காலனிப் பகுதிகளில், பழங்குடிப்பகுதிகளில், விநியோகம் செய்கின்ற முறையை வகுத்துக் கொள்ள வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும். ஏனென்றால் இன்றைக்குள்ள சூழ்நிலையின்படி காலனிப் பகுதியிலே, நம்முடைய அரசு மிக அதிகமாக அக்கறை கொண்டிருக்கிறது. அதைக் காலனிப் பகுதி மக்களும் அறிகிறார்கள்.

இன்றைக்கிருக்கிற சூழ்நிலையில் குடிநீரில்லாத கிராமமே, காலனிப் பகுதியே இருக்கக் கூடாது, இருப்பது இந்த அரசுக்கு அவமானம் என்ற கொள்கையை இந்த அரசு வைத்திருக்கிற காரணத்தால், ஒரு கிராஷ் புரோகிராம்–க்கு ஒரு திட்டம் தீட்ட வேண்டுமென்று எங்களுடைய வேண்டுகோளாக இருந்தது. அதை அடிப்படையாகக் கொண்டு, வறட்சிப் பணி நிவாரணம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, நம்முடைய அரசு எல்லா இடங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள், வாழ்கின்ற பகுதிகளிலே கிணறுகளைத் தோண்டி அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையைப்பொறுத்த வரையிலும் இன்றைக்கு நாளுக்கு நாள் தண்ணீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக இருக்கிறது. மாநகராட்சியினுடைய பயமே, எங்கே இந்தச் சீர்கேடு இன்னும் மோசமானால், சென்னையிலே இருக்கும் மக்கள் வெளி கிராமங்களுக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படுமோ என்றுதான் அச்சப்படுகிறது. அந்தக் காரணத்தால் கிராமப்புறங்களிலே தண்ணீரில்லையென்ற குறைபாடு இருக்கிற நேரத்தில் சென்னையிலே இருக்கிற மக்கள் கிராமப்புறங்களுக்குப் போனால் மேலும் தட்டுப்பாடு ஏற்படும் என்ற சங்கடம் ஏற்பட்டிருக்கிறது.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 மார்ச் 25

அந்தச் சங்கடங்களை நிவர்த்தி செய்வதற்கு மாநகராட்சி பல நடவடிக் கைகளை மேற்கொண்டிருக்கிறது. அப்படி நடவடிக்கைகளை மேற்கொண் டிருக்கிற நேரத்தில் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காக எறத்தாழ குடிசைப் பகுதிகளில், அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக இருப்பதால் கிணறுகளைத் தோண்டுகிற பணியை மாநகராட்சி செய்கிறது. 1,000 ரூபாய் 1,500 ரூபாய் அளவில் கிணறுகளைத் தோண்டுகிற போது அந்தக் கிணறுகளைத் தோண்டுவதற்கு யாரும் முன் வருவதில்லை என்ற நிலைமை இருப்பதால் கருணைமிகுந்த நம்முடைய அரசு கிணறு களைத் தோண்டுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த துணைமானியத்தை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டிற்கான துணை மானியத்தின் பேரில் எங்கள் கட்சி யின் சார்பிலே பல வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறோம. என் னைப் பொறுத்தவரையிலே இந்த வெட்டுப் பிரேரணைகளை அடிப்படையாக வைத்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு முதலாக இந்த அரசைப் பொறுத்தவரையில் 10 கோடி ரூபாய் கன்டின்ஜன்ஸி பண்டிலே இருந்து செலவழிப்பதற்காக வைத்திருக்கிறாகள், அப்படி 10 கோடி ரூபாய் அதிலே வைத்திருப்பதால் அந்த 10 கோடி ரூபாயை யும் செலவழிக்கவேண்டுமென்று அர்த்தமல்ல. இந்த துணை மானியத்தைப் பார்க்கிறபோது 8 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவழிக்கிறார்கள் என்றும் 8 கோடி ரூபாயிலே 2 கோடி ரூபாய்தான் வறட்சிக்காக என்று ஒதுக்கியிருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது கன்டின்ஜன்ஸி பண்டி லிருந்து கொஞ்சங் கொஞ்சமாக எடுத்து செலவழிக்கக்கூடிய போக்கு இருக்கிறது இந்த அரசிற்கு என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சமீ பத்திலேதான் கன்டின்ஜன்ஸி பண்டில் 10 கோடி ரூபாய் என்பதை 20 கோடி ஆக்கியிருக்கிறோம், அடுத்த ஆண்டிலே இம்மாதிரி ஒரு துணை மானியம் வருமானால் அநேகமாக அதிலிருந்து 18 கோடி செலவழித் திருக்கிறோம் என்ற நிலைமைக்குப் போய்விடுமோ என்று அச்சப்படு கிறேன்.

நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் கன்டின்ஜன்ஸி பண்டு என்பது மிகவும் அத்தியாவசியமாக ஏற்படக்கூடிய செலவுகளுக்கும் எதிர்பாராத விதமாக ஏற்படக்கூடிய செலவுகளுக்கும்தான் அதிலிருந்து கொஞ்சம் தொகையை எடுத்து செலவழிக்கலாம். ஆனால் ஒரு பெரிய அயிட்டத்திற்காக பூராவுமே இதிலிருந்து எடுத்துச் செலவழிப் பது சரியல்ல. அவர்கள் இரண்டு கோடி ரூபாய் செலவழித்திருப்பதை நியாயப்படுத்தினாலும்கூட மேற்கொண்டு 6 கோடி ரூபாய் செலவழித்தது எந்த வகையிலேயும் நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக 40 ஆம் எண் ரிலீப் சம்பந்தமாகவும் 41 ஆம் எண் பென்ஷன் சம்பந்தமாகவும் 42ஆம் எண் பொதுவான விஷயங்கள் சம்பந்தமாகவும் இந்த மானியங்கள் எல்லாம் இருக்கின்றன. இந்த



1975 மார்ச் 25] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மானியங்களில்நான் நாங்கள் அதிகமான வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத் திருக்கிறோம். இந்த 42–ல் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்திலே என்ன சொல்கிறார்கள் என்றால் இப்போது 1975–ஆம் வருஷம் பிப்ரவரி 1ஆம் தேதியிலிருந்து என்.ஜி.ஓ.க்களுக்கு நாம் பஞ்சப்படி உயர்த்திக் கொடுக் கிறோம், இந்தப் பஞ்சப்படி உயர்விற்காக 4 கோடி ரூபாய் வரையிலும் செலவழிக்கவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டிருக்கிற அளவிற்கு அது சரிதான். ஆனால் இதில் அவர் கள் சொல்லியிருப்பது என்னவென்றால் 300 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் இருப்பவர்களுக்கு 36 சதமானமும் 300 ரூபாய்க்கு மேலே சம்பளம் இருக்கிறவர்களுக்கு 27 சதமானமும் என்று கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுவது என்னவென் றால் என்.ஜி.ஓ.க்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசினுடைய முறைப் படி இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் மத்திய சர்க்காரில் 36 சதமானம், 27 சதமானம் என்று சொல்லியிருப்பது 400 ரூபாய் சம்பளத்திற்குக் குறைவாகவும் 400 ரூபாய் சம்பளத்திற்கு அதிகமாகவும் உள்ளவர்கள் என்ற முறையிலே கொடுக்கிறார்கள். அதே சமயத்திலே 36 சதமானம் என்றும் 27 சதமானம் என்று சொல்லிவிட்டு 20 ரூபா யிலிருந்து 30 ரூபாய் வரையில் என்று சீலிங்போட்ட காரணத்தினால் அவர் களுக்கு 300 ரூபாய்க்குக் குறைவாகவும் 300 ரூபாய்க்கு மேலாகவும் என்று வைத்திருந்தாலும்கூட போதுமான சலுகை கிடைக்கவில்லை என்பதை நான் ஒரு உதாரணத்தின் மூலமாகச் சுட்டிக் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

ஒரு எல். டி. சி. 250 ரூபாய் ஊதியம் பெறுகிறார் என்றால் சீலிங் வைத்த காரணத்தினால் 36 சதமானம், 27 சதமானம் என்று சொன்னாலும் கூட 36 சதமானம் என்ற அடிப்படையிலே 400க்கு குறை வாகப் பெறுவார்கள், அதேமாதிரி யூ.டி.சி.யாக இருக்கிறவர்கள் சூப் பிரண்டெண்ட்டெண்ட்களாக இருக்கிறவர்கள் 400 ரூபாய் பெருகிறார்கள் என்று வைத்துக்கொண்டால் 27 சதமானம் என்று வைத்து சீலிங்கும் வைத்த காரணத்தினால் ரூ. 22.85 அவர்களுக்கு நஷ்டமாகிறது. இதிலே ஒரு ஜக்ளரியே நடந்திருக்கிறது. அக்டோபர் மாதத்திலே பத்து பத்து ரூபாய் என்று அரசாங்கமே கொடுக்கும் என்று சொல்லி தாங்க ளாகவே கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பணத்தையும் இணைத்து 10 ரூபாய் என்று வைத்து இருப்பது நேரடியாக என்.ஜி.ஓ.க் களுக்கு அதை வழங்காதது மாத்திரமல்ல, பொதுமக்களிடத்திலே சொல் கிற நேரத்திலே ஏமாற்றுதல் ஆகவும் இருக்கிறது என்ற நிலைமை தான் வருகிறது. நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையிலே என். ஜி.ஓ.க்களுக்குக் கொடுத்திருககிற டி.ஏ. சம்பந்தமாக என்று கொடுத் திருக்கிறேன். ஆகவே டி.ஏ. சம்பந்தமான விஷயத்தை யோசிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் பொது விவாதத்திலே பேசும்போதுகூட ஒரு யோசனையைச் சொன் னேன், அதை எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. மத்திய சர்க்காருடைய முறையிலே ஸ்கேலத்திலே கொடுத்திருக்கிறார்கள். இங்கே நாம் ஒரு முறையில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அரியர்ஸ்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 25

17½ கோடி ரூபாய் என்று சொன்னார்கள். ஆனால், நம் முன்னால் வந்துள்ளதைப் பார்த்தால் 21 கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த ஃபிகர் உண்மை, எந்த முறையிலே செலவு செய்யப் போகிறோம் என்பது மக்களுக்குத் தெரியவேண்டும். 10 கோடி என்றும் 7½ கோடி என்றும், சொல்லி அதில் 6¼ கோடி என்று ஆகி மொத்தம் 16¼ கோடி ரூபாய் என்று சொல்லி, இந்த நேரத்திலே 21 கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறோம் என்றால் இந்த 4 கோடி ரூபாயின் விவகாரம் என்ன ? ஏதாவது செலவழித்து விட்டோமா செலவழிக்க ஏற்பாடு இருக்கிறதா என்ற விஷயத்தைத் தெளிவாக்கி வேண்டும். 21 கோடி என்று சொல்லி அதற்கான சில விவரங்களை யெல்லாம் எந்த அளவிற்குக் குறுகிய முறையிலே கொடுக்க முடியுமோ அந்த வகையில் கொடுத்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாகச் சில வெட்டுப் பிரேரணைகளில் கொடுத்திருக்கின்ற விஷயங்களைப்பற்றி மட்டும் நான் சில வார்த்தைகளைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தில் அரசு செய்த காரியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இம்மாதிரி வறட்சி சில இடங்களில் ஏற்பட்டது. இராமநாதபுரம் ஜில்லா, புதுக்கோட்டை ஜில்லா, தர்மபுரி ஜில்லா இவைகளை நிரந்தர வறட்சிப் பிரதேசம் என்று மத்திய அரசாங்கமே அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கு லாங் டெர்ம் பிளானிங் கண்டுபிடிக்கவேண்டும். மகாராஷ்டிராவில் டிரவுட் ரிலீப் என்று நிரந்தரமாக்கி அந்த டிரவுட்டிற்கு நிவாரண ஏற்பாடு செய்வது என்று ஃபண்ட் இருக்கும்பொழுது அவர்களுக்கு ஆச்சர்யமாகவோ, எதிர்பாராத காரியங்களாகவோ இருப்பதில்லை. அம்மாதிரிச் செய்கிறார்கள். அப்படி வரும்பொழுது கபினாடு கண்மாயில் தூர் எடுப்பதுபற்றிச் சொல்லியிருப்பது நல்ல ஏற்பாடு, ஆர். எஸ். மங்கலம் கண்மாயில் தூர் எடுத்து வேலை செய்யும் ஏற்பாடும் நல்ல ஏற்பாடுதான் இதிலே முக்கியமான விஷயம் என்னவென்றால் ஸ்தலத்திலுள்ள எல்லோருக்கும் முதலில் வேலை கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்ததற்குப் பிறகு மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அங்கே ஆயிரக் கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள். ஸ்தலத்திற்கு அப்பாலிருந்து வந்தும் வேலை செய்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் முதுகுளத்தூரில் நடந்த ஒரு அனுபவத்தைச் சொல்கிறேன். அங்கே வெளியிலேயிருந்தும் வருகிறார்கள். உள்ளூர்வாசிகளுக்கு வேலை கொடுப்பதில் டாப் பிரையாரிடி இருக்கவேண்டும். வெளியிலே இருந்து வருபவர்களுக்குச் சம்பளமாக 3 அல்லது 4 ரூபாய் கிடைக்கிறது. 4 ரூபாய் கிடைத்தால் அவர்கள் எப்படி அரிசி வாங்கிச் சாப்பிட முடியும் ? எனவே, அவர்களுக்கு சம்பளத்தில் பாதியை ரொக்கமாகவும், பாதியைத் தானியமாகவும் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும். இம்மாதிரி ஸ்கீமில் பாதி தானியமாகவும், பாதியை ரொக்கமாகவும் கொடுப்பது ரொம்பவும் உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த இடத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராமங்களைப் பொறுத்தவரையில் கிராமங்களுக்கு நிவாரணத்திற்காக இன்னும் உணவு போய்ச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. அதற்கான ஏற்பாடு சரியாகச் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமங்களில் சரியாக இன்னும்



1975 மார்ச் 25] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நுழையவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிராமங்களுக்குத் தானியம் கொடுக்கப்படவேண்டும். கிராமங்களுக்குத் தானியம் கொடுப்பதில் டாப் பிரையாரிட்டி கொடுக்க வேண்டியது கடமையாகும். அதிலே கூட ஒரிசாவிலும், பீகாரிலும்கூட, ஏற்கனவே அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், சில ஜில்லாக்களிலே சிகப்புக் கார்டு கொடுக்கிறார்கள், அதன் நோக்கம் என்னவென்றால், அங்கே வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு, வேலை செய்ய முடியாமல் வயோதிகர்களாக இருப்பவர்களுக்கு, இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம், கார்டு வைத்திருப்பவர்களுக்கு இலவசமாக ரேஷன் கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே அப்படிப்பட்ட இலவச ரேஷன் எங்கேயுமே கொண்டுவரப்படவில்லை. அதை எப்படிக் கொண்டு வருவது என்பதைப்பற்றிக் கண்டிப்பாகச் சிந்திக்க வேண்டும். அப்படிச் செய்தால் உண்மையாகவே அவர்களுக்கு ரிலீஃப் கிடைக்கும் என்ற நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான ஒரேயொரு விஷயத்தை மட்டும் நான் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். குடி தண்ணீர்ப் பிரச்சனை. இதிலே நான் ஒரு சிறிய விஷயத்தைக் கூற விரும்புகிறேன். சென்னையை எடுத்துக்கொண்டால் பல்லவர் ஆண்ட காலத்தில் சென்னையைச் சுற்றி நிறைய பாண்ட்ஸ் இருந்தன, சிறுசிறு குட்டைகள் இருந்தன. இவைகளையெல்லாம் நல்ல முறையில் ஒழுங்கு படுத்தி, அதிலே தண்ணீரைத் தேங்கச் செய்து, அதில் மோசமான நிலைமை ஏற்பட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டியது அவசியமே தவிர, அவைகள் பூராவையும் தூர்த்துவிட்டு, நாம் நகரத்தை விருத்தி படுத்துகிறோம் என்று சொல்லி பூராவும் தூர்ந்துவிட்டது. தண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக பழைய காலத்தில் புத்திசாலித்தனமாகச் செய்த காரியத்தை நாம் வீடு கட்டுகிறோம் என்று சொல்லி அந்த இடத்திலே செய்வது தவறு.

அதேபோல் கிராமங்களிலேயும் பார்க்கலாம். கால்நடைகளுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக ஊருணிகள் அமைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அவைகளெல்லாம் மூடப்படுகின்றன. இதிலே **It is because of lack of planning.** இந்த முறையான பிளானிங் என்பது இந்த அரசுக்கு எப்பொழுதுமே இல்லை, இருந்ததில்லை. எந்த விஷயத்தை எடுத்தாலும் கூட, **it is just a case of pragmatic approach** என்று அந்த நேரத்திலே அந்த ஜனங்களைத் திருப்தி செய்ய ஏதாவது செய்ய வேண்டுமென்ற நிலைமையிருக்கிறதே தவிர, மாவட்ட ரீதியில்கூட முறையான பிளானிங் இல்லை. மாநில ரீதியிலேயே அப்படியிருக்கவேண்டும்.

பிளானிங் கமிஷன் போட்டு ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அதையாவது விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அந்த நேரத்தில் இங்கேயுள்ள உறுப்பினர்கள் பல சிறந்த ஆலோசனைகளைக் கொடுக்க முடியும். அரசாங்கம்தான் எல்லாம் தெரிந்தவர்கள் என்ற நிலையை மாற்றி, இங்கே பல ஜில்லாக்களிலேயிருந்தும் வரும் அனுபவம் பெற்ற பல உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்டால், பிளானிங் எப்படியிருக்க வேண்டும், இயற்கைச் செல்வத்தை எப்படிப்

பாதுகாக்க வேண்டும், குடிதண்ணீர்ப் பிரச்சனையில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கவேண்டும் என்ற கருத்துக்களைச் சொல்வதற்கான நிலைமை ஏறபடும்.

ஆகவே, இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள "பர்ஸ்பெக்டிவ் பிளானிங்", பெரிய பெரிய தஸ்தாவேஜிகளையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு நாளையாவது ஒதுக்கி விவாதிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்தால் இம்மாதிரியான குறைபாடுகள் எவ்வளவு தெரியாத முறையிலே வந்திருக்கிறது—இதிலே செய்யக்கூடிய தவறைப் பற்றிச் சொல்லவில்லை—தெரியாத முறையிலே, நமக்குத்தான் தெரிந்திருக்கிறது என்ற கண்ணோட்டத்தை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று தெரியும் என்று சொல்லிக் கொள்கிறேன். பிறகு ஒவ்வொரு டிமாண்டாக எடுக்கும் நேரத்தில் ஓரிரு வெட்டுப்பிரேரணைகளை வற்புறுத்தக்கூடிய நிலை வரக்கூடும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, அவையின்கண் வைக்கப்பட்ட இறுதித் துணை மதிப்பீடுகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தந்துள்ள கருத்துக்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

துணை மானியக் கோரிக்கையில் உள்நுழைந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சில விவரங்களை இங்கே எடுத்துக்கூறினார்கள். அதிலே அவர்கள், அரசின்பால் ஒரு விளக்கம் கோரினார்கள். வறட்சிப் பணிகளுக்கு 21 கோடியே 29 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறீர்களே, இது எப்படித் திடீரென்று வந்தது, ஏற்கனவே அறிவித்ததற்கு மாறாக இருக்கிறதே என்று குறிப்பிட்டார்கள். இதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இறுதித் துணை மதிப்பீட்டின் தொடக்க உரையிலேயே நான் குறிப்பிட்டுள்ளதைப் போல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 8 கோடியே 56 இலட்சம் ரூபாய் ஆகும். குடிநீர் வடிகால் வாரியத்திற்காக 2 கோடி ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அஃதன்னியில் சுமார் 1 கோடி ரூபாய் நகராட்சிகளுக்கு இந்த வறட்சிப் பணிகளுக்காக அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, 11 கோடி 56 இலட்சம் ரூபாய். மொத்தம் உள்ள 21 கோடி 29 இலட்சம் ரூபாயில் மிச்சம் 9 கோடி 73 இலட்சம் ரூபாய் நமது திட்டச் செலவுகளில் இருந்து மாற்றியமைத்துச் செலவு செய்வதாகும். இதுவும் ஏற்கனவே அவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்த 11 கோடி 56 இலட்சம் ரூபாயையும், நம்முடைய திட்டச் செலவில் இருந்து மாற்றியமைத்துச் செலவிடுகிற 9 கோடி 73 இலட்சம் ரூபாயையும் கூட்டிப்பார்த்தால் 21 கோடி 29 இலட்சம் ரூபாய் கணக்குச் சரியாக வரும் என்பதை நான தெரிவித்துக் கொள்கிறேன்.



நான் முதலில் குறிப்பிட்ட 11 கோடி 56 இலட்சம் ரூபாய் வறட்சிப் பணிகளுக்காக நடப்பு ஆண்டில் நாம் செலவு செய்திருக்கும் செலவை மத்திய அரசு ஒப்புக் கொண்டு 11 கோடி 56 இலட்சத்திற்குப் பதிலாக 7 கோடி 50 இலட்சம் ரூபாய்தான் தந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன். அடிக்கடி கூறுவதைப் போல் அந்த 7 கோடி 50 இலட்சத்திலும் கடன் 70 சதவிகிதம். மானியம் 30 சதவிகிதம் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. தங்கமணி அவர்கள் மற்றொரு காரணம் சொன்னார்கள். இந்தச் சம்பள அகவிலைப்படியில் 300 ரூபாய்க்குக் கீழ உள்ளவர்களுக்கு 36 சதவிகிதம்; 300 ரூபாய்க்குமேல் உள்ளவர்களுக்கு 27 சதவிகிதம் என்று மாநில அரசு நிர்ணயித்திருக்கிறது; இது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அது சரியல்ல என்பதுதான் எனக்குக் கிடைத்துள்ள தகவல். மத்திய அரசிலும் 300 ரூபாய்க்குக் கீழ் உள்ளவர்களுக்கு 36 சதவிகிதமும், 300–க்கு மேல் ஊதியம் பெறுகிறவர்களுக்கு 27 சதவிகிதமும் என்றுதான் இருப்பதாக நினைவு. மேற்கொண்டு தங்கமணி அவர்களுக்குத் தகவல் கிடைத்து அளிப்பார்களானால் நான் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இல்லாவிட்டால் நான் சொல்லுவது சரி என்று அவர்கள் திருத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

பத்து கோடி ரூபாய் எதிர்பாராச் செலவு நிதியைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டு அதை 20 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். எதிர்பாராச் செலவு நிதி என்பது சட்டமன்றத்தினுடைய அனுமதி பெறுவதற்கு முன்பு செய்ய வேண்டிய செலவுகளைச் செய்வதற்காக உள்ள நிதியாகும். ஆனால், இதிலே செய்யப்படுகிற ஒவ்வொரு செலவும் சட்டமன்றம் முடிவு செய்துள்ள விதிகளின்படி அடுத்து வருகிற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் சட்டப் பேரவையின் ஒப்புதலுக்காகத் துணை மானியங்களின் பகுதிகளாகக் கொண்டு வரப்படும் என்பதையும் நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவசியமான வளர்ச்சிப் பணிகளுக்காக, மிக முக்கியமான தேவைப் பணிகளுக்காக உடனுக்குடன் நமக்குத் தொகை தேவைப்படும்போது இந்த எதிர்பாராச் செலவு நிதியிலிருந்துதான் நாம் பணத்தை அதற்கு ஒதுக்கீடு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலேதான் இப்படி 10 கோடி ரூபாயை நாம் 20 கோடி ரூபாயாக உயர்த்திக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் திரு. தங்கமணி அவர்களுக்குக் கூறிக் கொள்ளுகிறேன்.

நண்பர் வகாப் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு கோடி ரூபாய் மாத்திரந்தான் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொள்முதலுக்காக, உணவு தானியங்களை வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது; அது போதுமானது அல்ல என்று குறிப்பிட்டார்கள். நாம் நேரடியாகக் கொடுத்துள்ள

தொகை ஒரு கோடி ரூபாய். ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக கூட்டுறவுச் சங்கத்தினர் ரிசர்வ் வங்கியிடமிருந்து 10 கோடி ரூபாய் பணம் பெற்றுக் கொள்ள, பணிகளைத் தொடர்ந்து நடத்த வசதிகள் செய்யப்பட்டிருக் கின்றன. ஆகவே, தேவைப்பட்டால் அதை உயர்த்துவதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நண்பர் வகாப் அவர்களுடைய சந்தே கத்திற்கு நான் விளக்கமாக அளிக்கிறேன்.

இந்த விவாதத்தைத் தொடங்கிய நம்முடைய நண்பர் சீனிவாசன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டமே கவனிப்பாரற்றுக் கிடக்கிறது என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வாதாடுவதற்கு நான் எந்தக் குறையும் சொல்லமாட்டேன். ஆனால், இன்றைக்கு இந்த வறட்சி நிவாரணப் பணிகளில் கூட இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்த மாநிலத்தி லேயே எல்லா மாவட்டங்களையும்விட அது அதிகமாகப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் கருத்தில் கொண்டு இதுவரையில் 150 இலட்சம் ரூபாய்—நடப்பு ஆண்டில் 1974–75ம் ஆண்டில் 150 இலட்சம் ரூபாய் அங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வேன்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பல கண்மாய்கள் சிறப்புத் திட்டங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு—திருப்பத்தூர் கண்மாய்; இராமநாதபுரம் கண்மாய்; இராசசிங்கமங்கலம் கண்மாய் போன்ற பெரிய கண்மாய்கள் எல்லாம், நீண்ட நெடுங்காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த சூழ்நிலை மாற்றப்பட்டு அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. இன்னும் என்னென்ன பகுதிகளில் வேலைகள் நடைபெற வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிப்பார்களானால் அவை களைக கருத்தில கொண்டு இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதை யும் நான் இங்கே கூறிக்கொள்வேன.

திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வறட்சி நிவாரண நிதிபற்றிக் குறிப்பிட்டார்கள். யாருடைய கையிலாவது பணத்தைக் கொடுத்தால் அது ஒழுங்காக முதலமைச்சர் கைக்கு வந்து சேருமா என்றெல்லாம் கேட்டார்கள். நேற்றுக்கூட 10 ரூபாய் கொடுத்தார்கள் என்று காட்டினார் கள். என்னிடத்தில் கொடுப்பதாகச் சொன்னார்கள் . . . .

(திருமதி சத்தியவாணிமுத்து ஒரு கவரை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள்.)

திரு கே.டி.கே. தங்கமணி : சட்ட மன்றத்தில் சாமான்களைக் கொடுக்க விதிமுறைகள் இருக்கின்றனவா ? அப்படி விதிகள் இருப்பதாகத் தெரிய வில்லை. ஒவ்வொருவரும் இப்படிச் செய்தால் எக்ஸ்சேஞ்ச் ஆப் கூட்ஸ் என்று ஆகிவிடாதா ? இந்த மாதிரி முறை சரிதானா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை நான் அவ்வளவு வலியுறுத்திப் பெற்றுக் கொண்டதற்குக் காரணம் அம்மையார் அவர்கள் நாங்கள் வறட்சி நிதி கொடுக்க மாட்டோம். யாரையும் கொடுக்கவும்



சொல்ல மாட்டோம் என்று சொன்னார்கள். அவர்களே வாங்கிக் கொண்டு வந்ததற்கு நன்றி தெரிவிப்பதற்காகத்தான் அவ்வளவு வலியுறுத்திப் பெற்றுக்கொண்டேன். (குறுக்கீடு.)

ஒவ்வொரு நிதிக்கும் கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு இடங்களில் வழங்கப்பட்ட, பொதுக்கூட்டங்களில் வழங்கப்பட்ட தொகை எல்லாம் முறையாகக் கணக்கு வைக்கப்படுமா என்றார்கள். இன்னும் சொல்லப்போனால் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளித் திட்டம், சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், ஊன முற்றோர் மறுவாழ்வுத் திட்டம் இப்படி எல்லாத் திட்டங்களும் இப்போது பட்ஜட் கணக்கில் வருவதை, துணை மானியக் கோரிக்கையில் அந்தக் கணக்குகள் வைக்கப்பட்டு இந்தப் பேரவையின் அனுமதி பெற அந்தக் கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருப்பதை நன்றாக அறிவோம். அதற்கான ஆடிட்டுகள் இருக்கின்றன. அறிக்கைகளில் கூட, நான் விடுத்துள்ள, அறிக்கைகளில் சட்ட பேரவையில் கூறியதைச் சொல்லியிருக்கிறேன். "யாரும் வலியுறுத்தி நிதிகளைப் பெறக்கூடாது. அப்படி ஏதேனும்; குறைபாடுகள் வந்தால் எனக்கு அறிவிக்க வேண்டும். அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அவர்கள் சொன்னார்கள்—திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என்ற முறையில் அறிக்கை விடுகிறார்கள் என்று. அந்த அறிக்கையில் கூட—யாரும் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தனியாக வசூலில் ஈடுபடக் கூடாது என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். பொதுக்கூட்டங் களில் உண்டியல் எடுத்து அதன்மூலம் கிடைக்கிற தொகையைப் பொதுக்கூட்ட மேடையில் எண்ணி அதைப் பொதுமக்களிடத்தில் அறிவித்து, அதனை இந்த முகவரிக்கு அனுப்பவேண்டும். "டிராப்ட்" எடுத்தோ, ரொக்கமாகவோ எப்படி அனுப்பினாலும் அரசுச் சார்பில் செயல்படுகிற நிதி இலாகா சார்பில் செயல்படுகிற "முதலமைச்சர், தமிழ்நாடு வறட்சி நிவாரண நிதி" என்ற தலைப்பில் இந்த இலாகாவுக்கு நேரடியாக அனுப்ப வேண்டுமென்று தெரிவித்தேன். அதிலே எந்தத் தவறும் விளைய இடம் இல்லை. ஏதாவது தவறுகள் விளைந்தால் உடனடியாகச் சுட்டிக்காட்டப்படுமானால் ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்வேன்.

பிற்பட்டோர் நலத்துறை விடுதி ஒன்றில் நடைபெற்ற சம்பவம் குறித்து நண்பர் சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி விசாரித்த அளவில் 22, 23 ஆகிய தேதிகளில் தியாகராயநகர் விடுதியில் இருக்கின்ற மாணவர்களுக்கும், சமையல்காரர்களுக்கும், பணியாளர் களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு அதன் காரணமாக மாணவர்கள் சமையல்காரர்களையும், பணியாளர்களையும் அடித்தார்கள் என்ற புகார் எழுந்து அதன் தொடர்பாக அந்த விடுதியில் இருந்த குழல் விளக்குகள் நாற்காலிகள், மேஜைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வன்முறைச் செயல்களுக்குப் பயந்து பல மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

24—3—1975 அன்று அவர்கள் வெளியேறிய பிறகு விடுதியிலுள்ள 100 பேர்களில் 20 பேர்கள் மாத்திரம் விடுதியில் தங்கியிருக்கிறார்கள் என்றும் இதுதான் விடுதியில் நடந்த விவகாரம் என்றும் மேற்கொண்டு என்ன நடைபெற்றது என்பவைகளை நிச்சயமாக விசாரித்துத் தக்க நடவடிக்கைகளை அரசின் சார்பில் எடுப்பேன் என்று உறுப்பினர் அவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக் கொண்டு, இந்தத் துணை மானியத்தைத் துணையாகக் கொண்டு அவரவர்கள் தொகுதிக்குச் செய்யப்பட வேண்டிய பல்வேறு காரியங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியுள்ளவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு, இந்த அளவிற்கு உரையாற்றிய, கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்படிக் காலமெல்லாம் இராமநாதபுரம் மாவட்டம் அரசாங்கம் செய்கின்ற இப்படிப்பட்ட உதவிகளை எதிர்பார்ப்பது தான் நீடிக்குமா? இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரமாக ஆனந்தராவின் சிபாரிசின்படி, அழகர் அணைத் திட்டத்தை நிறைவேற்ற முடியாதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகள் எல்லாம் ஆராயப்படாமல் இல்லை. ஆராயபபடுகிற நேரத்தில், அந்திட்டத்தின் காரணமாக ஏற்படும் பலன்கள் மிகக்குறைவு என்று சொல்லப்படுகிறது. இனியும் தொடர்ந்து ஆராயப்படும்.

## (7) 1974-75-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 1.—நிலவரித் துறை.

மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 1. நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,17,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்குவிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 4. பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:



"நிதிக்கோரிக்கை எண் 4. பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம், என்ற தலைப்பின்கீழ் ரூ. 61,72,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக்கோரிக்கை எண் 5. முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,76,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 6. பத்திரப்பதிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக்கோரிக்கை எண் 6. பத்திரப்பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,75,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண். 7. மாநிலச் சட்ட மன்றம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒரு வேளை உறுப்பினர் டீலர்ஸ் நான்பூல் பெர்டிலைசர்ஸ் பற்றி சொல்கிறாரா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) சொஸைட்டி பற்றி சொல்கிறார். செங்கல்பட்டு சொஸைட்டி யிலே இன்றைக்கிருப்பது 1920 டன் (கிலோவில் சொன்னால் அம்மையார் அவர்கள் வருத்தப்படுவார்கள்), அம்மோனியா 228 டன், கால்ஷியம் நைட்ரேட் 1,420 டன்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் இப்பொழுது இருக்கிறது என்றுதான் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முன்னால் ஏதோ பரவலாக இல்லை, பரவலாக இல்லையென்று சொன்னார்கள். போன முறை சொன்ன போது கூட நான் கேட்டேன், எந்த ஊரில் இல்லை, எந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இல்லையென்று சொன்னால், அவர்கள் கேட்டால், அதை அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன்.

அதேமாதிரி, பூச்சி மருந்து, செங்கல்பட்டில் பி.எச்.சி. 7,18,000 லிட்டர் இருக்கிறது.

நீங்கள் புதிதாக விவசாயம் செய்வதால் கண்டு கொண்டேன் என்று சொன்னீர்கள், சற்று முன்னால். ஆனால், நீங்கள் இந்தக் குறையைச் சொல்லும்போது எந்த இடத்தில், எவ்வளவு வேண்டுமென்று சொல்லி விட்டால................

[1975 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இருக்கிறது என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அன்றைக்குக் கூட இருந்தது. எந்த ஊரிலே, எந்த விவசாயிக்குக் கிடைக்கவில்லையென்று வற்புறுத்திக் கேட்டபொழுது கூட, நண்பர் சொல்லவில்லை. சொன்னால், கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குழ. செல்லையா : மாண்புமிகு அமைச்சரவர்கள் பட்டியலிலே, மிகத் தெளிவாக இவ்வளவு இருப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது கணக்கிலே இருக்கிறதே தவிர, உரம் இருக்கிறதா என்றால் இல்லை, நிச்சயமாக இல்லை. இதே மன்றத்தில், முன்பு ஒரு துண்டுச் சீட்டுக் கொடுத்தால் உடனே தருகிறேன் என்று சொன்னார்கள். நான் உடனே எழுதிக் கொடுத்தேன், பேராவூரணி தொகுதியிலே இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே இல்லையென்று அமைச்சரிடம் தெரிவித்தேன். துண்டுச் சீட்டு, துண்டுச் சீட்டு என்று சொல்கிறாரே தவிர, உரம் இல்லை யென்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். ஏதோ நிறைய உரம் இருக்கிறது என்று சொல்வது கணக்கிலிருக்கிறதே தவிர, உண்மையில் இல்லை. . . . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்பொழுது எந்த சொஸைட்டி என்று சொல்லுங்கள்.

திரு. குழ. செல்லையா : பேராவூரணியில் ருத்திரசிந்தாமணியில் போதிய உரமில்லை. நான் 10 ஏக்கர் சாகுபடி செய்கிறேன், ஒரு மூட்டை தான் வாங்கியிருக்கிறேன். . . . .

திரு. பெ. சீனிவாசன் : திரு. செல்லையா ஒரு எம்.எல்.ஏ. அவருக்கே இவ்வளவு கஷ்டமென்றால், சாதாரண விவசாயி எப்படி வாங்குவான்? . . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ருத்திரசிந்தாமணி என்ற ஊர் என்று சொன்னார்கள். அந்த ஊரிலே கூட்டுறவுச் சங்கம் இருக்குமானால், அல்லது பக்கத்து ஊரில் கூட்டுறவுச் சங்கம் இருக்குமானால் நிச்சயமாக அனுப்பி வைக்கப்படும். பேராவூரணி என்று முன்னால் சொன்னார். அப்பொழுது அங்கே கைவசம் உரம் இருந்தது. மேலும் வேண்டுமென்றதால் அனுப்பி வைத்தோம். உள்ளபடியே இருக்கிற நிலைமை தெரியாமல் உரம் தேவை, கிடைக்கவில்லையென்று சொல்வதால் பயனில்லை. அரசினுடைய நிலைமை, கையில் உரம் இருக்கிறது. உரத்தை விற்கமுடியாமலிருக்கிறோம். நாம் ரூ. 30 கோடிக்கு மேல் மத்திய அரசுக்குக் கொடுக்கவேண்டும். ஆகவே, எங்கே விவசாயிகள் வாங்க மாட்டார்களோ என்று தவித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. முனு ஆதி : நாங்கள், அந்த நேரத்தில், அமைச்சரைக் கேட்டோம், எந்த ஊரிலிருக்கிறதென்று. நீங்கள் எந்த ஊரில் இல்லை யென்று கேட்டீர்கள். நியாயத்தைத்தானே பேசுகிறோம். நீங்கள்



1975 மார்ச் 25] [திரு. முனு ஆதி]

உங்களுக்கு அதிகாரிகள் கொடுக்கிற விவரத்தை வைத்துப் பேசுகிறீர்கள். சொஸைட்டியிலே இத்தனை டன்னிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார். டி.ஏ.பி., அம்மோனியம் பாஸ்பேட், யூரியா எல்லாம் வைத்துக் கொண்டு, ரூ. 160-க்கு அம்மோனியம் வாங்கினால்தான் ரூ. 106-க்கு யூரியா தருவேனென்று கம்பெல் பண்ணுகிறார்கள். ரூ. 106-க்கே வாங்க முடியவில்லை. அப்படியிருக்கும்போது, தேவையில்லாததை ரூ. 160-க்கு எப்படி வாங்குவான் விவசாயி? பி. எச். 10 விலை கேட்டால் ரூ. 70 என்று சொல்கிறார்கள். சர்க்கார் சப்ஸிடி கொடுத்து, ரூ. 30, ரூ. 35-க்குக் கொடுங்களேன். விவசாயம் பெருக வேண்டும், விவசாயம் பெருக வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, விவசாயியின் வயிற்றில் அடித்தால், எப்படிப் பெருகும்? மின் இணைப்பு கேட்டால் மோசம், பூச்சி மருந்து கேட்டால் மோசம், உரம் கேட்டால் மோசம்—எல்லாவற்றிலும் மோசம். இவர் சொல்கிறார், இப்படியெல்லாம் நிலைமை இடையாதென்று. மொச்சைக் கொட்டை வாங்கு, பச்சைப்பயறு வாங்கு, கத்திரிக்காய் வாங்கு என்று சொல்கிறான். எங்களை மாதிரி இருக்கிறவர்களிடம் கேட்டால் அதையெல்லாம் விற்றுத்தானாக வேண்டும் என்று சொல்கிறார்கள். இல்லாவிட்டால் கொடுக்க மறுக்கிறார்கள்.

60,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தால், கோடைக்காலப் பஞ்சம் போய்விடும். எவ்வளவு பேர் விவசாயம் செய்யத் தயாராக இருக்கிறார்கள்? ஆனால், மின் இணைப்பு கொடுக்கிறீர்களா ?

மின்சாரம் கொடுக்கிறார்களே, ஸ்பெசிஃபிக்காக டைம் சொல்லி விடுங்கள். எம். இ. எஸ். மூலமாகவோ, அல்லது கிராம வெட்டியான் மூலமாகவோ, இன்ன நேரத்தில் கிடைக்கும் என்று சொன்னால் நல்லது. இருக்கிற பம்ப் செட்டையே காப்பற்ற முடியவில்லை. புதிதாகக் கொடுக்காவிட்டால் பரவாயில்லை. கொடுக்க முடியாது உங்களால். ஆனால், ஓடுவதைச் சரியாக கவனிக்க வேண்டாமா? கரண்ட் வந்தவுடன் 2 மணி நேரம் ஓடிக்கொண்டிருக்கும். பிறகு அவுட் ஆகிவிடும் டர்ர்ர் என்று சத்தம் வந்து, காயில் போய்விடுகிறது.

பெர்டிலைசர் கொடுக்கிறேன் என்று கண்டிஷன் போட்டுக் கொடுக்காமல் கேட்பதை மட்டும் கொடுங்கள். இப்பொழுதுள்ள விலையில் அவனால் வாங்க முடியவில்லை. அவஸ்தை படுகிறான். ஃபாலிடால், என்டெக்ஸ், என்ட்ரின் என்று சொல்லி, இதை வாங்கினால்தான் அதைக் கொடுப்பேன் என்று சொல்லாதீர்கள். மின்சார இலாகாவையும் விவசாய இலாகாவையும் ஒரே அமைச்சரிடம் கொடுப்பது நல்லது. விவசாயம் தெரிந்தவர்தான், விவசாய அமைச்சராக இருக்கவேண்டும். விவசாயம் தெரியாதவரை அமைச்சராகப் போட்டு, தமிழ்நாட்டு மக்களைத் தொல்லைக்கு ஆளாக்குகிறீர்கள். விவசாயப் பிரச்னையைத் தமிழ் நாடு அரசு நன்றாக கவனிக்கவில்லை. சொல்வது வேறு, செய்வது வேறு, இந்த அரசு விவசாயிகளைக் கவனிக்கத் தவறிவிட்டது என்று கூறி, எங்கள் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து விடை பெறுகிறேன்.

* திரு. இரா. மாணிக்கவாசகம்: தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற விவசாய மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றையதினம் விவசாயம் பல துறைகளை உள்ளடக்கியிருக்கிறது என்பதை நாம் அறிவோம். விவசாயத்தின் மூலமாக இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால், ஒரு புறத்திலே உண்மையிலேயே விவசாயிகள் நிலத்திலே விவசாயம் செய்யவேண்டுமென்ற ஆர்வத்தோடு இருந்தாலும்கூட நிலவளம் குன்றிவிட்ட காரணத்தினால் வேறு துறைக்குச் செல்லலாமா என்று இருக்கிறார்கள். ஒரு புறத்திலே நீர்வளம் குறைந்திருக்கிறது. மறுபுறத்திலே மக்கள் தொகை மாதந்தோறும் பெருகிக்கொண்டேயிருக்கிறது. உணவு உற்பத்தி குறைவதன் மூலமாக நாட்டிலே பஞ்சநிலைமை உருவாகியிருக்கிறது.

விவசாயத்தைத் தீவிரமாக ஆக்கவேண்டுமென்ற முறையிலே காலம், பொருள், இடம் அறிந்து அரசாங்கம் தரிசு நிலமாக இருக்கிற 11 லட்சம் ஏக்கர் நிலத்தை எடுத்து நோ புராபிட், நோ லாஸ் என்ற முறையில் ஒரு திட்டத்தை உருவாக்கி சிறப்பாக அமைத்திருக்கிறார்கள். ஒரு புறத்திலே விளைநிலங்கள் எல்லாம் வீட்டு மனைகளாக விற்பனையாகின்றன. இரண்டு போகம் விளைகின்ற நிலங்கள், குளத்தின் மூலமாகப் பாசனம் பெறுகின்ற நிலங்கள் எல்லாம் வீட்டு நிலங்களாக மாறிவருகிற காரணத்தினாலே நாம் இப்படிப்பட்ட ஒரு சிறந்த திட்டத்தைப் போட்டு நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவருவது மிக மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்து இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இரண்டு போகம் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களையும், குளத்துப் பாசனம் பெறுகின்ற நிலங்களையும் வீட்டு மனைக்கு விற்பதைத் தடைசெய்தாக வேண்டும்.

விளைநிலங்களிலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் இந்தத் தொழிலிலே நாம் ஈடுபட்டால் நமக்கு முன்னேற்றம் கிடைக்காது, வசதி வாய்ப்புக்கள் கிடைக்காது என்று எண்ணி ஆலைகளிலேயும் வேறு எஞ்சினியரிங் தொழில்களிலேயும் ஈடுபடலாம். அங்கே முன்னேற்றம், வசதி வாய்ப்பு, மருத்துவ வசதி கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்ற நிலைமையிலே தொழிலாளர்கள் எல்லாம் நகரங்களை நோக்கி வந்துகொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக உழைப்பாளிகள் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதை உணர்ந்து நாம் அங்கே இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முறையிலே நல்ல ஒரு கூலி நிர்ணயம் செய்யவேண்டும். அவர்களுக்கு மருத்துவ வசதிகளை நல்ல முறையிலே செய்து தருகிற திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயம் செய்ய வேண்டுமென்றால் தண்ணீர் இல்லை, ஆள் கிடைக்கவில்லை, உரம் கிடைக்கவில்லை என்ற எல்லா வகையான சங்கடங்களையும் தாண்டி உணவுப் பொருளானாலும் சரி, பருத்தி போன்ற பணப்பயிர்களாக இருந்தாலும் சரி, உற்பத்தி செய்தவர்கள் விற்கும்போது பாதிக்கப்படுகிறார்கள்.





புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த சட்டமன்றத்திலே ஒரு முறை பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், கட்டுபடியாகக்கூடிய விலையைத் தரவேண்டுமென்றும் சொன்ன நேரத்திலே அங்கே இருந்த அமைச்சர் அவர்கள் வேறுவிதமான பதிலைத்தான் அளித்தார்கள். ஆனால், இன்றைக்கு இந்த அரசு விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே விவசாயிகளுக்கு விலை நிர்ணயித்துக் கொடுக்க வேண்டும் என்ற முறையிலே பாடுபட்டு வருகிறது.

இப்போது உற்பத்தி செய்கிற விவசாயி ஒரு ஆண்டுக்காலம் தன்னுடைய உழைப்பை, தன்னுடைய மூலதனத்தைக் கழனியிலே ஈடுபடுத்தி விளைந்ததற்குப் பின்னாலே பருத்தி வாங்குவாரற்று. கேட்பாரற்றுக் கிடக்கிறது. இந்திய பருத்தி கார்ப்பரேஷன் என்ற ஒன்று பருத்தி வாங்குவதற்காக என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் நீண்ட இழைப் பருத்திகளை, உயர்ந்த இழைப் பருத்திகளை வாங்கிக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். உயர்ந்த இழைப் பருத்தி உற்பத்தி செய்யவேண்டுமென்றும், நல்ல விலை அதற்கு இருக்கும் என்றும் சொல்லிவிட்டு, அப்படி அறிவிப்புச் செய்துவிட்டு அதை வாங்கிக் கொள்வதில்லை. இந்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள அந்தக் கார்ப்பரேஷனில் கொள்ளையடிக்கிறார்கள்; கொடுமைப்படுத்துகிறார்கள். அதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். பருத்தியை அந்தக் கார்ப்பரேஷன் வாங்க மறுத்துவிட்டாலும்கூட தமிழக அரசு அருள்கூர்ந்து விவசாயிகளிடமிருந்து பருத்தியை வாங்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். சில முதலாளிகள் பிடிவாதமாக இருந்து கொண்டு, கோவை போன்ற இடங்களிலே விவசாயிகளைப் பாதிக்கச் செய்யும் படியான காரியங்களிலே ஈடுபடுகிறார்கள்.

கோவை மாவட்டத்திலே ஆழமான கிணறுகள் வெட்டவேண்டிய நிலைமை உள்ளது. கிணறுகள் வெட்டுவதற்கான முட்டுவழிச் செலவுகள் அங்கே அதிகமாக ஆகின்றன. இந்த நாட்டிலே உள்ள துளைக் கருவிகளை அங்கே பயன்படுத்த முடியாது. வெளி நாடுகளிலிருந்து 350 அடி, 400 அடி ஆழத்திற்குச் செல்லுகின்ற குழாய்க் கிணறுகளை அமைக்கக்கூடிய முறையிலே போரிங் மெஷின்கள் வாங்கவேண்டும். அதற்கு அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விவசாயிகளுக்கு ஒரு புறத்திலே நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாக ஸ்டாண்டர்டு ஏக்கர்களாகக் கொண்டுவந்து விட்டார்கள். ஆனால், இப்போது நிலங்களை வீட்டுமனைகளாக விற்றுவிட்டு அவர்கள் நகரங்களிலே வட்டிக்கடை வைத்துக்கொண்டு விடுகிறார்கள். கோவை நகரத்திலே வட்டிக்கடை வைத்துக்கொண்டு வீடுகளை வாங்குகிறார்கள், மில்லிலே டைரக்டராக பணம் போடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொண்டால் தான் விளை நிலங்கள் விற்கப்படாமல் உண்மையிலேயே தடுக்கப்பட

முடியும், நிலங்கள் உழைக்கின்ற மக்களுக்குப் பயன்படமுடியும். என்னுடைய சிறுவாணி பகுதியிலே காட்டு நிலம் இருக்கிறது. நல்ல வளமான நிலம். அந்த நிலத்தை எடுத்துக்கொடுக்க முடியவில்லை.

இந்த ஸ்டேட் பார்மிங் கார்ப்பரேஷன் மூலமாக அதைப் பயிர் செய்தால் அங்கேயுள்ள ஆதிவாசிகளுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். மக்களுக்காக அவர்கள் உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்வார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்திலே அங்கங்கே இருக்கின்ற குளம், குட்டைகளைத் தூர் எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அருகிலே உள்ள கிணறுகளிலே தண்ணீர் ஊறும். இத்தகைய அடிப்படையில் குளம் குட்டைகளை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டால் அன் எக்னமிக் ஸ்கீம் என்று சொல்லித் தள்ளிவிடுகிறார்கள்.

நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தியூரில் ஒரு விழாவிற்கு வந்திருந்தபோது குறிப்பிட்டார்கள். அன்எக்னமிக் ஸ்கீம் என்று சொல்லப்படுவதை மறுபரிசீலனை செய்கிறேன், பொதுமக்கள் நன்மைக்காக எப்படி அது எக்னமிக்காக இருக்கும் என்று பார்த்துச் செய்கிறேன் என்று சொன்னார்கள். ஜம்புகுண்டி ஆறு இருக்கிறது. அண்ணன்தம்பி குட்டை என்ற குட்டை நாய்க்கன்பாளையம் கிராமத்தில் இருக்கிறது. அதன் மூலமாக 12 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறும். அதையும் தூர் எடுத்துத் தரவேண்டும். அப்படிச் செய்தால் விளைச்சல் பெருகும்.

திருப்பூர் மார்க்கெடிங் கமிட்டி கோவையிலே இருக்கிறது. அதனுடைய செயலாளர் தன்னிச்சையாகப் பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார். அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அதைக் கவனிக்க வேண்டுமென்றும், தவறு இருந்தால் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* <u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்தின் மீது எங்கள் கட்சியில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கடந்த இரண்டொரு ஆண்டுகளாக இந்த அரசு நாட்டுமக்களை எந்த அளவுக்குத் தவறுதலாக உண்மைக்கு மாறான புள்ளிவிவரங்களைக் கொடுத்து ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இன்றையதினம் தமிழகம் நன்றாக உணர்ந்துகொண்டிருக்கிறது. பசுமைப் புரட்சியின் காரணமாகத் தமிழகம் தன்னிறைவு பெற்று பிற மாநிலங்களுக்கு உணவு ஏற்றுமதி செய்கிறது என்று கூறிக்கொண்டிருந்தோம். இப்போது ஒரு மழை பொய்த்ததன் காரணமாக எந்த அளவிற்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், உணவுப் பொருட்களின் விலை ஏறியிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஒன்று உணவு இலாகா தந்துள்ள புள்ளிவிவரங்கள் அத்தனையும் உண்மைக்கு மாறானதாக இருக்கவேண்டும். இல்லை





யென்றால் விவசாய இலாகா தருகிற புள்ளிவிவரங்கள் அத்தனையும் உண்மைக்கு மாறானதாக இருக்க வேண்டுமென்பது நிரூபணமாகிவிட்டது இப்போது.

இதை நான் எதற்காகக் கூறுகிறேன் என்றால், சாதாரணமாக நமது அமைச்சரவர்கள் எந்த இலாக்காவிலே இருக்கும்பொழுதும் பெரிய புள்ளிவிவரங்களைக் கூறுவார்கள். குறிப்பாக, போக்குவரத்து இலாக்காவில் இருக்கும்பொழுதும், பிறகு கூட்டுறவு இலாக்காவிலே இருக்கும்பொழுதும், பிறகு விவசாய இலாக்காவிற்கு வந்தபொழுதும்கூட உண்மைக்கு மாறான புள்ளிவிவரங்களைக் கொடுத்த நிகழ்ச்சிகளையெல்லாம் இந்த மாமன்றம் நிச்சயமாக மறந்திருக்க இயலாது. ஆக, அந்தப் புள்ளிவிவரங்கள் எந்த அளவிற்கு உண்மைக்கு மாறான புள்ளிவிவரங்கள் என்பதை இப்பொழுது நாம் கண்கூடாகப் பார்க்க ஏதுவாக இருக்கிறது.

இந்த அறிக்கையைப் பார்க்கும்பொழுது பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன, பல்வேறு விளைபொருட்களின் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இரப்பர் நமது மாநிலத்தில் பெருமளவில் உற்பத்தி செய்கிறோம். அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட அமைச்சரவர்கள் அளித்த குறிப்பில் காணப்படவில்லை என்றால் இந்த விவசாய இலாக்காவில் இரப்பர் உற்பத்தி சேர்த்துக்கொள்ளப்படவில்லையா அல்லது வேறு ஏதாவது இலாக்கா அதைப் பொறுப்பேற்றிருக்கிறதா என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது அதற்கு விளக்கம் கூறுவார்கள் என்று எண்ணுகிறேன். ஏனென்றால் இந்தியாவிலேயே அதிகமாக கேரளாவில் இரப்பர் உற்பத்தி செய்தாலும்கூட, அடுத்தபடியாக, தமிழ்நாட்டில்தான் நாம் உற்பத்தி செய்கிறோம். அது ஃபாரின் எக்சேஞ்சை அதிகமாக நமக்குச் சம்பாதித்துக் கொடுக்கும் ஒரு பொருள். இதில் இந்த அரசு எள்ளளவும் அக்கறை எடுக்கவில்லை என்றால் நாம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஒருவேளை மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறலாம், இரப்பர் உற்பத்தி வன இலாக்காவைச் சேர்ந்தது, வன இலாக்காவிற்கு வேறொரு அமைச்சர் இருக்கிறார் என்று.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்படிப் பேச்சோடு பேச்சாக உண்மைக்கு மாறான புள்ளிவிவரத்தைக் கொடுத்தார் என்று என் மீது குற்றச்சாட்டை கூறினார்கள். குறிப்பாக என்னவென்று சொன்னால், தவறாக இருந்தால் நான் திருத்திக் கொள்ள முடியும். இன்ன புள்ளி விவரம் என்று சொல்லட்டும். உணவாகயிருந்தாலும் அல்லது விவசாயமாக இருந்தாலும் புள்ளிவிவரங்களை சேகரிப்பது ஸ்டேட்டிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்ட். அது அமைச்சர் இராசாராமின் கையில் இருக்கிறது. இப்பொழுது அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. நான் சொன்ன புள்ளிவிவரத்தில் எதில் தவறு இருக்கிறது என்று சொல்லட்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார். இந்தப் புள்ளி விவரங்களிலே ஸ்டேட்டிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்ட் சொன்ன புள்ளிவிவரங்கள் எது, அமைச்சர் சொன்னது எது என்று சொன்னால் திரு. ஜேம்ஸ் அவர்கள் பிரித்துச் சொல்லலாம்.

திரு. ஜே ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை ஜாக்கிரதையாகத்தான் கேட்கிறார்கள். அவர்கள் பீடிகையிட்டுத்தான், புள்ளிவிவரம் தயாரிப்பது ஸ்டேட்டிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்ட் என்றும், அதற்கு வேறொரு அமைச்சர் இருக்கிறார் என்றும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீங்கள் சொன்னதை விட்டு ரொம்பப் போகாதீர்கள், புரொசீடிங்ஸில் இருக்கிறது. நான்—வேளாண்மைத் துறை அமைச்சர்—சொன்ன புள்ளிவிவரங்கள் உண்மை அல்ல என்று சொன்னார்கள். நான் சொன்னது, எப்பொழுது, எங்கே சொன்னது என்று சொன்னால் சரியாக இருக்கும். அதை விட்டு, மாற்றிவிட்டுப் போவது என்றால் போங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் எங்கேயும் போகவில்லை. இங்கேயே இருந்து தான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். புள்ளி விவரங்களைத் தயாரிப்பதற்கு இன்னொரு இலாக்கா இருக்கிறது என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது கொடுத்த புத்தகத்திற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். அதில் ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சர் சொன்னதற்காக விளக்கம் சொல்கிறேன். அவர்கள் அதை வித்ட்ரா பண்ணினால் நானும் வித்டரா பண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் கொடுத்த புள்ளிவிவரத்திற்கு அமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்வார். அதிலே ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கடந்த ஆண்டு இந்த மாநிலத்தில் 73 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்ததாக புள்ளிவிவரம். நெல்லும், மற்றும் சிறுதானியங்களுமாக 73 இலட்சம் டன் உற்பத்தி செய்ததாகப் புள்ளி விவரம். இப்பொழுது ஒரேவொரு மழைதான் பெய்யாமல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வறட்சி நிவாரணத்தில் இவ்வளவு அக்கறை காட்டும் எதிர்கட்சியிலுள்ள அங்கத்தினர் அவர்கள் ஒரேவொரு மழை, ஒரேவொரு மழை என்று அவ்வளவு குறைவாகச் சொல்லக்கூடாது. நூறாண்டுக் காலத்தில் ஏற்படாத வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ஓராண்டில் பெய்ய வேண்டிய மழையில் முக்கால்



பங்கு மழை பெய்யவில்லை என்ற விவரம் வருகிறது. ஒரு வேளை வேறு ஊரில் பெய்திருக்கலாம். எனவே ஒரேவொரு மழை என்று சொல்ல வேண்டாம். ஓராண்டு மழை.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு மழை என்றால் ஒரு சீசன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கும் நேரம் 10 நிமிடங்கள்தான்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சரி, இதை இதோடு விட்டுவிடுகிறேன். அடுத்ததாக, நமது மாநிலத்தில்தான் கேரளத்திற்கு அடுத்தபடியாக ரப்பர் உற்பத்தி செய்கிறோம். ரப்பர் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தில் ஒரு போர்டு நியமித்திருக்கிறார்கள். அந்த போர்டு.........

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தடாரென்று குற்றச்சாட்டை சொல்லிவிட்டு, அதை அவர்கள் விட்டுவிட்டு அடுத்த பாயின்டுக்குப் போகிறார்கள். அதனால்தான் கேட்கிறேன். நான் கொடுத்த புள்ளி விவரங்கள் இதோ இருக்கின்றன. அதை எங்கிருந்து பெற்றுக் கொண்டேன் என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இதில் குறிப்பிட்டுள்ள புள்ளிவிவரத்தில் எது தவறு என்று குறிப்பாக ஒன்றைச் சொன்னால் நானும் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்படிச் சொல்லாமல், உண்மைக்கு மாறாக இருக்கிறது என்று பொதுப் படையாகச் சொல்லி, பத்திரிகையிலே பெரிதாகப் போடுவதற்கு இந்த வழியைச் செய்வது........

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நான் கூறிய அத்தனைக்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அத்தனை விவரங்களையும் சொல்வதற்கு தாங்கள் தயவு செய்து சற்று அதிக நேரம் கொடுத்தால் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 5 நிமிடங்கள் இருக்கின்றன. அதில் ஒரு புள்ளிவிவரத்திலாவது என்ன தவறு என்று சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் போக்குவரத்து இலாக்காவை..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். இது வேளாண்மைத் துறை.

திரு. ஜே. ஜேம்ஸ் : போக்குவரத்துத் துறையிலே இருக்கும் பொழுது ஒரு கோடி ரூபாய்........

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்பொழுது பேசும் வேளாண்மைத் துறையை விட்டு விட்டு எங்கே போக்குவரத்துக்குப் போகலாம் என்று பார்க்கிறார்கள். இங்கே இந்த ஆண்டு புள்ளிவிவரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே தவறு இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால், உண்மைக்கு மாறாக அமைச்சர் சொல்கிறார் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுவது அவையின் பெருமைக்கு ஏற்ற தல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு வேண்டுமானால் 5 நிமிடம் கூடத் தருகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அவருக்குக் கொஞ்சம் டயம் கொடுங்கள். அப்பொழுதுதான் குறிப்பாகச் சொல்ல வாய்ப்பு கிடைக்கும். பொதுவாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்தது என்று சொல்கிறார்கள். போக்குவரத்துத் துறையிலே இருந்தபொழுது தவறான தகவலைக் கொடுத்ததை, அவர்கள் சொல்கிறார்கள். அது வேண்டாமென்றால் விட்டுவிடலாம். இன்றைக்குள்ள விவாதத்தை யொட்டி அவர்கள் பேசுவதற்கு டயம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேரம் தருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு நமது மாநிலத்தில் உற்பத்தி 73 இலட்சம் டன், சிறுதானியங்களும், நெல்லுமாக உற்பத்தியானது. அதுதான் இந்த அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரம். ஆனால் இன்றைய தினம் ஒரேவொரு சீசன் மழை தவறியதால் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற உணவுப் பொருட்களின் விலையைப் பார்க்கும் பொழுது இங்கே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 73 இலட்சம் டன் உற்பத்தி ஆயிற்று என்று சொன்னார்கள் என்று சொல்கிறீர்கள். அது தப்பா? கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரம் தவறு என்றால் அப்படியல்லாவா சொல்ல வேண்டும்

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் சொல்வது, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட், ஃபுட் டிபார்ட்மெண்ட் கொடுத்த புள்ளிவிவரத்தையும் மாண்புமிகு விவசாய அமைச்சரவர்கள் கொடுத்த புள்ளிவிவரத்தையும் பார்த்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தப்பு என்றால், 73 இலட்சம் டன் இல்லை என்று சொன்னால் வேறு என்ன என்று நீங்கள் ஒரு புள்ளி விவரம் கொடுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: என்னுடைய நிலையெல்லாம், உணவு இலாக்கா கொடுக்கும் புள்ளிவிவரத்திற்கும், விவசாய இலாக்கா கொடுக்கும் புள்ளி விவரத்திற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எடுத்துச் சொல்லுங்கள் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. என். கே. பழனிசாமி: சார்.........,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், உங்களை நான் கூப்பிடவில்லையே, உட்காருங்கள்.

THIRU J. JAMES: I will read the first paiagraph of the Note.

"The anticipated actual production in 1974-75 is 51·30 lakhs tonnes of foodgrains."

That itself is wrong.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படி ராங் என்று சொல்லுங்கள்.

THIRU J. JAMES: What I say is actually the Government's original stand is 73. Something lakhs of foodgrains was produced last year...

MR. SPEAKER: Target........

THIRU J. JAMES: Actually the Government's stand is anticipated actual production in 1974–75 is 51·30 lakhs tonnes........

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது வறட்சியால் இவ்வளவு குறைந்து போனது என்று புள்ளிவிவரம். போன வருடம் வறட்சியில்லாதபொழுது கிடைத்தது. இப்பொழுதும் அந்த வகையில் கிடைக்க வேண்டும். ஆனால் மழை இல்லாத காரணத்தால் துண்டு விழுகிறது. ஆகவே, குறைந்திருக்கிறது.

THIRU J. JAMES: I will clear it. The anticipated actual production for 1974–75 according to the Minister is 51·30 lakh tonnes of foodgrains (interruption). It is stated in the first page of the Note.

இதை நான் தலைவரவர்களின் பார்வைக்காக விட்டு விடுகிறேன். அடுத்த பாயிண்டுக்கு வருகிறேன்.

(பிற்பகல் 1–00)

தலைவர் அவர்களே, கோராவிற்கு அடுத்த படியாக நம்முடைய மாநிலத்தில் ரப்பர் உற்பத்தி செய்கிறோம். இதற்காக மத்திய அரசாங்கம் ஒரு போர்டு வைத்திருக்கிறது. அந்த போர்டு கோட்டயத்தில் இருக்கிறது. பல்வேறு வகைகளில் மானியமாகவும் கடனாகவும் ரப்பர் உற்பத்திக்காக மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. அந்தப் பணம் நம்முடைய மாநிலத்திற்கு அந்த போர்டு வழங்கவில்லை. ஆகவே, இந்த அரசாங்கம் முயற்சி எடுத்து தமிழகத்தில் தனி ரப்பர் போர்டு அமைக்க, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

[திரு. அ. ஆறுமுகம்] [1975 மார்ச் 25

கொடுக்கிற உரத்தைத் தான், அவர்கள் அனுமதியின் பேரில்தான் வழங்கி வருகிறோம். இருந்தாலும் கூட நாம் இன்னும் கொஞ்சம் துரிதமாக அதைக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

காவிரி ஆற்றிலிருந்து சில பகுதிகளுக்குத் தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளுக்கு தண்ணீர் எடுக்கும் உரிமையை அரசு மறுக்கிறது. அதற்குக் காரணங்கள் கேட்கிற போது, 1960-ம் ஆண்டுக்கு முன்பு இறைவையின் மூலமாக அல்லது பம்ப் செட் மூலமாகத் தண்ணீர் இறைத்திருந்தால் அங்கு பம்ப் செட் வைக்கலாம் என்ற அனுமதியும் அதற்குப் பிறகு இறைவையோ அல்லது பம்ப் செட்டோ வைத்திருந்தால் அனுமதி இல்லை என்றும் அரசு உத்தரவு வழங்கியிருக்கின்றது. அந்த உத்தரவைத் தளர்த்தினால் நிச்சயமாகப் பயனுள்ளதாக இருக்குமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில விவசாயிகளுக்கு இன்று 20,000, 25,000 ரூபாய் கடன் கொடுத்து டிராக்டர்கள் வழங்கினால் நிச்சயமாக விவசாயத்தைப் பெருக்க பெருந்துணையாக இருக்கும். எங்கள் பகுதியில் சேலம் மாவட்டம் மேட்டூர் இடதுகரையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தண்ணீர் வற்றியதன் காரணமாகக் காய்ந்து விட்டன. அந்த விவசாயிகளுக்கெல்லாம் கொள் முதலில் இருந்து விதிவிலக்கு அளிப்பதோடு மட்டுமல்லாமல் அந்த விவசாயிகளுக்கு போனஸ் வழங்க அரசு நிதி கொடுத்தால் சிறப்பாக இருக்குமென்ற கருத்தை இந்த நேரத்தில் கூறிக் கொள்ளுகிறேன்.

நாம் விவசாயிகளுக்கு கிணறு வெட்ட, ஆழப்படுத்த நில வள வங்கி மூலமாகக் கடன் கொடுத்தாலும் சில நிபந்தனைகளை வைத்து கடன் கொடுக்கிறார்கள். அந்தப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அமைச்சரோடு ரிசர்வ் வங்கி மூலமாகத் தொடர்பு கொண்டிருப்பதாக ஓரிரு நாட்களுக்கு முன்பு தெரிவிக்கப் பட்டது. அந்த முயற்சியைத் தொடர்ந்து கிணறு வெட்ட, ஆழப்படுத்த நிபந்தனைகள் இல்லாமல் கடன் கொடுக்க வழி செய்தால் விவசாயிகள் நன்மை அடைய முடியும். விவசாயத்தையும் பெருக்க முடியும்.

அதுமட்டுமல்லாமல் வறட்சியின் காரணமாக சிறிய ஏரிகளைத் தூர் எடுக்கிறோம். சிறிய நீர்த் தேக்கங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். போர் வெல் ஆழமாக 500, 600 அடிக்கு போட்டுவிட்டால் அது பயனுள்ள திட்டமாக இருக்கும். ஏனென்றால் குட்டைகளில் எல்லாம் மழை பெய்தால்தான் தண்ணீர் வர முடியும். மழை இல்லையென்றால் குட்டைகளுக்குத் தண்ணீர் வர வாய்ப்பு இல்லை. விவசாயிகளுக்கு தண்ணீர் தட்டுப்பாடு இல்லையென்ற அளவுக்கு அவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த முடியும். விவசாயிகளுக்கு காலாகாலத்தில் தேவையான உரங்களைக் கொடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.



[1975 மார்ச் 25] [திரு. அ. ஆறுமுகம்]

அதுமட்டுமல்லாமல், ஓர் ஆண்டுக்கு முன்பே எங்கள் பகுதியில் விமானத்தின் மூலமாக மருந்து தெளிக்கப்பட்டது. அப்படிப்பட்ட பகுதிகளில் அதற்கு ஒரு வாடகை என்ற முறையில் வசூல் செய்யப்பட்டது. இவ்வாறு மருந்து தெளித்ததற்கு எவ்வளவு வசூலித்தார்கள் என்ற புள்ளி விவரம் இல்லை. மருந்து மேலேயிருந்து தெளிக்கப்பட்டால் நிலம் நெல் காடாகவும் இருக்கலாம். நிலக்கடலைக் காடாகவும் இருக்கலாம். வாடகை கந்தாயம் வசூலிக்கும்போது எங்களிடம் வசூல் செய்தார்கள், அதற்கான புள்ளி விவரங்கள் எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீர்த் தீர்வை வசூல் ஆண்டுக்கு ஒரு முறை என்று இருக்கிறது. இதை ஆண்டுக்கு இரு முறையாக வசூல் செய்ய உத்தரவிட்டால் விவசாயகளுக்கு மிகவும் வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மின் இணைப்பு விவசாயிகளுக்கு வேண்டுமென்றால் நான்கு ஐந்து முறைகள் அதிகாரிகளிடம் போகவேண்டியிருக்கிறது. அமைச்சரிடமும் போக வேண்டியிருக்கிறது. விவசாயிகள் கஷ்டத்தை உணர்ந்து வேறு எந்தக் காரியத்திலாவது மின் இணைப்பை நிறுத்தி, விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தற்போது நாட்டை எதிர்நோக்கியுள்ள பஞ்சம் போக்கப்படவேண்டுமென்றால் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

*Thiru K. M. SUBRAMANIAM : Hon. Speaker , Sir I want to speek more on the academic side of agriculture rather than on the practical side. First of all, I do not know the definition of 'agriculturist' and whether he is the owner or the tenant or the agricultural labourer. To-day we find that in spite of the green revolution, an agricultural labourer is getting an average per capita-income of Rs. 27 per month and that is mentioned in the report given by Dr. Minhas. Now the agricultural benefits are going to the rich agriculturists or owners of land or rich tenants and they must be passed on to the agricultural labourer.

Secondly, we find that in spite of the increase made in the production of foodgrains, prices are on the increase and I do not know, what is this principle in economics. When we were producing less quantity of foodgrains rice was available at Rs. 2 per measure and when we are producing more, rice is sold at Rs. 6 per measure. Of course, there is drought in some parts of the State. But what I want to say is that there is unbalanced production of various articles in this country. When the price of cotton goes up, people immediately shift to cotton production and if in the next season, the price goes down, they shift to some other crop which yields a higher price.

[Thiru. K. M. Subramaniam] [1975 மார்ச் 25

Formerly in the Indian States there was a legislation to the effect that no agriculturist could change his type of crop, whether commercial or food, without the consent of the Government. To-day we find that people shift to the crop which is more profitable and we must put an end to this state of affairs.

Thirdly, I would request the Hon. Minister for Agriculture to devote some more dynamic attention to the production of vegetables. There was a kitchen Garden Scheme for the City of Madras and what has happened to it? There was also a soil testing scheme. I sent the soil to the soil analyst at Kancheepuram . It is now more than one year and nothing has come out of it. So, there is no dynamism in regard to the execution of these schemes. It is no good if the schemes are only in paper.

In spite of the green revolution, an agricultural labourer in Tamil Nadu gets only Rs. 3 per day whereas in the Punjab he gets Rs. 12 per day. Still, some people say that there is green revolution in the State. I would only suggest to the Hon.Minister for Agriculture that there should be some scheme to provide supplemental income to the agricultural labourer. Otherwise, we cannot prevent people in the villages coming to the cities.

Sir, there is the Urban Extension or Development Scheme. I can understand the Urban Improvement Scheme and not the Urban Development Scheme. Now so many people in the villages come to the city nd there is no work for them. An agricultural labourer gets only Rs. 400 per year whereas a mill worker gets Rs. 4,000 per year and what is the difference in the income of these two categories?

We are still talking of socialism and is this socialism, So we must provide supplemental income to the agricultural labour in the form of the supply of cattle, etc., and if that is not done, this country cannot survive.

I hope and trust that the Hon.Minister will devote dynamic attention to agriculture and see that not only modern methods are used but also properly used so that prices of articles will come down and wages increased. I do not want to speaker more since I am not an agriculturist myself.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியமானது மிகவும் முக்கியமான மானியமாகும். ஏனென்றால் சகல விதமான வளர்ச்சியும் விவசாய வளர்ச்சியையொட்டித்தான் இருக்கிறது என்பதை அனைவரும் ஒத்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக இந்த துறையைப் பொறுத்த வரையில், தமிழகத்தை எடுத்துக் கொண்டாலும்



1975 மார்ச் 25] [திரு. சோ. அழகர்சாமி]

சரி, நாடு பூராவுமாக எடுத்துக்கொண்டாலும் சரி பாசன வசதியுள்ள பகுதியைவிட மானாவாரி நிலம் தான் பெரும் பகுதியாக இருக்கிறது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

அதுவும் மாவட்ட வாரியாக எடுத்துக் கொண்டால் தர்மபுரியில் 85 சதவீதம் மானாவாரி பிரதேசம், திருச்சியில் 70 சதவீதம், சேலம் மாவட்டத்தில் 65 சதவீதம், நெல்லை மாவட்டத்தில் 64 சதவீதம், இராமநாதபுரம் மாவட்டத்தில் 60 சதவீதம் மானாவாரி பிரதேசமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இன்று நமது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னால் பல நிபுணர்கள் கூறியிருப்பது, பெரும்பகுதி டெல்டா பகுதியைப் பொறுத்த வரையில் என்ன விதமான உரங்கள், விதைகள் போட்டால் உற்பத்தி பெருகும் என்று விசேஷ கவனம் பூராவுமே அந்தப் பகுதியில் இதுவரையில் செலுத்தினோம். இன்னும் செலுத்திக்கொண்டும் இருக்கிறோம்.

மானாவாரி நிலங்களைப் பொறுத்த வரையில் அதிக விசேஷ கவனம் செலுத்தப்படவில்லை என்று நம்முடைய மத்திய ஆராய்ச்சித்துறைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்களே சொல்லியிக்கிறார்கள். மிகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். மொத்த விவசாயிகளில் 50 சதவீதம் மானாவாரிப் பகுதிகளில் வாழ்கிறார்கள். அதேமாதிரி மானாவாரி விவசாயிகளுக்கு இருக்கும் கஷ்டம், அவர்கள் நவீன விதைகளைப்போட்டு, அது விளையாமல் போய்விட்டால் அவர்கள் அதனால் மிக மிக அதிக கஷ்டம் அடைகிறார்கள். அவர்கள் மழையை நம்பி பயிர் செய்ய வேண்டிய காரணத்தால் இன்றையதினம் சாகுபடி செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதைப் போக்கக் கூடிய முறையில் அதிக விரைவான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் சம்பந்தப்பட்ட வரையில் பூமிக்கு அடியில் இருக்கும் நீரைப் பயன் படுத்துவதற்காக மிக நல்ல முயற்சிகளைச் செய்தார்கள். எல்லா இடங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் பேசி இருக்கிறார்கள் நிலத்தடி நீரைப் பயன் படுத்த திட்டம் போட்டு இருப்பது மிக மிகக் குறைச்சல். பல இடங்களில் வறட்சி சம்பந்தப்பட்ட மட்டில் குடிநீருக்காக குழாய்கள் அமைத்து இருக்கிறார்கள். 300 அடி, 400 அடிக்குக் கீழே போர்வெல் போட்டு தண்ணீர் எடுத்து இருக்கிறார்கள். பல ஆண்டு காலமாக உப்புத் தண்ணீர் கிடைக்கும் இடங்களில் நல்ல தண்ணீர், அருமையான தண்ணீர் தற்போது கிடைக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலத்தடி தண்ணீர் 11 இலட்சம் ஏக்கர் அடி இருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் நாம் 1 இலட்சம், 2 இலட்சம் ஏக்கர் அடி நீரைத்தான் பயன்படுத்தி இருக்கிறோம்.

தமிழ் நாடு பூராவிலும் இருக்கிற நிலத்தடி நீர் 11 இலட்சம் மில்லியன் ஏக்கர் அடி தண்ணீர் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை முழுவதும் பயன்படுத்த ஏராளமான திட்டங்கள் போட வேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1975 மார்ச் 25

நவீன வசதிகளைச் செய்து, அதைக் கொண்டு வர வேண்டும். நவீன கண்டு பிடிப்புக்கள், தீவிரமான ஆராய்ச்சியின் பயனாக நல்ல தரமான விதைகள் ஆகியவற்றின் காரணமாக, இப்போது 1–க்கு 10 ஆக விளைச்சல் இருக்கிறது. ஆனால் இவற்றையெல்லாம் எல்லா கிராமத்து விவசாயிகளும் பயன்படுத்த முடிகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

இன்று இருக்கும் நவீன விதை, உரம் ஆகியவற்றின் விலை, யானை விலை குதிரை விலையாக விற்கிறது. அந்த விலை கொடுத்தாலும் காலா காலத்தில் கிடைக்கவில்லை. தேவையான நேரத்தில் கிடைக்கிற மாதிரி இருக்க வேண்டும். தேவையான இடத்தில் கிடைப்பதில்லை. தேவை இல்லாத நேரத்தில் முன்கூட்டி வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமானல் கடன் வசதி, அதற்கு ஏற்ற அளவில் இல்லை. பெரிய பணக்காரர்களாக இருப்பவர்கள் அந்த மாதிரி வாங்கி வைத்துக் கொள்ள முடியும். சிறிய விவசாயிகளுக்குக் கடன் வசதி தந்து உதவ வேண்டும். அந்த ஏற்பாடு செய்தால் நல்லது. இல்லையென்றால் பிரயோசனம் இல்லை.

அதே மாதிரி விவசாயப் பொருள்களுக்கும் மார்க்கெட்டிங் வசதி செய்து தரவேண்டும். பருத்தி சம்பந்தப்பட்ட மட்டில், இந்த அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "தமிழ் நாட்டில் வருடாந்திர தேவையான (ஒவ்வொரு பொதியும் 180 கிலோ பருத்தி இழை கொண்டது) சுமார் 11 இலட்சம் பொதிகளுக்குத் தற்போதைய உற்பத்தி 3.42 இலட்சம் பொதிகளாகத்தான் உள்ளது. இரு வருடங்களாகப் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க வேளாண்மைத்துறை முயற்சி எடுத்தும் அவ்விரு வருடங்களில் உற்பத்தி தாழ்ந்தே உள்ளது. இதற்குக் காரணங்கள், எதிர்பாராத பருவநிலை மற்றும் போதிய அளவில்லாத விற்பனை வசதிகள் மட்டுமல்லாமல் அறுவடை காலங்களில் நிலவும் சாதகமில்லாத விலைகளாகும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

பருத்தி விலை குறைந்து கொண்டே போனாலும், நூல் விலை கூடிக்கொண்டே போகிறது. பருத்தி முன்பு ஒரு குவிண்டால் ரூ. 400 க்கு வாங்கினார்கள் என்றால் இப்போது ரூ. 250–க்குக் கூட வாங்குவதற்கு ஆள் இல்லை. பருத்தி விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு வருஷம் பூராவும் நியாய விலை கிடைக்கும் வகையில் விவசாயத்துறை காரியங்கள் செய்ய வேண்டும். இல்லையென்றால், பருத்தி விவசாயியை மில் முதலாளியும், நெல் உற்பத்தி செய்பவர்களை ஆலை முதலாளிகளும், கரும்பு உற்பத்தியாளர்களை சர்க்கரை ஆலை அதிபர்களும் நசுக்கி விடும் சூழ்நிலை ஏற்படும். கரும்பின் விலை இன்று விறகுக்கு இருக்கும் விலை கூட இல்லை. உடை விறகு விலை கரும்புக்குக் கிடையாது. ரூ. 90 விறகு விலை. சீனி எவ்வளவு அதிகமான விலை விற்கிறது. அதற்கு அதிகமான விலை இருக்கிறபோது, கரும்புக்கு மட்டும் ஏன் அதிக விலை கொடுக்கப்படவில்லை? அது எப்போது சாத்தியமாகும் என்றால், கரும்பு ஆலைகளை அரசாங்கம் தேசியமயமாக்க வேண்டும். அப்போதுதான் கரும்புக்கு ரூ. 200 கூட ஒரு டன்னுக்குக் கொடுக்க முடியும். அவர்களுக்கு இப்போது ஏகப்பட்ட நஷ்டம். இந்த நிலை நீடித்தால் 10 வருஷத்திற்கு அவர்கள் மீளமுடியாமல் போய்விடும்.



1975 மார்ச் 25 [திரு. சோ. அழகர்சாமி]

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் 1973–74–ல் 72·89 இலட்சம் டன்னாக இருந்தது. 1974–75–ல் 51.30 இலட்சம் டன்னாக இருந்தது. அப்படியிருக்கிறபோது, 1975–76–ல் எப்படி 80.60 இலட்சம் டன் விளையும் என்று திட்டம் போட்டு இருக்கிறீர்கள்? அது எப்படி முடியும்? ஏனெனில் வறட்சி மிகவும் மோசமாக நாட்டைப் பாதித்து இருக்கிறது. பல இடங்களில் குட்டைகள் வற்றிப் போய் விட்டன. இந்த வருஷம் வசூல் செய்ய வேண்டிய கடன்களை ஒத்திவைத்து இருக்கிறோம். அடுத்த ஆண்டு விவசாயம் செய்ய அரசு உதவி செய்யவில்லை என்றால், எப்படி இவ்வளவு உற்பத்தி ஆகும்? அதோடு அவர்களிடமிருந்து ஒத்தி வைத்த கடனை வசூல் செய்வதற்குத்தான் நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து நல்ல உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் அறிவிக்கப்படவில்லை. அவர்களுக்கு இப்போது மேற்கொண்டு ஏதேனும் கடன் வசதி அளிக்கப் போகிறீர்களா, புதிய விதை வகைகள் தரப் போகிறீர்களா, உரம் தரப்போகிறீர்களா? அவர்கள் எல்லா வங்கிகளிலும் கடன் வாங்கிவிட்டார்கள். இப்படி நிலைமை இருக்கையில் எப்படி அடுத்த வருஷம் விவசாயம் அவர்களால் செய்ய முடியும்? 80 இலட்சம் டன் விளைச்சல் எப்படி வரும்? மந்திரமா, மாயமா? இன்று இருக்கும் பாதிப்பைத் தடுக்கும் முறையில் என்ன செய்து இருக்கிறீர்கள்? அமைச்சர் அவர்கள் என்ன செய்து இருக்கிறார்கள்? அமைச்சர் அவர்கள் தொடர்ந்து விவசாய அமைச்சராக இருக்கிறார்.

முன்னாலே காண்கிரீட் விவசாயம் என்று கொண்டு வந்தார்கள், அப்புறம் சூரிய காந்தி திட்டம் என்று சொன்னார்கள். பிறகு இப்போது மரவள்ளிக்கிழங்கு பயிரிடுங்கள் என்று சொல்கிறார்கள். முன்னாலே, போட்ட திட்டங்கள் என்ன ஆயின? அந்தத் திட்டங்களை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை, ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: காண்கிரீட் விவசாயம் நெல்லை மாவட்டத்தில் நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியில் இருந்து வருவதால் அவருக்கும் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த காண்கிரீட் விவசாயம் நெல்லை மாவட்டத்தில் ஏ.எப்.சி. மூலமாகத் தூத்துக்குடியில் செயல்பட்டு வருகிறது. அது மேலும் மேலும் பணியாற்றிக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>திரு. சோ. அழகர்சாமி</u>: அதே மாதிரி இன்று மடம், கோவில் நிலங்களில் கிணறு வெட்ட முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் குத்தகைக்கு இருப்பதால் அங்கே கிணறு வெட்டிக்கொள்ள முடிவதில்லை. கோவில், மடங்களே அதை வெட்டிக் கொடுக்கலாம். அல்லது பாங்கு மூலம் கடன்பெற்று வெட்டிக்கொடுக்கலாம். அந்த நிலங்கள் எல்லாம் நல்ல நிலங்கள். தண்ணீர் இருந்தால் 1–க்கு 10 மகசூல் வரும். ஆகவே, அரசு இந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும், குத்தகை விவசாயிகளுக்கு—மடம் கோவில் நிலங்களில் இருப்பவர்களுக்கு—கிணறு வெட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி எஸ்.எப்.டி.ஏ. சிறப்புத் திட்டமாக எங்கள் மாவட்டத்தில் செயல்படுகிறது. இது உண்மையாகவே சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் முறையில் செயல்படுகிறதா என்பது கவனிக்க வேண்டியதொன்றாகும். ஜில்லா அளவில் ஒரு குழு போட்டு இருக்கிறார்கள். இது நல்ல வகையில் செயல்பட என்ன செய்யவேண்டுமென்றால், யூனியன் மட்டத்தில்—இதில் 7–8 யூனியன்கள் அடங்கியிருக்கின்றன—ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு சிறு விவசாயிகள் சங்கம் வைத்து கமிட்டி போட்டு, பி.டி.ஓ. அதற்கு அதிகாரி, தலைவராகப் போட்டு, என்னென்ன காரியங்கள் செய்தால் அது சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் என்பதைக் கணக்கில் கொண்டு காரியங்கள் நடைபெற வேண்டும். அப்போதுதான் அது உண்மையிலேயே சிறு விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்.

இப்போது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ரோடு போடுவதற்குப் பணம் கொடுக்கிறார்கள். ரோடு போடுவதால் சிறு விவசாயிகளுக்கு என்ன பலன்? 2 ரூ. கூலி பெறும் விவசாயி ரோடு போடுவதால் அதன் மீது கார் ஓட்டிக்கொண்டா வரப்போகிறான். ஆகவே, இந்த எஸ்.எப்.டி.ஏ. மூலமாகச் செலவழிக்கும் பணம் சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி இந்த அறிக்கையின் கடைசிப் பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். "இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் 4–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் 5–வது ஐந்தாண்டுக் திட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. [இத்திட்டத்திற்கு இந்திய அரசு 6 கோடி ரூபாய் வழங்குமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாநில அரசும் அதற்கு இணையாக நிதி ஒதுக்கீடு செய்து இதுபோன்ற திட்டத்தை இவ்விரு மாவட்டங்களில் செயல்படுத்த வேண்டுமென்ற நிபந்தனை விதித்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் 6 கோடி ஒதுக்கக் கூடிய நேரத்தில், நீங்களும் 6 கோடி ரூபாய் ஒதுக்கி அந்தத் திட்டங்களை செயல்படுத்தியிருக்க வேண்டும். இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களும் எப்போதுமே மிக மிகப் பின் தங்கிய மாவட்டங்கள். அங்கே பாசன வசதி இல்லை. மத்திய அரசு பண வசதி செய்ய முன் வந்தும், அங்கே ஒன்றும் செய்யவில்லை. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, 27–3–1975, வியாழக்கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.**



## (10) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A Statutory Rules and Orders.*

148. Notification issued in G.O.R. No.421, commercial taxes and Religious Endowments, dated the 30th December 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharges in respect of film show conducted at the Meenakshi Theatre, Avadi on 19th January 1975 (*Laid on the table of the House under section* 16(4) *of the Tamil Nadu Enetrtainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).

149. Notification issued in G.O. Ps. No. 376, Commecial Taxes and Religious Endowments, dated the 3rd October 1974 in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. *Laid on the table of the House under section* 53(5) *of the Tamil Nadu General Sales Tax Act* 1959 (*Tamil Nadu Act I of* 1959).

150. Notification issued in G.O. Ms. No. 236, Commercial Taxes and Religous Endowments, dated the 31st August 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharges to the benefit film show in aid of the National Foundation for Teacher's Welfare on 5th September 1974. (*Laid on the table of the House under sections* 16(4) *and* 8(3) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 *Tamil Nadu Act X of* 1939) *and the Tamil Nadu Local Authorities Finance Act*, 1961 (*Tamil Nadu Act* 52 *of* 1961) *respectively*.

151. Notification issued in G.O. P. No. 240 Commercial Taxes and Religious Endowments, dated the 2nd September 1974, in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (*Tamil Nadu Act I of* 1959.) [*Laid on the table of the House, under section* 53(5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).

### *B. Reports, Notifications and Other Papers*

@110. Note on Agriculture Demands, 1975–76 (English and Tamil).

@111. The performance Budget on Agriculture, 1975–76

---

**Despatched to Members on 2nd March 1975.**

[ 364-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க ]

Note on Agricultre Demands 1975-76

I place before you a brief note highlighting various Agricultural production Programmes.

AGRICULTURAL PRODUCTION.

The anticipated actual production in 1974–75 is 51·30 lakh tonnes of foodgrains, 9.36 lakh tonnes of oilseeds, 2·69 lakh tonnes of cotton (bales) and 11·88 lakh tonnes of gur. Total production in 1974–75 i e., 75 23 lakh metric tonnes represents 26 30 per cent decrease when compared to production of 102·08 lakh metric tonnes achieved in 1973–74. Corresponding anticipated production for 1975–76 will be 80·60 lakh tonnes of foodgrains, 12·74 lakh tonnes of oilseeds, 4·30 lakh tonnes of cotton (bales) and 11·80 lakh tonnes of gur. There was a fall in the area of production during 1974–75 which is ascribable to the belated rainfall and unprecedented and unfavourable weather conditions and consequent poor storage position in the reservoirs, tanks and wells. The decline in production is due partly to reduction in area and partly to fall in productivity on account of whithering of crops consequent on insufficient water-supply, mainly as a result of failure of North-East monsoon in several parts of the State.

The anticipated achievements under High Yielding Varieties Programme during 1974–75 are 46·79 lakh acres under High Yielding Variety of paddy and 10·97 lakh acres under Hybrid Millets. During 1975–76, it is envisaged to stabilise 9·70 lakh acres under Hybrid and High Yielding Millets.

SEASONAL CONDITIONS.

The rainfall in the summer months from March 1974 to May 1974 was below normal in all the districts of Tamil Nadu. As against the normal rainfall of 137·8 mm during the hot weather period, a rainfall of 94·2 mm was recorded for the entire State. The failure of this rain badly affected millets and oilseeds in the districts of Chingleput, South Arcot, North Arcot, Coimbatore and Tiruchirappalli.

The South-West monsoon started late in the season and though a rainfall of 325·8 mm was recorded as against the normal of 307·3 mm, the rainfall was ill-distributed paving way for a bad crop season.



A rainfall of 105·6 mm was recorded as against the normal of 186·0 mm during October 1974. There was practically no rain during November and December, when normally the North-East monsoon should be in full swing. A rainfall of 157·8 mm was recorded as against the normal of 449·7 mm during the months from October to December 1974. The dry crops raised during the South-West monsoon, could not get the benefit of the North-East monsoon, during their growth period, due to the complete failure of North-East monsoon resulting in withering of crops in many parts of the State. Most of the tanks and irrigation sources did not get enough water-supply and the crops raised with these water sources were also badly affected. The sowing of cotton in black cotton soil area in Tirunelveli could not be taken up due to the failure of North-East monsoon.

Severe drought condition is prevailing in the districts of Ramanathapuram, Pudukkottai, Tirunelveli, Madurai, Coimbatore and parts of other districts. The normal area under Navarai paddy in Chingleput, North Arcot and South Arcot districts has been affected due to the poor storage of water in tanks and wells.

Due to unprecedented failure of both monsoons resulting in a serious set back in cultivation both dry crops as well as irrigated crops have been adversely affected. The level of production anticipated during 1974–75 may not be achieved in full.

PULSES.

During 1974–75, it is proposed to cover an extent of 6·36 lakh hectares under pulses as against 6·96 lakh hectares in 1973–74. A production of 1·46 lakh tonnes is estimated in 1974–75 as against 2·19 lakh tonnes in 1973–74. Generally, shortfall of coverage in area and production is expected due to the unprecedented unfavourable weather conditions. However, in order to boost the production of pulses, it is proposed to persuade the farmers to adopt package of practices, and to conduct 1,000 demonstrations with improved strain of pulses. To ensure a steady flow of primary and secondary seeds, 15,000 acres are proposed to be run as seed Farms in 1975–76 also.

INTENSIVE AGRICULTURAL DISTRICT PROGRAMME, THANJAVUR.

As a result of the Intensive Agricultural District Prosgramme activities, the high yielding varieties have spread to nearly 92 per cent of the area in the delta. The consumption of fertilisers and plant protection chemicals has increased considerably as seen from the figures given below:–

UNIT IN METRIC TONNES.

| *Year.* | *Ammonium Sulphate.* | *Super Phosphate.* | *Muriate of Potash.* | *Quantity of pesticides.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969–70 .. | 1,05,028 | 73,236 | 4,965 | 8,111 |
| 1970–71 .. | 1,19,755 | 83,400 | 9,381 | 10,050 |
| 1971–72 .. | 1,37,715 | 98,075 | 13,585 | 12,143 |
| 1972–73 .. | 1,54,316 | 99,202 | 14,186 | 13,305 |
| 1973–74 .. | 1,63,765 | 93,406 | 15,268 | 10,595 |

There is a significant change in the outlook of the farming community.

It is programmed to cover under paddy 15·30 lakh acres in Thanjavur and 1·20 lakh acres in two Intensive Agricultural District Programme Blocks transferred to Pudukkotai district. The following measures will help to achieve the target.

(i) Under Adaptive Research trials, different strains of paddy will be tried in about 125 locations, to find out the high yielding stains suited to Kuruvai, Samba and Thaladi seasons.

(ii). Three acre three crop sequence demonstrations will be conducted in 140 locations with a view to popularise best high yielding strains selected from the Adaptive Research trials among the farmers and to increase production in the shortest period.

(iii) To achieve these targets, necessary supply of inputs,technica dvice, plant protection chemicals, and credit facilities will be takenl sup during the year 1975-76.



(iv) The Information Unit and Farmers Training Centre, Aduthurai will arrange propaganda and publicity through posters, pamphlets and radio to communicate the production techniques to the farmers of the district.

INTENSIVE AGRICULTURAL AREA PROGRAMME.

The main objective of the programme is to intensify production of cereals through economic dosage of fertilizers, green manuring, improved seeds, plant protection methods and agricultural management practices.

The Intensive Agricultural Area Programme is now implemented in eight districts, viz., Chingleput, Tiruchirappalli, Coimbatore, Madurai, Tirunelveli, Pudukkotai, North Arcot and South Arcot districts. The crops covered under this programme are paddy, cholam, cumbu, ragi, cotton and groundnut. It has been proposed to extend the programme during 1975–76 to Ramanathapuram, Dharmapuri, Salem and Kanyakumari districts, thus covering the entire State.

STATE SEED FARMS.

There are 52 State Seed Farms including one large sized farm at Anna Pannai, Kudumiamalai in Pudukkottai district covering an area of 5,135·73 acres, of which 4,001·50 acres are cultivable. An additional extent of 407 acres has been requisitioned under the provisions of the Tanil Nadu Requisitioning and Acquisition of Immovable Property Act, 1956, out of 524·16 acres proposed for expansion of the State Seed Farm, Navlock in North Arcot district.

The State Seed Farms are running on profit on the whole. It is proposed to equip all the farms with improved machineries like thresher, seed cleaner and other equipments like moisture meter, etc.

TAMIL NADU STATE FARMS CORPORATION

With the object of bringing under cultivation extensive areas of cultivable lands, estimated at 11 lakh acres, lying waste at present, the Government have set up the Tamil Nadu State Farms Corporation. The Corporation will establish modern farms and adopt improved techniques. To start with, the Corporation has taken on lease about 1,520 acres ata rent of Rs.50 per acre per annum,in Thervoy and Karadipudur villages in Gummidipoondi taluk of Chingleput district. Each

Farm will be of about 100 hectares in area, and will be managed by a Deputy Agricultural Officer. The work relating to sinking of tube-wells in the farms is in progress. The development of the lands and the farming operations will provide employment to the rural population in the neighbourhood.

According to 1974 statistics, apart from the cultivable waste, Tamil Nadu has also lands classified as "fallows" to the extent of 14,38,000 hectares. The Government will make a steady and sustained effort to bring under cultivation as much of these fallow lands as possible, by applying the Land Utilisation Order, 1961.

## SEED CERTIFICATION.

The Seed Certification Agency in this State, which functions under the control of the Director of Agriculture consists of one Seed Certification Officer with headquarters at Tiruchirappalli assisted by two assistant Seed Certification Officers with headuquarters at Tiruchirappalli and Coimbatore with complementary staff. During 1974–75, one more Assistant Seed Certification Officer with headquarters at Madurai has been sanctioned.

The target and achievements under the seed Certification Scheme during 1974–75 are as follows:—

| (1) | *Targetted area* (*acres*) (2) | *Area covered upto 31st January 1975* (3) | *Target form* 1975-76 (4) |
|---|---|---|---|
| Paddy .. .. .. | 8,500 | 7,196 | 9,000 |
| Cotton .. .. | 1,500 | 1,524 | 1,700 |
| Hybrid millet .. .. | 1,800 | 1,714 | 1,900 |

Seed certification and Seed testing will continue to be done by the Department. Seeds are tested at the Seed Testing Laboratories at Coimbatore and Madurai for their quality and purity and distributed through the Agricultural Depots.

It is proposed to establish two more seed processing units at Coimbatore and Tirunelveli.

The number of samples tested during 1974–75 is 20,000



## TAMIL NADU AGRICULTURAL PRODUCTIVITY COUNCIL

The Government of India have since allotted one Farmers' Training Centre during the year 1974-75 and it has been proposed to establish this centre at Kancheepuram.

TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY.

The Tamil Nadu Agricultural University continued to function in the fields of Agricultural Education, Research and Extension Education to meet the challenges and problems in the field of agriculture. Consequent on the affiliation of the Madras Veterinary College to the University, a new Faculty of Veterinary and Animal Sciences has been started with effect from January 1974. The University has now been recognised by the Indian Council of Agricultural Research for financial assistant for its research and developmental work.



Besides the routine academic programmes in the class rooms, laboratories and the fields, selected Under-Graduate students were placed on "Earn while you learn" programme at Coimbatore and Madurai campuses and the students earned a profit of above Rs. 40 to Rs. 57 per month by rearing poultry and growing vegetables. The students of Agricultural College, undertook plant protection compaign to Educate the farmers on plant protection problems around Coimbatore and in the Kodaikanal hills.

*Research Projects.*—As against about 600 research projects in operation during the past year, during the current year there are over 900 projects covering different branches of Agriculture, Horticulture, Animal Husbandry, Agricultural Engineering, Fisheries, Food Technology, Basic Science and humanities. The Indian Council of Agricultural Research supports 44 research schemes operating in 20 different centres spread all over the State, in which over 300 technical personnel are employed. Thus a strong research base has been established in the University.

Several new crop varieties have been released by the University during the past year. Chief among them in the hybrid cotton variety CBS. 156 with certain outstanding qualities, for superior to any other cotton variety evolved so far in any part of the country. About 880 kilogram of this hybrid seed was produced during summer months and distributed to the farmers during August-September this year. A new variety of paddy strain 6543, with a duration of 90 days has also been evolved. Co. 2 tomato, a semi-dwarf, erect type, yielding about 40 tonnes of fruits in 145 days and with high ascorbic acid content, has been spreading very fast among the farmers. Co. 2 pumpkin, a variety with a small family size fruit and high yield potential of 23 tonnes ha. has become popular with the farmers. 'Solo' papaya selection from an introduced variety, with bi-sexual characters and small fruits, is becoming popular among the farmers. Co. 38 a long duration (Paddy) variety to replace Co. 25 in-Thanjavur delta and Co. 39, a 90 day duration variety to fit into any cropping pattern in the State have been evolved recently.

Bhavani rice variety released two years ago has covered approximately 2 lakh hectares. Co. 36 Paddy was covered an areaof about 60,000 acres. Co. 37 releases in January 1974 has covered about 10,000 acres. Sorghum variety 771 and hybrids CoH 1 and CoH. 2 have covered approximately 60,000 acres. These improved varieties have helped the farmers to substantially increase their economic returns. In furture

all releases of new varieties will be made by the Varieties Release Committee of the State, in which the University is represented. It is hoped that the Committee will concentrate on the release of short duration High Yielding Varieties urgently required by the farmers inthe various districts of the State.

The shortage of fertiliser supply and its high cost have brought to prominence the use of bacterial fertilisers. The University has been able to supply 'rhizobial culture' for pulse crops covering approximately 35,000 ha. and thus helping to fix about Rs. 70·00 lakhs worth of atmospheric nitrogen in the soil. Requests for the bacterial cultures have been received not only from Tamil Nadu but also from Andhra Pradesh, Karnataka, Pondicherry and Manipur. Pre-treatmeut of paddy seeds with some strains of *Azotobacter* followed by dipping the roots of the seedlings in a suspension of the bacterium before transplanting, has been found to induee better seed germination and crop stand which would help a saving about 20 kilogramme of N per hectare. By spending about Rs. 10 on the treatment with bacterial culture for one hectare, one could save Rs. 100 on the chemical fertiliser.

Research works carried out in the Agricultural Engineering Research Workshop have resulted in designing and fabricating a new groundnut pod opener, a groundnut grader, a seed cleaner-*cum*-grader and a mini jasmine oil extraction plant.

The Animal Husbandry Department has developed a poultry feed mixture using algae as one of the components and thus bringing down the cost of the feed.

*Correspondence Courses* :—The Correspondence Courses started by the University are becoming popular and need to the start more courses was voiced by several farmers. Courses on new subjects like banana cultivation, cotton cultivation will have to be run besides repeating courses on earlier subjects like intensive vegetables cultivation, tractor maintenance, seed production.

The total gross budget estimate of the University for 1975–76 is Rs. 316·00 lakhs. Out of this, the schemes sponsored by the Indian Council of Agricultural Research both fully and partly would attract Rs. 35·00 lakhs roundly and from the Government of India Rs. 2.80 lakhs. The income from tuition fees and the farms of Research Stations under the University would yield about Rs. 32·20 lakhs (Rs. 30·00 lakhs under Non-Plan and Rs. 2·20 lakhs under Plan). The University is expected to receive about Rs. 40.00 lakhs during the next year towards various developmental activities from the Indian Council of Agricultural Research.

The University is being asked to develop its own income, on the model of the Pantnagar University in U.P. and concrete proposals are expected to be put into operation by the University during 1975–76, so as to reduce the State's budgetary burden in respect of the University as from 1975–76.



The Ford Foundation has agreed to give about Rs. 40·2 lakhs during the Fifth Five-Year Plan for development of rural Social Science in the University for which a sum of Rs. 20·00 lakhs is expected during 1975-76.

The question of obtaining assistance from the World Bank to an extent of Rs. 10·00 crores during the Fifth and Sixth Plan periods, is under consideration.

SMALL FARMERS DEVELOPMENT AGENCY AND MARGINAL FARMERS AND AGRICULTURAL LABOURERS DEVELOPMENT AGENCY PROGRAMME.

The Government of India have introduced in the Fourth Five-Year Plan a project for the benefit of small farmers and marginal farmers and agricultural labourers in selected blocks in the following five districts under the supervision of an agency in each district, registered under Societies Registration Act, with the District Collector as its Chairman:

| | | |
|---|---|---|
| Small Farmers Development Agency. | (i) Madurai district. | (18 Blocks). |
| | (ii) South Arcot disstict | (19 Blocks). |
| | (iii) Tirunelveli district | (15 Blocks). |
| Marginal Farmers and Agricultural Labourers Development Agency. | (iv) North Arcot district | (3 Blocks). |
| | (v) Salem district | (5 Blocks). |

The scheme is financed from two sources, namely, grants from the Government of India and loans from the co-operative institutions. The grant allotted by the Government of India for each Small Farmers Development Agency is Rs. 1·60 crores and for each Marginal Farmers and Agricultural Labourers Agencies Rs. 1 crore. Duration of each project is five years.

Each Small Farmers Development Agency is to benefit 50,000 small farmers and marginal farmers and each marginal farmers and agricultural labourers agency is to benefit 20,000 small and marginal farmers. Under this scheme, subsidy is given at the rate of 25 per cent to thesmall farmers and 33-1/3 per cent to the marginal farmers. Credit facilities are being arranged through the co-operative institutions to enable the weaker section of the farming community to undertake better cropping practices to effect permanent improvements through well digging, deepening and energisation of wells and to augment their income by engaging in subsisiary occupations like dairy farming, poultry farming, sheep rearing, etc.

Ttoal credit facilities short-term, medium-term and long-term loans, availed of by the small farmers and marginal farmers through the co-operatives are as follows :—

| Agencies. | Rupees in lakhs (from 1970-71 to 31st October 1974). | |
|---|---|---|
| Madurai .. .. .. .. | 209·62 | |
| South Arcot .. .. .. .. | 498·37 | |
| Tirunelveli .. .. .. .. | 180·61 | |
| | | 888·60 |
| Salem .. .. .. .. | 112·60 | |
| North Arcot .. .. .. .. | 49·47 | |
| | | 162·07 |
| Total .. | | 1,050 67 |

Under Minior Irrigation Programme the number of wells sunk, number of old wells deepened and number of pumpsets installed are as follows :—

| District. | New wells sunk. | Number of wells deepened. | Pump-sets in-stalled. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| South Arcot .. .. .. | 1,021 | 572 | 1,138 |
| Madurai .. .. .. | 596 | 280 | 248 |
| Tirunelveli .. .. .. | 968 | 500 | 1,034 |
| Salem .. .. .. | 13 | 16 | 12 |
| North Arcot .. .. .. | 55 | 155 | 50 |
| | 2,653 | 1,523 | 2,482 |



Under Animal Husbandry Programme the details of achievement are as follows :—

| Agency. | Milch animals. | Poultry units. | Sheep units. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| South Arcot .. .. .. | 2,027 | 93 | 814 |
| Madurai .. .. .. | 4,404 | 312 | 1,031 |
| Tirunelveli .. .. .. | 2,111 | 540 | 1,521 |
| Salem .. .. .. | 3,294 | 1,127 | 253 |
| North Arcot .. .. .. | 407 | 27 | 1,957 |
| | 12,243 | 2,099 | 5,576 |

The total expenditure by way of grants, etc., since inception of the projects (1971-72) to 31st January 1975 is Rs. 337·95 lakhs.

Agricultural Department provides staff to the Agency for attending to the agricultural aspects of the programme. The following are the staff in each of the agencies :—

| Agency. | Deputy Agricultural Officer. | Demonstration Maistries. | Special Tahsildar. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| South Arcot .. .. .. | 12 | 120 | 1 |
| Madurai .. .. .. | 18 | 180 | 1 |
| Tirunelveli .. .. .. | 11 | 110 | 1 |
| North Arcot .. .. .. | .. | .. | 1 |
| Salem .. .. .. | .. | .. | 1 |

The expenditure towards the above staff is being met from the State Funds..

The schemes for the development of the small farmers and marginal farmers have been merged and are being extended to the other districts from 1975-76. The following seven districts have been selected for the implementation of the combined schemes :

(1) Thanjavur.
(2) Tiruchirappalli.
(3) Coimbatore.
(4) Chingleput.
(5) Pudukottai.
(6) The Nilgiris.
(7) Kanyakumari.

Project Cells have been formed for preparing the Project Reports. The reports have been completed and have been approved by the Government of India and are being implemented. Thus the entire State (except Madras, Dharmapuri and Ramanathapuram districts) has been covered by the scheme for Small Farmers and Marginal Farmers.

## THE TAMIL NADU AGRO-INDUSTRIES CORPORATION LIMITED.

The Tamil Nadu Agro-Industries Corporation has been functioning from the year 1968 with broad objective of encouraging industries which, in turn, will help the growth and modernisation of agriculture, animal husbandry, pisciculture, Poultry farming and food processing industries.

*Financial position.*—The authorised share capital of this Corporation is Rs. 4 crores and so far, 3,30,000 equity shares of Rs. 100 each have been issued, subscribed and fully paid up in equal proportion by the Government of India and the Government of Tamil Nadu. The profit earned by the Corporation and the amount of share capital invested for the years from 1970-71 to 1974-75 (up to December 1974) are given below:—

| *Year.* | *Share capital.* | *Net profit before taxes.* |
|---|---|---|
| | RS. | RS. |
| 1970-71 .. .. .. .. .. | 2,65,00,000 | 4,47,000 |
| 1971-72 .. .. .. .. .. | 3,30,00,000 | 8,38,000 |
| 1972-73 .. .. .. .. .. | 3,30,00,000 | 11,36,000 |
| 1973-74 .. .. .. .. .. | 3,30,00,000 | 1,63,000 |
| 1974-75 (up to December 1974) .. | 3,30,00,000 | 17,36,000 |



*Activities.*—The Corporation was implementing the Hire Purchase Finance Scheme between 1968 and 1970 and a sum of Rs. 312·04 lakhs was advanced to 11,000 parties, for purchase of 10,684 pumpsets and 325 tractors. The distribution of imported tractors has been one of the activities of this Corporation and it has distributed 3,252 tractors.

The Corporation is engaged in the work of mass ground spraying with power tillers, sale of spare parts to the tractors and manufacture of agricultural implements. Besides this, the Corporation is hiring out wheel type tractors and power tillers to agriculturists through its regional centres.

The Corporation is implementing a scheme for training unemployed technical personnel by starting Agro-Service Centres and so far, it has trained 168 entrepreneurs out of whom 128 persons have already started agro-service centres. It is proposed to give training for about 60 persons during 1975-76. It is also engaged in the formulation and supply of pesticides to the Agriculture Department for distribution to farmers. Further it is considering a proposal to set up an industrial complex in the State for the manufacture of pesticide technicals. Also the Corporation has made arrangements to set up a pesticide plant at Ambattur Industrial Estate.

The Corporation has undertaken the supply of fertilisers and marketing of fruit and fruit products and has got proposals for the following projects:—

1. Fishnet making plant.
2. Maize milling complex.
3. Oil complex.
4. Manufacture of blended foods.
5. Extraction of essential oils.
6. Manufacture of tapioca flour and rawa.

## AGRICULTURAL DEPOTS.

In order to make available the agricultural inputs within the easy reach of the farmers and to help farmers to getplant protection chemicals quickly to combat pest attack and control plan diseases, 50 additional depots have been opened during 1973-74. The existence of these depots is further justified with the expansion of agricultural activities by introducing and implementing the new schemes like H.Y.V.P, I.A.D.P., etc.

## SCHEME FOR CONDUCTING PHYSICAL VERIFICATION OF STORES AND STOCKS IN THE AGRICULTURAL DEPOTS.

Each depot in the State is stocked with agricultural inputs to the value of several thousands of rupees and the annual transaction in the depots varies from Rs. 10,000 to over one lakh. With a view to safeguarding the interests of Government special staff of 12 Superintendents and 12 Junior Assistants have been employed to physically verify the stores and stocks and to bring to the notice of the authorities concerned the irregularities noticed for taking action.

## Drought Prone Area Programme in Ramanathapuram and Dharmapuri Districts.

The Centrally-sponsored Drought Prone Area Programme, which was implemented in Ramanathapuram and Dharmapuri districts during the Fourth Plan period is being continued in the two districts during the Fifth Plan period also. The Government of India indicated that the Central grant for continuing the programme during the Fifth-Plan period might be Rs. 6 crores for the two districts, but this is subject to the condition that the State Government also provide a matching contribution for taking up similar schemes in the two districts. Pending recasting of the Fifth-Plan Project Reports already prepared for the two districts on the lines suggested by the Government of India, Annual Plans for 1974-75 for the two districts have been prepared and sent to the Government of India. The Annual Plans envisage a total outlay of Rs. 158·78 lakhs for the two districts. The Government of India have agreed that their share of financial assistance for 1974-75 would be Rs. 66 lakhs. The Government of India have so far released a sum of Rs. 5 lakhs and they have been requested to release the balance amount of Rs. 61 lakhs immediately.



தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 மார்ச் 27

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Polur-Alangayam road*

*464 Q.—Thiru N. K. PALANISAMY.—Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of Government for the formation of a ghat road on Javadhu Hills connecting Polur and Alangayam ; and

(b) if so, the estimated cost of the same ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) ஆம்.

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை ரூ. 75·00 இலட்சமாகும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, இந்த எஸ்டிமேட் போட்டு அதிக நாள் ஆகிவிட்டது. ஜவ்வாது மலைய ரீஸ்டிமேட் பண்டராக்கும் முயற்சியில், இதற்குரிய மதிப்பீட்டைத் திருத்தியமைத்து சரியான முறையில் பாதை அமைக்கும் வேலை விரைவில் நடைபெறுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்கு சமீபத்தில்தான் ஒரு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டது. ஏற்கெனவே மலைப் பாதை (காட் ரோடு) ஒன்று இருக்கிறது. அது வழியாக லாரிகள் வந்து போய்க்கொண்டிருக்கின்றன. இன்னும் சரியான முறையில் பாதை அமைத்து, தார் சாலையாகப் போட்டு, பஸ் போக்குவரத்துக்கு வகை செய்யவேண்டும் என்பது அரசின் திட்டமாகும். அதற்கான திட்டம் தயாரித்து, மத்திய சாலை வளர்ச்சித் திட்டத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறோம். இன்னும் அங்கிருந்து அவர்களுடைய முடிவு வரவில்லை. வந்ததற்குப் பிறகு அதுபற்றி அரசு யோசித்து நடவடிக்கை எடுக்கும்.

[1975 மார்ச் 27

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, 75 இலட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரித்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஜவ்வாது மலையை டூரிஸ்ட் சென்டராக்குவதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுத்துத் திட்டம் மத்திய அரசுக்குப் போயிருக்கிறதென்று சொன்னார்கள். அந்த எஸ்டிமேட்டுக்கு மத்திய அரசின் அப்ரூவலை விரைவில் பெற்று, 1976-ஆம் ஆண்டிற்குள்ளாக அந்த வேலையை முடிக்க நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்த வேலைகளை எடுத்துக்கொள்வது என்று அனுப்பப்பட்ட திட்டங்களில் முதல் எண் கொடுக்கப்பட்டிருப்பது இந்தத் திட்டத்திற்கு ஆகும் பாதை அமைப்பதற்கும்; நிச்சயமாக டூரிஸ்ட் சென்டராக்குவதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஜவ்வாது மலைப் பகுதியில் இருக்கும் மலைவாசி மக்களுக்கு வேறு போக்குவரத்து வசதி இல்லாததால், இதைக் கட்டாயம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறோம்.

### வெள்ளித் திருப்பூரில் புதிய அணை

*465 வினா.—திரு. எ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி வட்டத்தில் உள்ள வெள்ளித்திருப்பூர் கிராமத்தில் அணைகட்டும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 15·36 லட்சம். பயன்பெறும் நிலப்பரப்பு 332 ஏக்கர்கள். எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 263 டன்கள் ஆகும்.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நெடுங்காலமாகக் கேட்டு வருகிறார்கள். ஆகவே, இதை விரைவிலே நிறைவேற்றி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்துவந்த உத்தரவுப்படி இது சிக்கனமற்ற ஒரு திட்டமாகும். நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சரவர்கள் தெரிவித்ததற்கேற்ப பின் தங்கிய பகுதி என்று எடுத்துக்கொண்டால் இது சேருமா என்று பார்த்து, அரசின் நிதி நிலை அனுமதிக்குமானால் இதைப்பற்றி ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும்.



[1975 மார்ச் 27

### *Kadayal Government High School*

*461Q.—Thiru J. JAMES.: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government for vocationalisation of Secondary Education in the Kadayal Government High School in Kanyakumari district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அத்தகைய கோரிக்கை எதும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும் கடையல் அருகே ரப்பர் தோட்டங்கள் பல உள்ளமையால் அப்பள்ளியில் ரப்பர் தொழிலியல் பற்றிய பயிற்சி வகுப்பொன்றைத் தொடங்க இயலுமா என்பதை ஆய்வு செய்து, இயலுமாயின் அரசுக்குக் கோரிக்கை அனுப்புவதாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் கூறியுள்ளார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அந்த மாவட்டத்தில் இதுவரையில் எந்த உயர்நிலைப்பள்ளியிலும் தொழில் கல்வி ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே இந்தப் பள்ளியில் அதிகக் கால தாமதமின்றியில் தொழில் பயிற்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து இதுபற்றிய முழு விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. ரப்பர் தொழிலியல் பற்றிய பயிற்சி அந்தப் பள்ளியில் துவங்க இயலுமா என்பதைப் பற்றியும் அதுபற்றியிருக்கும் கூறுபாடுகளையும் கேட்டிருக்கிறோம். அதுபற்றிய முழு விவரக்குறிப்பு வந்த பிறகு அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் இந்தப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ? இருக்கின்ற பள்ளிகளிலேயே இந்த வகுப்புகளை ஆரம்பிக்கலாமா என்பதை அறிவதோடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுவாக சில பள்ளிகளில் ஏற்படுத்தவோ அல்லது இருக்கிற பள்ளிகளிலேயே இந்த வகுப்புகளை ஏற்படுத்தவோ அரசு முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்தப் பள்ளிகளில் என்னென்ன வசதிக்கு சூழ்நிலை இடம் தருகிறதோ, அந்தந்த வகையில் அந்தந்தப் பள்ளிகளில் ஏற்படுத்துவதுதான் அரசின் நோக்கம். ஏற்கனவே இந்த வகையில் 200 பள்ளிகளில் காம்ப்ரஹென்சிவ் அடிப்படையில் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் சென்ற ஆண்டு 18 பள்ளிகளைத்தான் எடுத்தோம். ஆகவே அந்த முறையில்தான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

[1975 மார்ச் 27

துடுப்பதி கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி

*462 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த துடுப்பதி கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி ஒன்று துவங்க ரூ. 10,000 பொதுமக்களால் அரசாங்கத்திற்குக் கட்டப்பட்டும், அரசாங்கம் இதற்கான அனுமதி அளிக்காமல் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை. 1974–75-ஆம் கல்வி ஆண்டில் துடுப்பதி கிராமத்தில் 6 முதல் 9 வகுப்புகள் கொண்ட ஓர் அரசினர் உயர்நிலைப் பள்ளியைத் துவக்க அனுமதி அளிக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சித. சிதம்பரம் : தலைவரவர்களே, காரைக்குடி வட்டத்தில் பொது மக்களால் பத்தாயிரம் ரூபாய் பணம் அளிக்கப்படுமானால் புதிய உயர்நிலைப் பள்ளிகள் தொடங்க அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல்வேறு பள்ளிகள் திறக்கப்பட்டு வருகின்றன. இதில் அதற்கான நிர்ப்பந்தங்களை யெல்லாம் ஆராய்ந்து அந்தப் பகுதியில் உள்ள பள்ளிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பள்ளிகள் இல்லாத பகுதிகளில் புதிதாகப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இது பற்றி பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிச்சாமி : தலைவரவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு இதை ஆரம்பித்து வைத்தார்கள். ஆனால் இதுவரையிலும் அதற்கான நிதி ஒதுக்கவில்லை. ஆகவே இந்த வருஷமாவது சர்க்கார் இதற்கான ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்தப் பள்ளிகளுக்கு ஒதுக்குவது என்பதை முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த பள்ளிகளுள் துடுப்பதி பள்ளி இருக்கிறதா என்ற விபரம் இல்லை. அதை முதன்மைக் கல்வி அதிகாரியிடமிருந்துதான் அறிய வேண்டும்.

திரு. என். மருதாசலம் : என்னுடைய மாவட்டத்தில் குனியமுத்தூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. DEPUTY SPEAKER : This does not relate to the mina question.



1975 மார்ச் 27]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புதிதாக உயர்நிலைப் பள்ளிகளை அதிகமாகத் திறப்பதைவிட இருக்கிற பள்ளிகளில் கூடுதலாகக் கட்டிடங்கள் கட்டி, கல்வியின் தரத்தை உயர்த்த அரசு ஆலோசனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட கருத்துக்குத்தான் முக்கியத்துவம் தரவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த வகையில்தான் முக்கியத்துவம் தருகிறோம். ஆகவே எந்தெந்த இடங்களில் இட வசதியைப் பெருக்கியாக வேண்டுமோ அந்தந்த இடங்களில் இட வசதியைப் பெருக்கும் வகையில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பள்ளிகள் ஆரம்பிக்கப் பப்ளிக் காண்ட்ரிபியூஷன் தேவை என்ற நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தால் சில பிற்பட்ட பகுதிகளில் வசதியில்லாத மக்கள் இருக்கிற பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் கால தாமதத்தைக் குறைக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

Mr. DEPUTY SPEAKER : This does not relate to the main question.

திரு. வி. பழனிவேலு : தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கு எவ்வளவு பணம், நிலம் தேவை? அதிகப்படியாக எத்தனை மாணவர்கள் தேவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மெயின் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

Thiru J. JAMES Point of Order, Sir.

Mr, DEPUTY SPEAKER: No point of order during question hour. You raise the point of order immcdiately after question hour.

உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்

*463 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில உள்ள எந்தெந்த அரசினர் உயர் நிலைப் பள்ளிகளுக்குத் துணைக் கட்டடங்கள் அமைக்கும் செயற் குறிப்புக்கள் ஆய்வில் உள்ளன?

(இ) இவைகளைக் கட்டி முடிப்பதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நெல்வி மாத்தூக் கண்டிகை அரசினர் (கழக) உயர் நிலைப் பள்ளிக்குத் துணைக் கட்டிடம் அமைக்கவும் மற்றும் கும்மிடிப்பூண்டி அரசினர் (கழக) உயர் நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் அமைக்கவும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன. எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எந்தப் பள்ளிக்கும் துணைக் கட்டிடம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

(இ) மேற்படி பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்தபின்தான் கட்டிட வேலையைத் துவங்க இயலும். பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்று அனுப்பி வைத்த மதிப்பீடு தற்கால நிலவர விலைப்படி மாற்றி அமைக்க திருப்பி அனுப்பப் பட்டு திருத்திய மதிப்பீடு பெறப்பெற்றது. இந்தக் கட்டிட வேலைகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர்வர்களே, பரிசீலனையில் உள்ள இந்த இரண்டு உயர்நிலைப் பள்ளிகளில் இட வசதியில்லாமல் மாணவர் கள் மரத்தடியில் படிக்கிறார்கள். ஆகவே இந்த இரு ஒன்றியங் களில் கட்டிடம் இல்லாப் பள்ளிகளின் கணக்கை எடுத்து வரும் கல்வி ஆண்டில் பரிசுச் சீட்டு திட்டத்தின் கீழ் தனி ஒதுக்கீடு செய்து கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும், எல்லா ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுமுள்ள எல்லா உயர் நிலைப் பள்ளிகளிலுள்ள குறைகளையும் முழுமையாக நிறைவேற்றுவது என்பது இயலாத ஒன்று. படிப்படியாகத்தான் இதைச் செய்ய வேண்டும். ஆகவே, இந்த வகையில் எந்தெந்த இடங்களில் வசதி மிக மிகக் குறைவாக இருக்கிறதோ அவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த வகையில்தான் செயல்படுத்தப்படுகிறது.

திராட்சை பயிரிட வங்கிக் கடன்கள்

*466 வினா—திரு. நா. பழனிசாமி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தற்போது நிலவள வங்கிகள் மூலம் திராட்சை பயிரிட ஏக்கருக்கு எவ்வளவு ரூபாய் கடன் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

நிலவள வங்கிகள் மூலம் திராட்சை பயிரிட ஏக்கருக்கு ரூபாய் 10,000 கடன் வழங்கப்படுகிறது.



திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, திராட்சை பயிரிட இப்போது கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கடன் சரியாக உபயோகப் படுத்தப்படுகிறதா என்றால் திராட்சை பயிரிட உபயோகப்பட வில்லை. இதை சர்க்கார் பரிசீலனை செய்து திராட்சை பயிரிடுவதற்கு மட்டும் கொடுக்கும்படி செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அந்த வகையில் தான் செய்யப்பட்டு வருகிறது. இது ஒரு சிறப்புத் திட்டம். மதுரை மாவட் டத்தில் 6 இடங்களில் சுமார் ஒரு கோடி ரூபாய் வரையில் திராட்சை பயிரிட்டு பாதுகாப்பதற்கு ஊக்கம் தருகிற வகையில் வழங்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, மதுரை ஜில்லாவைத் தவிர வேறெந்த ஜில்லாவிற்கு இந்த உதவி அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போது மதுரை மாவட்டத்தில்தான் இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வேறு மாவட்டத்தில் இதற்கான அடிப்படை இருக்குமானால் உதவி செய்யலாம்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, சிறப்புத் திட்டமாக திராட்சைக்குக் கடன் வழங்குவதைப் போல் வேறு பயிருக்குக் கடன் வழங்கப்படுகிறதா ? அப்படியென்றால் எந்தெந்தப் பயிருக்கு வழங்கப் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விபரம் என்னிடம் இல்லை.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, திராட்சை சாகுபடியில் கோவை, சேலம் மாவட்டங்களிலும் ஆர்வம் காட்டி வருவதால் கோவை, சேலம் மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அப்படி கோரிக்கை வருமானால் அதுபற்றி பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இப்போது கோவை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் திராட்சை பயிரிடப்படுகிறது. அவர்கள் பேங்குகளில் கடன் பெறத்தான் முயற்சி பண்ணுகிறார்கள். ஆகவே அவர் களுக்கு நிலவள வங்கி மூலம் கடன் அளிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே நிலவள வங்கி மூலம் தான் கடன் கொடுத்து வருகிறோம். இது நிலவள வங்கியில் ஒரு சிறப்புத் திட்டமாக இருக்கிறது. இதுபோல் வேறு மாவட்டத்திலிருந்தும் கோரிக்கை வருமானால் அப்போது கவனிக்கலாம்.

[1975 மார்ச் 27

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, திராட்சை பயிர் செய்தால் சாதாரணமாக ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கரில் 15,000-லிருந்து 20,000 வரை வருமானம் வரும். ஆனால் ஒரு ஏக்கரில் திராட்சை பயிரிடுவதற்கு 10,000-லிருந்து 15,000 வரை செலவாகும். அதற்கு போதுமான அளவு லாண்ட் டெவலப்மெண்ட் பாங்கிலிருந்து பணம் கடன் தருவதில்லை ; குறிப்பாக என்னுடைய தொகுதியில் தருவதே இல்லை. கோவை மாவட்டத்தில் ஜல்லி மண் நிறைந்திருப்பதால் அங்கு நல்ல முறையில் திராட்சை பயிர் செய்ய முடியும். ஆகவே, திராட்சை பயிர் செய்வதை ஊக்குவிக்கும் வகையில் போதுமான கடன் வசதிகள் எல்லாம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி அப்படிபபட்ட வாயப்பு இருக்குமானால் மாநில நில வள வங்கி வேண்டிய உதவிகளைச் செய்யும்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, திராட்சை பயிர் செய்வதற்கு நிலவள வங்கி மூலம சுமார் ஒரு கோடி ரூபாய் வரை கடன் உதவி செய்திருப்பதாக அமைச்சரவர்கள் தகவல் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட உதவிக்குப் பிறகு திராட்சை உற்பத்தி எவ்வளவு அதிகரித்திருக்கிறது ? உற்பத்தி அதிகரித்ததன் மூலமாக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா, அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் அதனால் அரசுக்கு வருமானம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய விபரம் இல்லை. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மை.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திராட்சை உற்பத்திக்காக வழங்கப்பட்ட கூடுதல் கடன் தொகையை எத்தனை ஆண்டுகளில் திருப்பித்தர வேண்டும் ? அதற்கு என்னென்ன விதிமுறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா ?.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : $9\frac{1}{2}$ சத விகித வட்டியுடன் கொடுக்கப்பட்ட கடன் வசூல் செய்யப்படுகிறது. எத்தனை ஆண்டுகளில் "ரீபேமெண்ட்" செய்ய வேண்டுமென்பது பற்றிய தகவல் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், திராட்சைப் பயிர் மதுரை மாவட்டத்தில் விசேஷத் திட்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதேமாதிரி அந்த விசேஷ திட்டத்திற்கு செலவழிக்கப்பட்டிருக்கிற பணம், அதன் பேரில் எவ்வளவு விளைச்சல் அதிகரித்திருக்கிறது என்று சரியாகச் சொல்லாமல் அதிகரித்திருக்கிறது என்று மட்டும் சொன்னார்கள். அதிகக் கடன் கொடுத்ததன் மூலமாக எவ்வளவு கூடுதல் பயிராகியிருக்கிறது என்ற விபரம் தெரிந்தால்தான் மற்ற இடங்களிலும் இந்தத் திட்டத்திற்கு ஊக்கமளிக்கலாம். அந்த வகையில்........



1975 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கடன்பற்றியது. நீங்கள் கேட்பது மூலக் கேள்விக்கு சம்பந்தப்படாதது.

That question is not allowed.

### *Prices of Soaps*

*467 Q.—THIRU N.K. PALANISAMY.—Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that prices of all varieties of soaps have gone up in recent times ;

(b) if so, the reasons therefor ; and

(c) the steps taken by the Government to check the rise in the prices ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கச்சாப் பொருள்களின் விலை உயர்வே சோப்புகளின் விலை உயர்வுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

(உ) இப்பிரச்னைக்கு அகில இந்திய ரீதியில் தீர்வு காண வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், கச்சாப் பொருட்களின் விலை அதிகம் என்று சொன்னாலும் சோப்பு விற்கும் விலையைக் கட்டுப்படுத்த மத்திய சர்க்காரால் முடியவில்லை. அதனால் மத்திய சர்க்கார் ஜனதா சோப் என்ற முறையில் தயாரித்து ஏழை எளிய மக்களுக்கு வழங்கும் திட்டத்தை வைத்திருக்கிறது. அதைப்போல நம்முடைய சர்க்காரும் சாதாரண மக்களுக்கு குறைந்த விலையில் சோப் வழங்க ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த இரட்டை விலைக் கொள்கை மிகவும் ஆபத்தானது. ஏராளமான ஆலை அதிபர்களின் சம்மதத்தோடு இப்படி ஏழை மக்களுக்கென்று உருவாக்கப்பட்ட பல திட்டங்கள் தோல்வி கண்டிருக்கின்றன. உதாரணமாக, துணியை குறைந்த விலைக்குக் கொடுக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. தற்போது அதில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுபற்றி அண்மையில் கூட மத்திய அரசு பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. மூலப்பொருட்களின் விலைகளைக் குறைத்து, தேவையான அளவுக்கு கெமிக்கல்ஸ், டிட்டர்ஜண்ட் பொருட்களை வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டாலொழிய விலை அதிகமாகத்தான் இருக்கும் என்பது உண்மை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்போதும் நம்முடைய காதி இலாகாவில் மார்கோ சோப் தயாரித்து, குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். அதேமாதிரி வேறு சோப்புக்களையும் அவர்கள் உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் சொன்னதைப்போல நம்முடைய காதி இலாகா சாதாரண மக்கள் பயன்படுத்துகிற அளவு குறைந்த விலையில் சோப்புகளை உற்பத்தி செய்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்தில் பல்வேறு மருத்துவ மனைகளுக்கு இப்போது கேரள மாநிலத்திலிருந்து கேரள அரசு தயாரிக்கும் சோப்புகளை தேவையான அளவு வாங்குகிறோம். சில நேரங்களில் மருத்துவ மனைகளில் கூட சோப் இல்லாமல் பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, நம்முடைய மாநில அரசு சொந்தமாக சோப் உற்பத்தி செய்யும் திட்டத்தைத் தொடங்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதை தொழில் துறையில் கேட்க வேண்டும்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, சோப்புகள் அதிக விலை விற்பதற்கும், கிடைக்காமல் இருப்பதற்கும் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, பதுக்கி வைக்கப்பட்டிருப்பதை வெளியே கொண்டுவர என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட தவறான முயற்சிகளை மேற்கொள்ளும்போது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலே பதுக்கப்பட்ட பொருட்களை மீட்க வேண்டும்; அதற்கு வழக்குப் போட வேண்டுமென்று சொல்லி, வழக்கு போட்டு வெற்றியும் பெற்றிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த சோப் தயார் செய்வதற்கு அடிப்படை மூலப்பொருள் எண்ணெய். எண்ணெயைக் கொண்டு சோப் தயாரிக்கக்கூடாது என்று மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகவும், மூன்று ஆண்டுக்குப் பிறகு சோப் தயாரிப்பதற்கு எண்ணெயையே உபயோகப்படுத்தக்கூடாது என்று ஒரு சட்டம் கொண்டு வரப்போவதாகவும் சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அப்படியானால் ஏராளமான அளவில் எண்ணெய் தமிழ் நாட்டில் கிடைக்கிறது. தமிழ்நாட்டிலிருக்கிற இந்த எண்ணெயைக் கொடுத்து, நமக்கு மலிவான விலையில் சோப் கிடைக்க ஏதாவது தனி முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசு திட்டத்தைப் பற்றி தகவல் இல்லை.





திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இப்போது உடம்புக்குப் போடுகின்ற சோப்பினால் தோல் கெடுகிறது என்று "ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்"கள் சொல்கிறார்கள். ஆகவே, இந்த சோப் உற்பத்தியைப் பொறுத்த....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சோப் விலைபற்றியது கேள்வி. நீங்கள் கேட்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

If the Minister wants, let him answer.

திரு. கோவை செழியன் : இப்படி எல்லாவற்றுக்கும் அங்கே உட்கார்ந்து கொண்டு மணியடித்தால் என்ன பொருள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே உட்கார்ந்து நான்தான் மணியடிக்க முடியும். நீங்களா வந்து மணியடிக்க முடியும்?

திரு. கோவை செழியன் : மணியை எடுத்துக்கொண்டு போக வேண்டியதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டுமானால் எடுத்துக் கொண்டு போங்கள்.

திரு. கோவை செழியன் : தயவுசெய்து நீங்கள் ஸ்பீக்கராக இருங்கள்; எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்மாதிரி இருக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் மெம்பராக இருந்தால் வாத்தியார்மாதிரி இருக்கவேண்டியதில்லை. நீங்கள் கேட்பதாக இருந்தால் தொடர்புடைய கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கோவை செழியன் : ஆகவே, தோல் கெடாமல் இருக்க, அரசாங்கத்துறையிலே பொடிகள் தயார் செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பதில் இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சோப் தயாரிப்பதற்குத் தேவையான எண்ணெய் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறது. ஆனால் சோப் தொழிற்சாலைகள் எல்லாம் வடபுலத்திலே அதிகமாக இருக்கின்றன. ஆகவே, எண்ணெய், மற்றும் மூலிகைகளைக் கொண்டு இங்கே சோப் தயார் செய்ய கூட்டுறவுத் துறையில் முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சோப் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் மராட்டிய மாநிலத்தில் அதிகம் 'காண்சென்ட்ரேட்' ஆகியிருக்கிறது. சோப் தயாரிப்பதற்கு டிட்டர்ஜெண்ட் அதிகம் தேவைப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் இத்தொழில் வளர்ச்சியடையவில்லை. இத்தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் பல இடங்களில் குறைவான மூலப்பொருட்களை வைத்துக்கொண்டு தனியார்கள் இப்படிப்பட்ட சோப்புகளை தயார் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதுமான வசதி இல்லாததால் அவர்களால் சரியான முறையில் இத்தொழிலைச் செய்ய முடியவில்லை. ஆகையால் அரசு அவர்களுக்கு உதவிகள் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லாம் தொழில் இலாகா கேள்வியாக இருக்கிறது. அவர்கள் மனு போட்டால் நிச்சயமாக உதவி செய்வார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் பல இடங்களில் சோப் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. நல்ல சோப் உற்பத்திக்கான மூலப்பொருட்களான பருத்திக் கொட்டை, சந்தனத்தைலம் போன்றவை நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன. வெளி மாநிலங்களிலிருந்து இந்தமாதிரி மூலப்பொருட்களை நம் மாநிலத்திலிருந்து வாங்கிக் கொண்டு போய் சோப் தயார் செய்கிறார்கள். ஆகையால் நம்முடைய மாநிலத்திலே கூட்டுறவுத் துறையில் இந்த சோப் உற்பத்தியைச் செய்வதன் மூலம் குறைந்த விலைக்கு சோப்பை கொடுக்கின்ற வாய்ப்பு ஏற்படும். அதுசம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சோப் உற்பத்தி குறைவு என்பது இப்போது இல்லை. ஏராளமான அளவில் இந்தியாவில் உற்பத்தியாகிறது. ஆனால் மூலப்பொருள் விலையேற்றத்தின் காரணமாக விற்பனை விலை அதிகமாக இருக்கிறது. இதைத் தடுக்க வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, நம் மாநிலத்திலுள்ள எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் சோப் உற்பத்தி நல்லமுறையில் செய்யப்படுகிறது. அங்கு உற்பத்தியாகிற சோப் எல்லாச் சிறைச்சாலைகளுக்கும் வேறு சில அரசாங்கத் துறைகளுக்கும் அனுப்பப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதை மேலும் ஊக்குவிக்கும் வகையில் உதவிகள் செய்து, பொதுமக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச்சாலைகளில் சோப் உற்பத்தி செய்யப்படுவதுபற்றி கேட்கிறார்கள். எந்த அளவுக்கு அங்கே வாய்ப்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்கிறார்கள். தமிழகத்தின் தேவை முழுவதையும் அவர்கள் நிறைவு செய்ய முடியாது என்று நான் கருதுகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கையால் செய்யப்படும் சோப்புகள் கூட அண்மைக் காலத்தில் விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? வரி விதிப்புத்தான் அதற்குக் காரணமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : உற்பத்திச் செலவு அதிகம் என்பது தான் காரணம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேட்டி, சட்டை துவைப்பதற்குப் பயன்படும் சோப்புபற்றிக் குறிப்பிடுகிறார்கள். டிட்டர்ஜண்ட் சரியாகக் கிடைக்காதது சோப் விலை உயர்வுக்குக் காரணமாக இருக்கலாம்.

*Mudumalai Sanctuary.*

*468 Q.—Thiru N.K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state.

(*a*) whether it is a fact that the Government propose to prepare a Master Plan for Mudumalai Sanctuary ; and

(*b*) if so, the details thereof ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நமது மாநிலத்தில் உள்ள முதுமலை, கர்நாடக மாநிலத்தில் அதை ஒட்டியுள்ள பந்திபூர், கேரள மாநிலத்தில் உள்ள வயநாடு ஆகிய மூன்று பகுதிகளையும் ஒன்றாக இணைத்து மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று ரூ. 11,52,61,100 இல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : முதுமலைக் காட்டில் காட்டுப் பன்றிகள், யானைகள், நரிகள் போன்றவைதானே இருக்கின்றன. இந்த மூன்று பகுதிகளையும் இணைப்பதன் மூலம் எவ்வாறு அதிகப்படியான மிருகங்களை வளர்க்க முடியும் என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்த மூன்றும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இணைந்திருக்கிற பகுதி—தமிழ்நாட்டின் பகுதி முடிந்தவுடன் அதைத் தொடர்ந்தே இந்தப் பகுதிகள் இருக்கின்றன. ஆகவேதான் இதை பெரிய திட்டமாக்கி—பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளடங்கிய திட்டமாக உருவாக்கியிருக்கிறார்கள். இத்திட்டத்தின் கீழ் உள்ள மரங்களை வெட்டாமல் அடர்த்தியான காடுகளை வளரவிட்டால் மிருகங்கள் அதிகமாக வளர்வதற்கும் பாதுகாப்பாக இருக்கும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, காடுகளை அழிப்பது மிருகங்களின் வாழ்க்கைக்குக் கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் காடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த மூன்று பகுதிகளையும் இணைக்கும் சிறப்புத் திட்டத்தை 11 கோடிக்கு தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள், இதற்கு மத்திய அரசிடம் இருந்து ஏதாவது பதில் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்தத் திட்டம் தென் மாநிலங்களுடைய சுற்றுலாத்துறை அமைச்சர்களுடைய மகாநாட்டில் 1971ஆம் ஆண்டு பேசப்பட்டது. மத்திய சுற்றுலாத்துறை அமைச்சரும் தன் சம்மதத்தைத் தெரிவித்து இந்த மூன்று மாநில தலைமைச் செயலாளர்கள் கலந்து ஆலோசித்து மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் தான் இந்தத் திட்டம் நிபுணர்களால் உருவாக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு நிதி உதவி தருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

திரு. ஈ. எம். நடராசன் : முதுமலைப் பகுதியை ஒட்டியிருக்கிற சத்திய மங்கலம், பர்கூர் பகுதிகளிலும் காட்டு யானைகள், கரடிகள் நிறைய இருக்கின்றன. அத்துடன் இவற்றையும் சேர்க்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : உடனடியாக எல்லாப் பகுதிகளையும் சரணாலயங்களாக ஆக்க இயலாது. புதியதாக ஆனைமலைப் பகுதியை எடுத்திருக்கிறோம். இப்போது 6 சரணாலயங்கள் இருக்கின்றன. அதை ஏழு, எட்டு என்று ஆக்க வேண்டுமென்றால் அதற்குரிய சாத்தியக் கூறு இருக்குமானால் கவனிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : நம்முடைய அமைச்சர் கூறுகின்ற இந்தத் திட்டம் தென் மாநிலங்களுக்கே சிறப்பு வாய்ந்த திட்டமாகும். மத்திய அரசாங்கம் இதற்கு அனுமதி வழங்கவில்லை என்றால் தென் மாநிலங்களே சேர்ந்து இந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எடுத்தவுடன் நெகடிவ் அப்ரோச்சில் ஒரு பிரச்சினையை அணுகுவதில் பிரயோசனம் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்தச் சிறப்புத் திட்டத்திற்கு 11 கோடி செலவு செய்கிறோம் என்றாலும் மிருகங்கள் இல்லாவிட்டால் என்ன பிரயோசனம்? என்னென்ன மிருகங்கள் இங்கே வளர்க்கப்படும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை என்று இல்லை. எதிர் பார்க்கிற அளவுக்கு இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். காட்டு எருமைக்கூட்டம், யானைகள், சிறுத்தைப் புலி ஆகியவை முதுமலைக் காட்டிலேயே இருக்கின்றன. இன்னும் இந்த மூன்று பகுதிகளையும் இணைத்து அடர்த்தியான காடுகளை வளரவிட்டால் அதிக அளவுக்கு மிருகங்கள் விருத்தியாகும் என்றுதான் இந்தச் சிறப்புத் திட்டம் அமைக்கப்படுகிறது.

திரு. த. சோனையா : முதுமலைக் காட்டில் இருக்கிற மிருகங்களோடு வெளியில் இருந்து சில மிருகங்களைக் கொண்டுவந்து விட்டு படம் எடுக்கிறார்களே, அப்படிப் படம் எடுக்க அரசாங்கம் அனுமதி வழங்குகிறதா? அதற்கு ஏதாவது கட்டணம் விதிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அனுமதியும் பெற வேண்டும், கட்டணமும் செலுத்த வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : முதுமலைப் பகுதியில் அதிகமான யானைக்கூட்டம் இருக்கிறது. மேலும் பல மிருகங்கள் இருக்கின்றன. அவற்றைப் பார்க்க வேண்டுமென்றால் காலையில்தான் பார்க்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் இரவு அங்கே தங்க விடுதி வசதி மிகக் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை விரிவாக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: வசதி குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்றுதான் இந்தச் சிறப்புத் திட்டம் உருவாக்கப் படுகிறது.

திரு. கே. எ. வகாப் : இந்த முதுமலை, பந்திபூர், வயநாடு ஆகிய ஒவ்வொன்றிலும் இன்றைக்கு என்ன மிருகங்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பது தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அங்குள்ள மிருகங்கள் இங்கு வந்தோ, இங்குள்ளவை அங்கு சென்றோ குட்டி போடுகிறபோது—என்னுடையது உன்னுடையது என்கிற தகராறு ஏற்பட இடம் ஏற்படுமே, அதைத் தவிர்க்க இப்போதே கணக்கிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: புதியதாக ஒன்றும் பிரச்சினை வருவதற்கில்லை. இப்போதே அந்தப் பிரச்சினை இருக்கிறது.

## Sales Tax on Aviation fuel.

*469 Q.—THIRU N.K. PALANISAMY:—Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) whether the Centre has requested the State to reduce the Sales Tax on Aviation fuel during April, 1974; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: விமானங்களுக்கு விற்கப்படும் எண்ணெய்க்கு விற்பனை வரியை ரத்து செய்யவேண்டுமென்று 1—10—1973-இல் மத்திய அரசு கேட்டுக்கொண்டது. அதனால் ஏற்படுகிற இழப்புக்கு இழப்பீட்டுத் தொகை தருவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளது. நமது அரசு அதனைப் பரிசீலனை செய்து 24—4—1974 முதல் விற்பனை வரியை ரத்து செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

திரு. என்.கே. பழனிசாமி: இதன் காரணமாக எவ்வளவு இழப்பு? எவ்வளவு பணம் மத்திய சர்க்காரில் இருந்து நமக்குக் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: சுமார் 13 லட்சம் வரவேண்டிய கணக்கு இருக்கிறது.

## சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கு திட்டம்.

*470 வினா—திரு. எல். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதல்வரின் இலவச சைக்கிள் ரிக்ஷா திட்டத்திற்கு இதுவரை கிடைத்துள்ள நன்கொடை தொகை எவ்வளவு?

(இ) இதுவரை எத்தனை பேருக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ரூ. 26,22,499·41.

(இ) 768.

திரு. என். கிட்டப்பா: மனிதனை மனிதன் வைத்து இழுக்கிற கொடுமையை ஒழிக்கவேண்டும் என்பதற்காக கை ரிக்ஷாக்களை ஒழித்துவிட்டு, சைக்கிள் ரிக்ஷா வழங்கினோம். மாயூரம் போன்ற பகுதிகளிலும் சைக்கிள் ரிக்ஷா வழங்கப்பட்டிருக்கிறது. இதை விரிவுபடுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது 50-வது பிறந்த தின விழா அன்று மனிதனை மனிதன் வைத்து இழுக்கின்ற கொடுமையை ஒழிக்க வேண்டுமென்று சைக்கிள் ரிக்ஷா வழங்குகிற திட்டம் அறிவிக்கப்பட்டு, இதற்காக பொது மக்களிடம் இருந்து நிதி திரட்டப்பட்டது. கிட்டத்தட்ட இந்த நிதி 26 லட்சத்திற்கு வந்தது. கை ரிக்ஷாக்களை ஒழித்துவிட்டு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கிய பிறகும் 13 லட்சம் ரூபாய் மீதி இருந்தது. இந்த 13 லட்சத்தில் பெரு நகரங்களிலும், நகரங்களிலும்—வாழ்கின்ற தொழிலாளர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா வழங்கலாம் என்ற திட்டத்தை உருவாக்கி நாள் ஒன்றுக்கு 1 ரூபாய் வீதம் 1,200 நாட்கள் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் சைக்கிள் ரிக்ஷா வழங்க திட்டம் வகுத்தோம். மாயூரம் போன்ற பகுதியிலும் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் திரும்ப பணம் அரசாங்கத்திற்கே வருவதால் ஆண்டுதோறும் இதுபோல வருகிற பணத்தைக் கொண்டு மேலும் மேலும் சைக்கிள் ரிக்ஷா வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிற தொடர் திட்டமாகவே இது அமைந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. கா. வேழவேந்தன்: மனிதனை மனிதன் வைத்து இழுக்கிற இழிவுத்தன்மை ஒழிக்கப்பட்ட இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியை நினைந்து இந்த அரசுக்கு நன்றி கூறுகிற காலத்தில் எதிர் காலத்தவர்களும் இதைத் தெரிந்துகொள்வதற்கு ஒரு கை ரிக்ஷாவையாவது சென்னை மியூசியத்தில் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, உண்மை தான். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல், வருங் காலத்தில் இப்படி ஒரு ரிக்ஷா இருந்ததா, இல்லையா என்பதே தெரியா



மல் போய்விடும். ஆகவே, நம்முடைய காலத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தத் திட்டம்பற்றி வருங்காலம் தெரிந்துகொள்ள, சென்னைப் பொருட்காட்சியில் ஒரு கை ரிக்ஷா வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, சைக்கிள் ரிக்ஷாக்களை பல மாவட்டங்களிலே வாங்கித் தர திட்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி வாங்கித் தர, எம்மாதிரியான ஆட்களைப் பொறுக்கியெடுத்து வாங்கித் தரப்படுகிறது? அவர்கள் விண்ணப்பிக்க வேண்டுமென்றால் எந்த முறையிலே விண்ணப்பிக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் முதலிலேயே எடுத்துச் சொன்னதைப் போல, அந்தந்த நகரங்களிலே சைக்கிள் ரிக்ஷா இழுப்பதற்கேற்ற சக்தியுள்ளவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மனு அனுப்புகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அம்மனுக்களைப் பரிசீலனை செய்து, இன்னின்னாருக்கு வழங்கலாம் என்ற முறையில், அரசாங்கத்திறகுப் பரிந்துரை செய்கிறார்கள். இது சக்தியுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு திட்டம் என்பதுடன், அவர்கள் பணத்தைத் திரும்பக் கொடுக்கிற சூழ்நிலையிலே, அந்தப் பணம் வளர்ந்துகொண்டே வரக்கூடிய சூழ்நிலையிருக்கிற காரணத்தாலே, இது நல்ல பயனளிக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அந்த செலக்ஷன் நடக்கிறது.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மனிதனை மனிதன் இழுக்கின்ற இந்த முறையை ஒழிக்க வேண்டுமென்று சைக்கிள் ரிக்ஷா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சாதாரண கை ரிக்ஷாவில் மனிதன் நடந்து இழுத்துக் கொண்டிருந்தான்—இழுத்துக்கொண்டிருக்கிறான். சைக்கிள் ரிக்ஷாவில் உட்கார்ந்துகொண்டு கஷ்டப்பட்டு, மனிதனை மனிதன் இழுக்கிறான். சமீபத்திலே, ஆட்டோ சைக்கிள் ரிக்ஷா என்ற பெயரில் ஒரு சின்ன மோட்டார் ஒன்றைக் கண்டுபிடித்து, சைக்கிள் ரிக்ஷாவில் ஃபிட் அப் செய்துள்ளதாகத் தெரிகிறது. ஆகவே அந்தமாதிரி இந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டாரைப் பொருத்தி, ஆட்டோ சைக்கிள் ரிக்ஷா கொண்டு வர அரசாங்கம் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தெருவிலே ஓடி இழுத்துச் செல்ல வேண்டிய நிலையை மாற்றி, ஓரளவுக்கு உட்கார வைத்ததே மிகப் பெரிய காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல், இந்த ஆட்டோ மோட்டார் மாதிரி ஃபிட் செய்யக் கூடியது பரீட்சார்த்தமான நிலையிலே இருக்கிறதே தவிர, இன்னும் பரவலான நிலைக்கு வரவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் இன்னும் அதிகமான தொழிலாளிகளுக்கு இம்மாதிரியான சைக்கிள் ரிக்ஷா வழங்குவதாகச் சொல்கிறார்கள். இதுபோன்ற திட்டங்கள் அனைத்தும் சென்னையைச் சுற்றிலும், மாயூரத்தைச் சுற்றிலும் இருப்பதாகத் தெரிகிறதே

தவிர, தென் மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பதில்லை. ஆகவே, அமைச்சரவர்கள் தென் மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, முனிசிபல் டவுன்ஸ் அல்லது நகராட்சி மன்றங்களுள்ள பகுதிகளுக்கு இந்த வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே வடக்கு, தெற்கு தேவையில்லை.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் என்னுடைய எண்ணத்தைப் பிரதிபலித்திருப்பதற்காக நன்றி. தென் மாவட்டத்தில், குறிப்பாக மதுரையில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், முகவை மாவட்டத்தில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், உடல் வலிமையுள்ள, ஆனால் பிழைக்க வழியின்றி மூட்டை தூக்கி—சங்கம் வைத்து அவர்கள் விரட்டி அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேற்று கூட அந்தப் பஞ்சாயத்தை கலெக்டரிடம் பேசினோம். ஆகவே, உடல் வலிமையிருந்தும் வேலையில்லாத ஏழைகளுக்கு இதைச் சிறப்புத் திட்டமாக வைத்து பாதுகாப்பு அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சரவர்கள் அண்மையில் மதுரையிலே இவற்றை வழங்கினதாக என்னிடம் குறிப்பிடுகிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் பகுதிகளுக்கு அக்கறை காட்டியதற்கு என்னுடைய நன்றி.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, சைக்கிள் ரிக்ஷாக்களை தொழிலாளர்களுக்கு வழங்குவதில் அரசாங்கம் அரசியல் கண்ணோட்டத்தோடு நடந்துகொள்வதாக புகார்கள் சொல்லப்படுகின்றன. அப்படிப்பட்ட புகார்கள் உண்மைதானா? அதன் அடிப்படையில் அரசாங்கம் செயல்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசியல் என்பது பாவ காரியமல்ல.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, பல்லாயிரக்கணக்கான சைக்கிள் ரிக்ஷாக்களை ஏழைத் தொழிலாளிகளுக்கு நம்முடைய அரசாங்கம் இலவசமாக அளித்திருக்கிறது அல்லது லோன் முறையிலே அளித்திருக்கிறது. இராமநாதபுரத்தில் எந்தெந்த நகரத்திற்குக் கொடுக்கப்படுகிறது என்று அறிவிக்க இயலுமா? அடுத்தபடியாக, முனிசிப்பாலிட்டி வரைக்கும்தான் கொடுக்கப்படுகிறது. ஏழ்மை என்பது முனிசிப்பாலிட்டியோடு நின்று விடவில்லை. அவர்களைப் போல், மேஜர் பஞ்சாயத்துக்களிலும் ஏழைத் தொழிலாளிகள் இருக்கிற காரணத்தாலே, முனிசிப்பாலிட்டியிலிருந்து, மேஜர் பஞ்சாயத்துவரை கீழ் இறங்கி, அங்கும் சைக்கிள் ரிக்ஷாக்கள் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி கை ரிக்ஷா ஒழிப்பதைப்பற்றி, மறுபடியும் நாம் உருவாக்கிய திட்டத்தின்கீழ் எங்கெங்கு வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைத் தனிக் கேள்வி போட்டால் நான் சேகரித்துத் தர முடியும். எந்த மாவட்டமும் புறக்கணிக்கப்படவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, ரூ. 1 கட்டுபவர்களுக்கு படிப்படியாக சைக்கிள் ரிக்ஷா வழங்குகின்ற திட்டம் நகராட்சிகளுக்கு மட்டும் என்று சொன்னால், பேரூராட்சிகளிலே ரிக்ஷாக்களிருக்கின்றன. இதனை பணம் கட்டினால்தான் தரப்போகிறார்கள். ஆகவே, பேரூராட்சிகளிலும் இந்த சைக்கிள் ரிக்ஷா திட்டத்தை அரசு கொண்டுவருமா? அடுத்து, ரிக்ஷாவை சென்னையில் ஒழித்து விட்டோம். வெளிநாடுகளிலே கூட, ரிக்ஷாவை உல்லாசத்திற்காக வைத்திருக்கிறார்கள். ஹாங்காங்கிலே ரூ. 20 வாங்கிக்கொண்டு கை ரிக்ஷாவிலே உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்கின்றார்கள். அப்படி இங்கும் அதிகத் தொகை வாங்கிக்கொண்டு, உல்லாசப் பயணிகளுக்குப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, உல்லாசத்திற்குக் கூட இந்த இழி தொழிலை நடத்துவது சரியானதாகாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வந்தவாசி என்ற பேரூராட்சியைச் சேர்ந்தவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்கலாமா என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. கே.டி.கே. தங்கமணி: சார், மதுரை நகரில் 1,100 ரிக்ஷாக்களுக்கு ஏற்கனவே பர்மிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் திட்டத்தின் கீழ் 250 புது ரிக்ஷாக்கள் வந்தன. அதற்கே லைசன்ஸ் கிடைக்க கஷ்டமாக இருந்தது. ஏற்கனவே 200 ஓடிக்கொண்டிருக்கின்றனவே, அந்த ரிக்ஷாக்களுக்கும் லைசென்ஸ் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கனவே இந்த யோசனை அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த சைக்கிள் ரிக்ஷா வழங்குவதிலே, அரசியலில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் மறைமுகமாக ஒப்புக் கொள்கிறார்கள். அரசியலில் அரசியல் பாவமல்ல என்றாலும், ஆளுங்கட்சிக்காரர்கள் அரசியலைப் பயன்படுத்தும்போது பாவமாகிறதே, ஆகவே, பொதுவாக பாவமல்ல என்று சொன்னால் சரியாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசியல்வாதிகளாகிய நாமே நம்மையறியாமலே, அரசியல் என்பது பாவம் என்பது போல் நாட்டு மக்களிடத்திலே ஒரு கருத்தைப் பரவவிடுகிறோம். அது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல என்ற காரணத்தாலேதான் அரசியல் என்றாலே அது ஒன்றும் பாவம் அல்ல என்று நான் குறிப்பிட்டேன்.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, மதவாதிகளின் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடாது என்பது அண்ணாவின் கொள்கை. அது போலவே மத உணர்ச்சிகள், மூட நம்பிக்கைகள் இவற்றையெல்லாம் மேலும் மேலும் வளர விடக்கூடாது என்பதும் அண்ணாவின் எண்ணம். அண்ணாவின் கொள்கை, அண்ணாவின் எண்ணம் இவற்றைச் செயல்படுத்துவதாகச் சொல்லிக்கொள்கின்ற இந்த அரசு இப்படிப்பட்ட காரியங்களுக்கு ஊக்கம் தருகிற முறையில் உள்ள தங்க ரதம் போன்ற பணிகளைச் செய்வதற்கு ஊக்கம் கொடுக்காமல் இருக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அண்ணா அவர்களுடைய கொள்கையை இந்த அரசாங்கம் நிறைவேற்றிவருகிறது. அந்த முறையிலே தான் அரசாங்கப் பணத்திலிருந்து இதற்காகச் செலவழிக்காமல் பக்தர்களிடமிருந்து பெறுகின்ற பணத்தை வைத்து தங்கக்·கிரீடம், வைரக் கிரீடம் இவையெல்லாம் செய்யப்படுகின்றன.

திரு. கு. காமாட்சி : தங்கம் அன்னியச் செலாவணியை நமக்குக் கொடுக்க கூடிய முக்கியமான ஒன்று. அதைக் கட்டுப்படுத்த வேண்டியது மத்திய அரசு. இப்படி கோயில்களிலும் மற்ற இடங்களிலும் தங்கத்தைப் புகுத்தக்கூடாது என்று மத்திய அரசு தீர்மானம் போட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : எதற்காகத் தீர்மானம் என்று தெரியவில்லை. மத்திய அரசாங்கத்திற்கும் தங்கத் தேர் செய்வதற்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே தங்கத் தேர் செய்வதற்கும் அன்னியச் செலாவணிக்கும் எந்தவிதமான தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, கழகத்தினுடைய அடிப்படையான கொள்கை காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி உங்களுக்கு கணக்கு இல்லாத நகைகள் எதற்காக என்று கேட்டவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தங்கத் தேர் விடுவது போன்றவற்றில் அக்கறைகாட்டுவது அவர்கள் சொன்ன கொள்கைக்கு முரண் அல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அன்றைக்கு என்ன கொள்கையை நம்முடைய தலைவர்கள் சொன்னார்களோ அதே கொள்கைகளைத் தான் நாம் வைத்திருக்கிறோம். இதற்காக அரசாங்கப் பணமோ நிதியோ எந்த வகையிலும் செலவழிக்கப்படவில்லை. யாராவது இன்ன காரியத்திற்கர்க என்று விரும்பி பணம் கொடுப்பார்களானால் அந்தப் பணம் அந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது, அவர்கள் எந்தக் காரியத்திற்காக காணிக்கை என்ற முறையிலே செலுத்துகிறார்களோ அந்தக் காரியத்திற்கு அந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது. மக்களுடைய வரிப் பணத்திலிருந்து அல்லது அரசாங்க நிதியிலிருந்து செய்யவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கழகத்திற்கு என்று சில கொள்கைகள் உண்டு. அரசுக்கு என்று சில கடமைகள் உண்டு. இரண்டிற்கும் இருக்கிற வேறுபாட்டைப் புரிந்துகொண்டால் அதற்குத் தகுந்தபடி அரசாங்கம் நடந்துகொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.



THIRU K. M. SUBRAMANIAM: A secular State's responsibility is to look after the interests of all the religions according to the religious belief and not to call one religion superstitious and another religion superstitious. So, whatever the policy is, is it not the duty of the Government to respect the sentiments, whether it is called superstitious by some people or whether it is called intelligence by some people or rational by some people, and to respect the feelings of all an religions ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இத்தகைய அம்சங்களையெல்லாம் மனதிலே வைத்து அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாஅவர்கள் தன்னை மிக எளிமையான முறையிலேஅமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே எந்தவிதமான ஆடம்பரமோ ஆடம்பர ஆடை ஆபரணங்களோ இல்லாமல் இருந்தார்கள் உறுப்பினர் திரு. ஆலடி அருணா போன்றவர்கள் அப்படியில்லை, மோதிரங்களை அணிகிறார்கள்............

Mr. Deputy Speaker : The question is disallowed.

திரு. கே. கந்தசாமி : நான் வேறு பாயிண்ட் சொல்கிறேன். தயவு செய்து அருணா அவர்கள் தங்கத்தை வெறுக்க வேண்டும், அதே நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னை தமிழன் என்றும் இந்தியன் என்றும் உணரத் தவறியதே இல்லை. இந்தியர்களுக்கு என்று உருவாக்கப்பட்டிருக்கிற கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதமாக அவர்கள் பேசியதில்லை..................

Mr. Deputy Speaker : How is it relevant ? It is not relevant to this question. தங்கத் தேர் பற்றி மட்டும் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : அவர் மதத்தைப் புண்படுத்திச் சொல்லிய கருத்துக்கள் தவறானவை. துணைச் சபாநாயகர் அவர்கள் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அண்ணா அவர்கள் யாருடைய மனதையும் புண்படுத்தவில்லை. ஆனால் இவர்கள்....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தங்கத்தேர் பற்றிக் கேள்வி போடுங்கள். This is not a supplementary at all.

THIRU K. KANDASAMY: I am a Hindu. My feelings are wounded. under the Constitution I am entitled for protection. For example, perarignar Anna respected the Constitution.

Mr. Deputy Speaker : You may make a submission after the question hour.

திரு. கே. கந்தசாமி : I am very sorry. என்னுடைய மனத்தைப் புண்படுத்திப் பேசுகிற முறையிலே மாண்புமிகு உறுப்பினர்களை அனுமதிப்பது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்படிக் கருதவில்லை......

THIRU K. M. SUBRAMANIAM : We won't tolerate abuse.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய ரிலிஜியன் டாலரன்ஸ் உள்ளது. டாலரன்ஸ் இல்லையென்றால் எப்படி ?

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்கள் பதில் சொல்லும்போது தி.மு.க.வின் கொள்கைகள் வேறு, அரசினுடைய கடமைகள் வேறு என்று சொன்னார்கள். அப்படியென்றால் தி.மு.க.வின் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற கடமை இந்த அரசுக்கு இல்லையென்று ஆகிவிடுமல்லவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வெள்ளைக்காரன் ஒரு காலத்திலே இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தபோது அவன் கொண்டிருந்த சமயக் கொள்கைகள் வேறு, அரசியல் கருத்துக்கள் வேறு. நாம் கட்சி ரீதியிலே கொள்கைகளை எடுத்துச் சொல்கிறோம். அரசின் கடமை என்று வருகிறபோது நாலரைக் கோடி மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துத் தரவேண்டுமென்ற பொறுப்பு இருப்பதால்தான் அதை அரசின் கடமை என்று நான் குறிப்பிட்டேன்.

## திருவாய்மூர் திருக்குளம்.

*473 வினா—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நாகப்பட்டினம் தாலுகா திருவாய்மூர் கிராமத்தின் திருக்குளத்திற்கான பட்டா பெற்று அதனை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருவாய்மூர் கிராமத்தில் குளம் புறம்போக்கு என்று பதியப்பட்டுள்ள 5.40 ஏக்கர் பரப்பளவில் உள்ள குளத்தில் மீன் பாசியை அனுபவிக்கும் பாத்தியதை அதன் வருமானத்தை கோயில் உபயோகத்திற்காகவே செலவழிக்கவேண்டுமென நிபந்தனையுடன் தியாகராச சாமி திருக்கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இக் குளத்தை மேம்பாடு செய்யவும் அதற்கு ஆறு படித்துறைகள் மற்றும் நடுவில் வட்ட வடிவமான



மேடை அமைத்து விளக்குக் கம்பம் நாட்டவும் செயற்குறிப்பு திருக்கோயில் நிர்வாகத்தினரின் பரிசீலனையில் உள்ளது. உத்தேசச் செலவு ரூ. 9,672. இம்மேம்பாடுகள் செய்ய அவ்விடத்திற்கான பட்டா கோரி ஆலயத்தினர் விண்ணப்பித்துள்ளார்கள். இவ்விண்ணப்பம் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் பரிசீலனையில் உள்ளது.

## கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள்.

*474 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 முதல் 1973 டிசம்பர் வரை திருச்சி மாவட்டத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்டு தங்கப்பதக்கமும், இதர உதவியும் வேண்டி மனு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) அதில் எத்தனை பேருக்கு உதவியும், தங்கப்பதக்கமும் அளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) 1972 முதல் 1973 டிசம்பர் வரை திருச்சி மாவட்டத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களில்

(i) தங்கப்பதக்கப் பரிசு மட்டும் வேண்டி மனு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2.

(ii) கலப்புத் திருமணத் தம்பதியருக்கு பொதுவாக அரசு அளிக்கும் பரிசுகளும் சலுகைகளும் வேண்டி மனு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2.

(இ) நால்வருக்கும் தங்கப்பதக்கங்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதற்கு தங்கப் பதக்கத்தோடு இந்த அரசாங்கம் வேறு எந்த எந்த உதவிகளைச் செய்கிறது? அப்படிச் செய்கிற நேரத்திலே காலதாமதம் இல்லாமல் விரைந்து உதவியைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தொழில் துறையில் ஏதாவது பொருளாதாரத்தைத் தேடுவதற்கு அவர்கள் மனு செய்துகொள்வார் களானால் அவர்களுக்கு முதலிடம் கொடுப்பதை இந்த அரசு கொள்கையாக வைத்திருக்கிறது. அந்தத் தொழில்கள் தையல் மெஷின் தொழில், தச்சுத் தொழில் சலவைத் தொழில் போன்ற தொழில்கள். அது மட்டுமல்ல, அச்சு இயந்திரம் வைப்பதற்குக்கூட, மளிகைக் கடைகள் வைப் பதற்குக்கூட, துணிக் கடைகள் வைப்பதற்குக்கூட அவர்களுக்கு முதலிடம் தரலாம். இந்தக் கேள்வியில் அவைகுறித்துக் கேட்கப்படவில்லை. அதனால் தான் பதககத்தைப்பற்றிய குறிப்புகளை மட்டும் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, மனித ஜாதிக்குள் மனித ஜாதி திருமணம் செய்துகொள்கிறது. வேறு அல்ல. கலப்புத் திருமணம் என்று சொல்வதைப் பார்த்தால் வேறு ஏதோ பன்றி அவதாரம் என்றெல்லாம் சொல்லக்கூடிய முறையில் வருகிறது. ஆகவே மனித ஜாதிக்குள் திருமணம் செய்துகொள்வதை கலப்புத் திருமணம் என்று சொல்லாமல் சீர்திருத்தத் திருமணம் என்று சொல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: சீர்திருத்தத் திருமணம் என்பது வைதிகச் சடங்குகளுக்கு அப்பால் ஏற்கனவே இருந்த முறை மாறி வேறு முறையை அனுஷ்டிப்பது ஆகும். ஆனால் திரு. வடிவேல் அவர்களுக்குத் தெரியும், ஜாதி எந்தக் காலத்தில் ஏற்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. இப்போது அதை ஒழிக்க வேண்டுமென்று எல்லா மக்களும் முடிவு எடுத்துக்கொண்டு, அதற்கு இது ஒரு வழி என்ற முறையிலே ஒரு திருமணம் என்றால் அதில் ஆண் அரிசன் ஆகவும் பெண் இன்னொரு ஜாதியைச் சேர்ந்தவராகவும் அல்லது பெண் அரிசன் ஆகவும் ஆண் இன்னொருவராகவும் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் சாதி ஒழியும் என்ற முறையிலே இந்த முறை வைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே சீர்திருத்தம் வேறு.

(முற்பகல் 10–00)

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்கப் பதக்கம் பெற்றவர்களின் எண்ணிக்கையைச் சொன்னார்கள். அந்த எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருந்தது. கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக, தங்கப் பதக்கம் தருகிறோம் என்று சொன்னதற்குப் பிறகும் நாம் எதிர்பார்த்த அளவிற்கு கலப்புத் திருமணங்கள் நிறைய நடக்கவில்லை. எனவே, அதை மேலும் ஊக்குவிக்கும் அளவிற்கு தங்கப் பதக்கத்தோடு மேலும் தக்க நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, இப்பொழுதுகூட 30-ஆம் தேதி 51 ஜோடிகளுக்குத் திருமணம் நடத்த இருக்கிறார்கள். இதுவரை நடந்த திருமணங்கள் 277-க்கு நமக்குக் கணக்கிருக்கிறது. கணக்கில்லாமல் எத்தனையோ இருக்கும். ஆனால் சில திருமணங்கள் இந்தத் தங்கப் பதக்கம் கொடுப்பது தெரிந்தோ தெரியாமலோ நடக்கின்றன. ஆகவே, அவைகளும் கணக்கில் வந்தால் ஏராளமாக, ஆயிரக்கணக்கில் வரும். ஏனோ தெரியவில்லை, வசதி படைத்தவர்களாக இருக்கலாமோ என்னவோ தெரியவில்லை, அதற்கான கணக்குகள் வரவில்லை. அவைகளும் கணக்குக்கு வந்தால் அரசாங்கம் எல்லாச் சலுகைகளையும் கொடுப்பதற்கு முதலிடம் தரும்.



திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்தத் தங்கப் பதக்கம் கொடுக்கப்படுகிறது என்று நினைக்கிறேன். அதற்கு முன்பு இந்த மாதிரி கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் இந்தத் தங்கப் பதக்கம் கொடுப்பதற்குப் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்தில், 1968-ஆம் ஆண்டு இந்தமுறை ஏற்படுத்தப்பட்டு, முதலில் 10 ஜோடிகளுக்குத் திருமணம் செய்தார்கள். அவர்கள்தான் இந்த வழியை வகுத்துக் கொடுத்தார்கள். இதற்கு முன்னால் நடந்த திருமணங்கள் ஒரு முறையாக இல்லை. யாருடைய தலைமையிலேனும் இந்தத் திருமணம் நடந்து, அதற்கான அத்தாட்சியைக் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களைத்தான் முறைப்படி திருமணம் செய்து கொண்டவர்களாக அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இம்மாதிரி இருவேறுபட்ட ஜாதியினர் திருமணம் செய்துகொண்டால், அவர்களது வீட்டார், சுற்றத்தாருடைய ஆத்திரத்திற்கும், கோபத்திற்கும் ஆளாகி வாழ்விலே பல சிக்கல்கள் வந்துவிடும் என்று பயப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, அப்படித் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் முன் சலுகை கொடுத்து, அரசாங்க உத்தியோகத்திற்கான சில நிபந்தனைகளை அவர்கள் விஷயத்தில் தளர்த்தவும் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, திருமணம் செய்துகொள்வதில் இரண்டு வகையினர் இருக்கிறார்கள். படித்தவர்களும் செய்து கொள்கிறார்கள், படிக்காத இரு ஜாதியினரும் செய்து கொள்கிறார்கள். படித்தவர்களுக்கு உள்ளபடியே அவர்களுடைய நிலைமைக்குத் தகுந்தாற்போல் முதலிடம் உத்தியோகத்தில் கொடுக்கப்படுகிறது. படிக்காதவர்களுக்கு தொழில், வீடு, மனை கொடுப்பதில் இவைகளிலே முதலிடம் கொடுத்து வருகிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படிக் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்கள் விண்ணப்பித்தால் தங்கப் பதக்கம் கொடுப்பது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் தெரிந்து அப்படிப்பட்ட திருமணம் நடந்தால் அவர்களுக்குத் தங்கப் பதக்கம் கொடுக்கலாமே. நம்முடைய முதலமைச்சரின் மகன் அழகிரி—காந்திக்குத் திருமணம் நடந்தது. இப்படிப்பட்டவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொள்வதை உற்சாகப்படுத்தும் வகையில் விண்ணப்பித்தால் கொடுக்கப்படும் என்பதற்குப் பதிலாக, அவர்கள் விண்ணப்பிக்காமல் இருந்தாலும் கூட அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் அரசாங்கமே அப்படிப்பட்ட தங்கப் பதக்கத்தை கொடுக்க முன்வருமா?

[1975 மார்ச் 27

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, விண்ணப்பிக்காமலே கொடுப்பது என்பது சரியாக வராது. அரசாங்கத்தில் கணக்கு வேண்டும். அதற்காக விண்ணப்பத்தை வைத்துத்தான் கொடுக்க முடியும். நாளைக்கு இதே சட்டமன்றத்தில் கேள்வி வரும்பொழுது கணக்குக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, விண்ணப்பத்தின் பேரில்தான் கொடுக்க முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கலப்புத் திருமணம் செய்து கொண்டால் சில ஜாதிகளில் கட்டுப்பாடு செய்து ஜாதியை விட்டே தள்ளி விடுகின்றார்கள். அம்மாதிரி சம்பவங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் ஜாதியைவிட்டுத் தள்ளியவர்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, கட்டாயம் நடவடிக்கை எடுப்போம். அரசாங்கத்தின் சார்பிலே மட்டுமல்ல, இந்தக் கேள்வியைக் கேட்கிற உறுப்பினருக்கே அதே எண்ணந்தான் இருக்கும்.

### அரிசனங்களுக்குத் தையல் மிஷின்கள் வழங்கல்

*475 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— .

1973–ஆம் ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை அரிசனங்களுக்கு தையல் மிஷின்கள் கொடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : 91.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, 1972–73–ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கொடுக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகிறார்கள். நான் கேட்டது 1973–74–ஆம் ஆண்டுக்கு. இதைத் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 1973–74–ஆம் ஆண்டு நிதியில் வழங்கப்பட்ட தையல் மிஷின்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, பொதுவாக அரசாங்கத்தின் நிலை 1973–74 என்பது ஒரு ஆண்டு. அந்த ஆண்டுக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் 91 தான் கொடுக்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு உங்களுக்குச் சந்தேகம் எழுந்தால் வேறொரு கேள்வி மூலம் விவரம் கேட்டால் விவரம் வாங்கித் தருகிறோம்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இந்தத் தையல் மிஷின்கள் கொடுப்பது சம்பந்தமாகச் சென்ற ஆண்டு பணம் ஒதுக்கீடு செய்யாததால் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு கொடுப்பதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? எப்பொழுது கொடுக்கப்படும் என்று தெரிவிப்பார்களா?



1975 மார்ச் 27]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு என்றால் இப்பொழுது 1975–76–க்குக் கேட்கிறார்களா அல்லது 1974–75–ஆம் ஆண்டுக்குக் கேட்கிறார்களா என்று புரியவில்லை. 1974–75–ஆம் ஆண்டுக்கு என்றால் இதுவரைக்கும் செலவாகிவிட்டிருக்கும். அது விவரம் தனியாகக் கேட்க வேண்டும். 1975–76–ஆம் ஆண்டுக்கு என்றால் அதற்கு இன்னும் மான்யமே வரவில்லை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, குறிப்பாக 1974–ஆம் ஆண்டுக்கான தையல் மிஷின்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்பது என்னுடைய புகார்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, கரெக்ட். 1974–75–ஆம் ஆண்டுக்கு இப்பொழுதுதான் செலக்ஷன் நடந்து கொண்டிருக்கிறது. 31–ஆம் தேதிக்குள் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு தகவல் கொடுப்பார்கள். ஆனால் இது 1973–ஆம் ஆண்டைப் பற்றியது, 1973–இல் கொடுத்த விவரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கேட்டது 1973–ஆம் ஆண்டைப்பற்றி. 1974–ஆம் ஆண்டுக்கு வேண்டுமானால் தனிக் கேள்வி போடுங்கள்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## (2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் நுழைந்து மாணவர்களைச் சிலர் தாக்கியது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். திருவாளர் கோவை செழியன், டாக்டர் எச்.வி. ஹாண்டே, திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், கே.டி. கே. தங்கமணி, என். கே. பழனிசாமி, சோ. அழகர்சாமி, எம். சுரேந்திரன் ஆகியோர் சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் சிலர் நுழைந்து சில மாணவர்களைத் தாக்கியது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இது சம்பந்தமாக 25–ஆம் தேதியன்றே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். அப்பொழுது முதலமைச்சரவர்கள் முழுவிவரங்களும் இல்லாத காரணத்தால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். இதிலே இரண்டு மூன்று

[திரு. கே. டி. கே. தங்கமணி] [ 1975 மார்ச் 27

விஷயங்கள்தான், நான் விவரத்திற்குள்ளே போக விரும்பவில்லை. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு கெல்லிஸிலே ஒரு விடுதியிருப்பது தாங்கள் அறிந்ததே. அதில் கிட்டத்தட்ட 350 மாணவர்கள் இருக்கிறார்கள். அந்த மாணவர்களுக்குள்ளேயே ஏதோ சில சச்சரவுகள் ஏற்பட்டதாகவும், அது சம்பந்தமாக பிரின்சிபாலிடத்திலே அந்த மாணவர்கள் அன்றைக்கு எடுத்துச் சொன்னதாகவும் நான் அறிகிறேன். சாயந்திரம் 6 மணியிலிருந்தே ஒரு பதட்டமான நிலை இருந்தது என்று சொல்லி அங்கே முதலிலே 3 போலீஸ் லாரிகள் நிறுத்தப்பட்டிருந்ததாம். அதற்குப் பிறகு இரண்டு போலீஸ் லாரிகள் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டதாம். இரவு $12\frac{1}{2}$ மணிக்கு பக்கத்திலுள்ள உமா தியேட்டரில் இரண்டாவது ஷோ முடிந்தபிறகு அங்கிருந்து வெளியாட்கள் சிலபேர் வந்ததாகவும், அவர்கள் வந்து உள்ளே நுழைந்து மாணவர்களைத் தாக்கியதாகவும் நான் அறிகிறேன்.

ஆகவே, இரண்டு முக்கியமான விஷயங்களைத்தான் அரசாங்கத்தின் பதிலில் எதிர்பார்க்கிறேன். மாணவர்களுக்குள்ளே ஏதாவது சச்சரவு ஏற்பட்டால் மாணவர்களைப் பொறுத்தவரையில் அங்குள்ள வார்டனோ, பிரின்சிபாலோ பேசி அதைத் தீர்த்துக் கொள்ளலாம். சில சமயங்களிலே ஆவேசமாகவும், அடிதடியாகவும் வரலாம். ஆனால் வெளியாட்கள், அந்த விடுதியிலே இல்லாதவர்கள் உள்ளே நுழைந்து மாணவர்களைத் தாக்குவது என்பது உண்மையிலேயே அனுமதிக்கப்பட முடியாத விஷயம்.

அதுமட்டுமல்லாமல் 3 போலீஸ் லாரிகள் அங்கே இருந்திருக்கின்றன. சப்-இன்ஸ்பெக்டர் இருந்திருக்கிறார். இரவு $12\frac{1}{2}$ மணியிலிருந்து அதிகாலை 3 மணிவரையில் உள்ளே தகராறு நடக்கும்வரையில் நல்ல முறையில் வேடிக்கை பார்த்துக்கொண்டு இந்த போலீசார் இருந்திருக்கிறார்கள் என்றால், சென்னை மாநகரத்திலேயே இம்மாதிரி சம்பவம் ஏற்படுகிறது என்றால், ஒன்று, போலீஸ் ரொம்பக் கோளாறாக இருந்திருக்க வேண்டும். அல்லது அந்த போலீசுக்குத் தலைமை தாங்கியிருந்த இன்ஸ்பெக்டரோ அல்லது சப்-இப்ஸ்பெக்டரோ அந்தப் பதவிக்குத் தகுதியில்லாதவராக இருந்திருக்க வேண்டும். $2\frac{1}{2}$ மணிநேரம் தாக்குதல்களைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே, அரசு இதைப்பற்றி ஒரு நல்ல, எல்லோருக்கும் திருப்தி தரும் அளவிற்குப் பதில் கொடுத்தால்தான் சென்னை மாநகரத்திலுள்ள மாணவர்களுக்கு மட்டுமல்ல, மற்ற எல்லோருக்குமே பாதுகாப்பு இருக்கும்.

இரண்டாவது விஷயம், இந்த விடுதியிலே இல்லாத இரண்டு மாணவர்கள் எதிர் பில்டிங்கிலிருந்தே அங்கு சென்றதாகவும், அதோடு 50-க்கும் அதிகமானவர்கள் வெளியிலேயிருந்து, குறிப்பாக வடபழனியிலேயிருந்தும் திருவல்லிக்கேணி பகுதியிலே இருந்தும் வந்ததாகவும் சொல்லப்படுகிறது. டாக்சிகளில் வந்ததாகச் சொல்லப்படுகிறது. வெளியார்கள் வந்திருக்கிறார்கள் என்றால் அந்த விடுதிக்குள் இல்லாத । ௭ கள் வெளியே இருந்து வந்திருந்தாலும் சரி, அல்லது அவர்களில் மாணவர்கள் அல்லாதவர்கள் யார் யார் என்பதை எல்லாம் கண்டிப்பாக அரசு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்து அவர்கள் பேரிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1975 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மாணவர்களுக்குள்ளே சச்சரவு ஏற்பட்டால் கடைசியில் அவர்கள் சகஜமாகப் போய்விடுவார்கள். பலவிதமான பிரச்சினைகள் வருகின்றன. இன்றைக்குச் தகராறு பண்ணிக்கொண்ட மாணவர்கள் பின்னால் ஒத்துப் போய்விடுவார்கள். வெளியார் இப்படி மாணவர்கள் விடுதிக்குள் வந்து தாக்குவது என்பது இது முதல் தடவை அல்ல. பச்சையப்பன் கல்லூரி சம்பவம் வெளியார் தாக்கியதுதான். பிரசிடென்சி காலேஜ் சம்பவம் வெளியார் தாக்கியதுதான். நந்தனம் கல்லூரி சம்பவம் வெளியார் தாக்கியதுதான். மதுரைக் கல்லூரியில் இம்மாதிரி வெளியார் வந்து தாக்கி இதே மன்றத்தில் பிரச்சினையை எழுப்பியபோது அரசாங்கத்தின் சார்பில் பேசிய அமைச்சர் அவர்கள் வெளியார்கள் பேரிலே கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். தற்போது ஓரளவு சச்சரவு இல்லாத நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது.

உள்ளே நடந்த விஷயத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட அந்த ஹாஸ்டலில் யாரும் போய்த் தங்க முடியாத அளவுக்கு எல்லா ரூம்களின் கதவுகளும் நொறுக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே இருக்கக்கூடிய ஃபர்னிச்சர் பூராவும் நொறுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களில் அடிபட்டவர்கள் 14 பேர் இன்றைக்கும் இன்-பேஷண்டாக ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். தலையில் காயம், கை ஒடிந்து போன நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. வெளியார்கள் வந்து மாணவர்களைத் தாக்க இனிமேல் மாணவர்கள் அந்த விடுதியில் தங்க முடியாத அளவுக்கு நிலைமையை உண்டாக்கி வைத்திருக்கிறார்கள். மாணவர்களுடைய டிரான்சிஸ்டர்கள், ரிஸ்ட் வாச்சுகள், சாமான்கள் எல்லாம் லூட் செய்யப்பட்டிருக்கின்றன.

இங்கே என்ன ஆட்சி நடக்கிறது என்றே எனக்குத் தெரியவில்லை. இந்த ஆட்சிக்குக் களங்கம் விளைவிப்பதற்கு இதைவிட மோசமான சம்பவம் இருக்க முடியாது. போலீசார் அஜாக்கிரதையாக இருந்திருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அல்லது போலீசாரே அதற்கு ஒத்து இருந்திருக்க வேண்டும் ; அந்த மாதிரி ஒத்து இருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அந்த விடுதியின் டெபுடி வார்டன் ஜனகன் என்பவர்ஒவ்வொருவரையும் காட்டி மண்டையை உடைக்க வேண்டும்- கையை ஒடிக்க வேண்டும் என்று சொன்னதாகச் சொல்லுகிறார்கள். இது சில சமயங்களில் மிகைப்படுத்திச் சொன்னதாக இருக்கலாம். இந்த வகையில் இது முக்கியமானது என்பது மாத்திரமல்ல, இந்த அரசாங்கத்தை சென்ஷர் பண்ண வேண்டுமென்றால் இதைவிட முக்கியமான விஷயம் இருக்கும் என்று நினைக்க முடியாது. ஆகவே, சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கப்பட வேண்டிய அதி முக்கியமான விஷயம் என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டமன்றத்துல முன்னால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொண்டுவந்திருப்பதற்குக் காரணம் 22—3—1973 சனிக்கிழமை அன்று சட்டக் கல்லூரி விடுதியில் மிருகத்தனமாக ஒரு பெரிய போராட்டமே,

இரணகளமே நடந்திருந்தும் சென்னை நகரத்திலே, இவ்வளவு பெரிய சிட்டியிலே இத்தகைய அக்கிரமங்கள் நடைபெற்றிருந்தும் அரசாங்கம் இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்ற காரணத்தால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்தச் சம்பவம் 22-ம் தேதி நடைபெற்றிருக்கிறது. 24-ம் தேதி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம். அப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—மாணவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராமல் பாதுகாப்புத் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் 25-ம் தேதி காலையில் இரண்டு மாணவர்கள் சைக்கிள் செயினால் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு மாணவர்கள் செருப்பால் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதுகாப்புத் தருகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறகும் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கும் காரணத்தால் அங்கிருக்கும் மாணவர்கள் தங்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சிக் கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது.

இதற்கு மூல காரணமாக மாணவர்கள் வார்டனை அடித்து விட்டார்கள் என்ற பிரச்சினையைக் கிளப்பி விட்டு விட்டார்கள். மாணவர்கள் கையை மேலே தூக்கி பேசும்போது அவருடைய கன்னத்தில் தெரியாது பட்டு விட்டது, கையை உதறி உதறி ஒரு மாணவர் பேசும்போது அந்தக் கை வார்டனுடைய கன்னத்தில் பட்டு விட்டதற்காக அந்த மாணவர் இரண்டு, மூன்று முறை மன்னிப்புக் கேட்டிருக்கிறார். டைரக்டர் ஆப் லீகல் ஜஸ்டிஸ் வேண்டுமானால் என்னை சஸ்பெண்ட் செய்து கொள்ளட்டும், மற்ற மாணவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று காலில் விழுந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். பத்துப் பதினைந்து தடவை அவர் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறியும் இந்தப் பிரச்சினை எழும்பியிருக்கிறது.

இரவு 12 மணி வரை போலீஸ் லாரி நிற்கிறது. அந்த லாரியில் அசிஸ்டண்ட் கமிஷனர் முத்துசாமி என்பவர் அமர்ந்து கொண்டு அவரே ரவுடிகளை போய் ஒவ்வொரு மாணவராக அடியுங்கள் என்று கூறியிருக்கிறார். ஜனகன் என்ற வார்டன் இந்த இந்த அறையில் இன்னின்ன பேர்கள் இருக்கிறார்கள் அவர்களை அடியுங்கள் என்று கூறியிருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர்கள் அங்கு சென்ற நேரத்தில் எல்லா ரூம்களின் கதவுகளும் உடைக்கப்பட்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. தாழ்ப்பாள்களை உடைத்து உள்ளே இருக்கும் மாணவர்களை வெட்டியிருக்கிறார்கள், அடித்திருக்கிறார்கள். சீரியசாக வெட்டப்பட்டவர்களை எல்லாம் உடனடியாக டிஸ்சார்ஜ் செய்துவிட்டு ஒன்றும் இல்லாது சாதாரணமாக அடிபட்ட மாணவர்களை ஆஸ்பத்திரியில் படுக்க வைத்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை ?

ஒவ்வொரு ரூமிலும் ரத்தம் உறைந்து கிடைக்கிறது. பயந்த மாணவர்கள் அவ்வளவு பேரும் மேல்மாடிக்குப் போய் அதிலே ஓரிருவர் குதித்திருக்கிறார்கள். 50, 60 ரவுடிகள் உள்ளே சென்று சைக்கிள் செயினால் மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். வார்டன் என்ன செய்தார் ? டெபுடி



வார்டன் என்ன செய்தார் ? போலீஸ் வான் வெளியே நிற்கிறது. அந்த போலீஸ் லாரிக்குள் மாணவர்களை இழுத்து வைத்து அடித்திருக்கிறார்கள். இது ஆட்சியா அல்லது காட்டு தர்பாரா ? போலீஸ் இருந்தும் இந்த அக்கிரமம் நடைபெற்றிருக்கிறது. யாரிடத்தில் போய்ச் சொல்லி அழ என்று தெரியவில்லை. போலீஸ்காரனே அடித்திருக்கிறான். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அவரை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்களா ? அந்த அசிஸ்டெட் கமிஷனர் முத்துசாமி என்பவரை ஏன் டிஸ்மிஸ் செய்யவில்லை ? அதே போன்று அந்த டெபுடி வார்டனை ஏன் கைது செய்யாமல் வைத்திருக்கிறார்கள் ?

என்னிடத்திலுள்ள தகவலின்படி பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் களவாடப் பட்டிருக்கின்றன :

கைக் கெடியாரங்கள் 65 ; சலவைப் பெட்டி 30 ; டேபிள் ஃபேன் 60 ; கை ரேடியோ 50; டேப் ரிக்கார்டர் 12 ; டைம் பீஸ் 60 ; தங்க நகைகள், மோதிரம் செயின் 25 பவுன் ; டெரிகாட்டன் பேண்ட் 500 ; டெரி & டெரிலின் சர்ட் 1,000 ; வேஷ்டிகள் பட்டு, வாயில் டெரிகாட்டன் 100 ; பெட்ஷீட், மெத்தை தலையணைகள் 200 ; பனியன், லுங்கி, துண்டு, கர்சீப் ஐடம்ஸ் 500 ; செருப்பு—பூட்ஸ் 200 ; சூட் கேஸ் 60 ; ரொக்கப் பணம் ரூ. 20,000 ; புத்தகங்கள் தீயினால் கொளுத்தப்பட்ட வகையில் 40,000 ரூபாய் ; ஆக மொத்தம் சுமார் 2 லட்சம் ரூபாய் அளவுக்கு சொத்துக்கள் களவாடப்பட்டிருக்கின்றன.

இந்த அளவுக்கு அக்கிரமம் நடைபெற்றிருக்கிறது. நாமெல்லாம் இருக்கும் சென்னையில் நடைபெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் யார் ? மாணவர்கள் மத்தியிலே ஜாதி வெறியை உண்டாக்கியிருக்கிறார்கள். எந்த ஜாதி ஒழிய வேண்டுமென்று நாமெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்கிறோமோ அதற்கு மாறாக ஜாதி வெறியைக் கிளப்பி இந்த அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள். யார் அந்தத் தீய சக்தி என்று அரசாங்கம் கண்டு பிடிக்க வேண்டும். இப்படி அக்கிரமம் செய்த ரவுடிகளை எல்லாம் உடனடியாகக் கைது செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் விவாதிப்பதற்கு இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறியதுபோல் 22-ஆம் தேதி அன்று சென்னை சட்டக் கல்லூரி விடுதியில் விரும்பத்தகாத இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

குறிப்பாக, நமது மாநில சட்ட மன்றம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா அமைச்சர்களும் தலைநகரத்தில் இருக்கிறார்கள். இந்தத் தலைநகரத்தில் எந்த நிகழ்ச்சியும், முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தால் அப்போதைக்கப்போது அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கூடிய வாய்ப்புக்கள் எல்லாம் இருக்கின்றன. இந்த நிகழ்ச்சியும் அன்றையதினம் காலையில் 9½ மணிக்கு ஆரம்பமாகி இரவு—அடுத்த நாள் காலை 3 மணி வரை நடைபெற்று இவ்வளவு தூரம்

அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெற்றிருந்தும் கூட போதுமான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுமல் தடுக்க அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. விரும்பியிருந்தால் காலை 9½ மணிக்கு கலாட்டா ஆரம்பித்த இடத்திலேயே நின்று இம்மாதிரி வன்முறைகள் உதிகப்படாமல் தடுத்திருக்க இயலும். கடந்த பல ஆண்டுகளாக இந்த மாநிலத்தில் ஆங்காங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தால், இம்மாதிரி நிகழ்ச்சிகளில் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தாமல் நடக்கிறது. எந்த கலாட்டாவும் நடக்கட்டும் நாம் அதில் சிக்கிக்கொள்ளக்கூடாது என்று பொறுப்புணர்ச்சியைத் தட்டிக் கழிக்கின்ற முறையை இந்த அரசாங்கம் கடைப்பிடித்திருக்கிறது என்று பல்வேறு நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் கே.டி.கே. தங்கமணி அவர்கள் கூறியதுபோல் மாணவர்களுக்குள்ளும், வெளியாட்களுக்குள்ளுமாக பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றதை நான் மீண்டும் எடுத்துக் கூறத் தேவையில்லை,

ஆனால், ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாளையங்கோட்டையில் செயின்ட் சேவியர் கல்லூரியில் இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போதும் நம் அரசாங்கம் "இன்டிஃபரண்டாக" இருந்தது என்பதை அன்றைய தினம் இம்மாமன்றத்தில் எடுத்துச் சொன்னேம். அதுபோல் இந்த ஆண்டு கூட பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரியில் இது போன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் விளைவாக இரண்டு மாணவர்கள் இறந்து போன சம்பவத்தைக் கூட அரசு மறந்திருக்காது.

ஆகவே, இந்த அளவுக்கு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறதென்றால் இது அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தைக் காட்டுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்; இங்கும் கூட மாலை நேரங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் போலீஸ்காரர்கள் அங்கே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அரசாங்கம் அவர்களுக்குக் கட்டளை கொடுத்திருக்கிறது. நீங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று அவர்களுக்குக் கட்டளை கொடுத்திருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, அரசாங்கம்தான் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது போன்ற நிகழ்ச்சிகள் இந்தச் சென்னை நகரிலே நடைபெறுகிறதென்றால் இதைவிட அதிகப் பயங்கரமான நிகழ்ச்சிகள் மாநிலத்தின் பல்வேறு மூலைகளில் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. இந்த அளவுக்கு மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கின்ற வகையில் அரசாங்கம் தன் கொள்கையை வைத்திருக்கிறதென்றால் நிச்சயமாக இந்த அரசு நாட்டை ஆளுவதற்கு அருகதை இல்லை. பொறுப்பான அரசாங்கமாக இருந்தால் மக்கள் பிரச்னைகளுக்கு எவ்வெப்போது என்ன என்ன செய்ய வேண்டுமோ அதையதைச் செய்யவேண்டும். அதைச் செய்யத்



தவறிய அரசு நிச்சயமாக இந்த நாட்டை ஆளுவதற்குத் தகுதியில்லை. இது மிகவும் முக்கியமான பிரச்னை. இதை விவாதிப்பதற்கு சபையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இங்கே சபையில் கொண்டுவருகிற ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு எல்லாம் மாமூலா அமைச்சர்கள் பதில் சொல்லித் தீர்த்துவிடுவதுதான் வழக்கமாக இருக்கிறது. ஆனால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அந்த வகையிலே இருந்து விடக்கூடாது என்று முதலிலே நான் கூறிக்கொள்ளுகிறேன். ஏன் என்று சொன்னால் மாநிலத்தினுடைய தலைமையகம் இங்கே இருக்கிறது. மாநிலத்தின் அமைச்சர்களும் இங்கே இருக்கிறார்கள். சட்டமன்றமும் நடந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற நேரத்திலே ஒரு மாணவர் விடுதியில் ஒரு பெரும் குழப்பம் நடந்து பலர் மருத்துவ மனையில் தங்குகிற அளவுக்குக் காரியங்கள் நடந்திருக்கிற நிலைமையைப் பார்த்தால் இதை ஒரு சாதாரண, சல்லிசாக நினைக்கின்ற காரியமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தச் சட்ட மன்றத்திற்குள்ள மரியாதை, அமைச்சர்களுக்குள்ள மரியாதை நிலைநிறுத்தப்படவேண்டுமென்றால் நிச்சயம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதம் செய்தே ஆகவேண்டும் என்று விரும்புகிறேன். ஏனென்றால் அங்கே சட்டக்கல்லூரியில் நடந்திருக்கிற நிகழ்ச்சிகள் பற்றி என்னுடைய சக தோழர்கள் பலர் பேசினார்கள். நான் ஒன்றை மட்டும் தான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அந்நிகழ்ச்சி எப்படி எப்படி நடக்கவேண்டுமென்று வழி காட்டுகிற முறையில் ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் ஒரு ஜீப்பில் உட்கார்ந்துகொண்டு வழிகாட்டினார் என்ற குற்றச்சாட்டு என்னிடம் வந்திருக்கிறது. அதே போன்று அங்கே இருக்கிற வார்டன் ஒருவர்......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது மாதிரி நேரடியாகக் கண்டது மாதிரி சொன்னால் அதற்குப் பதில் எப்படி சொல்ல முடியும்? ஒவ்வொரு கட்சித் தலைவரும் நானே பார்த்தேன் என்று சொல்லுவதாக இருந்தால், அப்படிப்பட்ட முறையில் விவாதம் நடைபெறுவது மன்றத்திற்கு அழகல்ல.

திரு. எம். சுரேந்திரன்: நான் சொல்லுவது எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அவசியத்தை வற்புறுத்துவதற்குத்தான். நான் விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. மற்ற உறுப்பினர்கள் கூறியதுபோல் அவ்வளவு விவரங்களைக் கூற நான் முன்வரவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இம்மாதிரி காரியத்தைச் செய்தார் என்று தகவல் வந்ததன் காரணமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அவசியத்தை வற்புறுத்துவதற்குத்தான் அதைக் கூறினேன். அடுத்தாற்போல் உதவி கமிஷனருடன் போலீசும் இருந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது அவைகளைத் தடுப்பதுதான் போலீசின் கடமை. இம்மாதிரி கோர சம்பவங்கள் நடைபெறுகிறபொழுது போலீஸை அங்கே வேடிக்கை பார்க்க, பார்வையாளர்களாக அங்கே வைத்திருக்கவில்லை. அப்படி பார்வையாளர்களாக இல்லாமல் இருந்திருந்தால் பல மாணவர்கள் அடிபட்டு மண்டை

உடைந்து மருத்துவ மனைக்குச் செல்லத் தேவையில்லை. இது இந்த அமைச்சரவையைக் கண்டிக்கிற ஒரு முக்கியமான விஷயமாக இருக்கிறது.

அதே நேரத்தில் ஒரு அசிஸ்டெண்ட் வார்டன் இதுபோன்று கழகத்தை ஆதரிக்கிறவர் என்ற புகாரும் வந்திருக்கிறது. இவைகள் அனைத்தும் சரியாகச் சிந்திக்கப்படவேண்டிய விஷயங்களாகும். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு சமாதானம் சொல்லி தீர்க்காமல் உரிய முறையில் விவாதிக்கப்பட்டு இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனிமேல் நடைபெறாமல் தடுக்க வழிவகைகளைச் சபை ஆராயவேண்டும் என்று கேட்டு, சபையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இந்தத் தீர்மானம் விவாதிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU V. KRISHNAMOORTHI: (Nellikuppam) Sir, I want to make a submission.

MR. DEPUTY SPEAKER: The hon. Member cannot make a submission. This is an adjournment motion. Raising some submissions now is abnormal. The Hon. Minister is making a statement. So, the Hon. Member has no *locus standi* to raise any submissions. I am not allowing.

THIRU. V. KRISHNAMOORTHI : (Nellikuppam) On a point of order, Sir.

உதவி சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர்கள் சட்டக் கல்லூரி விடுதியில் நடைபெற்ற சம்பவங்களை எல்லாம் கோர்வையாக சொல்லி அதையொட்டி நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். இந்த ஹாஸ்டலில் நடைபெறுகிற சம்பவங்கள் இரண்டு மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட * * சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை அடித்து நொறுக்குவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் * * மாணவர்களை பரீட்சைக்குச் செல்லாமல் அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இது இன்றைக்கு ஏற்பட்ட தனிப்பட்ட சம்பவம் அல்ல. 3, 4 வருஷங்களாக சட்டக் கல்லூரியில் சேர்மனாக வரக்கூடியவர் * * ஒரு சாரார் வந்துவிடுகிறார் என்று கட்சி என்று, அல்லாமல் கட்சிக்குப் அப்பாற்பட்டவர்களும் ஒன்று சேர்ந்து * * அடித்து நொறுக்குகிறார்கள். இது நியாயமா என்று சொல்லுவதற்குத்தான் "பாயிண்ட் ஆப் ஆர்டர்" எழுப்ப விரும்பினேன்.

திரு எம். சுரேந்திரன் : எங்களுக்கும் இம்மாதிரி வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : ஆகவே சபையின் தலைவர் என்ற முறையில் அமைச்சர்களுக்கு இதை எடுத்துச் சொல்லி இதை நன்றாக விசாரிக்க ஒரு நீதி விசாரணையை அமைத்து இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகள் நடைபெறாமல் இருப்பதற்கு, அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில் சொல்லுவார்கள் என்று "பாயண்ட் ஆப் ஆர்டர்" எழுப்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER: This is not a point of order. The hon. Member has misused it. I am expunging* what all has been said by the hon. Member Mr. Krishnamoorthy in support of his point of order.

THIRU V. KRISHNAMOORTHI: (Nellikuppam) You have no right to do so Sir.

MR. DEPUTY SPEAKER: I have every right.

THIRU V. KRISHNAMOORTHI: (Nellikuppam) You can only say that it is not a point of order. You have no right to expunge.

MR. DEPUTY SPEAKER: I have got a right to expunge under the rules.

THIRU V. KRISHNAMOORTHI : (Nellikuppam) As a protest I am walking out.

(The hon. Member Thiru V. Krishnamoorthi then walked out of the Chamber)

திரு கே. டி. கே. தங்கமணி : எக்ஸ்பஞ்ச் பண்ணுவது சம்பந்தமாக சில விதிகள் இருக்கின்றன. தாங்கள் ஒரு பாய்ண்ட் ஆப் ஆர்டர் அனுமதித்து விட்டு அவர் பேசியது பூராவும் எக்ஸ்பஞ்ச் பண்ணுவது என்றால் கடைசியில் உங்களுடைய உத்திரவின்பேரில் பேசுவதற்கு இடமில்லாமல் போய்விடும். ஒரு குறிப்பிட்ட வார்த்தையை எடுத்துவிட உத்திரவிடலாம்.

MR. DEPUTY SPEAKER: I will make my position clear. Under Rule 83(8) it is said as follows:—

"The Speaker may order the expunction of any portion of the proceedings of the House relating to any point of order by the members, when in his opinion, it is an abuse of the right of raising a point of order".

பாயின்ட் ஆப் ஆர்டர் எப்போது எழுப்பக்கூடாது என்று ஸ்பெசிபிக்காக கொடுத்து இருக்கிறோம்.

A member shall not raise a point of order—

(*a*) to ask for information ; or
(*b*) to explain his position ; or
(*c*) when a question on any motion is being put to the House ; or
(*d*) which may be hypothetical ;
(*e*) to seek clarification and introduce new points under the pretext of raising a point of order.

---

Certain portons were restored as per Mr. Speaker's direction on 3rd April 1975.

All these are prohibited. The hon. Member has abused the right of raising a point of order. So, I have expunged.

Dr. H.V. HANDE: Sir, I am raising a specific point of order and I request the Hon. Deputy Speaker to give his ruling. In this House, whenever we raise points of order, we follow a procedure. I request the Hon. Deputy Speaker to give a hearing to my point of order and then give his ruling. First, the Chair will allow us to raise a point of order and then the Chair will say whether it is in order, whether it is a point of order or not. That is the usual procedure. Now it is said that the points raised by the hon. Member, who raised the point of order, would be expunged. We would like to know what are the items on which we could raise points of order. We would like to know that. Why I am saying this is because we heard Mr. Krishnamoorthi raising a point of order and explaining. I am not holding brief for him. What are the points on which we could raise points of order?

(முற்பகல் 10-30)

The only thing I want to stress is that he has not used any unparliamentary words. On several occasions you yourself have given a ruling that particular things do not come under point of order. But if it is something which is inconvenient to the Government and therefore if it is expunged, that is not fair. Just because a particular point is inconvenient to the Government, if that is going to be expunged and if this is going to be the practice, the House cannot tolerate such expunctions and the whole House will rise in revolt against it. Such expunction is not in order. If that is the case, there is no security for members. For, the moment a point is against the Government, that will not be allowed.

Mr. Krishnamoorthy has raised, what? He has also given reasons as to why the business of the House has to be adjourned. It may be inconveninet to the Government; just because it is inconveninet to the Government, if it is expunged, how are we to function, where is the guarantee and where is the security for members and where is the freedom of speech for us and hereafterwards no point of order can be raised by us, for, all points of order will not be allowed. That is why we want a clarification now.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவதற்காகத்தான் சொல்கிறேன். நாங்கள் சில விஷயங்களைச் சொன்னோம். திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்னதில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை எதிர்த்தே நடந்துகொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்க விரும்புவது திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எந்த விதியின் கீழ் பேசினார்? நான்கு பேர் ஒத்திவைப்புத் தீர்மானம்



கொடுத்து இருக்கிறார்கள். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் அவை முன்னவர் பேச இருக்கிறார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி இதிலே பேசுவதற்கு என்ன "லோகஸ் ஸ்டான்டி" இருக்கிறது? எந்த ரூல்படி அவர் பேசினார் என்பதைத் தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்தச் சட்டமன்றத்திலிருந்து உங்களுடைய முடிவு தவறானது என்று வெளிநடப்பு செய்து, மீண்டும் அந்த விவகாரம் பேசப்படுவதால், எனக்கு நியாயம் கிடைக்குமா என்று சொல்லி இங்கே வந்திருக்கிறேன். எனக்கு என்று தனி சில விதிமுறைகள், வழிமுறைகள் இருக்கின்றன. அதன் அடிப்படையில் நான் நோட்டீஸ் கொடுத்து, கொண்டுவருவதற்கும் தயாராக இருக்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறோம் என்று சொன்னால், ஒரு மெம்பர் தான் சொல்ல விரும்புவதைச் சொல்வதற்குத்தான் எழுப்புகிறார். அது சரியாக இருக்கலாம், சரியாக இல்லாமல் இருக்கலாம். நான் சொன்ன விவரங்கள் பூராவும் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக, நம்முடைய அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை என்பதற்காக எக்ஸ்பஞ்ச் செய்வது எந்த விதத்தில் நியாயம்? நான் நான்காண்டு காலம், பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறேன்; 5 ஆண்டுகாலம் உங்களுக்கு முன்பு இங்கே உறுப்பினராக இருந்து இருக்கிறேன். மீண்டும் நான்காண்டு காலம் இங்கே இருக்கிறேன். எந்த விதிமுறையில் இதை இன்றைய தினம் எக்ஸ்பஞ்ச் செய்தீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்றால், அதை ரூல் அவுட் செய்யுங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று சொல்லுங்கள். பூராவையும் எக்ஸ்பஞ்ச் செய்வதற்கு பேரவைத் தலைவருக்கோ உதவித் தலைவருக்கோ உரிமை இல்லை. அப்படிச் செய்தால் எங்களுக்கு இருக்கும் உரிமையை நாங்களும் பயன்படுத்துவோம்.

Thiru N. K. PALANISAMY: I want your ruling Sir. Is it permissible under the Constitution to raise communal bogey here and is it relevant here?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தங்கமணி நீங்கள் சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த பாய்ன்ட் ஆப் ஆர்டர் ரூல்ஸ் சம்பந்தமாக இந்தத திருத்தம் கடைசியில் தான் கொண்டு வரப்பட்டது.

'The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members, when in his opinion it is an abuse of the right of raising a point of order.'

சாதாரணமாக பாயின்ட் ஆப் ஆர்டர் அடிக்கடி ரெயிஸ் செய்கிறார்கள்., அதைத் தடுக்க வேண்டுமென்பதற்காக அதைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அதைச் சாதாரணமாக உபயோகிப்பது இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்து அது சரியாக இல்லையென்று சொன்னால், அதை எக்ஸ்பஞ்ச் செய்வதற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சேர்க்கப்பட்டது இந்தத் திருத்தம்.

But this is to be sparcely used

"எனி போர்ஷன்" எடுக்கலாம் என்று தான் இருக்கிறதே தவிர ஒரு மெம்பர் பேசிய பேச்சு பூராவையும் எடுப்பது என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

Expunge any *portion* of the proceedings only.

ஒரு மெம்பர் பேசிய முழு விவரத்தையும் எடுப்பது என்பது பொருத்தமாகத் தெரியவில்லை, இந்த சப் ரூல் 8-ஐ பார்த்தாலும் கூட.

திரு. எம். சுரேந்திரன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நான் முதலிலேயே சொன்னேன், பாய்ண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்ய அனுமதித்தீர்களானால், நானும் பாய்ண்ட ஆப் ஆர்டர் எழுப்புவேன் என்று. இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில், ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென நாங்கள் கூறிய வாதங்களுக்கு மேலும் வலுவூட்டக் கூடிய வகையில் அந்த ஹாஸ்ட்டலில் நடைபெற்ற சில விஷயங்களை மெம்பர் கூறியிருக்கிறார். அதை முழுவதும் எக்ஸ்பஞ்ச் செய்வது என்பது சரியல்ல. உறுப்பினர் பேசியது பாய்ண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லலாமே தவிர, மேற்கொண்டு போவது என்பது சரியானதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தீர்ப்பு சொல்லியான பிறகு அதைப் பற்றித் திரும்ப பேசுவது முறையல்ல.

திரு. கோவை செழியன் : உங்கள் ரூலிங் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூலிங் ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது.

**Dr. H. V. HANDE :** Does the expunction hold good?

**Mr. DEPUTY SPEAKER :** It holds good.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் நடைபெற்ற கலவரம் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அதன் மீது உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாணவர்கள் விடுதியில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுவது வருந்தத்தக்கதொன்றாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை அரசைக் கண்டிப்பதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் அடிப்படைத் தன்மைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இதுவரை கிடைத்த தகவல்களில், அரசியல் கட்சிகள் இதில் ஈடுபட்டதாகத் தகவல் இல்லை. இந்த விவகாரங்களில் ஈடுபட்டவர்கள் எல்லா விதமான அரசியல் கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள். இரண்டு விதமான பிரிவினராக இருக்கிற மாணவர்களிடத்திலே ஏற்பட்ட நிலைமை இந்த அளவிலே சென்று இருக்கிறது. எந்த அரசியல் கட்சி அடிப்படையிலும் இது நடைபெறவில்லை என்பதை நான் குறிப்பாகச் சொல்ல முடியும்.

அங்கே பணியாளர்கள் இரண்டு பேர், சில மாணவர்களால் தாக்கப்பட்டு இருக்கிறார்கள். உடனே அந்தப் பணியாளர்கள் சார்பாக—பச்சையப்பன், கருப்பையா—அங்கே இருக்கும் உதவி வார்டனுக்கு புகார் மனு கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் புகார் மனுவில் லிங்கப்பா, முருகேசன் அவர்களை அடித்ததாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். தகராறு 23-ம் தேதி நடைபெற்று இருக்கிறது. உதவி வார்டர் அவர்களை விசாரணை நடத்த, பணியாளர் பிரதிநிதிகளையும் மாணவர் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசியதாகவும், மாணவர் லிங்கப்பா, அவரிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதாகவும், அவர் கை உதவி வார்டர் மேல் பட்டதாகவும் அப்படி கை வீசியது உதவி வார்டனை அடித்து விட்டார்கள் என்ற முறையில் சொல்லப்பட்டதும், அவர் உடனே நான் கை தூக்கினேன், அது தவறாகப் பட்டுவிட்டது என்று கூறியதாகவும் மற்ற மாணவர்கள் அவர் வேண்டுமென்றே அடித்தார், ஆகவே மன்னிப்பு வாங்கவேண்டுமென்று கூறியதாகவும், அவர் மன்னிப்பு வாங்க மறுத்துவிட்டு, பின்னர் மாணவர்கள் பலர் அவரிடம் வந்து மன்னிப்பு கேட்கவேண்டுமென்று சொன்னதாகவும், அவர் என்னுடைய கை பட்டு இருக்குமானால், அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் என்று சொல்லி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

இந்த அளவுக்குச் சமாதான நிலைமை உண்டாகிய பிறகு, அவர்கள் நடந்த சம்பவங்களைச் சட்டக் கல்லூரி முதல்வருக்கு எழுதித் தந்து இருக்கிறார்கள். எழுதித் தந்து விட்டு, அது பற்றி கேட்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முதல்வருக்கு முழு விவரமும் எழுதித் தந்து இருக்கிறார்கள். அதற்குப்பிறகு, முதல்வர் அங்கே இருக்கும் ஆசிரியர்களைக் கலந்து கொண்டு இது பற்றி விசாரிக்கலாம் என்று முடிவுக்கு வந்து இருக்கிறார்கள்.

சாயங்காலம் ஒரு பிரிவைச் சேர்ந்த மாணவர்கள்—அந்த லிங்கப்பாவுக்கு மாறுபாடாக இருக்கும் மாணவர்கள்—சேர்ந்து கொண்டு கட்டாயம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும், விடக்கூடாது என்று சொல்லி, பிறகு முதல்வர் அவர்கள், கல்லூரி ஆசிரியர்களைக் கூப்பிட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என்று முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த நிலைமையில் டெபுடி வார்டனாக இருக்கும் — உதவிக் காப்பாளரை—24-ம் தேதி அவர்கள் வெளியே வரும்போது—கல்லூரியை விட்டு வெளியே வரும்போது. லிங்கப்பாவைச் சேர்ந்த மாணவர்கள் 50 பேர் வந்து—அந்தப் புகார் மனுவை திரும்பப் பெற வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதற்குள்ளாக டெபுடி வார்டன் அடிக்கப்பட்டார்கள் என்ற செய்தி கேள்விபட்டு, வேறு பிரிவு மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேறி இருக்கிறார்கள்.

ஆக, விடுதிக்குள் இருந்த ஒரு பிரிவு மாணவர்களை லிங்கப்பாவைச் சேர்ந்த மாணவர்கள் வெளியே வந்தால் தாக்குவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பிறகு வெளியே சென்ற மாணவர்கள் கும்பலாக வந்து அவர்களுக்கும், உள்ளே இருந்த மாணவர்களுக்கும் இடையே தகராறு முற்றி கைகலப்பு நடந்து இருக்கிறது. அந்தச் சமயத்தில் வெளியே போலீசார் இருந்தார்கள்; அவர்கள் அதையெல்லாம் எப்படி பார்த்துக்கொண்டு இருந்தார்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள். போலீசாரை விடுதிக் காப்பாளர் கூப்பிட்டால்தான் அவர்கள் உள்ளே போகமுடியுமே தவிர அவர்களாக உள்ளே போகமுடியாது. முன்பு சில சந்தர்ப்பங்களில் அப்படி பேலீசார் விடுதிக்குள் போனபோது கூட அவர்கள் எப்படி போனார்கள் என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. கோவை செழியன் : உண்மைக்குப் புறம்பான தகவலைத் தருகிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நீங்கள் குறுக்கே பேசுவது முறையல்ல. நீங்கள்தான் உண்மைக்குப் புறம்பான தகவலைத் தந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கேட்டதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்கிறார்கள். அப்போது குறுக்கிடாமல் இருப்பதுதான் முறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எது உண்மை, எது உண்மைக்குப் புறம்பானது என்பதை நாடறியும், மக்கள் அறிவார்கள். எனக்குக் காப்பாளரும், காவல்துறையினரும் தந்திருக்கிற தகவலைத் தான் நான் சொல்கிறேன். அந்தச் சமயத்தில் அங்கே உதவி விடுதிக் காப்பாளர் இரு கோஷ்டியினருக்குமிடையே சமாதானம் செய்ய முயற்சி செய்திருக்கிறார். போலீசார் உள்ளே போனாலும் ஏன் போனார்கள் என்று கேட்கிறார்கள்; போகாவிட்டாலும் ஏன் போகவில்லை என்று கேட்கிறார்கள். தங்கமணி அவர்கள்கூட போலீசார் தாக்கினார்கள் என்று கூறவில்லை. கோவை செழியன் அவர்கள் போலீசாரும் கூட அடித்தார்கள் என்று சொல்கிறார்கள். எதற்காக நான் சொல்கிறேன் என்றால் வெளியே போலீசார் இருந்தார்கள். கூப்பிட்டால்தான் அவர்கள் உள்ளே போகலாம். விடுதிக் காப்பாளரால் போலீசார் அழைக்கும் நிலையில் போலீசார் போனால் அங்கே ஒரு சிலரைக் கைது செய்தாக வேண்டும், அங்கே தடியடி செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

ஏன் போலீசாரைக் கூப்பிடவில்லை என்று இங்கே கேட்டார்கள், அங்கே ஒரு அளவிற்கு நிலைமை சமாதானமாகி அடங்கியிருக்கிறது. அதற்குள்ளாக பல மாணவர்கள் விடுதிக்குள் இருந்தவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அந்த வகையில் அங்கே எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரங்களை பொதுப்பணித்துறைப் பொறியாளர் அவர்கள் கணக்கெடுத்து இருக்கிறார்கள். ஜன்னல்கள், போன்றவைகளுக்கு 5,000 ரூபாய்க்குச் சேதம் அடைந்திருக்கிறது என்றும், கட்டில்கள், சோபா செட்டுகள் சேதம் அடைந்தது 8,000 ரூபாய் என்றும், ஆக 13,000 ரூபாய்க்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று கணக் கெடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



சிறு காயம் அடைந்த மாணவர்கள் கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலும், பெரிய மருத்துவ மனையிலும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஐந்து மாணவர்கள் சிகிச்சைபெற்று வெளியே வந்திருக்கிறார்கள். போலீசாருக்கு மனுக் கொடுத்தவுடனே ஐ.பி.சி.செக்ஷன்கள் 147, 148, 358-ன் கீழ் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். டெப்டி வார்டன் கொடுத்த ரிப்போர்ட்டின் பேரில் காவல்துறையினர் புலன் விசாரணை செய்து இருக்கிறார்கள். இதில் அரசியல் கட்சிக்காரர்கள் யாரும் ஈடுபடவில்லை என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

சுரேந்திரன் அவர்கள் கூட ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் ஈடுபட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் இது கட்சி வகையில் நடக்கவில்லை. வேறு வகையில்தான் நடந்திருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்கிறேன்.

கோவை செழியன் அவர்கள் பல்வேறு பொருட்கள் காணமல் போயிருக்கின்றன, இரண்டாயிரம் பனியன்கள், இரு நூறு டிரான்சிஸ்டர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதைத் தீர விசாரித்ததற்குப் பிறகுதான் முழு விபரமும் தெரியும். அதற்குப் பிறகு விடுதிகளில் பலர் தாங்களாகவே காலி செய்ய ஆரம்பித்த பிறகு விடுதி மூடப்பட்டிருக்கிறது. கல்லூரியில் அந்த மாச்சரியம் ஏற்படும் என்ற காரணத்தால் 30-ந் தேதி வரையில் கல்லூரி மூடப்பட்டு 31-ந் தேதி திறக்கப்படவிருக்கிறது.

காவல் துறையினரின் அறிக்கையிலும், கல்லூரி முதல்வரின் அறிக்கையிலும், டெப்டி வார்டனின் அறிக்கையிலும் வெளியார் வந்தார்கள் என்ற நிலை இல்லை. உள்ளேயிருந்த இரு பிரிவு மாணவர்களுக்குள் மோதல் நடந்திருக்கின்றன என்று இருக்கிறது. அதில் இரு சாராருக்கும் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நேற்றுதான் ஒரு சில மாணவர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். அதிலே வெளியாள் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் காவல் துறையினர் துப்பு துலக்கி வருகிறார்கள்.

யாரோ தூண்டிவிட்டு செய்தது மாதிரி உறுப்பினர்கள் கூறுவது வருந்தத் தக்கது. இந்த நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்கு அப்பாற்பட்டு ஜாதி உணர்வு ஏற்பட்டு மாச்சர்யங்கள் பல்வேறு இடங்களில் வருகின்றன என்று சொன்னால் அதற்குத் தலைவராக இருப்பவர்கள், நாட்டாண்மைக்காரர்களாக இருப்பவர்கள் அதைத் தடுக்க வேண்டும். மாணவர்களின் மத்தியில் ஜாதி மனப்பான்மை வரக்கூடாது என்பதுதான் அரசின் எண்ணம்.

இந்த நிலையில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்தந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். 31-ந் தேதி கல்லூரி திறக்கும் போது சுமுகமான சூழ்நிலை ஏற்படும் என்று நம்புகிறோம். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அளவில் கூறி, பேரவையை ஒத்தி வைத்து இதை விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : தலைவரவர்களே, அரசாங்கத்தின் சார்பில் கொடுத்த விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. காரணம் நான் சில விஷயங்களைச் சொன்னேன். இரவு 12-00 மணிக்கு வெளியே இருந்து உள்ளே சென்றிருக்கிறார்கள். அவர்கள் மாணவர்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் மாணவர்களாக இருக்க முடியாது. ஏனென்றால் வெளியாட்களும் செகண்ட் ஷோ முடிந்தவுடன் உள்ளே வந்திருக்கிறார்கள். மாணவர்களாக இருந்தால் ஏன் பொருட்களைக் கொள்ளையடிக்க வேண்டும் ? போலீசார் இதையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். மாணவர்கள் வந்தபோது இரண்டு லாரி உள்ளே வந்திருக்கிறது. அடிபட்டு மாணவர்கள் வெளியே வந்தபோது போலீசார் பார்த்துக்கொண்டிருந்தது அவ்வளவு நன்றாக இல்லை.

அதே போல் உள்ளே ஏதோ கலகம் நடக்கப் போகிறது, வெளியேயிருந்து ஆயுதம் வருகிறது என்று தெரிந்தும் உள்ளே செல்லவில்லை என்று சொல்லக் கூடிய இந்த வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. ஒன்று போலீசார் உள்ளே செல்லக் கூடியவர்களைத் தடுத்திருக்க வேண்டும். இன்னும் பக்கத்து காம்பவுண்டிலே இருந்தெல்லாம் உள்ளே குதித்திருக்கிறார்கள். இந்தச் சம்பவங்களை வைத்துப் பார்த்தால் மாணவர்கள்தான் வந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

உள்ளேயிருந்த மாணவர்கள் வெளியே போக முடியாமல் இருந்தது வாஸ்தவம். போலீசார் ஆயுதங்களுடன் உள்ளே போகிறவர்களைப் பார்த்துக்கொண்டா இருப்பார்கள் ? உள்ளே படுகொலை நடந்தாலுங்கூட பார்த்துக்கொண்டு இருப்பார்களா ? இப்படித்தான் சட்டமும் அமைதியும், பாது காக்கப்படுகிறது என்று சொன்னால் அது வேடிக்கையாக இருக்கிறது. உள்ளே போனால் ஆபத்து வரும் என்று போலீசார் எண்ணினார்கள் என்று சொல்வது நம்பமுடியாமல் இருக்கிறது. ஆகவே, இதில் அரசு தவறு செய்திருக்கிறது என்று மாத்திரம் நான் சொல்கிறேன். மற்றபடி நான் விபரத்திற்குள்ளே போகவில்லை. ஆனால் அதற்கான விபரங்கள் என்னிடம் இருக்கிறது. ஏ. சங்கரனுக்கு நெற்றியில் பலமான காயம். பிச்சைப் பிள்ளையின் நிலைமை மோசமாக இருக்கிறது. சேகர்—மண்டையில் பலத்த காயம், மோசமான நிலைமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ப்ரீஃபாகச் சொல்லுங்கள்.

திரு. கே.டி.கே. தங்கமணி : நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். இது மிகவும் முக்கியமான ஒரு விஷயம். அமைச்சரவர்கள் பதில் எங்களுக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. அவர்களுடைய



பதில் பொருத்தமில்லாத வகையில் கூட இருக்கிறது என்று கருதுகிறேன். 4, 5 பேர்கள்தான் இன்பேஷண்டாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் 14 பேர்கள் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். அமைச்சரவர்களுக்கு வேண்டுமானால் நான் லிஸ்ட் கொடுக்கிறேன்.

(Interruption) I do not like interruption. அதுவும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் மட்டும்தான் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களுக்குள் மோதல் வந்தால் அது வேறு விஷயம். ஆனால் இப்படி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர்தான் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி விரிவாகப் பேச வேண்டும். ஆகவே, I do not want to make much of that. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 14 பேர் காயமடைந்திருக்கிறார்கள். யார் அடித்தார்கள் என்பதல்ல பிரச்சனை. அடித்தவர்கள் கட்சிக்கு உட்பட்டவர்களாகவும் இருக்கலாம் ; கட்சிக்கு அப்பாற்பட்டவர்களாகவும் இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர்தான் உதை வாங்கியிருக்கிறார்கள். ஆகையால் இது ஒரு முக்கியமான விஷயம்.

எங்கு தவறு நடந்தாலும் 5 நிமிடத்தில் காவல் துறைக்குத் தகவல் கிடைக்கக் கூடிய அளவுக்கு கண்ட்ரோல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் கலவரம் நடந்த இடத்தில் இருந்த கமிஷனர் அல்லது காவல் துறை அதிகாரிகள் உடனடியாக ஐ.ஜி-க்குத் தகவல் கொடுத்திருக்கலாமே. அமைச்சர்கள் உடனே நடவடிக்கை எடுத்திருக்கலாமே. அதை ஏன் செய்யவில்லை என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

உடனடியாகக் காவல் துறையும், அமைச்சர்களும் தக்க நடவடிக்கை எடுக்காததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக காவல் துறையினர்தான் இதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கிறார்கள். முக்கியமான இடத்தில் கலவரம் நடக்கிறது என்றால் அங்கே வெறும் கான்ஸ்டபிளையும், சப்-இன்ஸ்பெக்டரையுமா அனுப்பினார்கள் ? அதற்குப் பதில் சொல்லவில்லை. இந்த நிலைமை இப்படியே போய்க்கொண்டிருந்தால் நாளை கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் தங்கள் குழந்தைகளைப் பெற்றோர்கள் எப்படி அனுப்புவார்கள் ? படிப்பதற்கு என்றுதானே வருகிறார்கள். இப்படி கை, கால் முறிவதற்கா வருகிறார்கள் ?

வார்டனை அடித்து விட்டார்கள், ஆகையால் ப்ராவாகேஷன் என்பது உண்மையல்ல.

The causes are much different. The causes are much deeper. அப்படி என்று ஒரு பிரிட்டக்ஸ்டை வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்டைரக்டாகப் பார்த்தால் Government connived at it என்று குற்றஞ் சாட்டுகிறேன். ஆகையால் இன்னும் விரிவாக விவாதித்து, இன்னின்ன தவறு நடந்திருக்கிறது, அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி எல்லாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டும். தமிழ் நாட்டில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கூட அனுமதிப்பது இல்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் இரண்டு தீர்மானங்களை எடுத்திருக்கிறார்கள். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் முக்கியமான ஒன்று. அமைச்சரவர்கள் சொன்ன பதில் திருப்தி அளிக்காததால் சபையை ஒத்தி வைத்து விரிவாக விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கம் எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர்கள் சொன்ன பல செய்திகள் உண்மைக்குப் புறம்பாக இருக்கின்றன என்று நான் ஆணித்தரமாகச் சொல்கிறேன். வெளியே போலீஸ் வான் நிற்கிறது. ஏ.சி. ஒருவர் அங்கே நின்று கொண்டிருக்கிறார். மாணவர்கள் என்ற பெயரால் 60, 70 பேர்கள் கையில் ஆயுதங்களுடன் உள்ளே போனார்கள். ஏன் அவர்களை தடுக்கவில்லை ? உள்ளே யாரும் செல்லக் கூடாது என்றால் வெளியேயிருந்து போனவர்களை ஏன் தடுக்கவில்லை ? அந்த போலீஸ் வான் பக்கத்தில் ஒரு அமைச்சரின் கார் நின்றுகொண்டிருக்கிறது. அதிலிருந்து டிரக்ஷன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது டிஸ்கஷன் அல்ல. அவை முன்னவர் அவர்கள் விளக்கம் சொல்லி விட்டார்கள். ஏதாவது கிளாரிபிகேஷன் வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : அவர் உண்மைக்குப் புறம்பான செய்திகளையெல்லாம் சொல்கிறார். அமைச்சரின் கார் அங்கே நின்றது என்று அவர் சொன்னால் கோவை செழியனுடைய கார் அங்கே நின்றது என்று நான் சொல்ல முடியும். இப்படிச் சொல்வது சரியா.......... ..

திரு. கோவை செழியன் : வெளியே இருந்து போனவர்கள் ஆயுதங்களுடன் போனார்கள். அங்கே பையன்களைப் போட்டு அடிக்கிறார்கள். அடி தாங்காமல் பையன்கள் ஐயோ, ஐயோ என்று அலறுகிறார்கள் ; வேதனை தாங்காமல் கத்துகிறார்கள். இரத்தம் சொட்ட சொட்ட போலீசார் அடிக்கிறார்கள். ஜனகன் என்ற டிப்டி வார்டன் இவனை அடி, அவனை அடி என்று டிரக்ஷன் கொடுத்துக்கொண்டிருக்கிறார..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபையில் இல்லாத அதிகாரிகளைப்பற்றிப் பேசக் கூடாது.

You are not exercising any right of reply after the discussion.

திரு. கோவை செழியன் : அவை முன்னவர் அவர்கள் சொன்ன கருத்து உண்மைக்குப் புறம்பானதாக இருக்கிறது. போலீசார் வெளியே வருகின்ற மாணவர்களை அடித்தார்கள். அதற்கு வேண்டிய ஆதாரம் என்னிடம் இருக்கிறது. நீதி விசாரணை செய்தால் அதெல்லாம் தெரியும். ஆகவே, மறு பரிசீலனை செய்து, இந்தப் பிரச்சனை பற்றி விரிவாக விவாதிக்க வேண்டும். இது ஒரு அரசியல் கலவரமோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. இதற்கு ஒரு முடிவு காணாவிட்டால் இங்கு மட்டும் இந்த கலவரம் என்று இல்லாமல் ஊர் ஊராக இந்த மாதிரி கலவரம் வந்துவிடக்கூடும். ஆகவே, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டும்.

டாக்டர். எச். வி. ஹாண்டே : நாங்கள் ஒரு முக்கியமான விஷயத்தை பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அமைச்சரவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். அது எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை.



அதனால் ஒரு ஒழுங்கு பிரச்சனைகூட கொண்டு வரலாம். ஏனென்றால் 3 நாள் அவகாசம் கொடுக்கப்பட்டது. தகுந்த விளக்கம் சொல்வதற்காகத்தான் இந்த 3 நாள் அவகாசம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆராய்ந்து சரியான வகையில் விளக்கம் தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொன்னார்கள். பி. டபிள்யூ.டி.யிலிருந்து குறிப்பு தந்திருப்பதாகச் சொன்னார்கள்......

திரு. கு. காமாட்சி : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். அமைச்சருக்கு அவகாசம் கொடுத்ததாகச் சொல்கிறார். அது சரியா ? இவர் யார் அவகாசம் கொடுக்க ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சபாநாயகர் அவகாசம் கொடுத்தார்; அதற்குப் பின்னாலும் சரியான தகவல் கொடுக்கவில்லை. பி.டபுள்யூ.டி. இலாகாவிலிருந்து குறிப்புகள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். மாணவர்களுக்கு என்னென்ன சேதம் ஏற்பட்டது என்பதற்கு தகவல் இல்லை என்று சொன்னார்கள். கோவை செழியன் அவர்கள் சொன்னதைத் திரித்துச் சொன்னார்கள். நாங்கள் கேட்பது, எத்தனை மாணவர்களின் பொருட்கள் சேதமடைந்திருக்கின்றன, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி. அமைச்சரவர்கள் அதுபற்றி திட்டவட்டமாக எதுவும் சொல்லவில்லை. தங்கமணி அவர்கள் சொன்னமாதிரி வெளி ஆட்கள் வந்து அடித்திருக்கிறார்கள். மாணவர்கள் மோதிக்கொண்டால் ஒரு பிரச்னை இருக்கும். ஆனால் இங்கே அப்படிப்பட்ட நிலைமை இல்லை. இங்கே வெளி ஆட்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வரும் போது போலீஸ் வான் நின்றுகொண்டிருக்கிறது. அதில் போலீஸ் அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஏன் அவர்களைத் தடுக்க முடியவில்லை ? அதைப்பற்றி ஏன் அரசாங்கம் தெரிந்துகொள்ள முடியவில்லை ? ஏன் அரசாங்கம் அறிந்து சரியான தகவல் கொடுக்கவில்லை ? இது இன்றைக்கு ஒரு ஜாதிப் பிரச்சினையாக கருதக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஜாதிப் பிரச்சினையாக்க வேண்டுமென்று யாரும் விரும்பவில்லை ; இங்கே இருக்கிற 234 உறுப்பினர்களும் ஜாதிப் பிரச்சனையாக்க விரும்பமாட்டார்கள். ஜாதிப் பிரச்சனையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதில் அனைவரும் அக்கறை காட்டுகிறார்கள்.

என்னுடைய குற்றச்சாட்டு, அப்பேர்ப்பட்ட ஒரு பிரச்சனைக்கு அரசாங்கம் முன்கூட்டியே கவனம் செலுத்த ஏன் முன்வரவில்லை என்பதுதான். மாணவர்கள் எல்லோரும் மிகவும் கவலையோடு இருக்கிறார்கள். நான் சில மாணவர்களைச் சந்தித்தேன்.

They are really demoralised. They are really scared.

கல்லூரிக்குள் போனால் அடிக்கிறார்கள் ; எப்படி அங்கே போவது என்று கருதி பலர் இன்றைக்கு சென்னையை விட்டு போய் விட்டார்கள். ஆகையால் இந்தப் பிரச்சனையைப்பற்றி தீவிரமாக

விவாதிக்க வேண்டும். அதற்கு சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும். நீண்ட நேரம் கொடுக்காவிட்டாலும் ஒரு மணி நேரமாவது இது பற்றி விவாதிக்க வேண்டும். அப்படி விவாதம் நடைபெறுவதாக இருந்தால் திரு. கிருஷ்ண மூர்த்தி போன்ற ஆளும் கட்சி உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். பல்வேறு உறுப்பினர்களின் கருத்துக்களையும் அறிந்தால் இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணமுடியும். ஆகவே, சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> சார், இந்தத் தீர்மானத்தை பிரேரபணை பண்ணும்போதே இது கட்டாயமாக சபையை ஒத்தி வைத்து விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் என்று நான் சொன்னேன். நான் அப்போது கூறிய சிலவற்றை ஊர்ஜிதம் செய்வதாக அமைச்சரவர்களின் விளக்கம் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள் இது ஒரு அரசியல் பிரச்சனை அல்ல என்று சொன்னார்கள். அப்படியானால் ரொம்ப சந்தோஷம். ஆனால் இருக்கின்ற நிலைமை என்ன ? ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தந்த சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்களும் மற்றவர்களும் எடுத்துச்சொல்லி கலவரம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு காரியம் வெளியிலே நடந்திருந்தால் அப்படி செய்திருக்கலாம். ஆனால் இது கல்லூரி விடுதிக்குள் நடந்த விஷயம். கல்லூரி விடுதிக்குள் நடந்த விஷயத்திற்கு பெரியவர்களும் மற்றவர்களும் போய் சமாதானம் செய்து வைப்பது என்பது சரியல்ல. சட்டம், அமைதி, ஒழுங்கு சரியாக இருக்க வேண்டுமானால் போலீசார் தகுந்த பொறுப்போடு இருக்க வேண்டும். அந்தப் பொறுப்பை போலீசார் சரியாகச் செய்திருக்க வேண்டும். வேறு யாரும் போய் சமாதானம் செய்வது என்பது சரியாக இருக்க முடியாது. கல்லூரியிலே இருக்கிற பலர் அடிபட்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : கிளாரிபிகேஷன் வேண்டுமானால் கேளுங்கள். நீங்கள் ஒரு "செக்கண்ட் ஸ்பீச்" செய்தால் எப்படி ?

[முற்பகல் 11-00]

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> இதைப்பற்றி ரொம்ப சாதாரணமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 22-ஆம் தேதி நடந்தது—இன்றைக்கு தேதி 27-ஆகிறது. இதுவரை மாணவர்களது பொருள்கள் என்ன என்ன சேதமாக்கப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் எடுக்கப்படவில்லை. களவாடப்பட்ட பொருள்கள் என்ன என்கின்ற விவரம் எடுக்கப்படவில்லை. கல்லூரியில்



நடந்த சம்பவத்தைப் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அரசாங்கம் எடுத்திருக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டன என்பது தெரிவிக்கப்படவில்லை. 3 நாட்கள் நடந்திருக்கிறது. மாணவர்களிடையே பெரும் கொந்தளிப்பு இருக்கிறது. இதில் அரசாங்கத்தின் பொறுப்பு சரியாகச் செய்யப்படவில்லை என்பது என் கருத்து. ஆகவே, இதைப்பற்றி சபை முழுமையாக விவாதிக்க வேண்டும். இதற்கு சபாநாயகர் ரூலிங் வேண்டும். விவாதத்திற்குத் தாங்கள் இடம் கொடுப்பீர்கள் என்று நினைக்கிறேன். இல்லையென்றால் நாங்கள் வேறு விதமாக முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நீங்கள் பேரவைத் தலைவரை மிரட்டுவது சரியல்ல. (திருமதி சத்தியவாணிமுத்து எழுந்திருந்தார்கள்) நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மான நோட்டீஸ் கொடுக்கவில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் பேசும்போது அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லையென்றால் அதை எக்ஸ்பன்ஜ் பண்ணுவேன்.

<u>திருமதி சத்தியவாணிமுத்து</u> : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால்—அமைச்சர் அவர்கள் பேசும் போது இந்தக் கலவரத்திற்குக் காரணம் கட்சி அல்ல—சாதி அடிப்படை என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் மீது ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த திரு. கோவை செழியன் அவர்கள்—அமைச்சர் அவர்கள் கார் அங்கே இருந்தது—அதில் இருந்து கொண்டு சில பேர் டைரெக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்—அந்த அளவுக்கு அந்தக் கட்சி துணையாக இருந்திருக்கிறது என்றார்கள். அதை நிரூபிக்கின்ற பொறுப்பு அவர்களுடையது—அமைச்சர் சொன்னதை உறுப்பினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இது போல அமைச்சர் அவர்களது கார்—பொறுப்பில் இருக்கிறவர்களது கார் பயன் படுத்தப்படலாமா என்கிற ஒழுங்குப் பிரச்சனையைத்தான் நான் கொண்டு வருகிறேன். இப்படி எல்லா மாணவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய அமைச்சரே குற்றச் சாட்டுக்கு ஆளாகிய பிறகு—பேரவையை ஒத்தி வைத்து இந்தப் பிச்சனையைப் பற்றி விவாதிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது சொன்னார்கள். கல்லூரி வளாகத்திற்குள்—விடுதிக்குள் போலீசார் போக வேண்டுமென்றால் அங்கிருந்த முதல்வர் வேண்டுகோள்விட வேண்டும். அப்போதுதான் நுழையலாம் என்று அரசினர் கட்டளையிட்டிருப்பதாகக் கூறினார்கள். கல்லூரி விடுதிக்குள் இருந்த மாணவர்களைத் தவிர, வெளியாட்கள் அந்த விடுதிக்குள் போய் இருக்கிறார்கள். வெளியாட்கள் போய் தான் இந்தச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இதைப் போலீஸ்காரர்கள் வெளியில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியில் இருந்து விடுதிக்குள் போகிறவர்களைக் கூடத் தடுக்கக் கூடாது என்று போலீஸ்காரர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ? வெளியாட்கள் விடுதிக்குள் போகும் போது போலீஸ்காரர்கள்

அவர்களைத் தடுத்து நிறுத்தாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? இந்தக் குற்றத்தைச் செய்த போலீஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராய் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

இன்ஞென்று. நமது சட்ட மன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதித்து விவாதிக்கின்ற வழக்கம் இப்போது இல்லை. இந்த விரும்பத் தகாத நிகழ்ச்சி நடந்ததற்கு அரசாங்கம் ஒருவகையில் காரணமாக இருக்கிற காரணத்திஞல் அரசு செய்த தவறுகளுக்காக அரசாங்கத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மன்னிப்புக் கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குக் கிடைத்த தகவலை வைத்துக் கொண்டு அவர்கள் எடுத்துச் சொல்வதுதான் சரி என்று வாதிக்கிருர்கள். கல்லூரி முதல்வர்—விடுதியின் உதவிக் காப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துப்படி—விடுதிக்குள் இரு பிரிவினர்களிடத்தில் கலவரம் ஏற்பட்டதன் விளைவாக இந்த நிலைமை ஏற்பட்டது—வெளியார் யாரும் உள்ளே வந்ததாகத் தகவல் இல்லை. அடிபட்ட சிலர் அதுபோல வெளியார் சிலர் வந்து தாக்கியதாக தங்களது வாக்கு மூலத்தில் கொடுத்துள்ளார்கள். அது பற்றி விசாரிக்கும்படியாக போலீசார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமாஞல் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கூறியிருக்கிறேன்.

கல்லூரி முதல்வர் கொடுத்த ரிப்போர்ட்டில் வெளியார் யாரும் வந்து மாணவர்களைத் தாக்கியதாகக் கூறவில்லை. அதைத்தான் நான் தெரிவித்தேன். அடிபட்டவர்களில் சில பேர் வெளியார் வந்து தாக்கியதாகத்தான் சொல்லியிருக்கிருர்கள். அப்படிச் சில பேர் கூறியிருப்பது உண்மையாக இருக்குமாஞல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சாமான்கள் திருட்டுப் போனது பற்றி குறிப்பிட்டார்கள். அது எவ்வளவு என்று சொல்ல முடியாது. புலன் விசாரணை முடிவடைந்த பின்னர்தான் முழு விவரங்களும் தெரியும். ஆகவே, அது பற்றியும் புலன் விசாரணை செய்து வருகிருர்கள். வழககுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. முறையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளும், அமைதியை நிலைநாட்டும்.

திரு. கோவை செழியன் குறிப்பிட்டதைப் போல அங்கே எந்த அமைச்சருடைய காரும் போய் நிற்கவில்லை. போக வேண்டிய அவசியமும் இல்லை. போய் அந்தக் கலவரத்தைத் தூண்ட வேண்டுமென்ற நிலைமை எங்களுக்கு இல்லை. அமைச்சருடைய கார் அங்கே இருந்தது, அதிலிருந்து சில பேர் டைரெக்‌ஷன் கொடுத்தார்கள் என்பது தவருன குற்றச் சாட்டாகும். அதை மறுக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திறகுப் பிறகு பேரவையை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டியது அவசியம் இல்லை என்ற காரணத்திஞல் நான் இதற்கு அனுமதி தர மறுக்கின்றேன்.

## 3. அறிவிப்புகள்.

### (அ) பேரவைத் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்யக் கோரி திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அறிவிக்கை கொடுத்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்தது திரு. ஜேம்ஸ் கொடுத்துள்ள மற்றொரு ஒத்திவைப்புத் தீர்மானம்................ இதை எடுத்துக் கொள்வதற்கு முன் ஓர் அறிவிப்பு. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேரவைத் துணைத் தலைவர் மீது ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இப்போது கொடுத்திருக்கிருர்கள். அதற்கு 14 நாள் நோட்டீஸ் வேண்டும். அது 11—4—75 அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (அ) சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் நுழைந்து மாணவர்களைச் சிலர் தாக்கியது குறித்து—தொடர்ச்சி.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம்—சட்ட சபையில் விவாதிக்க வேண்டிய ஒன்று—இவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும் தாங்கள் அதற்கு அனுமதி தர வில்லை. அரசாங்கத்திற்கு ஆதரவாக நடந்து கொண்டு—அமைச்சர்களுக்கு ஆதரவாக தாங்கள் நடந்து கொண்டதால் அண்ணு தி.மு.க. -வின் சார்பில் நாங்கள் வெளி நடப்புச் செய்கிருேம்—கண்டிக்கிற வகையில்.

(அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. கே.டி. கே. தங்கமணி : தங்கள் தீர்ப்பை நான் குறை சொல்வதற்கில்லை. நாட்டுக்கு சமாதானம் அளிக்காத அரசின் நிலையைக் கண்டிக்கிற வகையில் நாங்கள் வெளியேறுகிருேம்.

(இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திருமதி சத்தியவாணிமுத்து : அமைச்சர் அவர்கள் கூறும்போது அங்கே சாதியின் அடிப்படையில் நடந்தது என்று சொல்கிருர். சாதியை ஒழிக்க வேண்டிய கட்சியே அதற்குப் பொறுப்பாக இருந்திருக்கும்

நிலைமையைக் கண்டிக்கிறோம். அதைப் பற்றி இந்த அவையை ஒத்தி வைத்துப் பேச அனுமதி தராததால் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், அரசு எடுத்துச் சொன்ன சமாதானம் திருப்தி அளிக்க வில்லை என்ற காரணத்தினால் நாங்களும் வெளி நடப்புச் செய்கிறோம்.

(ஸ்தாபன காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திருமதி த. ந. அனந்தநாயகி : சட்டக் கல்லூரி விடுதியில் நடந்த நிகழ்ச்சிக்கு புதியதாக அதற்கு ஒரு சாதி வெறியை ஊட்டிவிட்டு—படிக்கக் கூடிய மாணவர்களுக்கு இந்த அரசு எந்தப் பாதுகாப்பையும் அளிக்கத் தவறிவிட்டது. மிகுந்த காலதாமதமாகத்தான் அதைச் சமாளிக்கச் சென்றது—அன்றைக்கே 6 மணி நேரம் இரு பகுதியினரிடையே தகராறு இருந்திருக்கிறது—உடனடியாக அதைத் தீர்க்க எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாது—மிகப் பரிதாபகரமான நிலைமை ஏற்பட்ட பிறகும் இன்றைக்கு அதைப் பற்றி விவாதிக்க மனம் இல்லாத நிலையில், அவை முன்னவர் கொடுத்த பதில் எங்களுக்குத் திருப்தியை அளிக்காத காரணத்தினால் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. நா. வீராசாமி : சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தவறான தகவல்கள் வெளியே வந்து பிரச்சினையை வளரவிடக்கூடாது என்பதற்காகத்தான் கொண்டு வருகிறேன். திரு. கோவை செழியன் பேசும் போது ஒரு அமைச்சருடைய கார் அங்கே இருந்தது என்று அமைச்சரே அந்தச் சம்பவத்திற்கு பொறுப்பாக இருந்ததுபோன்ற பொருள்பட இங்கே பேசினார். இப்படி தவறான முறையில் உள்ளபடியே அமைச்சரைப் பற்றியும், இந்த அரசைப் பற்றியும் குறிப்பிடப்படுகிற சொற்றொடர்கள் சட்டமன்றக் குறிப்பேட்டில் இருப்பது நல்லதல்ல. அதை தாங்கள் நீக்கி விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டிற்கு அமைச்சர் அவர்கள் மறுத்து பதில் சொல்லிய பிறகு—உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டை எடுத்துக்கொள்ள வேண்டிய தில்லை. இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். காமாட்சி உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. கு. காமாட்சி : தி சேம் பாயின்ட் ஆப் ஆர்டர்.



(ஆ) கோட்டூர்புரம் பள்ளியில் வழங்கப்பட்ட மதிய உணவை உண்ட மாணவர்கள் மயக்கமுற்று, மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது குறித்து



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்தாக திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு கே. டி. கே. தங்கமணி அவர்களும் சென்னை மாநக ராட்சியால் நடத்தப்படும்—கோட்டூர்புரம் பள்ளியில் வழங்கப்பட்ட மதிய உணவை உண்ட மாணவர்களில் 27 பேர்கள் மயக்கமுற்று இராயப்பேட்டை மருத்துவ மனையில் சிகிச்சைபெறுவது குறித்து விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள். அதைச் சுருக்கமாக விளக்க வேண்டும். திரு. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சென்ற 24–3–1975 அன்று கோட்டூர் புரம் கார்ப்பரேஷன் ஆரம்பப் பள்ளியில் மதிய உணவு சாப்பிட்டவர்களில் ஏறத்தாழ 50 மாணவர்களுக்கு உடனடியாக மயக்கம் ஏற்பட்டு, வாந்தியும் எடுத்து, அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு அன்றைய தினம் மதிய உணவில் ரவா கிச்சடி கொடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. அந்த ரவா கிச்சடியை கார்ப்பரேஷன் நிர்வாகத் தினர்தான் சமையல் செய்து மாணவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சமையல் செய்யும்போது, அந்த உணவில் பல்லி விழுந்து செத்ததாகவும், அந்தப் பல்லியானது மாணவர்களுக்கு அந்த ஆகாரத்தை வழங்கும் போது கூட, உணவில் இருந்ததாகவும், அதனால்தான் அந்த மாணவர் களுக்கு இந்த மாதிரியான மயக்கம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. சாதாரணமாக, மதிய உணவு தயார் செய்யப்படுகிற இடம் போதுமான பாதுகாப்பு இல்லாமல், சுகாதாரப் பாதுகாப்புகூட இல்லாமலிருக்கிற காரணத்தால், இம்மாதிரியான சம்பவங்கள் அடிக்கடி நம்முடைய மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றையதினம் காலையில் கூட ஒரு பத்திரிகையில் பார்த்தேன். ஒரு குடும்பத்தில் இம்மாதிரியான நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ரவாவில் விஷம் கூடக் கலந்திருப்பதாகக் கூறப் படுகிறது. ஆகவே, இம்மாதிரியான நிகழ்ச்சிகள் சாதாரணமாக, நடை பெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், அரசாங்கம் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே, இது பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை—மாணவர்கள் பிரச்னை. மாணவர் களுக்கு நம் மாநிலத்தில் எங்கும் மதிய உணவு விநியோகம் செய்துகொண் டிருக்கிறோம். ஆகவே, ஒரு பாதுகாப்பு நிலையில்லையென்றால், விரும்பத் தகாத் காரியம் நடக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, இது பற்றி விவாதிக்க, சபையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இதுவும் சென்னை நகரிலே நடந்த விஷயமாகத்தானிருக்கிறது. மதிய உணவு என்று நாம் எவ்வளவோ பிரச்சாரம் செய்கிறோம். மதிய உணவைச் சமையல் பண்ணும்போது பூச்சிகள் எல்லாம் போட்டு சமையல் பண்ணுவார்கள் போல் தெரிகிறது. பத்திரிகைச் செய்திகளில் பல்லியும் போட்டு சமையல் பண்ணியதாக வந்திருக்கிறது. அதனால், அதனைச் சாப்பிட்ட குழந்

தைகள் மயக்கம் போட்டு விழுந்ததாகவும், 20 பேருக்கு மேல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இன்றைக்கு அவர்களுடைய நிலைமை என்ன? அவர்கள் ஆஸ்பத்திரியை விட்டு வந்து விட்டார்களா? இதில் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? ஏனென்றால், மதிய உணவுத் திட்டத்தையே கேலிக் கூத்தாக இது ஆக்கியிருக்கிற காரணத்தால் இதற்கு அரசாங்கம் எடுத்திருக்கிற தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்கச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் கே. டி. கே. தங்கமணி அவர்களும் ஜேம்ஸ் அவர்களும் மாநகராட்சி மன்றத்தைச் சேர்ந்த துவக்கப் பள்ளியில் கொடுக்கப்படுகின்ற மதிய உணவிலே பல்லி விழுந்ததைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் சமையலில் பல்லியைப் போட்டு சமைத்தார்களா என்று கேட்டார்கள். பல்லியைப் போட்டு சமைக்க மாட்டார்கள். எவ்வளவோ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்கிறோம்.

சென்னை மாநகராட்சி தனது தொடக்கப்பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவர்களுள் ஏறத்தாழ 50,000 பேர்களுக்கு நண்பகல் உணவு வழங்கிவருகிறது. 119-வது வட்டம் கோட்டூர்புரத்தில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளிக்கு கோபாலபுரத்திலுள்ள மாநகராட்சி மதிய உணவுக் கூடத்திலிருந்துதான் உணவு செல்கிறது. கோபாலபுரம் மையம் நாள்தோறும் சுமார் 83 மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் சுமார் 13,400 மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கி வருகிறது.

கோட்டூர்புரம் பள்ளியில் சுமார் 210 மாணவர்கள் பயில்கிறார்கள். அதில் 100 பேர் மதிய உணவு பெறுகிறார்கள். 24–3–1975 அன்று நண்பகல் உணவு சுமார் 64 மாணவர்களுக்கு பகல் 1·10 மணிக்கு வழங்கப்பட்டது. அவர்களுல் 27 பேர் சாப்பிடவும் தொடங்கிவிட்ட நிலையில் ஒரு மாணவர் இறந்த பல்லி ஒன்று உணவில் இருந்ததைக் கண்டார். மேற்கொண்டு உணவு கொள்வது உடனடியாக நிறுத்தப்பட்டது. சிறிதளவு உணவு உட்கொண்டிருந்த 27 மாணவர்களிடையே யாதொரு உடல்நலக்குறைவுத் தோற்றமில்லை—வாந்தியெடுக்கிற, மற்ற நிலைமைகளில்லை. உணவோடு சேர்த்து சமைக்கப்பட்ட பல்லிக்கும் விழுந்த பல்லிக்கும் வித்தியாசம் தெரியும். கோபாலபுரத்திலிருந்து சமைக்கப்பட்ட பிறகு, அல்லது எடுத்து பாத்திரத்திலே கொண்டு செல்லும் போது விழுந்திருக்க வேண்டுமென்றுதான் கருதுகிறார்கள்.

முன்னெச்சரிக்கையாக, அந்த 27 பேரையும் இராயப்பேட்டை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று "அட்ரேப்பைன்" ஊசி போட்டதுடன் 24-ந்தேதி இரவு முழுவதும் மருத்துவர் பார்வையிலே வைத்து கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களுக்கு யாதொரு உடல் நலக் குறைவும் ஏற்படவில்லையென்று தெரிந்தவுடன், 24-ந் தேதி இரவு முழுவதும் வைத்திருக்கப்பட்ட பிறகு, அத்தனை பேரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். யாருக்கும் கேடுகள் ஏற்படவில்லை, என்றாலும் இப்படிப்



பட்ட நிலைமைகள் ஏற்படக்கூடாது என்று முன்பே சிலபல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நாம் சுற்றறிக்கை விட்டிருக்கிறோம்.

மைய சமையற் கூடங்களைப் பொறுத்த வரைக்கும் மூடி கேன்கள் எல்லாம் வைத்திருக்கிறோம். இருப்பினும் திடீரென்று எதிர்பாராத விளைவுகள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டுமெனறு மாநகராட்சி மன்றத்திடம் கூறியிருக்கிறோம். மாநகராட்சி மன்றத்தைச் சேர்ந்த அதிகாரிகள் விசாரித்து, இம்மாதிரி நிகழ்ச்சிகள் இனி நடைபெறாமலிருக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களுக்கு எந்தவித கேடும் ஏற்படவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இது குறித்து விவாதிக்க, அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (4) 1975–76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண் 20—வேளாண்மை—தொடர்ச்சி.

(ஆ) நிதிக்கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகள்,. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சருக்கு எவ்வளவு நேரம் வேண்டும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற கருத்தைப் பொறுத்திருக்கிறது. குறைந்தபட்சம் ½ மணி நேரமாவது இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ¾ மணி நேரம் தருகிறேன். இப்பொழுது 9 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரையும் 10 நிமிடங்களுக்குள் முடிக்குமாறு கேட்டுக்கொளகிறேன்.

திரு. குழ. செல்லையா : தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியததின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரிக்கிற வகையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1973–74-க்கும் 1974–75-க்கும் இடையே உற்பத்தியான உணவு அளவுக் குறைவு ஏறத்தாழ 35 சதவீதம் என்ற கணக்கினை மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள். எனவே, ஓராண்டு காலத்தில் பலவேறு

காரணங்களால் உற்பத்தியினுடைய அளவு குறைந்திருக்கிறது என்று சொல்கிற நேரத்தில், அதை ஈடுகட்டுகிற வகையில், உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொளகிற வகையில் அரசு மேற்கொண்டிருக்கிற திட்டங்களை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்குத் தமிழகத்தை பொறுத்த வரையிலே 70-லிருந்து 80 சதவீதம் வரை விவசாயத்தை நம்பியிருக்கிற தொழிலாளிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நாட்டுக்கு நன்றாகத் தெரியும். மற்ற தொழில்களிலே ஈடுபட்டிருக்கிறவர்களையும் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறவர்களையும் பார்க்கிற நேரத்திலே; விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்குப் போதிய அளவு கவனம் செலுத்தப்படவில்லை. ஏனைய தொழில்களிலே இருக்கிறவர்களுக்கிருக்கிற மரியாதை, கௌரவம் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு இல்லையென்பதை நாம் மறந்து விடக்கூடாது. சாதாரண விவசாயிகளுக்கு எந்தெந்த வகையிலே ஊக்கமும் ஆதரவும் ஒத்துழைப்பும் தரவேண்டுமோ அந்த வகையிலே தந்தால்தான் இந்த வேளாண்மைத் துறையை ஊக்குவிக்க முடியும்; நாட்டிலேயிருக்கிற உணவு பற்றாக்குறையைப் போக்க வழிவகை காணமுடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

மற்ற துறைகளுக்குக் காட்டுகிற அக்கறையையும் ஆர்வத்தையும், இதிலும் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரம்பரையாக நடைபெறுகிற விவசாயத்தொழில் சம்பிரதாயமான தொழிலாக நடைபெறுகிறதேயல்லாமல், நல்லமுறையில் விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளைப் பாதுகாக்கிற வகையிலே அரசு தீவிர கவனம் செலுத்தவில்லையென்பதை நான் இங்கு குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

பொறுக்கு விதை, பூச்சிக் கொல்லி மருந்து, இரசாயன மருந்து ஆகியவற்றை குறிப்பிட்ட காலத்திலே கொடுப்பதற்கு அரசு முக்கியமான கவனம் செலுதத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பூச்சிக் கொல்லி மருந்து இரசாயன உரங்களைப் பொறுத்த வரையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றுகூட தெளிவாக இருப்பு இருப்பதாகப் பட்டியலை படித்துக்காட்டினார்கள். நான் மகிழ்ச்சி அடைகிறேன். புத்தகத்திலாவது இருப்பு இருக்கிறதே என்பதற்காக மகிழ்ச்சிதான். பின்னாலே வருகிற பொழுது அதைப்பற்றி பேசிக்கொள்ளலாம்.................

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ருத்திரசிந்தாமணி என்ற அவருடைய ஊரிலே கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருப்பதாகவும் அதிலே உரம் இல்லையென்றும் சொன்னார்கள். நான், அவர்கள் ஏதோ குறை சொல்லிவிட்டார்களென்று ஆர்வத்தோடு தந்தியும் டெலிபோனும் அடித்து, ருத்திரசிந்தாமணியிலுள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கு உரம் இல்லையென்றால் உடனே கொடுங்கள் என்று சொன்னேன், எவ்வளவு இருப்பிலிருக்கிறது என்று கேட்டதற்கு வந்த பதில், ருத்திரசிந்தாமணியிலுள்ள கூட்டுறவு சங்கம்



1968-க்குப் பிறகு செயல்படவே இல்லை; அப்படி ஒரு கூட்டுறவுச் சங்கமே இல்லை இன்றைக்கு என்றார்கள். திரும்பவும் இன்றைக்குக் காலையிலே கேட்ட பிறகு கீழ்க்கண்ட தகவல் கிடைத்திருக்கிறது. அதறகுப் பக்கத்திலேயுள்ள இரட்டைவயல் என்ற ஊரில் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதன் மூலமாக உரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 12—12—74-ல் குழ. செல்லையா அவர்களுக்கோ அவருடைய மனைவிக்கோ 50 கிலோ யூரியா தரப்பட்டிருக்கிறது. 12—12—74-க்குப் பிறகு கடந்த 3 மாதங்களில், 50 கிலோ யூரியா—100 கிலோ காம்ப்ளெக்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நேற்று முன்தினம் அவர்கள் ருத்திர சிந்தாமணி கூட்டுறவு சங்கத்திற்கு உரம் கொடுக்கப்படவேயில்லையென்று சொன்னார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கமே இப்போது அங்கேயில்லை.

திரு. குழ. செல்லையா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய ருத்திர சிந்தாமணி என்பது மெயின் வில்லேஜ்; இரட்டைவயல் என்பது ஹாம்லட். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கணக்கிலே வேண்டுமானால் அது இரட்டைவயலாக இருக்கலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. கு. காமாட்சி): அமைச்சர் அவர்கள் சொன்னது ருத்திரசிந்தாமணியில் கூட்டுறவு சங்கம் இல்லை என்பதுதான்.

திரு. குழ. செல்லையா: நான் சொல்கிறேன்; ருத்திரசிந்தாமணியில் கூட்டுறவு சங்கம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 1968-ம் ஆண்டிலே ருத்திர சிந்தாமணியில் இருந்த கூட்டுறவு சங்கம் சூப்பர்சீட் செய்யப்பட்டுவிட்டது; இப்போது அங்கே இல்லை.

திரு. குழ. செல்லையா: ருத்திரசிந்தாமணியாக இருக்கட்டும் அல்லது இரட்டைவயலாக இருக்கட்டும்; நான் சொன்ன அந்த நேரத்திலே அங்கே உரம் இல்லை என்பதுதான். இன்றைக்கு இருக்கலாம்; நான் சொல்லுகிற நேரத்திலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், துண்டுச்சீட்டை கேட்டார்கள். நான் பெரிய சீட்டிலேயே எழுதிக் கொடுத்தேன்; அந்தக் காலத்திலே அங்கே உரம் இல்லை என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு பூச்சி மருந்துகள் என்ட்ரின், செடின்வி, எலியோடிராக்ஸி போன்றவை கிடைக்கவில்லை. எலியோடிராக்ஸி என்ற மருந்து கிடைக்கவில்லை. அந்த மருந்தின் விலை அரசாங்க விலை ரூ. 32·98 காசுகள் ஆகும்; ஆனால் வெளியிலே 45 ரூபாய், 50 ரூபாய் என்று விற்கிறது. டெப்போக்களில் அந்த மருந்தை கேட்டால் இல்லை என்கிறார்கள்; விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை; ஆனால் கடைக்காரர்களிடம் இருக்கிறது. அது எப்படி என்று தெரியவில்லை. தமிழ் நாட்டிலே பூச்சிக் கொல்லி மருந்து உற்பத்தி செய்கிறவர்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கப்படவில்லை. தனிப்பட்டவர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். சென்னையிலே ஒரு ரிட்டயர்ட் எஞ்சினி

தொழிற்சாலை ஏற்படுத்தி உற்பத்தி செய்யமுடியாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது இதற்கு எல்லாம் என் அரசாங்கம் லைசென்ஸ் வாங்கித் தரக்கூடாது ? பூச்சிக் கொல்லி மருந்துகள் கேட்டால் பூச்சிகளைக் கொல்லக் கூடிய மருந்தாக அவர்கள் கொடுப்பதில்லை; கொடுப்பது வேறாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தமிழ் நாட்டிலே மொத்தம் 808 விவசாய டெப்போக்கள் இருக்கின்றன. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே —முக்கியமான மருந்துகளைப்பற்றி மட்டும் சொல்கிறேன்; நெல்லுக்கு வேண்டிய மருந்துகளைப் பற்றி சொல்லுகிறேன்—பி. எச். சி. 10% 2,050 டன் தஞ்சை மாவட்டத்திலே மட்டும் இருக்கிறது——நான் டன் கணக்கில் சொல்கிறேன். கிலோ கணக்கில் அல்ல; கிலோ என்றால் ஆயிரத்தால் பெருக்கிக்கொள்ள வேண்டும்; அப்படிச் சொன்னால் அம்மையார் அவர்கள் நான் இலக்கத்தைப் பெருக்கிக் காட்டுவதற்காகச் சொல்கிறேன் என்று சொல்வார்கள்; ஆகவே நான் டன் கணக்கில் சொல்கிறேன். அதேபோல் என்ட்ரின் என்ற லிக்விட் திராவக மருந்து தஞ்சை மாவட்டத்திலே 19,089 லிட்டர் இருக்கிறது. ஆகவே வேண்டிய அளவிற்குக் கேட்டு வாங்கிக்கொள்ளலாம். டெப்போக்கள் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. ருத்திரசிந்தாமணி என்று டெப்போ இல்லாத ஊரிலே கேட்காமல் டெப்போ இருக்கிற ஊரிலே கேட்டால் கொடுப்பார்கள். இதைக் கைவசம் வைத்திருப்பதால் அரசுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை.

திரு. குழ. செல்லையா : எலியோடிராக்ஸி என்ற மருந்து பவர்புல் மருந்தாக இருக்கிறது; பூக்கொல்லை டிப்போவில் கேட்டால் இருப்பு இல்லை என்கிறார்கள். ஆனால் பேராவூரணியிலே தனியார் கடைகளிலே இருக்கிறது. எப்படி அங்கே மட்டும் இருக்கிறது ? அரசாங்க விலை அதற்கு ரூபாய் 32·98 காசுகள். ஆனால் தனியார் கடைகளிலே அதை 45 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை வைத்து விற்கிறார்கள். டெப்போக்களிலே உள்ளவர்கள் யார் யார் பேர்களிலோ விவசாயிகள் என்று எழுதிப்போட்டு கடைக்காரர்களுக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல்தான் வருகிறது. நான் சாதாரண விவசாயி, நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கிறேன் இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொறுக்கு விதைகள் புரக்யூர் பண்ணுவது சம்பந்தமாக சில கருத்துகளைச் சொல்லவிரும்புகிறேன். இ. ஒ. (அக்ரி.)—க்கள் அவர்களுக்கு வேண்டிய உறவினர்களிடத்திலே விதைகளை புரக்யூர் செய்கிறார்கள்; தங்கள் இஷ்டம் போல் 130 ரூபாய், 135 ரூபாய் என்று குவிண்டாலுக்குக் கொடுத்து வாங்கிக் கொள்முதல் செய்கிறார்கள். அந்த விதைகளைப் போட்டால் முளைக்காது. தங்களுக்கு வேண்டியவர்களிடத்திலே சொந்தக்காரர்களிடத்திலே விளைந்ததை எல்லாம் வாங்கியிருக்கிறார்கள். பக்குவப்பட்ட நிலத்திலே பண்ணைகளிலே விளைந்த நெல்லைத்தான் வாங்க வேண்டும்; அப்படி வாங்கிய விதைகள்தான் நன்றாக விளையும். இப்படி இவர்கள் புரக்யூர் செய்தது எல்லாம் சாப்பாட்டிற்குத்தான் பயன்படுமே தவிர, விதைகளாக பயன் படாது. இதனால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வரும். அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பேராவூரணித் தொகுதியிலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சில கிராமங்கள் போய்விட்டன. பனங்குளம், மேற்பனைக்காடு, நெய்வத்தலி, சிட்டங்காடு போன்ற கிராமங்களுக்கு மின் இணைப்பு (அங்கே 33 கிணறுகளுக்குக்) கொடுக்கப்படவில்லை. கேட்டால் மின்சாரத்துறையினர் சொல்கிறார்கள், மோட்டார் வாங்கி வைத்து பொருத்தி விட்டால்தான் மின்சார இணைப்புக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். மோட்டார் வாங்கி வைத்து பல மாதங்கள் ஆகியும் கூட இன்னும் பனங்குளம், மேற்பனைக்காடு, நெய்வத்தலி, சிட்டங்காடு, மாமடக்கி திருநாளூர், அழியாநிலை, எருக்கலக் கோட்டை, அரண்மனைக்கொல்லை ஆகிய இடங்களில் கிணறுகள், ஒ. என். சி. சி. 2 கிணறுகள் இவைகளுக்கு எல்லாம் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. மோட்டாரகளை கடன் பெற்று வாங்கி வைத்து வட்டியும் கட்டிக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் உடனடியாக இணைப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் டிராக்டர் ஒர்க்ஷாப் ஒவ்வொரு ஊராட்சி எல்லைக்குள்ளும் ஏற்படுத்த வேண்டும். விவசாயிகள் டிராக்டர்கள் வைத்து இருக்கிறார்கள். விவசாய நேரங்களிலே பழுதடைந்து விட்டால் சாகுபடி செயய முடியாத நிலைமை ஏற்படுகிறது, ஆகவே ஒவவொரு ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள்ளும் ஒவ்வொரு பணிமனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையிலே ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மன்றத்திலே நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். தஞ்சை மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கிறது. 3 பேர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள், பெயருக்குதான் இருக்கிறார்களே தவிர எந்த வகையிலேயும் எங்கள் மாவட்டம் முன்னேறவில்லை. விவசாயம் தவிர வேறு எந்தவிதமான தொழிலும் அங்கே இல்லை. தஞ்சை மாவட்டத்திலே ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் வருகிறது என்றால் கோவை போன்ற மாவட்டங்களிலே 6 ஆயிரம், 7 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. தஞ்சையிலே ஒரு பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாய பல்கலைக் கழகம் ஒன்றை தஞ்சை மாவட்டத்திலே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் நியாய உணர்வோடு கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே விவசாயம்தான் முக்கியமான தொழில். அங்கே அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி பற்றி ஒரு திட்டம் சொல்லியிருக்கிறார்கள். கடற்கரையிலே உள்ள பகுதிகள் அதற்காக எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். மணல் பாங்கான இடம் வேண்டும், அதில் செம்மண்ணும் கலந்திருந்தால் அதிகமாக விளையும் என்று சொல்கிறார்கள். ஆவணம், ஆலங்குடி, திருவரங்குளம், கொத்தமங்கலம், கீரமங்கலம் ஆகிய இடங்களில் அருமையான காட்டு நிலங்கள் இருக்கின்றன.

[திரு.. குழ. செல்லையா] [1975 மார்ச் 27]

பக்கத்திலே பொன் விளையும் பூமியாக நல்ல நிலங்கள், சோளம், மிளகாய் விளையக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் காட்டு இலாகாவிலே இருப்பதால் பயன் இல்லாமல் இருக்கின்றன. இலங்கையிலிருந்து வருகிற அகதிகளுக்கும் அரிசன மக்களுக்கும் அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. பூச்சிக் கொல்லி மருந்து நானே தயாரித்தேன் என்று புது மருந்தைக் கொண்டுவந்து காட்டினார்கள். பாக்டீரியா போன்றவற்றைப் பரப்பிவிட்டு உரத்தின் அளவைக் குறைக்கச் செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தில் பல தவறுகள் நடக்கின்றன. சீனியாரிடி பார்க்காமல் புரபஸர்களைப் போடுகிறார்கள். டீன்களை எல்லாம் நோட்டீஸ் இல்லாமல் நீக்கி விடுகிறார்கள். அங்கே கட்டப்படுகிற கட்டட காண்ட்ராக்ட்டில் கொள்ளை நடப்பதாக எல்லாம் தகவல்கள் வருகின்றன. அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

கிராம சேவக்குகள், பீல்ட் மேன்கள், மேஸ்திரிகள் இவர்களுக்கு எல்லாம் என்ன வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைச் செய்யச் சொல்வதில்லை. கிராம சேவக்குகள் பெரும்பாலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காகப் பயன்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் பஸ் ஸ்டாண்டுகளில் ஜீப்புகளை வைத்துக்கொண்டு நிற்கிறார்கள். என்ன என்றால் இதுதான் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வேலை என்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) அமைச்சர் குறுக்கீட்டில் மூன்று நிமிடங்கள் போய்விட்டன. இன்னும் 2, 3 நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன.

[முற்பகல் 11-30]

ஆகவே, கிராம சேவக்குகளுக்கு வீட்டு வசதி போன்ற சலுகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் ஃபீல்ட்மேன்கள் சுமார் 5,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வுகளை மதித்து அவர்களுக்கு ஊக்கம் தந்தால் இன்னும் அதிக வகையில் பயனளிக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் விவசாயத்தை எடுத்துக் கொண்டால் லெவி முறை இருக்கிறது. அதில் இந்த அமைச்சருக்குச் சம்பந்தமில்லை என்றாலும்கூட இதில் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. லெவி நெல் தர மறுக்கிறார்கள் என்று சொல்லி வன்முறை மூலமாகவும், பலாத்காரம் மூலமாகவும் நெல்லை எடுக்கிறார்கள் என்று முடச்சிக்காடு, வீரியன்கோட்டை, குறக்குடி, காடகம் போன்ற பல பகுதிகளிலேயிருந்தும் மனுக்கள் வந்திருக்கின்றன. அங்கே முறைகேடாக விவசாயிகளை நடத்தியிருக்கிறார்கள். விதைக்கு வைத்திருந்த, சாப்பாட்டிற்குள்ள நெல்லைக்கூட எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது.



1975 மார்ச் 27] [திரு. குழ. செல்லையா]

மேலும் இன்றைக்கு விவசாயத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு காரியங்களை இன்னும் நல்ல முறையில் செய்ய வேண்டும். இலவசமாக பூச்சிமருந்து, உரம் முதலியவற்றை வழங்க வேண்டும். நல்லமுறையில் திட்டமிட்டு, தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் போன்ற மாவட்டங்களை ஒரு மண்டலமாக ஆக்கி ஒரு தொழில் உணர்வோடு தீவிர விவசாயத்திற்கு நல்ல பயிற்சி பெறும் வகையில் ஊக்கத்தைத் தந்தால் நிச்சயமாகக் கொள்முதலுக்காக வேறு மாவட்டங்களுக்குப் போக வேண்டிய அவசியமிருக்காது. இப்படி நான்கு மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அந்த மாவட்டங்களில் இம்மாதிரி செய்தால், அரசாங்கம் எவ்வளவு வர வேண்டுமென்று புள்ளிவிவரம் போடுகிறதோ அதை அங்கே கொள்முதல் செய்வதற்கான சாத்தியக்கூறு இருக்கும் என்று தெரிவித்து, அந்த உணர்வின் அடிப்படையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலத்திற்கு உச்சவரம்பு இருக்கிறது. உச்சவரம்பை, கம்பெனி என்ற வகையிலே தளர்த்தி அந்த இடத்திலே உச்சவரம்பை வரையறுத்து 100 எக்கர், 200 எக்கர் என்ற அளவில் கம்பெனி என்று சொல்லுமளவில் அந்த ஆக்டின் கீழே வீணாகக் கிடக்கும் தரிசு நிலங்களைப் பயன்படுத்தி சிறந்த முறையிலே நல்ல முறையிலே உணவு உற்பத்தியைப் பெருக்கி, எல்லா நாடுகளுக்கும் உணவு வழங்க முடியும். அதிலே கவனக் குறைவாக இருப்பதாகச் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, வேளாண்மைத்துறை மானியத்தின்மீது ஆளுங்கட்சியைச் சார்ந்த நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இப்பொழுதுள்ள நெருக்கடியான ஒரு நிலைமையில் வேளாண்மைத் துறை எவ்வளவு சிரமத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறது என்பதை நானும் வேளாண்மைக்குடியைச் சார்ந்த ஒருவன் என்பதால் உளப்பூர்வமாகக் கூற விரும்புகிறேன். அரசு சொல்கிறது; போர்க்கால நடவடிக்கையைப்போல் நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதாக. உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி, பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்ற தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கிறது. அதேவகையில் என்னுடைய தொகுதியில் விவசாயிகளிடத்திலே பிரச்சாரம் செய்யும் நேரத்தில், மூன்றாவது போக சாகுபடி செய்தால் உங்களுக்கு இலாபம் வருமா என்ற திட்டத்தை எண்ணி விவசாயத்தில் ஈடுபடாதீர்கள், உங்களால் உற்பத்தியாகும் நெல் இந்த நாட்டு மக்களுடைய பஞ்சத்தைப் போக்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற சேவை மனப்பான்மையோடு பணியாற்ற முன்வாருங்கள் என்ற பிரச்சாரத்தைச் செய்து வருகிறோம். இப்படிப்பட்ட ஒரு தொழிலுக்கு அரசு எவ்வளவு பக்கபலமாக இருக்கிறது, எவ்வளவு உற்சாகத்தைக் கொடுக்கிறது, எங்கே உதவி செய்கிறது, என்று எண்ணிப் பார்த்தால் நான் வேதனையோடு சொல்கிறேன், இந்தச் சபையின் மூலமாக அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், அதற்கு உதவியே

சாதாரணமாக கீழ் மட்டத்திலே இருக்கின்ற விவசாயிகூட சாகுபடி செய்வதற்குக் கடன் வசதி மறுக்கப்படுகிறது. காரணம் என்னவென்றால், முன் பாக்கி. ஒரு வருஷத்திற்கே அவனுக்கு விளைச்சல் இல்லை. அவன் வயிற்றுக்குக்கூட உற்பத்தி செய்ய முடியவில்லை. அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் இந்தக் கடன்களைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதைக் காரணமாகக் காட்டி மூன்றாவது போகம் சாகுபடி செய்ய உதவி மறுக்கப்படுகிறது. இது நியாயமா ? ஏன், போர்க்கால நடவடிக்கை என்று சொல்லிக்கொண்டு, நீங்கள் உற்பத்தியில் ஈடுபட வேண்டு மென்று கேட்டுக்கொள்ளும் நேரத்தில், போர்க்கால நடவடிக்கை மாதிரி செய்ய முன்வரக்கூடாது ? இதைப்பற்றிக் கேட்டால் ரிசர்வ் பேங்க் மறுக்கிறார்கள்; ரிசர்வ் பேங்கினுடைய விதிமுறை அப்படியிருக்கிறது எனற காரணத்தைக் காட்டிச் சொல்கிறார்கள்.

கும்பகோணம் சென்ட்ரல் பேங்க் இருக்கிறது. எங்கள் ஏரியாவைக் கண்ட்ரோல் செய்யக்கூடிய பேங்க் அது. அதன் தலைவர் மாண்புமிகு எம். எல். சி. அவர்கள். அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள், கடன் கிடையாது, கடன் கிடையாது என்று. அந்தக் கடனை ஒத்தி வைத்திருக்கிறீர்களா, கடன்களை வசூலிப்பதை நிறுத்தி வைத்திருக்கிறீர்களா, கொஞ்ச காலத்திற்கு, 6 மாதம், 3 மாதம் தவணை கொடுத்திருக்கிறீர்களா ? கிடையாது. உரம் தருகிறீர்களா ? நாங்கள் டெப்போவில் கேட்டால் உரம் இருக்கிறது; உங்கள் பாக்கியைக் கொடுத்துவிட்டு வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படிச் சொன்னால் ஏழை விவசாயிகள் எப்படிச் சாகுபடி செய்வது ?

இம்மாதிரி நெருக்கடியான நிலைமையில் தஞ்சை விவசாயிகள் சிக்கிக் கொண்டு வருகிறார்கள். அதற்குப் பரிகாரம் காண அமைச்சரவர்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் ? அதற்கு என்ன சொல்லுகிறார் கள் ?

விளம்பரத்தைப் பார்க்கிறேன். விளம்பரங்கள் நன்றாக இருக்கின்றன. போர்க்கால நடவடிக்கையைப்போல என்று சொல்கிறார்கள். பாகிஸ் தானுக்கும், இந்தியாவிற்கும் சண்டை வந்தபொழுது பஞ்சாபில் கரும்புக் கொல்லைகளையே கொளுத்திவிட்டார்கள். ஏனென்றால் டிராக்டர்கள் பாகிஸ் தானிலிருந்து வரும்பொழுது தெரியாது என்பதால். அப்படிப்பட்ட போர்க்கால நடவடிக்கையைப்போல் நாங்கள் கொளுத்துவதற்குத் தயாராக இல்லை. உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னால் அதற்கு உதவி செய்ய வில்லை. ஏன் ? செய்ய வசதி இல்லையா? என்னென்னவோ காரியங்களுக் கெல்லாம் வசதி செய்யும்பொழுது இதற்குச் செய்வதற்கு வசதி யில்லையா?

அடுத்து கொள்முதல்—தலைவரவர்களே, உங்கள் மூலமாக அமைச்ச ரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—எத்தனை ஏக்கருக்கு ? எத் தனை ஏக்கர்களுக்கு உட்பட்டவர்களுக்கு ? இதைப்பற்றி உணவுப் பிரச்னை யின் கீழ் பேசலாம் என்று தட்டிக் கழித்தாலும் அதிலே பேசுவதற்கு எனக்குச் சான்ஸ் கொடுக்க மாட்டார்கள், அதனால் இப்பொழுதே அதையும் பேசிவிடுகிறேன். கொள்முதல் என்று சொல்லும் நேரத்தில்



ஒரு உச்சவரம்பை எடுத்துக்கொள்ள வேண்டும். ஐந்து ஏக்கருக்குக் கீழே இருப்பவர்களுக்கு இருக்கக்கூடாது என்று கொண்டு வாருங்கள். பெரும் நிலச்சுவான்தார்கள் சில்லறை வியாபாரிகளிடம் பேசி மூட்டைக்கு 5 ரூபாய் என்று கொடுத்து, 50 மூட்டை, 100 மூட்டைக்கு லெவி ரசீது, ப்ரொக்யூர் மெண்ட் ரசீது வாங்கிக்கொள்கிறார்கள்.

<u>திரு. எஸ். வடிவேல்</u> : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். தலைவரவர்களே அன்றைக்கு நான் சொன்னேன், ஒரு மூட்டைக்கு 5 ரூபாய் வாங்கிக் கொண்டு எல்லோரும் நெல்லைப் பிடித்துக் கொடுக்கிறார்கள் என்று. அதை அமைச்சரவர்கள் மறுத்தே விட்டார்கள். ஆனால் இன்றைக்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்த அவர்களே சொல்கிறார்கள்......

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u> : அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

<u>திரு. கு. பெரியசாமி</u> : 100 வேலி, 50 வேலி என்று வைத்துக் கொண்டிருக்கிற நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சொத்துக்களை பினாமியாகப் பங்கீடு செய்துவிட்டு, உற்பத்தியாவதில் ஒரு மணி நெல்கூட அரசுக்கு வழங்காமல், பொய் சர்ட்டிபிகேட் வாங்கி, இதைக் குதிருக்குள் கொட்டி வைத்திருக்கிறார்கள், எப்பொழுது ? லெவி என்று கொள்முதல் செய்யக்கூடிய நேரத்தில். அதைப் பிடிக்க முடிய வில்லை. ஆனால், 6 மரக்கால் நெல்லைக் கூலியாகப் பெற்று அதை அடுக்குப் பானையில் வைத்திருந்தால் அதைக்கொண்டு போகிறார்கள். அது நியாயமா ?

எனவே, இம்மாதிரி விதிமுறைகள் ஒழிக்கப்பட வேண்டும். இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய் தால் விவசாயிகளுக்கு உற்பத்தி செய்ய எப்படி உற்சாகம் வரும் ? 10 கூலிகள் அறுத்து வீட்டிலே வைத்திருக்கின்ற நேரத்தில் அதை அப கரித்துக் கொண்டு போனால் என்ன செய்வது ? காரணம் கேட்டால் பற்றாக்குறை மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டுமென்ற சாக்கை வைத்து எடுக்கிறோம் போர்க்கால நடவடிக்கையைப் போல் நடவடிக்கை எடுத்து, பஞ்சத்தைப் போக்க அவர்களுக்கு உற்சாகம் தரும் வகையில் செய்ய வேண்டாமா ? இல்லையென்றால் எப்படி முன்னேறுவோம்? விவசாய சங்கம் எப்படி முன்னேறும் ? விவசாயத்தைப்பற்றி நன்கு தெரிந்த அமைச்சர்.........(மணியடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்ச நேரம் கொடுங்கள்.

அங்காடி வியாபாரத்தில் கூட நெல்லைப் பறிமுதல் செய்கிறார்கள். மல்லாக்கொட்டையை அவித்துக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக கால்படி, அரைப்படி நெல்லை வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அந்த நெல்லைக்கூட பறிமுதல் செய்யும் பாமுளவிற்குக் கொள்முதல் திட்டம் இருப்பது நியாயமா ?

இதைப்போலவே உரம் கிடைக்கவில்லை, பூச்சி மருந்து கிடைக்கவில்லை, பொறுக்கு விதை கிடைக்க வில்லை, மின்சாரம் கிடைக்கவில்லை, ஆயில் என்ஜின் டீசல் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டத்திலேயும், கீழத் தஞ்சையிலே இருப்பவர்கள் ரொம்பவும் துரதிருஷ்டமானவர்கள். அதற்கு என்று விவசாயக் கூலி நிர்ணயம். கீழத் தஞ்சைக்கு என்று தனியாக இருக்கிறது. மேலத் தஞ்சைக்கு அப்படிக் கிடையாது. 8 ரூபாய் கூலி கேட்கிறான் அங்கே, ஃபிக்ஸ் பண்ணுகிறது கவர்மெண்டிலே. நடவு ஆள் 5 ரூபாய் கூலி கேட்கிறார்கள்.

இவ்வளவும் கொடுத்து சாகுபடி செய்தால் நெல்லுக்குக் கிடைக்கக்கூடிய விலை 53 ரூபாய் 1 காசு. 48 படி கொண்ட மூட்டை ஒன்றுக்கு 53 ரூபாய் 1 காசு. ஆனால் அந்த பார்டரைத் தாண்டி புதுக்கோட்டைப் பக்கத்தில் சென்றால் 125 ரூபாய் ஒரு மூட்டைக்கு. தஞ்சை மாவட்டத்திலுள்ளவர்களுக்கு மட்டும் இந்த வயிற்றெரிச்சல். ஏன் அப்படியிருக்க வேண்டும். ? கொள்ளிடக்கரையைத் தாண்டி சிதம்பரம் பக்கம் சென்றால் மூட்டை 130 ரூபாய். பட்டுக்கோட்டை பார்டர் பக்கம் சென்றால் 150 ரூபாய் மூட்டைக்குக் கிடைக்கும். காரைக்கால் பக்கம் சென்றால் 160 ரூபாய் மூட்டை ஒன்றுக்கு. இப்படியிருந்தால் அந்த விவசாயி எப்படி நிம்மதியாக விவசாயம் செய்யமுடியும் ? அவன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள வேண்டாம்.

கரும்பு பற்றி ஏற்கனவே தனியாக அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். சக்தி ஷுகர்சில் டன்னுக்கு 125 ரூபாய் கொடுக்கிறார்கள்; ஆனால் திரு. ஆருரான் ஷுகர்சில் வெறும் 95 ரூபாய்தான். கீழத் தஞ்சையில் 95 ரூபாய்; 95 ரூபாய் என்று கூடச் சொல்லமுடியாது. திரு. ஆருரான் ஷுகர்சில் 92½ ரூபாய்தான் கொடுக்கிறார்கள்; 2½ ரூபாய் கூட்டித் தருவதாக சொல்லுகிறார்கள். இந்த ஏற்ற தாழ்வு ஏன் ?

இதிலே தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை, சென்ட்ரல் கவர்ன் மெண்டுக்குத்தான் அதிகாரம் என்று சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்க்கிறீர்கள். திரு. ஆருரான் ஷுகர் முதலாளியை ஆட்ட வேண்டிய அதிகாரம் உங்கள் கையில் இருக்கிறது. செஸ் இருக்கிறது; விற்பனை வரி இருக்கிறது. விற்பனை வரி டிபார்ட்மெண்ட் புகுந்து விளையாடலாம். மேலும் 10 ரூபாய் 15 ரூபாய் அந்தக் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுத்து அவர்களை முன்னுக்கு வரச் செய்யக் கூடாதா ? கரும்பு விவசாயிகள் தூது கோஷ்டியினர் விவசாய அமைச்சர் அவர்களைக் காண வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரை போய்ப் பார் என்று சொல்லிவிட்டார்கள். ஏன் முதல்வரைப்போய் பார்க்க வேண்டும் ? உங்கள் இலாகா இது. வேளாண்மைத் துறையின் கடமை அல்லவா இது ? முதல்வரைப் போய்ப் பார்க்கிறோம். அது வேறு பிரச்சினை........

<u>மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்</u>: கரும்பு விலையை இப்போது நிர்ணயம் செய்வது மத்திய அரசு. ஏன் முதலமைச்சரைப் போய்ப் பார்க்கச் சொன்னீர்கள் என்று கேட்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லு





கிறேன். இது மத்திய அரசிடம் பேசி முடிவு செய்ய வேண்டிய பிரச்சினை. அதை முடிவு செய்யவேண்டுமென்றால் முதலமைச்சரைக் கலந்து பேசி செய்ய வேண்டிய காரியம். ஆகவே, அவரிடம் சென்று பார்த்துச் சொல்லுங்கள் என்று கூறினேன்.

திரு. ஆரூரான் ஆலையைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு நாம பரிந்துரையாக அனுப்பினோம்; உத்தரவாகவும் அனுப்பினோம். அவர்கள் தமிழக அரசு சொல்வதைக் கேட்பதாக இல்லை. மத்திய அரசு சொல்கிற விலை குறைவாக இருப்பதால் மேற்கொண்டு கேட்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். ஆருரான் ஆலையைப்பற்றி மேற்கொண்டு என்ன செய்வது என்பது ஆலோசனையில் இருக்கிறது. நான் அப்போதைக்கப்போது பதில் சொல்லிவிட்டால் கடைசியில் பதில் சொல்லவில்லை என்ற குறை இருக்காது.

கடன் வசதி பற்றிச் சொன்னார்கள். கடனைத் தள்ளி வைத்தாகி விட்டது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சொல்லி அதற்குரிய ஆணை பிறப்பித்தாகிவிட்டது. அதற்கு மாறாக எந்தக் கூட்டுறவு வங்கி அதிகாரியோ, அரசாங்க அதிகாரியோ நடந்து கொண்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமானால் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் நீங்கள் நேரில் தெரிவிக்கலாம்.

<u>திரு. எஸ். வடிவேல்</u>: பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய அமைச்சர் அவர்கள் மாநில சர்க்கார் கரும்பு விலையை நிர்ணயம் செய்ய அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் உ.பி. சர்க்கார் கரும்புக்கு ரூபாய் 135-லிருந்து 175 வரை நிர்ணயித்திருக்கிறார்கள். ......

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u>: இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும் ? இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

<u>திரு. குழ. செல்லையா</u>: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள், கரும்புக்கு மத்திய அரசு விலையை நிர்ணயிக்கும் காரணத்தால் முதலமைச்சரைக் கலந்து கொள்ள வேண்டுமென்று சொன்னதாகச் சொன்னார்கள். அப்படியானால் மற்ற விவகாரங்களில் முதலமைச்சரைக் கலப்பதில்லையா ?

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. கு. காமாட்சி)</u>: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. திரு. பெரியசாமி தொடர்ந்து பேசுங்கள்.

<u>திரு. கே.டி.கே. தங்கமணி :</u> ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன். கரும்பு விலை சம்பந்தமாக குழப்பமான நிலைமைபற்றிச் சொன்னார்கள். பொதுவாக மத்திய அரசைப் பொறுத்தவரை

குறைந்தபட்ச விலைதான் நிர்ணயித்திருக்கிறார்கள். அநேகமாக எல்லா மாநிலங்களிலும் அதைவிட அதிகமாக நிர்ணயித்திருக்கிறார்கள். அண்டையில் இருக்கும் கேரளாவில் 130 ரூபாய்; மகாராஷ்டிரா, பீகார், உ.பி. மாநிலங்களில் அதற்கு மேலும் நிர்ணயித்திருக்கிறார்கள். இங்குகூட முதலமைச்சர் அவர்கள் பட்ஜட்டில் பேசுகிறபோது கரும்பு விலையைக் கூட்டி அதிகமாகப் போட்டிருக்கிறோம் என்று தான் சொன்னார்கள். ஆகவே, அந்த விலை மற்ற மாநிலங்களை ஒட்டி இருக்கக் கூடிய அளவுக்கு இருக்குமா என்பதுதான் உறுப்பினர் அவர்களின் விருப்பம் என்று நான் உணருகிறேன்.

திரு. கு. பெரியசாமி: மத்திய அரசாங்கத்தின் மேல் பொறுப்பைப் போட்டு நம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. நம்மிடம் வலுவான ஆயுதம் இருக்கிறது. சர்க்கரை ஆலைகளைத் தேசிய மயமாக்கும் திட்டத்தைக் கொண்டு வாருங்களேன். (ஆரவாரம்).

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நேற்று பாராளுமன்றத்தில் அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாக முதல் முறையாகப் பத்திரிகைகளில் படித்தோம். எந்தச் சர்க்கரை ஆலையைத் தேசிய மயமாக்க வேண்டுமென்றாலும் அந்த முடிவை எடுக்கும் பொறுப்பை மாநில அரசுக்கு விட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதனுடைய முழு விவரத்தையும் கேட்டிருக்கிறோம். உள்ளபடியே மாநில அரசுக்கு முழு அதிகாரமும் கிடைத்துவிடுவதாக இருக்குமானால் நிச்சயமாக நம்முடைய அரசு—நீண்ட நாட்களாக அதைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கும் நம்முடைய அரசு—நம்முடைய கோரிக்கை வெற்றி பெற்றதாகக் கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. கு. பெரியசாமி: என்னைப்போன்ற சிறு விவசாயிகள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக கீழ் தஞ்சை மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதை விட்டால் வேறு வழியில்லை. அங்கு இண்டஸ்ட்ரீஸ் கிடையாது........................(மணி அடிக்கப்பட்டு திரு. வகாப் அவர்கள் பேச அழைக்கப்பட்டார்கள்.)

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தைப் வரவேற்றுச் சில கருத்துக்களைச் சொல்லுகிறேன்.

முதலாவதாக, இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணமே போதாது என்பது என்னுடைய கருத்து. வளர்ந்து வருகிற துறை வேளாணமைத் துறை. இந்த நாட்டில் இருக்கும் 90 சத விகிதம் மக்கள் ஈடுபட்டிருக்கும் துறை வேளாண்மைத் துறை. விவசாயிகள் படும் துயரைத் துடைக்க வேண்டுமென்றால் அதிகமான நிதியை ஒதுக்கியிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிறேன்.





தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்ட பசுமைப் புரட்சி வெற்றி அடைந்து வருகிற நேரத்தில் வேதனை தரத் தக்க முறையிலே இன்று வறட்சி வந்துவிட்டது. இருந்தாலுங் கூட விவசாயத் துறையிலே தீவிரமான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளதை இங்கே என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதே நேரத்தில் விவசாயத்தைப்பற்றி, விவசாயிகளைப்பற்றிப் புகழாதவர்கள் இல்லை.

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று சொன்னார்கள்.

'பார் எல்லாம் ஏர் முனையிலே' என்று புகழ் பாடினார்கள். ஆனால் உண்மையில் விவசாயிகள் நிலைமை இன்றைய தினம் எதற்கு வேண்டுமானாலும் "டை கட்டி வாழ்கின்ற அதிகாரிகளின் பின்னால் கை கட்டிச் செல்லுகின்ற நிலைமை" தான் இருக்கிறது.

உரம் வேண்டுமென்றால் அதிகாரிகளுடைய ஆதரவும், தயவும் தேவை. விதை வேண்டுமென்றால் அவர்களிடந்தான் செல்ல வேண்டும்; பூச்சி கொல்லி மருந்து வேண்டுமென்றால் அவர்கள் பின்னால்தான் செல்ல வேண்டும்.

உரம் என்று சொல்லுகிறபோது இன்று ஒரு முக்கியமான பிரச்சினை இருக்கிறது. அதன் விலையைக் கட்டுப்படுத்த அதிகாரம் நமக்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். அதிகாரம் இல்லை என்றாலும் விநியோகிக்கும் முறையிலே சீர்கேடுகளைக் குறைத்தாலே விவசாயிகளுக்கு எவ்வளவோ நன்மையாக இருக்கும். இதைப் பல முறை இங்கே சொல்லியிருக்கிறோம். இன்றைக்குக்கூட உரம் வெளி மார்க்கெட்டில் இருப்பு இருக்கிறது. கூடுதலான விலைக்குத்தான் விற்கிறார்கள், என்ன என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் சொல்லுவதுபோல் ஸ்டாக் இருக்கிறது. வெளியே பதுக்கல் இருக்கிறது. இப்படி உரத்தைப் பதுக்கி வைக்கக்கூடிய நிலையைப் போக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பொறுக்கு விதைகள் கொடுப்பதில் என்னுடைய தொகுதியில் நல்ல பண்ணை சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. இன்றையதினம் வட ஆற்காடு மாவட்டத்தில் பொறுக்கு விதைகளை வாங்குவதில் நான்கு பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். திருவண்ணாமலைப் பகுதியில்தான் அதிகமாகப் பொறுக்கு விதைகள் வாங்கப்படுகின்றன. செய்யாறு டிவிஷன், வேலூர் டிவிஷனிலிருந்து பொறுக்கு விதைகள் வாங்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் வேறுபல காரணங்கள் சொல்லப்படுகின்றன. நான்

உள்நோக்கம் கற்பித்துச் சொல்லவில்லை. எல்லா டிவிஷன்களிலும் விதை வாங்கும் தன்மையில் ஏற்பாடு செய்ய வேண்டும். நான்கு டி. எ..ஓ-க்கள் வைத்திருக்கிறார்கள். "சீட்ஸ்"க்கு என்று ஒரு டி.எ.ஓ. இருக்கிறார். திருவண்ணாமலை, போளூர் பகுதியில் வாங்குகிறார், செய்யாறு பகுதியில், வந்தவாசிப் பகுதியில், ராணிப்பேட்டைப் பகுதியில் வாங்குவதில்லை. இங்கெல்லாம் கிலோ ரூ. 1·50 இருக்க, செய்யாறில் கிலோ ரூ. 1·50 இருக்க, திருவண்ணாமலையில் கிலோ ரூ. 2·20 கொடுத்து வாங்கப்படுகிறது. ஆதாரத்தோடுதான் இதைச் சொல்லுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை.)

இந்த விதத்தில் போராட்டம். இதைச் சிந்திக்க வேண்டும். விவசாயிகள் மிகவும் வேதனைப்படக்கூடிய நிலை.

நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 150 கேட்டால் வசதியில்லை, உண்பவர்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். விதை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 250 என்றால் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? விவசாயிகள் வாங்கி உபயோகிப்பது எப்படி? நான் சொல்லுகிறேன். தீவிரமான ஒரு விசாரணையை வையுங்கள். ஒவ்வொரு பி.டி.ஓ-வுக்கும் சுமார் 7 டன் விதை கொடுக்கப்படுகிறது. அவற்றில் 40 சதவிகிதம் நல்ல விதையாக இல்லையென்று நாங்கள் போட்டு அனுபவத்தில் பார்த்தோம். செய்யாறில், வந்தவாசியில், "ஜெர்மினேஷன்" சரியாக வருவதில்லை. இதை அதிகாரிகளே வருத்தத்துடன் ஒப்புக் கொள்கிறார்கள். விவசாயிகளுக்கு விதை தான் ஜீவநாடி. இதை உடனடியாகப் பரிசீலனை செய்து இதில் விவசாயிகளுக்கு எந்தவிதமான குறைபாடுகளும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக "பெஸ்டிசைட்ஸ்". பூச்சிக்கொல்லி மருந்துக்கு விலை அதிகம். அதற்கு மானியம் கொடுத்தார்கள். அது நிறுத்தப் பட்டதன் காரணமாக இன்றையதினம் விவசாயிகள் 100, 120 சதவிகிதம் அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய புள்ளி விவரங்கள் வைத்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். பூச்சிக் கொல்லி மருந்து ஒரு டின்னுக்கு ரூ. 5·30 என்று இருந்தது ரூ. 12·10-க்கு விற்கிறது. ஆகவே, இவைகளும், யூரியா போன்றதும் மற்ற கூலி கணக்குகளைப் போட்டுதான் நெல் கொள்முதல் விலையைக் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டோம்.

விவசாயச் செலவுகள் சராசரி 150 சதவிகிதம் அதிகரித்திருக்கின்றன. ஆகவே குவின்டாலுக்கு ரூ. 150 கொடுத்தால்தான் எங்களுக்குக் கட்டுபடியாகும் என்று கேட்டோம். வாங்கி உண்பவர்களின் பிரச்னை என்ன ஆவது என்று நீங்கள் சொல்லுவீர்கள். விவசாயிகள் வாங்கி உபயோகிக்கும் எல்லாப் பொருள்களும் விலை ஏறி இருக்கின்ற நேரத்தில் நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டாமா? வாங்கி உண்பவர்களுக்கு அரசு உதவி



செய்ய வேண்டுமென்று நினைத்தால், அவர்களுக்கு படி அரிசித் திட்டம் நிறைவேற்றியதைப் போல் சிறிய அளவில் மானியமாகக் கொடுக்கலாம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உறுப்பினர் கருத்தைத் தெரிந்து கொள்வதற்கு மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன். மானியம் கொடுங்கள் என்பதை விடுத்து நெல் குவிண்டாலுக்கு ரூ. 150 கொடுத்து வாங்கி, அரிசியாக மக்களுக்கு என்ன விலையில் போட்டால் அது சரியாக இருக்குமென்று உறுப்பினர் கருத்தைத் தெரிவித்தால் நலமாக இருக்கும். "சப்சிடி" என்பது வேறு. இனமாகச் செய்துவிடுங்கள் என்று சொன்னால் அது பொறுப்புள்ள காரியமாக இருக்காது. நெல்லை குவிண்டாலுக்கு 150 ரூபாய் கொடுத்து வாங்கினால் அரிசியாக கிலோவிற்கு என்ன விலைக்குப் போடலாம் என்று சொல்லுங்கள். ஒரு கிலோ நெல் ரூ. $1\frac{1}{2}$ ஆகிறது என்றால் ஒரு கிலோ அரிசியை எவ்வளவுக்குப் போட்டால் சரியாக இருக்கும் என்று உங்களுடைய கணக்கைப் பார்த்துச் சொல்லுங்கள். அது உபயோகமாக இருக்கும்.

திரு. கே. எ. வகாப்: புள்ளி விவரம் எனக்கு அதிகமாகத் தெரியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். தெரிந்த அளவில் சொல்லுகிறேன். ஒரு தடவை பெரியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொய் இரண்டு விதமான பொய் என்பார்கள். முதலில் பொய் என்பது பொய், அதற்கு மறு பெயர் புள்ளி விவரம் என்று சொல்லுவார்கள். ஒரு கிலோ அரிசி இப்போது ரூ. 2·90 விற்கிறது என்றால் அது ஒரு கிலோவுக்கு ரூ. 3·20க்குத் தான் வரும். நிர்வாகச் செலவிலே கொஞ்சம் சிக்கனத்தைக் கடைபிடித்தால் நிச்சயமாக விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும். வாங்கி உண்போருக்கும் சிறிதளவு விலையேற்றம் தடுக்கப்படும் என்ற முறையில் சொல்கிறேன்.

கொள்முதலில் எவ்வளவு சிரமங்கள் ஏற்படுகின்றன? நெல் வைத்திருப்பவர்கள்கூட தங்கள் செலவுகளை ஈடு கட்டமுடியாத காரணத்தால்தான் கொள்முதலுக்கு தர மறுக்கிறார்கள். வெளி மார்க்கட்டில் விற்கிறார்கள். ஆகவே, விவசாயிகளைக் குற்றம் சொல்லிப் பயனில்லை.

நெல்லுக்குப் போல கரும்புக்கும் விலையை ஏற்றிக் கொடுங்கள். விறகு ஒரு டன் ரூ. 150-க்கு விற்கிறது. ஆனால் கரும்புக்கு ரூ. 110 தான் கொடுக்கப்படுகிறது. சில சர்க்கரை ஆலைகளில், படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் டன் ஒன்றுக்கு ரூ.137 கொடுக்கிறார்கள். தமிழகத்தில் அதிகமாகக் கொடுக்கக்கூடிய ஆலை என்று பெருமைப்படுகின்றோம். மராட்டிய மாநிலத்தில் டன் ஒன்றுக்கு ரூ. 175 கொடுக்கிறார்கள். அத்துடன் வெட்டுக்கூலி, டிரான்ஸ்போர்ட் எல்லாம் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான திட்டத்தை அமைச்சர் அவர்கள் தீட்ட வேண்டும். படாளத்திலிரிக்கவரி 10 சதவிகிதம், மராட்டியத்தில் ரிக்கவரி $11\frac{1}{2}$ சதவிகிதம் அதனால் ரூ. 20 அதிகமாகக் கொடுக்கலாம். அதாவது ரூ. 130, 140 கொடுக்கலாம். ஆனால் அவர்கள் கொடுப்பது ரூ. 175. இதை நான் நேரடியாகப் பார்த்தேன் என்ற காரணத்தால் குறிப்பிடுகிறேன்.

நீங்கள் இந்த அளவில் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். தற்போது நிலை கரும்பு விலை குறைவாக இருப்பதால் விவசாயிகள் கமர்ஷியல் பயிர்களுக்கு அதாவது மணிலா போன்ற பயிர்களுக்குச் சென்று விடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டுமென்றால் கரும்புக்கும் நெல்லுக்கும் விலையை ஏற்றிக் கொடுக்க வேண்டும். இதைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய வேண்டும். மத்திய சர்க்கார் அதற்குத் தடையாக இருந்தாலும் மாநில அரசாங்கத்திற்கு வேறு சில சட்டங்கள் தடையாக இருந்தாலும் நிதர்சனமாகக் காரியம் செய்தால் இன்றைக்குதத் மிழகத்தில் நமக்கு இருக்கக்கூடிய பற்றாக்குறையைப் போக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை நல்லபடியாக செய்ய முடியும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பூச்சிக்கொல்லி மருந்துகளின் விநியோகப் பொறுப்பை விவசாயக் கிடங்குகளிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இங்கும் பல சீர்கேடுகள் நடைபெறுகின்றன. பெருவாரியாகச் சொல்லுகிறேன். பூச்சிக் கொல்லி மருந்தில் கலப்படம் இருக்கிறது. இதை அதிகாரிகள் கண்டு பிடித்து சும்மா விட்டு விட்ட சூழ்நிலையும் உண்டு. விவசாயக் கிடங்குகளில் இருப்பவர்கள் 10, 15 ஆண்டுகள் அங்கேயே இருந்துகொண்டு விவசாயிகளுக்கு "பல்சஸ்"-க்கு "சப்சிடி" கொடுக்கிறார்கள், ஆனால், சப்சிடி விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை—ரசீது போடுகிறார்கள். ஆனால் கொடுப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். 12 நிமிஷம் ஆகிவிட்டது.

திரு. கே. எ. வகாப்: அப்படிப்பட்ட நிலைமைகளைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம் பிரச்னைகள் தீருவதற்கு விலையேற்றத்தைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். கரும்புக்கும் நெல்லுக்கும் கூடுதல் விலை கொடுக்க என்ன வழிவகைகள் இருக்கின்றன, புள்ளி விவரங்கள் என்ன இருக்கின்றன என்பதை ஆராய்ந்து தீவிரமாக அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

*திரு. மு. சத்தியமூர்த்தி: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையில் எங்களது கட்சி ஸ்தாபன காங்கிரஸ் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நாம் இந்த மாமன்றத்திலே பலவிதமான காரணங்களுக்காக நேரத்தை எவ்வளவோ வீணைச் செலவிட்டுக்கொண்டு வருகிறோம். ஆனால் இது முக்கியமான மானியக் கோரிக்கை. தலைவர் அவர்களே, இதில் உங்கள் கவனத்தைச் செலுத்தி எனக்கு அதிகமான நேரத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் இந்த நாட்டிலே முக்கியமான பிரச்னை என்னவென்றால் விவசாயத்தை நம்பித்தான் இந்த நாடு, நாட்டு மக்கள், இந்த அரசு கூட விவசாயத்தை அடிப்படையாகக்



கொண்டுதான் ஆண்டுகொண்டு இருக்கிறது. இந்த அரசு, இந்த நாட்டிலே உள்ள விவசாய மக்களுக்கு நாம் முதற்கடமையாகச் செய்யக்கூடியதை காலாகாலத்தில் நல்ல முறையில் செய்து கொண்டு வருகிறதா என்றால் அதில் பல சீர்திருத்தங்களை நாம் சொல்ல வேண்டியிருக்கிறது.

(நண்பகல் 12·00)

முதற் கடமையாக நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயம், கூட்டுறவு, மின்சாரம், பாசனம், கால்நடை ஆகிய எல்லா இலாகாக்களையும் சேர்த்து ஒரு அமைச்சரின் கீழ் கொண்டுவர வேண்டும் இது எல்லோருடைய ஆசை.

நாம் எத்தனையோ சீர்திருத்தங்களைச் செய்து கொண்டு இருக்கிறோம். உழவர்களுக்கு, விவசாயிகளுக்கு உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து இவைகளைக் காலாகாலத்தில் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறோம். அப்படிச் செய்தால்தான் மற்றச் சீர்திருத்தங்களைப் பற்றி நாம் பேச முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, தரமான பூச்சி கொல்லி மருந்து, விதை, உரம் ஆகியவற்றை அரசாங்கம் காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்பது என்னுடைய அவா. இப்படிக் காலதாமதம் ஆவதையும் தடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நல்ல தரமான விதைகள் கிடைக்கிறதா என்றால் அதுவும் கிடைப்பது இல்லை. நம்முடைய விவசாய இலாகா மூலமாகப் பஞ்சாயத்து யூனியன் டெப்போக்களில் கொடுக்கப்படும் விதைகள் தரமாக இருக்கிறதா என்றால் அவை தரமானதாக இல்லை. முளைக்கும் தரமுடைய விதைகளும் தரப்படுவது இல்லை. இவற்றைச் சீர்திருத்த வேண்டும்.

உண்மையிலேயே எங்கள் மாவட்டத்தில் மக்காச் சோளம் கொடுத்தார்கள். அந்த மக்காச்சோள விதையை வாங்கிக்கொண்டு போய் அந்த விவசாயிகள் போட்டு நிலத்தை உழுது நல்ல உரங்களைப் போட்டு—விவசாய இலாகா சொல்கிற முறைப்படிப் பயிர் செய்த பின்பும்—அது நல்ல முறையில் முளைத்துப் பயன் தந்ததா என்றால் இல்லை. அங்கேயிருக்கிற விவசாய அதிகாரிகளைக் கேட்கிற நேரத்தில் அவர்கள் சொல்கிறார்கள், ஏதோ தவறு நடந்து விட்டது, இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் பிறகு அதை ஒழுங்காகச் சீர்திருத்தி இருக்கிறார்களா என்றால் கிடையாது. அதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பலவிதமான விதைகளை நாம் கொடுக்கிறோம். மக்காச்சோள விதை, அரிசிச் சோள விதை, காய்கறி விதைகள் கொடுக்கிறோம். ஆனால் அவைகள் காலாகாலத்தில் கிடைப்பது இல்லை என்ற காரணத்தால் அங்கேயுள்ள விவசாயிகள் அதிக விலை கொடுத்து வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்குகிறார்கள். அவர்கள் கடன்பெற்று அந்த விதைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. வெளி மார்க்கெட்டில் வாங்கும் விதை தரமானதாகவும் இருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நண்பருக்கு விவசாயம் நன்ருகத் தெரியும் என்று நினைக்கிறேன். மக்காச் சோளத்தில் C.H.S. 5 என்ற சோளம் இருக்கிறது. அதைப் போட்டுப் பார்த்தீர்களா? இல்லையென்ருல்; போட்டுப் பாருங்கள். அதற்கு நல்ல வருமானம் வரும். ஒரு எக்கருக்கு 12 குவிண்டாலுக்கு மேல் விளையும்.

திரு. மு. சத்தியமூர்த்தி : அமைச்சர் அவர்களிடத்தில் நான் என்ன சொல்கிறேன் என்ருல் அங்கே தரமான விதைகள் கொடுப்பது இல்லை. அதுவும் காலாகாலத்தில் கொடுப்பது இல்லை. அப்படி விதைகள் கொடுக்காத காரணத்தால் அந்த விவசாயிகள் வெளி மார்க்கெட்டில் இருந்து அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். உங்களுடைய விதை நல்ல தரமான விதையாக இருந்தால் அவை நல்ல பலன் கொடுக்கும். ஆட்சேபணையில்லை. நான் என்ன சொல்கிறேன் என்ருல்—சி.எச்.எஸ். 5 அதிகமான மகசூல் கொடுக்கும் என்று சொல்கிருர்கள்—அதைப்பற்றி நான் சொல்லவில்லை. தரமான விதைகள் கிடைக்கவில்லை என்றுதான் சொல்கிறேன். விதைகள் அங்கே டெப்போக்களில் தங்கி விடுவதால் புழுத்துப்போய்விடுகின்றன. அதை விவசாயிகள் தலையில் கட்டி விடுகிருர்கள். அதனுல் ஏழை விவசாயிகள் கஷ்டப்படுகிருர்கள் என்றுதான் சொல்கிறேன.

நாம் எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைப்பற்றிப் பேசுகிருேம். ஆனுல் மாநில அரசு விவசாயிகளிடத்தில் நல்ல விதமாக பச்சாதாபத்தோடு நடந்துகொள்கிருர்களா என்ருல் இல்லை. இந்த அரசு ஒரு மண்டிக்கடை வைத்து நடத்துவதுபோல் நடந்துகொள்கிறது. போன வருஷம் ரூ. 60-க்கு நெல்லைக் கொள்முதல் செய்து இருக்கிருர்கள். அதை விவசாயிகளுக்கு இந்த ஆண்டு என்ன விலைக்கு விற்று இருக்கிருர்கள் என்ருல் ரூ. 120க்கு விற்று இருக்கிருர்கள். விவசாயிகளுக்கு விதைகள் எல்லாம் சப்சிடி விலையில் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு தரமான விதைகள் கொடுக்கவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் இந்த அரசு 60 ரூபாய்க்கு விதைகளை வாங்கி ரூ. 120-க்கு விற்கிறது என்ருல் அது சமிஷன் மண்டி நடத்துகிறதா அல்லது விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகளைத் தருவதற்கு முனைந்திருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக கெட்டுப்போகிற விதைகளுக்கான பணத்தை அங்கே இருக்கும் டெப்போக்களில் இருப்பவர்களுடைய சம்பளத்தில் பிடித்துக் கொள்கிருர்கள் என்ற காரணத்தால் ஏழை விவசாயிகள் தலையில் வைத்து அதைக் கட்டி விடுகிருர்கள். அதையெல்லாம் கவனித்து தரமான விதைகளைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த வகையில் அந்த இலாகாவைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) தலைவரவர்களே, இது முக்கியமான பிரச்னை........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முக்கியமான பிரச்னை என்று பார்த்தால் 3 மணிக்குத்தான் போய் சாப்பிடவேண்டி இருக்கும்.



திரு. மு. சத்தியமூர்த்தி : உரத்தைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன. உரம் காலாகாலத்தில் கிடைக்கிறதா என்ருல் காலாகாலத்தில் கிடைப்பது இல்லை. விவசாயிகளுக்கு நல்ல விதத்தில் அனுசரணையாக இருக்கும் வகையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பசுந்தழை உர விதைகள் பஞ்சாயத்து யூனியன் மூலமாக முன்பு கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். இப்போது அதைத் தனியாக விற்றுக்கொண்டு இருக்கிருர்கள். அதைப் பஞ்சாயத்து யூனியன் டெப்போ மூலம் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளில் கம்போஸ்ட் உரம் தயாரிக்கிருர்கள். உரம் கிடைக்காத நேரங்களில் நகராட்சிப் பகுதிகளில் இருந்துதான் உரங்களை நாங்கள் எடுத்துச் செல்கிருேம். ஆகவே நல்ல கம்போஸ்டு உரங்களைத் தயாரிக்கும் நகராட்சிகளுக்கு ஊக்க போனஸ் கொடுத்தால் நல்ல முறையில் பயன் அளிக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

புண்ணக்குப் போட்டாலும் தரமான விவசாயம் ஏற்படும். ஆகவே, புண்ணக்குப் போடும் விவசாயிகளுக்கும் ஊக்க போனஸ் கொடுத்தால் நன்ருக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பூச்சிக் கொல்லி மருந்தைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். நல்ல தரமான பூச்சி மருந்து கிடைப்பது இல்லை. நல்ல தரமான பூச்சிக்கொல்லி மருந்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும். நாம் எத்தனையோ சீர்திருத்தங்களைச் செய்து வருகிருேம். இந்த பூச்சி மருந்து விஷயத்திலும் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவு பூச்சிக்கு "பாரத்தியான்" அடித்தால் பூச்சி போய்விடும் என்று சொல்கிருர்கள். ஆனுல் அது அடித்தாலும் மாவு பூச்சி போவது கிடையாது. அதனுல் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிருர்கள். அதைப் போக்குவதற்கு விவசாய இலாகா அமைச்சர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

களைக்கொல்லி மருந்து கிடைக்கிறது. ஆனுல் விலை அதிகமாக இருக்கிறது. அதை மலிவான விலையில் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயக் கருவிகள் எங்கள் பகுதியில் கிடைப்பது இல்லை. நாங்கள் வானத்தை நம்பி விவசாயம் செய்பவர்கள். எங்களுக்கு நல்ல வகையில் உழவு இயந்திரங்கள் கொடுத்தால் விவசாயம் செய்வதற்கு நன்ருக இருக்கும். அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குடிமியாமலையில் விவசாயப் பண்ணை அமைத்திருக்கிருேம். அங்கே பாசனத்திற்கு நீர்ப் பற்ருக்குறை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் வெள்ளாறு இருக்கிறது. அங்கே கிணறு தோண்டி தண்ணீர் கொண்டுவந்தால் விவசாயம் நல்லபடியாக இருக்கும் என்று சொல்கிறேன். அடுத்தபடியாக விவசாயக் கல்லூரி அந்தப் பகுதியில் அமைக்கப்பட வேண்டும். மற்றபடி விலைவாசியெல்லாம் அதிகமாகிக் கொண்

டிருக்கிறது. இந்த விவசாய மானியக் கோரிக்கையில் பேசும்போது கட்சிப் பாகுபாடின்றி நல்லபடியாக அமல்டடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். என்னிடத்தில் புள்ளி விபரம் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகும் என்பதற்கெல்லாம் புள்ளி விபரம் இருக்கிறது. அதைச் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தால்—அடுத்தபடியாக சிறு பாசனத் திட்டமெல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்தில் காலா காலத்தில் ஒதுக்குவதில்லை. ஆகவே, அதைச் காலாகாலத்தில் செய்யவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவரவர்களே, விவசாய மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்தைக் கூறவிரும்புகிறேன். பொதுவாக, இந்த மன்றத்தில் பேசியவர்கள் விவசாயிகளுக்கு இந்த அரசு சரியான முறையில் பாதுகாப்பு அளிக்கவில்லை, அரசாங்கத்தின் சார்பாகக் கொடுக்கப்படுகிற உபகரணங்கள் விவசாயிகளுக்குச் சேரவில்லை என்றெல்லாம் குறை சொன்னார்கள். ஆனாலும் அதிகாரிகள் நடைமுறைப் படுத்துகிறபோது இருக்கிற சிக்கல்களை ஓரளவு எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருந்தாலும்கூட அரசின் சிறப்பியல்புகளைப் பாராட்டாமல் நாம் இருக்க முடியாது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பசுமைப் புரட்சி என்று அதிக விளைச்சல் தரக்கூடிய நெல்லைக் கண்டுபிடித்து மக்களுக்குப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். ஆனால் மாற்றுக் கருத்துடையவர்கள் கருணை, ஐ.ஆர். 8 என்றெல்லாம் எடுத்துச் சொல்கிற போது அந்த நெல்லையெல்லாம் பயிரிடக்கூடாது, பயிரிட்டால் வியாதி வரும் என்றெல்லாம் தவறான பிரசாரம் செய்து வந்தார்கள். இருந்தாலும் விவசாயிகள் அதிக விளைச்சல் தருகிற நெல்லைப் பயிரிடுகிற காரணத்தால்தான் இவ்வளவு வறட்சி இருக்கிற நேரத்திலும் ஈடு கொடுக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. அதே நேரத்தில் விவசாயிகள் அதிகாரிகளை நம்பிவிட்டார்கள். அதாவது அரசாங்கம் எந்த ரக விதைகளை விதைக்க வேண்டுமென்று சொல்கிறதோ அந்த விதைகளைத்தான் விதைப்பது என்ற முடிவிற்கு விவசாயிகள் வந்திருக்கிறார்கள் என்பதை என்னால் ஆணித்தரமாகக் கூறமுடியும்.

ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகள் விவசாயிகளிடம் விதை நெல்லைக் கொள்முதல் செய்கிற காலத்தில் தவறு ஏற்படுகிறது. அந்த நேரத்தில் அரசாங்கத்தின்மீது குறை சொல்லக்கூடாது. அதிகாரிகள் விதை நெல்லைக் கொள்முதல் செய்கிற காலத்தில் மணல் பாங்கான பூமியில் விளைந்ததுதானா என்பதையெல்லாம் அறிந்து எந்தெந்த நெல்லை வாங்குவது, எந்த விதை தரமாக இருக்கும் என்று பார்த்து வாங்க வேண்டுமென்று இதை நான் ஆலோசனையாகக் கூறிக் கொள்கிறேன். நான் அப்படிச் சொல்வதற்குக் காரணம் பல பகுதிகளில் குறை இருக்கிறது.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் உரமே கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அப்போது அமைச்சரவர்கள் சற்றுக் கவலையோடு சொன்னார்கள்—எங்கே கிடைக்கவில்லை என்று சொல்லுங்கள் என்று கேட்டார்கள், அப்போது மண்டகளத்தூர் கூட்டுறவு சொசைட்டியில் உரமே கிடைக்க



வில்லை என்று சொன்னார்கள். அந்தச் சீட்டை நான் அமைச்சரவர்களிடத்தில் கொடுத்தேன். உடனே இரண்டு லாரிகளில் உரம் கொண்டு சென்று அங்கே கொடுத்தார்கள். மூன்றே நாட்களில்.அப்படி உரம் கொடுத்தபோது என் தொகுதி மக்கள் குறை சொல்வார்களா ?

அடுத்தபடியாக, விதைப் பண்ணையைப் பற்றிச் சுற்றிச் சுற்றிச் அத்தனை பேரும் பேசினார்கள். என் தொகுதியில் கஸ்தம்பாடியில் விவசாயப் பண்ணைக்குக் கிட்டத்தட்ட 600 ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது, அதைப் பண்ணைக்கு எடுக்க வேண்டுமென்று 3, 4 ஆண்டுகளாகப் பேரவையில் கேட்டு வருகிறோம், அந்த நிலம் தகுதியான நிலம், ஆனால் இன்று வரையிலும் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. நான் சென்ற வாரம் கூட அதற்காக அதிகாரிகளைச்சந்தித்துக் கேட்டேன். இப்போது அரசு ஸ்டேட் சீட் கார்ப்பொரேஷன் அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான குறிப்பு இருக்கிறதே தவிர விபரம் இல்லை என்று அதிகாரிகள் சொன்னார்கள். இதற்காக மூன்று நாள் சென்று பார்த்தும்கூட அதனுடைய வரலாறு என்னவென்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, இந்த விஷயத்தில் அதிகாரிகளும் ஆர்வத்தோடு இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் தொகுதியில் (Seed processing unit) " சீட் புராசஸிங் யூனிட் " என்று வேலை நடந்து வருவதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே வேலை கால் பாகம் நடந்து அத்தோடு நின்றுவிட்டது. காரணம், அந்தக் கன்ட்ராக்டர் – ஒப்பந்தக்காரர்-இறந்துவிட்டார் என்று சொல்கிறார்கள். அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் வேறு ஒப்பந்தக்காரரை நியமிக்கலாம். இது எங்களுக்குக் குறையாக இருக்கிறது.நாங்கள் எத்தனை முறை இதுபற்றி அதிகாரிகளிடம் சென்று கேட்பது ? அரசு விரும்புவதை அதிகாரிகள் செய்யவேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்வதில்லை.

விவசாயிகள் கால் பாகம் பசுந்தாள் உரத்தை நம்பினாலும் அரசின் பிரசாரத்தால் நவீன உரங்களைப் பயன்படுத்துவது அதிகரித்துவிட்டது. இப்போது உரங்கள் கலப்படமாக வருகின்றன. போலி உரங்கள் வருகின்றன. அப்படிப்பட்ட கலப்படம் செய்யும் சமூக விரோதிகளைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்க வேண்டும். இதற்காக கோயம்புத்தூரிலும், மதுரையிலும் இரண்டு யூனிட்டுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். போளூர் தொகுதியில் 90 சத விகிதம் விவசாயம் நன்றாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

விவசாயிகளுக்கு ஐ.ஆர். 8 நெல் இப்போது வருகிறது. அதைக் களத்துமேட்டில் அடித்தால் உதிருவது கிடையாது. இதற்கு அதிக ஆள் தேவைப்படுகிறது. போளூர் தொகுதியில் தனியார்கள் மருந்தடிக்கும் கருவி வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்தக் கருவிகளை சைக்கிள் ஷாப் போன்றவற்றில் வைத்துக்கொண்டு அதனால் ஏராளமாக லாபம் சம்பாதிக்கிறார்கள். இதை அரசாங்கச் செலவில் செய்து ஏழைகளுக்குக் கொடுத்தால் அது வசதியாக இருக்கும். இதற்கு டி.எ.ஓ. போன்ற அதிகாரிகள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அப்படி

எடுத்துக்கொண்டால் விவசாயிகள் இந்த அரசை இப்போது பாராட்டுவதைவிட நிச்சயம் அதிகமாகப் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மற்றொரு கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன்.. விவசாய மேஸ்திரிகள் தங்களுடைய உயிருக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் விவசாயிகளுக்குப்பூச்சி மருந்துகள் அடிப்பதற்கு நேரடியாகவே கற்றுக்கொடுக்கிறார்கள். அப்படி பாதுகாப்பு இல்லாமல் கற்றுக்கொடுத்ததால் ஒரு விவசாய மேஸ்திரி இறந்துவிட்டார். அவருக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்துக்கு மனுபோட்டார்கள். அரசாங்கம் அதைப் பரிவுடன் கவனிப்பதாகச் சொன்னது. வையாபுரி என்பது இறந்துபோன அந்த விவசாய மேஸ்திரியின் பெயர். மனு போட்டு 3, 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1973–ம் ஆண்டு எப்ரல் மாதம் 17–ந் தேதியில் அரசாங்கம் தன்னுடைய பரிசீலனையில் அந்த மனு இருப்பதாகச் சொன்னது. இறந்துபோனவருடைய தகப்பனருக்கு உதவித் தொகை கொடுக்கிறோம் என்று 1974 ஆம் ஆண்டு உத்தரவு போடப்பட்டுவிட்டது. ஆனால் இன்றுவரையில் அந்த விவசாய மேஸ்திரியின் தகப்பனருக்கு பென்ஷன் தொகை கொடுக்கவில்லை. அவர் சாகும் தருவாயிலிருக்கிறார். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டது தள்ளாத வயதில் இருக்கிறார். இன்றோ நாளையோ சாவு வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, உடனடியாக அவருக்கு இந்தத் தொகையை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சிறிய கோரிக்கையை அரசாங்கமும் அரசாங்க அதிகாரிகளும் உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு விஷயம். விவசாயிகளுக்கு களர் நிலம் ஏராளமாக இருக்கிறது. முன்பெல்லாம் இந்த களர் நிலத்தை மாற்றுவதற்கு ஜிப்சம் என்ற உரம் கொடுத்தார்கள். அதைப் போட்டால் களர் மாறிப் பயிர் செய்வதற்கேற்ற நல்ல நிலமாக மாறிவிடுகிறது. இப்போது அந்த உரம் கொடுக்கவில்லை. நிறுத்திவிட்டார்களா அல்லது கிடைக்கவில்லையா என்று தெரியவில்லை. மீண்டும் அந்த உரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த அரசு விவசாயிகளுக்குச் செய்ய எண்ணுகின்ற எண்ணங்களை ஈடேற்றுகின்ற வகையில் நடந்துகொண்டால் மக்களும், விவசாயிகளும் அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்த வேளாண்மைத்துறை மானியத்தின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, 1969–ம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அன்றைக்கு விவசாயத் துறை அமைச்சராக இருந்த காலஞ்சென்ற மாண்புமிகு கோவிந்தசாமி அவர்கள், அண்ணா காலத்தில் இந்த உணவுக் கொள்கையில் மூன்று மானியங்களைத் தந்துள்ளார்கள். போனஸுக்காக 3,17,70,000



ரூபாயை அன்றைக்கு ஒதுக்கினார்கள். அதுமட்டுமல்ல, படி அரிசித் திட்டத்திற்கும் மானியம் வழங்கப்பட்டது. அதோடு எடுத்துச்செல்கின்ற தானியங்களுக்குப் போக்குவரத்துச் செலவையும் அரசே ஏற்றுக்கொண்டது. திரு கோவிந்தசாமி அவர்கள் ஆற்றிய உரையை எடுத்துப் பார்த்தால் இந்த விபரம் தெரியும். வாங்குகிறவர்கள் தலையில் அதிகப்படியான செலவு விழாமல் இருக்க, வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மானியங்களாகும் இந்த மூன்றும். ஆனால் இன்றைக்கு அந்த முறைகள் எல்லாம் இல்லாமல், உற்பத்தி செய்கிறவர்களுக்கும் பலன் இல்லாமல், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் பலன் இல்லாமல் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் 54 ரூபாய்க்கு ஒரு மூட்டை நெல் வாங்கப்படுகிறது. கோவை மாவட்டத்தில் அது 180 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பொள்ளாச்சியில் அது 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு மாநிலத்துக்குள்ளே இப்படிப்பட்ட விலைகள் எல்லாம் இருக்கின்றன. இது மிக மிக வருந்தத்தக்கது. இந்த ஏற்றத்தாழ்வை மாற்றி அமைக்க வேண்டும்.

1969–ல் அரிசி உற்பத்தி 36 லட்சம் டன். இது உபரி மாநிலமும் அல்ல, பற்றாக்குறை மாநிலமும் அல்ல, தன்னுடைய தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்வதாக இருக்கிறது என்று அன்றைக்கு அமைச்சர் கூறினார். இன்றைக்கு அரிசி 56 லட்சம் டன், மற்றத் தானியங்களையும் சேர்த்துப் பார்த்தால் 72 லட்சம் டன் உற்பத்தியாகிறது. அப்படியிருந்தும் இன்றைக்கு இந்த நிலை இருந்துகொண்டிருக்கிறது. மத்திய அரசைக் கேட்கிறோம், மறுக்கிறார்கள், அதைக் கண்டிக்கிறோம் என்று சொல்லி இந்த அரசாங்கம் தப்பித்துக்கொள்வது எந்த வகையிலும் நியாயமல்ல என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக போனஸ், போக்குவரத்துச் செலவை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொண்டால் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு ஓரளவு விலை குறையும்.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற நெல் விலையைப் பார்த்தால் ரூ. 1.32-க்கு அரிசி கொடுக்கலாம். ரூ. 1.70–க்கு தஞ்சை மாவட்டத்தில் விற்கப்படுகிறது. திருச்சியில் ரூ. 2.10, ஈரோட்டில் ரூ1.90. மற்ற இடங்களுக்குப் போகப் போக 2, 3, 8 ரூபாய்க்குக்கூட அரிசி விற்கப்படுகிறது. இந்த மாதிரியான நிலையற்ற விலை ஒரே மாநிலத்தில் இருக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், இன்றைக்குப் போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் 2, 3 மாதங்களில் அரிசி கிடைக்காது. அரிசி கிடைத்தாலும் அதன் விலை மிக அதிகமாகிவிடும். அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று தெரியவில்லை. சரியான நடவடிக்கை, ஒரு சரியான கொள்கை இல்லை என்றால் நிலைமை மிக மோசமாகிவிடும்.

நைஸ் ரக பருத்தி பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மதுரை, கோவையில் எல்லாம் அரசாங்கத்தின் சிபாரிசின் பேரில் வரலட்சுமி என்ற பருத்திவகை பயிர் செய்யப்பட்டது. அது இப்போது தீண்டுவார் இல்லாமல் கிடக்கிறது. பெயர்தான் வரலட்சுமி. "பொட்டக் கண்ணிக்கு செந்தாமரை" என்று பெயர் வைத்ததுபோல வரலட்சுமி என்று அழகாகப் பெயர் வைத்திருக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: இனி வராத லட்சுமி என்று வைத்துவிட்டால் போகிறது.

திரு. எஸ். வடிவேல்: எப்படி வைத்தாலும் சரிதான். நம்முடைய நாட்டில் நூற்றுக்கு 70 பேர்கள் விவசாயிகள். அந்த வகையில் பார்த்தால் இப்போது ஒதுக்கியிருக்கிற மானியம் போதாது. தேசிய வருமானத்தில் 49 சதவிகிதம் விவசாயத்தில் இருந்து கிடைக்கிறது. கிட்டத்தட்ட சரிபாதி விவசாயத்திலிருந்து கிடைக்கிறது. இவ்வளவு வருமானம் கிடைக்கின்ற ஒரு இனத்திற்கு இந்தத் தொகை போதாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்தவேண்டுமென்று அரசு சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆனால் கடரோலத்திலிருந்து 6 மைல்களுக்கு உட்பட்ட இடங்களில் கிணறு வெட்டுவதற்கும் மற்றவைகளுக்கும் கடன் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். கொடியம்பாக்கத்திலிருந்து கோடிக்கரை வரை தஞ்சை மாவட்டத்தில் கடலோரம்தான். அங்கே கடன் வழங்கப்படவில்லை என்றால் இதனால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. குறிப்பாக, நிலத்தடி நீரைப் பயன்படுத்தச் சாகுபடியாளர்களுக்குக் கடன்கொடுப்பதில்லை. கடன் கேட்டால் எதை நம்பிக் கடன் கொடுப்பது என்று கேட்கிறார்கள். சாகுபடியாளரிடம் எதை எதிர்பார்க்க முடியும்? அவனை நம்பித்தான் கொடுக்க வேண்டும். சாகுபடியாளர் என்பதற்கான பதிவேடு இருக்கிறது, அவனுடைய உழைப்பு இருக்கிறது, இரண்டு கை இருக்கிறது, இரண்டு கால் இருக்கிறது, உடல் உழைப்பு இருக்கிறது, உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது, இதை நம்பித்தான் கடன் கொடுக்க வேண்டும். அவனுக்கு இருக்கிற குத்தகை நிலத்தை நம்பி, அவனை நம்பிக் கொடுக்க வேண்டும், அதுதான் சரியான முறை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குத்தகை சாகுபடியாளர்கள் பம்புசெட் வைக்கக் கடன் கேட்டாலும் கொடுப்பதில்லை. கிணறு வெட்ட, பம்புசெட் வைக்க இவைபோன்ற காரியங்களுக்குச் சாகுபடியாளருக்கும் கடன்கொடுக்க ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அதற்கெல்லாம் கூட்டுறவுத் துறை இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: கூட்டுறவுத் துறையில் இருந்தால் என்ன? அல்லது வேளாண்மைத் துறையில் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். அதிலிருந்து இதில் மாற்றிக்கொண்டால் போச்சு.

இன்றைக்கு மின்சாரத்திற்கு 4 மாதக் கட்டணம் முன்பணமாக, அட்வான்சாகக் கட்ட வேண்டுமென்றும், கட்டினால்தான் கரண்ட் கொடுப்போம் என்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொன்னால் உற்பத்தி எங்கே பெருகும்? இப்போது இருக்கிற நிலைமையோ பஞ்சம், பட்டினி. இந்த நிலையில் 4 மாதக் கட்டணம் அட்வான்சாகக் கட்டு என்றால் எப்படிக் கட்டு



கரண்ட் கொடுக்கவில்லை என்றால் எப்படி உற்பத்தி பெருகும்? ஆகவே, முன் பணம் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் இப்போது இருப்பது போலவே இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, அரிசி விலை ஏற்றத்திற்கும் நெல் விலை ஏற்றத்திற்கும் சம்பந்தா சம்பந்தம் இல்லை. இதில் ஒரு விலை நிர்ணயம் செய்வதில் அரசாங்கம் என் தயக்கம் காட்டுகிறது? இதில் என்ன தயக்கம் இருக்கிறது?

லெவி கொள்முதல் எடுத்துக்கொண்டால், மதுரை மாவட்டத்திலிருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது. அந்த தந்தியைப் படிக்க விரும்பவில்லை. கருத்தைச் சொல்லிவிடுகிறேன். மாங்குளம் கிராமத்தில் லெவி கொள்முதலுக்குச் சென்றார்கள். அங்கே போலீசார் அராஜகம் நடத்தியிருக்கிறார்கள்; அட்டூழியம் செய்திருக்கிறார்கள். ஒரு விவசாயியின் வீட்டிலுள்ள இளைஞர்கள், ஆண், பெண் எல்லோரையும் பிடித்துத் தள்ளிவிட்டு, இருந்த நெல் எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

பட்டுக்கோட்டையில் ஒரு வீட்டில் புருஷன் இல்லாத நேரத்தில் போய் இருந்த நெல்லை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவளுடைய புருஷன் வந்தபின்னால் அவளைத் திட்டி, கண்டித்திருக்கிறான். அதனால் மனவருத்தம் அடைந்த அந்த அம்மாள் தூக்குப்போட்டு செத்திருக்கிறாள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ரொம்ப வருந்தத்தக்கவை. சிறு விவசாயிகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து எல்லா நெல்லையும் – அவர்களுடைய சாப்பாட்டுக்குப்போக மிச்சமுள்ள எல்லாவற்றையும்—அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம். கோவில்களுக்குக் கிடைக்கிற நெல்லை லெவிக் கொள்முதலுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதனால் என்ன பயன் ஏற்பட்டிருக்கிறது? அந்தச் சட்டம் சரியாகச் செயல்படவில்லை. சிவவடிவேல் முதலியார் வீட்டிலிருந்து 1,233 மூட்டை நெல்லை கைப்பற்றியிருக்கிறார்கள். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பு வைத்திருக்கிறீர்கள். 15 ஏக்கர் வைத்திருப்பவர் வீட்டில் 1,233 மூட்டை நெல் எப்படி வந்தது? ஆக, உச்சவரம்புச் சட்டத்திலே தவறு இருக்கிறது. ஒரு பெரிய பானையை வைத்து, அதிலே 10 ஓட்டைகளைப் போட்டு, அதில் தண்ணீரைக் குடம் குடமாக ஊற்றினால், பானை இல்லாமல் தண்ணீர் எங்கே போகும்? அந்த வகையில்தான் உச்சவரம்புச் சட்டம் இருக்கிறது.

குத்தகை சாகுபடியாளர்கள், ஒரு ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். திருத்துறைப்பூண்டியில் பறக்கும்படை வந்தது. ஒரு சாகுபடியாளர் வீட்டில் இருந்த நெல்லை எல்லாம் எடுத்தார்கள். எதிரே வந்தவர்களை எல்லாம் இரண்டு, இரண்டு தட்டு தட்டிவிட்டார்கள். அவ்வளவுதான். டி.எஸ். வெங்கட்டராமன் இதுபற்றித் தந்தி கொடுத்திருக்கிறார்.

இந்த அளவுக்கு லெவிக் கொள்முதலில் சிறு விவசாயிகள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். 3 ஏக்கர், 5 ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களிடம்தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாது.

உற்பத்தி செய்பவர்களுக்கு சப்சிடி கொடுக்கலாம். உணவுதான் நமக்கு முக்கியம். அண்ணா இருந்த காலத்தில் 3 காரியங்களுக்கு சப்சிடி கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி இப்போதும் கொடுக்கக்கூடாதா ? இந்த மாதிரியாக இப்போது இருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் போக்கப் படவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

திரு.கே. எ. வகாப் : சார் ஆன் பாயின்ட் ஆப் ஆர்டர். அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் 1974-75-ஆம் ஆண்டிற்கு உள் நாட்டு ரசாயன உரஉற்பத்தியாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டுப் பெறப்பட்ட உரங்களின் அளவைச் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திடம் இருந்து எதிர் பார்த்தது 25,350 மெட்ரிக் டன் என்றும் கிடைத்துள்ளது 12,945 மெட்ரிக் டன்தான் என்றும்,மெட்ராஸ் பர்டிலைசர்கம்பெனியில்இருந்துஎதிர்பார்த்தது 67,912 மெட்ரிக் டன் என்றும் கிடைத்துள்ளது 38,929 மெட்ரிக் டன் தான் என்றும், எப்.எ.சி.டி. யில் இருந்து எதிர்பார்த்தது 40,555 மெட்ரிக் டன். என்றும் கிடைத்துள்ளது 19,819 மெட்ரிக் டன்தான் என்றும் ஈ.ஐ.டி. பாரி இடம் இருந்து எதிர்பார்த்தது 6,333 மெட்ரிக் டன் என்றும் கிடைத்தது 5,550 மெட்ரிக் டன். என்றும் இருக்கிறதே, இது தவருகக் குறிப்பிடப் பட்டிருக்கிறதா ? இதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் வகாப் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று க்ளாரிபிகேஷன்தான் கேட்கிருர்கள். அமைச்சர் பதில் சொல்லும்போது இதையும் சேர்த்துச் சொல்வார்கள். அடுத்ததாக திரு. எம். கந்தசாமி பேசுவார்.

*திரு. எம். கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கோரியுள்ள மானியத்தை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

பொதுவாக இன்றைய தமிழகத்தில் வறட்சி அதிகமாகிவிட்டிருக்கும் இந்த நேரத்தில் கூட்டுறவுத்துறை—நீர்ப்பாசனத்துறை—மற்றும் மின்சாரத் துறை ஆகிய இத்தனை துறைகளும் வேளாண்மைத்துறையோடு சேர்ந்து ருங்கிணைந்து செயல்பட்டு வருவதன் காரணமாகத்தான்—அந்த வறட்சியைச் சமாளிக்கக்கூடிய விதத்தில் இந்த அரசாங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.



வேளாண்மைத்துறையைப் பொறுத்தவரையில் கடந்த எழெட்டு ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழக அரசு போதிய கவனம் செலுத்திய காரணத்திலுல்தான் விவசாயிகளின் முன்னேற்றம் தமிழ்நாட்டில் தலை சிறந்து விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனுல், இந்த ஆண்டு இந்தத்துறையிலுள்ள அதிகாரிகளுக்கும் சரி—இயக்குநருக்கும் சரி—இத்துறையைச்சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சரி-சவால்விடும் அளவில் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்திலுல் விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நாம் மத்திய அரசிடம் கேட்ட அளவுக்கு— அவர்கள் கொடுப்பதாக உத்தரவாதம் அளித்த அளவுக்கு அவர்கள் நமக்கு ரசாயன உரம் அளிக்கத் தவறிய காரணத்திலுல் விவசாயிகளுக்குத் தேவையான ரசாயண உரத்தை விவசாயிகளுக்கு நம்மால் அளிக்க முடியவில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர். யாருக்கும் கிராமங்களில் ரசாயன உரம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இப்போது வாங்குவார் இல்லாமல் எல்லாக் கிராமங்களிலும் ரசாயன உரம் தேங்கிக் கிடக்கிறது.

திரு. எம். கந்தசாமி : பருவ மழை இல்லாத இந்த நேரம்— தேங்கிக் கிடக்கலாம். தரமான விதைகளை நாம் தந்தாலும் போதிய அளவு வருவாய் இல்லாத காரணத்திலுல் கிராமங்களிலுள்ள மக்களால் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு விவசாயிகளுடைய நிலைமை மோசமாகிக்கொண்டு இருக்கிறது.

நெல் சாகுபடி என்று எடுத்துக்கொண்டால் தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளும் குறைபட்டுக்கொள்ளுகிறார்கள். தாராபுரத்திலுள்ள விவசாயிகளும் குறைபட்டுக்கொள்கிறார்கள். நீர்ப்பாசனம் இங்கே இல்லை. வறட்சியினுல் மிகப் பெரும் அளவு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென்ற காரணத்திலுல் உரம் வாங்குவதற்கு— விதைகள் போன்றவற்றை வாங்குவதற்கு— விவசாயக்கருவிகள் வாங்குவதற்கு மானியமாகவும், கடனுகவும் இந்த ஆண்டின் வறட்சி நிலைமையை எண்ணி விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்....

அடுத்து, நெல் சாகுபடியைப் பற்றிச் சொல்லும்போது இன்றைக்கு கொடுக்கப்படுகிற விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொன்னார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் அவர்களது நியாயமான கோரிக்கையை ஒப்புக்கொண்டுதான் ஒரு விலையை நிர்ணயித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினார்கள். மத்திய அரசு அந்த விலையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதன் காரணமாக விவசாயிகளுக்குக் கூடுமான வரையில் நியாயம் வழங்கக்கூடிய அளவில் ஒரு விலை கொடுக்கிறார்கள். இதனுல் விவசாயிகளின் குமுறல் ஒருபுறம்— இதைவிட அதிக விலை கொடுத்தால் எங்களால் எப்படி வாங்கிச் சாப்பிடமுடியும் என வாங்கி உண்பவர்கள் குமுறல் ஒரு பக்கம்— இந்த இரண்டுக்கும் நடுவில் நமது அரசு கூடுமான அளவில் சமாளித்து— முடிந்த அளவில் ஒரு விலையை நிர்ணயித்து இன்றைய தினம் செயல்பட்டுக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் மிக மன நிறைவை அளிக்கிறது.

கரும்புச் சாகுபடியை எடுத்துக்கொண்டால் மிக மோசமான நிலைமை. சட்டமன்ற உறுப்பினர் வகாப் கூறியபடி—1 டன் விறகுக்கும் ஒரு விலைதான்—1 டன் கரும்புக்கும் ஒரு விலைதான். பட்டவாத்தலை சர்க்கரை ஆலையை எடுத்துக்கொண்டால் அது பாரி நிறுவனத்தின்கீழ் உள்ள ஒரு ஆலை—பதினைந்து மாதம்—பதினாறு மாதம் என்றாகியும் வளர்த்த கரும்பை வெட்ட முடியாமல் விவசாயிகள் இருக்கிறார்கள், கரும்பு காய்ந்து கொண்டிருக்கிறது, " எங்களுக்கு ரெக்கவரி இல்லை $92\frac{1}{2}$ ரூபாய்க்கு மேல் தரமாட்டோம் " என்கிறார்கள் ஆலைக்காரர்கள். 'உங்கள் அரசு சொன்னால் என்ன ? அங்கே ஒத்துக்கொண்டு வந்தோம் என்றாலும் இங்கே தர மாட்டோம்' என்கிறார்கள். இன்றைக்கு ரூ. $92\frac{1}{2}$ தான் தருகிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனித்து—முடிந்த அளவு அவர்களை அழைத்து—விவசாயிகளுக்கு ஒரு நல்ல விலை கிடைப்பதற்கான எற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நமது முதல்வர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் நமது மாநிலத்தில் 11 லட்சம் எக்கரா தரிசு நிலங்கள் இருப்பதாகவும் அதை அரசுப் பண்ணையின் கீழ் கொண்டுவர ஒரு நிறுவனத்தை அமைக்க இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

எங்கள் பகுதியில்—இன்று புதுக்கோட்டை மாவட்டமாக ஆக்கப்பட்டிருந்தாலும்—குடுமியா மலைப் பகுதியில் அறிஞர் அண்ணாவின் பெயரால் அமைந்த அரசாங்கப் பண்ணை மிகச் சிறந்ததொரு பண்ணையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதே போலத் தரிசு நிலங்களை அரசாங்கமே ஏற்று அரசாங்கப் பண்ணையாக நடத்தினால் நிச்சயமாக நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை மருத்துவக் கல்லூரிகள் விவசாயப் பல்கலைக் கழகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டதால்தான் இந்த இரண்டு துறைகளுமே சிறந்து விளங்க முடியும். அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்—அக்ரோ இன்ஜினியரிங் ஒர்க்ஷாப் —அக்ரோ சர்விஸ் சென்டர்—என்பதாக எல்லாம் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்பட்டு வருகின்றன. மிகச் சிறப்பாக நடைபெறுகிற அக்ரோ சர்விஸ் சென்டர்களில்— பொறுக்குவிதைகள்—பூச்சிக் கொல்லி மருந்துக்கள் போன்றவை மட்டுமல்ல—விவசாயக் கருவிகளும் குறைந்த விலையில் தரப்படுகின்றன.

அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலம் விவசாயிகளுக்கு டிராக்டர்கள் தரப்படுகின்றன. இன்னும் விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட— ஆழப்படுத்த— 450 அடிக்குள் என்ற சட்டம் இருக்கிற காரணத்தினால் நிலவள வங்கிகள் பெரும்பாலானவர்களுக்குக் கடன் கொடுக்க முடியவில்லையே தவிர— அந்தச் சட்டத்தை எப்படியாவது தளர்த்த வேண்டுமென்று நமது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தியும்— ரிசர்வ் பாங்க் அதற்கு ஒத்துக் கொள்ளாத காரணத்தினால் அது முடியவில்லை. அது எப்படி இருந்தபோதிலும் இந்த அரசு கிணறு வெட்ட ஆழப்படுத்த பலவகையில் உதவி செய்து வருவதை விவசாயிகள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இன்னும் விவசாய மக்களுடைய உற்சாகத்தை, ஊக்கத்தை அதிகப்படுத்த நமது அரசு அவர்களுக்குத் தேவையான மானியத்தையும், கடனையும் அளிக்க முன்வந்தால் சிறந்த முறையில் வருகின்ற ஆண்டில் எல்லா மாநிலங்களையும் விட அதிகமான அளவு விளைச்சலை நம் மாநிலத்தில் பெற முடியும் என்கிற உறுதியினை விவசாயிகளின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.





திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நடுமையமாக அது நமது தமிழகத்திலேயிருக்கிற காரணத்தால், கோயம்புத்தூரிலே விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்றிருந்தாலும், இங்கேயும் விவசாயக் கல்லூரி வேண்டுமென்று பலமுறை பல உறுப்பினர்கள் அமைச்சரிடம் சொல்லியிருக்கிறார்கள். திருச்சிக்கு நடுவிலே குடுமியாமலைப் பண்ணை இருக்கிறது. அருகிலே நஞ்சை நிலங்கள் கொண்ட மாவட்டமாக தஞ்சை இருக்கிறது. ஆகவே திருச்சியிலே விவசாயக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

## (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரிக் கொடுத்திருந்த அறிவிக்கையை திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டது குறித்து :

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேரவைத் துணைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று இன்று கொடுத்த அறிவிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டார் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (4) 1975–76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, இன்று தமிழக அரசின் சார்பில் விவசாய அமைச்சரவர்கள் அளித்திருக்கிற விவசாய மானியக் கோரிக்கையை பார்வேட் பிளாக் கட்சியின் சார்பாக மனமார வரவேற்று விவசாயிகள் சார்பாக நடைமுறை யில் நான் உணர்கிற சில கருத்துக்களைத் தங்கள் மூலமாக உடனடி நடவடிக்கைக்காக, அமைச்சரவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்கள் சொன்னதைப் போல், தமிழகத்திலே, என் இந்தியாவிலே 80 சதவிகிதம் மக்கள் விவசாயம் செய்யக்கூடியவர்களாக கிராமத்தில் வசிக்கக்கூடியவர்களாக, அதில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாக இருக்கிற காரணத்தால் அந்த விவசாயிகளுக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும். எல்லாத் திட்டங்களையும் விட அதிகப் பணம் இதற்கு ஒதுக்கப்படவேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

[திரு. கே. கந்தசாமி] [1975 மார்ச் 27

உணவு மிக முக்கியம் உயிர் வாழ என்பதை அத்தனைபேரும் ஒத்துக்கொண்டு, உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவுப் பற்றுக்குறையை எப்படி சாமாளிக்கப் போகிறோம் என்ற வேதனை அத்தனை பேரையும் வாட்டிக்கொண்டிருந்தாலும்கூட இந்த உணவை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, நாம் அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தை அவர்களுக்குச் சமுதாயத்தில் தரவேண்டிய ஒரு நிலையை தந்திருக்கிறோமா என்றால் இல்லை என்பதுதான் என்னுடைய வேதனையான பதிலாகும். இப்படியே போய்க்கொண்டிருந்தால், நம் எதிர்காலச் சந்ததியை எங்கே கொண்டுபோய் நிறுத்தப் போகிறோமோ எனக்குப் புரியவில்லை. படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், விஞ்ஞானிகள் அத்தனை பேரும் விவசாயிகளை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்றுசொல்லுகிறோம். நவீன கருவிகளை நாம் பயன்படுத்திப் பல திட்டங்களைச் செயல்படுத்துகிறோம் என்பதில் ஐயமில்லை. அதே சமயத்தில், விவசாயத்தைச் செய்கிற, மெஜாரிட்டியாக இருக்கக்கூடிய சமூகத்தினரைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, நாம் மிக மைனாரிட்டியாக இருக்கக்கூடிய, தொழில் பொருளாதாரத்தை மையமாக வைத்துத்தான் நமது பொருளாதாரம் கண்காணிக்கப்படுகிறது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். அப்படிப் போகிறபொழுது, மெஜாரிட்டிக்குக் கிடைக்கவேண்டிய நியாயமும், அவர்களுக்கு அளிக்கவேண்டிய பாதுகாப்பும் மத்திய–மாநில அரசுகளால் அளிக்கப்படாத காரணத்தால்தான் இன்று துயரமான நிலையில் மிக வேதனையோடு பல கஷ்டங்களை, வறட்சியின் பெயரால், வறட்சி நிலைமையால், அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தமட்டில் இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிப பேசுகிறவர்கள், கங்கையையும் காவிரியையும் இணைத்திருந்தால், விவசாயப் பெருங்குடிகளும் பலன் பெற்றிருக்கமுடியும். உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலம் இந்தியச் சமுதாயமே மகிழ்ச்சியாக வாழ முடியும். அதை மத்தியிலுள்ளவர்கள் உணர்ந்திருந்தாலும் நீண்டகாலத் திட்டமாக அதை உருவாக்கி, பல கோடி ரூபாயைச் செலவழிக்கவேண்டுமென்பதால், அது உருவாகும்போது நம்முடைய தலைமுறை இருக்குமோ இருக்காதோ என்று அரசியல் புத்தி படைத்தவர்கள் இருக்கிற காரணத்தால்தான் இதுவரை அத்திட்டம் செயல்படவில்லையென்று நான் கருதுகிறேன்.

நேஷனல் இன்டகிரேஷன், யூனிட்டி என்றெல்லாம் பேசுகிறோம். தமிழகத்து நிலை என்ன ? கேரளத்தில் பல ஆறுகள் அரேபியக் கடலில் போய் விழுகின்றன. உப்புத் தண்ணீரில் போய் விழுந்து வீணாகின்றன. மதுரை, இராமநாதபுரம் பகுதிகள் மிக வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. கோட்டப் பொறியியல் வல்லுநர் அவர்கள், தன்னுடைய அறிக்கையில், உப்புத் தண்ணீர் இருப்பது விவசாயத்திற்குக் கெடுதி என்றும், மதுரையில் நீர்வளம் மிகக் குறைவாக இருக்கிறது என்றும் தெரிவித்து இருக்கிறார். ஆகவே மத்திய அரசை அணுகிக் கேட்க வேண்டுமென்று பலமுறை நான் இந்த மன்றத்திலே வலியுறுத்திக் கேட்டிருக்கிறேன். நமது, முன்னாள் பி.டபிள்யூ.டி. மினிஸ்டர் பல முறை மத்திய அரசை வற்புறுத்தியும், மத்திய அரசு நமக்கு உகந்ததாக இல்லை. அது தகுந்த முயற்சி எடுக்காத காரணத்தால், கேரள அரசு நமக்குத் தண்ணீர் தர மறுக்கிறது என்று வேதனையோடு சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் குறிபிடக் காரணம், நமக்குள்ளே அரசியல் வேறுபாடுகள், கருத்து



1975 மார்ச் 27] [திரு. கே. கந்தசாமி]

வேறுபாடுகள் இருந்தாலும், இந்தியாவின் ஒருமைப்பாடுபற்றிப் பேசுகிற நேரத்தில் கடலில் விழுகிற தண்ணீர் நமக்கு வந்தால், நல்ல முறையில் விளைச்சலைப் பெற முடியும் என்று பெரும்பகுதியினர் உணர்ந்திருந்தும் அதைப் பெறமுடியாமலிருக்கிறோம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உசிலம்பட்டிப் பகுதி மக்கள் குற்றப்பரம்பரை சட்டத்தால் பாதிக்கப்பட்ட பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களைத் திருத்தவேண்டுமென்று ஆங்கில அரசு பல திட்டங்களைப் போட்டாலும், குறிப்பாக வைகை திட்டத்தை உருவாக்கியது, 22,000 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் பயன்படும் வகையில் 1928–லேயே அத்திட்டம் உருவாக்கப்பட்டது, அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, சுதந்திரம் கிடைத்து, பல ஆண்டுகள் கழித்து, 1956–லேதான் அது நிறைவேற்றப்படுகிறது. அணை கட்டப்பட்டதேயொழிய, அந்தப்பகுதிக்குக் கொடுக்க வேண்டிய தண்ணீர் அன்றைய அரசால் கொடுக்கப்படவில்லை. கொடுக்கவேண்டிய பகுதிக்குத் தண்ணீர் கொடுக்காமல் வேறு பகுதிகளுக்கு, 12,000 ஏக்கர் பாசனத்திற்குக் கொடுத்துவிட்டு, இங்கு 10,000 ஏக்கருக்கு மட்டும்தான் கொடுத்தார்கள். அந்த அநீதியை, நீதியாக மாற்ற வேண்டுமென்று கலைஞர் அவர்கள் 1973-ல் மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தபொழுது செக்கானூரணி என்ற ஊரிலே, எங்கள் தலைவர் மூக்கையாத் தேவரும் நானும் உடன் சென்றபோது பொது மக்கள் கேட்டனர். அவர் மிக்க உருக்கத்தோடு கேட்டுக்கொண்டு, அநீதி நீக்கப்பட்டு உரிய நியாயம் வழங்கப்படும் என்று சூசகமாகவும், மகிழ்ச்சியாகவும் மக்களின் ஆரவாரத்திடையே தெரிவித்தார்கள். Due to Modernisation of Periyar canal there is going to be surplus water to feed about 25,000 acres of land.

மாடர்னைஸ் செய்வதன்மூலம், அந்தத் தண்ணீரை, 25,000 ஏக்கர் நிலங்களுக்குப் பயன் படுத்தலாம்.

தண்ணீர் மீதப்படுவதாக அறிந்து கூறியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அந்தத் தண்ணீர் எங்கே கொண்டு போகப்படுகிறது என்பது கேள்விக்குறியாக எழுப்பப்படுகிறது. மதுரை மாவட்டத்திலேயிருக்கிற ஏழை பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்று புக்லெட் ஒன்று அச்சிட்டு, வெளியிட்டு, மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், இன்னும் பொறியியல் இன்ஜினீயர்களுக்கும் வழங்கியிருக்கிறார்கள். எங்கள் நியாயப்பூர்வமான, சட்டப்பூர்வமான காரியத்தை நீங்கள் கவனித்தாகவேண்டும், இல்லையேல் எங்கள் எதிர்காலம் இருண்டுவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அதையும் அரசியல் காரணமாகத் தலையிட்டு, செல்வாக்குப் படைத்தவர்கள் தங்கள் பகுதிக்கு எடுத்துச் செல்வதாக அறியும்போது மிகவும் வேதனைப்படுகிறேன்.

" The proposal to take a canal into Thirumangalam taluk from the right side of the Vaigai above Peranai regulator was under consideration in the year 1928 ".

என்று இருக்கிறது. அதேபோல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற பொழுது என்ன ரிசல்ட் என்பதை அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள்.

[1975 மார்ச் 27

In the Chief Engineers' inspection notes of April 1940 "This will help kallar uplift better, as the benefit can be extended to a greater number of villages"

என்று சொல்லப்படுகிறது. குறிப்பை மாத்திரம் நான் சொல்கிறேன். அதேபோல், சி.இ. அவர்கள்,

In the inspection notes of the Chief Engineer for Irrigation—Rao Bahadur A.R. Venkata Acharya—dated 29th October 1946.

"The new Thirumangalam channel will be nearly 21 miles long and will carry 300 cusecs for the irrigation of 15,000 acres, but to enable a new branch channel being taken out at mile 7/6 of the canal at a later date suitable provision for widening the canal to carry 500 cusecs will be made".

என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக கலெக்டர் அவர்கள் இ. இ. பெரியார் டிவிஷனுக்குச் சொல்கிறபோது,

8th July 1947 in his reference No. 9480/G/47-A6 with reference to Chief Engineer's letter No. 2020/47 N-2, and Government Memo. No. 3185/N-local, dated 28th May 1947, the then Collector of Madurai has said—

"In connection with the Vaigai Reservoir Scheme the S.E. has reported that Thirumangalam taluk is a kallar area and that the scheme will solve kallar problem. This will go to a large extent to benefit the backward kallar community area and rehabilitate them to normal life."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதை சபையினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருவதற்குக் காரணம் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டபோதே அந்தப் பகுதியிலே வாழுகிற மக்கள் வான் மழை இல்லாத பகுதியில் உள்ள அந்த மக்களை வாழவைக்கிற முறையிலே உருவாக்கப்பட்ட திட்டம் என்றும் போடப்பட்டிருக்கிற திட்டமாகும். இப்போது கிடைக்கிற சர்ப்ளஸ் தண்ணீரை 15 ஆயிரம் எக்கர் பாசனத்திற்குக் கிடைக்குமாறு அந்த மக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாக நான் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பட்டது) தண்ணீர் இல்லையேல் விவசாயம் இல்லை, தண்ணீர்தான் அடிப்படை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : அதுவெல்லாம் பொதுப்பணித் துறை மானியத்திலே பேசவேண்டும்.



1975 மார்ச் 27]

திரு. கே. கந்தசாமி : பொதுப்பணித் துறை மானியத்தில் பேசவேண்டுமென்று நிர்வாக சௌகரியத்திற்காக வைத்திருக்கிறோம், நாட்டிலே விவசாயம் சீரழிந்து இருக்கிறது. பெருத்த சமுதாயத்திற்குக் கொடுக்கவேண்டியதை மறுத்து விட்டு நாம் ஜனநாயகத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. கே. கந்தசாமி : நான் ஒரு சம்சாரி, ஒரு நிமிடம் அருள்கூர்ந்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : இன்னும் மூன்று பேர்கள் பேசவேண்டும், அதற்குப் பிறகு அமைச்சரவர்கள் பதில் அளிக்க வேண்டும், ஒன்றரை மணிக்குள் முடித்தாக வேண்டும், இல்லாவிட்டால் சபை இரண்டு மணி வரைக்கும் போகிற சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

திரு. கே. கந்தசாமி : இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். விவசாயிகளுக்கு நினைத்தவுடனே முடிக்கக்கூடிய நம்முடைய கலைஞர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சுகர் பிரைஸ் வடநாட்டில் அதிகமாக இருக்கிறது, இங்கே குறைவாக இருக்கிறது, அதைக் கவனிக்க வேண்டும். வரலட்சுமி பருத்தி யினால் நானும் பாதிக்கப்பட்டிருக்கிறேன். 1,250 ரூபாய் குவிண்டால் விற்குமென்று நாங்கள் பயிர் செய்யவேண்டுமென்று சொல்லி நாங்கள் அறிவுரை சொல்லப்பட்டோம். எக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து இன்றைக்கு பார்த்தால் 5 ஆயிரம் ரூபாய்கூட வராது என்ற நிலைமைதான் இருக்கிறது.

The Government have not given us assured price.

ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உறுதுணையோடு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அதிகமான விலையை அதற்குப் பெற்றுத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராப் இன்ஷ்யூரன்ஸ், பயிர் பாதுகாப்புத் திட்டம், எப்படி மனிதனுக்கு ஆக்ஸிடண்ட் ஏற்பட்டுவிட்டால் பாதுகாப்புக்குத் திட்டம் இருக்கிறதோ அதைப்போன்று பயிர் பாதிக்கப்பட்டுவிட்டால் விவசாயிகளைக் காப்பதற்கு அந்தத் திட்டம் வேண்டும். கிணறுகள் தோண்டும்போது வெடித்து விட்டால் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. அந்த நிலையிலேயும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின் பேரிலே பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்காக நான் முதலில் நன்றி கூறிக்கொள்கிறேன். இந்த விவசாய மானியத்திலே பல் வேறு முற்போக்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள்

[திரு. கே. என். குமாரசாமி] [1975 மார்ச் 27

அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயிகள் பயன் பெறுகிறார்களா என்பதை அவர் பரிசீலிக்கவேண்டும். காலாகாலத்தில் உரம் கிடைக்காத காரணத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறது என்று பல தடவைகள் எடுத்துச் சொல்லியாகிவிட்டது. ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் உரம் தேவை என்றால் ஜனவரி மாதத்தில் உரம் ஸ்டாக் இருக்கிறது என்று அவர்கள் பதில் சொல்கிறார்களே தவிர காலாகாலத்தில் உரம் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யவில்லை. அதிக விலை கொடுத்து விவசாயிகள் வெளியிலே உரம் வாங்க முடியாமல் தவிக்கிறார்கள். இப்போது பூச்சிகொல்லி மருந்துகள் புதிது புதிது ஆக கண்டுபிடித்துக்கொண்டிருந்தாலும் சரியான மருந்துகள் கிடைக்கவில்லை. ஆகவே ரிசர்ச் செய்து நல்ல மருந்துகளைத் தயாரிக்கச் செய்து அதை விவசாயிகளுக்குக் கிடைக்கும்படியான ஏற்பாடுகளை அவர்கள் செய்ய வேண்டும். பூச்சிகொல்லி மருந்துகளின் விலை அதிகம், உரம் சரியாக கிடைக்கவில்லை, உரத்தின் விலை அதிகம், பூச்சிக்கொல்லி மருந்துகள் விலை அதிகம், என் பகுதியிலே கிணறு வெட்டவும் அதிகம் செலவாகிறது, மின்சாரக் கட்டணமும் அதிகம். இப்படி செலவுகள் உற்பத்திக்காக ஆனாலும்கூட உற்பத்தி செய்பவைகளை வெளியே மார்க்கட்டிற்குக் கொண்டுவருகிறபோது குறைந்த விலைதான் கிடைக்கிறது. ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாய் உற்பத்தி செலவாகிறது என்றால் வெளியே விற்கிறபோது நஷ்டம்தான் விவசாயி அடைகிறானே தவிர உற்பத்திச் செலவுக்குக்கூட அவனால் விற்க முடியவில்லை. ஒன்று உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். கிணறுகளை வெட்டுவதற்கு அரசாங்கமே இலவசமாக வெட்டிக்கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் அல்லது மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் சிரமப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பருவமழை இல்லாத காரணத்தினால் எங்களுடைய தொகுதி மிகவும் பாதிக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் 53 லட்சம்.டன் இந்த ஆண்டு உற்பத்தியாகும் என்றும், பயிர் வகைகளைச் சேர்த்து மொத்தம் 82 லட்சம் டன் ஆகும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிச்சயமாக மழையில்லாத நிலைமையை வைத்துப் பார்த்தால் தண்ணீர் கிணறுகளிலே இல்லாத நிலைமையை வைத்துப் பார்த்தால் 5 இலட்சம் ஏக்கர் நிலம் விளைச்சலே இல்லாமல் போய்விடும் என்ற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே இது எந்த அளவிற்கு உற்பத்தியைப் பாதிக்கிறது என்று இல்லை. அந்த அளவிற்கு உற்பத்தி பெருகுமா என்பதைப் பற்றி பார்க்கவேண்டும். தண்ணீர் கொடுப்பதற்கு பிரத்தியேக ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகளுக்கு இன்ன இன்ன சலுகைகள் கொடுக்கப்படும் என்றாவது சொல்லவேண்டும். இரண்டும் இல்லாததால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். விதைகள் காசு கொடுத்து வாங்க முடியாத அளவிற்குப் போய்விட்டது. விதைப் பொருட்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு அரசாங்கமே விதைகளை இலவசமாகக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால் எதிர்காலத்திலே விவசாயிகளுக்கு வேறு வழியே கிடையாது.

சி. பி. எஸ். 156 கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிலே உற்பத்தி 4 பொதிதான் ஏக்கருக்குக் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது, ஆனால் ஏக்கருக்கு 20 பொதி கிடைக்கும் என்று விளம்பரம் செய்யப்பட்டது.



1975 மார்ச் 27] [திரு. கே. என். குமாரசாமி]

தனியாரிடத்திலே ஒரு கிலோ 1,000 ரூபாய்க்கு வாங்கி போட்டிருக்கிறார்கள். இதிலே கூட 6, 7 பொதிதான் வருகிறது. நம்முடைய பண்ணையிலே வாங்கிப் போட்டால் அதைவிட தனியாரிடத்திலே வாங்கிப்போடுவதிலே அதிக விளைச்சல் இருக்கிறது. விவசாயிகள் உங்களை நம்பி நாங்கள் வாங்கிப்போட்டோமே என்று வருத்தப்படுகிறார்கள். பெரும் கஷ்டத்திற்கு ஆளாகிவிட்டோமே என்று வேதனைப்படுகிறார்கள். சி.பி.எஸ். 156 பலனளிக்கவில்லையென்பதால் அதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1,500-க்கு அக்ரிமெண்ட் போட்டு வரலட்சுமியை விதைத்தார்கள், கடைசியில் பார்த்தால் 700-க்கு கூட வரவில்லை, அக்ரிமெண்ட் போட்டவர்கள் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். இதிலே என்ன கோளாறு என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

தமிழ்நாடு பூராவிற்கும் ஒரு நபருக்குத்தான் கோட்டா கொடுத்திருக்கிறார்கள். வட ஆற்காட்டிலிருந்து கோயம்புத்தூருக்கு ஒருவர் வரவேண்டுமா ? அப்படியில்லாமல் ஜில்லாவிற்கு ஒருவருக்கு கோட்டாவை கொடுக்க வேண்டும். திருட்டுத்தனமாக லைசென்ஸ்கள் கொடுத்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி பரிசீலனை செய்து நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே 300 அடி 350 அடிக்கு போர் வெல் போட்டாலும் தண்ணீர் வரவில்லை. அந்தப் பகுதியிலே தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-00)

இல்லையென்றால் முடியாது. இப்பொழுது வேளாண்மைப் பட்டதாரிகள் யூனியன்களில் வேலை செய்பவர்களை, ஜில்லாவிற்கு ஜில்லா மாற்றுவதற்கான அதிகாரத்தைப் போட்டிருக்கிறார்கள். பருத்தி விவசாயத்திலும், புகையிலை விவசாயத்திலும் பணியாற்றியிருப்பவர்கள் நெல் பயிரிடும் இடங்களில் போய் எப்படிப் பணியாற்றுவார்கள்? ஏன் அவர்களை ஜில்லாவிற்கு ஜில்லா மாற்ற வேண்டும்? அந்தச் சட்டத்தைப் போட்டிருந்தாலும், அதை நிறுத்தி வைத்து, வேளாண்மைப் பட்டதாரிகள் அந்தந்த ஜில்லாக்களிலேயே இருக்க வகை செய்ய வேண்டும். அந்தந்த ஜில்லாக்களில் வேளாண்மைப் பட்டதாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தந்த ஜில்லாக்களின் மண் வளத்தைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயப் பட்டதாரிகள், துணை வேளாண்மைப் பட்டதாரிகள் அந்தந்த ஜில்லாக்களிலேயே இருக்குமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை உற்பத்திக்கு நியாயமான விலை இல்லை. பருத்தி 350 ரூபாய். பருத்திக்குக் கூட்டுறவுத் துறையிலே அமைத்து கடன் கொடுப்பதாகச் சொன்னீர்கள். அப்படிக் கடன் கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் விவசாயிகளுக்கு ஏற்பட்டுக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கஷ்டத்திற்கும், வேதனைக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம்—கூலித் தொழிலாளர்களுக்கு—மிகவும் மோசமான அளவில் நிர்ணயம் செய்திருக்கிறோம். அது சரியல்ல. அதை மாற்றுவதற்கு

முயற்சிக்க வேண்டும். விவசாயக் கூலிகளுக்கு வீடு கட்டும் திட்டம் இரண்டு மூன்று ஜில்லாக்களில் மட்டுமே இருக்கிறது. கோவை போன்ற மற்றப் பகுதிகளுக்கு அந்தத் திட்டம் இல்லை. எனவே, சிறு விவசாயிகள் வீடு கட்ட மானியம் கொடுத்து, அவர்களை ஊக்குவிப்பதற்கான திட்டத்தை மற்ற மாவட்டங்களிலேயும் அரசாங்கம் விஸ்தரிக்க வேண்டும். கூலித் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை.

பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைப்பற்றி பல வருஷங்களாக இந்த மன்றத்தில் பேசி விட்டோம். தஞ்சை மாவட்டத்திலே பரீட்சார்த்தமாகப் பார்த்ததில் அது சரியாக இல்லை என்று விட்டு விட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். வேறு வழியிலே பயிர்த்தொழிலுக்கு எப்படிப் பாதுகாப்பு கொடுப்பது என்பதைப் பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : உங்கள் கட்சியிலேயே மூன்று பேர் பெயர் கொடுத்திருக்கிறீர்கள். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள், இப்பொழுது நீங்கள் பேசுகிறீர்கள், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் பேச இருக்கிறார்கள். ஆகவே, விரைவில் முடித்து விடுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி : ஆகவே, விவசாயிகளுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு அந்தந்த தாலுக்காக்களில் விஸ்தரிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது பெரிய பிரச்சனை என்பதைச் சொல்லிக்கொண்டு, ஒட்டு மொத்தமாக விவசாயத்திற்கு உரம், தண்ணீர், மின்சாரம், கிணறு வெட்டத் தோட்டாக்கள் போன்றவைகள் சரியான, நியாயமான விலையில் கிடைக்க கண்காணிப்போடு இருக்க இந்த நிர்வாகத்தை முடுக்கிவிட வேண்டும்.

விவசாய இலாக்கா சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை, சரியான முறையில் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறி, அவர்களை முடுக்கிவிட்டு, விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசு முன்கை எடுத்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் இந்த மானியத்திற்கு ஒதுக்கப்படும் பணம் வீணானதுதான் என்பதை இந்த நேரத்தில் சொல்லி என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக்கொண்டு அமர்கிறேன்.

*திரு. சோ. கருணைநாதன் : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய ஓரிரு கருத்துக்களை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பயிரிடப்படாத தரிசு நிலங்கள் 14,38,000 ஹெக்டேர் இருப்பதாகத் தெரிகிறது. காட்டிலாகாவைச் சேர்ந்த காலி நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஏற்கனவே இப்படியிருக்கின்ற காட்டிலாக்காவிற்குச் சொந்தமான காலி நிலங்களை, விளை நிலங்களை விவசாயிகள் எவ்வளவோ விரும்பி, அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பண்ணை அமைத்து நடத்த முன் வந்தும், ஏற்கனவே எடுத்துக் கூறியும் கூட அது செயல்படவில்லை.





உதாரணமாக, ஆனைக்கட்டியிலும் தெங்குமரஹாடாவிலும் கேட்டுக் கிடைக்கவில்லை. தெங்குமரஹாடா கூட்டுறவு சொசைட்டி நடக்கிறது, அது வெற்றிகரமாக நடக்கிறது. அதைப்போல் இவைகளையும் கொண்டுவந்தால் விளைச்சலை நல்லமுறையில் பெருக்க முடியும் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கம் உரம் வழங்கும் நேரத்தில் தக்க சமயத்தில் காலதாமதம் இல்லாமல் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய ஜெர்மானிய மேம்பாட்டுத்திட்டம் நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு பலவகைகளிலேயும் உதவி வந்திருக்கிறது. இன்னும் சற்றுச் சீரிய முறையில் விவசாயிகளுக்கு அது பரவலாக உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகளை நல்ல விளைச்சலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று தீவிரமாக முயற்சித்து வருகிறார்கள். நடப்பு ஆண்டில் 121 ரகங்களை சோதனை செய்துள்ளார்கள். விவசாயத்தில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். ஆகவே, அவர்களுக்கு நீலகிரி மாவட்ட விவசாயிகளின் சார்பில் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூக்கல் என்ற பகுதியில் ஆரஞ்சு உற்பத்தி செய்கிறார்கள். அப்படி அங்கே ஆரஞ்சு உற்பத்தி செய்யும்பொழுது ஏற்கனவே உள்ள ஆரஞ்சு மரங்களில் கரி போன்ற வியாதி படர்ந்த காரணத்தால் ஆரஞ்சு மரங்கள் கெட்டுப் போகின்றன. அதை எப்படியாவது காப்பாற்றுவதற்கு மருந்துகளைக் கண்டுபிடிக்கும் வகையில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஆராய்ச்சி செய்யாத காரணத்தால் இப்பொழுது ஆரஞ்சு உற்பத்தி செய்யும் கூக்கல் என்ற அந்தப் பகுதியில் ஏற்கனவேயிருந்த மரங்கள் பட்டுவிட்டன என்ற உண்மையை யாரும் மறுக்க இயலாது. ஆகவே, அதைக் கவனத்திற் கொண்டு மீண்டும் செலவழித்து புதிய மரங்களை வளர்த்தாலும் அவைகள் கெட்டுப் போகாத வகையில் பூச்சி மருந்துகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று இந்திய ஜெர்மானிய மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் ஆயிரம் ஏக்கர்களில் தேயிலைத் தோட்டம் அமைத்திருக்கிறார்கள். அங்கேயுள்ள சிறு விவசாயிகளெல்லாம் கடன் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் 1,000 ஏக்கரோடு இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களுக்குத் தோட்டம் அமைத்துக்கொள்ள லோன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே அமைச்சரவர்கள் அங்கே [illegible] வருகை தந்து குத்துவிளக்கேற்றி நிலவள வங்கியைத் தொடங்கி வைத்தார்கள். அதனால் ஆயிரம் ஏக்கர்களில் உள்ள விவசாயிகள் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

[திரு. சோ. கருணைநாதன்] [1975 மார்ச் 27

ஆனால், விவசாய மறுநிதி வழங்குக் கழகம் சில சிக்கல்களை ஏற்படுத்தி, ஏற்கனவே போட்ட தேயிலைச்செடியைப் பற்றி நம்பிக்கையில்லாத காரணத்தால் புதியதாக விபிகுளோன் என்ற வகையைத்தான் போட வேண்டும், அதிலேதான் அதிக கிராப் கிடைக்கும் என்று வாதாடுகிறார்கள். ஆனால் விவசாயிகள் 100 ஆண்டுகளாகச் செய்து வந்ததை விட்டுவிட்டுப் புதிய ரகத்தை நம்பி எப்படிப் போவது என்று அங்கலாய்க்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் இதைத்தான் போட வேண்டுமென்று சொல்லாமல், நல்ல பலன் தரத்தக்க செடிகளைப் போடுவதற்கு உதவ வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நிலவளவங்கிகள் மூலமாக, இன்னும் சிறுசிறு பூமிகளை இரண்டு மூன்று எக்கர்கள் வைத்திருப்பவர்கள் வெளியிலிருந்து வட்டிக்குப் பணம் வாங்க இயலாது. அவர்கள் ஐந்தாறு ஆண்டு காலம் கழித்துத்தான் மீண்டும் கடன்களை அடைக்க முடியும். அப்படியில்லையென்றால் அவர்களுடைய பூமியைக் கூட விற்க வேண்டிய நிலைமை உருவாகும். அரசு இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்து, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அங்கே வரும் வருமானத்தை எடுத்து அரசுக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டி உள்ளது. ஆகவே, சிறு சிறு விவசாயிகளிடம் விண்ணப்பங்களைப் பெற்று மீண்டும் லோன் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நீலகிரி மாவட்டத்தில் பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஜெரானியம் 2,000 எக்கரிலும், காபி 2,500 எக்கரிலும், மிளகு 5,000 எக்கரிலும், கிராம்பு 300 எக்கரிலும் இன்னும் ஆரஞ்சு சாகுபடி 500 எக்கரிலும் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட திட்டங்களை அரசு அன்போடு நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

உருளைக்கிழங்கு விவசாயத்தை இன்றைக்குப் பார்க்கும்பொழுது அந்த விவசாயிகள் படும் தொல்லைகளைப் பார்க்கும்பொழுது கடந்த ஏழெட்டு ஆண்டுகாலமாக சரியாக விளைந்தால் விலை கிடைப்பதில்லை. விலை கிடைக்கும் சமயம், பூச்சியும் மழையும் வாழ விடுவதில்லை. எனவே, வறட்சி ஏற்பட்டுள்ள பகுதிகளுக்குக் கருணை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் உள்ளம் நொந்து என்ன செய்வது என்று தெரியாமல் சிக்கலான நிலைமையில், சோதனைமேல் சோதனை போதுமடா சாமி என்ற நிலையிலிருக்கிறார்கள். எனவே, அவர்களது கடனை வஜா செய்ய முதலமைச்சரவர்கள் மனம் வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் தலைவரவர்களே, விவசாயத் துறை சம்பந்தமாக, வியாபாரிகள், வியாபாரிகளிடமிருந்து விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடும் எங்களைப்போன்றவர்கள் பற்றி ஒரு சில கருத்துக்களை எவ்வளவு வேகமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு வேகமாகக் கிடைத்த நேரத்திற்குள் சொல்ல ஆசைப்படுகிறேன்.



1975 மார்ச் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது 11 இலட்சம் எக்கர் நிலங்கள் தரிசாக இருப்பதைக் கண்டுபிடித்ததை பாராட்டுகிறேன். தரிசு இல்லாமல் 14 இலட்சம் ஹெக்டேர் "ஃபாலோலேண்ட்ஸ்"-ஐ விளை நிலமாக ஆக்க முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். அதற்குமேல் "ரிசர்வ்ட் ஃபார் ஃபாரஸ்ட்" பற்றி, "ரிசர்வ்ட் ஃபாரஸ்ட்" அல்ல, "ரிசர்வ்ட் ஃபார் ஃபாரஸ்ட்" பல இலட்சக்கணக்கான எக்கர் இருக்கின்றன. 70 இலட்சம் எக்கர் இருப்பதாகச் சொல்கிறார்கள். புதுக்கோட்டைக்குப் பக்கத்திலே அங்கே காடும் இல்லை, கழனியும் இல்லை, குட்டி குட்டி மரங்களாக இருக்கின்றன. செடிகள் வளர்ந்து பல்லாயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் பயனில்லாமல் இருக்கின்றன. இதை உடனடியாகக் கணக்கிட்டு அந்த 70 இலட்சம் எக்கர் நிலத்தை எப்படியாவது விளை நிலமாக ஆக்க உடனடியாக வேலை செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, லேண்ட்லெஸ் புவர் என்று அவர்களுக்குக் கொடுக்கிறோம். 1½ எக்கர் நஞ்சையும், 3 எக்கர் புஞ்சையும் கொடுக்கிறோம். இதை ஒழுங்காகச் சாகுபடி செய்ய அவர்களுக்கு வசதியிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். வசதியில்லாமல் நிலத்தை மட்டும் கொடுத்துப் பிரயோசனம் இல்லை. அவர்களுக்கு வசதி ஏற்பட என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெரிய ஆறுகள் இல்லை. ஆண்டவன் அதற்கு வழி செய்யவில்லை. இருக்கின்ற காவிரியும் பிரச்சினைக்கிடமாகி இருக்கிறது. அதில் எவ்வளவு கிடைக்கும், எவ்வளவு கிடைக்காது என்ற பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இந்த அரசு உடனடியாக குழாய்க் கிணறுகளைத் தோண்டி, டியூப் வெல்ஸ், ஆழக்கிணறுகளைத் தோண்டுவதில் அக்கறை காட்ட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

குறிப்பாக, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் ஃபில்ட்டர் பாயிண்ட் வெல்ஸ் என்று சொல்லுகிறார்களே அதை எவ்வளவு சீக்கிரம் அமைக்கிறார்களோ அவ்வளவு சீக்கிரம் உற்பத்தியைப் பாதுகாக்க முடியும். இல்லையென்றால் தஞ்சை மாவட்டமும் இராமநாதபுரமாக ஆகிவிடும் என்ற சூழ்நிலை இருக்கிறது.

நான் ஒரு ஆலோசனையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கம்யூனிடி வெல்ஸ், சமுதாயக் கிணறுகள், பெரிய பெரிய கிணறுகளை வெட்டி எப்படி அணைக்கட்டுக்களைக் கட்டி ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கிறார்களோ அதே போன்று அந்தக் கிணறுகளின் மூலமாக நீர்ப்பாசன வசதியைச் சிறு விவசாயிகளுக்குச் செய்து கொடுத்து தண்ணீர் வரியை வசூல் செய்து கொள்ளும் வகையில் வசதி செய்ய முடியுமா என்று அரசு தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற திட்டங்களைப் பார்க்கும்போது ரொம்ப அழகாக இருக்கின்றன. கோக்கோ பாதுகாப்புத் திட்டம், பழத்

தோட்டத் திட்டம், காய்கறித் திட்டம் இப்படி எல்லாத் திட்டங்களையும் பேப்பரில் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களுக்காக அளிக்கப்படுகிற சலுகைகள் பல மக்களுக்கு இன்றைக்குத் தெரிவதே இல்லை. செய்தித் சுருள்களில் இப்படிப்பட்ட திட்டங்களைப் பற்றி, எந்தெந்த மாவட்டங்களில் இந்த திட்டங்கள், என்னென்ன திட்டங்கள், என்னென்ன சலுகைள் தரப்படுகின்றன என்பதை எல்லாம் செய்திச் சுருள் மூலமாக விளம்பரப்படுத்தினால் விவசாய மக்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். செய்திச் சுருள்கள் அரசின் விளம்பரத்திற்கும் கட்சி விளம்பரத்திற்கும்தான் பயன்பட்டு கொண்டிருக்கிறதே தவிர, இப்படிப்பட்ட நல்ல சமாச்சாரங்களை விளம்பரப்படுத்த பயனுள்ளதாக இருக்கிறதா என்றால் அது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

கோதுமைக்கு குவிண்டாலுக்கு 105 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. அரிசிக்குக் குறைவாக நிர்ணயித்திருக்கிறார்கள். நாங்கள் அதிகமாக நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டு வருகிறோம். அவர்கள் தர மறுக்கிறார்கள் என்று இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கேட்டுப் பார்த்துப் பயன் இல்லை என்றால் போராடியாவது பெற வழி செய்ய வேண்டும். இல்லை என்றால் உங்களுடைய பணத்திலிருந்து அதிகமாகக் கொடுப்பதைச் சரிக்கட்ட உதவித் தொகை தரமுடியுமா என்று யோசிக்க வேண்டும். நீங்கள் கொடுக்கும் விலை விவசாயிகளுக்கு எப்படி கட்டுபடியாகும்? அங்கே மட்டும் விலையைக் குறைக்கிறோம் என்று சொல்லுகிறீர்கள். மற்றப் பொருள்கள் விலை குறைவாகக் கிடைக்கிறதா என்றால் இல்லை. பிண்ணாக்கு விலை, எண்ணெய் விலை, மிளகாய் விலை, பருப்பு விலை, பிள்ளை குட்டிகளுக்குப் படிப்புச் செலவு, துணிமணிச் செலவு, அகவிலைக்கு அவர்கள் செலவு செய்ய வேண்டும். நெல் மாத்திரம் குறைவான விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி லெவியைப் போட்டு வீட்டில் இருப்பதைக் கொட்டிக் கொண்டு வரும் அராஜகமான நிலைமைக்கும் போய் இருக்கிறீர்கள் என்றால் எப்படி உங்களால் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும்?

பருத்தியைப் பற்றிச் சொன்னார்கள். பருத்தியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய உதவித் தொகை கொடுக்கிறார்கள். உள்நாட்டில் உற்பத்தியாகும் பருத்திக்கு சப்போர்ட் பிரைஸ், ப்ளோர் பிரைஸ் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிகளுடைய நிலைமை என்ன? இன்று அவர்களுக்கு கிராப் இன்ஷூரன்ஸ் கிடையாது. "கேட்டில் இன்ஷூரன்ஸ்" கிடையாது. விளைந்தால் உண்டு. இல்லாவிட்டால் அவன் கதி அதோகதி.

பம்ப் செட்டுகளுக்குத் தாராளமாக அனுமதி வழங்கப்படுகிறது. இன்ஸ்டால் செய்து ஆறு மாத காலத்திற்குள்ளாக மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது என்று கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆயிரக்கணக்கான கிணறுகளில் பம்ப் செட்டுகள் வைக்கப்பட்டு எத்தனையோ வருஷங்கள் ஆகியும் அந்த விவசாயிகள் நடந்து நடந்து



அலுத்துப் போகிற நிலைதான் இருக்கிறதே தவிர, மின்சார இணைப்பு கிடைக்கக்கூடிய நிலை இல்லை. அந்தச் சாமான் இல்லை, இந்தக் கம்பம் இல்லை என்று சொல்லிக் கொண்டு போகிறார்களே தவிர, உண்மையிலேயே காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் காரியங்கள் ஆவ தில்லை.

நார்த் ஆற்காட்டில் தென்னை மரங்களுக்கு சாரு நோய் பரவலாக வந்திருக்கிறது. பாலாற்றங்கரையில் தென்னை வைத்திருக்கிறார்கள். அந்த நோயிலிருந்து தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? அதைப் பற்றி அரசு யோசித்துப் பார்க்கவேண்டும்.

பழத் தோட்டங்கள் எல்லாம் பஞ்சாயத்து யூனியனில் பாழான தோட்டங்களாக காட்சியளிக்கின்றனவே தவிர, பழத் தோட்டங்களாக இல்லை. வெளியே பழத்தோட்டம் என்ற விளம்பரப் பலகை இருக்கிறதே தவிர, உள்ளே ஒன்றையும் காணோம். பழத் தோட்டங்கள் பாதுகாக்கப்படுவதற்கு என்ன வழிகள் செய்ய முடியும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கிரீன் மென்யூர் சீட்ஸ் கொடுக்கிறார்கள். நல்லவேளையாக அதை பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து எடுத்துவிட்டதாகக் கூறுகிறார்கள். வன வள இலாகாவில் சில இடங்களில் இந்த சீட்ஸ் உற்பத்தி செய்யவேண்டுமென்ற முறையில் நடவடிக்கைகள் எடுத்தும் ஒழுங்கான முறையில் வன இலாகாவில் உற்பத்தியாகவில்லை என்று தெரிகிறது. அறிக்கையில் 20 லட்சம் டன் விதைகள் வாங்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கே இருந்து வாங்கப் போகிறார்கள்? இரண்டு இலாகாவுக்கும் கோ-ஆர்டினேஷன் இல்லாமல் இருக்கிறது.

ஷுகர்கேன் பிரைசுக்கும் மத்திய அரசாங்கம் விலை சொல்லி விட்டது என்று சொல்லுகிறார்கள். குறைந்தபட்ச விலையை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலே போடக்கூடிய வரி உங்களிடம் இருக்கிறது. பிற மாநிலங்களில் அதிகமாக விலை கொடுக்கும்போது நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? ஆலைச் சொந்தக்காரர்கள் விவசாயிகளின் கரும்பைக் காலா காலத்தில் கூட வெட்டுவதில்லை. கரும்பு முற்றிப் போய் சார் வற்றிய பிறகு கரும்பை வெட்டுகிறார்கள். (மணி அடிக்கப்பட்டது). விவசாயிகள் வாய் செத்த பூச்சிகளாக இருக்கிறார்கள். ஆகவே, சர்க்கரை மில்களை உடனடியாகத் தேசியமயமாக்கி கரும்பு விவசாயிகளைத் தொல்லையிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நல்ல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில் ஒரு சில நேரடித் தாக்குதல்கள்—பர்சனல் அட்டாக்ஸ் என்பதிலே ஈடுபட்டார்கள். கூடியவரையில் அந்த பர்சனல் அட்டாக்குகளுக்குப் பதில் சொல்லத் தேவையில்லை என்று மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

பிரச்சினையைப் பற்றிய கருத்துக்களைச் சொல்ல இயலாதவர்கள்தான் பர்சனல் அட்டாக்—ஆளைத் தாக்குவது என்ற முறையில் ஈடுபடுவார்கள். நாம் பார்த்திருக்கிறோம், பந்து விளையாட்டில். பந்தை அடிக்கத்தெரியாதவர்கள் ஆளை அடிப்பார்கள். என்னைப் பொறுத்தவரை இப்படி பர்சனல் அட்டாக்குக்கு—சப்ஜக்டை விட்டு விட்டு இப்படி ஆளைத் தாக்குவதில் சிலர் மகிழ்ச்சி கொள்ளுவார்கள். அதற்கு பதில் சொல்ல விரும்பவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் புள்ளி விவரத்தைப் பற்றிச் சொன்னார்கள். முனு ஆதி அவர்களும் இங்கு இல்லை. ஜேம்ஸ் அவர்கள் அமைச்சர் கொடுத்த புள்ளி விவரங்கள் எல்லாம் உண்மையாக இல்லை என்று பொதுப்படையாகச் சொல்லிவிட்டு பிறகு "பெரும்பாலும்" என்று சொன்னார்கள். நான் எழுந்து எடுத்துக்காட்டாக ஒரு புள்ளி விவரத்தை யாவது தப்பு என்று சுட்டிக்காட்டச் சொன்னேன். அவர்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசும்படி கேட்டுக் கொண்டார்கள். சபாநாயகர் அவர்களும் கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு ஜேம்ஸ் அவர்கள் முதல் பக்கத்திலே புள்ளி விவரம் தவறாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு மேல் இன்ன இடத்தில் புள்ளி விவரம் தவறு என்று சுட்டிக்காட்டவில்லை.

மூன்று விதமான புள்ளி விவரங்களை விவசாயத் துறை கொடுக்கிறது. ஒன்று "பாடி—அதாவது அரிசி. என்ன உற்பத்தியாக இருக்கிறது, என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்று காட்டுகிறது. இரண்டாவது உணவு உற்பத்தி—அரிசி மட்டுமல்லாமல் சிறு தானியங்கள், பயிர் வகைகள் பற்றிய புள்ளி விவரம். மூன்றாவதாக நாம் எல்லாவற்றையும் சேர்த்து வேளாண்மையிலுள்ள உற்பத்திப் பொருள்கள்—பருத்தி, எண்ணெய் வித்துக்கள் எல்லாம் சேர்ந்து காட்டுகிறது.

இப்படி மூன்று விதமாக இருக்கிறது. அதை நன்றாக படித்தும் பார்த்தேன். 51.30 லட்சம்; 9·36 லட்சம் ; 2·69 லட்சம்; 11·88 லட்சம் எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தேன். எங்காவது தவறு இருக்கிறதா என்றால் எதுவும் இல்லை. சரியாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் நண்பர் ஜேம்ஸ் அவர்கள் மீது எனக்கு ரொம்ப மரியாதை உண்டு. அவர்கள் தவறாகச் சொல்லியிருக்க மாட்டார்கள். திரும்பத் திரும்ப முதல் பக்கத்தை படித்துக் காட்டினார்களே தவிர, இன்ன இடம் தவறு என்று சொல்லவில்லை கடைசியா ஒரு புள்ளி தவறாக இருக்கிறது என்பதைக் கண்டு கொண்டேன். அதை அவர்களுக்குத் தெரிவித்து அவர்களை மகிழ்ச்சியடையச் செய்யலாம்.

முதல் டக்கத்தில் கடைசியில் 4-வது வரிசையில் அந்த வாக்கியத்தின் கடைசியில் வைக்க வேண்டிய முற்றுப் புள்ளிக்குப் பதிலாக அந்த வார்த்தைக்கு முன்னால் முற்றுப் புள்ளியை வைத்திருக்கிறார்கள். இந்தப் பிழை அச்சுப் பிழையே தவிர, இது அரசின் பிழை அல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) ஜேம்ஸ் ஆங்கிலப் புத்தகத்தில்தான் சுட்டிக் காட்டினார்.





நண்பர் சுட்டிக்காட்டியது ஆங்கிலப் பகுதியில் உள்ளது. அதற்குப் பிறகு குழ. செல்லையா அவர்களுக்கு பதில் சொல்லிவிட்டேன். ருத்திர சிந்தாமணியில் கூட்டுறவு சங்கத்தில் உரம் இல்லை என்று சொல்லப்பட்டது. எந்த உறுப்பினர் சொன்னாலும் மிகுந்த மரியாதையோடு ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதற்கு அடையாளமாகச் சொல்லுகிறேன். உடனடியாக அந்த இடத்திற்கு டெலிபோன் மூலமும், தந்தியின் மூலமும் தொடர்பு கொண்டு ஏன் அந்தக் கூட்டுறவு சங்கத்தில் உரம் இல்லை, எவ்வளவு இருக்கிறது, இருந்தால் அனுப்புங்கள் என்று சொல்ல அங்கிருந்து கூட்டுறவு இலாக்காவில் உள்ளவர்களும் கலெக்டர் அவர்களும் ருத்திர சிந்தாமணியில் ஒரு கூட்டுறவுச் சங்கமும் இல்லையென்று தெரிவிக்க, நான் அதை திரும்பவும் விடவில்லை. குழ. செல்லையா சொன்னால் சரியாக இருக்குமென்று நினைத்து பக்கத்திலாவது இருக்கிறதா பாருங்கள் என்று சொல்ல, பக்கத்திலுள்ள ஒரு ஊரில் குழ. செல்லையாவுக்கும், திருமதி குழ. செல்லையாவுக்கும் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ருத்திரசிந்தாமணியில் கூட்டுறவு சங்கம் இருக்கிறது என்று சொன்னபடியால் இவ்வளவு வேலையைக் கொடுத்து விட்டார்கள். அங்கே இல்லையென்று தெரிவித்திருந்தால் தேடி அலைந்திருக்க வேண்டியதில்லை.

திரு. குழ. செல்லையா : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பேசும்பொழுது மிகத் தெளிவாகச் சொன்னேன். ருத்திரசிந்தாமணி ரெவின்யு வில்லேஜ், இரட்டைவயல் அதன் ஹேம்லட். இரட்டைவயலில் அந்த சொசைட்டி இருக்கிறது. இன்றைக்கு அங்கே உரம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். இன்றைக்கு அதற்கு தேவையும் இல்லை. கேட்ட நேரத்தில் அங்கே உரம் இல்லை என்று சொல்லப்பட்டது என்பதைத் தான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கொடுத்த உரம் ஒரு மூட்டை என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் உரம் இல்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ருத்திரசிந்தாமணியில் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருந்து இருக்கிறது. இல்லையென்று மறுக்க முடியாது. ஆனால், அது 1968-ல் சாத்தப்பட்டது. இந்த விவரங்களை முதலில் சொல்லும்பொழுதே குறிப்பிட்டிருந்தால் தஞ்சை மாவட்டத்தில் அதைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டிய அவசியம் வந்திருக்காது.

அடுத்து ரசாயன உரம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே சொன்னார்கள். ரசாயன உரம் அரசாங்கத்தின் கையில் ஏறத்தாழ ஒரு லட்சம் டன் இருக்கிறது. டன் 'என்று சொன்னால்தான் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். இப்போது அரசாங்கத்தின் கையில் ஒரு லட்சம் டன் இருக்கிறது. மேற்கொண்டு தனியார் கையில் 32 ஆயிரம் டன் இருக்கிறது. ஏறத்தாழ லட்சத்து முப்பத்திரண்டாயிரம் டன் மொத்தம் எல்லாம் சேர்ந்து உள்ளது. அது செலவு செய்யாமல், விற்க முடியாமல் இருந்துகொண்டு இருக்கிறது. தேவைக்கு கொடுப்பதற்கு அதை விரிவாக விற்றுக்கொண்டிருக்கிறோம். வாங்குவோர் இல்லை என்ற நிலைமை இருந்து வருகிறது என்பதைக் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலையின் காரணத்தால் கட்டுப்பாடு, "பெர்டிலைசர் கண்ட்ரோல் ஆர்டர்" விதித்திருக்கிறோம். அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு இது நல்ல நேரமாகக் கருதி அரசால் ஆராயப்பட்டு வருகிறது. கார்டு தேவையில்லை என்று சொல்லுவதா, அல்லது ஏக்கருக்கு 50 கிலோ என்பதை கூட்டுவதா என்றெல்லாம் அரசு ஆராய்ந்து கொண்டு வருகிறது. இந்தக் கட்டுப்பாட்டை தளர்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை மிகவும் நன்றாக உணருகிறேன். தளர்த்தி அதிகப்படியாக விற்க வில்லையென்றால் சங்கடமான நிதி நிலைமை இருப்பதால் சொல்லுகிறேன்.

தாராளமாக உரம் கொடுக்க முடியும் என்று எண்ணுகிறபோது அதைக் கொடுக்கத்தான் வேண்டும். உங்களுக்கு விவரங்கள் தெரியாமல் இருக்க லாம். ஆனால் உரம் ஒரு வருஷத்திற்கு முன்பு கடினமான நிலைமையில் தட்டுப்பாடாக இருந்தபோது இந்த ரசாயன உரத்தை நாம் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலைமையில்லாமல் நாம் உற்பத்தி செய்யலாமா என்று நமது வேளாண்மைத் துறை அதிகாரிகள் (விஞ்ஞானிகள்) ஆராய்ந்து பார்த்து அதற்கென ஒரு புதிய முறையை கண்டுபிடித்து அதற்கு தனியாக ஒரு "ஸ்மால் ஸ்கேல் பேக்டரி"—சிறு தொழிற்சாலையைக் கட்டி முடிக்கின்ற தறுவாயில் இருக்கிறது. அது எப்படியென்றால் பெர்ட்டிலைசர் அதாவது அம்மோனியம் சல்பேட், யூரியா ரசாயன உரம் என்பதை நிலத்திற்கு முழுக்க முழுக்க போடுவது நல்லதல்ல. அனுபவம் உள்ள விவசாயிகளுக்குத் தெரியும். ரசாயன உரத்தோடு "ஆர்கானிக் மேன்யூர்" ஐயும் சேர்த்துப் போடவேண்டும். கம்போஸ்ட் உரம் என்பது மிகச் சிறந்த உரம். இயற்கையில் அப்படி இருக்கிறது. அதிலும் குறிப்பாக நகரத்தில் கம்போஸ்ட் உரம் செடிக்கு முழுக்க முழுக்க நல்ல உணவு. அதில் என்.பி.கே இருக்கிறது. ஸ்கேர்ஸ் எலமென்ட்ஸ் இருக்கிறது. நைட்ரோஜன் சத்து குறைவாக இருக்கிறது. அதை 1 சதவிகிதத்தை, 12 சதவிகிதமாக கூட்டுவதற்கு வழி முறைகளைக் கண்டுபிடித்து இனிமேல் தமிழ் நாட்டில் உரம் தட்டுப் பாடு இல்லையென்ற நிலைமையைச் செய்வதற்கு நாமாக உற்பத்தி செய்துகொள்வதற்கு மற்றவர்களை நம்பி, இவர்கள் கொடுப்பார்கள் என்று எண்ணி, ஒரு வேளை மீண்டும் தட்டுப்பாடு வந்தால் மத்திய சர்க்கார் கொடுக்காமல் இருந்தால், அப்போது தட்டுப்பாடு இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்த நாமே உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் முடிந்திருக் கின்றன. எல்லா மாவட்ட தலைநகர்களிலும் அர்பன் கம்போஸ்ட் உரத்தில் நைட்ரோஜன் சத்தைக் கூட்டுவது என்று விரிவாக செயல்பட்டுக் கொண்டுவருகிறது. இன்னும் சில நாட்களில் பொதுமக்களுக்கு கிடைக்கும்.

ஒரு ஆண்டுக்கு முன்னால் தட்டுப்பாடு இருந்தது. இப்போது தட்டுப் பாடு என்று சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல.

திரு. முனு ஆதி அவர்கள் உரத் தட்டுப்பாடு என்று சொன்னபோது இது கூட்டுறவுச் சங்கங்களில் இல்லாமல் இருக்கிறதா என்று கேட்டேன். இல்லையென்று சொன்னார்கள். இல்லையென்று பொதுவாக சொல்லுவதை விட இன்ன கூட்டுறவுச் சங்கத்தில் இல்லை என்று சொன்னால் கவனிக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொன்னேன். எப்படி குறிப்பாக சொல்லுவது, ஒரு இடத்தில் இல்லாமல் இருந்தால் தானே. எல்லா இடங்களிலும்



இல்லாமல் இருக்கும்போது எப்படிக் குறிப்பிடுவது என்று தட்டிக் கழித்தார்கள். அது வாதத்திற்கு வேண்டுமானால் சரியாக இருக்கும். இந்தக் கூட்டுறவு சங்கத்தில் இல்லையென்று சொன்னால், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல், சொல்லுங்கள் என்று கேட்டு அவர் சொல்லாமல் விட்டால் உங்களைப் போன்றவர்களுக்கு ஆதரவாக இருக்கும் உங்கள் மனத்திற்கு நிறைவு கொடுக்கும். ஆனால் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு எது சரியான வாதம் என்பது தெரியும்.

பிறகு விதைகளைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது விவசாயிகளுக்குத் தேவையான பொறுக்கு விதைகள் ஏறத்தாழ 7 சதவிகிதம் கிடைக்கிறது. மற்ற விதைகளை அரசாங்கப் பண்ணையில் உற்பத்தி செய்யாமல் தனியார் உற்பத்தி செய்கிறார்கள். அதைப் போக்குவதற்கு தனியாக ஒரு கார்ப் பரேஷன் தேவைப்படும் என்று மத்திய சர்க்கார் வற்புறுத்துகிறது. என்ன செய்யவேண்டுமென்று விரைவில் முடிவு செய்ய இருக்கிறோம். மத்திய சர்க்கார் உதவி செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது.

பெஸ்டிசைட்ஸ் பூச்சிக் கொல்லி மருந்து பற்றி சொன்னார்கள். இது மிகவும் அவசியம் என்பது வேளாண்மைத் துறையில் கொஞ்சம் அனுபவம் உள்ளவர்களுக்குத் தெரியும். இப்போது தெரிந்தது அல்ல. வள்ளுவன் காலத்திலிருந்தே தெரியும். "நீரினும் நன்று அதன் காப்பு" அதாவது, பூச்சிக்களைக் கொல்வதைவிட பயிர்களைக் காப்பாற்றுவது அதற்கு வழி முறை செய்வது மிகவும் நல்லது என்று முன்காலத்தில் சொல்லியபடி பூச்சிக் கொல்லி மருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு வரவழைத்து அரசாங்கக் கிடங்குகளின் மூலம் வினியோகம் செய்கிறோம். 800 விவசாய டிப்போக்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. அரசு டிப்போக் களில் கையிருப்பு, திருமதி அனந்தநாயகி அம்மையார் டன் கணக்கில் வேண்டுமென்று கேட்பார்கள், 30 ஆயிரம் டன் இருக்கிறது. பி. எச். சி. 10 சதவிகிதம் கையில் இருக்கிறது. ஒரு லட்சம் லிட்டர் Endrin பூச்சி மருந்து இருக்கிறது. மற்ற மருந்துகளும் இருக்கின்றன. பூச்சி மருந்துக்கு தட்டுப்பாடு இல்லை. எதிர்காலத்தில் தட்டுப்பாடு வந்து விடக்கூடாது என்று எண்ணி அரசு முன்கூட்டியே வாங்கி கையிருப்பு வைத்திருக்கிறது. 800 டிப்போக்களில் எதாவது ஒரு கிடங்கில் இல்லை யென்று சொன்னாலும் கூட அதை வரவழைத்து அங்கே விவசாயிகளுக்கு கொடுப்பார்கள் என்ற உறுதியை என்னால் அளிக்க முடியும்.

(பிற்பகல் 1–30)

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பூச்சிக் கொல்லி மருந்து நாம் ஏராளமாக தயாரிக்கிறோம், இருப்பினும் அதிகமாக விலை விற்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விலை அதிகமாக இருக்கிறது என்று நான் உணருகிறேன். பி. எச். சி. எடுத்துக் கொண்டால் பென்சைன் இருக்கிறது, எக்ஸோ குளோரைடு இருக்கிறது. அது செய்வது ஒன்றும் கடினம் இல்லை. கொஞ்சம் பென்சைன் வாங்கி அதை விட

3 மடங்கு குளோரின் சேர்த்து வெயிலில் வைத்தால் கூட பி. எச். சி. கிடைக்கும். பென்சைன் விலை ஒரு டன் ரூ. 450. அதைப்போல் 3 மடங்கு குளோரின் ரூ. 1,500 ஒரு டன்னுக்கு என்றால்—3 டன்னுக்கு 4,500 ஆகிறது. எல்லாவற்றையும் சேர்த்து கடைசியில் பார்த்தால் 4 டன்னுக்கு 5,200 அடக்கம் ஆகிறது. ஆகவே, ஒரு டன்னுக்கு ரூ. 1,300 என்று வருகிறது. அதில் 10 சதவிகிதம் அதிகமாக வைத்து விற்கலாம் என்றாலும் ரூ. 130 சேர்த்தாலும், டன் ஒன்றுக்கு ரூ. 1,430 ஆகும். ஆனால் ரொம்ப அதிகமாக இப்போது விலை இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து இருக்கிற காரணத்தினால், அதை நாமே உற்பத்தி செய்ய முடியுமா என்பதைப் பார்த்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரத்தை சிறிது நீட்டித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கரும்பு விலை பற்றிச் சொன்னார்கள். கரும்பு விலை எஷென்சியல் கம்மாடிடீஸ் ஆக்டின்படி மத்திய சர்க்கார் அறிவித்து இருக்கிறார்கள். அது மிகக் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். மினிமம் பிரைஸ் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேல் ஒரு மில்லும் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே தான் மத்திய சர்க்கார் விலையை அனுசரிக்கவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். அந்த விலையை விட மாநில சர்க்கார் 25 சதவிகிதம் அதிகப்படுத்தி வழங்கலாம் என்ற கருத்தை நாம் சொன்னோம். அப்படிச் சொன்னதில், கிட்டத்தட்ட எல்லாக் கூட்டுறவு ஆலைகளும் கொடுத்து இருக்கிறார்கள். தனியார் துறையில் இருக்கும் 2—3 ஆலைகளைத் தவிர மற்றவர்களெல்லாம் கொடுக்க ஒப்புதல் கொடுத்து இருக்கிறார்கள்.

ஆனால் இன்னும் நாளாக நாளாக கரும்பு விலை பற்றிய சண்டை சச்சரவுகள் சீக்கிரம் நீக்கப்படும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. எப்படி என்று கேட்டால், மத்திய அரசு வருகிற அக்டோபரிலிருந்து 'புதிதாக பார்கவா பார்மூலா' என்ற அடிப்படையில், அவர்களுக்கு என்ன விலை கொடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். எல்லா மாநிலங்களிலும் இந்த முறை இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த 'பார்கவா பார்மூலா' என்னவென்றால் எஸ்=எம்—எல். 'எஸ்' என்றால் சர்ப்லஸ்ஸாக இருக்கப்பட்ட ப்ரொடக்ஷன், 'எம்'—என்றால் மார்க்கெட்டில் விற்கின்ற சர்க்கரையின் பணம், 'எல்' என்றால் லெவி பணம். விற்கப்படுகிற பணத்திலிருந்து, லெவி பணத்தைக் கழித்து விட்டு, பாக்கி இருப்பதை விவசாயிகளும், ஆலை மில் முதலாளிகளும் சரிசமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்பது திட்டம். மத்திய அரசு இதைச் சொல்லி, அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கெஜட்டில் பப்ளிஷ் செய்து அறிவித்து இருக்கிறார்கள். டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் இது பற்றி பேச நேர்ந்த



நேரத்தில், தமிழ்நாடு சார்பாக ஒன்று தெரிவிக்கப்பட்டது. இந்த பார்மூலா இந்தியா பூராவிலும் இருப்பதைப் பற்றி தவறு இல்லை. இப்போது பஞ்சாபில் அதிக விலை, தமிழ்நாட்டில் குறைவான விலை.

இப்படி இருப்பதால் தமிழ்நாட்டில் இருக்கும் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. அப்படியில்லாமல், எல்லா இடத்திலும் 8.5% ரெகவரி இருந்தால், அதன்படி விலை கொடுக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லி வந்தபோது, இந்த பார்மூலா தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, எல்லா மாநிலங்களுக்கும்—இந்தியா முழுவதற்கும்—பொருந்தும் என்று சொன்னார்கள்.

அப்போது தமிழ்நாட்டின் சார்பாக அந்த மாநாட்டில் ஒரு கருத்து எடுத்துச்சொல்லப்பட்டது. நீங்கள் 'எம்—எல்' என்று போட்டு இருக்கிறீர்களே தவிர மத்திய அரசு அங்கேயுள்ள ஆலை அதிபர்களுக்கு ஒரு ரிபேட் கொடுக்கிறார்களே— அதாவது 5 மாதத்திற்கு மேல் 6-வது மாதம் கரும்பாலை தொடர்ந்து ஓடிக்கொண்டு இருந்தால், அதிலே வரும் சர்க்கரைக்கு எக்சைஸ் வரி கிடையாது, ரிபேட் கொடுக்கிறார்கள்—அந்த எக்சைஸ் கூலி ரிபேட்—அந்த பணம் கணிசமாக இருக்கும்—ஆலை முதலாளிகளுக்கு மட்டும் என்று இருப்பதை மாற்றி, அதிலும் விவசாயிகளுக்கு பங்கு கொடுக்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பாக கூறப்பட்டது.

அப்படிக் கூறுகிறபோது, அங்கேயிருந்த அதிகாரி அப்படித்தான் செய்வதாக உத்தேசம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் பிறகு யாரோ சொல்லி, நாங்கள் அப்படி அறிவிக்கவில்லை என்று மத்திய விவசாய அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்லி, அது குறித்து கவனிக்கப்படும் என்று பிறகு சொன்னார்கள். கடிதம் எழுதி இருக்கிறோம். நம்முடைய பார்மூலாபடி, சர்ப்ளஸ் பணத்தை விவசாயிகளோடு பகிர்ந்து கொள்கிற மாதிரி, ரிபேட் பணத்திலும் ஆலை முதலாளிகள் விவசாயிகளோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். அது தான் நியாயம். காரணம், 5 மாதத்திற்கு மேல் அந்த ஆலை ஓடவேண்டுமானால் அதற்கு அந்த விவசாயியும் ஒத்துழைத்தால் முடியும். அவர்கள் 5 மாதத்திற்கு மேல் கரும்பு உற்பத்தி செய்தால் முடியும். ஆகவே, அவர்களுக்கும் அந்த எக்சைஸ் ரிபேட்டில் பங்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதை வற்புறுத்துவோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நண்பர் அழகர்சாமி அவர்களும், ஏனைய நண்பர்களும், நிலத்தடி நீரின் முக்கியத்துவம் பற்றி பேசினார்கள். மொத்தம் எவ்வளவு கருவிகள், எல்லாம் கையில் இருக்கின்றனவா என்று கேட்டார்கள். நமது கையில் எத்தனை இயந்திரங்கள் இருக்கின்றன என்றால் (குறிப்பை பார்க்காமலேயே சொல்கிறேன்) 133 துளைபோடும் கருவிகள் அரசின் கையில் இருக்கின்றன. அதில் பாதி இப்போது வறட்சி நிவாரணத்திற்காக குடிநீர் கிணறுகள் தோண்டுவதற்காக அனுப்பப்பட்டு செயல்பட்டுவருகின்றன. பாதி வேளாண்மைத் துறையில் இருக்கின்றன. வேளாண்மைத் துறையில் இருக்கும் துளைபோடும் கருவிகள் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அல்லாமல்,

இரண்டு ஷிப்ட், மூன்று ஷிப்ட் என்ற நிலையில் வேலை செய்கிறார்கள். அதிகப்படியாக துளைபோடும் கருவிகள் தேவை. காரணம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதிகமாக ரிவர்ஸ் இல்லை. ஒரு கிருஷ்ணாவோ, ஒரு கோதாவரியோ இல்லை. ஒரு காவேரி தான் இருக்கிறது. அதிலே கூட இப்போது தண்ணீர் பங்கீடு தகராறு இருக்கிறது. ஆகவே, நிலத்தடி நீரைத்தான் நாம் பெருவாரியாக உபயோகித்து, விவசாயம் செய்ய வேண்டியிருப்பதால், இதற்கு வேண்டிய கருவிகள் அதிகமாக பெற்றாக வேண்டும். அதற்கு ஏற்ப மத்திய அரசாங்கத்திடம் நாம் பல முறை சொல்லியிருக்கிறோம். குறிப்பாக, இரண்டு வகைகளில் அந்தப் பெற முடியும். ஒன்று, உலக வங்கி மூலமாக பெற முடியும். உலக வங்கியிலிருந்து 10 கோடி அளவுக்கு நாம் டிராக்டர்கள், துளைபோடும் கருவிகள் வாங்கிக்கொள்ளலாம். நாம் டிராக்டர்கள் அதிகம் தேவையில்லை, துளைபோடும் கருவிகள் அதிகமாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உலக வங்கியிடமிருந்து எவ்வளவு அதிகமாக 10 கோடி ரூபாயில்—துளைபோடும் கருவிகள் வரவழைக்க முடியுமோ அந்த அளவுக்கு உலக வங்கியிடமிருந்து டிரில்லர்களை பெறுவதற்கான வகையில், குளோபல் டெண்டர், உலக முழுவதும் உள்ளவர்களிடமிருந்து டெண்டர் கேட்டும் இருக்கிறோம். அது முடியும் தறுவாயில் இருக்கிறது.

இரண்டாவதாக, நாம் யு.கே. யிடமிருந்தும், இங்கிலாந்திடமிருந்தும் கிடைக்கும் உதவியின் மூலம் இந்த டிரில்லர்களைப் பெற முடியும். அப்படிப் பெறுவதற்கு மத்திய சர்க்கார் அவர்கள் சம்மதத்தைத் தெரிவிக்கவேண்டும். அதைக் கேட்டு இருக்கிறோம். மத்திய சர்க்கார் தருகிற உதவி உள்ளபடியே, வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவி மத்திய சர்க்காருக்கு எந்தவிதமான வட்டியும் இல்லாமல், ஏறத்தாழ 50 வருஷ தவணைக்கு என்று வந்தாலும், அதை மத்திய சர்க்கார் நமக்கு 6½ சதவிகிதம் 7 சதவிகிதம் வட்டிக்குக் கொடுக்கிறபோது, 10 வருஷம், 12 வருஷம்தான் தவணை கொடுக்கிறார்கள். மத்திய சர்க்காரிடத்தில் இந்த முறையை மாற்றுவதற்கும் கருத்துதெரிவித்து இருக்கிறோம். அதையும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதிக இயந்திரங்கள் வேண்டுமென்பதில் யாருக்கும் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

அரிசி விலை பற்றி கொஞ்சம் சொன்னார்கள். உயர்த்தவேண்டுமென்று சொன்னார்கள். திரு. பி. வெங்கடசாமி அவர்கள் குவிண்டல் நெல்லுக்கு ரூ. 140 கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். திரு. வகாப் அதற்கு ஒரு படி மேலே போய் ரூ. 150 கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ரூ. 150 நெல்லுக்கு விலை கொடுத்து வாங்கினால் பின்னால் அரிசி நாம் பப்ளிக் ரேஷன் கடைகளில் பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தில் என்ன விலை விற்பது என்றால், ரூ. 3.20 ஒரு கிலோவிற்கு போடுங்கள் என்று சொன்னார்கள். நான் அதை குறித்து வைத்து இருக்கிறேன். உணவு அமைச்சர் அவர்களிடத்தில் நீங்கள் சொன்ன இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (சிரிப்பு) இதுபற்றி உணவுத் துறை அமைச்சரவர்களிடம் சொல்லி வேண்டியவற்றை நான் செய்யச் சொல்கிறேன்.

இங்கே முக்கியமான கருத்துக்களை பல நண்பர்கள் சொன்னார்கள். அது என்னவென்றால் அரசுப் பண்ணை பற்றி. அரசு விவசாயம் செய்ய





வேண்டிய ஒரு கட்டாயமான நிலைமையில் நாம் இருக்கிறோம். தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டு சேர, சோழ, பாண்டியர்கள் காலத்திலிருந்து, நாயக்க மன்னர் காலத்திலிருந்து, பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலிருந்து, பிறகு காங்கிரஸ்காரர்கள் காலத்திலிருந்து இதுவரையிலும் கழக ஆட்சி வரையிலும் அரசாங்கமே நேரடியாக ஒரு ஏக்கர் நிலம் கூட விவசாயம் செய்யவில்லை. ஆனால் இன்றிருக்கிற நிலையில் நாம் புதிய முயற்சியில் ஈடுபட்டாகவேண்டும். எந்த ஒரு காரியத்தையும் நமது முதலமைச்சர் அவர்கள் துணிச்சலோடு செய்வார்கள். நிதிநிலை அறிக்கையில் அவர்கள் இதுபற்றி கூறியிருக்கிறார்கள். தமிழகத்தின் வரலாற்றின் அடிப்படையில் மிகப் பெரிய அளவு நிலம் அரசின் கையில் இருக்கிறது. அதையெல்லாம் சொல்வதென்றால் நீண்ட நேரம் பிடிக்கும். தமிழ்நாட்டின் நிலப்பரப்பு ஏறத்தாழ 320 லட்சம் ஏக்கர், அதில் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு அரசின் கையில் இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். அந்த நிலப் பரப்பில் விவசாயத்திற்கு லாயக்கற்றது என்று சொல்லக்கூடிய 40 லட்சம் ஏக்கர், அதாவது மலை உச்சியில் இருக்கிற, மலையில் மிகவும் அதிகமாக இருக்கிற களர் நிலங்கள், அதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் 40 லட்சம் ஏக்கரை தள்ளிவிட்டுப் பார்த்தால் பாக்கி 280 லட்சம் ஏக்கர் நிலத்தை நான்காகப் பிரித்துப் பார்த்தால் 70 லட்சம் ஏக்கரில் கிராமங்கள், நகரங்கள், முனிசிபாலிட்டிகள், தொழிற்சாலைகள், ரெயில்வேக்கள் இப்படி 70 லட்சம் ஏக்கர் போய் விட்டது. அதற்குப் பிறகு, அடுத்தபடியாகப் பார்த்தால் இன்னொரு 70 லட்சம் ஏக்கர் மலையில் இருக்கிற மரங்கள் அல்லது மரத் தோப்புக்கள் அல்லது தரிசான நிலம், இவைகளை எல்லாம் விவசாயத்திற்குக் கொண்டு வர முடியாது. அப்படி 70 லட்சம் ஏக்கர் போக பாக்கியிருக்கப்பட்ட 70 லட்சம் ஏக்கரில் தான் தனியார் இரிகேட்டட் லேண்ட் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது தனியார்-பட்டாதாரர்கள் தண்ணீர் இறைத்து கிணற்றிலிருந்து, வாய்க்காலிலிருந்து தண்ணீர் இறைத்து சாகுபடி செய்வது 70 லட்சம் ஏக்கர். பாக்கியிருப்பது 70 லட்சம் ஏக்கர்.

மாண்புமிகு அம்மையார் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அது வெட்டுப் பிரேரணையாக இல்லாமல் இருக்கவேண்டும். ஒரு அங்குல நிலம் கூட வேஸ்ட் செய்யாமல் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதில் 25 லட்சம் ஏக்கரை பர்மெனண்ட்ஃபாலோ என்று பிரித்து வைத்திருக்கிறோம். அதைக் கொண்டு வருவதற்கு 1967-ல் லேண்ட் யுடிலைசேஷன் ஆக்ட் நிறைவேற்றினோம். ஆனால் அதன்படி எந்த நிலமும் விவசாயத்திற்குக் கொண்டுவரவில்லை. அப்படி ஒரு 35 லட்சம் ஏக்கர் இருக்கிறது. அதோடுகூட நாம் மரங்கள் இல்லாத, ரிசர்வ்டு பாரஸ்ட்—அங்கே மரங்கள் வளராது. ஏறத்தாழ 10,000 ஏக்கர் கங்கைகொண்டான், சோழ வந்தான் பக்கத்தில் ஒதுக்கினார்கள். அகதிகளுக்காக ஒதுக்கிய அந்த நிலம் விவசாயத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால் 70 லட்சம் ஏக்கர் நிலங்களையும் நாளைக்கே அரசு நேரடியாக விவசாயத்திற்குக் கொண்டுவரும் என்று நான் சொல்வதாக நினைக்க வேண்டாம்.

முதலமைச்சரவர்கள் சொன்னபடி ஒரு 17 லட்சம் ஏக்கரைச் செய்தால்கூட அது தமிழகத்தின் வரலாற்றில் புதிய திருப்பமாக இருக்குமென்றுதான் நான் சொல்வேன். இதுவரையிலும் செய்யாத இந்தக்

காரியம் நமது முதலமைச்சரவர்களின் காலத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. பொதுவாக அதற்கு அனைவரும் ஆதரவு தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

நண்பர் சீனிவாசன் அவர்கள்கூட களறு நிலம் இருக்கிறது என்று சொன்னார்கள். அது அல்கலைன் என்று சொன்னார்கள். அதிலே ஜிப்சம் போட்டால் தொடர்ச்சியாக அமோனியம் சல்பேட்டுக்குப் பதிலாக அமோனியம் க்ளோரைடைப் போட்டால் அந்த நிலம் விவசாயத்திற்கு ஏற்ற நிலம் ஆகிவிடும். அதைப் பயன்படுத்தாமல் போனால் என்னவாகும் என்பதை பி.ஏ.பி. யில் நாம் பார்த்தோம். தண்ணீர் கிடைக்கிற இடத்தில் அல்கலைன் உண்டாகும். 7 பி. எச். என்பது ஒரு கணக்கு. 7 இருக்குமானால் களர் இல்லை என்று பொருள் 7 லிருந்து 8, 9 என்று ஆகியிருக்கிறது. ஆக இதைத்திருத்துவதற்கு முயற்சி எடுப்பதோடு மத்திய அரசிற்கும் எழுதுவோம். தண்ணீர் ஓடி வருகிற பகுதியில் களறு நிலம் கிடையாது. கேரளாவில் பார்த்தால் களறு கிடையாது. தண்ணீர் கட்டினால்தான் களறு உண்டாகிறது.

அடுத்து கரும்பு விலையைப்பற்றி தொட்டியம் வடிவேலு அவர்கள் சொன்னார்கள். நண்பர் குமாரசாமி அவர்கள்கூட சி.பி.எஸ்ஸை பற்றி சொன்னார்கள். வேறு உறுப்பினர்களும் பல குறிப்புகளைச் சொன்னார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லவில்லையே என்று யாரும் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் இங்கே சொன்னவற்றையெல்லாம் மீண்டும் படிக்கிற வழக்கம் எனக்கு உண்டு. ஆகவே படித்துப் பார்த்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு அவைகள் நடவடிக்கைக்கு ஏற்றவையாக இருக்குமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, இதற்குப் பிறகு ஏதாவது விளக்கம் கேட்டால் கேளுங்கள். இந்த அளவிற்குச் சொன்னபிறகு வெட்டுத் தீர்மானங்களுக்கு இடமில்லாமல் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விவாதத்தில் குறுக்கிட்டு பேசிய நேரத்தில் சர்க்கரை ஆலைகளை தேசீயமயமாக்குவதற்கு அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் எந்த கட்டத்தில் தேசீயமயமாகப் போகிறது ?

திருமதி த. ந. அனந்தநாயகி : தனியார் துறையில் நடத்துகிற சர்க்கரை ஆலைகளில் கரும்பு விலையை கூட்டிக் கொடுக்காவிட்டாலும் கூட்டுறவுத் துறையில் நடத்துகிற சர்க்கரை ஆலைகளில் விலையைக் கூட்டிக்கொடுத்தால் என்ன ? இன்றைக்கு பாதிக்குமேல் கூட்டுறவுத் துறையில் இருக்கிறது. ஆகவே, கூட்டுறவுத் துறையில் நல்ல வழிவகைகளைச் செய்யலாமே. அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளம்,கரும்பு விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுத்தால் பிறகு மற்றவர்களையும் அது மாதிரி கொடுக்கச் செய்யலாம். அதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : கூட்டுறவுத் துறையில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிறார்கள். ஒரு சர்க்கரை ஆலையில் டன்னுக்கு 135 ரூபாய்கூட கொடுத்திருக்கிறார்கள்.



சர்க்கரை ஆலைகளை தேசீயமயமாக்குவது பற்றி இன்னொரு அங்கத்தினர் கேட்டார்கள். தேசியமய்மாக்குவதில் இதுவரை மத்திய அமைச்சர்கள் சொல்லி வந்த பதில் பல சங்கடங்கள் அளிப்பதாக இருந்தன. எப்படி தேசியமயமாக்க முடியும் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். நேற்று அல்லது முன்தினம் முதல் முறையாக ஷா நவாஸ்கான் என்ற மத்திய அமைச்சர் ஏதாவது ஒரு மாநிலத்தில் சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்க விரும்பினால் அதை மத்திய அரசு ஆதரிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. பத்திரிகை செய்தியை வைத்து, முடிவு செய்துவிட முடியாது. அதனால் பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பில் என்ன இருக்கிறது என்று கேட்டு ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறேன். அதற்கு பதில் வந்த பின்னால், பத்திரிகை செய்தி உண்மையாக இருந்தால், தேசியமயமாக்குவதில் இனி சங்கடம் ஏதும் இருக்காது ; நமக்கு மன நிறைவு அளிக்கும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : பருத்தி சம்பந்தமாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். " லாங்க் ஸ்டேபிள் காட்டன் " பயிர் செய்யுங்கள் என்று அரசாங்கமும், மில் முதலாளிகளும் சொல்லி, மதுரை மாவட்டத்தில் குறிப்பாக தேனி பகுதியில் வரலட்சுமி என்ற வகை பருத்தி பயிர் செய்யப்பட்டது. இப்போது அதன் விலை குறைந்து விட்டது மட்டுமல்லாமல், இங்கிருக்கின்ற மில்களில் இந்தப் பருத்தியைப் பயன்படுத்தாமல் வட நாட்டிலிருந்து அல்லது வெளி நாடுகளிலிருந்து வரக்கூடிய பஞ்சை உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் வரலட்சுமி பருத்தியில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தேக்கத்தை குறைக்கும் வகையில் இங்கே இருக்கின்ற மில்களிலாவது இந்தப் பருத்தியைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தப் பிரச்சினை இப்போது எழுந்திருக்கிறது. இதுவரை மற்ற மாநிலங்களிலிருந்து பருத்தியை வரவழைத்து, நூலாகப் பயன்படுத்தி வந்தார்கள். வரவழைப்பதற்குப் பதிலாக நம்முடைய மாநிலத்திலேயே நீண்ட இழைப் பருத்தியைப் பயிர் செய்தோம். ஆனால் இப்போது நீண்ட இழைப் பருத்தியில் தேக்கம் இருக்கிறது என்பது உண்மை. காட்டன் கார்ப்பரேஷனில் சில மத்திய அரசு நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்கள் இங்கே விளைந்து விற்பனை ஆகாமல் இருக்கிற எல்லா பருத்தியையும் வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதை நாம் நம்பினோம். இப்போது தமிழ்நாட்டில் விளைந்த நீண்ட இழைப் பருத்தி விலை இல்லாமல், தேங்கிக் கிடக்கிறது. என்ன செய்வது என்று கேட்டிருக்கிறோம். இது இன்னும் அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதை மட்டும் இப்போதைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி உறுதிமொழி எதுவும் சொல்ல இப்போது நான் தயாராக இல்லை.

திரு. கே. கந்தசாமி : வரலட்சுமி சி.பி.எஸ். 156 வகை பருத்தி ஏராளமாகத் தேங்கியிருப்பதால் விவசாய மக்கள் ஒரு மாதத்திற்கு முன்பே விவசாய இயக்குநரைச் சந்தித்து இதுபற்றி கூறினார்கள். மத்திய அரசு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனை, (பாம்பே) கார்ப்பரேஷன்களை சந்தித்து இதற்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்திருக்கி

றோம். இன்னும் 15 நாள் அல்லது ஒரு மாதத்திற்குள் ஒரு ரீசனபிள் பிரைஸ் கிடைக்கும் என்று சொன்னூர்கள். 1,250 ரூபாய் ஒரு குவின்டால் விற்றது, இப்போது 500 ரூபாய், 400 ரூபாய் என்று விற்கிறது. இதற்கு ஒரு இறுதி முடிவு செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா ? இல்லை என்றுல் உடனடியாக முடிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனூர்</u> : ஏற்கனவே கேள்வி நேரத்தில் கூட இதுபற்றி சொல்லியிருக்கிறேன என்று கருதுகிறேன். டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் அல்லது அரசின் கூட்டுறவுத் துறையில் இருக்கும் மில் களுக்கு இங்கே வாங்கிக் கொண்டிருக்கிறோம். அது மட்டும் போதாது. அதனுல் காட்டன் கார்ப்பரேஷன் கருத்தைக் கேட்டிருக்கிறோம். இங்கே விலை இல்லாத பருத்தியை ஒரு “ஃப்ளோர்பிரைஸ்” வைத்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். முன்னுல் வாங்கிக் கொள்வ தாகச் சொன்னூர்கள். இப்போது நாம் கேட்டதற்கு இன்னும் பதில் வரவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : விவாதம் முடிவுற்றது. இப் போது வாக்கெடுப்பு நடைபெறும்.

திரு. கே. ஏ. வகாப், திரு. பி. வெங்கடசாமி, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. குழ, செல்லையா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி “நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 32,63,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நீதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் இருக்கையில் இல்லாததால் நிதிக் கோரிக்கை எண் 49-க்கு அவர்களால் கொடுக்கப் பட்டிருந்தவெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவை முன்னுள்ள கேள்வி: “நிதிக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 53,92,64,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.”



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 29—3—1975, சனிக்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

"NIL"

B. *Reports, Notifications and Other Papers.*

*112. Commercial budget on Agricultural Engineering Workshop 1975-76.

---

*Despatched to Members on 24th March 1975.

# INDEX TO

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

22nd, 24th, 25th and 27th March 1975.

Volume LXVII (Nos. 1 to 4.)

## A


PAGES

ABDUL JABBAR, Thiru V. M.—

Budget, 1975-76, Voting:

Administration of Justice ... ... ...

Jails ... ... ... ... ... ...

Co-operation ... ... ... ... ...

Handlooms and Textiles ... ... ...

Civil Supplies ... ... ... ... ...

Miscellaneous Capital Outlay ... ... 65—70

Chief Minister's Drought Relief Fund, institution and its consequences (A.M.) ... ... ... 164, 170—173

ADITANAR, Thiru Si. Pa.—

Budget, 1975-76, Voting:

Agriculture ... ... ... ... ...

Capital Outlay on Agriculture ... ... 363, 364—365, 368, 373, 374, 379, 380, 381, 391, 488—489, 490, 496, 497, 498, 501, 504, 527—537, 539

A—*cont.*


